J L
T55 ... 211, M86
... 6. 31-32
161481

## SONG

## ஜெபத்திற்கு ஆயத்தம்

(இரா. Blessed assurance, Jesus is mine, etc.)

1. ஜெபத்தைக் கேட்கும் எங்கள் தேவா
ஜெபத்தின் வாஞ்சை தந்தருளும்
ஜெபத்திலே தரித்திருந்து
ஜெபத்தின் மேன்மை காணச் செய்யும்.

ப. வி. ஜெபமே ஜீவன், ஜெபம் ஜெயம்
ஜீவியத்திற்கு இதுவே சட்டம்

2. ஊக்கத்துடனே ஓர் முகமாய்
வாக்குத்தத்தத்தைப் பற்றிக்கொண்டு
நோக்கத்தை யெல்லாம், நேர்மையாக்கி
கேட்கும்படிக்கு கிருபை செய்வீர்.

3. ஆகாத நோக்கம் சிந்தனையை
அகற்றும் எங்கள் நெஞ்சைவிட்டு
[1] வாகான தாக்கும் மனம் எல்லாம்
வல்லமையோடே வேண்டிக்கொள்வோம்.

4. இடைவிடாமல் ஜெபம் செய்ய
இடையூறெல்லாம் நீக்கிவிடும்
சடைப்பில்லாமல் உந்தன் பாதம்
கடைசி மட்டும் காத்திருப்போம்.

5. பக்தன் யாக்கோபு போராடியே
விக்கினத்தில் தற்காக்கப்பட்டான்
எக்காலமும் ஜெபமே செய்வோர்
தக்க பலனும் பெற்றுக்கொள்வார்.

I. J. Iyadurai, Dornakal.

---

[1] புதிதான தாக்கும்.



## JOURNEY TO THE MOON *(Conclusion)*

## சந்திரலோக யாத்திரை (முடிவு)

அதுபோலவே பாவி தன் கடனைத் தீர்க்க நிர்வாகமற்று கடவுளுடைய தண்டனைக்குப் பாத்திரவானாய் இருக்கும்பொழுது இயேசு என்னும் பெருமான் நமது கடனைத் தீர்க்க நமது நிமித்தம் தண்டிக்கப்பட்டு கடனைத் தீர்த்தபடியால், அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய புண்ணியக் கிரியையால் பாவத்திலிருந்தும், அதன் தண்டனையிலிருந்தும் விடுவிக்கப்படுகிறான் என்பது நிச்சயம். இது போதாது. மனிதன் இழந்த ஜீவன் அவனுக்குத் திரும்ப வரவேண்டும். இதற்காகவே தேவசுதன் தேவ பிரமாணத்துக்குப் பூரணமாய்க் கீழ்ப்படிந்து அதைச் சரிவர நிறைவேற்றினார். குற்றவாளிக்குப் பதில் பிணையாளி கீழ்ப்படிந்ததால் மனிதனுக்கு ஜீவன் கிடைக்க வழியாயிற்று.

தேவன் தமது குமாரன் பாடுபட இடங்கொடாமல் மனிதருக்கு இலவசமாய் மன்னிப்பளித்து அவர்கள் இழந்த ஜீவனைத் தயவாய்ச் சும்மா கொடுத்துவிடக்கூடாதா? கூடாது. நீதியில்லாத தயவு நம்பத்தக்கதல்ல. அப்படிச் செய்தால் தேவனுடைய வழுவற்ற நீதி



பங்கப்படும். பரிசுத்த பிரமாணம் கனயீனப்படும். தேவ இராஜ்யம் நிலையற்றதாகும். தேவன், தேவன் அல்லாதவர்போலாவார். ஆகையால் தேவன் தமது குமாரன் மூலமாய் இரட்சிப்பை ஏற்படுத்தினார். தேவகுமாரன் கர்த்தராகிய இரட்சகர் என்றும் ராஜ இரட்சகர் என்றும் அழைக்கப்படுகிறார்.

விருந்து ஆயத்தமாக்கப்பட்டும் விருந்தாளி அதை அனுபவியாவிட்டால் பயன்படாததுபோல இரட்சிப்பு ஏற்பட்டிருந்தும் பாவசுபாவமுள்ள மனிதர் அதை ஏற்றுக்கொள்ளாவிட்டால் பயன் அடையமாட்டார்கள். ஆகையால் ஆத்துமா தன் மோசத்தை அறிந்து, உணர்ந்து, பாவத்தை வெறுத்துத் தள்ளி தேவ குமாரனை இரட்சகராகப் பற்றிக்கொள்ளுவதற்கு, மனிதனுடைய ஆசாபாசங்களை மாற்றி, அவனுடைய இருதயத்தைப் புதுப்பிக்க பரிசுத்தாவியானவர் அருளப்பட்டிருக்கிறார். இவர் உள்ளத்தில் நடப்பிக்கும் புதுப்பித்தலாகிய மாறுதலுக்கு மறுஜெனனம் என்று பேர். இம்மாறுதலை அடைந்தவனே இரட்சிக்கப்பட்டவன்.

தேவன் உலகத்தார் எல்லாருக்காகவும் இரட்சிப்பை உண்டுபண்ணி இருந்தாலும் எல்லாரும் இரட்சிக்கப்படமாட்டார்கள். ஆறு நிறைய ஜலம் போனாலும் அள்ளிக் குடித்தவனுக்குமட்டும் தாகம் தீரும். இலை நிறைய உணவுப் பதார்த்தம் வைத்திருந்தாலும் உண்டவனுக்கே பசி தீரும். பெட்டி நிறைய அவிழ்தமிருந்தும் உட்கொண்டவனுக்கே சுகம் தரும். அதுபோல கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசத்தால் பற்றிக்கொண்டு அவர் உண்டாக்கின இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளுகிறவன் மாத்திரம் இரட்சிக்கப்படுவான்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அவருடைய இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளுவது எப்படி? சாதாரண காரியத்தில் எப்படியோ, இந்த விசேஷ காரியத்திலும் அப்படியே. ஒருவனுடைய தேகத்தில் கொடிய வியாதியின் குறிகள் தோன்றுகின்றன. அதற்குப் பரிகாரம் கூறும் வாகட நூலை வியாதியஸ்தன் கருத்தாய் வாசித்துத் தனக்குள் ஆலோசிப்பதாவது: ‘இந்நூலை எழுதிய வைத்தியனை நான் கண்டதில்லை. அவன் எத்தனையோ ஆயிரம் மைலுக்கப்பால் இருப்பதாகத் தெரிகிறது. இப்போது அவன் இருக்கிறானோ மரித்துப்போனானோ; ஆகிலும் அவன் எழுதிய நூல் என்னிடமிருக்கிறது. அதில் குறித்திருக்கிற வியாதியின் குணங்குறிகளும் என் அனுபவமும் சரியாயிருக்கிறது. மருந்தின் தன்மை வியாதியைக் கண்டிக்கத்தக்கதாயிருக்கிறது. எத்தனையோ பேர் சுகப்பட்டதாக இதில் சேர்த்து அச்சிட்டிருக்கும் நற்சாக்ஷிப் பத்திரங்களால் விளங்குகிறது. நான் வாசம்பண்ணும் ஊரிலும் எனக்கு அக்கம்பக்

கத்திலும் என்னைப்போன்ற வியாதியஸ்தர் அநேகர் இதில் சொல்லப்பட்ட மருந்தை உட்கொண்டு சுகமடைந்திருக்கிறதைப் பிரத்தியட்சமாய்க் காண்கிறேன். இவ்வியாதியைப் போக்கும்படி எழுதப்பட்ட மற்றெந்த வைத்திய புஸ்தகத்திற்கும் இவ்வளவு சாக்ஷி கிடையாது. ஆகையால் நான் இந்த அவிழ்தத்தைப் பரீட்சித்துப் பார்ப்பேன்' என்று புத்திப் பூர்வமாய் யோசித்து மருந்து அருந்துவான் அல்லவா?

அப்படியே அன்றாடக ஜீவியத்தில் மனிதர் உபயோகிக்கும் அறிவையும் விசுவாசத்தையும் ஞான காரியத்தில் வழங்குகையில் நன்மை சொரூபியாகிய தேவன் விவேகத்தையும், நல்நம்பிக்கையையும் தந்து அம்முயற்சியைக் கிருபையாய் ஆசீர்வதிக்கிறபடியால், அறிவும் விசுவாசமும், அளவிலும் தன்மையிலும் மேன்மையடைகிறது. ஆகையால் ஆத்தும வாகட நூலாகிய சத்திய வேதத்தில் பாவத்தின் கொடிய தன்மையும், அதின் குரூர சேஷ்டைகளும், பாவிகளின் நிர்ப்பாக்கியமும், பாவத்தினின்று இரட்சிக்கப்படும் வகையும், இரட்சிக்கப்பட்டவர்களின் பாக்கியமும், சவிஸ்தாரமாய்க் கூறியிருப்பதை ஒருவன் வாசித்து: 'மனிதர் யாவருக்கும் பொது சொத்தாக தேவனால் அருளப்பட்டதாய்ச் சொல்லப்படுகிற இந்தப் புஸ்தகம் மனிதர் எல்லாரும் பாவிகளென்று தெரிவிக்கிறது. இதில் அடங்கிய பல சத்தியங்களில் இது எவரும் மறக்கக்கூடாததும் அதிகத் தெளிவுமான சத்தியம். அனுபவ சாட்சியாலும் ஆகம சாட்சியாலும் விளங்குகிறபடி நான் பாவஜென்மி, பாவகர்மி, பாவக்கிருமி, எனக்கு இரட்சிப்பு அவசியம். இதில் கூறியிருக்கிற இரட்சிப்பின் முறை எல்லாருக்கும் ஒரேவிதமாய் இருப்பதால் தேவன் பாரபட்சமற்ற நீதியுள்ள நியாயாதிபதி என்றும் அன்புள்ள தகப்பனென்றும் விளங்குகிறது.'

இம்முறை யாரையாவது இரட்சித்தது மெய்யானால் அது என்னையும் இரட்சிப்பது மெய்யென்று ஆலோசித்துப் பின் வருகிறபடி ஜெபிக்கிறான். 'என்னைப் படைத்த கர்த்தனே! நீர் என் தகப்பன், நான் உமது பிள்ளை; தகப்பன் பரிசுத்தராயிருக்கப் பிள்ளையாகிய நான் பாவியாயிருப்பது என் பெருந்தோஷம் என்னைப் பாவக்கேட்டினின்று இரட்சிக்க உமது குமாரனைத் தந்தது அளவில்லாத தயவு. அவரைப் பற்றும் விசுவாசத்தால் குற்றவாளியாகிய நான் சுத்தவாளியாகக்கூடுமென்று தெரிவித்திருக்கிறீர். என் பாவ பாரத்தை ஏற்றுக்கொண்டு நான் அடையவேண்டிய நித்திய தண்டனையைச் சகித்த என் இரட்சகரை ஒரு கண்ணாலும், அவரைத் தந்தருளிய உம்மை மறு கண்ணாலும் பார்க்கிற பாவியாகிய என்னை இரட்சியும் என்று கெஞ்சுகிறேன். என் சீர்கேட்டையும் தேவரீருடைய அன்பையும் நான் உணரத்தக்கதாக உமது ஆவியானவரைக்கொண்டு எனக்குப் போதி



யும். அவர் கிறிஸ்துவை என் உள்ளத்தில் தெரிவிக்கவும், கிறிஸ்துவின்மூலமாய் பிதாவாகிய உம்மோடு ஐக்கியமாகவும் தயைசெய்யும்' என்பதே.

இவ்விதமாய் உண்மையான உணர்வோடு ஜெபிக்கிறவனுடைய உள்ளத்தில் தேவாவியானவர் தங்கி அவனுடைய பாவத் திரட்சியையும் பாவ அகோரத்தையும் காட்ட அவன் மெய் மனஸ்தாபப்பட்டுத் தன்னை, அருவருத்து ஆழத்தில் அமிழ்கிறவன் எறியப்பட்ட கயிற்றை ஒரு நொடிக்குள் பற்றிப் பிடிப்பதுபோல் கர்த்தராகிய இயேசுவை விசுவாசக் கண்ணால் நோக்குகையில் அவர்மேல் தன் பாவ பாரமெல்லாம் ஏற்பட்டிருப்பதைப் பார்த்து பாவமும் அதன் கறையும் நீங்கிற்றென்கிற பூரண நிச்சயமுடையவனாகிறான். ஆண்டவராகிய இயேசுவை விசுவாசிக்கிறவன், இவ்வகையாய் பாவக்கறை, பாவ வல்லமை, பாவதண்டனை நீங்கி, தேவகிருபையால் பூரண விடுதலை அடைவது எவ்வளவு பெரிதான பாக்கியம்.

இவற்றை வாசிக்கும் சிலர் இது மனோபாவனை, வீண்நினைவு, மனமருள் என்று சொல்லக்கூடும். இது மனோபாவனையல்ல, மெய்யான அனுபவம். வீண்நினைவு அல்ல, யதார்த்த ஜீவியம். மனமருள் அல்ல, தேவ அருள். இது மனோபாவனையானால் குடியனுடைய அலங்கோல நடையும் சூதாட்டக்காரனுடைய தூர்த்த ஜீவியமும் மனோபாவனையாகுமா? கொலைகாரனுடைய மூர்க்கமும், காமாதூரனுடைய அருவருப்பான செய்கையும் வீண்நினைவு என்று சொல்லவேண்டுமே? பொல்லாரை ஆள பொல்லாத ஆவி ஒன்றிருப்பதுபோல் நல்லாரை நடத்த நல்ல ஆவி ஒன்றிருப்பது திண்ணம்.

சிலர் இதைக்கேட்டு 'ஆம், அது சரிதான். உங்கள் அனுபவம் அப்படி, எங்கள் அனுபவம் இப்படி; அவரவர் அனுபவம் அவரவர்களுக்குப் பெரிது; கரும்பு தின்றவனுக்குக் கரும்பு ருசி, வேம்பு தின்றவனுக்கு வேம்பு ருசி' என்பார்கள். ஆனால் ஒரு கேள்வி, வேம்பு தின்றவனுக்கு வேம்பு ருசியாயிருப்பதால் வேம்பு கரும்பாகுமா? வேம்பு என்றைக்கும் வேம்புதான். கரும்பு என்றைக்கும் கரும்புதான். பதார்த்தம் மாறாது, மெய் என்றைக்கும் மெய். பொய் என்றைக்கும் பொய். மெய் பொய்யாகாது. சத்தியம் சத்தியம்தான்.

எல்லாவற்றையும் சோதித்து நலமானதைப் பிடித்துக்கொள்வதே சிலாக்கியம். தீர்க்காலோசனையில்லார் இதர சமயத்தைப்பற்றிய தீழ்ப்பான எண்ணங்கொண்டு ஆராய்ந்துபாராமல் அலட்சியம் செய்வார்கள். ஆத்தும ஈடேற்றத்தை வாஞ்சித்து ஜீவநாயகனை அண்டிக்கொள்வதே பாக்கியம்.

S. J. E.

## THE WAY OF ESCAPE

## தப்பித்துக்கொள்ளும் வழி

சில சிறந்த பட்சிகள் துப்பாக்கியின் சத்தத்தைக் கேட்டவுடன் ஆசாயத்தில் அதி உயரம் எழும்பிச் செல்கின்றனவென்று வேடர்கள் சொல்லுகிறார்கள்.

தரைமட்டத்துக்குமேல் அவை பறந்து பறந்து இரை பொறுக்கும்போது ஏதாகிலும் அரவம் கேட்டு பிரமிப்படைந்தால் உடனே மேலே கிளம்பி பறந்துச் செல்ல பிரயாசப்படுகிறதாம். அப்படிச் செல்லும்போது வேடன் எய்யும் மறு அம்புக்குத் தவறிப்போனால் யாதொரு மோசமுமில்லாமல் அதிவேகமாய் உயரப் பறந்து தப்புவித்துக்கொள்ளுகின்றனவாம்.

அவ்விதமாகவே நமக்கு மோசங்கள் நேரிடுமென்கிற திகில் உண்டாகும்போது உன்னதமான தேவனிடம் நம்முடைய இருதயத்தை நம்பிக்கையோடும், விசுவாசத்தோடும், அன்போடும் உயர்த்தவேண்டும். இப்படிச் செய்வதில்தான் மீட்பின் இரகசியமிருக்கிறது. இரட்சிப்பின் வழி எப்பொழுதும் நமக்குத் திறக்கப்பட்டிருக்கிறது.

## THE GREAT MAGNET

## அதி சிறந்த காந்தம்

தற்காலத்தில் ஜெர்மானியருக்கும் ஐரோப்பியருக்கும் நடந்துவரும் யுத்தம் ஆரம்பித்தது முதல் காயப்பட்டிருப்பவர்களுக்கு இரண வைத்தியம் செய்கின்ற பிரான்சு இரண வைத்தியர்கள் பீரங்கிகளுக்குள் வைத்துப் பிரயோகிக்கும் சாமான்களாகிய இரும்புகுண்டுகள், ரவைகள் முதலானவை தேகத்தில் பாய்ந்திருப்பதை வெளியே கொண்டுவருவதற்கு ஒரு நூதனமான சிகிச்சை கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ஜெர்மானியர் பிரயோகிக்கும் இரும்புகுண்டுகள் மேற்பக்கத்தில் வெள்ளீயம் மூலாம் பூசப்பட்டிருப்பதால் அவைகள் காந்தத் தன்மையுள்ளதாம். ஆதலால் இரணவைத்தியர்கள் குண்டு, ரவை முதலான இரும்புத்துண்டுகள் சரீரத்தில் பாய்ந்து பதிந்திருக்கும் இடத்தை உத்தேசித்துப் பார்த்தறிந்து அக்குறிப்புக்கு நேராக மின்சாரமாகிய ஆம்





பிரய காந்தத்தை (Electro Magnet) வைத்துப் பிரயோகிக்கின்றார்களாம். அந்த ஆம்பிரய காந்தத்தை அக்குறிப்புக்கு நேராக ஒவ்வொரு நாளிலும் சில நிமிஷங்களாக வைத்துப் பார்ப்பதுமன்றி எக்ஸ் ரே (X ray) என்னும் கதிர் வீசும் ஒளியினால் இரண்டொரு வாரத்திற்குப் பிறகு படம் பிடித்துப் பார்ப்பதால் உடலில் பாய்ந்து பதிந்துள்ள ரவை குண்டு முதலானது தசைநாம்பிலழுந்திப்போய் அவ்விடத்தைவிட்டுப் பெயராமலிருப்பதாகத் தோன்றும். அப்படியிருந்தபோதிலும் சில நாட்களுக்குப்பின் அந்தக் குண்டானது வைத்தியரின் விடாமுயற்சியினால் முன் சொல்லிய மின்சார காந்தத்தின் பிரயோகத்தால் இழுக்கப்பட்டு அது பதிந்துள்ள இடத்துக்குமேல் சிறிது அசைவு கொடுக்கின்றதாம். அப்போது வைத்தியர் எளிதில் அந்த இடத்தில் கீறி அமிழ்ந்துள்ள குண்டைக் கஷ்டமில்லாமல் வெளியில் எடுத்துவிடுகிறாராம்.

அவ்விதமாகவே உலகமானது இயேசுகிறிஸ்துவின் அன்பாகிய சிறந்த காந்தத்தால் இழுக்கப்படுகின்றது. அநேக காலமாக அக்கவர்ச்சியின் தோற்றம் சிறிதும் காணப்படாவிட்டாலும் நாளுக்கு நாள் மெதுவாக இழுக்கப்பட்டு, கடைசியில் ஆவியில் அனல் மூண்டவர்களாய்க் கர்த்தரிடத்தில் சேரும் ஒரு விசேஷித்த நாள் வருமென்பது நிச்சயம்.



## THE KING'S CUP BEARER *(Continued)*

## ராஜாவுக்குப் பானங்கொடுப்போன் (தொடர்ச்சி)

### VIII. அத்தியாயம்

### வல்லமையின் இரகசியம்

ஆகையால் சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள். சந்தோஷமடையுங்கள். இந்த நாள் கர்த்தருக்குப் பரிசுத்தமானது. இது பண்டிகை நாள், சந்தோஷமான எக்காளப்பண்டிகை. துக்கப்படவும் வேண்டாம் அழவும் வேண்டாம். நீங்கள் நிர்ப்பாக்கியராய் அல்ல, மனப்பாக்கியராய் இருக்கவேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். உங்கள் பாவத்தைவிட்டு மனந்திரும்பினீர்கள். இப்பொழுது உங்கள் இருதயம் பாவமன்னிப்பைப் பெற்றதினாலுண்டாகும் சந்தோஷத்தினால் நிரப்பப்படுவதாக.

உங்கள் வீடுகளுக்குப் போய் பண்டிகை கொண்டாடுங்கள். உங்களுக்குள்ளதில் நேர்த்தியானவைகளைச் சாப்பிடுங்கள். கொழுப்பைப் புசித்து, ருசியுள்ள பானத்தைக் குடியுங்கள். உங்களால் கூடியமட்-



டும் சந்தோஷமாயிருங்கள். ஆனாலும் உங்களைவிடக் கேவலமானவர்களையும் நினைத்துக்கொள்ளுங்கள்; பஞ்சத்தினால் அவஸ்தைப்பட்ட ஏழை ஜனங்களையும் கவனித்துக்கொள்ளுங்கள். தங்களுக்குண்டானதெல்லாவற்றையும் வரிதண்டுகிறவர்களுக்குக் கொடுத்துவிட்டவர்களையும் விசாரித்துக்கொள்ளுங்கள். கஷ்டகாலத்தில் தங்களின் ஆஸ்தியையெல்லாம் இழந்துபோனவர்களையும் நினைத்துக்கொள்ளுங்கள். அவர்களும் உங்களோடேகூடச் சந்தோஷங்கொண்டாடட்டும். கொழுப்பைச் சாப்பிட்டு இனிப்பைக் குடியுங்கள். ஒன்றுமில்லாதவர்களுக்குப் பங்குகளை அனுப்பவும் மறந்துவிடாதேயுங்கள். வெறுமையான போஜனபீடங்களையும், ஒன்றுமில்லாத தீனி மேஜைகளையும், கொழுப்பும் இனிப்பான பானமுமில்லாத வீடுகளையும் நினைத்துக்கொள்ளுங்கள்.

சந்தோஷமான கிறிஸ்மஸ் பண்டிகை காலங்களில் இவை நமக்கும் ஏற்ற நல்ல வார்த்தையாயிருக்கிறதல்லவா? நாம் மனமகிழ்ச்சியாயிருப்பதைத்தான் தேவன் விரும்புகிறார். நாம் துக்கமான நீண்ட முகத்தோடும் விசனப் பார்வையோடும் இருக்கவேண்டுமென்று அவர் விரும்புகிறதேயில்லை. துக்கமுகமாய்த் திரிகிற கிறிஸ்தவன் தன் ஆண்டவருக்கு அவகீர்த்தியைக் கொண்டுவருகிறவனாய் இருக்கிறான். வருஷா வருஷம் கிறிஸ்மஸ் தினம், பந்தியைச்சுற்றிச் சாப்பாட்டிற்கு உட்காரும்போது, தேவன் நம்மைச் சந்தோஷமாயிருக்க விரும்புகிறார் என்று நினைவுகூருவோமாக. நம்முடைய சந்தோஷத்தின் மத்தியிலும் நாம் தன்னயமற்றவர்களாயிருப்போமாக. ஒன்றுமில்லாதவர்களுக்கு நாம் பாகங்களை அனுப்பவேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். நாம் சந்தோஷப்படுத்தும்படியாக யாராவது இல்லையா? நாம் வெளிச்சத்தைக் கொண்டுபோகக்கூடிய அந்தகாரமான வீடுகளில்லையா? ஆறுதல் சொல்லக்கூடிய துக்கமான இருதயம் இல்லையா? நம்முடைய ஏழைகளான இனத்தாருக்கானாலும், அயலகத்தாருக்கானாலும், சிநேகிதருக்கானாலும், நமக்குக் கிடைத்த நல்ல பங்கைப் பகிர்ந்துகொடுப்போமாக; மற்றவர்களையும் சந்தோஷப்படுத்தி ஆறுதல்படுத்தி உதவிசெய்வோமானால், நம்முடைய கிறிஸ்மஸ் விருந்து மகா மேன்மையாயிருக்கும். அந்தகாரமும் துக்கமும் நிறைந்த இடங்களில், பண்டிகை சந்தோஷத்தை அனுப்புவோமானால், அந்த நாளில் நமக்குரிய சந்தோஷமும் மனமகிழ்ச்சியும் பத்துமடங்கு அதிகமானதாயிருக்கும்.

'நீங்கள் போய் கொழுமையானதைப் புசித்து, மதுரமானதைக் குடித்து, ஒன்றுமில்லாதவர்களுக்குப் பங்குகளை அனுப்புங்கள்; இந்த நாள் நம்முடைய ஆண்டவருக்குப் பரிசுத்தமான நாள். விசாரப்பட,

வேண்டாம், கர்த்தருக்குள் மனமகிழ்ச்சியாயிருப்பதே உங்கள் பெலன்.’ ஆம், இங்கேதான் பலத்தின் இரகசியத்தைப் பார்க்கிறோம். மேலான பெலன், ஆத்தும பெலன், கர்த்தரிடத்திலிருந்து வரும் சந்தோஷம், நம்முடைய பாவம் மன்னிக்கப்பட்டதென்று அறியும் அறிவினாலுண்டாகும் சந்தோஷம்.

‘நல்நாளே, நல்நாளே இயேசுவால் என் பாவம் கழுவப்பட்ட நாளே’ என்று நான் சொல்லக்கூடுமோ? அப்படியானால் எனக்கு ஆவியில் பெலனுண்டு. ஏனென்றால், கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்பதே என் பெலனாயிருக்கிறது. அவர் என் பாவங்களை மன்னித்துவிட்டார், தம்முடைய சொந்த இரத்தத்தினால் என்னுடைய பாவங்களையெல்லாம் கழுவிவிட்டாரே, நான் அவரை எப்படி விசனப்படுத்துவேன்? நான் சோதனைக்கு இடங்கொடுப்பதினால், அவரை எப்படி வருத்தப்படுத்துவேன்? அவருடைய சித்தத்துக்கு விரோதமாய் நடப்பதினால், என்னுடைய இருதயத்தின் சந்தோஷத்தை இழந்துவிடவேண்டியதாயிருக்குமே. மன்னிப்படைந்ததால் சந்தோஷப்படுகிறேன். மனமகிழ்ச்சியாயிருப்பதினால் பலசாலியாயிருக்கிறேன். இது தான் மேலான மாட்சிமையான பலம். இதை எல்லாரும் பெற்றுக்கொள்ளலாம். சரீரபலம் எல்லாருக்கும் கிடைக்கிறதில்லை. நம்மில் சிலர் மெலிந்த தேகிகளாகவே பிறந்து, பெலயீனராகவே வளர்ந்து, பலனற்றவர்களாகவே ஜீவிக்கிறார்கள். இராட்சதனைப்போலத் தங்களை மாற்றிக்கொள்ளக்கூடாது.

கிரேக்கு தேசத்திலே எசேக்கியாவுக்கு முன்னே, லைக்கர்கஸ் என்று ஒரு மனுஷனிருந்தான். அவன் தன்னுடைய தேசத்திலுள்ள ஜனங்களெல்லாரும் பலசாலிகளாகவே இருக்கவேண்டுமென்று தீர்மானித்து, பிறக்கிற பிள்ளைகளையெல்லாம் நன்றாய்ப் பரிசோதித்து, பலயீனமாய்த் தோன்றுகிற ஒவ்வொரு குழந்தையையும் அதின் தாயினிடத்தினின்று பிரித்து, தனிமையான ஏகாந்தமான மலைக்குகைகளுக்கு அனுப்பி, அங்கே குளிராலும், பசியாலும் சாகும்படி விட்டுவிடுவான். பலமற்ற பிள்ளைகளைப் பலமுள்ள மனுஷராக்குவது மிகவும் கஷ்டமே. உலகத்திலுள்ள எல்லாத் தேசத்தாரிலும் தன்னுடைய தேசத்தார் மகா பலசாலிகளாய் இருக்கவேண்டுமென்ற எண்ணத்தினால் இப்படிச் செய்தான். சரீரபலம் அநேகருக்குக் கிடைக்கிறதில்லை. பலமில்லாதவர்களாகவே பிறக்கிறார்கள், பலமில்லாதவர்களாகவே ஜீவிக்கிறார்கள், பலமில்லாதவர்களாகவே மரிக்கிறார்கள். அவர்களை மாற்றக்கூடியது ஒன்றுமில்லை.

மனபெலனும் எல்லாருக்கும் கிடைக்கக்கூடியதல்ல. அநேகர் ஞாபகசக்தி, படிப்பில் கெட்டித்தனம், வாசிப்பின் வரம் இவைகளில்



ஒன்றும் இல்லாதவர்களாகவே பிறந்திருக்கிறார்கள். அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கலாம்; அவர்களோடு பிரயாசப்படலாம்; கஷ்டப்படலாம் என்றாலும் ஒன்றும் ஏறமாட்டாது. அவர்களுடைய மூளையில் ஒன்றும் நுழையாது, ஒன்றும் கற்றுக்கொள்ளமாட்டார்கள். ஏனென்றால் அவர்களுக்குப் படிப்பின் வரம் கொடுக்கப்படவில்லை. புத்தி மட்டாகவே பிறந்தார்கள். அப்படியேதான் சாகவேண்டும்.

கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இந்த மேலான பெலன், ஆத்தும பெலன், சரீர பெலனைப்போலுமல்ல, மனபெலனைப்போலுமல்ல. நாம் சுபாவத்தில் பலயீனர், சாத்தானுக்கு இரையாகக் கூடியவர்கள். ஆனாலும் இந்த ஆவியின் பெலனை அடையக்கூடாதவர்கள் யாருமில்லை. கெட்டுப்போன பாவியாகக் கெட்டுப்போன பாவியின் இரட்சகரைப் பிடித்துக்கொள்ளுவோமானால், இந்த இரட்சகரிடமிருந்து சந்தோஷத்தினால், பாவமன்னிப்படைந்த சந்தோஷத்தினால் நிரப்பப்படுவோம். இந்த சந்தோஷத்தோடு ஆத்தும பெலனும் கொடுக்கப்படுகிறது.

S. A. Vethanayaham.

(இன்னும் வரும்.)

## PUZZLES AND RIDDLES

## விடுகதைகள்

1. கை, கால்களில்லாதவன் கைகால்களிருக்கிறவனைச் சிறைப்படுத்திக்கொண்டிருக்கையில் தலையில்லாதவன் அதைப் பார்த்துக் குலுங்கக் குலுங்க நகைத்தான். இவைகள் பெயர் என்ன?

2. சின்ன சின்ன இலைகள், சிங்கார இலைகள், அழகுள்ள இலைகள், நீரில்லை, பாலில்லை. இவைகள் என்ன?

3. உடம்பில் சாம்பல் பூசினால் சந்நியாசியல்ல, தெருத்தெரு வாய்த் திரிந்தால் வெறியனல்ல, உரக்கப் பாட முடிந்தால் சங்கீதக் காரனல்ல. இவன் யார்?

## ஓர் அறிவிப்பு

புது வருஷத் துவக்கமாகிய 1916–௵ ஜனவரி மாசத்திலிருந்து பிரதி மாதமும் நமது சஞ்சிகையில் விடுகதைகளுக்கென்று ஒரு பக்கத்தை உபயோகிக்கும்படி தீர்மானித்திருக்கின்றோம். இவ்வேற்பாடு இச்சஞ்சிகையை வாசிப்போர்க்கு சந்தோஷத்தைக் கொடுத்து உற்சாகப்படுத்து

மென்று நம்புகிறோம். இதில் பிரீதி உள்ளோர் விடுகதைகளை விடையுடன் தங்கள் பெயர், விலாசத்துடன் தெளிவாய் எழுதி பத்திராதிபருக்குப் பிரதி மாதம் 25-டைக்குள் அனுப்பினால் அதிக சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளுகிறோம்.

விடுகதைகளை விடுவிப்போருடைய பெயர்களை மாதந்தோறும் சஞ்சிகையில் விளம்பரப்படுத்தப்படும்.



## THE USE OF COTTON IN THE PRESENT WAR

## இப்போது நடக்கும் யுத்தத்தில் பிரயோகிக்கப்படும் பருத்தியின் உபயோகம்

பருத்தி எதற்கு உபயோகிக்கப்படுகிறதென்று நம்மை யாராவது கேட்டால் உடனே நாம் துணி நெய்கிறதற்கென்று சொல்லுவோம். ஆம்; யுத்தங்களில்லாத சமாதான காலங்களிலே பருத்தி சாதாரணமாய் நெசவுக்குத்தான் உபயோகிக்கப்படும். ஆனால் இந்தப் பருத்தி தற்காலத்தில் துப்பாக்கி வெடிமருந்துகளுக்கு அதிகமாய் உபயோகிக்கப்படுகிறதென்று நம்முடைய பத்திரிகையை வாசிப்பவர் கேட்டால் அதிக ஆச்சரியப்படுவார்கள். போர்க்களத்தில் பிரயோகிக்கப்படும் பெரிய பீரங்கி குண்டுகள் செய்வதில் பருத்தி அதிகமாக உதவுகின்றதாம். பருத்தியை வெடிமருந்தோடு சேர்த்து உபயோகித்தால் சீக்கிரம் தீப்பற்றிக்கொள்ள ஏதுவாயிருக்கிறதாம். ஜெர்மானியர் வெடிமருந்து செய்வதில் இதை அதிக உபயோகிக்



கின்றார்களாம். ஆனால் இப்போது நடக்கும் யுத்தத்தினால் பருத்தி வர்த்தகம் ஜெர்மனியில் நிறுத்தப்பட்டிருப்பதால் ஜெர்மனியர் அது இல்லாமல் அதிக வருத்தப்படுகிறார்களாம். எவருக்கும் தீங்கு உண்டு பண்ணாததும் யாவருக்கும் பிரயோஜனத்தைக் கொடுக்கக்கூடியதுமான பருத்தியினால் அதிக தீங்கை விளைவிக்கும் வெடிமருந்தைச் செய்வதில் பிரயோகிக்கிறது மிக்க விசனப்படத்தக்க காரியமல்லவா?

## DUCKS AND MOSQUITOES

## வாத்துகளும் கொசுக்களும்

கொசுக்களை ஒழிக்கிறதற்கு வாத்துகளை வளர்ப்பதைவிட வேறே நல்ல வழியில்லையென்று நம்முடைய பத்திரிகையை வாசிப்பவர் அறிந்தால் சந்தோஷப்படுவார்கள்.

ஐக்கிய மாகாணத்தில், கொசுக்கள் நிறைந்த குளங்களிலும் குட்டைகளிலும் வாத்துகளைத் தண்ணீரில் விடுகிறதினால் கொசுக்கள் எல்லாம் செத்து ஒருவருக்கும் தொந்தரவு கொடுக்கிறதில்லை. இந்த வாத்துகள் கொசுக்களைப் பிடித்துத் தின்கிறது மாத்திரமல்லாமல், மனுஷருக்குக் கஷ்டத்தைக் கொடுக்கும் இந்தச் சிறு கடிப்பூச்சிகளின் முட்டைகளினின்று வரும் கிருமிகளை அழித்தும் விடுகின்றது.

கொசுக்கடியில் உண்டாகிற சுரத்தினால் மனுஷர் வசிக்க முடியாத பாகங்களையும், இப்படி வாத்துகளை வளர்ப்பதினால், வசிக்கக் கூடிய இடங்களாக மாற்றிவிடலாம். ஆகையால் சுரம் நடமாடும் ஜில்லாக்களில் வசிக்கும் நம்முடைய பத்திரிகை வாசிப்பவர்க்கு இது அதிக பிரயோஜனத்தைக் கொடுக்கும்.

## LOYALTY IN CONVERSATION

## சம்பாஷணையிலிருக்கவேண்டிய ராஜபக்தி

நமது தெலுங்கு நாட்டைச் சேர்ந்த சில ஸ்திரீகள் இப்போது நடந்துவரும் பெரிய யுத்தத்தில் ஜெர்மனியர்தான் ஜெயம் அடைவார்கள் என்று பேசிக்கொள்வதாக தெரியவருகிறது. மேலும் நமது ஐக்கிய சேனைகள் தோல்வியடைந்துவிட்டது என்றும் சொல்லிக்கொள்ளுகிறார்களாம். ஆனால் காரியங்களைச் சீர்தூக்கிப் பார்ப்போமேயானால் ஜெர்மனியர் எவ்விதத்திலும் ஜெயம் பெறக் கூடியவர்களாகக் காணப்படவில்லை. நமது ஐக்கிய சேனைகள் ஜெர்மனியரைச் சுற்றிலும் அவர்கள் வெளிப்புறப்படாவண்ணம் சூழ்ந்திருக்

கின்றன. ஜெர்மனியருக்கு வெளிதேசங்களினின்றும் சுற்றுப்புறங்களினின்றும் சாமான் முதலியவைகள் வரத்துப்போக்கு நிறுத்தப்பட்டுப்போயிற்று. இப்போதும் குண்டு, ரவை முதலானவைகள் செய்வதற்கு வேண்டிய பருத்தி, இரும்பு, செம்பு இவை இல்லாமல் ஜெர்மனியர் அதிக கஷ்டப்படுகிறார்களாம். ஆகையால் ஜெர்மனியர் யுத்தத்துக்கு இன்னும் வேண்டிய ஆயுதங்களைச் செய்ய ஏதுவில்லாதிருக்கிறார்கள். நாட்கள் செல்லச் செல்ல அவர்கள் மற்ற தேசங்களினின்று சாமான் முதலிய உதவிகள் இல்லாததினால் இன்னும் யுத்தம்செய்ய முடியாதவர்களாக இருப்பார்கள். ஆனால் இங்கிலாந்துக்கோ சமுத்திரங்கள் கடல்கள் மூலமாய்த் தனக்கு வேண்டிய பொருட்களையும் உதவியையும் பெற்றுக்கொள்ளும் சிலாக்கியமுண்டு. உலக முழுமையினின்றும் தனக்குச் சகாயம் கிடைக்கிறது. அதற்குக் கொடுக்கப்பட்டுள்ள உபகாரங்களுக்குக் கணக்கில்லை. அவைகள் இன்னும் குன்றாமலிருக்கிறது.

நாம் என்றும் நம்பிக்கையுள்ளவர்களாயிருக்கும்படி பல காரியங்களிலும் ஏதுவிருப்பதால், மனம் சோர்ந்து நம்பிக்கையற்றவர்களாய் இராமல் தைரியமுள்ளவர்களாய் இருப்போமாக. நம்மைத் தைரியப்படுத்துவது மாத்திரமல்ல மற்றவர்களையும் திடப்படுத்தி சந்தோஷமும் மெய் நம்பிக்கையுமுள்ளவர்களாய் இருப்போமாக.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1916 ௵ ஜனவரி ௴

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ச. | சங். | 101. | 8 | 11 செ. | ஆதி. | 47. | 1—12 | 22 ச. | யாத். | 2. | 1—10 |
| 2 ஞா. | ,, | 107. | 1—22 | 12 பு. | ,, | 47 | 13—22 | 23 ஞா. | ,, | 2. | 11—25 |
| 3 தி. | ஆதி. | 43. | 1—14 | 13 வி. | ,, | 47. | 23—31 | 24 தி. | ,, | 3. | 1—12 |
| 4 செ. | ,, | 43. | 15—25 | 14 வெ. | ,, | 48. | 1—13 | 25 செ. | ,, | 3 | 13—22 |
| 5 பு. | ,, | 43. | 26—34 | 15 ச. | ,, | 48. | 14—22 | 26 பு. | ,, | 4. | 1—17 |
| 6 வி. | ,, | 44. | 1—17 | 16 ஞா. | ,, | 49. | 1—15 | 27 வி. | ,, | 4. | 18—31 |
| 7 வெ. | ,, | 44. | 18—34 | 17 தி. | ,, | 49 | 16—33 | 28 வெ. | ,, | 5. | 1—14 |
| 8 ச. | ,, | 45. | 1—15 | 18 செ. | ,, | 50. | 1—13 | 29 ச. | ,, | 5. | 15—23 |
| 9 ஞா. | ,, | 45. | 16—28 | 19 பு. | ,, | 50. | 14—26 | 30 ஞா. | ,, | 6. | 1—13 |
| 10 தி. | ,, | 46. | 1— 7 | 20 வி. | யாத். | 1. | 1—12 | | | 6. | 28—30 |
| | | 46. | 28—34 | 21 வெ. | ,, | 1. | 13—22 | 31 தி. | ,, | 7. | 1—13 |

C. L. S. PRESS, MADRAS—1916

# மாதர் போதினி

No. 218 பெப்ருவரி 1916 No. 2

...OF THE REGISTRAR OF BOO...
7 - FEB 1915
MADRAS




## THE VICTORIA CROSS

## விக்டோரியா கிராஸ்

1856-வருஷம் முடிவுபெற்ற கிரிமியா யுத்தத்தில் மிக்க வீரச் செயல்களைச் செய்த அறுபத்திரண்டு உத்தியோகஸ்தருக்குக் காலம் சென்ற விக்டோரியா மஹாராணியார் 1857-ம் ௵ ஜூன் ௴ 26௳ விக்டோரியா கிராஸ் என்னும் கீர்த்தி முத்திரைகளை இனாமாக அளித்தார்களாம். இச்சடங்கானது லண்டன் நகரிலுள்ள ஐட் பார்க் (Hyde Park) என்னும் இடத்தில் பெரிய ஜனக்கூட்டத்தின் மத்தியில் நடத்தப்பட்டதாம். அதைப் பார்ப்பதற்கென்று அநேக இடங்களிலிருந்து ராஜாக்களும் பிரபுக்களும் அங்கு வந்தார்களாம். தற்காலம் யுத்தம் செய்யும் ஜெர்மன் சக்கரவர்த்தியின் தகப்பனாகிய பிரடரிக்

(Frederick) சக்கரவர்த்தியும் அச்சடங்கிற்கு வந்திருந்தாராம். அன்றையதினம் காலையில் நமது பிரிட்டிஷ் இளவரசியை இவருக்கு மனைவியாக நியமித்துக்கொண்டார். இவர் ஆங்கிலேயரின்மேல் மிக்க அன்புடையோர். அன்று விக்டோரியா கிராஸைப்பெற்ற ஒவ்வொருவனையும் நன்குமதித்து அவர்களுடைய தைரியத்தைக்குறித்து வியப்புற்றாராம். இவர் மிக்க தைரியமும் உண்மையுமுள்ளவராம். தற்காலம் நடந்துவரும் இக்கொடிய யுத்தத்தை ஜெர்மனியர் எழுப்பி நடத்துவார்கள் என்ற நோக்கம் அச்சமயத்தில் எவர்க்காயினும் சிறிதும் தோன்றவேயில்லை.

இந்த விக்டோரியா கிராஸானது வெண்கலத்தினால் செய்யப்பட்டு சாதாரண அலங்கரிப்புள்ளதாம். இது சற்றேறக்குறைய மால்டீஸ் சிலுவையைப்போலுள்ளது. அதின் மத்தியில் ராஜமுடியும் அதின்மேல் சிங்கவாகனமும் உண்டாம். அதற்கடியில் 'வீரத்தன்மைக்கென்று' என்று எழுதியிருக்கிறதாம். அதைப் பெறுபவன் போர்க்கப்பல் கூட்டத்தைச் சேர்ந்திருந்தால் நீலப்பட்டுக் கயிற்றிலும் இராணுவத்தைச் சேர்ந்திருந்தால் சிவப்புப் பட்டுக் கயிற்றிலும் கோர்த்துக் கொடுப்பார்களாம். வீரச் செயல்கள் செய்வோர் எல்லாருக்கும் இந்தக் கீர்த்திச் சின்னம் கொடுக்கப்படுகின்றதாம். திருஷ்டாந்தமாக:—

இப்போது நடந்துவரும் யுத்தத்தில் பிரிட்டிஷ் சேனையொன்று வட பிரான்ஸின் வழியாய் வந்து நெர்வி என்னுமிடத்தில் சற்று இளைப்பாறத் தங்கினதாம். அன்றிரவு அதிக குளிர்ச்சியும் மூடுபனி நிறைந்துமிருந்ததாம். இச்சேனைக்கு முன்னுள்ள பிரெஞ்சு சேனையொன்று தன் அணைக்கட்டை விட்டு வேறு இடம் போய்விட்டதாம். பதிவிருந்த ஜெர்மனியர் இதை அறிந்து ஓடிவந்து அணைக்கட்டை நிரப்பிவிட்டார்களாம். பிறகு பீரங்கிக் குண்டுகளால் சுட ஆரம்பித்தார்கள். ஜெர்மனியர் மோட்டார்காரில் வந்து இவர்களுடைய பீரங்கிகளையெல்லாம் சேதப்படுத்திவிட்டார்களாம். ஆனால் மூவர் மாத்திரம் தப்பி ஒரு பீரங்கியைக்கொண்டு சுட்டுக்கொண்டேயிருந்தார்களாம். சற்றுப் பொறுத்து ஒருவன் முதுகில் காயப்பட்டு கீழே விழுந்துவிட்டான். ஆகிலும் நகர்ந்துகொண்டே தன் இரு சிநேகருக்கும் குண்டுகளைப் பொறுக்கிக் கொடுத்தானாம். இவர்கள் விடாமல் சுட்டுக்கொண்டேயிருந்ததினால் சத்துருக்களுக்கு மற்றவர்கள் இறந்துபோன சங்கதியை அறியாமலே இருந்தார்கள். பிரிட்டிஷ் சேனைக்கு உதவி இல்லையென்று சற்றப்பாலுள்ள இன்னொரு சேனை கண்டதும் ஓடி உதவிக்குச் சென்றது. அப்போதும் இம்மூவர் தங்கள் வேலையை விடாமல் செய்து இப்படியாக தங்கள்



சத்துருக்கள் எதிர்நோக்கி வராமல் காத்திருந்ததைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள். பிறகு உதவிச்சேனை ஜெர்மனியரை ஜெயித்து அறுநூறு பேரைக் கைதிகளாக்கினதாம். அம்மூவர் தங்கள் வேலையைத் தைரியத்தோடு தங்கள் உயிரையும் பாராமல் கடைசிமட்டும் விடாமுயற்சியாய்ச் செய்ததினால் விக்டோரியா கிராஸைப் பெற்றார்களாம்.

இன்னும் திருஷ்டாந்தமாக:—

பிரான்ஸைச் சேர்ந்த ஆல்சாஸ் (Alsace) என்னும் தேசத்தின் வழியாய் ஜெர்மன் சேனையொன்று போனதாம். மத்தியில் ஒரு காட்டைக் கடக்க நேரிட்டது. அக்காட்டில் பிரெஞ்சு சேனையொன்று இருக்கிறதென்று அவர்களுக்குத் தெரியும். ஆனால் எவ்விடத்தில் பதுங்கியிருக்கிறதென்று தெரியாது. அவர்கள் போகும் வழியில் பிரெஞ்சு சிறுவனொருவன் உலாவிக்கொண்டிருப்பதைக் கண்டார்கள். சேனை எங்கு பதிவிருக்கின்றதென்று பையனைக் கேட்டார்கள். பையன் சொல்லமாட்டேன் என்றான். பிறகு ஐம்பது கெஜத்திற்கு அப்பாலிருந்து பிரெஞ்சுக்காரர் இவர்களைக் குண்டுகளினால் சுட ஆரம்பித்தார்கள். ஜெர்மனியர் ஓடி அக்காட்டில் ஒளித்துக்கொண்டார்கள். கூடப் பையனையும் இழுத்துச் சென்றார்கள். மறுபடியும் பையனைத் தன் சேனையைக் காண்பிக்கும்படி கேட்டார்கள். சிறுவன் மறுபடியும் மறுத்தான். பிறகு ஜெர்மன் தளகர்த்தன் இவனைச் சுட்டுவிடும்படி கட்டளை கொடுத்தான். மறுபடியும் பையனை பயமுறுத்திக் கேட்டார்கள். அப்போதும், தன் ஜீவனைவிட தனது சேனையின் ஜீவன் விசேஷித்ததென்று பையன் நினைத்துச் சொல்லவேமாட்டேன் என்றான். தன் முன்னிருந்த தபால் தூண்மேல் சாய்ந்துகொண்டு சத்துருக்கள் தன்னைச் சுடவும் சந்தோஷமாய்த் தன் ஜீவனை விட்டான். இவனது தைரியத்தையும் உண்மையையும்பற்றி ஜெர்மனியரே புகழ்ந்து பேசினாராம். ஆகையால் இச்சிறு வீரனும் விக்டோரியா கிராஸைப் பெறத் தகுதியுள்ளவன். உயிரோடிருந்தானேயானால் விக்டோரியா கிராஸையும் இன்னும் பிரெஞ்சு கீர்த்தி முத்திரைகளையும் பெற்றிருப்பான்.

## WHAT THE BIBLE SAYS ABOUT ORNAMENTS

## டாம்பீகமும் வேதாகமமும்

முன்னொருதரம் நம் மாதர்போதினியில் 'ஆடம்பர ஆடை அநாவசியம்' என்ற மகுடத்தின்கீழ், நம் பாட்டியாரான விக்டோரியா மஹாராணியாரின் சம்பவம் ஒன்றை விவரித்து விளக்கியிருந்த

தைக் கண்டு களித்திருப்பீர்கள். அதே சங்கதியை அருமை 'நியூ ரிபார்மர்' (New Reformer) பத்திராசிரியர் 'ஆடையணிதல்' (Clothing) என்று ஒரு வியாசம் எழுதியிருக்கிறார். அதில் அவர், நமது வேதாகமத்திலிருந்து பெரும்பான்மையாக மேற்கோள் காட்டியுள்ளார். அவைகளில் பஞ்சாரத்தினங்களாக நாம் கண்டவைகள் நம் சகோதரிகளுக்கு உபயோகமாக இருக்கும் என்று நம்பி அவற்றை இங்கே எடுத்தாள்கிறோம்.

ஏசா. 3. 18-23.

அந்நாளிலே ஆண்டவர் அவர்களுடைய ஆபரணங்களாகிய சிலம்புகளையும், சுட்டிகளையும், பிறைச்சிந்தாக்குகளையும், ஆரங்களையும், அஸ்தகடகங்களையும், தலைமுக்காடுகளையும், சிரபூஷணங்களையும், பாதசரங்களையும், மார்க்கச்சைகளையும், சுகந்த பரணிகளையும், தாயித்துகளையும், மோதிரங்களையும், மூக்குத்திகளையும், விநோத வஸ்திரங்களையும், சால்வைகளையும், போர்வைகளையும், குப்பிகளையும், கண்ணாடிகளையும், சல்லாக்களையும், குல்லாக்களையும், துப்பட்டாக்களையும் உரிந்துபோடுவார்.

மத். 6. 25.

ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தைப்பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா?

மத். 6. 28, 29.

உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை; என்றாலும், சாலொமோன் முதலாய் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

1 தீமோ. 2. 9, 10.

ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்கவேண்டும்.



1 பேது. 3. 3, 4.

மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது.

## UNITY
## ஒற்றுமை

இந்தியாவின் முக்கிய குறைவுப்பாடு யாதெனில் ஒற்றுமை இன்மையே! திருஷ்டாந்தமாக: கவர்னரது ஆலோசனைச் சங்கத்தைச் சேர்ந்த ஒருவர் சில நாட்களுக்குமுன் நமது தெலுங்கு நாட்டைப் பார்க்கவந்தார். அந்நகரத்திலுள்ள ஐரோப்பியர்கள் அனைவரும் இந்தியாவின் மக்கள் இச்சிறந்த உயர்பதவியை அடைந்துள்ளதைப்பற்றி மிக்க சந்தோஷித்து அவரைக் கனப்படுத்தினார்கள். ஆனால் அங்குள்ள சங்கத்தின் தலைவர்களாகிய இந்திய சகோதரர் அவரை அசட்டையாகப் பேசி ஆலோசனைச் சங்கத்து ஐரோப்பிய அங்கத்தினர் யாராவது வந்திருந்தால் நன்றாயிருக்குமென்று சொன்னார்கள்.

இந்த கனவான்கள் ராஜாங்கத்தாரை தங்களுக்கு அதிகாரமும் சுயாதீனமும் கொடுக்கிறதில்லை என்று குறைசொல்லியுமிருக்கிறார்கள். உயர் ஸ்திதியை யடைந்து மேன்மை பெற்றிருக்கும் நமது இந்திய சகோதரரைக்குறித்து நாம் சந்தோஷப்படவேண்டியவர்களல்லவா? நமக்குள் ஐக்கியமிராவிட்டால் சுயாதீனம் அடைய நாம் தகுதியுடையவர்களல்ல. உயர்ந்த உத்தியோகத்திலுள்ள நமது சகோதரரோடும் நாம் ஒருமித்து சேர்ந்தால்தான் நம் தேசத்துக்கடுத்த காரியங்களை மேல்பார்வைச் செய்யும் அதிகாரத்தை யடையலாம்.

## THE LAHORE CONSPIRACY
## லாகூரில் நடந்த கலகம்

லாகூரில் ராஜ துரோகிகளான அறுபத்தொரு பேர் கூடி ராஜாங்கத்திற்கு விரோதமாய்க் கலகம் செய்யத் துணிந்து சிலரை ஏவி தம் வசப்படுத்திச் சிலரைத் துன்பப்படுத்தியும் வந்தார்கள். அத் துரோகிகளைப் பிடித்து விசாரணை செய்தபோது, ஏறக்குறைய



எல்லாரும் குற்றவாளிகளாகக் காணப்பட்டார்கள். அவர்களில் இருபத்துநாலு பேருக்கு தூக்கும், இருபத்தேழு பேருக்கு ஜீவபரியந்தம் புறதேசத்திற்கு அகற்றப்படவும், நாலு பேருக்கு சுலபமான தண்டனையும் அளிக்கப்பட்டது. ஆனால் இன்னும் ஆறு பேர் விடுதலையாக்கப்பட்டார்கள். இப்போது நடந்துவரும் பெரிய யுத்தத்திற்கென்று, ராஜாங்கத்தார், அதிக சிரமம் எடுத்திருக்கும் இக்காலத்தில் பிரிட்டிஷ் பிரஜைகளாகிய நாம் அவர்களுக்குக் கூடிய உதவிபுரியாமல் கலகம் செய்வது அதிக இழிவான காரியமன்றோ. முன் சொன்ன துரோகிகளுக்குத் தகுந்தபடி அளிக்கப்பட்ட தண்டனையானது மற்ற வஞ்சகருக்கும் எச்சரிப்பாயிருக்கிறது.





## THE KING'S CUP BEARER *(Continued)*

## ராஜாவுக்குப் பானங்கொடுப்போன் (தொடர்ச்சி)

### VIII. அத்தியாயம்

### வல்லமையின் இரகசியம்

அந்த கிரீஸ் பட்டணத்தில், பலயீனமான பிள்ளைகளெல்லாரும் கொல்லப்பட்டார்கள். பலமுள்ளவர்களென்று காக்கப்பட்ட பிள்ளைகளோ, பெற்றோர்களிடமிருந்து பிரிக்கப்பட்டு, ராஜாங்கத்தாரிடம் கொண்டுபோகப்பட்டார்கள். அங்கே பலசாலிகளும், வல்லமையுள்ள புருஷர்களுமாக வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடே வளர்க்கப்பட்டு, பயிற்றுவிக்கப்பட்டு வந்தார்கள். குளிர் காலத்திலும், வெயில் காலத்திலும் ஒரேவிதமான உடுப்புப்போடுவதினால் குளிரையும் அனலையும் சகிக்கக்கூடியவர்களானார்கள். வெறுங்காலோடே அநேக மைல் நடக்கும்படியாகவும் பயிற்றுவிக்கப்பட்டதினால், எவ்விதமான களைப்பையும் சகிக்கக்கூடியவர்களானார்கள். மல்யுத்தம், பந்தய ஓட்டம், பாரக்குண்டுகளை எறிதல், சுமை சுமத்தல் முதலிய எல்லா விதமான சரீரபலம் வளர்ந்து பெருகக்கூடிய அப்பியாசங்

களையும் செய்துவந்தார்கள். பழக்கத்தின் மூலமாய் பலம் அதிகமதிகமாய் உண்டாகும் விதத்தைக் கவனித்தால், மிகவும் ஆச்சரியமாய் இருக்கும்.

ஒரு விளையாட்டு ஸ்தானத்தில் ஒரு மனிதன் ஒரு பெரிய காளையை ஒரு மைல் தூரம் தூக்கிக்கொண்டு போனதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். அதை எப்படிச் செய்தானென்றால், ஒவ்வொருநாளும் கொஞ்சங் கொஞ்சமாய்த் தூக்கிப் படிப்படியாய் அந்தப் பளுவைத் தூக்கத் தன்னைப் பழக்கிக்கொண்டான். அந்தக் காளை சிறு கன்றுக் குட்டியாயிருந்தபோது தொடங்கி அதைத் தூக்கிக்கொண்டு ஒரு மைல் தூரம் போவானாம். பளுவு கொஞ்சங் கொஞ்சமாய் அதிகப்பட்டதனால் அவன் அதை உணரவில்லை. அவனுடைய கரங்கள் இந்தப் பாரத்தைத் தூக்கப் பழக்கமாகிவிட்டது. எருதும் பெரிதாய் வளர்ந்துவிட்டது. அதே சமயத்தில் அவனுடைய பலமும் அதிகரித்தது. நாம் எவ்வளவு பழகுகிறோமோ அவ்வளவு நம்முடைய சரீர பலம் அதிகரிக்கிறது.

மனபெலனும் அப்படித்தான். இங்கே ஒரு பையனிருக்கிறான். அவன் நேர்த்தியான மனவலிமையோடு புத்திசாலியாய்ப் பிறந்திருக்கிறான். அவனைக் கொண்டுபோய் அவனுடைய புத்தியை உபயோகிக்கக்கூடாத ஒரு இடத்தில் அடைத்துப்போட்டு, ஒன்றும் படிப்பிக்காமலும், புஸ்தகத்தையாவது படத்தையாவது பார்க்க இடங்கொடாமலும், மனவிருத்தி செய்யக்கூடிய காரியங்களொன்றிலும் தலையிடாமலும் பார்த்துக்கொண்டால், அவன் தனக்குள்ள மனவலிமையை இழந்து பலயீனப்பட்டுப்போவான். அதற்குப் பதிலாக அவனைப் படிப்பித்து, நல்ல அப்பியாசங்களைக் கொடுத்து, மனதுக்கு வேண்டிய படிப்பையும், அப்பியாசத்தையும் விசாலப்படுத்தி வைத்தோமானால், அவனுடைய மனவலிமை நூறத்தனையாய் வளர்ந்து பலப்படும்; சரீரபலத்தைப்போலவே மனபலமும் பழக்கத்தின்மேல் பலப்படும்.

ஆத்தும பெலனும் அப்படித்தான். நீ ஒவ்வொரு சோதனையையும் மேற்கொள்ளும்போதும், ஒவ்வொரு துர் இச்சையையும் கீழ்ப்படுத்தும்போதும், ஆத்தும சத்துராதிகள் ஒவ்வொருவரோடும் போர் செய்யும்போதும், தீமை செய்யும்படி ஏவப்படும்போதெல்லாம் எதிர்த்து நிற்கும்போதும் உன்னை அதிகமதிகமாய்ப் பலப்படுத்திக் கொள்ளுகிறாய். பலத்தின்மேல் பலம் என்பதுதான் கிறிஸ்தவனுடைய தங்கப்பிரமாணம். நாம் முன்னேறிச் செல்லுவோமாக. 'நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாக, கிறிஸ்துவினுடைய நிறை



வான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும் முன்னேறிச் செல்லுவோமாக.

இப்பொழுது ஆவிக்குரிய பலத்தில் எலும்பு முற்றாத குழந்தைகளாயிருக்கிறோம். அப்பொழுதோ வல்லமையில் பராக்கிரமசாலிகளும், பூரண புருஷருமாயிருப்போம். நமக்கு வல்லமையும், பெலனும், உற்சாகமும் பூரணமாயிருக்குமாகையால், ஆண்டவருக்காக நித்திய காலமாய் உழைக்க ஆயத்தமாயிருப்போம்.

## IX அத்தியாயம்

### எண்பத்தினாலு முத்திரைகள்

1890-ம் வருஷ கிறிஸ்மஸ் அன்று காலையில், யார்க் (York) பட்டணத்தில், கிறிஸ்மஸ் மணி, கிறிஸ்மஸ் பண்டிகையைப்பற்றிச் சந்தோஷமாயும் ஆனந்தமாயும் சொல்லுமாப்போலத் தொனித்துக்கொண்டேயிருந்தது. அங்கே திடீரென்று ஒரு மாறுதல் உண்டாகிறது. களிப்பான சப்தம் நின்றுபோய், மகா துக்கம் நிறைந்த துயர சத்தமாகிய சாவு மணிச்சத்தம் மெதுவாய் அமர்ந்த தொனியாய்க் கேட்கிறது. மணியடிக்கிறவர்களிடம் ஒரு சங்கதி போகிறது. இருபத்தெட்டு வருஷகாலமாக, எல்லாரும் நன்குமதித்த கனப்படுத்தின யார்க் அத்தியட்சாவர்கள் பரலோக பிராப்தியானார். தேவனுடைய வீடு சென்றார்.

அன்றையத்தினம் கிறிஸ்மஸ் போஜனம் அருந்தினார்கள். மேஜையைச் சுற்றி உட்கார்ந்துகொண்டு, கொழுமையானவைகளைச் சாப்பிட்டு, இனிமையான பானத்தைக் குடித்தார்கள். பழைய பேதுரு, (Old Peter) என்ற ஆலயத்தின் மணியோ பிரிந்துபோன ஆத்துமாவுக்காக பயபக்தியான சத்தமாய்த் தொனித்துக்கொண்டேயிருந்தது. மெய்யாகவே, நாம் ஜீவனின் மத்தியில் மரணத்திலிருக்கிறோம்; சந்தோஷத்தின் மத்தியில் துக்கத்திலிருக்கிறோம்; கொண்டாட்டத்தின் மத்தியில் துயரப்படுகிறவர்களாயிருக்கிறோம்.

'அன்றாள் என்னும் சிறுவீடே, ஜீவியம் மறைந்து பிரகாசிக்கிறது
பூவும் முட்களுந் தானே'

என்று பாட்டியார் சொல்லும் கதையைச் சுருக்கி ஒரு கவிராயன் பாடியிருக்கிறார். ஆவிக்குரிய ஜீவியத்திலும் அப்படித்தானிருக்கிறது. ஒருநாள் கர்த்தருடைய சந்தோஷம் நம்மைப் பலப்படுத்துகிறது. அடுத்த நாள் பாவத்தின் உணர்ச்சி நம்மைத் தரையில் அமிழ்த்திவிடுகிறது. ஒரு நிமிஷம் நன்றியறிதலோடே சந்தோஷத்திற்குள்ளாகிறோம்; மறு நிமிஷமோ துக்கத்தோடும் அழுகையோடும் புழுதியில் கிடக்கிறோம். கதையைப்போலொத்த மாறுதல்,

சந்தோஷத்திலிருந்து துக்கம், விருந்துண்பதிலிருந்து உபவாசித்தல், உல்லாசமாயிருப்பதிலிருந்து பயபக்தியாயிருத்தல் இப்படி மாறி மாறி நெகேமியாவின் புஸ்தகத்தில் வருகிறதாகப் பார்க்கிறோம். நாம் மனோபாவனையில் எருசலேமுக்குப் போய், இன்றைக்குப் பார்ப்போமானால், யாவரும் சந்தோஷத்தால் நிரப்பப்பட்டிருப்பார்கள். வருஷ முழுவதிலும், எல்லாப் பண்டிகைகளிலும் உல்லாசமானதும், ஆனந்தமானதும், அழகியதுமான கூடாரப் பண்டிகையை ஆசரிக்கிறார்கள். கூடாரப்பண்டிகை தினம் ஒருவன் இல்லாவிட்டால், அவனுக்கு சந்தோஷம் எப்படியிருக்குமென்று தெரியாதென்பார்கள். இது யூதர்களுக்குள்ளே ஒரு வழக்கச் சொல். அவ்வளவு சந்தோஷங்கொண்டாடுவார்கள். நெகேமியாவின் காலத்தில் இந்தப் பண்டிகை அதிக பூரணமாயும், ஆயிர வருஷங்களாகக் கொண்டாடப்படாமையால், மகா கெம்பீரமாகவும் கொண்டாடப்பட்டது. யோசுவாவின் காலத்திலிருந்து இப்படிப்பட்ட கூடாரப் பண்டிகையை யூதர் ஒருவரும் பார்க்கவில்லை.

S. A. Vethanayaham.

(இன்னும் வரும்.)

## PUZZLES AND BIBLICAL RIDDLES

## விடுகதைகள்

1. அருட் யோவி ஆழி யிலசை
வாடிக் கொண் டிருந்த தேனோ?
இருட் டின் னொடியே வசிக்க
எனெளி கோழி விரும்பு வதில்[லை?]

2. நாலாம் நாளில் வந்த சூரியன்
நாளிற் பெரிதான தென்ன?
நாலா மாயிரம் நல்லாண் டென
நானே னென் றுக்க வேண்டும்?

3. ஆற்று நீரை ஆயுத மின்றி
தோட்டம் பாய்ச்சுவ தெவ்வாறு?
பூட்டி நீரை ஆயுத மின்றி
போற்றி யாதரிப்ப தேனோ?

4. சீயத்தைக் கொன்ற தீய னதிலே
தேனை யெடுத்த தொழுங்கோ?
பாவத்தைக் கொன்ற நேய னதிலே
பலனடைய வாசிப்ப தேனோ?

U. A.





## THE NEW CREATION

## புது சிருஷ்டி

எரே. 31-ம் அதி. வேதத்தின் மகா அருமையான பாகங்களில் ஒன்று. அதில் இரண்டு பெரிய விசேஷங்கள் இருக்கின்றன.

1. புது சிருஷ்டி. வச. 22. } வெளி. 21. 5.
2. புது உடன்படிக்கை. வச. 31. }

புது உடன்படிக்கையை, சத்திய வேதத்தில் நன்றாய் ஆராய்ந்து, அநேக தேவனுடைய மனுஷர் தங்கள் போதனையாலும் சாதனையாலும் நிலைநிறுத்துகிறார்கள். இதிலே நாம் புது சிருஷ்டியைக் குறித்து வாசிக்கிறோம். அதிகாரம் முழுவதும் திட்டமாய்ப் படித்துக் கவலையாய் அறிவது மிகவும் நன்மையாயிருக்கும். 22-ம் வசனத்தின் பின்பாகம் நமக்குத் திட்டமான வழிகாட்டப் போதுமானது.

'ஸ்திரீயானவள் புருஷனைச் சூழ்ந்துகொள்வாள்.' கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இருக்கப்பட்ட ஞானசிநேகமாகிய ஒரு கருத்தை நாம் விட்டுவிட்டு, நமக்குப் போதனையானதாயிருக்கும் மற்றக் கருத்தின்படி இதை ஆராய்வோமாக.

'விலகித் திரிதல்,' 'சூழ்ந்துகொள்ளுதல்' என்ற வார்த்தைகள் சொல்ல எளிது. அவைகளால் உண்டாகும் மாறுதலோ சொல்ல முடியாது. தேவனுக்கும் மனுஷருக்கும் சந்தோஷத்தை உண்டாக்குவதும், துக்கத்தை உண்டாக்குவதும் இவைகளே. சூழ்ந்துகொள்ளுதல் அல்லது வளைந்துகொள்ளுதல் என்ற வார்த்தை தமிழில் ஆழ்ந்த கருத்துடையது. பாம்பு வளைந்துகொண்டால் நடக்கிறது என்ன என்று அநேகருக்குத் தெரியும். நற்குண நற்செய்கை

யுடைய ஒரு ஸ்திரீ நன்மைக்கென்று ஒரு மனுஷனை வளைந்து கொண்டு நன்மையில் நடத்தினால் என்னமாயிராது.

‘பெண்ணொருத்தி பேரில் பெரும்பூமி தானதிரும்
பெண்ணிருவர் பேரில் விழும்வான் மீன்கள்—பெண்மூவர்
பேரிலே சமுத்திரம் பேதையே பெண்பலர்தாம்
பேரிலே யென்னாமோ சொல்.’

கவிராயர், ‘எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி’ யிட்டாரோ. கண் கண்டதைத்தான் சொன்னாரோ தெரியாது. இந்த நாட்டில் ஸ்திரீ ஒரு பொருளாய் மாத்திரம் எண்ணப்பட்டு, அநேக ஜாதிகளுக்குள் ஈனமாய் நடத்தப்படுகிறாள். எந்த நாடு ஸ்திரீயைக் கனவீனம் பண்ணுகிறதோ அது தேவபக்தியற்றதும், வாழ்வற்றதும், யாதாமொரு அடிமைத்தனத்தில் அகப்பட்டுத் தவிக்கிறதுமாயிருக்கிறது. ஆயினும் அநேகர் சிறந்த லக்ஷணங்களால் மிகுந்த புகழ் பெற்றிருக்கிறார்கள். மெய்யான திருச்சபை கிறிஸ்துவினிடம் பெறும் பாக்கியம் கணக்கிட முடியாது. தன் தகுதியால் அல்ல; ‘தன்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே’ அது ஜெயிக்கிறதும் ஜெயம் பெறுகிறதுமாய் மேன்மையடைந்து வருகிறது.

உன். 4. 9. யாது காரணமோ நேசமீட்பர் சிக்கிக்கொண்டார் போகப் புகல் இல்லை. ‘என் இருதயத்தைக் கவர்ந்துகொண்டாய்.’ எப்படி? திருச்சபைக்கு,

அவரே — (a) ஞான மணவாளனும்
(b) சகோதரனும். உன். 4. 12.
(c) வேலியும்.
(d) கோட்டை மதிலும்.
(e) முத்திரை மூடியுமானார்.

‘அந்த மனுஷன் இன்றைக்கு, இந்தக் காரியத்தை முடிக்கும் முன் இளைப்பாறமாட்டான்’ (ரூத். 3. 18). வாயாலே சொல்லிவிட்டுப் போய்விடுகிறவர் அல்ல. ‘உம்முடைய வாக்கினாலே சொன்னீர்; இந்நாளில் இருக்கிறபடியே உம்முடைய கரத்தினாலே அதை நிறைவேற்றினீர்.’ இது பலிதப்பட்டு ஊர்ஜிதத்துக்கு வரவேண்டுமென்று ஏசையா,

‘விழித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.’ வச. 26.
‘அவர்கள்பேரில் ஜாக்கிரதையாயிருப்பேன்.’ வச. 28.

என்று திருவுளம்பற்றுகிறார். நல்லது அவர் நடத்தப்போகிறது ஒரு பக்கத்தில் இருக்கட்டும், நடத்தினதற்குச் சாட்சியுண்டா? ஆம். அநேகமாயிரம்,



வேதத்தில் புதை பொருளாய்க் கிடக்கிறது. தேடினால் கிடைக்கும். ஸ்திரீயானவளைக் குறித்த வேதத்தின் அபிப்பிராயம் என்ன? நம்முடைய வாக்கியத்தில் சொல்லிய அரும் பெரும் கருத்திற்கு என்ன என்ன பிடி இருக்கிறது. தேவன் தாமே பரிசுத்த ஸ்திரீகளுக்குக் கொடுத்த மேன்மையைத் திட்டவட்டமாய் எடுத்துக் காட்டுவாராக.

1. கிறிஸ்து பிறந்தது மரியாள் என்ற ஒரு ஸ்திரீயினிடத்தில்.

2. கிறிஸ்து பரிசுத்த ஆவியால் உண்டான தேவகுமாரன், மனுஷன் அல்ல என்று கர்ப்பத்தில் இருக்கும்போதே கண்டுகொண்டவள்: எலிசபெத்து என்ற ஒரு ஸ்திரீ.

3. கிறிஸ்து தாமே மேசியாவென்று வெளிப்படையாய்ச் சொன்னது: சமாரியா நாட்டாளாகிய ஒரு ஸ்திரீயினிடத்தில்.

4. கிறிஸ்து யூதருக்கு வந்த தாவீதின் குமாரனாய் மாத்திரமல்ல, சகலரையும் மீட்கவந்த நித்திய பிதா என்று கண்டறிந்தது: சீரோபெனிக்கே நாட்டாளாகிய ஒரு ஸ்திரீ.

5. பாவப் பிராயச்சித்தபலியாகத் தேவாட்டுக்குட்டி மரித்து அடக்கம் பண்ணப்படவேண்டும் என்று தைலம் பூச முந்திக்கொண்ட ‘பாவியான’ ஒரு ஸ்திரீ.

6. அநேக நாள் போஷிக்கப்பட்டுப் போதிக்கப்பட்டு அநேக விவரங்களை அறிந்தும் பயந்தொளித்த சீஷரைவிடத் துணிகரமாய், ஆத்திரத்தோடு அன்புள்ள ஒரே சீஷனோடு சிலுவைக்காட்சி பார்த்துக் கண்ணீர் விட்டவர்கள்........ஸ்திரீகளே.

7. உயிரோடெழும்பின கிறிஸ்துவை அன்பின் விடாப்படியான துணிகரத்தோடும் தேடித் தனது (a) போதகரும், (b) சகோதரனும், (c) தேவனும், (d) தேவகுமாரனுமாகிய ஆண்டவரைக் காணவும் பரலோக ராஜாவின் ராஜவிளம்பரத்தைக் (Royal Proclamation) கூறவும், ‘அஸ்திபாரம்’ என்ற ‘அப்போஸ்தலருக்கும்’ முந்தி உயர்ந்த உத்தியோகம் பெற்ற மகதலேனாள் என்ற ஸ்திரீ.

பொறுமையே! ஸ்திரீகளுக்கு இத்தனையுங் கொடுத்துவிட்டாயே! ஆண்களுக்கு நீ வைத்திருக்கும் அளவுதான் என்ன? பார்ப்போம் ஒரு வேளை பழைய ஏற்பாட்டையாவது.

(இன்னும் வரும்.)



## THE GENEROUS MERCHANT

## தர்ம சீலனாகிய ஓர் வர்த்தகன்

வெகு காலத்திற்குமுன் ஓர் ஊரில் ஒரு வர்த்தகன் இருந்தான். ஏதோ ஒரு சங்கடத்தினால் அவன் கடனாளியாகி தன்னிடமிருந்த எல்லாப் பொருள்களையும் இழந்து வெகு நிர்ப்பந்த நிலைமைக்குள்ளானான். முன்பு தான் மிக்க அந்தஸ்துள்ளவனாக ஜீவித்தமையால் தனது எளிமை காலத்தில் யாரிடமாயினும் பிச்சைகேட்க வெட்கப்பட்டான். கடைசியாக தனது பிள்ளைகள் பசியினால் வருந்துவதைப் பார்க்கச் சகியாதவனாய் அவ்வூர் அரசனிடமாகிலும் சென்று ஏதாகிலும் கேட்கலாமென்று யோசித்தான். தன் பெண்சாதியும் தன்னை அதிகமாய் வற்புறுத்தினபடியால் ராஜ அரண்மனைக்குச் சென்றான். அங்கே அவனைப்போல ராஜ சமுகத்தை நாடிவந்த அநேகரைக் கண்டு அவர்கள்முன் அரசனைத் தனக்கு ஏதாகிலும் உதவிபுரியும்படி கேட்க வெட்கப்பட்டு மறுபடியும் வீட்டிற்குத் திரும்பிப் போய்விடலாமென்று நினைத்தான். ஆனால் பசியின் கொடுமை தன்னை நெருக்கியதனால் தன் கூச்சத்தைவிட்டு அரசனிடம் ஏகத் துணிந்தான். அவன் ஐசுவரியவானாக இருந்தபோது அர



சன் தன்னை நன்றாய் உபசரித்து அன்பு பாராட்டிவந்தான். ஆனால் அவனுடைய தற்கால நிலைமையைப் பார்த்து தான் இன்னான் என்று அறிந்துகொள்ளுவாரோ என்ற சந்தேகம் அவனுக்குள் உண்டாயிற்று. ஆகிலும், அரசன் தன் முகத்தைப் பார்த்தாகிலும் அறிந்துகொள்ளுவாரென்று நினைத்தான்.

அரசன் அவனைப் பார்த்து தன் சுகசெய்தியை விசாரித்து, அவனுக்குண்டான பெரும் விபத்தைக்குறித்து அதிக விசனப்பட்டான். அவனுக்குப் பகிரங்கமாக ஏதாகிலும் உதவிசெய்தால் வர்த்தகன் தப்பிதமாக யோசித்து வருத்தப்படுவானென்று அரசன் எண்ணி, ஒரு வெள்ளரிக்காயைக் கொண்டுவந்து அதிலுள்ள விதைகளெல்லாவற்றையும் எடுத்துவிட்டு, ரூபாய்களால் அதை நிரப்பி அவனிடம் கொடுத்தான். வெள்ளரிக்காயிலுள்ள பணத்தை அறியாதவனானபடியால் அவன் அரசன் தனக்குக் கொடுத்த வெகுமதியைப் பெற்றுக்கொண்டு விசனத்தோடு வீடு சென்றான்.

அவன் வீட்டிற்குப் போகும் வழியில் இரண்டு வழிப்போக்கர் பசியினாலும், தாகத்தினாலும், வருந்தி களைத்திருப்பதைப் பார்த்தான். அந்த வெள்ளரிக்காய் தன்னைவிட அவர்களுக்கே அவசரமானது என்று நினைத்து, அதை அவர்களுக்கு இனமாகக் கொடுத்துவிட்டு வெறுங்கையனாக வீட்டிற்குப் போனான்.

நடந்த சங்கதியை மனைவிக்குத் தெரிவித்து அதிக விசனப்பட்டான். சில நாள் சென்றபின் மறுபடியும் அரசனைப் போய்க் கண்டான். அரசன் இவனது வறுமை இன்னும் நீங்கவில்லை என்று எண்ணி வர்த்தகனை அன்போடு உபசரித்து முன்போலவே அவனை வழியனுப்பும்போது, இன்னொரு வெள்ளரிக்காயில் சவரன்களாக நிறைத்து அவனுக்குக் கொடுத்தான். இதை எடுத்துச் செல்லும்போது வழியில் ஒரு ஏழை பிச்சைக்காரன் பசியினால் வருந்தி இவனைப் பார்த்து தனக்கு ஏதாகிலும் கொடுக்கும்படி கேட்டான். அப்போது வர்த்தகன் அந்த எளியவன் தன்னைவிட அதிக கஷ்டப்படுகிறதைப் பார்த்து ‘ஐயா! நீர் என்னைவிட அதிக வறுமையிலிருக்கிறதாகத் தோன்றுகிறது. ஆகையால் இதோ, இந்தப் பழத்தை யறுத்து உன் பசியாற சாப்பிடு’ என்று சொல்லி தன் கையிலுள்ள வெள்ளரிக்காயை பிச்சைக்காரனுக்குக் கொடுத்துவிட்டு மறுபடியும் வெறுங்கையாய் வீடு சேர்ந்தான்.

நடந்த காரியங்களை மனைவி கேட்கவும் அதிக கோபம் மூண்டு, அரசன் தங்கள் வறுமையைக் கொஞ்சமேனும் கவனியாமல் அதை அற்பமாய் எண்ணி பண உதவியாகிலும் வேறு பொருளுதவியாகிலும் செய்யாமல் அதியவசியமில்லாத சொற்ப பணத்திற்கு விற்கப்

படும் வெள்ளரிக்காயை இரண்டு முறையும் கொடுத்து வறுமை நீங்கும்படி செய்வது அரசனுக்கு அழகோ என்று போசத் தொடங்கினன்.

இன்னும் சில நாட்கள் சென்றபின் வர்த்தகனுடைய வறுமை அதிகரித்தபடியால் மறுபடியும் அரசனிடம் சென்றான். அரசன் இவனைப் பார்த்து ஆச்சரியப்பட்டு இன்னும் இவனைத் துன்பமும் வறுமையும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றதுபோலிருக்கிறது என்று நினைத்து அவனை நோக்கி 'ஐயா, யான் கொடுத்த இரண்டு வெள்ளரிக்காய்களையும் என்ன செய்தீர்?' என்று கேட்டான். அதற்கு வர்த்தகன் வெள்ளரிக்காய்கள் தன்னிலும் அதியவசியமாக அவைகள் தேவையான இரண்டு வழிப்போக்கர்களுக்கும் ஏழைப் பிச்சைக்காரனுக்கும் கொடுக்கப்பட்ட வரலாற்றைச் சொன்னான்.

அப்போது அரசன் மறுபடியும் ஒரு வெள்ளரிக்காயைக் கொண்டு வரும்படி சொல்லி அதனுள் விலையுயர்ந்த இரத்தின மாணிக்கக் கற்களாலும், பொன்னினாலும், வெள்ளியினாலும் நிரப்பி அவனிடம் மறுபடியும் கொடுத்து 'ஐயா, முன்பு பிறரை நினைத்து அவர்களுடைய கஷ்டத்தில் உதவியதனால் நானும் உம்முடைய ஆபத்தில் உதவ சித்தமாயிருக்கிறேன். ஆகையால் இந்தப் பழத்தைப் பத்திரமாய் எடுத்துக்கொண்டுபோய் சந்தோஷமாய் ஜீவியும்' என்றான். வர்த்தகன் பழத்தை இந்த முறை பத்திரமாய் வீட்டுக்குக் கொண்டு போய் அதன் நிறைவினால் சிறப்புற்று வாழ்ந்தான்.

பிறர்க்குதவி செய்வோருக்கு கடவுள் துணைநிற்பார்.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1916 ஆம் பெப்ருவரிமீ

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | செ. | யாத். | 7. 14—25 | 11 | வெ. | யாத். | 12. 14—28 | 21 | தி. | யாத். | 16. 10—21 |
| 2 | பு. | ,, | 8. 1—15 | 12 | ச. | ,, | 12. 29—39 | 22 | செ. | ,, | 16. 22—36 |
| 3 | வி. | ,, | 8. 16—32 | 13 | ஞா. | ,, | 12. 40—51 | 23 | பு. | ,, | 17. |
| 4 | வெ. | ,, | 9. 1—12 | 14 | தி. | ,, | 13. 1—10 | 24 | வி. | ,, | 18. 1—12 |
| 5 | ச. | ,, | 9. 13—26 | 15 | செ. | ,, | 13. 11—22 | 25 | வெ. | ,, | 18. 13—27 |
| 6 | ஞா. | ,, | 9. 27—35 | 16 | பு. | ,, | 14. 1—14 | 26 | ச. | ,, | 19. 1—13 |
| 7 | தி. | ,, | 10. 1—11 | 17 | வி. | ,, | 14. 15—31 | 27 | ஞா. | ,, | 19. 14—25 |
| 8 | செ. | ,, | 10. 12—29 | 18 | வெ. | ,, | 15. 1—19 | 28 | தி. | ,, | 20. 1—17 |
| 9 | பு. | ,, | 11. | 19 | ச. | ,, | 15. 20—27 | 29 | செ. | ,, | 20. 18—26 |
| 10 | வி. | ,, | 12. 1—13 | 20 | ஞா. | ,, | 16. 1—9 | | | | |

C. L. S. PRESS, MADRAS—1916

# மாதர் போதினி

No. 219 மார்ச்சு 1916 No. 3

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 - MAR 1916
MADRAS

## A WOMAN'S BRAVERY

## தைரியமுள்ள ஒரு ஸ்திரீ

ஸர் ஹென்ரி டேவீஸ் (Sir Henry Davies) என்பவர் சில வருஷங்களுக்கு முன்னதாக வட இந்தியாவில் கவர்னராகவிருந்தார். அவருடைய மகள் அதிக விசேஷமான ஒரு காரியம் சில நாட்களுக்கு முன் செய்தார்கள். ரசாயன சாஸ்திரத்தில் அந்தம்மாள் தேர்ந்தவளாகி ஜெர்மனியர் குண்டுகளில் உபயோகிக்கிற விஷக் காற்றினால் உண்டாகும் கொடூரமான வியாதியை நீக்குவதற்கு அதிகமாய்ப் பிரயாசப்பட்டார்கள்.

இப்படியிருக்கையில் டாக்டர் டேலர் என்கிற அமெரிக்காதுரை ஒருவர் அதற்கென்று ஒரு ஔடதம் கண்டுபிடித்து அது சரியான சுகம் கொடுக்குமோ என்று பரீட்சிக்க விரும்பினார். இந்த மருந்து அப்பயங்கரமான வியாதிக்குச் சரியான ஔடதமானால் அநேக போர்ச்சேவகர் தப்பிக்கொள்ளலாம் என்றும், இதின் லட்சணங்களை சரியாய் அறியவேண்டும் என்றும் அந்தம்மாள் தீர்மானித்து தானே அவ்விஷக்காற்றை மூச்சு வாங்கித் தனக்கு வியாதி உண்டாக்கிப் பின்னாலே டாக்டர் வந்து அம்மருந்தைத் தனக்குக் கொடுக்கும்படி அழைத்தார்கள். அவர் வந்து செய்யவேண்டிய ஏற்பாடுகளைச் செய்து மருந்து கொடுத்துவிட்டார். மருந்தினாலுண்டாகும் மாறுதலை அறிய 24-மணிநேரம் பிடிக்கும். மருந்து அந்த வியாதிக்கு ஏற்றதாயிருந்தால் சுகம் மறுபடியும் வரும்; இல்லாவிட்டால் சரீரம் தன் மாமிசமாகி பயங்கரமான விதமாய் மரிக்கவேண்டியதாயிருக்கும்.

அவர்களுக்குச் சுகம் வந்துவிட்டது; ஆனாலும் அநேக நாளாகப் பலவீனப்பட்டு அதிக கஷ்டப்பட்டார்கள். விஷக்காற்றினால் மரண அவஸ்தையிலிருக்கிற நமது போர்ச்சேவகரில் அநேகருக்கு இந்தம்

மான் தன்னைத் தியாகஞ்செய்ய ஒப்புக்கொண்ட ஒப்புயர்வற்ற கிரியையால் உயிர் தப்பிக்கொள்ளுகிறதற் கிடமாயிற்று.

இதைக் கேள்விப்பட்டு நமது சக்கரவர்த்தியானவர் நமது தேசத்தின் நாமத்தினாலே இவர்களுக்கு நன்றிசெலுத்தினார்கள்.



## THE NEW CREATION (*Continued*)

## புது சிருஷ்டி (தொடர்ச்சி)

1. சாராள். கர்த்தருடைய வாக்குத்தத்தத்திற்குத் தன்னை அப்புறப்படுத்திக்கொண்டு, அடிமையைத் தனதாக்கிச் சிறுமைப்பட்டபின் தானே அதற்குரியவள் என்று கண்டுகொண்ட நாச்சியார்.

2. ரெபேக்காள். புருஷனைப் பார்க்கிலும் தேவனிடம் அந்தரங்கமாய் உறவாடி ஜெபத்தால் அறிந்துகொண்ட தேவ இரகசியத்தை ஏற்ற சமயம் பார்த்து, முதற் சுதந்தரத்தை யாக்கோபுக்குக் கிடைக்கப்பண்ணின தந்திரமாது.

3. இராகேல். வம்புத்தனமும் வாதுக்குணமும் உள்ளவளாயிருந்தும், தன் புருஷனுக்கு உகந்தவளும், தன் பிள்ளைகள் யாக்



கோபினிடத்தில் மாத்திரமல்ல, தேவனிடத்திலுங்கூட சிரேஷ்ட புத்திர சிலாக்கியம் பெறக் காரணமாயிருந்த செல்வ மனைவி.

4. லேயாள். பிள்ளை பேற்றால் தன் சரீரத்தின் குறைவு மறக்கப்பட்டுப்போனதோடு, தன் பர்த்தாவோடு தான் நெடுநாள் இருந்ததுபோல, தன் வமிசத்தாரும் ராஜாங்க ஆசாரிய மேன்மையோடு தேவனிடத்தில் நிலைநிற்க சலாக்கியம் பெற்ற சௌபாக்கியவதி.

5. தாமார். கபடக்காரி கையில் கணவான் பட்டதும், விகடமாய் அவள் வேந்தர்குலத் தாய்க்கிழவியானதும் (ரூத். 4. 12).

6. எப்பிராத்தாள். அறிவால் அதிகாரி பேரை மறைத்து, நெடுநாள் அமிசையோடு வாழ்ந்து நிலையான ஒரு பேர் பெற்றாள். (1 நாளா. 2. 50).

7. தெபோராள். வாய்ச் சம்பிரதாயத்துக்கு வந்து எட்டின தேவ கிருபையும், வரம்பில்லா அதிகாரமும் பெற்று வாழ்ந்த தீர்க்கதரிசினி.

8. ரூத். இனம், ஜனம், பணம் ஒன்றுமில்லாவிட்டாலும் குண அலங்காரத்தாலும் மனநேர்மையாலும் கோமானுக்கே சிநேகிதியும் மணவாளியுமானவள்.

9. அன்னாள். வெட்கத்துக்கு அஞ்சித் தேவனை அண்டினவள். அருமையான ஒன்றை ஆண்டவருக்குக் கொடுத்து கூட ஐந்து பெற்றுக்கொண்டவள் (1 நாளா. 6. 33). ஆசீர்வதிக்கப்பட்ட ஆசாரியக் குடும்பத்துக்கு அருமைபூட்டி. அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பும் அவள் கோத்திரத்தான் தான்.

10. அபிகாயில். கோலியாத்தைக் கல்லால் வென்ற வீரனை ஒரு சொல்லால் வென்றவள். குணக்கேட்டைத் திருத்தும் மனத்தாஷ்டிகம் உள்ளவள். ஆண் என்ற பேச்சுக்கே சற்று அஞ்சித் தான் என்றதை மறைக்கவல்ல தநம குணம் உடையவள்.

11. பெத்மாக்காவில் உள்ள ஸ்திரீ. தாய்க் கிராமத்துக்கு வாய்த்த தாய். "அறிவால் ஊரை ஆண்டு அன்பால் கீழ்ப்படியப்பண்ணினவள். சிங்கம்போன்ற யோவாபின் பட்டயத்துக்கு மடிவதாயிருந்த ஜீவகோடிகளைத் தங்கம்போலப் பேணி மீட்ட தாய்.

12. யோசேபாள். (2 இரா. 11. 2). பொல்லாத வம்சத்தில் பிறந்து, பொல்லாப்பின் நடுவில் வளர்க்கப்பட்டுப்போன இடத்திற்குத் தக்கதாகப் புத்திநுட்பமடைந்து, ஆனசமயம் வாய்க்குமட்டும் அமர்ந்து காத்திருந்து, ஞானமாய் நன்மையை நாடித் தீமையை விலக்கின புண்ணியவதி.

13. சூனேமியாள். விசாரத்தை உள்ளடக்கி வெளியிடாச் சாந்தகுணம் உள்ளவள். மனுஷக் குறிப்பும் மதிப்பும் தன் மனதிலேயே தோரத் தெளிந்தவள். கர்த்தருக்கு வேண்டியது கைநிறைந்த

பிள்ளையல்ல, தேவஊழியரால் ஞானவைராக்கியமும் ஆவியின் அனலும் பெற்று வளரவேண்டிய, மறுஜெனன மடைந்த மகன் ஒருவன் கிடைத்தாலும் போதுமென்ற கிருபை பெற்றவளாகிய திருப்தியுள்ளவள்.

14. எஸ்தர். கஷ்ட காலத்தில் எடுப்பார் கைப்பிள்ளையாய் வளர்க்கப்பட்ட ஏழைப்பிள்ளை. நல்வளர்ப்பில் வளர்க்கப்பட்ட பிள்ளை எந்த உத்தியோக நிலைமைக்கும் ஏற்றவள் ஆவாள். நாடிய காரியம் நம்பிக்கையோடே முடிப்பாள். உயிரைப்பேணாது உண்மை விளங்கச் செய்வாள். நன்றி பாராட்டுவதில் நான் என்பதற்கிடங்கொடாள். ஆபத்தை நீக்க, மோசத்தை விலக்க, ஆண்டவன் பாதமே கதி யென்றறிந்தவள். கபடமற்ற உபாயமும், களங்கமற்ற நற்செய்கையும் கல்லையுங் கனிந்துருகச் செய்யும் என்றதை யறிந்த காரியக்கள்ளி. கொடுங்கோல் மன்னன் கரத்தாலே தன் சத்துருவை நெடுங்கோல் கொண்டடிக்க நீட்டிவிட்ட நிமிர்ந்தும் பாரா நேர்மைக்காரி. நம்பினோர் மனம் வெம்பிடாது. ஆதி அன்பையே அதிகரிக்கச் செய்யும் ஜோதி நாயகி.

இவர்களெல்லாரும் சூரியனைக் காணாமல் சொப்பனத்தில் நடத்தப்பட்ட மின்மினிப்பூச்சிகள். மூன்றும் பயணத்தில் பிந்திவந்த பையனுக்குப் பெரிய பங்குபோகிறது யோசேப்பின் வேலைக்காரனுக்குத் தெரியாத விளங்காத மர்மம் (ஆதி. 43. 34). இதை வாசிக்கும் அருமைச் சகோதரிகளே, நாம் மேலே சொன்ன இரண்டு கூட்டத்தாரும் பெற்ற விருந்தில் நமக்குப் பங்கில்லை. மூன்றும் விருந் அவர்களும் சாப்பிட்டாலும் ஆக்கப்பட்டது உனக்காகத்தான் (எபி. 11. 40). நம்முடைய விசேஷித்த பங்கு பென்யமீனாகிய சவுலின் நாள்தொடங்கி (1 சாமு. 9. 23) பவுலின் காலமட்டுமல்ல நித்திய நித்தியமாய்க் கர்த்தருடைய உள்ளத்திலேயே இருக்கிறது. பரிமாறுகிற கை எனக்காக ஆணி கிழித்த கைதானே என்று நீ அகமகிழ்வாயாக. அந்தக் கையில் வஞ்சனையில்லை அது தவித்துப்போகிறதுமில்லை. இதோ ஆவியின் வரம். இப்போது பெற்றுக்கொள். இன்று உன் சிருஷ்டிகரை மேன்மைப்படுத்து. இது உனக்கென்றே வைக்கப்பட்டிருக்கிறது. தாய் முகங்காணாத் தத்தளிக்கும் ஆத்துமாக்களே தயவுசெய்து இந்த வசனத்தை வாசியுங்கள். (25 வா.)

தாயை மறந்த ஒரு தமையன் இருக்கிறார். உன்னைச் செல்லப்பிள்ளையாக்க ஒரு வல்லவன் இருக்கிறார். நம்பிக்கையற்றுக் கதறும் (Rachel) மானே உன் சத்தத்தை அடக்கிக்கொள். மான்குட்டிகளெல்லாம் சத்துருவிற்குத் தப்பி தன் தன் இருப்பிடஞ் சேரக் காலம் வந்துவிட்டது. 'என் கால்களை மான் கால்களைப்போல் ஆக்



கினார்' என்ற துணிந்த சொல். உன் நிலையிலிருந்து உன் நேசரைப் பார்க்கும்போது நீ அஞ்சி நின்ற சிங்கம், உன் நேசரைக் கண்டு உனக்குமுன் பதுங்கும். சிவிங்கி உனக்கு வழிவிட ஒதுங்கி நிற்கும். துள்ளி அவரண்டை ஓடு. நேரே போ (உன். 4. 8). 'வழியில் எங்கும் தாமதியாதே.' லோத்தின் மனைவியையும் மறந்துவிடாதே. உன்னை அன்பாய் ஏற்றுக்கொள்வார். 'உலகம் தரக்கூடாத சமாதானம்' இதோ உனக்கு நீட்டப்படுகிறது. இவர் பதினாயிரம் பேரில் சிறந்தவர். இவரே நல்லவர். அவர் மகிமையில் ஒப்பிடத்தக்க மகிமை உனக்கில்லாததாலே உன் மகிமையையும் 'உன் தகப்பன்' வீட்டு மகிமையையும் ஒரே பேச்சில் கீழே எறிந்துபோடு. ராஜா உன் அழகில் பிரியப்படும்படி குப்பைக்காட்டுக் கந்தைகளினாலே ராஜ வஸ்திரத்தை அழுக்காக்கிப் போடாதே. நீ பூரண ராஜாத்தியாகப் பிரியமானால் அவருடைய பூரண கிருபை (யோனா, 2. 8) யைப் பெற்றுக்கொள். விக்கிரகத்திற்கு இடங்கொடாதே. அருமை மீட்பரோடு ஒப்புரவாகு. கள்ளமந்திரம் உன் அழகைக் கெடுக்கும். காலதாமதம் பண்ணாதே.

'ஈதலறந் தீவினை விட்டீட்டல் பொருளெஞ்ஞான்றும்
காதலிருவர் கருத்தொத்து—ஆதரவு
பட்டதேயின்பம் பரனை நினைந்திம் மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.'

'கருத்தொத்து ஆதரவுபடுவது', 'கவர்ந்துகொள்வது', 'சூழ்ந்துகொள்வது', 'வளைந்துகொள்வது' என்றால் எல்லாம் ஒரு பொருளையே தரும். அதாவது சமாதானம், சமாதானத்துக்குச் சேனை இரண்டு. (உன். 6. 13). காவற்படை ஒன்று ஏவற்படை ஒன்று. போர் ஆயுதங்களும் அப்படியே (எபே. 6. 12). காத்துக்கொள்ளல், மேனோக்கிச்செல்லல் ஆகிய இரண்டு பெருங்கடமை எல்லார் மேலும் விழுந்தது. அவையாவன: சோதனைக்குத் தப்ப உதவும் ஜெபமும் சாதனைக்குத் ததீமானுக்குத்தக்க வேத ஆராய்ச்சியுமே.

வேதத்திலே தகுந்த சாட்சி இருக்கிறது. சாலொமோன் ஸ்திரீகளைப் பழித்துப் பழித்து (பிர. 7. 28) அநேக காரியங்களை எழுதியிருக்கச் சாலொமோனைப்போன்ற இன்னொரு ஞானி நீதி. 31-ல் ஒழுக்கமுள்ள ஸ்திரீகளையும் மனைவியரையும் சிறப்பித்து பேசுகிறார். கர்த்தருக்குப் பயப்படும் பயமே காரிய சித்திக்குத் தூண்டுகோல். சுருக்கிச்சொன்னால் பூமியின் எதிர்பார்ப்பு ஸ்திரீ, பரலோகத்தின் மகிமை தேவாட்டுக்குட்டி. உலக மனுஷன் தேடித் தேடித் திரவியத்தையெல்லாம் ஸ்திரீகளுக்கென்றும், ஸ்திரீகளிஷ்

டப்படிக்கும் செலவிடுகிறான். பாடின்றித் திருச்சபை மீட்பின் சந்தோஷங்கொண்டாடிவதும் ஸ்திரீகளின் கொள்ளைக்கே ஒப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் ஆண்டவர் வசனந் தந்தார்.

அதை யோசிக்கும் மாதர் கூட்டம் திரளாயிருக்கிறது என்று R. V. புதுத்திருப்புதலில் வருகிறது (சங். 68. 11). இந்தியாவை ஜெயிக்க இந்தச் சேனைதான் தேவை. இந்தியாவின் பெரும்பாவங்களை மேற்கொள்வது இவர்களுடைய பொறுப்பே. ஆகையால் புதுப்பெலன் அடைந்து, இந்தியாவை 'மாயைக்குக் கீழ்ப்படுத்தின' அவரே மாயைக்கு விலக்கி இரட்சிக்கும்படி பிரார்த்திப்போமாக (ஓசி. 6. 1).

'இரண்டு நாளைக்குப்பின்பு அவர் நம்மை உயிர்ப்பிப்பார்; மூன்றாம் நாளிலே நம்மை எழுப்புவார். அப்பொழுது நாம் அவருடைய சமுகத்தில் பிழைத்திருப்போம்.' அப்பொழுது நாம் அறிவடைந்து, கர்த்தரை அறியும்படி தொடர்ந்துபோவோம்.

U. A.



## PAPER MADE FROM CACTUS

## சப்பாத்துக்கள்ளியிலிருந்து காகிதம்.

அமெரிக்காவில் லூதர் பர்பேங்க் என்பவர் மரப்பட்டையிலிருந்து காகிதம் செய்வதற்குப் பதிலாக வேறொரு புதிய வழி கண்டுபிடித்திருப்பதாகப் பிரஸ்தாபம். காலக்கிரமத்தில் வேறுவகைகளினாலும் காகிதம் செய்கிறார்கள். மரநார்களிலிருந்து காகிதம் செய்யும் வகையைக் கண்டுபிடித்தவர் சாய்லன் என்னும் ஓர் சீனதேச



மந்திரி. அவர் கி.பி. 105-ல் மரப்பட்டையாலும், கந்தைகளாலும், பழைய மீன் வலைகளாலும், சணல் நாரினாலும் காகிதம் செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அன்றுதொட்டு பலவிதமான கந்த மூலங்களைக்கொண்டு பரீக்ஷை செய்துகொண்டு வந்தார்கள். அவற்றில் பிற்காலத்தில் கடிதம் செய்ய முக்கியமாக உபயோகிக்கப்பட்டது எஸ்பார்ட்டோவும் மரப்பட்டையுமே. சப்பாத்துக்கள்ளி நார்கள் ரப்பர் குழாய் வேலைகளுக்குப் பதிலாக உபயோகிக்க முக்கியமானதென்று யாவருக்கும் தெரிந்திருந்தது வாஸ்தவம். பர்பேங்க் சொல்லும் விதமாக மரப்பட்டைக்கு ஈடாக இந்தச் சப்பாத்துக்கள்ளி உதவுகின்றது. அவர் கண்டுபிடித்தது இவ்வளவு மாத்திரமல்ல, சப்பாத்துக்கள்ளி செடி ஆடுமாடுகளுக்கு உணவாகவும், இனிப்பான தின்பண்டங்கள் முதலியன செய்யவும் ரப்பர் குழாய்களுக்கும் உதவுவதுமல்லாமல், சித்திரவேலைகளுக்கும் சுண்ணாம்பு பூச்சுக்குங்கூட உதவுகிறதென்று கண்டுபிடித்தார்.

### ஓர் இலை—பத்து காலன்

பர்பேங்க் துரை சொல்லுவதாவது:—

சப்பாத்துக்கள்ளி இலைகளினால் செய்த சுண்ணாம்புப் பூச்சு சிறிதும் நீர்க்கொள்ளுவதில்லை. இது மிக கவனிக்கத்தக்கது. [நான் இப்பொழுது காக்டஸ் கலந்த சுண்ணாம்பை கீழ்நாட்டு முறையில் உபயோகிக்க முயற்சிக்கிறேன்.] நான், சுண்ணாம்புப் பூச்சுக்குப் பரீக்ஷித்ததுபோல சப்பாத்துக்கள்ளி வர்ணங்களுக்குப் பரீக்ஷிக்காவிட்டாலும், அதனுடைய உயர்வினால் அது மிக சிரேஷ்டமானதென்று திட்டமாகச் சொல்லுவேன். ஒரு சப்பாத்துக்கள்ளி இலையிலிருந்து பத்து காலன் வெள்ளை செய்யலாம். சப்பாத்துக்கள்ளி சாறு தண்ணீரில் கரைவதில்லை. ஆனால் மது சாரத்தில் கரைகின்றது. அச்சார் எவ்வகை நிறமாகவும் மாறும். அதை சுலபமாக கையாடலாம்.

### சப்பாத்துக்கள்ளி விஷயம்

சப்பாத்துக்கள்ளி உஷ்ண மிகுந்த பாகங்களில் மிகுதியாய் வளருகிறது. கீழ்நாடுகளில் அதைப்போன்ற தோற்றமும் உருவமுமுடையது டேய்சி என்ற செடி. மெக்ஸிகோவில் சப்பாத்துக்கள்ளி ஏராளமாக வளருகின்றது. அங்கு உபயோகப்படும் பல்கு என்ற ஓர் பானம் இந்த சப்பாத்துக்கள்ளி வகையைச் சேர்ந்த அலோவ் என்ற செடியிலிருந்து செய்யப்பட்டது. அதினால் சப்பாத்துக்கள்ளி அமெரிக்காவின் தென்பாகத்திற்கே உரியதன்று. ஆனால்

வடபாகத்திலும் ஏராளமாகக் காணப்படுகிறது. சப்பாத்துக்கள்ளி உலகமுழுவதும் காணப்படுகிறதில்லை. மனிதரால் கண்டறியப்பட்ட ஆயிரவகைகளில் ஆப்பிரிக்காவிலுள்ள சில வகையைத் தவிர மற்றவை மெக்ஸிகோவுக்கும் ஐக்கிய மாகாணங்களுக்குமே உரித்தானவை. சப்பாத்துக்கள்ளி தண்டுகளில் நீர் அபரிமிதமாயிருப்பதால் கோடைகால உஷ்ணத்தைத் தாங்கக்கூடிய சக்தி அதற்குண்டு. தவிர, கற்றாழையைப்போல் வேறொன்றும் விளையாதவிடத்தில் சப்பாத்துக்கள்ளி நன்றாய் வளர்கின்றது. ஒருவகை சப்பாத்துக்கள்ளி செடிகள் 50–60 அடி வரையில் ஓங்கி வளர்கின்றது. மிக நேர்த்தியான தினிசு செடிகள் கலிபோர்னியா வாய்க்கால் கரைகளில் கிடைக்கின்றன.

கடைசியாக மரங்களுக்குப் பதிலாக சப்பாத்துக்கள்ளி உண்மையாகக் கண்டுபிடிக்கப்பட்டிருந்தால் இதுவரையில் உபயோகமற்றதென்று தள்ளப்பட்டிருந்த செடியிலிருந்து ஓர் முக்கியமான கைத்தொழில் ஏற்பட்டு ஜனங்களுக்கு நன்மை பயக்கும்.



## STORIES OF THE WAR—A SOLDIER OF CHRIST

## சில யுத்த சம்பவங்கள்—கிறிஸ்துவின் வீரன்

சிறிது நாட்களுக்கு முன்னதாக சார்ஜண்ட் மேஜர் மூர் என்பவன் சில போர்ச்சேவகருக்குக் குண்டுகளின் உள்யந்திரங்களைக்காட்டி அவைகளைப்பற்றி அவர்களிடம் பேசிக்கொண்டிருந்தான். ஒரு வெடிக்குண்டைத் தன் கையில் வைத்துக்கொண்டு அதை வெடிக்



கும்படி விடவேண்டிய விதத்தை விஸ்தரித்துக் காட்டினான். அப்படியிருக்கும்போது எப்படியோ அகஸ்மாத்தாய் அந்த வெடிக்குண்டினுள்ளே இருந்த யந்திரம் சுற்றத் தொடங்கிவிட்டது என்று தெரியவந்தது. அதாவது யந்திரம் யாதோ ஓர் தப்பிதத்தினால் தானாகவே வெடிக்குண்டினுள் சுற்ற ஆரம்பித்து மூன்று நொடிகளுக்குள் வெடித்து திரளான உயிர்ச்சேதம் உண்டுபண்ணத்தக்க நிலைமையிலிருந்தது. அதை எறிந்துவிட்டாலும் சுற்றி நின்றுகொண்டிருந்த எல்லாருக்கும் மரணம் உண்டாகும். அந்த மூன்று நொடிகளுக்குள் அந்தக் குண்டைக் கையிலேயே வைத்துக்கொண்டு தூரமாய் ஓடிப்போனால் மற்ற போர்ச்சேவகர்கள் மரண அபாயத்துக்குத் தப்புவார்கள் என்று நினைத்து குண்டைக் கையில் வைத்துக்கொண்டே அதிக வேகமாய் ஓடினான். கொஞ்சதூரம் போனபின்பு அது வெடித்தது. அவன் சின்னாபின்னமாய் வெடிக்குண்டால் கிழித்து எறியப்பட்டான். ஆனால் அவனைத்தவிர வேறு யாருக்கும் சேதம் உண்டாகவில்லை.

சில மாசங்களுக்கு முந்தி அந்த சார்ஜண்ட் லண்டன் பட்டணத்தில் ஒரு பக்தி கூட்டத்தில் இருக்கும்போது தன் வலதுகையை நீட்டி 'இந்தக் கை சூதாடினதினாலே ரூ. 12,000 திருடினேன். இப்பொழுதோ அது மனுஷருக்கு இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் காட்டுகிறது' என்றான். தான் மரிக்கும் முந்தின ஞாயிற்றுக்கிழமை அவனுடைய பிரசங்கத்தினால் 50 போர்ச்சேவகர் குணப்பட்டு இயேசுகிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள்.

## THE KING'S CUP BEARER *(Continued)*

## ராஜாவுக்குப் பானங்கொடுப்போன் (தொடர்ச்சி)

### IX. அத்தியாயம்

### எண்பத்திநாலு முத்திரைகள்

பட்டணம் முழுவதும், ஒலிவ மரக்கிளைகளாலும், பின்னைமரக் கொப்புகளாலும், வாசனைமரத்தின் இலைகளாலும், தென்னை ஓலைகளாலும் பரப்பப்பட்டு, பச்சைப் பட்டுடுத்தாற்போலிருந்தது. ஜனங்கள் இதின்மேலேயே எட்டு நாட்களாகப் புசித்துக் குடித்துத் தூங்கியிருந்தார்கள். பட்டணம் முழுவதும் விளக்கொளி நிறைந்து, அடிக்கடி கீதவாத்தியம் முழங்க, ஜனங்கள் விருந்துண்டு நகைத்து இப்படி



யாக சந்தோஷம் கொண்டாடினார்கள். திச்ரி மாதம் 22-ம் தேதி கூடாரப்பண்டிகை முடிந்தது. இரண்டுநாளைக்குப் பிறகு ஒரு ஆச்சரியமான மாறுதல் உண்டாயிற்று. மறுபடியும் எருசலேமைப் பார்ப்போம், முந்தி நாம் பார்த்த எருசலேம்தானோவென்று ஆச்சரியப்படுவோம். பசுமையான மரக்கொப்புகளைக் காணோம். எல்லாவற்றையும் அப்புறப்படுத்தியாயிற்று. அங்கே எந்தவிதமான கிளையாவது, கொடியாவது, அலங்கரிப்பாவது இல்லை. உற்சவத்திற்குரிய மினுக்கான உடைகளையும், அழகிய தலைப்பாகைகளையும் களைந்துவிட்டார்கள். தண்ணீர்வாசலண்டையிலுள்ள வெளிப்படையான இடத்தில், ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும் வேறுவிதமாய்க் கூடி வந்திருக்கிறார்கள். கோணி தைக்க உபயோகப்படுகிற கறுப்பு நிறமான ஆட்டுமயிரால் செய்யப்பட்ட முரட்டு வஸ்திரங்களைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்த உடுப்பு கோணிகளைப் போலவே தைக்கப்பட்டிருந்தது. அந்தக் கூட்டத்தைப் பார்க்கும்போது அசைகிற சோணிகளாகவே காணப்பட்டது. அவர்களுடைய தலையின்மேல் மண்ணும், சாம்பலும், தூசியுமிருந்தது. சந்தோஷம் துக்கமாகவும், விருந்து உபவாசமாகவும் மாறிற்று. பாவத்தைப்



பற்றிய பாரமான உணர்ச்சி ஜனங்களுக்கு உண்டாகி யிருக்கிறது. பாவ மன்னிப்பு அவசியமென்றும் அதைத் தேட வந்திருக்கிறதாகவும் அறிக்கையிட்டார்கள். காலையில் பலியிடும் வேளையாகிய ஒன்பது மணிக்குக் கூடி வந்தார்கள். மூன்றுமணி நேரமாக நியாயப்பிரமாணப் புஸ்தகம் வாசிக்கப்பட்டது. மூன்றுமணி நேரம் முகங் குப்புற விழுந்து பாவங்களை அறிக்கையிடுகிறார்கள். லேவியர் அவர்களுடைய ஜெபத்தை நடத்துகிறார்கள். ஒவ்வொருவரும் பார்க்கத்தக்கதாய் சாரத்தின்மேல் (Scaffolding) ஏறிக்கொண்டு, அவர்கள் தேவனை நோக்கிக் கூப்பிடுகிறார்கள். மாலையில் பலிசெலுத்தும் வேளையில், பிற்பகல் மூன்றுமணிக்கு லேவியர், முழங்காலிலிருக்கும் ஜனங்களை எழுந்திருக்கச் சொல்லுகிறார்கள். எழுந்திருந்து அநாதியாய் என்றென்றைக்குமிருக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள் என்று சொல்லி, கர்த்தரை நோக்கி 'எந்த ஸ்துதி ஸ்தோத்திரத்திற்கும் மேலான உம்முடைய மகிமையுள்ள நாமத்துக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக' என்றார்கள்.

லேவியர், தேவன் தம்முடைய ஜனங்களை அதிசயமாய் நடத்தின விதத்தைச் சொன்னார்கள். 'நீர் உண்மையாய் நடப்பித்தீர். நாங்களோ ஆகாமியம் பண்ணினோம். எங்கள் ராஜாக்களும், பிரபுக்களும், ஆசாரியர்களும் எங்கள் பிதாக்களும் உம்முடைய நியாயப்பிரமாணத்தின்படி செய்யாமலும், உம்முடைய கற்பனையை......கவனியாமலும் போனார்கள்....உமக்கு ஊழியஞ் செய்யவும் தங்கள் துர்க்கருமங்களைவிட்டுத் திரும்பாமலும் போனார்கள்.' ஆகையால் இவைகளுக்கெல்லாம் பிரதிபலனாக, 'இதோ இன்றையதினம் நாங்கள் அடிமைகளாயிருக்கிறோம்.' அவர்கள் தேவனைச் சேவிக்கமாட்டோம் தேவனுடைய ஊழியக்காரராய் இருக்கமாட்டோம் என்றார்கள். ஆகையால் மற்றவர்களைச் சேவிக்கும்படியாக விட்டுவிடப்பட்டார்கள். அவர்களுடைய பாவத்திற்குத் தண்டனையாக பாரஸீகத்தின் ராஜாவைச் சேவிக்கலானார்கள்.

அதினால் பலன் என்ன? 'இதோ பலனையும் நன்மையையும் அனுபவிக்கும்படி நீர் எங்கள் பிதாக்களுக்குக் கொடுத்த இந்தத் தேசத்தில்தானே நாங்கள் அடிமைகளாயிருக்கிறோம். அதின் வருமானம் எங்கள் பாவத்தினிமித்தம், நீர் எங்கள்மேல் வைத்த ராஜாக்களுக்குத் திரளாகப் போகிறது.' யூதாவினால் பாரஸீகத்திற்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டதென்பது தெரியாது. ஆனால் சீரிய மாகாணத்திலிருந்து (யூதாவும் அதில் சேர்ந்திருந்தது) வருஷவாரி செலுத்தப்பட்ட தொகை 90,000 பவுண். 'எங்கள் சரீரங்களையும் ஆளுகிறார்கள்?' எங்களிஷ்டத்துக்கு விரோதமாய்ப் போர்ச்சேவக

ராய் அல்லது கப்பலோட்டிகளாய் இருக்கக் கட்டாயம் செய்கிறார்கள். அவர்களுக்காக யுத்தம் பண்ணவும் வேண்டும். 'எங்கள் மிருகங்களையும் ஆளுகிறார்கள்' எங்கள் கன்று காலிகளைத் தங்களின் சொந்தப் பிரயோஜனத்துக்கென்றும், தங்களுடைய சேனையின் உபயோகத்திற்கென்றும் தங்களிஷ்டப்படி பிடித்துக்கொண்டு போகிறார்கள். 'நாங்கள் மகா இக்கட்டில் அகப்பட்டிருக்கிறோம்.' ஆம் எங்களுடைய பாவம் அதின் தண்டனையைக் கொண்டுவந்தது. அதை அதிகமாய் உணர்ந்தவர்களாய், தேவனுக்கு முன்பாக பயபக்தியான உடன்படிக்கை செய்துகொள்ளும்படியாக, இன்றைக்குக் கூடி வந்திருக்கிறோம். நாங்கள் இனிமேல் பாவத்தை விட்டுவிட்டு கர்த்தரையே மகிமைப்படுத்துவோம் என்று வாக்குக் கொடுக்கப்போகிறோம்' என்றார்கள்.

ஒரு நீளமான தோல் சுருளை எடுத்து வந்து அதில் அந்த உடன்படிக்கையை எழுதினார்கள். எருசலேமிலுள்ள பிரதான மனிதர் எல்லாரும், ஒவ்வொருவராய் வந்து தாங்கள் அவைகளைக் கைக்கொள்ளுவோம் என்பதற்கு அடையாளமாக அவரவருடைய முத்திரையை வைத்தார்கள். அந்தத் தேசத்தில் பத்திரத்துக்கு முத்திரை போட்டால்தான் அதற்கு அதிகாரமுண்டு. பாபிலோனில் பத்திரங்களுக்கு ஆறு முத்திரைக்குக் குறையாமல் முத்திரை போடுவார்கள். இந்த முத்திரைகளை ஈரமான களிமண்ணின்மேல் பதித்து, பிற்பாடு அந்தக் களிமண்ணை வேகவைத்து அதின்மேலுள்ள முத்திரையை வேறு கயிறுகளில் ஒட்டவைத்துப் பத்திரங்களில் கட்டிவிடுவார்கள். இந்த விதமாய் அநேக முத்திரைகளைக் கட்டிவிடலாம். நெகேமியா 10-ம் அதிகாரத்தில் முத்திரை போட்டவர்களின் பேரெல்லாம் வருகிறது. முதலாவது நெகேமியா மற்றெல்லாருக்கும் நல்ல முன்மாதிரியாக, முத்திரை போடுகிறார். அவருக்குப் பிறகு காரியதரிசியாகிய சிதேக்கியா, பிற்பாடு ஒவ்வொரு குடும்பங்களின் தலைவரும், எருசலேமில் பேர்போனவர்களுமாகிய எண்பத்திரண்டு பேர் வந்து தோல் சுருளிலே முத்திரை போடுகிறார்கள். எண்பத்துநாலு முத்திரைகளுக்குக் குறையாமல் ஒட்டிவைக்கப்பட்டது. அப்படி முத்திரை போட்டவர்கள் என்ன வாக்குக் கொடுத்தார்கள்?

முதலாவது (10. 9.) தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்படி நடந்துகொள்ளுவோமென்றும், ஆண்டவராகிய கர்த்தரின் கற்பனையைக் கைக்கொண்டு அவைகளின்படி செய்வோமென்றும் தீர்மானம் செய்தார்கள். ஒருவன் தேவனுடைய கற்பனைகளின்படி நடந்தால், தப்பிதமாய் நடக்கமாட்டான். அவன் தேவனுடைய பிரமாணங்களின்படி நடந்தால், அவனுக்குத் தேவையானது வேறொன்று



மில்லை. இந்தவிதமான உடன்படிக்கையை எழுதினவர்கள் புத்திசாலிகள்தான். அவர்கள் மனிதருடைய இருதயத்தை அறிந்தவர்களாயிருந்தார்கள். நாம் அநேக சமயங்களில் மொத்தமான பாவத்தை அறிக்கையிடாதவராயிருப்போம். தன்னயம், சோம்பேறித்தனம், மன்னிக்காத சுபாவம், பெருமை, கெட்ட குணம் இவைகளை விசேஷித்து அறிக்கையிடவேண்டுமானால், நாம் கோபமாய் மறுத்துவிடுவதுண்டு. தோல் சுருளை எழுதினவர்கள் மிகவும் திட்பநுட்பமாய் காரியங்களைக் கண்டித்து, கடந்த காலங்களில் அவர்கள் செய்த விசேஷித்த பாவங்களை விட்டுவிடவும் இனிமேல் நல்லவர்களாய் நடந்துகொள்ளவும் வற்புறுத்தி எழுதினார்கள்.

(1) விவாக விஷயமாய் அவிசுவாசிகளோடு சம்பந்தங் கலக்கமாட்டோமென்று வாக்குக் கொடுத்தார்கள். தங்கள் குமாரத்திகளை அந்த மனுஷருக்குக் கொடுக்காமலும், அவர்கள் குமாரத்திகளைத் தங்கள் குமாரருக்குக் கொள்ளாமலும், இருப்போமென்று வாக்குக் கொடுத்தார்கள்.

(2) ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்கவும், அந்த நாளில் வாங்கவாவது, விற்கவாவது செய்யாமலிருக்கவும், அந்த தேசத்து ஜனங்கள் தங்கள் கூடைகளில் பழங்கள், காய்கள், மீன் முதலியவைகளை ஓய்வுநாளில் கொண்டுவந்தால், அவர்களிடம் வாங்காமலிருக்கவும் வாக்குக் கொடுத்தார்கள்.

(3) இனிமேல் ஒவ்வொரு ஏழாவது வருஷத்தையும் ஓய்வு வருஷமாக ஆசரிப்பதாகவும் ஒப்புக்கொண்டார்கள். இந்த ஓய்வு வருஷங்கள்தான் முந்தின காலங்களில் தேசத்திற்கு மிகுந்த நன்மையைக் கொண்டுவந்தது. யூதருடைய ஒரு தொழில் பயிரிடுதல். எல்லாவிதமான பயிர்த்தொழிலிலும் தேவ கட்டளை என்னவென்றால், ஒவ்வொரு ஏழாவது வருஷத்திலும் வேலையை நிறுத்திவிடவேண்டும். வருஷமுழுவதும் சகலருக்கும் விடுமுறை; ஆகையால் ஜனங்களெல்லாரும் மேலான காரியங்களைப்பற்றி நினைக்க அமைதலான சமயங்கள் போதுமானபடி இருந்தது.

ஓய்வு வருஷத்தில் ஜனங்கள் பசியாயிருக்கிறதேயில்லை. ஏனென்றால் ஆறாவது வருஷத்திலேயே இரட்டை விளைச்சலைக் கொடுத்திருந்தார். அது எட்டாவது வருஷத்தில் தானியம் விளையுமட்டும் அவர்களுக்குப் போதுமானதாயிருந்தது. ஏழாவது வருஷத்தில் தானாக விளைந்த தானியம், ஒலிவமரத்திலுண்டாகும் பழங்கள், திராட்சப்பழங்கள், அத்திப்பழங்கள் இவைகளை ஏழை ஜனங்கள் சேகரித்துக் கொள்ளும்படியாக விட்டுவிடுவார்கள். ஏழைகள் போய்த் தங்களுக்கு ஆறுதலுண்டாகச் சேகரித்துக்கொள்ளுவார்கள். இவ்விதமாய் அநேக

துக்கப்படுகிற வீடுகளுக்குச் சந்தோஷம் உண்டாகும். ஆறுவருஷ காலமாய் அடிக்கடி வெறுமையாயிருந்த போஜன பீடங்கள், அடுக்குப் பானைகள், ஏழாவது வருஷத்தில் போதுமானபடி நிறைந்திருக்கும். இந்த தேவனுடைய கட்டளையை யூதர் மதித்து நடக்கவில்லை. இதைக் கைக்கொள்ளுவதற்குப் போதுமான விசுவாசமும் நம்பிக்கையும் அவசியமாயிருந்தது. ஆகையால் மெதுவாய்க் கவனியாமல் விட்டு விட்டார்கள். இப்பொழுது மறுபடியும் ஓய்வு வருஷத்தை ஆசரிப்போமென்று வாக்குக் கொடுக்கிறார்கள்.

உடன்படிக்கையின் மீதிப்பாகம் தேவனுடைய வேலைக்குக் கொடுப்பதைப்பற்றினது. தேவாலய வேலைக்காக ஒரு சேக்கலில் மூன்றிலொரு பாகத்தைக் கொடுப்பதாகவும், தங்களுக்குள்ள எல்லாவற்றிலும் முதற்பலனை ஒழுங்காயும், மனப்பூர்வமாயும் கர்த்தருக்குக் கொடுப்பதுமல்லாமல், அவனவன் தன்தன் வரிசையில், பலியிடுவதற்கு வேண்டிய விறகுகளையும் கொண்டுவருவதாகவும் வாக்குக் கொடுத்தார்கள்.

இது மிகவும் பயபக்தியான உடன்படிக்கையாயிருந்தபடியால் அத்தனை முத்திரைகளைப் போட்டார்கள். இது கர்த்தருடைய வேலைக்குத் தங்களைக் கீழ்ப்படுத்திக்கொண்ட ஒரு ஒப்பந்தமாயிருந்தது. அவர்கள் தங்கள் வீடுகளுக்குப் போய், தலைமேலிருந்த தூசிகளை உதறிப்போட்டு, இரட்டுடுப்பைக் களைந்துவிட்டு, தங்கள் தேவனை நேசிக்கவும், அவருக்குக் கீழ்ப்படியவும் உறுதியாய்த் தீர்மானம் பண்ணிக்கொண்டார்கள்.

நம்மில் யார் அவர்களைப் பின்பற்றக்கூடும்? நமக்காக மரித்த ஆண்டவருக்குக் கீழ்ப்படிந்து ஊழியஞ்செய்வோமென்று வாக்குக் கொடுப்பதாகப் பத்திரத்திற்கு யார் முத்திரை போடக்கூடும்? நீ செய்வாயா? காலத்தைத் தள்ளிவைத்து, நம்முடைய ஜீவியத்தைப் பார்த்து அது அப்படி இருக்கவேண்டும், இது இப்படி இருக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு சும்மா இருப்பது புத்தியல்ல, சரியானதும் அல்ல. ஜெபத்தைப்பற்றி என்ன? அது ஊக்கமாய் உண்மையாய் இருதயத்திலிருந்து புறப்படுகிறதாயிருக்கிறதா? வேதவாசிப்பைப்பற்றி என்ன? ஒழுங்காயும், பிரயோஜனமுள்ளதாயுமிருக்கிறதா? கடந்த காலங்களில் நாம் நடக்கவேண்டியபடி நடந்துகொள்ளவில்லையென்றும் வருங்காலங்களில் நன்றாய் நடந்துகொள்ள விரும்புகிறதாகவும் உணருகிறதில்லையா? நம்முடைய பாவத்தைப்பற்றி என்ன? எதிர்த்து விட்டுவிடாமல், இளக்காரமாய் இருப்பதினால் பாவம் உன்னைத் தொடர்ந்துவரும்.

இதே மாதிரியாகப் பாவத்தால் எப்போதும் மேற்கொள்ளப்



பட்டு, தோல்வியடைந்தவனாயிருக்கப்போகிறாயா? கவலையீனமாய் நடந்த நாட்களைப் பின்னால் தள்ளிவிட்டு, உலகம், மாம்சம், பிசாசு இவைகளோடு தைரியமாய்ப் போர்புரிவோமாக. தேவனுக்கென்று செய்யும் வேலையைப்பற்றி என்ன? அவருடைய வேலைக்காக செய்யக்கூடியதையெல்லாம் செய்கிறோமா? நம்முடைய பணத்தில் பத்திலொரு பாகத்தைக் கர்த்தருடைய வேலைக்காகக் கொடுக்கிறோமா? நம்முடைய நேரத்தையும், தாலந்துகளையும் அவருக்கென்று பிரதிஷ்டை பண்ணியிருக்கிறோமா? இனிமேல் ஆண்டவருக்காக எல்லா விஷயத்திலும், இன்னும் அதிகமாய்ச் செய்யவேண்டுமென்று உணருகிறதில்லையா? நாம் ஒரு நல்ல ஏற்பாடு செய்யலாம்: கொஞ்ச நேரம் தனிமையாய், அமரிக்கையாய் உட்கார்ந்து, ஒரு காகிதத் துண்டை எடுத்து அதில் நாம் கடந்த காலங்களில் தப்பிதமாயிருந்ததாக உணருகிறவைகளையும் இனிமேல் செய்ய நினைத்தவைகளையும் எழுதி அடியில் கையெழுத்தும், தேதியும் போட்டு கவலையாய் மடித்து, பத்திரமாய் வைத்துவிடு, தேவனையன்றி வேறொருவரும் அதைப் பார்க்கவேண்டாம். உனக்கும் அவருக்கும் இது உடன்படிக்கையாயிருக்கட்டும். அவரைக் கேட்போமானால் அதைக் கைக்கொள்ளவேண்டிய கிருபையைத் தருவார். இன்று இராத்திரியிலேயே இந்தப்படி செய்வாயா? நாளைக் காலையில் நீ விழித்தெழுந்திருக்கும்போது 'நான் கர்த்தருடையவன்; அவருக்கு என்னை ஒப்புவித்துவிட்டேன்; அவருக்கு ஊழியஞ் செய்ய வாக்குக் கொடுத்திருக்கிறேன்' என்ற எண்ணத்தோடே எழுந்திருப்பாய். ஆண்டவரே, என்னை உண்மையுள்ளவனும் தாழ்மையுள்ளவனும் ஜெபசிந்தையுள்ளவனுமாக்கியருளும். எனக்கு வேண்டிய கிருபையையும், தைரியத்தையும், பெலனையும் தாரும்!

ஏனென்றால் நீ நேர்ந்துகொள்ளாமலிருந்துவிட்டால் நல்லது; நேர்ந்துகொண்டால் செலுத்தித் தீரவேண்டும்.

S. A. Vethanayaham.

(இன்னும் வரும்.)

## RIDDLES AND PUZZLES

## விடுகதைகள்

1. காய்மேலே மரம்,
மரத்தின்மேலே கொடி,
கொடியேலே விரல்கள்.
இவைகளென்ன ?

2. பசியில்லாத ஒருவன் எல்லாரோடும்
ஸ்நானம் செய்வான்.

இது என்ன?

3. புயங்களும் கால்களுமில்லை
ஆனால் பெரிய வயிறு ஒன்றுண்டு,
கண்வழியாக போஜனமருந்துகிறது,
தொட்டவுடனே சப்தமிடுகிறது.

இது என்ன?

4. அண்ணனுக் கெட்டாது,
தம்பிக்கு எட்டும்.

இது என்ன?

## ANSWERS TO PUZZLES IN JANUARY NUMBER

### விடை

1. பாம்பு, தவளை, நத்தை
2. கத்திரிபாவளி
3. கழுதை.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1916 ௵ மார்ச்சு ௴

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பு. | யாத். | 21. 1—14 | 11 | ச. | யாத். | 31. 1—11 | 21 | செ. | யாத். | 36. 1—13 |
| 2 | வி. | „ | 22. 1—13 | 12 | ஞா. | „ | 31. 12—18<br>32. 1— 6 | 22 | பு. | „ | 37. 1—16 |
| 3 | வெ. | „ | 23. 1—13 | 13 | தி. | „ | 32 7—20 | 23 | வி. | „ | 38. 1— 8 |
| 4 | ச. | „ | 23. 14—25 | 14 | செ. | „ | 32. 21—35 | 24 | வெ. | „ | 39. 1—14 |
| 5 | ஞா. | „ | 24. 1—11 | 15 | பு. | „ | 33. 1—11 | 25 | ச. | „ | 39. 27— 4 |
| 6 | தி. | „ | 24. 12—18<br>25. 1— 9 | 16 | வி. | „ | 33. 12—23 | 26 | ஞா. | „ | 40. 1—16 |
| 7 | செ. | „ | 28. 1—14 | 17 | வெ. | „ | 34. 1— 9 | 27 | தி. | „ | 40. 17—27 |
| 8 | பு. | „ | 28. 30—43 | 18 | ச. | „ | 34. 10—22 | 28 | செ. | „ | 40. 28—38 |
| 9 | வி. | „ | 29. 1—14 | 19 | ஞா. | „ | 34. 23—35 | 29 | பு. | எபி. | 9. 1—10 |
| 10 | வெ. | „ | 29. 38—46 | 20 | தி. | „ | 25. 1— 8<br>35. 20—29 | 30 | வி. | „ | 9. 11—22 |
| | | | | | | | | 31 | வெ. | „ | 9. 23—28<br>10. 1—14 |

Ç. L. S. PRESS, MADRAS—1916

# மாதர் போதினி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - APR 1916
MADRAS

No. 220 ஏப்பிரல் 1916 No. 4



## CHRIST IS RISEN TO-DAY

## கிறிஸ்து ஸ்வாமியின் உயிர்த்தெழுதல்

கிறிஸ்து வேதாகமத்தின்படி நமது பாவங்களுக்காக மரணமடைந்து நமக்கு நீதியுண்டாக மூன்றாம் நாள் மறுபடியும் உயிரோடெழுந்தார் (ரோ. 4. 25). அவர் உயிரோடிருக்கும்போதே உலக ரக்ஷிப்புக்காகத் தாம் அவசியமாய் மரணமடைய வேண்டியதென்றும், மரணமடைந்தாலும் வேதவாக்கியங்கள் நிறைவேறத்தக்கதாக மூன்றாம் நாள் திரும்ப உயிரோடெழுந்திருக்கவேண்டுமென்றும் தமது சீஷருக்குத் தெளிவாயும் திருஷ்டாந்தங்களின் மூலமாயும் வெளியிட்டிருந்தார். பாவத்தினால் தமக்கும் உலகத்துக்கும் உண்டான பகையை

VOL. XXXI.

நீக்கி உலகத்தில் சமாதானத்தை நிலைநிறுத்துவதற்காகப் பிராயச்சித்த பலி அவசியம் என்று பிதாவாகிய தேவன் எண்ணினபோது குமாரனாகிய கிறிஸ்து பல பாடுகள் பட்டு மரணமடைந்தார். என்றாலும் மரணத்தினால் அவர் கட்டப்படுவது கூடாத காரியமாதலாலும் (அப். 2. 24) அவர் சர்வ சிருஷ்டிக்கும் ஜீவன் தந்து காப்பாற்றும் ஜீவனுள்ள தேவனாயிருப்பதாலும் உயிரோடெழுந்து மரணத்தின் கூரை ஒடித்து தம்மை விசுவாசிக்கிற அனைவருக்கும் அந்த மரண பயத்தை நீக்கினார்.

மரித்தோரிலிருந்து இயேசுநாதர் உயிரோடு எழுந்திருக்கவில்லை என்றால் அவர் நிறைவேற்றவந்த ரக்ஷிப்பு பயன்படாது. சுவிசேஷ பிரசங்கமும் வீணாயிருக்கும். அவரை விசுவாசித்த அனைவரும் வஞ்சிக்கப்பட்டவர்களாவார்கள். நாம் வேறொரு ரக்ஷகருக்காகக் காத்திருக்கவேண்டியதாகும். ஆனால் தேவனுக்கு ஸ்தோத்திரம். சாத்தானும் அவனைச் சேர்ந்தவர்களும் நினைத்தபடி அவர் மரணத்தினால் விழுங்கப்படவில்லை, அவர் நிறைவேற்ற வந்த ரக்ஷிப்பு பயன்படாமல் போகவில்லை. ஏனெனில் ஜீவாதிபதியாகிய அவர் மெய்யாகவே உயிரோடு எழுந்திருந்தார். தம்மை குருவாக ஏற்றுக்கொண்டு பின்பற்றின அப்போஸ்தலர் முதலானவர்களுக்குத் தரிசனமாகி அவர்களோடு முகமுகமாய்ச் சம்பாஷித்திருக்கிறார்.

ஆம், கிறிஸ்து மரணத்தினின்று உயிரோடெழுந்திருக்கிறார். இதற்கு அவர் சிஷர்கள் மாத்திரம் அல்ல, கல்லறையினிடம் காவல் காத்த யாவரும் சாட்சிகளாயிருக்கிறார்கள். அவர் பிறப்பு, பாடுகள், மரணம் ஆகிய இவைகளைவிட அவர் உயிர்த்தெழுதலே முக்கியமானது. ஏனெனில் அதுவே கிறிஸ்துமார்க்கத்தின் அஸ்திபாரமும் மூலாதாரமுமாய் இருக்கிறது.

'மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்.' (வெளி. 1. 18.)

## THE FLY'S SONG

## ஈயும் அதின் பாட்டும்

சில வருஷங்களுக்கு முன்னதாக ஆப்பிரிக்காவிலிருந்து சீமைக்குப்போன ஒரு ஐரோப்பிய பாதிரியார் தம்முடன் ஒரு சிறிய நீகிரோ பையனை மிஷன்வேலைக்குப் பழக்கும்படி கூட்டிக்கொண்டு போயிருந்தார். அவன் பெயர் யோவான். இவர்கள் இருவரும் அங்கே ஒரு துரைசானியைப் பார்க்கப்போயிருந்தார்கள். அந்த



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
7 - APR 1916
MADRAS.



அம்மாள் அவர்களை உபசரித்துச் சற்றுநேரம் பேசினபிற்பாடு யோவானைத் தங்கள் வீட்டைச்சுற்றிக் காண்பிக்க அழைத்துப்போனார்கள். அங்கே ஒரு ஈ பிடிக்கும் வலை தொங்குகிறதையும் அதில் சில ஈக்கள் விழுகிறதையும், மற்றும் அநேக ஈக்கள் கொய் என்ற சத்தத்துடன் அவைகளைச் சுற்றிப் பறந்துகொண்டிருக்கிறதையும் யோவான் பார்த்துக்கொண்டிருந்தான். அந்தத் துரைசானி அவன் கவனத்தை யறிந்து அவனைப் பார்த்து: 'யோவானே, ஏன் இந்தச் சாதாரணமான காட்சியை இவ்வளவு நுட்பமாகப் பார்க்கிறாய்?' என்று கேட்டார்கள். அதற்கு யோவான்: 'அம்மா அவைகள் பாடும் பாட்டை நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன்' என்று பதில் சொன்னான்.

அப்பொழுது அந்த அம்மாள் அவனைப் பார்த்து 'அவைகள் பாடுகிறது உண்மைதான். அப்படியானால் என்ன பாடுகிறது' என்று விளையாட்டாய் விசாரித்தார்கள். யோவான் மறுமொழியாக 'அது உங்களுக்குத் தெரியாதா' என்று கேட்க, அந்த அம்மாள் தனக்குத் தெரியாதென்றார்கள். அதின்பேரில் அவன் 'கெட்டோனை இரட்சியும்' (Rescue the Perishing) என்ற பாட்டை அந்த ஈக்கள் பாடுகின்றனவென்று சொல்லி முடித்தான்.

யோவான் தன்னுடைய மறுமொழிகளினால் பாதிரி வேலை பழகுவதற்குத் தகுந்த சாதுரியமும் சாமர்த்தியமுமுடையவனென்று தன்னை ரூபித்தான். ஆகையினாலே நாம் பேசும்போது வெகு யோசனையுடன் சொற்களை ஆராய்ந்து அறிந்து யாவரோடும் அன்பாய்ச் சம்பாஷிக்கவேண்டும்.



## BLESSINGS OF MODERN INVENTIONS

## தற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் நூதன இயந்திரங்களால் உண்டாயிருக்கும் சிலாக்கியங்கள்

தேவன் தாமே உலகத்திலுள்ள சகல சிருஷ்டிகளையும் சிருஷ்டித்ததுமல்லாமல் சிருஷ்டித்தவைகளில் விசேஷித்தவனாகிய மனிதனுக்கு ஞானத்தையும் அறிவையும் கொடுத்து அவன் மூலமாக அநேக அற்புதகிரியைகளை உலகத்தில் நடப்பித்துவருகிறார். அவ்வற்புத கிரியைகள் தற்காலத்தில் நூதனமாய்க் கண்டுபிடித்திருக்கிற இயந்திரங்கள்தான். இவற்றால் மனிதனுக்குக் கிடைத்திருக்கும் நன்மைகள் மிகுதி. கண்டுபிடிக்கப்பட்ட சூட்சங்களையும் அவற்றால் கிடைத்திருக்கும் அனுகூலங்களையும் ஒவ்வொன்றாய்ப் பிரித்து விவரிப்பின் பெரிய புஸ்தகமாகும். ஆகையால் முக்கிய நூதனங்களையும் அவற்றின் பயனையும் சுருக்கமாகக் கவனிப்போம்.

சில வருடங்களுக்குமுன் உலகத்திலுள்ள ஜனங்கள் தூரயாத்திரையில் பட்ட கஷ்டம் மிகுதி. நூறு மைலுக்கப்பாலுள்ள தன் சிநேகிதனைப் பார்க்கப்போகவேண்டுமானால் திருடரும் வழிப்பறிசெய்யும் கொடியரும் நிறைந்த காடுமேடான ஒற்றடிப்பாதையில் போகவேண்டும். இதில் உடுத்த வஸ்திரம் பழமையாய்ப் போவதோடு கொண்டுபோன ஆகாரத்தையும் இழக்க நேரிடும். குறித்த இடம்



போய்ச்சேர ஒரு மாதமாகும். ஆனால் தற்காலத்திலோ சிலமணி நேரத்திற்குள்ளாக அதிக பத்திரமாய் ரெயில் மார்க்கமாய் அவ்வூர் போய்ச்சேரலாம். இரவாகிவிட்டாலோ விளக்கில்லையே அல்லது காற்றினால் அவிந்துபோகுமே என்று கவலைப்படவேண்டியதில்லை. மின்சார விளக்கானது நமக்காக ரெயில் வண்டியில் போடப்பட்டு அதிக பிரகாசத்தினால் சந்தோஷப்பட்டவர்களாக சிநேகிதன் வீடு போய்ச்சேரலாம். நமது நாட்டிலிருக்கும் ஐரோப்பியரைக் கவனியுங்கள். அவர்கள் இத்தேசத்திலிருந்து அவசரமான சமயங்களிலும் அல்லது மரண அவஸ்தையில் கிடக்கும் தங்கள் சிநேகிதர் முதலியோருக்கு அவசரமாய்ச் சமாச்சாரங்களைத் தெரிவிக்க வயர்லெஸ் தந்தி என்னும் சூஸ்திரத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆகாயத்திலேறி அவசரமாய் யாத்திரைசெய்ய ஏரோப்பிளேன் அல்லது ஏர்ஷிப் என்னும் கருவிகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். முன்னே எழுத்து எழுதுகிறவனுக்குக் கைவலி, பக்கத்துக் கிராமத்திற்கு நடக்கிறவனுக்குக் கால்வலி, ஏர் உழுபவனுக்குத் தோள்வலி என்பது போல இப்பொழுது எழுத்துவேலையை லேசாயும் தெளிவாயும் துரிதமாயும் முடிக்க டைப்ரைட்டர் என்னும் கருவியும், விவசாயத் தொழிலாளிக்கு உழுவதற்கேற்ற கருவிகளும், நடக்கிறவனுக்கு நடையைச் சுளுவாக்க துவிசக்கிர வண்டியும், அதிலும் கால் வலிக்காமலும் சுகமாயும் துரிதமாயும் போகத்தக்கதாக மோட்டார் கார் என்னும் ரதத்தையும் கண்டுபிடித்திருக்கின்றது மிகவும் மேன்மையே. பின் வரும் திருஷ்டாந்தத்தின் மூலமாய் இன்னும் அநேக சிலாக்கியங்களையும் காணலாம்.

ஒரு வாலிபனானவன் ஒருநாள் மதுராபுரி பட்டணம் போயிருந்தான். அந்த நாளில் அவ்வூருக்கு பையாஸ்கோப் கம்பனி வந்திருந்தது. அவ்வாலிபன் அந்நாளிரவில் அவ்விடத்திலேயே தங்கி கம்பனிக்காரரிடம் நாலணா கொடுக்க நாற்பத்திரண்டு மகுடாபிஷேகபடங்களைப் பார்த்தான். அப்படங்களைக் கண்குளிரப் பார்த்துவிட்டு அதிக சந்தோஷத்துடன் அதிகாலையில் மதுரைக்குப்போய் கடையில் 2½ கஜம் துணிவாங்கி தனக்கொரு சட்டைதைக்கத் தையற்காரனிடம் கொடுத்தான். அவன் காலதாமதம் செய்யாமல் ஒரு மணி நேரத்துக்குள் தையல்மெஷினில் அதிவிநோதமாய்த் தைத்துக் கொடுக்க வாலிபன் ஆடம்பரமாய் உடுத்திக்கொண்டு ஊர்வலம் போனான். அச்சமயத்தில் ஓர் இனிய இராகம் இவன் காதுக்குக் கேட்டது, அது என்ன என்று விசாரிக்க போனகிராப் என்னும் பாடும் கருவியென்று அறிந்துகொண்டு சிறிதுநேரம் இனிமையான அந்த இராகங்களைக் கேட்டுக்கொண்டிருந்தான். பாட்டும் நின்றது.

அதே தெருவில் இரண்டொரு அடிக்கு அப்புறத்தில் ஜனங்கள் ஒரு கூட்டமாய் நின்றுகொண்டிருந்ததை வியப்புற்று கூட்டத்தை விலக்கி உள்ளே போனான். அங்கு ஓர் டிக்டபோன் வைத்திருப்பதைக் கண்டு அதற்கும் தன் செவியைச் சாய்த்துக்கேட்க அநேக உபந்நியாசங்களையும் பிரசங்கங்களையும் கேட்டான். அப்பிரசங்கத்தைக் காகிதத் துண்டில் குறித்துவைத்து தன் கிராமத்தாருக்குச் சொல்ல ஆசையுற்றிருந்தான். அந்த இடத்தைவிட்டு தான் தங்கியிருந்த வீட்டுக்கு வருகிற வழியில் ஏதோ ஒரு போஸ்டாபீஸ் இருக்கிறதைக் கண்டு அங்குபோய் பார்த்தான். அங்கே 2 மணி நேரத்துக்குமுன் ராஜாவின் மகுடாபிஷேகத்தில் நடந்த சங்கதிகளைக் கேட்டு வியப்புற்று இது என்ன என்று விசாரித்து தந்திதபால் என்றறிந்து அதனாலுள்ள சிலாக்கியத்தை நேரில் பார்த்து தான் தங்கியிருந்த வீட்டிற்கு வந்தான். வீட்டுக்காரனின் சிநேகிதர் அடுத்த தெருவிலுள்ளவர்களோடு டெலிபோன் என்னும் கருவியின் உதவியினால் சங்கதிகளைப் பேசிக்கொண்டிருந்தபடியால் பைத்தியம் பிடித்த சிநேகிதர் மரத்தோடு பேசுகிறார்களென்று பயந்து தன் சொந்த ஊருக்கு ஓடிப்போனான். அங்கு தன் தாய்க்கு நல்ல சுகமில்லையாகையால் மதுரையிலிருந்து வந்த வைத்தியன் எக்ஸ்ரே என்னும் கருவியினால் தேகத்தைச் சோதித்துப்பார்க்க வயிற்றிலோர் கட்டியிருப்பதாகக்கண்டு அதை அறுக்கும்போது வலியுண்டாகாதிருக்க க்ளோரபாம் என்னும் மருந்தைக் கொடுத்து ஸ்மரணையற்றிருக்கும் சமயத்தில் கட்டியை அறுக்கத் தாய் மரித்தாள். உடனே தன் தாயை மறக்காமலிருக்கவும் எப்போதும் பார்த்துக்கொண்டிருக்கவும் கேமரா என்னும் சூஸ்திரத்தை எடுத்துவந்து ஓர் மனிதனைக் கூப்பிட்டு தன் தாயைப் போட்டகிராப் படம்பிடித்துக்கொண்டான். இனஜன பந்துக்கள் வந்து பிரேதத்தை அதிக மரியாதையாய் எடுத்து அடக்கஞ்செய்தார்கள். ஒன்றுமறியாத இவ்வாலிபனுக்கு எவ்வளவு சிலாக்கியங்கள் நூதனமாய்க் கண்டுபிடித்தவைகளினால் உண்டாயிற்றென்று பாருங்கள். அப்படியே நமது காலத்திலும் நமக்கு அநேக நூதனமாய்க் கண்டுபிடித்த காரியங்களின் மூலமாய் சிலாக்கியங்களையடைந்து நாமும் அதைக் கற்று ஞானமும் அறிவும் அடையும்படி தேவன் உதவிசெய்து வருகிறதற்காக அவருக்கே மகிமையைச் செலுத்துவோமாக.

S. Davaprasatham.



## THE MOUNTAIN OF MISERY

## துன்பகிரி

துன்பகிரியைப்பற்றி பூர்வீக கதையொன்றுண்டு. இதை எழுதுகிறவர் பின்வருமாறு சொப்பனங்கண்டார் :—சகல மனிதரும் குறித்த தினத்தில் அவர்களுடைய துன்பங்களையும் துக்கங்களையும் குறித்த ஓரிடத்தில் கொண்டுவந்து போடலாயிற்று. ஒவ்வொருவனும் தன் சுமையைச் சுமந்துகொண்டுவந்து போட்டான். அப்படிக் கொண்டுவந்து போட்ட சுமைகள் மேகங்களைக்கடந்த உன்னதமான ஒரு பர்வதமாயிற்று. ஒருவன் வறுமை என்கிற சுமையையும் இன்னொருவன் வியாதி என்கிற சுமையையும், இன்னொருவன் அங்கவீனத்தையும், இன்னொருவன் வயோதிபத்தையும், இன்னொருவன் மனஸ்தாபங்களையும், அபஜெயங்களையும் கொண்டுவந்து, இப்படியாக எல்லாரும் அங்கே எறிந்தார்கள். பிறகு கனவு வேறுபட்டது. சகலரும் ஏதாவது ஓர்விதமான சுமையைச் சுமக்கவேண்டுமென்றும், ஏதாவது ஒரு விதத்தில் துன்பங்களை மாற்றிக்கொள்ளவேண்டுமென்றும், ஒவ்வொரு ஆளும் தனக்குக்கொடுக்கப்பட்ட சுமையைத் தன்னோடு கொண்டுபோகவேண்டுமென்றும் ஒரு கட்டளை பிறந்தது. அப்படியே வறுமையை எறிந்துவிட்ட சிலர் அதற்கு ஈடாக வியாதியையும், பசிக்குப் பதிலாகத் தாகத்தையும், அங்கவீனத்திற்குப் பதிலாக துஷ்டப்புத்திரனையும் கொண்டுபோனார்கள். ஒரு ஸ்திரீ அவலக்ஷணமுகத்தைக் கொடுத்துத் தூர்க்கீர்த்தியைப் பெற்றுக்கொண்டாள். இன்னொருவள் நரையயிரைக் கொடுத்துவிட்டு மர்தாரகாசத்தைப் பெற்றுக்கொண்டாள். எப்பக்கத்திலும் அழுகையும் பற்கடிப்புமுண்டாயிற்று.

நமக்கு நன்மையானது எது என்று நமது பரமபிதாவுக்குத்தெரியும். ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் அதனதன் வேலையையும், அது சுமக்கக்கூடிய பாரத்தையும் கொடுக்கிறாரென்கிற பாடத்தை இதை எழுதுகிறவர் படிப்பிக்கிறார். ஆம், கடவுள் நமக்குச் சஞ்சலங்களை அனுப்புகிறார். ஆனால் அவைகள் ரூபமாறிவருகிற பாக்கியமான தூதர்களே.

## RIDDLES AND PUZZLES

## விடுகதைகள்

1. அதற்குக் கரங்களுமில்லை கால்களுமில்லை, ஆனால் பருத்த வயிறு உண்டு, கண்ணின்வழியாய் உணவை உட்கொள்ளுகிறது. தொட்டவுடன் பெருஞ்சத்தம் செய்கிறது. அது என்ன?

2. ஒரு வாலிப பையன் பட்சி வேட்டையாடப் போனான். ஒரு பெண் கையில் குடத்தோடு தண்ணீர் மொள்ள குளத்திற்குப் போகிறாள். பெண் பையனுக்குச் சொல்லுகிறதாவது :

பீதாபூரிலிருந்து வந்த பையனே, பக்ஷி வேட்டைக்காரனே, ஒரு பட்சியையும் உன் அம்பினால் காயப்படுத்தாதே, காயப்படுத்தின பட்சியை வீட்டுக்குக் கொண்டுவராதே, மாமிசமில்லாமலும் வீட்டுக்குத் திரும்பாதே.

பையன் பெண்ணுக்குச் சொல்லுகிறதாவது :

தண்ணீர் மொள்ளப்போகிற கறுத்தக் கண்ணுள்ள பெண்ணே, உன்னுடைய குடத்தைத் தண்ணீரில் போடாதே. அப்படிப் போட்டால் அதை வீட்டுக்குக் கொண்டுவராதே, தண்ணீரில்லாமலும் வீட்டுக்குத் திரும்பாதே. இது என்ன?

3. ஒரு சிறுபழுத்தின்மேல் ஒரு மரம், மரத்தின்மேல் கொடிகள், கொடிகளின்மேல் விரல்கள். இது என்ன?

## THE KING'S CUP BEARER *(Continued)*

## ராஜாவுக்குப் பானங்கொடுப்போன் (தொடர்ச்சி)

### XI. அத்தியாயம்

#### தைரியமுள்ள தன்னிஷ்ட சேவகர்

'எருசலேம் என்னுடைய பாக்கியமான வீடு, அந்நாமம் எனக்கு அதிக அருமை, நான் ஆசித்த வீடதே' என்று பாடுகிறோமே. முற்காலத்தில் யூதர்கள் பாடின பாட்டின் எதிரொலியாகத்தான் நாம் இப்போது பாடுகிறோம். நம்முடைய சுயதேசத்தை எல்லாரும் நாடுகிறோம், நேசிக்கிறோம், என்றாலும் யூதர்கள் எருசலேமை நேசித்ததுபோல நாம் நம்முடைய தேசத்தை நேசிக்கிறதில்லை. அவர்களுடைய பிதாக்களின் பட்டணமாகிய இந்த எருசலேம் யூதர்களுடைய இருதயத்திற்கு எவ்வளவு அருமையாயிருந்ததென்று சங்கீதப் புஸ்தகத்தைப் பார்த்தால் தெரியும்.

"கர்த்தர் பெரியவர், அவர் நமது தேவனுடைய நகரத்திலும், தமது பரிசுத்த பர்வதத்திலும் மிகவும் துதிக்கப்படத்தக்கவர். வடதிசையிலுள்ள சீயோன் பர்வதம் வடிப்பமான ஸ்தானமும், சர்வ பூமியின் மகிழ்ச்சியுமாயிருக்கிறது. அதுவே மகாராஜாவின் நகரம்' (சங். 48. 1, 2).





'எருசலேமே, உன் வாசல்களில் எங்கள் கால்கள் நிற்கலாயிற்று. எருசலேம் இசைவிணைப்பான நகரமாய்க் கட்டப்பட்டிருக்கிறது. அங்கே இஸ்ரவேலுக்குச் சாட்சியாகக் கர்த்தருடைய ஜனங்களா கிய கோத்திரங்கள் கர்த்தரின் நாமத்தை ஸ்தோத்திரிப்பதற்காகப் போகும். எருசலேமின் சமாதானத்துக்காக வேண்டிக்கொள்ளுங் கள்; உன்னை நேசிக்கிறவர்கள் சுகித்திருப்பார்களாக. உன் அலங் கத்திற்குள்ளே சமாதானமும், உன் அரமனைகளுக்குள்ளே சுகமும் இருப்பதாக' (சங். 122. 2-4, 6, 7).

இந்த வார்த்தைகள் அவர்கள் தாங்கள் மிகவும் அருமையாய் நேசிக்கிற எருசலேமைப்பற்றித் தங்களுக்கிருக்கும் ஆசையையும் மரியாதையையும் காண்பிக்கிற எண்ணிறந்த வார்த்தைகளில் சிலது மாத்திரம்தான் என்று சொல்லலாம். யூதர்கள் பாபிலோனில் சிறையிருந்த காலமெல்லாம் எருசலேமுக்கு மறுபடியும் போகும்படியாக எவ்வளவோ ஆவலோடிருந்தார்கள். மகா நகரத்தைப் பார்க்கவும் அதின் வீதிகளில் நடக்கவும் எவ்வளவோ ஆசைப்பட்டிருப்பார்கள். தங்களுடைய தூரதேசத்தை நினைக்கும்போது கண்ணீர் சிந்தாமலிருக்கக்கூடவில்லை.

‘பாபிலோன் ஆறுகள் அருகே நாங்கள் உட்கார்ந்து, அங்கே சீயோனை நினைத்து அழுதோம். எருசலேமே, நான் உன்னை மறந்தால், என் வலதுகை தன் தொழிலை மறப்பதாக. நான் உன்னை நினையாமலும், எருசலேமை என் முக்கியமான மகிழ்ச்சியிலும் அதிகமாக எண்ணாமலும்போனால், என் நாவு என் மேல்வாயோடு ஒட்டிக்கொள்வதாக’ (சங். 137. 1, 5, 6).

என்றபோதிலும், சிறையிருப்பிலிருந்த காலமெல்லாம் யூதர்கள் பரிசுத்த நகரத்தைப்பற்றி அதிக ஆவலுள்ளவர்களாயிருந்தபோதிலும், தங்கள் சுயதேசத்திற்குத் திரும்பி வந்தபோதோவெனில், எருசலேமில் குடியிருப்பதைவிட மற்ற விடங்களில் குடியிருப்பதைத்தான் தெரிந்துகொண்டார்கள். இது விநோதமான விஷயந்தான். தலைநகரில் வந்து குடியிருக்கும்படியாக அவர்களைச் சம்மதிக்கப் பண்ணுவது மிகவும் கஷ்டமாயிருந்தது. நெகேமியா நகரத்தைக் கட்டி முடித்தவுடனே இதுதான் கஷ்டமாயிருந்தது. குப்பைகளும் அழுக்குகளும் அப்புறப்படுத்தியாயிற்று. அலங்கம் கட்டி முடிந்தது. கதவுகள் போட்டாயிற்று. கோட்டையையும் பலப்படுத்தியாயிற்று. ஆனால் உள்ளேயோ அங்கும் இங்கும் சில வீடுகள்தானிருந்தது. கட்டடங்கள் கொஞ்சம்தான். அலங்கத்திற்குள்ளே அநேக வெறுமையான இடங்களிருந்தது. அதிகமான பாகம் குடியில்லாமலிருந்தது.

பழைய இடத்திலேதான் அலங்கம் கட்டப்பட்டது. அது நாலு மைல் சுற்றளவாயிருந்தது. அதிக விசாலமான இடத்தைச் சூழ்ந்திருந்தது. நெகேமியா சுற்றிப்பார்த்தபோது, வெளிப்பார்வைக்குப் பட்டணம் அலங்காரமாயும், உள்ளேயோ வெறுமையாயும் நிர்ப்பாக்கியமாயும் இருக்கிறதென்று கண்டார். இதுமாத்திரமல்ல நகரத்திற்கு அந்தக்கேடாயிருந்தது; அலங்கத்தைக் காவல் செய்யப் போதுமான ஜனங்களில்லை. எதிராளி வந்துவிட்டால் என்ன செய்கிறது? நாலுமைல் சுற்றளவுள்ள அலங்கத்தைக் காவல்செய்ய மிகுதியான ஜனம் வேண்டுமே. பட்டணத்திற்குள்ளே அநேகர் குடியிருக்கவேண்டியது அவசியமாயிருந்தது. என்றாலும் சுற்றுக்கிராமங்களிலிருந்து எருசலேமுக்குள் வந்து குடியிருக்க ஒருவராவது மனமுள்ளவர்களாய் இருக்கவில்லை என்று நெகேமியா அறிந்துகொண்டார். யூதேயாவிலுள்ள ஒவ்வொரு பட்டணமும், ஒவ்வொரு கிராமமும், தலைநகரைவிட ஜனம் பெருத்ததாய் இருந்தது. எருசலேமின் உயர்ந்த மலைநாடுகளைவிட, எரிகோவின் உஷ்ணமான பாகங்களைத் தெரிந்துகொண்டார்கள். திராட்சச்செடிகள் நிறைந்த தேவநகரத்தைவிடக் கல் தரையாகிய பெத்தேலை விரும்பினார்கள். தலைநகரைவிடப் பட்டிக்காடும் ஒன்றுக்கும் உதவாததுமாகிய அநாதோத்திலிருக்க



இஷ்டப்பட்டார்கள். இதெல்லாம் என்னத்திற்காக? நெகேமியாவின் காலத்திலுள்ள யூதர்கள் எருசலேமில் குடியிருக்க இஷ்டப்படாததின் காரணமென்ன? சிறைகளாயிருந்த காலத்தில் எருசலேமைப் பற்றி எவ்வளவு ஆசையாயிருந்தார்கள். திரும்பிவந்த பிறகு ஏன் பின்வாங்குகிறார்கள்? அதின் காரணமென்னவென்றால், எருசலேம் அபாயமுள்ள ஸ்தலமாகிவிட்டது. சுற்றி இருந்தவர்களெல்லாரும் சத்துருக்களானார்கள். சமாரியரும், மோவாபியரும், அம்மோனியரும், ஏதோமியரும், இன்னும் மற்றநேகரும், எந்த வேளையிலும் யூதர் மேல் விழுந்து அழிக்க ஆயத்தமாயிருந்தார்கள். சத்துரு வந்தால் எந்த இடத்தின்மேல் அவர்கள் கண் நோக்கமாயிருக்கும்? எருசலேமின்மேல்தான் அல்லவா? எரிகோவையும், பெத்தேலையும் மற்றும் சுற்றுப்பக்கங்களையும் கவனியாதபடி கடந்து, எருசலேமை நோக்கி வருவார்கள். ஆகையால் எருசலேமில் குடியிருந்தால் அபாயம் நேரிடும் என்ற பயத்தோடே எப்போதும் ஜீவிக்கவேண்டியதாயிருக்கும்.

S. A. Vethanayaham.

(இன்னும் வரும்.)

## HANNAH—THE CHILDLESS WIFE

## குழந்தை இல்லாத மனைவி அன்னாள்

அன்னாளின் சிறுவயதின் சரித்திரமும் அவளது இல்லற வாழ்க்கைக்கு முந்திய வாலிபப் பிராயத்தின் நடபடிகளும் இன்னதென்று நமக்குத் தெரியாதிருப்பினும் அவள் உத்தம நெறிக்குட்பட்டு ஜீவித்திருப்பாள் என்பதற்குச் சந்தேகமில்லை. இந்த அன்னாள் எப்பிராயீம் மலைத்தேசத்திலிருக்கிற சோபீம் என்னப்பட்ட ராமதாயீம் என்னும் ஊரிலிருந்த எல்க்கானா என்பவனின் மனைவிகளில் ஒருத்தி.

### அன்னாளின் குடும்பவிஷயம்

(1) எல்க்கானாவுக்கு இரண்டு மனைவிகள் இருந்தார்கள். இப்படி இரண்டு மனைவிகளை விவாகம்பண்ணினது தேவன் கொடுத்த முதல் சட்டத்திற்கு விரோதமானது. (மத். 19. 5–9).

இருமனையாட்சி. — ஆபிரகாம் யாக்கோபு இவர்கள் குடும்பங்களிலே தீங்கு விளைவித்தது; இப்போது எல்க்கானாவின் குடும்பத்திலும் கெடுதியை உண்டாக்கினது. இந்த இரண்டு மனைவிகளில் பெனின்னாளுக்குப் பிள்ளைகள் இருந்தது. ஆனால் அன்னாளின் கர்ப்பத்தையோ கர்த்தர் அடைத்திருந்தார். யாத். 23. 14-ல் சொல்லியபடி



இவர்கள் வருஷாவருஷம் சீலோவில் நடத்தப்படும் பண்டிகை காலத்தில் கர்த்தரைத் தொழுதுகொள்ளும்படியாகக் குடும்பத்தோடு போகிற வழக்கமுண்டு. அந்தக் காலங்களில் அன்னாள் விசேஷமாகக் கர்த்தருடைய சந்நிதியில் தன் இருதயத்தை ஊற்றிவந்தாள். அன்னாள் தன் புருஷனாகிய எல்க்கானாவினால் அதிகமாய் நேசிக்கப்பட்டிருந்தாள். அவள் தன் இருதயத்தை தேவனுக்கு முன்பாக ஊற்றி அவருக்குப் பயந்து நடந்த ஸ்திரீ.

## அன்னாள் தேவசந்நிதியில் துக்கித்து மன்றாடினது

(2) (1 சாமு. 1. 9–18.) வெகுகாலமாய்ப் பிள்ளையில்லாமல் மலடியாய் இருந்த அன்னாளுடைய ஊக்கமான வேண்டுதல் ஒரு பெரிய நன்மையை உண்டாக்கிற்று. ஆகையால்தான் அன்னாள் ஓர் உறுதியான பொருத்தனையை நேர்ந்துகொள்ள வேண்டியவளாயிருந்தாள். அந்தப் பொருத்தனையின் சுருக்கம் என்னவென்றால்: 'சேனைகளின் கர்த்தாவே, தேவரீர் உம்முடைய அடியாளின் சிறுமையைக் கண்ணோக்கிப்பார்த்து, உம்முடைய அடியாளை மறவாமல் நினைந்தருளி, உமது அடியாளுக்கு ஓர் ஆண்பிள்ளையைக் கொடுத்தால், அவன் உயி



ரோடிருக்கும் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன்; அவன் தலையின்மேல் சவரகன் கத்தி படுவதில்லை' என்பதே (1 சாமு. 1. 11).

## அன்னாள் தன் ஜெபத்தில் சித்திபெற்றவளாய் விளங்கினாள்

(3) இவள் செய்த இப்படிப்பட்ட பொருத்தனை நிறைவேறத்தக்கதாய் அவள் வேண்டுதல் கேட்கப்பட்டது. அவள் கர்ப்பம் தரித்து ஒரு குமாரனை ஈன்றெடுத்தாள். தான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனையை நிறைவேற்றினாள். அப்படியே சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான் சகலவித சன்மார்க்க ஜீவியத்திலும் தேவதாபக்தியிலும் வளர்க்கப்படத் தன் ஜீவியகாலபரியந்தம் சிறந்த தேவஊழியனாகவும் தீர்க்கதரிசியாகவும் விளங்கினான் என்று பார்க்கிறோம்.

## அன்னாளின் பிரதிஷ்டை

(4) அன்னாள் தன் மகனைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்ததினால் தான் மிகவும் உபகாரமான காரியத்தைச் செய்ததாகப் பெருமைகொள்ளாமல் தான் பிரதிஷ்டை பண்ணின உயிருள்ள காணிக்கையைக் கர்த்தர் ஏற்றுக்கொள்ளும்படி உயிரில்லாத பலிகளைச் செலுத்துகிறாள் (1 சாமு. 1. 24–25.). மகிழ்ச்சியடைந்த இந்தத் தாயானவள் கர்த்தருக்குக் கடன்கொடுத்தது ஒருக்காலும் இழந்துபோகாதென்றதையும் உற்றறிந்தாள்.

(இன்னும் வரும்)

# THE WATER-LILY—A PARABLE

## ஆம்பல்: ஓர் உவமை

ஓர் தெளிவான ஏரியின் ஓரத்தில் ஒரு சின்ன பச்சைசெடி முளைத்தது. தனக்குக் கிடைத்த சமயத்தை எவ்வளவுக்கு ஆதாயப்படுத்தக்கூடுமோ அவ்வளவுக்கு ஆதாயப்படுத்த ஆவற்கொண்டாற்போல் நெடுந்தூரம் தண்ணீருக்குள் பரவினது. அது ஒரு சாதாரணமான செடியைப்போல் தோன்றினது. ஆனால் அதின் பசுமையான இலைகளின் மூடக்கில் வெண்மையான வரிகளோடு சேர்ந்த ஒரு பச்சை மொக்கு தோன்றினது. ஆம்பலின் நம்பிக்கையெல்லாம் அதிலே அடங்கியிருந்தது, நாளுக்குநாள் இந்தச் சின்னமொக்கு விரிந்துகொண்டே வந்து கடைசியாக எல்லா அலங்காரத்தோடும், பொன்னிறமான மையத்தோடும் தண்ணீருக்குமேல் தலைவிரித்தது. ஆனால் சில வேளைகளில் சவுந்திரியம் ஒரு கண்ணியாகும். அந்தச் சிறுபுஷ்



பம் தன் அழகையும், கவர்ச்சி தன்மையையும் குறித்து, அகங்காரங் கொண்டு, தனக்கு அனல் கொடுத்து ஜீவனை உண்டாக்கின சூரியனின் உருக்கமான பார்வைக்குத் தான் கடனாளியென்பதை மறந்து போனது. அதனுடைய உண்மையான பலத்துக்கு ஆதாரம் எது என்பதை விசனகரமான அனுபவந்தான் காட்டும். இதற்கிடையில் அதன் அழகு மங்கினது. அதன் அலங்காரம் கறைப்பட்டுப்போயிற்று. அவலக்ஷணமான பூச்சுகள் அதை மூடிக்கொண்டன. ஆனால் ஒரு பட்சமான கண் அதைப் பார்த்துக்கொண்டேயிருந்தது. உருக்கமான கரம் ஒன்று அதை ரட்சிக்க நீண்டது. பிரகாசமான கோடைகாலத்து ஆகாயம் இருண்டு அந்தகாரப்படக் கருமேகங்கள் கிளம்பிச் சூரியனை மறைத்தன. ஆம்பல் முதலில் கொஞ்சம் நடுங்கித் தான் முன்பெற்றுக்கொண்ட ஒளியினாலும் உஷ்ணத்தினாலும் பிழைக்கலாமென்றும், தனக்கு ஒன்றும் அவசியமில்லையென்றும் தன்னைத்தானே தேற்றிக்கொண்டது. ஒரு பயங்கரமான புயல் ஏரியின்மேல் அடித்து அலைகளைக் கிளப்பிவிட்டது. அலைகள் வரவர உயர்ந்து நடுங்குகிற புஷ்பத்தின்மேல் மோதின. புயல் நின்று புஷ்பம் தலையெடுக்க அநேகமணி நேரம் சென்றது. அப்போது அதிக நம்பிக்கையற்றதாயும் தளர்ச்சியடைந்ததாயும் அலைசடிப்பட்டதாயும் தோன்றினது.

ஆ! சூரியன் மாத்திரம் என் பெருமையையும் நன்றியறியாமையையும் மன்னித்து என்மேல் பிரகாசித்தால் எவ்வளவு நலமாயிருக்குமென்று ஓலமிட்டது. ஆனால், சூரியன் சில நாளைக்கு அதன் வேண்டுகோளுக்குச் செவிகொடுக்காததுபோல் தோன்றினது. கடைசி



யில் ஒருநாள் சூரியனிலுள்ள ஒரு தனிக்கிரணம் மேகங்களை ஊடுருவி ஆம்பலின் மேல் பிரகாசித்தது. ஆ! அதற்கு என்ன இன்பம்! போதுமானமட்டும் அதன் வெளிச்சத்தையும் உஷ்ணத்தையும் பெற்றுக்கொள்ள இதழ்களை விரித்து சுருக்கங்களை நீட்டினது. அப்போது கிரணத்துக்குப்பின் கிரணம் அதின் மகிமையான பிரகாசத்தை ஊற்ற அதிசயமான ரூபம் பெற்றது. அதனுடைய இதழ்கள் உறைந்த பனிக்கட்டிகள்போல் மாசற்றதாயின. அதன் தோற்றம் தூய்மையாகி நன்றியறிதலினாலும் அன்பினாலும் கொழுந்துவிட்டு எரிந்தது போல் காணப்பட்டது. ஏரிக்கரையின்மேல் வளர்ந்த புஷ்பங்களெல்லாம் அதன் ரூபலாவண்ணியத்தைப் பின்பற்ற முயற்சிசெய்தன. அதற்குத் தெரியாமலே அழகில் மிகுந்த அந்த புஷ்பத்தை வழிப்போக்கர் வியப்போடு பார்த்தார்கள். கடைசியாக லீலிபுஷ்பம் சாந்தகுணத்துக்கும் தூய்மைக்கும் அறிகுறியாயிற்று.

## EDITOR'S NOTES

## பத்திராதிபர் நானாவிதக் குறிப்புகள்

ஜட்ஜ் ஹார்டிங்.—இவர் 1886-ம் வருஷம் முதற்கொண்டு தென்னிந்தியாவிலுள்ள பல விடங்களில் நியாயாதிபதியாயிருந்து கடைசியில் திருச்சினாப்பள்ளி ஜில்லா ஸெஷன் ஜட்ஜியாக வேலை பார்த்து வருகையில் சென்ற பெப்ருவரி மாதம் கடைசியில் துர்மரணமடைந்தார். ஒருநாள் கோர்ட்டுக்குப்போய் படி ஏறப்போகிற சமயத்தில் புத்திதப்பியிருந்த ஓர் மகம்மதியன் இரண்டுதடவை அவரைக் கத்தியால் குத்தி அரைமணி நேரத்தில் உயிர்துறந்தார். இந்த சங்கதியைக் கேட்க நாம் அதிகமாய் விசனப்படுகிறோம். இவர் இந்தியரோடு கலந்து உறவாடி தேசத்தின் பொதுநன்மையை அதிகமாய்க் கோரினவர். அவர் மனைவிக்கும் மகளுக்கும் கர்த்தர் ஆறுதலளிப்பாராக.

**இந்திய மாதர் சர்வகலாசாலை.**—பம்பாயில் நடந்த இந்தியன் நாஷனல் கான்பிரன்சில் தேசிகர் கார்வ இந்திய மாதர்களுக்கு ஓர் சர்வகலாசாலை ஏற்படுத்தவேண்டுமென்ற விஷயத்தின்மேல் விஸ்தாரமாய்ப் பேசினார். இந்த ஏற்பாட்டை முன்னுக்குக் கொண்டுவர ஆறு புருஷர்களும் ஒரு ஸ்திரீயுமாக ஏழு பேர் ஒரு கமிற்றியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்துதேச ஸ்திரீகளுக்கு உயர்தரக் கல்வி கொடுக்கவும் சுதேசபாஷைகளில் ஒன்றை போதனாபாஷையாகவும்

ஸ்திரீகளுடைய அவசியத்துக்குத் தக்கதாகவே கற்கவேண்டியவைகளை ஒழுங்குசெய்யவேண்டுமென்பதும் இந்த சர்வகலாசாலையின் முக்கிய நோக்கம். ஜப்பான் தேசத்தில் இவ்விதமான சர்வகலாசாலை ஏற்படுவதற்கு அனுகூலமாயிருந்த வசனம், பொதுவான பாஷையாகிய இரண்டு சாதனங்களும் நம்முடைய தேசத்திலில்லாதது ஒரு பெருஞ்சங்கடமே.

**மாலோயா புகைக்கப்பல்:**—பெப்ருவரி மாதம் 27-ம் தேதி இங்கிலாந்தைவிட்டுப் புறப்பட்ட மாலோயா என்னும் புகைக்கப்பல் கரைக்கு இரண்டு மைல் தூரத்திலிருக்கும்போதே தண்ணீருக்குள் ஒளித்திருந்த சுரங்க குண்டு தட்டி உடைந்து அமிழ்ந்துபோயிற்று. தரைக்குச் சமீபத்தில் இந்த ஆபத்து சேரிட்டதால் அதிக ஜீவநஷ்டம் நேரிட்டிருக்காதென்று எதிர்பார்த்திருந்தோம். என்றாலும் உண்மை அப்படியல்ல, அந்தக் கப்பலிலிருந்த 411 பேரில் 260 பேர் மாத்திரந் தான் உயிர்தப்பினார்கள்.

**நமது புதிய ராஜப்பிரதிநிதி:** செல்ம்ஸ்போர்டு பிரபு ஏப்பிரல் மாதம் 3-ம் தேதி பம்பாய் வந்துசேர்ந்து 5-ம் தேதி டில்லி பட்டணத்தில் துரைத்தன முறைமையோடு பிரவேசஞ் செய்வார்.

## LESSONS FOR FAMILY WORSHIP

# வேத வாசிப்பு ஒழுங்கு

### 1916 ௵ ஏப்பிரல் ௴

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ச. | எபி. | 10. | 15—27 | 11 | செ. | எண். | 9. | 1—12 | 21 | வெ. | எண். | 14. | 18—24 |
| 2 | ஞா. | லேவி. | 19. | 1—10 | 12 | பு. | ,, | 9. | 15—23 | 22 | ச. | ,, | 14. | 24—35 |
| 3 | தி. | ,, | 19. | 11—18 | 13 | வி. | ,, | 10. | 1—13 | 23 | ஞா. | ,, | 14. | 36—45 |
| 4 | செ. | ,, | 19. | 23—37 | 14 | வெ. | ,, | 10. | 29—36 | 24 | தி. | ,, | 15. | 22—31 |
| 5 | பு. | ,, | 25. | 1—16 | 15 | ச. | ,, | 11. | 1—9 | 25 | செ. | ,, | 15. | 32—41 |
| 6 | வி. | ,, | 25. | 17—28 | 16 | ஞா. | ,, | 11. | 10—23 | 26 | பு. | ,, | 17. | 1—13 |
| 7 | வெ. | ,, | 25. | 35—46 | 17 | தி. | ,, | 11. | 24—35 | 27 | வி. | ,, | 20. | 1—11 |
| 8 | ச. | ,, | 26. | 1—13 | 18 | செ. | ,, | 12. | 1—16 | 28 | வெ. | ,, | 20. | 12—20 |
| 9 | ஞா. | ,, | 26. | 14—24 | 19 | பு. | ,, | 13. | 1—3, 17—33 | 29 | ச. | ,, | 21. | 1—9 |
| 10 | தி. | ,, | 26 | 33—46 | 20 | வி. | ,, | 14. | 1—10 | 30 | ஞா. | ,, | 21. | 21—35 |

C. L. S. PRESS, MADRAS—1916



LORD CHELMSFORD, THE NEW VICEROY

செலம்ஸ்போர்டு பிரபு, நமது கவர்னர் ஜனரல்

# மாதர் போதினி

No. 221 மே 1916 No. 5

## EDITOR'S NOTES

## பத்திராதிபர் நானாவிதக் குறிப்புகள்

Bombay Married Women's School. பம்பாயில் கல்வி விஷயமாய் வெகுகாலம் உழைத்துவந்த நிக்காம்பி என்பவருடைய பத்தினியார் (Mrs. Nikambe) விவாகமான ஸ்திரீகளுக்கென்று 1913-ம் வருஷம் ஒரு பாடசாலை ஸ்தாபனஞ்செய்தார். அது வருஷா வருஷம் விருத்தியடைந்து, தற்காலத்தில் இருபது பிராயமுதல் ஐம்பது பிராயமுள்ள விவாகமான ஐம்பது பெண்கள் அதில் கல்விகற்று வருகிறார்கள். அவர்கள் உத்தியோகத்தைக் கோரி அப்படிச் செய்யாமல் அன்றாடக ஜீவியத்துக்கடுத்த காரியங்களில் தெளிவடைந்து குடும்ப சம்ரட்சணையில் உபயோகமுள்ளவர்களாயிருக்கவே பயின்று வருகிறார்கள். இங்கிலீஷில் போதனைகொடுக்கப்படுகிறது. இவ்விதமான பாடசாலைகள் நம்முடைய தேசத்தில் ஸ்தாபனஞ்செய்தால் எத்தனை ஆசீர்வாதமாயிருக்கும்.

War and the Drink Problem. தற்காலத்தில் நடக்கும் இந்தப் பயங்கரமான யுத்தத்திலிருந்து ஒரு பெரிய நன்மை விளைந்திருக்கிறது. இங்கிலாந்து, ருஷியா, பிரான்சு முதலிய தேசங்களின் மந்திரி பிரதானிகள் மதுபானத்தைக்குறித்து பாரயோசனைசெய்து வருகிறார்கள். ருஷியாவில் ஓட்கா என்ற பானம் நீக்கப்பட்டது. பிரான்சில் அபிசிந்து என்ற வாகிரிவஸ்து நீக்கப்பட்டது. பிரித்தானியாவில்மாத்திரம் நூற்றுக்கு நாற்பது வீதம் மதுபானம் குறைந்திருக்கிறதென்று ஒரு பிரதானி சொல்லுகிறார். உயர்ந்த சாராயதினுசுகள் செய்வதற்கு அவசியமான ஆல்கோஹால் என்கிற திராவகம் துரைத்தனத்தார் கைவசமாகி குண்டு மருந்து செய்வதில் உபயோகிக்கப்படுகிறது.

The Chinese Monarchy. கொஞ்சகாலமாய்க் குடியரசாயிருந்த சீனாவில் அரசாளுகை ஏற்படுத்தவேண்டுமென்று சிலர் பிரயத்தனஞ்செய்து யுன்-ஷி-காய் என்ற ஒருவனை ராஜனாக நியமித்திருந்தார்கள். ஆனால் பொதுப்பட ஜனங்கள் அரசாளுகையின்மேல் பிரியமில்லாமையினால் உள்நாடெங்கும் பெருங்கலகம் உண்டானது. சீனாவைச்சேர்ந்த பதினேழு மாகாணங்களின் பிரதிநிதிகள் யுவான்-ஷி-காய் அரசனாய் இருக்கமுடியாதென்று புறதேச மந்திரிகளுக்குத் தந்தி மூலமாய் அறிக்கை செய்திருக்கிறார்கள்.

Munition Factories in Great Britain. இங்கிலாந்தில் மாத்திரம் யுத்த ஆயுதங்கள் வெடிமருந்து குண்டுகள் செய்வதற்கென்று மூவாயிரத்து முப்பத்திரண்டு கிடங்குகள் இருக்கின்றனவாம். இதில் ஆண்களும் பெண்களும் வேலைசெய்து வருகிறார்கள்.

Battle of Verdun. சென்ற மாதத்தில் பிரான்சுக்காரரைத் தோற்கடிக்கவேண்டுமென்று ஜெர்மானியர் மிகப் பிரயத்தனஞ்செய்து திரண்ட சேனைகளோடு வெர்டூன் என்கிற பட்டணத்தைத் தாக்கினார்கள். இருகட்சியாருக்கும் மும்முரமான போர் விளைந்தது. இரண்டொரு வாரத்தில் ஜெர்மானியர் லட்சத்து ஐம்பதினாயிரம் இழக்கக் கொடுத்தார்கள். இதுவரையில் அந்த சண்டை பிரான்சியருக்கு அனுகூலமாகவே இருக்கிறது.

## HANNAH—THE CHILDLESS WIFE (*Cont.*)

## குழந்தை இல்லாத மனைவி அன்னாள் (தொடர்ச்சி)

### அன்னாள் தான்பெற்ற நன்மைக்காகத் தேவனை ஸ்தோத்திரப்பாட்டால் துதித்தது

(5) (1 சாமு. 2. 1–11.) இந்த சிறந்த சங்கீதத்தில் தேவனுடைய மகத்துவத்தைக்குறித்துப் பாடுகிறாள்.

1. யேகோவாவின் குறைவின்மை
   யேகோவா பரிசுத்தமுள்ளவர். (2. 2).
   யேகோவா வல்லமையுள்ளவர்
   யேகோவா ஞானமுள்ளவர்.

2. எங்கும் வியாபித்திருக்கும் அவரின் பராமரிப்பு. அவர் கொல்லுகிறவரும் உயிர்ப்பிக்கிறவருமாய் இருக்கிறார். உயர்த்துதலும் தாழ்த்துதலும் அவருடையது (2. 7). அவர் தமது பரிசுத்தவான்களைக் காக்கிறவர் (2. 9). இன்னும் பலவிதமாய்ப் பாடுகிறாள். அன்





னாளின் ஸ்தோத்திரப்பாட்டுக்கும் லூக். 1. 46–55 ல் சொல்லிய மரியாளின் ஸ்தோத்திரப்பாட்டுக்கும் ஒற்றுமையுண்டு.

### அன்னாள் தன் துன்பத்தில் பொறுமையாயிருத்தல்

6. அன்னாளுடைய கர்ப்பத்தைக் கர்த்தர் அடைத்திருந்த காலத்தில் அன்னாளின் சக்களத்தியானவள் அவளை மனமுறிவடையப் பண்ணினதை அவள் ஒருவகையாய்த் தாங்கக்கூடாதவளாய் இருந்த போதிலும் அன்னாள் தன் விசாரங்களையெல்லாம் தேவனிடத்தில் ஊற்றிவிட்டபடியால் தேவனிடத்தில் தயையைப் பெற்றாள்.

### அன்னாள் தன் துன்பகாலத்தில் தேவனை நோக்கிப்பார்த்தாள்

7. அன்னாள் தான் விரும்பிய பொருளைக் கர்த்தருக்கு மகிமையுண்டாக அவருக்கே ஒப்புக்கொடுப்பேன் என்று விண்ணப்பம் பண்ணுகிறாள். சாமுவேல் பிறக்குமுன்னே செய்யப்பட்ட மகத்தான அநேக ஜெபங்களின் பிள்ளையாக இருந்தான் என்றும் அன்னாளின் தாக்கம் நமக்குக் காட்டுகிறது. ஆகையால் ஜெபத்தில் தரித்திருக்கிற ஒருதாய் தன் பிள்ளைக்குப் பெரிய ஆசீர்வாதமாயிருக்கிறாள்.

## அன்னாளின் விசுவாசம்

8. தேவனிடத்தில் கோரின காரியம் கிடைக்கும் என்று அவள் விசுவாசித்தபடியால் ஜெபத்தைக் கேட்கிற தேவன் பிற்காலத்தில் பெரிய தீர்க்கதரிசியான மகனை அவளுக்கு ஈந்தார். நமக்கு அவசியமாய்த் தோன்றும் எந்தக் காரியத்தையும் தேவகுமாரன் மூலமாய் அன்னாளைப்போல் நம் இருதயத்தை ஊற்றிவிடும்போது நமக்கு ஆசீர்வாதமாயிருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை.

## அன்னாள் மூலமாய் நாம் படித்துக்கொள்ளும் பாடம் யாதெனில்

9. தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் தாலந்துகளில் புத்திர பாக்கியமும் ஒன்றாகையால் இந்த பாக்கியத்தைப்பெற்ற தாய்மார் அன்னாளைப்போல் நல்ல தீர்மானங்களைச் செய்துகொண்டு அத்தீர்மானங்கள் நிறைவேறத்தக்கதாய் முயற்சிசெய்வது இன்றியமையாதது என்பதை நாம் அன்னாள்மூலமாய் அறிந்துகொள்ளுகிறோம். ஆகையால் நாம் அன்னாளைப்போல் நம்முடைய புத்திர பாக்கிய தாலந்துகளையும் கடமைகளையும் சரியாய் நிறைவேற்றி கர்த்தருக்குப் பயப்படும் பயத்திலும் தேவபக்தியிலும் வளர்க்கும்போது அவர்கள் விலைமதிக்கப்படாத பூஷணங்களாகத் துலங்கும்போது நாம் பாக்கியவதிகளே. கர்த்தருடைய ஆசீர்வாதம் நமது வீட்டிலும் வேலைகளிலும் நமது பிள்ளைகளின்பேரிலும் இன்னும் எல்லாக் காரியங்கள்பேரிலும் பரிபூரணமாய் ஊற்றப்படும் என்பது சத்தியம். அன்னாளுக்கிருந்த ஜெபசிந்தை, பொறுமை, விசுவாசம் ஆகிய இவைகளையும் நம்தேசத்து ஸ்திரீகள் படித்துக்கொள்வது உசிதம்.

S. எஸ்தர் நவமணி.

## THE CURE AND THE CLOCK TOWER
## பாதிரியாரும் கோவிற் கோபுர கடிகாரமும்

என் சிநேகதனாகிய பாதிரியார் சில நாளைக்கு அமைதலாயிருக்க பெல்வி வில்லிக்கு வந்திருக்கிறார். அவர் பட்சத்தோடு கூடிய மலர்ந்த முகமுடையவர். அவருடைய சபையைச் சேர்ந்தவர்கள் மாத்திரமல்ல, அவருடைய கோவிலைச்சுற்றி ஐந்து மைல் விஸ்தீரணத்திலிருந்த எல்லாரும் அவரை நேசித்துக் கனம்பண்ணினார்கள். ரெயிம்ஸ் நகரத்துக்குச் சமீபத்திலிருக்கிற ஒரு சின்ன பட்டணத்தில்





அவருடைய சபை இருக்கிறது. ஜோப்ரே தளகர்த்தன் 1914-ம் ௵ செப்டம்பர் ௴ பாரீஸ் பட்டணத்தைப் பிடிப்போமென்று நிச்சயமாயிருந்த ஜெர்மானியரையும் அவர்களுடைய தளகர்த்தனாகிய வான்கிளக்கையும் மடக்கிப் பறக்கடித்தபோது இவர் ஜெர்மானியரைப் பற்றி கொஞ்சம் பார்த்திருக்கிறார். அவருடைய கதை வருமாறு:—

'ஆம் என் சிநேகிதனே, நான் ஜெர்மானியரை அதிகம் நெருங்கிப் பார்த்திருக்கிறேன். அப்படியே வாலிபனான ஜீன்வாக்ஸும் சிறுவனாகிய சார்லெட்டும் பார்த்திருக்கிறார்கள். ஆனால் முடிவில் அவர்கள் எங்களைச் சுடவில்லை' என்று புன்னகையோடு கண்ணை அடித்துக்கொண்டு பாதிரியார் சொன்னார். 'பாதிரியாகிய உம்மைச் சுடுகிறதா? உம்மையும் ஜீனையும் சார்லெட்டையும் ஏன் அவர்கள் சுட வேண்டும்?' என்று நான் கேட்டேன். 'ஆகவே நீர் அதைப்பற்றிக் கேள்விப்படவில்லையா? ஆ! அது சுத்த மோசமான கதையல்ல, எனக்கே அதைச் சொல்லப் பிரியம், கேளும் மெய்யாகவே ஜெர்மானியர் என்னைச் சுட இருந்தார்கள், சுட இருக்கும்போதெல்லாம் ஒரு மனிதனாவது ஸ்திரீயாவது தப்பிப்போகிறதில்லை. இது என்னுடைய சிறிய கதை:

ஆகஸ்டு ௴ 21-ம் தேதியிலிருந்து செப்டம்பர் ௴ 5-ம் தேதிவரையில் ஆங்கிலேயரும் பிரான்சியரும் மாறி மாறி முன்னும் பின்னும் போர் செய்துகொண்டே பின்வாங்கினது உமக்குத் தெரிந்த விஷயம். ஜெர்மானியர் அவர்களைத் துரத்திக்கொண்டே போனார்கள். காலா

காலமாய் உலகத்தின் பாதைகளுக்கெல்லாம் தூரமாயிருந்ததுபோலவே அப்போதும் அவர்கள் போன வழிக்கும் என்னுடைய சிறு பட்டணம் எட்டியிருந்தது. ஆகையினால் அத்தருணத்தில் நாங்கள் ஒரு ஜெர்மானிய போர்ச்சேவகனையும் பார்க்கவில்லை; பாரீஸ் பட்டணத்தைச் சேர அவர்கள் ஆத்திரப்பட்டதினால் நாட்டிலுள்ள ஊர்களில் தங்க அவர்களுக்கு இஷ்டமில்லை. நம்முடைய மனிதரும் ஆங்கிலேயரும் தங்களுக்கு முன் ஓடிப்போகிறார்கள் என்றும் இரண்டொரு தினத்தில் அதிகமானால் மூன்று தினத்தில் பேரீஸ் பட்டணம் ஜெர்மனியைச் சேருமென்றும் அவர்கள் எண்ணினார்கள். ஆனால் அச்சமயத்தில் ஜெர்மானிய சேனாதிபதியாகிய வான்கிளக்கின் எண்ணத்தைச் சிதறடிக்க ஜோப்ரே சித்தமாயிருந்ததினால் ஜெர்மானியர் பின்வாங்க நேரிட்டது. அவர்களுக்கு அதிகக் கடுப்பு. ஆனால் அது பிரான்ஸ் தேசத்துக்கு நல்ல நாளென்றாலும் எனக்கும் ஜீன்வாக்ஸுக்கும் சார்லெட்டுக்கும் நல்ல நாளல்ல.

சிநேகிதனே, அது எப்படி என்று கேட்கிறீரோ? ஒரு ஜெர்மானியப்படை புறங்காட்டிப் போய்க்கொண்டிருந்தபோது அவர்கள் அதிக பிரயாணஞ் செய்ததனால் மெத்த இளைப்படைந்தார்கள். ரேயிம்ஸ் நகரத்துக்குப் போகிற ரஸ்தாவிலிருந்த எங்களுடைய சிறு ஊருக்கு வந்தபோது பிரான்சியர் அவர்களுக்கு வெகுதூரத்தில் பின்னாலிருக்கிறார்களென்று அறிந்து அவர்களுடைய தளகர்த்தன் அவர்கள் இளைப்பாறவேண்டுமென்று ஆக்ஞாபித்தான். அப்படி செய்வது அவர்களுக்கு மெத்த அவசியமாயிருந்தது. ஒரு ஜெர்மானிய பட்டாளம் ஒரு ஊரில் நிறுத்தப்படும்போது அநேக காரியங்கள் ஆகவேண்டியிருக்கிறது. பட்டணத்து அதிகாரிக்கு இப்படியும் அப்படியும் செய்யவேண்டுமென்று உத்தரவு பிறக்கிறது. அவர்களுக்குப் பக்ஷணம், சாராயம், பணம் இவைகளெல்லாம் அவசரம். என்னதான் அவர்களுக்கு அவசியமில்லை! பட்டணத்து அதிகாரி இப்பக்கமும் அப்பக்கமும் ஓடவேண்டும். நீரும், நானும், ஜீனும் சார்லெட்டும் எல்லாரும் ஓடவேண்டும். அவர்கள் சொன்னபடியெல்லாம் ஆடவேண்டும். கீழ்ப்படியவேண்டிய அநேக கட்டளைகளிருக்கும்போது நீர் என்ன செய்வீர்? சாதாரண நாட்களில் செய்கிற சில காரியங்களைச் செய்யாமல் விட்டுவிடுவது சகஜந்தானே.

ஆகவே அந்நாட் காலையில் கோயிற் கோபுரத்திலிருந்த கடிகாரத்துக்குச் சாவி கொடுக்காமற்போகவே அது நின்றுபோனது. கோயிற் கோபுரத்திலுள்ள மணி நின்றுபோவது பிரமாதமல்ல. ஆனால் இந்த கல்விகற்ற ஜெர்மானியர் அதிசமர்த்தர். கோவிற் கடிகாரம் நின்றதைக் கண்டவுடனே ஒருவன் ஓடி அவர்களுடைய தள



கர்த்தனுக்கு அறிவிக்க, அவன் என்னை அழைத்து என்மேல் கோபம் செய்துகொண்டான். ‘பழைய பெருச்சாளியே, நீ அகப்பட்டாய்; நீ உன்னுடைய கோபுர கடிகாரத்தின் மூலமாய் சைகை செய்தாய் அல்லவா? என்று அவன் என்னைக் கேட்க, ‘தளகர்த்தனே, கடிகாரத்தைப் பாரும், அது நின்றுபோயிருக்கிறது; அப்படியிருக்க அது எப்படி சைகை காட்டுகிறதாகும். நான் சைகை காட்டினது மெய்யானால் அதின் முட்களைக் கொடியைப்போல இப்புறமும் அப்புறமும் திருப்பியிருக்கவேண்டும். அது நின்றுபோனதே ஒழிய வேறல்ல’ என்று நான் சொன்னேன். ‘உன்னுடைய கடிகாரம் நின்றுபோயிருப்பதின் அர்த்தம் எனக்குத் தெரியும்’ என்று கர்ச்சித்து, ‘உன்னுடைய கோவிற் கோபுரம் சுற்றிலும் அநேக மைலுக்குத் தெரியவில்லையா? எல்லா மனிதரும் கடிகாரத்தைப் பார்க்கவில்லையா? உன்னுடைய கடிகாரம் நிற்கும்போது ஜெர்மானியர் ஊரில் நிறுத்தப்பட்டிருக்கிறார்களென்கிற அர்த்தம் எல்லாருக்கும் தெரியாதா? இது பரிஷ்காரம், நான் உன்னைக் கண்டுபிடித்தேன்’ என்று சொன்னான். ‘நான் பெரிய ஒரு சூதைக் கண்டுபிடித்ததாக அதிக நிச்சயமாயிருந்தபடியினால் அந்த கடிகாரம் நிஜமாய் நின்றிருந்ததே ஒழிய வேறுபடி யல்லவென்றும், பட்டணத்து அதிகாரியும் மற்றவர்களும் நானும் சேனைத்தலைவன் கொடுத்த கட்டளைகளைச் செய்வதில் அதிக ஜோலியாயிருந்தபடியினால் அந்த நாள் சாவி கொடுக்கவேண்டுமென்பதை மறந்துபோனேன்’ என்றும் சொல்லி அவனை நம்பச் செய்வதற்குள் நேரமாயிற்று; கடைசியில் எப்படியும் பிரியமில்லாமலே நம்பினான். ‘மூடக் கிழவனே, உன்னுடைய கடிகாரம் சாவிகொடுக்காமல் நின்றுபோயிருந்தால் போய் சாவிகொடு’ என்று திருவாய் மொழிந்தருளினான்.

நான் எவ்வளவு சீக்கிரம் போகக்கூடுமோ அவ்வளவு சீக்கிரமாய்ப் போனேன். நான் வயோதிபனானதினாலும் என் கோவில் கடிகாரத்துக்குச் சாவி கொடுக்க அதிக பலம் அவசியமானதினாலும் ஜீனும் சார்லெட்டும் என்னோடு போனார்கள். நாங்கள் ஏணி ஏறி கோபுரத்தின் உச்சியில் கடிகாரமிருந்த இடத்தைச் சேர்ந்து வேலைசெய்ய ஆரம்பித்தோம். சரியான காலத்தைக் காட்ட முட்களைத் திருப்பினமாத்திரத்தில் பும், பும் என்று மணியடிக்க ஆரம்பித்தது. அதில் என்ன இருக்கிறது! ஆனால், ஜீனையும், சார்லெட்டையும், வயோதிபனை என்னையும் சனியன் பிடித்தது. என் கோவில் வெளிப்புறத்திலும், உட்புறத்திலும் ஒரு ஜெர்மானிய காவற்படை அணிவகுக்கப்பட்டு துப்பாக்கிகள் ஆயத்தமாயிருந்தன. எங்களைச் சேனைத்தலைவன் முன்னே இழுத்துக்கொண்டு போனார்கள். நாங்கள் என்ன செய்

தோம்? அந்த ஞானமுள்ள மனிதன் இன்னொரு பெரிய சூதைக் கண்டுபிடித்தான். ஐயோ, பாவம்! எங்கள் கடிகாரமணி சைகை காட்டினதாம். கோபுரத்தில் கடிகாரத்துக்குச் சாவி கொடுப்பதாகவும் முள்ளைச் சரியாய் வைப்பதாகவும் நடித்துப் பிரான்சிய சேனைகளை அழைக்கும்படி மணியடிக்கச் செய்தோமாம்.

அவனுக்கு இவைகளெல்லாம் தெரியுமாம்! எங்களுடைய கொடுந் துரோகத்தை அவன் கண்டுபிடித்தான். அவனுடைய படை அடுத்த நாள் காலையில் ஊரை விடுவதற்குமுன்னமே எங்களைச் சுட உத்தரவானது. அதற்கிடையில் ஊர் மண்டபத்தின் வெளிப்புறமாயிருந்த ஒரு அறையில் எங்களை அடைத்து நாங்கள் தப்பியோடிப் போகப் பிரயத்தனஞ்செய்யும் பட்சத்தில் எங்களைச் சுடப் பாரா வைத்தார்கள்.

நாங்கள் இரண்டு இளைஞரும் ஒரு வயோதிபனுமாக மூன்றுபேர். ஆனால் நாங்கள் பிராஞ்சுக்காரர் ஜெர்மானியருக்குப் பயப்படுகிறோமென்று காட்டாமலே எங்களுக்கு விதித்தபடி செய்தோம். நாங்கள் மரித்தால் பிராஞ்சுக்காக மரிப்போமாகையால் மனப்பூர்வமாயிருந்தோம். ஜீனும் சார்லெட்டும் வெகு தைரியமாயிருந்தார்கள். நானோவெனில் ஜீனுடைய தாயையும், விருத்தாப்பியனான சார்லெட்டுடைய தகப்பனையும் குறித்துத் துக்கித்தேன். இளைஞரை மோசத்துக்குள் கொண்டுவந்தவன் நான்தான். கோவிற் கோபுரத்துக்கு நான் தனிமையாய் போயிருந்தால் எவ்வளவோ நன்மையாயிருக்கும்! நான் எனக்காக அழவில்லை; பிராஞ்சுக்காக சாகலாம். ஆனால் வேணுமென்று செய்யாமற்போனபோதிலும் என்னால் ஜீனும் சார்லெட்டும் காலையில் மரிக்கவேண்டுமேயென்று யோசித்து மனங்கலங்கினேன். ஊர் மண்டபத்தின் கிடங்கில் செலவிட்ட ராத்திரி துக்கமானது ஜீனும் சார்லெட்டும் வீர சூரர்கள். நானோ அப்படியல்ல.

இரவு அதிக மெதுவாய்ச் சென்று பொழுதுவிடிந்தது. சூரிய கிரணங்கள் கிடங்கில் பிரகாசித்தவுடனே ஜீனும் சார்லெட்டும் விழித்துக்கொண்டார்கள். காலையில் அவர்கள் சுடப்படுவதாயிருந்தபோதிலும் நன்றாய்த் தூங்கியிருந்தார்கள். பட்டாளங்களின் இரைச்சலும், தெருவில் மோட்டை துப்பாக்கி இவைகளின் சலசலப்பும், குதிரைகளினடியும் பட்டணத்தில் அமளி உண்டாக்கினது. நாங்களோ காத்திருந்தோம்; எங்களை வெளியே கொண்டுபோய் அடுத்த சுவருக்கு எதிரே நிற்கவைத்து துப்பாக்கி குழாய்களின் எதிரே கொல்லுவார்கள் என்று ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். ஆனால் ஒருவரும் வரவில்லை. சற்று நேரம் சென்றபின்பு வெளிச்சம் அதிகமானபோது ஜீன் கதவைப் பார்த்து,



'இது வெகு பழைய கதவு' என்றான். 'கொஞ்சத்தில் இதைத் திறந்து விடலாம் என்று சார்லெட்டு சொன்னான். அமைதலாயிருங்கள் பிள்ளைகளே, காவற்காரன் உங்களைக் கேட்டுக்கொண்டிருப்பான். நீங்கள் கதவைத் தொட்டால் உங்களைச் சுடுவான்' என்று நான் சொன்னேன். 'யாருங் காவற்காரனில்லையே, அப்படியிருந்தால் சந்தடி இல்லாமையினாலே அவன் நித்திரை போய்க்கொண்டிருக்கவேண்டும்; அவனுடைய காலடி கதவு பக்கமாய்க் கேட்டு அதிக நேரமாகிறது, என்று ஜீன் சொல்ல, நாங்களெல்லாரும் கவனித்து அப்படியிருக்கக் கண்டோம். நான் மறுபடியும் கதவைப் பார்த்தேன். அது மெய்யாகவே பழையது. அப்போது ஒரு எண்ணம் மனதில் பட்டு ஜீன் வாக்ஸை நோக்கி, நீ இந்த கதவைத் திறக்கக்கூடுமானால் நாம் வெளியே போவோம். நான் இன்னொருதரம் ஜெர்மானிய தளகர்த்தனிடத்தில் போவேன்; பிரான்சிய படைகள் வராமையினாலே கோவில் மணி அடித்தபோது நான் பிரான்சுக்காரருக்குச் சைகை காட்டவில்லை என்று இதனால் தெளிவாகிறது என்று நான் அவனுக்குக் காண்பிப்பேன். என்னை விட்டுவிட நான் அவனைக் கேட்கமாட்டேன். ஆனால் உங்களைச் சும்மா விட்டுவிடுவான், வாருங்கள் பார்ப்போம்' என்று சொன்னேன். ஜீன் வாக்ஸ் கைத்திறமுள்ளவன். சில விறகுச் சுமைகள் அந்தக் கிடங்கில் இருந்தமையால் இரண்டொரு ஆப்புகள் செய்து உளுத்துப்போயிருந்த வாசக்காலுக்கும் கதவுக்கும் ஊடே அடித்தான். யாரும் கவனிக்காததுபோல் தோன்றினது. அந்தப் பழைய கதவு முறிந்து கீலண்டையிலுடைந்து நாங்கள் நகர்ந்து வெளிப்படும்போது யாரும் வரவில்லை. ஆயினும் ஒரு ஜெர்மானிய காவற்படை சமீபத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. அது விபரீதமாயினும் நல்ல சமயம். ஜீனையும் சார்லெட்டையும் நோக்கி: 'உங்களுக்கு நல்ல சமயம் வாய்த்தது, காவற்காரன் சமீபத்திலில்லாமையால் ஓடி ஒளித்துக்கொள்ளுங்கள்; நீங்கள் பதுங்கிக்கொள்ள இடம் தெரிந்திருக்க வேண்டுமாகையால் ஓடுங்கள்' என்று சொன்னேன்.

'சிநேகிதனே, அப்போதுதான் மூலையைச் சுற்றி ஒரு போர்ச் சேவகன் வந்தான். ஒரு க்ஷணப்பொழுது கற்களைப்போல் மெய் மறந்து நின்றோம். ஆனால் அது ஒரு க்ஷணப்பொழுதுதான். ஏனென்றால் அது ஒரு பிரான்சிய போர்ச்சேவகன். ஜெர்மானியர் எதிர்பார்த்ததைவிடப் பிரான்சியர் அதிக விரைவாய் அவர்களைப் பின்தொடர்ந்து வந்தார்கள். பொழுது விடியற்காலத்தில் அவர்கள் கிட்ட நெருங்க, ஒரு ஜெர்மானிய பாராக்காரன் அவர்கள் வரவே அறிவித்தான். அதினால் ஜெர்மானிய உத்தியோகஸ்தனுக்கு எங்களைச் சுட நேரமில்லாமற்போனது எங்களுக்கு நல்ல காலம். ஏனென்

ருல் கோவிற் கடிகாரத்தின் முட்களும் காடிகார மணியும் பிரான்ஸியரை வரவழைத்தனவென்று அவன் மெய்யாய் நம்பியிருப்பான்.

பிரான்சுக்காரர் வெளியே பாரா கொடுத்துக்கொண்டிருந்த ஜெர்மானியனைப் பின்தொடர்ந்தே வந்தார்கள். அநேக மூட்டை முடிச்சுகளை விட்டுவிட்டு அப்போதுதான் ஜெர்மானியர் போய்விட்டார்கள்.

ஜீனும், சார்லெட்டும் பித்தம் பிடித்த பிள்ளைகளைப்போல பிரான்சிய போர்ச்சேவகனிடத்தில் ஓடினார்கள். நானோவெனில் எந்த மனுஷனிடத்திலும் வாய்திறந்து பேசுவதற்குமுன்னே கீழே உட்கார்ந்து தேவனுடைய காருண்யத்தைக்குறித்து நினைக்கவேண்டியிருந்தது.

சிநேகிதனே, இதுதான் ஜெர்மானியருக்கும் எனக்கும் நடந்த கதை.

A. C. C.

## THE KING'S CUP BEARER *(Continued)*

## ராஜாவுக்குப் பானங்கொடுப்போன் (தொடர்ச்சி)

### XI. அத்தியாயம்

### தைரியமுள்ள தன்னிஷ்ட சேவகர்

ஆகையால்தான் ஜனங்கள் எருசலேமை விலக்கிவிட்டு கிராமங்களைத் தெரிந்துகொண்டார்கள். இது ஆச்சரியமல்ல. நெகேமியா இந்த மாதிரியான காரியங்களுக்கு முடிவுண்டாக்க நினைத்துத் தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றும்படியாக, யூதஜாதி முழுவதையும் குடிமதிப்பு எழுதி, ஒவ்வொரு பட்டணத்திலும் உள்ள ஜனங்களில் பத்திலொரு பங்கை எருசலேமில் குடியிருக்கும்படியாக அனுப்பும்படிக் கேட்டுக்கொண்டார். இவர்களை எப்படித் தெரிந்துகொள்ளுகிறது? சீட்டுப்போடவேண்டியதுதான். யார் வேண்டியது, யார் தங்களிடத்திலேயே இருக்கவேண்டியது என்பதைப்பற்றிச் சீட்டுப் போட்டார்கள். யூதர்கள் கூழாங்கற்களால் சீட்டுப் போடுவது வழக்கம். எப்படியென்றால், ஒரு கிராமத்தின் ஜனங்கள் பத்துகளாகப் பிரிக்கப்படுவார்கள். பிற்பாடு ஒரு பை கொண்டுவரப்படும். அதில் ஒன்பது கறுப்புநிறமுள்ள கூழாங்கற்களும் ஒரு வெள்ளைக்கல்லும் இருக்கும்படி போடுவார்கள். முதலாவது பத்துப்பேர் வந்து, ஒவ்வொருவராய்ப் பைக்குள்ளிருந்து கற்களை எடுப்பார்கள். வெள்ளைக்கல் யாருக்கு அகப்பட்டதோ அவன் எருசலேமில் போய்க் குடியிருக்கவேண்டும். பிற்பாடு அடுத்த பத்துப்பேர், பிறகு அடுத்த பத்து இப்படியாகத் தேசத்தின் ஜனங்களெல்லாரும் எடுப்பார்கள்.





இந்தவிதமாய் ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு பட்டணத்திலும் செய்தார்கள். இப்படியாகத் தலைநகரிக்கு 20,000 குடித்தனக்காரர் ஏற்பாடு செய்யப்பட்டார்கள். இப்போது எருசலேம் தன்னைத் தானே காத்துக்கொள்ளக்கூடிய நிலைமையிலிருந்தது.

சீட்டுகளெடுக்கப்பட்டபோது, ஜனங்களுக்குள்ளே முறுமுறுப்பும், குறகுறுப்பும், முணுமுணுப்பும் இருந்திருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. வெள்ளைக்கல்லை எடுத்தவர்கள், தங்களுடைய தோட்டங்களையும், அழகிய கிராம வீடுகளையும், தங்களுக்காகவும், தங்களுடைய பிள்ளைகளுக்காகவும் கட்டி, இவ்வளவு நாட்களாய்க் குடியிருந்து நேசித்த வீடுகளையும், தங்கள் சொந்தக் கைகளால் நட்ட திராட்சத் தோட்டங்களையும், அருமை பெருமையாய் நினைத்து, அதிக லாபங் கிடைக்குமென்றெண்ணின ஒலிவத் தோப்புகளையும், அத்திமரங்களையும், மற்றும் தங்களுக்கு அருமையா யிருந்தவைகளையும் விட்டு, எப்போதும் மோசமும், பயங்காமும் வரக்கூடிய பட்டணமாகிய எருசலேமுக்குப் போகவேண்டியவர்களாய் இருந்தார்கள்.

ஆனாலும், சிலரோ தங்களைத் தைரியமாய் ஒப்புக்கொடுத்தார்கள். சீட்டு விழுந்தவர்களையல்லாமல், இன்னும் சிலர் தங்களிஷ்டமாகவே

எருசலேமில் போய்க் குடியிருக்கச் சம்மதித்து முன்னுக்கு வந்தார்கள். தங்கள் வீடுகளைவிட்டு எருசலேமை நேசித்தபடியால் பரிசுத்த நகரத்தில் போய்க் குடியிருக்கச் சம்மதித்தார்கள். அபாயம் வருமென்ற இடத்தைத்தான் அவர்கள் விரும்புகிறார்கள். தைரியமுள்ள மேன்மை ஆண்களும் பெண்களும் போக ஆயத்தமாயிருந்ததை வெளியிட்டபோது அவர்கள் தேசத்தார் எல்லாரும் அவர்களை ஆசீர்வதித்தார்களென்று நாம் வாசிக்கிறது ஆச்சரியமல்ல. 'எருசலேமில் குடியிருக்க மனப்பூர்வமாய்ச் சம்மதித்த மனுஷர்களையெல்லாம் ஜனங்கள் வாழ்த்தினார்கள் (11. 21).

## XII. அத்தியாயம்

### பரிசுத்த நகரம்

எருசலேம் முற்றிக்கை போடப்பட்ட பயங்கரமான காலங்களில், ரோமைப் போர்ச்சேவகர் பட்டணத்தைச் சூழ்ந்துகொண்டார்கள். யூதர்களில் நூற்றுக்கணக்கான பேர் பஞ்சத்தினால் மடிந்துபோனார்கள். ஒவ்வொருநாளும் பட்டணம் பிடிபட்டுப் போகும்போலிருந்தது. அப்பொழுது விநோதமான சங்கதி ஒன்று நடந்தது. சில ஆசாரிமார், தங்கள் வழக்கம்போல் நடுராத்திரியில், ஆலயப்பிராகாரங்களில் காவல் காத்துக்கொண்டிருந்தார்கள். அழகிய வாசல் வழியாக வந்து, ஸ்திரீகளின் பிராகாரத்தைக் கடந்து ஆலயத்திற்குச் சமீபமாயிருந்த உள் பிராகாரத்திற்குப் போகிற படிகளில் ஏறிக்கொண்டிருந்தார்கள். திடீரென்று நின்றுவிட்டார்கள். அவர்களுக்குக் கீழே பூமி குலுங்குகிறது. மேலே செட்டைகளை அடித்துப் பறக்கும் சத்தம் கேட்கிறது. அநேகருடைய சத்தம் திரும்பத் திரும்ப, மறுபடியும் மறுபடியும் கேட்கப்பட்டது. அந்தப் பயங்கரமான வார்த்தைகளாவன, 'எங்களைப் போகவிடுங்கள், எங்களைப் போகவிடுங்கள்' என்பதே. தேவதூதர்கள் இந்தப் பட்டணத்தை அதின் அழிவுக்கு விட்டுப்போகிறார்கள். அநேக நூற்றாண்டுகளாக எருசலேம் பரிசுத்த நகரமென்றழைக்கப்பட்டது. ஏன் அப்படி அழைக்கப்பட்டது. அதின் குடிகளாலல்ல, அவர்கள் பரிசுத்த ஜீவியம் செய்வதற்குப் பதிலாக அக்கிரமத்திலும் அசுத்தத்திலும் மூழ்கியிருந்தார்கள். அங்கே ஒருவர் வாசம்பண்ணினார். அது தேவனுடைய வாசஸ்தலமாயிருந்தது. அவருடைய பிரசன்னம் அங்கே இருந்தபடியால், பூமியில் மற்றெந்தப் பட்டணத்திற்கும் கிடையாத பேர், பரிசுத்த நகரம் என்ற பேர் எருசலேமுக்குக் கிடைத்தது. 'சாலேமில் அவருடைய கூடாரமும், சீயோனில் அவருடைய வாசஸ்தலமும் இருக்கிறது. எருசலேமில் வாசம்பண்ணுகிற கர்த்தருக்கு



சீயோனிலிருந்து ஸ்தோத்திரமுண்டாவதாக (சங். 76. 2; 135. 21). இப்படி சங்கீதக்காரன் சரியாய் எழுதினார். தேவன் பூமியில் எருசலேமைத் தம்முடைய வீடாகவும், வாசஸ்தலமாகவும், தங்குமிடமாகவும் தெரிந்துகொண்டார். அவர் அங்கே தங்கியிருக்குமட்டும் எருசலேமும், அதின் சுற்றுப்பக்கங்களும் பரிசுத்தமாகவே இருந்தது. அது கட்டப்பட்டிருந்த மலை பரிசுத்த பர்வதம். பட்டணம் பரிசுத்த நகரம். ஆலயப்பிராகாரம் பரிசுத்த இடம். தேவாலயமே மகா பரிசுத்த ஸ்தலம்; தேவனுடைய மகிமை காணப்படும் உள்ளேயிருக்கும் மூலஸ்தானம் மகாபரிசுத்த சந்நிதி என்றழைக்கப்பட்டது. ஆனால் எருசலேம் முற்றிகை போடப்பட்டபோது தேவன் அதை விட்டுப் போய்விட்டார் இனிமேல் அது அவருடைய வாசஸ்தலமாயிருக்கப் போகிறதில்லை. ஆகையால் இனிமேல் பரிசுத்த நகரம் என்று அழைக்கப்படுவதுமில்லை. ஆகையினாலேதான் பரிசுத்த தேவதூதர்கள், ஒருவரை ஒருவர் நோக்கி உரத்த சத்தமாய்க் கூப்பிட்டு நாம் போய்விடுவோம். இது இனி பரிசுத்த நகரமல்ல, தேவன் அதைக் கைவிட்டார்; இது இனி அவருடையதல்ல என்றார்கள்.

(இன்னும் வரும்)

## PAPÆLEISE

## பப்பாளீஸ்

பப்பாளீஸ் (Papæleise) என்பது என்ன?

பதினேழு வருஷங்களுக்கு முன் மிஸ் ஜாலிப் (Miss Joliffe) என்ற துரைசானி சாமோவா தீவிலுள்ள பாப்புவாற்று (Pappuata) பெண்பாடசாலையில் வேலை செய்யும்படி போனார்கள். அவர்கள் அங்கேயும் அற்றலோமியாவிலும் (Ataulomia) பெண்களின் மத்தியில் உழைக்கும்படியாகவே தங்களைத் தத்தம் செய்தார்கள். தங்கள் சரீர சவுக்கியத்துக்காகச் சிலகாலம் இங்கிலாந்து தேசத்துக்குப்போக வேண்டியிருந்தது. 1912-ம் வருஷம் இந்த அம்மாளுக்குப் பூரண சுகமுண்டாகவே, தங்களுக்கு அநேக காலமாக இருந்த நோக்கத்தை நிறைவேற்றும்படி எலிஸ் (Ellice) தீவுகளிலுள்ள பெண்களுக்குள் வேலை செய்ய அனுப்பப்பட்டார்கள்.

கூடியவரையில் சொற்பச் செலவில் வேலை ஆரம்பித்து நடத்தக் கருதி, அக்டோபர் மாதம் பூனுபுற்றி (Funafuti) என்ற இடம் சேர்ந்து பூனுகொலோ (Funagogo) என்ற தீவை ஸ்தாபகமாக்கிக்

கொண்டார்கள். இச்சிறு தீவு முக்கால் மைல் நீளமும் 100 கெஜ அகலமுமானது. சொற்பச் செலவில் பாடசாலைகளையும், பெண்களின் வீடுகள் அல்லது குடிசைகளையும், தங்கள் சொந்த வீட்டையும் கட்டி முடித்தார்கள்.

“Pappæleise” என்பதின் அர்த்தம்—‘எல்லிஸ் தீவின் பாறை’ என்பதாம். ஆரம்பத்தில் ஜலக்கஷ்டம் அதிகமானதால் மழைநீரைப் பிஸ்கேட் டின்களில் வைத்துப் பத்திரப்படுத்தி வந்தார்கள். சமையல் பாத்திரங்களுக்குப் பதிலாகத் தேங்காய்ச் சிரட்டைகளை உபயோகித்தார்கள். முதன் முதலில், எட்டுத் தீவுகளில் ஒவ்வொன்றிலுமிருந்து ஐந்து பெண்கள்மாத்திரம் வரும்படி உத்தரவுபெற்றார்கள். ஆனால் பெண்களில் அநேகர் வரும்படி அதிக ஆசையுள்ளவர்களாயிருந்தார்கள். ஒரு கரும்பலகை மாத்திரம் பள்ளிக்கூடத்து உபகரணமாகவும், பவளக்கொடி படர்ந்த தரையானது பிள்ளைகள் உட்காரும் ஆசனமாகவும் இருந்தது.

தேங்காய்கள் இப்பெண்களின் ஆகாரமாக இருந்தபடியால், தென்னை மரத்தின்மேலேறிக் காய்களைத் தள்ளுதற்காக இரண்டு மனிதர் தங்கள் குடும்பத்தோடு வந்து வசிக்க உத்தரவுபெற்றார்கள். அவர்கள் மரமேறுகிறதைப் பெண்களும் பார்த்து, தாங்களும் மரமேறப் பழகிக்கொண்டார்கள். ஆனால் இந்த மாதிரி அப்பியாசம் ஜாலிப் அம்மாளுக்குப் பிரியமாக இருக்கவில்லை. இப்போது, இந்த அம்மாள் ஒரு இராணியைப்போல ஆளத்தொடங்கினார்கள். பெண்பிள்ளைகளை நல்ல கல்வியில் பயிற்றுவித்துப் பிற்காலத்தில் அவர்கள் நல்ல தாய்மார்களாகவும், நல்ல மனைவிகளாகவும் இருக்கும்படி ஆக்கவும் பழக்கினார்கள். பாடசாலைப் படிப்புடன் வீட்டுவேலைகளிலும், துணிதோய்த்து ஸ்திரிபோடுதல், தைத்தல், முதலிய வீட்டுவேலைகளிலும் அவர்களைப் பயிற்றுவித்தார்கள். தங்கள் சரீரங்களையும், வீடுகளையும், உடுப்புகளையும் எப்படிக் கவலையாய்ப் பாதுகாக்கவேண்டும் என்பதைப்பற்றியும் படிக்கிறார்கள். கொஞ்சப்பேர் மாத்திரம் பள்ளிக்கூடத்தை விட்டுவிட்டார்கள். அவர்கள் யாரென்றால், கலியாணம் செய்துகொண்டு போய்விட்ட நாலுபேர்தான். பெண்கள் கூடியவரையில் நல்லவர்களும், போதகர்களின் மனைவிகளுமானார்கள். போதகர்களைக் கலியாணம்செய்த பெண்கள் போதகிகளானார்கள். அவர்களில் சிலர் பப்புவாதீவின் மிஷனெரிமாரின் மனைவிகளாக இருப்பார்கள் என்று நம்புகிறார்கள். ஒரு பையனுக்குத் தான் மிஷனெரியாகவேண்டுமென்ற ஆசையிருக்கும்போது, பெண்களுக்கும் கூட அவ்விதமான ஆசை இருக்கக்கூடாதா? ‘எல்லிஸ்’ தீவில், ஒரு பெண்பிள்ளைக்கு, தான் மிஷனெரியாக வேண்டு



மென்ற ஆசையிருந்தால், அவள் ஒரு மிஷனெரியின் மனைவியாக மாத்திரம் இருக்கக்கூடிய சிலாக்கியந்தான் கிடைக்கிறது. மிஸ் ஜாலிப் அம்மாள், தன்னால் கூடியமட்டும் அதிகப் பிரயாசம் எடுக்கிறார்கள்.

ஜனங்கள் தாங்களே தங்கள் சொந்த வீடுகளைக் கட்டிக்கொள்ளுகிறார்கள். தேங்காய்களும் இன்னும் மற்ற கிழங்குகளும்தான் அவர்களின் போஜனம். அவர்களுடைய வீடுகளுக்குச் சுவர் கிடையாது. குச்சுகள்தான் சுவர். சுவரின்மேல் தொங்கவைக்கும்படிப் படங்களாவது மற்ற சாமான்களாவது கிடையாது. தினந்தோறும் ஸ்நானம்செய்யும்படி கடல் அயலேரிக்குப் போவார்கள். வெந்நீர் ஸ்நானம் வேண்டுமானால் ஒரு கெற்றில் கொதிதண்ணீரில் செய்வார்கள். அதிகாலையில் எழுந்திருக்கவும், இரவில் படுக்கைக்குப் போகவும், சூரிய வெளிச்சமே அவர்களுக்கு நல்ல உதவியாகிறது.

ஜாலிப் அம்மாளின் சம்பளத்தைத் தவிர, வேறு பள்ளிக்கூடத்துச் செலவுக்காக மிஷனிலிருந்து பணம் ஒன்றும் கொடுக்கப்படுகிறதில்லை. இந்த மிஷன் ஒழுங்கைத்தான் விசேஷமாய்க் கவனிக்கவேண்டும். ஜனங்கள் தங்கள் சொந்த ஜீவியம் செய்யவும், மிஷனெரிமாரின் சம்பளத்தையுங் கூடக் கொடுக்கக்கூடிய திறமையும் யுள்ளவர்களாவார்கள்.

இங்கே, ‘Papæleise’ இல் செய்யப்படும் வேலைக்காக நாம் கடவுளைத் துதிக்கவேண்டியவர்களாய் இருக்கிறோம்.

‘Funagogo’ வில் இந்தப் பெண்கள், தங்கள் கிறிஸ்தவ ஸ்தாபகத்தைச் சுற்றிலுமிருக்கிற ஜனங்களோடு நன்றாய்ப் பழகி, தாங்கள் வசிக்கப்போகும் வெவ்வேறு இடங்களில் கிறிஸ்துவின் சாட்சியாகவும், எல்லாருக்கும் நல்ல மாதிரியாகவும் இருக்கும்படி தேவனைப் பிரார்த்திப்போமாக.

Papæleise’ அநேக தீவுகளுக்குள்ளே கணக்கற்ற ஆத்துமாக்களைக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடம் இழுத்துக்கொண்டு வரும்படியான ஒரு தீபஸ்தம்பம்போல் இருப்பதாக.’

Translated from the *Chronicle*

## BIBLICAL PUZZLES AND RIDDLES

### விடுகதைகள்

1. அம்மை யற்ற மாப்பிளைக்கு
அத்தை யற்ற பெண்ணொருத்தி
செம்மை யற்ற சேடனுக்கு—இவள்
சித்தியோ வத்தையோ?
    நன்மை யற்ற நாட்டினுக்கு
    நாடன வனை தோடு
    வன்மை பெற்றலகை யாள
    வல்லரக்கர் வம்மிஷம்
தும்பிடாது பெண்மடரைத்
துடிக்கவே யடக்கியே,
கம்பிடா தடக்கிடுங்
காவலனார் காட்டுமே!

U. A.

## LESSONS FOR FAMILY WORSHIP

# வேத வாசிப்பு ஒழுங்கு

### 1916 ௵ மே௴

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தி. | எண். | 22. | 1—14 | 11 | வி. | எண். | 35. | 1— 8 | 21 | ஞா. | உபா. | 3. | 21—29 |
| 2 | செ. | „ | 22. | 15—35 | 12 | வெ. | . | 35. | 9—15 | 22 | தி. | .. | 4. | 1—13 |
| 3 | பு. | „ | 23. | 1—12 | 13 | ச. | உபா. | 1. | 1—18 | 23 | செ. | „ | 4. | 14—22 |
| 4 | வி. | „ | 23. | 13—30 | 14 | ஞா. | „ | 1. | 19—31 | 24 | பு. | .. | 4 | 23—42 |
| 5 | வெ. | „ | 24. | 1—14 | 15 | தி. | „ | 1. | 32—46 | 25 | வி. | „ | 5. | 1—21 |
| 6 | ச. | „ | 24. | 15—25 | 16 | செ. | „ | 2 | 1—15 | 26 | வெ. | „ | 5. | 22—33 |
| 7 | ஞா. | „ | 27. | 12—23 | 17 | பு | „ | 2. | 16—25 | 27 | ச. | „ | 6 | 1—12 |
| 8 | தி. | „ | 32 | 1—15 | 18 | வி. | „ | 2. | 26—37 | 28 | ஞா. | „ | 6. | 13—25 |
| 9 | செ. | „ | 32. | 16—33 | 19 | வெ. | „ | 3. | 1—11 | 29 | தி. | „ | 7. | 1—11 |
| 10 | பு. | „ | 33. | 49—56 | 20 | ச. | „ | 3. | 12—20 | 30 | செ. | „ | 7. | 12—26 |
| | | | | | | | | | | 31 | பு. | „ | 8. | 1—20 |

C. L. S. PRESS, MADRAS—1916



LADY CHELMSFORD

செலம்ஸ்போர்ட் பெருமாட்டி


# மாதர் போதினி

No. 222 ஜூன் 1916 No. 6


## WOMEN'S WORK IN THE MADURA EVANGELISTIC CAMPAIGN

## மதுரையில் நடக்கிற சுவிசேஷ படைமுயற்சி—அதில் ஸ்திரீகள் செய்கிற வேலை

### I. ஆரம்பவேலை—கிறிஸ்துவின் படை ஆயத்தப்படல்

படைமுயற்சியாவது என்ன? படைமுயற்சி என்றால்: ஒரு யுத்தத்திற்கு வேண்டிய சேனையைச் சேர்ப்பதும், பயிற்றுவிப்பதும், ஆயுதமளித்து, யுத்தத்திற்கு அனுப்புவதுமே. சுவிசேஷ படைமுயற்சி என்றால்: சாத்தானுக்கு விரோதமான ஆவிக்குரிய போராட்டத்திற்குக் கிறிஸ்தவர்களாகிய சேனையை ஏவி எழுப்பி, அவர்களை அந்த வேலைக்குப் பழக்கி, ஆயத்தப்படுத்தி ஆத்துமாக்களை இயேசுவுக்காக ஜெயிக்க நடத்துவதே. மூன்று வருஷங்களாகச் சீனு தேசத்தில் கனம் எடி துரையவர்கள், இப்படிப்பட்ட சுவிசேஷ படைமுயற்சியை நடத்தினார்கள். அதில் உயர்தர வகுப்பாரான சீனரில் அநேகர் குணப்பட்டுக் கிறிஸ்தவர்களானார்கள் என்கிற சந்தோஷகரமான செய்தி, தென் இந்திய ஐக்ய சபைத் தலைவர்களுக்கு வந்துகொண்டேயிருந்தது. இச்சமாசாரத்தைக் கேட்ட சபைத்தலைவர்களுக்குள் தென் இந்தியாவிலும் இப்படிப்பட்ட விசேஷித்த வேலை நடத்தக்கூடாதா? என்கிற யோசனை உண்டானது. இதற்கு சபைகள் தற்சமயம் ஆயத்தமாயில்லை. இன்னும் பத்து வருஷம் சென்றுதான் இந்தியாவில் இப்படிப்பட்ட சுவிசேஷ படைமுயற்சி நடத்தக்கூடும் என்பதாக நினைத்தார்கள். ஆனாலும் சீனாவில் தேவன் பெரிய காரியங்களைச் செய்யக்கூடுமானால், இந்தியாவிலும் செய்யக்கூடும் என்று விசுவாசித்து, இங்கே சபைகளை ஆயத்தப்படுத்த ஆரம்பித்தார்கள். கனம் எடி துரையவர்கள் திடீரென 1915-ளு கடைசி

யில் வருவதாகச் சொன்னதால், இது ஏற்ற சமயம் என்று துரிதமாய் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தென் இந்திய ஐக்ய சபை முழுவதி லும் சுவிசேஷ படைமுயற்சி ஏகமாய் நடப்பதற்காக ஒரு பொது வான கமிற்றி ஏற்படுத்தப்பட்டது. அதற்குத் தலைவர் கனம் பாப்லி ஐயாரவர்கள். அப்படியே ஒவ்வொரு மிஷனுக்கும், உரிய கமிற்றிக ளும், படைமுயற்சி நடக்கப்போகிற இடங்களுக்கு வேறே கமிற்றி களும் ஏற்படுத்தப்பட்டன. 1915–ளு சுவிசேஷ படைமுயற்சி நடைபெற வேலூர், மதுரை, பாளையங்கோட்டை என்னும் மூன்று பட்டணங்கள் தெரிந்துகொள்ளப்பட்டன. சபைகளை ஆயத்தம் செய்ய 1914-ம் ளு நவம்பர் மாதத்திலிருந்தே சுவிசேஷ படை முயற்சியின் கருத்து, அதற்கு சபை செய்யவேண்டிய ஆயத்தம் முதலிய விஷயங்களின்பேரில் விசேஷித்த பிரசங்கங்கள் செய்யப் பட்டன. காணிக்கைகள் சேர்க்கப்பட்டன. வேதவாசிப்பு, ஜெபத் தின் முக்கியம், காட்டப்பட்டன. ஏப்ரல் மாதம் மதுரை ஜில்லா முழு வதிலும் இதுவிஷயமாகக் கிறிஸ்தவர்களை ஆயத்தப்படுத்தி வேலை செய்ய இருபதுபேரடங்கிய சுவிசேஷ படைமுயற்சி ஜில்லாகமிற்றி ஒன்று ஏற்படுத்தப்பட்டது. ஜூலை மாதம் பட்டண படைமுயற் சியை நடத்த, மதுரைபட்டண சுவிசேஷ படைமுயற்சி கமிற்றி ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. இந்த வேலையில் மதுரையிலுள்ள சுவிடிஷ் மிஷன்சபையும் இங்கிலாந்து திருச்சபையும் சேர்ந்து ஒத்து வேலை செய்தது. இந்தக் கமிற்றியில் ஏழு உட்கமிற்றிகள் உண்டு. அவையாவன: பிரசுரம் செய்யும் கமிற்றி, ஒழுங்கு செய் யும் கமிற்றி, பஜனைக்கமிற்றி, தனித்தாள் வேலைக்கமிற்றி, சர்வே கமிற்றி, ஸ்திரீகளின் கமிற்றி, தலைவர்களின் கமிற்றி. பட்டணத்து சுவிசேஷ படைமுயற்சி கமிற்றித்தலைவர் கனம் பேனிங்கா ஐயாவர் கள். பட்டணத்தில் செய்யப்படப்போகிற வேலை சித்தியுள்ளதா யிருக்கும்படி இதற்கென்று தன் முழு நேரத்தையும் ஆறுமாதத்திற்குக் கொடுக்கும்படி கனம் சந்தியாகு போதகர் அழைக்கப்பட்டார். ஸ்திரீ கள் கமிற்றித்தலைவர் கனம் சுவீற் அம்மாள். இந்தக் கமிற்றி பொதுக் கமிற்றியோடு சேர்ந்தும், பிரத்தியேகமாயும் வேலை செய்யவேண்டி யதாயிருந்தது. மதுரையில் சுவிசேஷ படைமுயற்சியில் ஸ்திரீகள், ஸ்திரீகளுக்காகச் செய்த காரியங்களைச் சற்று விவரிப்போம்.

1. கிறிஸ்தவ ஸ்திரீகளைச் சந்தித்தல்.

பட்டணத்து போதகர்மாரிடமிருந்து சபை ஸ்திரீகளின் அட்ட வணை வாங்கி, அவர்களை வீடு வீடாகச் சந்தித்து, மதுரை இந்துப் பெண்களின் ரக்ஷிப்புக்காக, அவர்கள் செய்யவேண்டிய காரியங்



களைக் காட்டப் பிரயாசைப்பட்டோம். இந்தச் சந்திப்புகள் அநேகர் ஐக்யமாவதற்கும், தங்கள் பொறுப்பை உணருவதற்கும், புதிய முயற் சிகள் செய்ய எழும்புதலடைவதற்கும் உதவியாயிருந்தன. கிறிஸ்தவ சகோதரிகளில் வாசிக்கத் தெரியாத 26 பேர் வாசிப்புப் படிக்கவும் சம் மதித்தார்கள்.

2. வேதவாசிப்பு, ஜெபக்கூட்டங்கள்.

பட்டணத்தின் நாலுபக்கங்களிலுமுள்ள சகோதரிகள் வேதவா சிப்புக் கூட்டங்களாக ஏற்படுத்தப்பட்டார்கள். ஒவ்வொரு கூட்டங் களுக்கும் ஒவ்வொரு தலைவர் உண்டு. இப்படியாக மதுரையில் 36 வேதவாசிப்புக்கூட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. இவைகளைச்சேர்ந்த அங்கங்கள் 374. வாரத்திற்கு ஒரு தடவை முறைமுறையாய் ஒவ் வொரு வீட்டிலும் கூட்டம் நடத்தப்படுகிறது. அப்போஸ்தலர் நட படிகள் வாசித்து முடித்து, ‘ஆத்தும ஆதாயம் செய்தலைப்பற்றிய தேவ ஒழுங்கு’ என்னும் புஸ்தகம் படித்துவருகிறார்கள். திட்டமாக ஆட் களைக்குறித்து ஜெபம் செய்வதற்கு உதவியாக கிருபாசன புஸ்தகம் அங்கங்களுக்குக் கொடுக்கப்பட்டு உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

3. தனித்தாள் வேலை பயிற்றுவித்தல்.

முப்பத்தாறு ஜெபக்கூட்டத்தலைவர்களும் தனித்தாள் வேலை விசா ரிப்புக் கமிற்றி என்ற பேரால் அழைக்கப்படுகிறார்கள். பலவிதமான தனித்தாள் வேலைகள் செய்யப்பட்டது. மிஷனெரிமார் வீடுகளில் வேலைபார்க்கும் இந்துக்கள், ரோமானித்தரான வேலைக்காரரைத் தேடி அவர்களுக்குள் வேலைசெய்ய, அந்த வகுப்பாரில் அநேகர் கிறி ஸ்தவர்களானார்கள். இன்னும் ஒருக்காலும் இந்து ஸ்திரீகளோடு சிநேகம் செய்து சாட்சிகொடாதவர்கள் சிலரைத்தேடி வரப்போகிற கூட்டங்களைப்பற்றி சொல்லி, பழகி, ஜெபித்து சாட்சி சொல்லத் துவக்கினார்கள்.

4. ஏக கால சுவிசேஷ படைமுயற்சி வாரம்.

செப்டெம்பர் மாதம் 16-ம் தேதியிலிருந்து 22-ம் தேதி முடிய நடந்தது. வேதாகம ஸ்திரீகள், வேதசாஸ்திர பாடசாலை மாணவர், கேப்ரன் ஹால் மாணுக்கிகள், சபை ஸ்திரீகளில் சிலர் ஆக 62 பேர் பட்டணத்தின் பல பாகங்களிலும், மாறி மாறி, அதே இடத்தை ஏழு நாளும் சந்தித்து, 30 கூட்டங்கள் வைத்து, 4,100 பேருக்குப் பிரசங் கித்து, 67 சுவிசேஷ பங்குகள் விற்று, 1,600 கைப்பிரதிகளும் கொடுத்தோம். இந்த வாரத்தின் வேலைமூலமாய்ப் புதிதாய் அநேக ரோடு பழகி, ஆசைகாட்டினவர்களைத் தொடர்ச்சியாய்த் தனித்தாள்

வேலைக்குத் தெரிந்துகொண்டு, இந்துப் பெண்களுக்கென்று, இந்தியானா ஹாலில் வைக்கப்பட்ட கூட்டங்களுக்கும் அழைத்து வந்தோம். இந்த வாரத்திற்குப் பிறகுதான் கிறிஸ்தவ சகோதரிகளில் அநேகர் திட்டமாகத் தனித்தாள் வேலைசெய்யத் துவக்கினார்கள். இப்படியாகக் கிறிஸ்தவ சகோதரிகள் கொஞ்சம் கொஞ்சமாகத் தங்கள் உத்தரவாதத்தை உணர்ந்து, ஆதித்திருச்சபை ஸ்திரீகளின் முன்மாதிரியைப் படித்து, அதின்படி செய்யத் தீர்மானித்து, ஜெபித்து, இந்துக்களுக்குள் வேலைசெய்யத் தைரியம்கொண்டார்கள். தேவன் மதுரையைச் சந்திக்க, இரக்ஷிக்க, ஆயத்தமாயிருக்கிறாரென்று விசுவாசித்து, 'இதோ அடியேன் இருக்கிறேன், என்னை அனுப்பும்' என்று தங்களைக் கையளித்தார்கள்.

S. சிரோமணி.

## II. ஆயத்த முடிவுரையான கூட்டங்கள்

## கிறிஸ்துவின் படை பாளையம் இறங்கி தாக்குதல்

படைமுயற்சிக்குக் கிறிஸ்துவின் படை ஆயத்தப்பட்டதைப் பார்த்தோம். இனிமேல் அது யுத்தமுஸ்திப்புடன் சாத்தானின் அரண்களை தைரியமாய்த் தாக்கி எதிர்த்து சமர்புரிந்ததைப் பார்ப்போம்.

மதுரைமாநகரில் படிப்பாளிகளான இந்துக்கள் பொதுவான உபந்நியாசங்களைக் கேட்க கிறிஸ்தவ கலாசாலை மண்டபங்களுக்கு வருவது வழக்கம். ஆனாலும் கிறிஸ்துவின் இரக்ஷணை மகத்துவங்களைக் கேட்கும்படி கூடினசமயம் அபூர்வம். ஆகையால் நவம்பர் மாதம் கனம் எடி துரையவர்கள் செய்யும் சுவிசேஷ பிரசங்கங்களைக் கேட்க ஒரு பொதுவான ஸ்தலத்திற்கு இந்துக்கள் கூடிவரும் வழக்கத்தை உண்டாக்கும்படி ஆயத்தக் கூட்டங்கள் வைக்க ஒழுங்குசெய்யப்பட்டது. ஒழுங்குசெய்யும் கமிற்றி பட்டணத்தின் பல பாகங்களையும் ஆராய்ந்து இப்படிப்பட்ட பெரியகூட்டத்திற்கேற்ற பெரிய பந்தல் போடுவதற்கு மத்தியமும், அமைதலும், வசதியுமான இடம் கீழ்வாசல் மிஷன் கம்பவுண்டைத்தவிர வேறே இடம் காண்பரிது என்று தீர்மானித்தார்கள். ஆகவே அக்டோபர் மாதம் மிஷன் கம்பவுண்டில் மாட்சிமைதங்கிய மால்போன்ற ஒரு உன்னதமும் விசாலமுமான பந்தல் போடப்பட்டது. அந்தப் பந்தலுக்கேற்க அதில் பிரசங்கிக்கக் கீர்த்திபெற்ற பங்காள வித்வசிரோமணி கனம் சர்க்கார் தேசிகர் வந்துசேர்ந்தார். பிரசுரம் செய்யும் கமிற்றியும் தனித்தாட்களும் மதுரையிலுள்ள மத்திபதா வகுப்பாரை விசேஷமாக லக்காய் வைத்து ஆயத்தம்செய்து அழைத்துவர ஈராயிரம்



பேருக்கு அதிகமான ஆண்கள் வெகு அமரிக்கையாயும் கவனமாயும் செவிகொடுத்தனர். சர்க்கார்துரையின் சாதுரிய பிரசங்கமும் இயேசு பெருமானைப்பற்றி அவர் பகர்ந்த வைராக்கிய சாக்ஷியும் மதுரையை அசைத்தது.

ஆண்கள் விஷயமாக இது கூடியகாரியம்தான் என்று துவக்கத்திலே விசுவாசமிருந்தது. ஆனால் பெண்கள் இப்படி பொதுவான ஒரு இடத்திற்குக் கூட்டமாய் வருவார்களோ சம்மதிப்பார்களோ என்ற சந்தேகமும் பயமும் எங்களுக்கிருந்தது. என்றாலும் பிரயாசப்படலாமென்று ஆரம்பித்து ஆகஸ்டு மாதம் 19-ம் தேதி இரவு கனம் ஸ்டெய்ன்ஸ்துரையால் காட்டப்பட்ட ஒளிச்சித்திரப்பட பிரசங்கத்திற்கு இந்துப்பெண்களை அழைத்தோம். முதல் தடவையாக பன்னிரண்டு இந்து ஸ்திரீகள் வந்தார்கள். இது வெகு சொற்பத்தொகையானாலும் எங்களுக்கு வெகு சந்தோஷத்தைக் கொடுத்தது. இது அச்சாரம்போலிருந்தது. ஏககால சுவிசேஷ படைமுயற்சி வாரத்தில் மூன்றுநாள் தொடர்ச்சியாய் ஐயாத்துரை பாகவதரால் பஜனைப்பிரசங்கம் இந்தியானா ஹாலில் நடத்தப்பட்டது. இந்த முறை கிறிஸ்தவ் சகோதரிகளில் அநேகர் பிரயாசைப்பட 250 முதல் 350 வரை இந்து ஸ்திரீகள் இடங்கொள்ளாமற் போகுமட்டும் வந்து வெகு பிரியமாயும் கவனமாயும் இரக்ஷகரின் சரித்திரம், சமாரியாஸ்திரீ, லாசருவை உயிரோடெழுப்பினது முதலிய சரித்திரங்களைக்கேட்டு அநேகர் உணர்வடைந்து திரும்பிப்போனார்கள். தனித்தாள் வேலையாட்கள் சந்திக்கப்போனபோது இந்த சரித்திரங்களைச் சொல்லக் கூடியவர்களாயிருந்தார்கள். இவ்வளவு ஏராளமான ஸ்திரீகள் சுத்த சுவிசேஷத்தை ஜாதிவித்தியாசம் பாராமல் சமமாய் உட்கார்ந்து கேட்பதைப் பார்க்கும் காட்சி எங்களுக்குப் புதுமையாயிருந்தது. எங்கள் இருதயங்கள் நன்றியறிதல் விசுவாசத்தால் நிரப்பப்பட்டது.

ஆண்களுக்கென்று பெரிய பந்தல் போடப்பட்டபோது அது பிரமாண்டமாக ரஸ்தாவில் பஹிரங்கமான இடத்தில் இருப்பதால் அது ஸ்திரீகள் கூட்டத்திற்கு ஏற்றதாயிராது என்று நாங்கள் அறிந்து பின்வரும் கூட்டங்களுக்குப் பிரத்தியேகமாய், பத்திரமான இடத்தில் பந்தல்போடுவது உசிதமெனத் தீர்மானித்து வெகுதுரிதமாய் பைபிள் பாடசாலை உட்பக்கத்தில் ஆயிரம்பேர் உட்காரக்கூடிய ஒரு பந்தல் போடப்பட்டது. இங்கு சர்க்கார்துரை பிரசங்கம் செய்யும்போது ஐஞ்ஞூறு ஹிந்து ஸ்திரீகள் வந்தார்கள். இந்திய ஸ்திரீகளின் அறிவீனம், அவர்கள் உத்தரவாதம், பண்டித ரமாபாய் முதலிய விஷயங்களில் அவர் பேசினது அவர்கள் மனதில் பதிந்தது. இந்தப் பந்தலில் ஒளிச்சித்திரப்படப் பிரசங்கங்களும் அசைவுபடங்களும்

ஏராளமான ஸ்திரீகள் இடங்கொள்ளாமற் போகுமட்டும் வரும்படி அவர்களை இழுத்தன. இதற்குள்ளாக நாங்களும் ஸ்திரீகளும் எடி துரை பிரசங்கங்களுக்குக் குறைந்தது ஆயிரம்பேர் வரக்கூடும் என்று நிச்சயித்தோம். கடந்த கூட்டங்களின் அநுபவத்தினால் செய்யவேண்டிய ஒழுங்குகள் செய்தோம்.

### முடிவுரையான கூட்டங்கள்.

நவம்பர் மாதம் 6-ம் தேதியிலிருந்து 10-ம் தேதிவரை கனம் எடி துரை மதுரையில் கூட்டங்கள் நடத்துவார் என்று முன்னதாக நோட்டீஸ்கள் அச்சடிக்கப்பட்டு ஆண்களால் கொடுக்கப்பட்டது.

ஹிந்து ஸ்திரீகளுக்கு மூன்று கூட்டங்கள் வைக்கப்பட்டது. அந்தவாரம் விசேஷித்த பண்டிகை நாட்களானதால் மெத்த கவலையோடு ஜெபித்து வந்தோம். முதல் நாள் கனம் எடி துரை இந்தியாவின் தேவை, அதின் தரித்திரம், வியாதி, மரணம், அறிவீனம், ஸ்திரீகளின் அடிமைத்தனம் ஆகிய பரிதபிக்கப்படத்தக்க நிலைமையைக் காட்டினார். அடுத்த ஒன்றரை மணிநேரம் ஐயாத்துரை பாகவதர் யவீரின் குமாரத்தியை உயிரோடெழுப்பின சரித்திரத்தின் பேரில் பாடினார்.

இரண்டாம் நாள் கனம் எடி துரை இந்தியாவை இந்த பரிதாபமான நிலைமையிலிருந்து இரக்ஷிக்கக்கூடியவர் இயேசுகிறிஸ்துவே என்று பேசித் தம்முடைய குணப்படுதல், பண்டித ரமாபாய் குணப்படுதலையும்பற்றிப் பேசினார். கனம் கடம்பவனம், கிங்ஸ்பரி போதகர் குணப்படுதலையும் தான் கிறிஸ்துமார்க்கத்திற்கு வந்ததையும்பற்றிச் சாக்ஷிபகர்ந்தார். கடைசியாய்ப் பாகவதர் தான் கிறிஸ்துமார்க்கத்திற்கு வந்த வரலாறுகளைச் சொல்லி ஈசாக்கின் சரிதையிலும் சற்று பாடி முடித்தார். மூன்றாம்நாள் கனம் பாப்லி ஐயாவர்கள் பெரும்பாடுள்ள ஸ்திரீயைப்பற்றியும் இயேசு இரக்ஷகரைப் பற்றியும் பாட்டுப்பாடிப் பிரசங்கித்தனர். பின்னால் பாகவதர் பொற்சிலையைப்பற்றி வெகுநேர்த்தியாய்க் காலக்ஷேபம் செய்யக் கூட்டங்கள் முடிந்தது. இந்தக் கடைசிக்கூட்டங்களுக்கு 1,000–1,200 பேர் வந்தார்கள். அவர்களுடைய பிள்ளைகள், தாய்மார் பிரசங்கங்களைக் கேட்காதபடி தடைசெய்வார்களென்று நினைத்து சில மிஷனெரி அம்மாள்மாரும் மங்களபுரத்து உபாத்தினிமார்களும் விளையாட்டு ஜாமான்களுடன் இந்தியானா ஹாலுக்கு வந்து 150–200 பிள்ளைகளுக்கு விளையாட்டுக்காட்டி உதவிசெய்தார்கள். இந்தப் பிரசங்கங்கள் நடக்கும்போது நாங்கள் கவனித்த குறிப்பென்னவென்றால்: அநேக ஸ்திரீகள் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாய் ஓட



கவனமாய்க் கேட்டு 'இந்த இயேசுவே என் இரக்ஷகர், அவரைப்பற்றி நான் இன்னும் அறியவேண்டும், இதுவே இன்பம்,' என்று சொல்லி, கூட்டம் முடிந்தாலும் தரித்துநின்று இதைப்பற்றி பேசிப்போனார்கள். அடுத்த மூன்று நாட்களில் மறுபடியும் ஐம்பது ஸ்திரீகள்போல் வந்து பாகவதரோடும் மற்றவர்களோடும் சம்பாஷிக்கவும், ஜெபிக்கவும், ஞானஸ்நானம், இராப்போஜனத்தைப்பற்றி பேசவும் வந்தார்கள். அநேக ஸ்திரீகளுக்கு இயேசுவை அறிக்கைசெய்து ஞானஸ்நானம்பெற ஆசையுண்டு. அவர்களை கட்டியிருக்கும் ஜாதி, குடும்ப, வழக்கக்கட்டுகளை எறிந்துவிட பயந்து யோசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

D. J. சூசன்னாள்.

(இன்னும் வரும்.)



## SOME INDIAN BIRDS

## பரதகண்டத்து பட்சி வகைகள்

இந்தியரிலும் ஐரோப்பியரிலும் அநேக ஸ்திரீகளுக்கு அயல்வீட்டுக்காரரைப்பற்றி நன்றாய்த் தெரியும். சாதாரணமாக எதிர்வீட்டில் அல்லது அந்தத்தெருவிலிருக்கிற இன்னொரு ஸ்திரீக்கு எத்தனை பிள்ளைகள் இருக்கிறார்களென்றும், எவ்விதமான புடவைகள் கட்டுகிறார்களென்றும், சுறுசுறுப்பாயிருக்கிறாளா, அல்லது சோம்பலாயிருக்கிறாளாவென்றும், புருஷனிடத்தில் எப்படி நடந்துகொள்ளுகிறாளென்றும், இன்னம் மற்றக் காரியங்களைப்பற்றியும் ஒருத்திக்கு நன்றாய்த் தெரியும்.

ஆனால் கடவுள் நமக்கு இதர அயலகத்தாரைக் கொடுத்திருக்கிறார்; அவர்கள் எதிர்வீட்டிலுமில்லை, தெருவிலுமில்லை. ஆனால் தலைக்குமேலே இருக்கிறார்கள். பறக்கிற இந்த அயலகத்தாரைப் பற்றி நம்மில் அநேகருக்குத் தெரிந்திருப்பது சுத்தசூனியம். சென்ற டிசம்பர் மாதம் ஒருநாள் காலையில் சில சிநேகிதரோடு உலாவப்போ

னேன். போய்க்கொண்டிருக்கும்போது, நாங்கள் எத்தனை பட்சிகளைப் பார்த்து, அவைகளின் பெயரைச் சொல்லக்கூடுமென்று எத்தனம் பண்ணினோம். தந்திக்கம்பியின்மேல் உட்கார்ந்திருந்த பெயர் தெரியாத ஒரு பட்சியைப் பார்த்தோம். என்னுடைய இந்திய சிநேகிதன் வழியில் போகிற ஒருவனைக் கண்டு, 'ஐயா! அது என்ன குருவி' என்று கேட்டார். அந்த மனிதன் அதைப் பார்த்து, 'அது ஒரு குருவி' என்று சொல்லிவிட்டுப்போனான். நம்மில் அநேகருக்கு இவனுக்குத் தெரிந்ததைவிட அதிகம் தெரியுமோவென்று நான் சந்தேகிக்கிறேன்.

'அது ஒரு குருவி' என்று நாம் ஒருவரும் சொல்லாதபடிக்கு நம்முடைய தோட்டங்களிலும் தெருக்களிலும் இருக்கிற பட்சிகளைப்பற்றி ஒவ்வொரு மாதத்திலும் இங்கு எழுதலாமென்று யோசிக்கிறேன்.

இந்த மாதத்தில் நமக்குத் தெரிந்த சில பெரிய பறவைகளைப்பற்றிப் பார்ப்போம் முதலாவதாக அவலட்சணமான ஒரு பறவையுண்டு, அதற்குக் 'கூளி' என்று பெயர். ஆனால் சாதாரணமாகப் 'பார்வோனின் குஞ்சு' என்று இங்கிலீஷில் அதற்குப் பெயர் வழங்குகிறது. அப்படியானால் அது ஒரு பெரிய பிரயாண்டமான குஞ்சு! சாதாரணமாகக் கூளி கொஞ்சம் கறுப்பு இறகுகளோடு சேர்ந்து வெண்மையாயிருக்கும். அதின் கால்கள் அதிக மஞ்சளாயிருக்கும். அதைச் சுடுகாடுகளிலும் தோல் பதனிடுகிற இடங்களிலும் காணலாம். அது செத்தமிருகங்களையும் பிரேதங்களையும் தின்னும். பம்பாயில் 'அமைதியின் கோபுரங்கள்' என்று வழங்கப்படும் பார்ஸிகள் பிரேதங்களைப் போடுகிற இடங்களின்மேல், பிரேதங்கள் எப்போது வருமோவென்று காத்துக்கொண்டிருக்கிற நூற்றுக்கணக்கான கறுங்கூளிகளைக் காணலாம். கூளி அருவருக்கப்படத்தக்கதான பறவையாயினும் உபயோகமானது; ஏனென்றால் அது நாட்டைச் சுத்தமாய் வைக்கிறது. பக்ஷிவகையைச் சேர்ந்த தோட்டியென்று நாம் சொல்லலாம்.

பருந்து இன்னொரு பெரிய பட்சி. கூளியைப் பட்சிவகையைச் சேர்ந்த தோட்டி என்று சொன்னால் கருடனை வேட்டைக்காரன் என்று சொல்ல நியாயமுண்டு; ஏனெனில் அது அநேக சிறுபிராணிகளைப் பிடித்துக் கொல்லுகிறது. கோழி, வாத்து முதலியவைகளை வளர்க்கிறவர்களுக்குப் பருந்து இன்னதென்று தெரியும். பறப் பருந்து என்று அழைக்கப்படும் சாதாரணப் பருந்து நிறத்தில் கறுப்பும் சாம்பல் நிறமும் கலந்ததாயிருக்கும். அதனுடைய அலகுகள் அது தின்கிற மாமிசத்தைத் துண்டு துண்டாய்க் கிழிக்கத்தக்கப் பலமுள்ளதாயும் வளைந்துமிருக்கும். பாப்பாரப்பருந்து என்று அழைக்கப்படும் கருடன் அதிக வித்தியாசமானது. அதனுடைய தேகம் கறுப்புக்கலந்த சிவப்பா



யிருக்கும். அதின் தலையும் கழுத்தும் சுத்தவெண்மையாயிருக்கும். அதைத் தரிசிப்பது நல்ல சகுனம் என்று இந்துக்கள் சொல்லுவார்கள். நல்ல சகுனமென்பது கண்ணுக்கு இன்பத்தைக் கொடுப்பது என்று அர்த்தமானால் இப்படிச் சொல்வது உண்மையே. ஏனென்றால் இதைவிட அலங்காரமான சிவப்பும் வெண்மையும் கலந்த நிறமுள்ள நேர்த்தியான பக்ஷி வேறொன்றில்லை. கூளியைப்பற்றியும் பருந்தைப்பற்றியும் ஒரு விசேஷமுண்டு. அதாவது அவைகள் உயரத்தில் வட்டமிட்டுப் பறக்கின்றன; சில வேளைகளில் அசைவற்று மிதக்குகிறது போல ஒரு சிறகையும் அடிக்காமல் நெடுநேரமிருக்கிறது. அவைகளுடைய கண்கள் அதிக பலமானவைகளானபடியினால் அதிக உயரத்திலிருந்து அவைகளின் இரையைப் பார்க்கக்கூடும். பட்சி ஜாதிகளில் நமக்கு மிக்க பழக்கமானது காகம். நமது தேசத்திலுள்ள காகங்கள் இரண்டு வகைப்படும்: ஒன்று தோகையடர்ந்த அண்டங்காகம், இன்னொன்று சற்று சிறியதாய்ச் சாம்பல்வர்ணமுள்ள கழுத்தையுடைய மணிக்காகம். இது நமது வீடுகளுக்கு அருகாமையிலிருக்கும். இந்த இருவகைக் காகங்களுக்கும் ஒரே சுபாவம். இவைகள் திருடர் வகுப்பைச் சேர்ந்தவை. நம்முடைய திண்ணைகளில் உலர்த்தும் தானியவகைகளைத் திருடுவது மாத்திரமல்ல, பம்பாயில் ஒரு ஜதை காகம் நகை வியாபாரி ஒருவனுடைய கடையிலிருந்து மூக்குக் கண்ணாடியைச்சேர்ந்த தங்கச்சட்டத்தைத் திருடிக்கொண்டுபோய் தங்கள் கூட்டில் ஒளித்துவைத்துக்கொண்டதாகவும் கேள்விப்பட்டிருக்கிறோம். ஐயோ பாவம்! இந்த உண்மையான திருடர் அகப்படுகிறவரையில் அந்த நகை வியாபாரியின் குமஸ்தா திருடினதாகக் குற்றஞ் சுமத்தப்பட்டான்.

காகத்திற்கு அநேக கெட்ட வழக்கங்களிருந்தபோதிலும் அது ஒரு உபயோகமான பட்சி. அது அதிக குப்பை கூளங்களைக் கொண்டுபோய் நம்முடைய நாட்டைச் சுத்தமாய் வைப்பதில் உபயோகமாயிருக்கிறது. காகத்தைப்பற்றின ஒரு நவீனமான காரியம் என்னவென்றால் அது ஏறக்குறைய உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் காணப்படுகிறது. நீ இங்கிலாந்துக்குப் போனாலும் சரி, அல்லது அமெரிக்காவுக்குப் போனாலும் சரி, அங்கேயெல்லாம் இந்தக் கறுத்த சிநேகிதனுடைய 'கா' என்கிற பழக்கமான குரலைக் கேட்பாய். இந்தியாவில் இதை மலைகளிலும் தாழ்ந்த பூமிகளிலும் பார்க்கலாம். சென்னையிலிருப்பதுபோலவே இமயகிரியிலும் நீலகிரியிலும் காகங்களுண்டு. கொடைக்கானல் மலை ஒன்றுக்குத்தான் இதுவரையில் காகம் போகாததாகத் தெரிகிறது.

A. B. VanDoren.

# CONFLICT OF IDEAS OLD AND NEW

## முது நெறி புது நெறி முரண்

### ஓர் கடிதம்

சென்னைத் திருவல்லிக்கேணி,
பெரிய தெரு, 3-ம் இலக்க வீடு.
நஎ-௵ சித்திரை௴ நஉ

அன்னையார் பாத கமலங்களுக்குத் திக்கு நோக்கித் தெண்டனிட்டு மகள் ஜானகி எழுதும் விஞ்ஞாபனம்:—

இங்கே பார்த்தசாரதி திருவருளினாலே அடியேன் க்ஷேமம். அவ்வண்ணமே தங்களுக்கும் தங்கை பங்கஜத்துக்கும் க்ஷேமம் குறையாதபடி காஞ்சி வரதராஜர் அனுக்கிரகிப்பாராக. அம்மா, தங்கள் கடிதம் வந்தபோது பரீக்ஷைக்கு இரண்டு மூன்று நாட்களேயிருந்தபடியால், உடனே பதில் எழுத முடியவில்லை. அக்குற்றத்தைப் பொறுக்கவேண்டும்.

'இன்டெர்மீடியெத்' (Intermediate) பரீக்ஷையில் நன்றாய் விடை எழுதியிருக்கிறேன். பரீக்ஷையில் சித்தியடைவேன் என்பதற்கு என் மனதில் யாதொரு சந்தேகமும் இல்லை. பரீக்ஷையின் முடிவு வைகாசி௴ பிற்பகுதியில் வெளிப்படும். பரீக்ஷையில் நான் தேறினால் பீ. ஏ. (B. A. Honours) பரீக்ஷைக்கு மூன்று வருஷம் படிப்பதே என் ஆவல். அதற்குத் தடை சொல்லாதபடி தங்களை அடிபணிந்து கெஞ்சுகிறேன். அம்மா, என் தகப்பனார் உயிரோடிருந்த காலத்தில் என்னையும் அண்ணனையும் இங்கிலாந்துக் கனுப்பிப் படிப்பிக்க அவரெண்ணியிருந்தது தங்களுக்குத் தெரியாத காரியமன்று. என் துரதிர்ஷ்டமோ எம்பெருமான் சித்தமோ, யாதோ அறியேன். என் தந்தையும் தமயனும் ஒரு வாரத்துக்குள்ளே ஒருவர் பின் ஒருவராய் வைகுந்தம் அடைந்தார்கள். அதனால் என் மனம் வருந்தின வருத்தம் ஸ்ரீமந் நாராயணனுக்கே தெரியும். ஆயினும் என் மனக்கவலையை எல்லாம் ஒருவாறடக்கி, பட்ட பிரயாசையெல்லாம் வீணாய்ப்போகாமற் படித்தேன் இரவும் பகலும். பரீக்ஷையும் முடிந்தது. பரீக்ஷையிற் தேறுவேன் என்பதில் ஐயம் ஒரு சிறிதும் இல்லை. அம்மா, இங்கிலாந்துக்குப் போய்ப் படிப்பேன் என்று நான் எண்ணியிருந்த எண்ணம், என் தகப்பனாரோடு ஒழிந்



தது! ஆயினும், B. A. Honours படிக்க வெகு ஆவல் கொண்டிருக்கிறேன். இப்பொழுது எனக்கு வயது பதினேழுதானே. இன்னும் மூன்று வருஷம் நான் படிக்கலாகாதா? இதற்குள்ளே என் படிப்பை நிறுத்தவேண்டுமோ? 'நீ படித்து உத்தியோகம் செய்யப் போகிறாயோ?' என்று எழுதினீர்கள். உத்தியோகஞ் செய்யத்தானா படிப்பது? சாஸ்வதியும் இன்னும் படிக்கிறாளாமே. அன்றியும் உத்தியோகஞ் செய்தால் தவறோ? இப்படி எழுதினதற்காகக் கோபிக்கவேண்டாம். இது நிற்க.

தாங்கள் எழுதின காரியம் என் மனதுக்கு எள்ளளவும் பிரியமில்லை. கோபாலன் என் அம்மான் மகன் என்றும் அவனுக்கு நாற்பது வேலி நிலம் உண்டென்றும் நான் அறிவேன். ஆளும் அழகன்தான். அதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆயினும் கல்விக்கும் அவனுக்கும் காத தூரம். சுகுணமென்பது சொப்பனத்திலும் அறியான். ஈசுரபத்தி எள்ளளவும் இல்லை அவனுக்கு. இப்படிப்பட்டவனை என் மனம் எப்படி நாடும்? அன்றியும் விவாகம் செய்யவேண்டும் என்ற எண்ணமே எனக்கு இப்பொழுது இல்லை. B. A. பரீட்க்ஷையிற் தேறினபின்தான் நான் விவாகத்தைப்பற்றி நினைப்பேன். இருபது வயதாகுமுன் விவாகஞ் செய்வார் புத்தியில்லாதவர் என்று, என் தகப்பனார் தாம் சாக ஒரு வாரத்துக்கு முன் செய்த உபந்நியாசத்திற் சொன்னாரன்றோ? அப்படியானால் பிதிர் வாக்கிய பரிபாலனஞ் செய்வது மகளாகிய என்மேல் விழுந்த கடமையன்றோ? அப்பா, அப்பா, என்னை இந்த உலகத்திலே தனியே விட்டு நீங்களும் அண்ணனும் எங்கே சென்றீர்கள்?

அம்மா, விவாக காரியத்தைப்பற்றி இன்னும் மூன்று வருஷம் என்னோடு பேசாதிருக்கும்படி தங்களை மன்றாடுகிறேன்.

என் உபாத்தியாயனியரில் ஒருவர் வருகிற வாரம் கொடைக்கானலுக்குப் போகிறார்கள். அங்கே அவர்கள் மூன்றுமாதம் இருப்பார்கள். என்னையும் தங்களோடு வரும்படி அழைக்கிறார்கள். நான் பரீக்ஷைக்காக வெகு சிரமத்தோடு கற்றதால் மிகவும் களைத்துப்போயிருக்கிறேன். மலையுச்சியின் சீதளவாயு அலுப்புண்ட என் தேகத்துக்கு மிக நன்மை தரும். அங்கு காணக்கூடிய இயற்கையின் காட்சிகளும் மனதுக்கு இரம்மியத்தை விளைக்கும். ஆதலால் என் உபாத்தியாயனியரோடு போய் வர எண்ணியிருக்கிறேன். * ஆடி௴

* ஆடிமாதம் முதல் மார்கழிமாதம் முடியத் தக்ஷிணாயனம். அது தேவர்களுக்கு இரவு, அக்காலத்தில் ஹிந்துக்கள் விவாகஞ் செய்யார். ஆகையால் ஜானகி பயமின்றித் தாயாரிடம் சென்று திரும்பலாம்.

முதல்வாரம் காஞ்சிபுரம் வந்து தங்களையும் தங்கை பங்கஜத்தையும் கண்டுகொண்டு சென்னைக்குத் திரும்பிவிடுவேன்.

தங்களுக்கு நமஸ்காரம். பங்கஜத்துக்கு இரு கன்னங்களிலும் முத்தம்.

இப்படிக்கு,
தங்கள் மகள்
ஜானகி.



## THE KING'S CUP BEARER *(Continued)*

## ராஜாவுக்குப் பானங்கொடுப்போன் (தொடர்ச்சி)

### XII. அத்தியாயம்

### பரிசுத்த நகரம்

ஆனால் நெகேமியாவின் காலத்தில் அதில் அநேகவிதமான பாவங்களிருந்தபோதிலும், பரிசுத்த நகரம் என்றுதான் அழைக்கப்பட்டது. இந்தப் புஸ்தகத்தில் இந்தப் பெயர் இரண்டுதரம் வருகிறது. (11. 1, 18.) இது பரிசுத்த நகரமாயும் பூமியில் தேவவீடாகவும்,



அவருடைய விசேஷித்த சொத்தாகவும், அவர் அடிக்கடி வந்து வாசம் பண்ணும் இடமாயுமிருந்தபடியால், நகரவேலை முடிந்தது, அலங்கமெல்லாம் ஒழுங்குபடுத்தப்பட்டவுடனே, தேவனுக்குரியதாகிய அந்தப் பட்டணத்தையும் அதிலுள்ள யாவையும், அவருடைய ஊழியத்திற்கென்று பிரதிஷ்டை பண்ணுவது தகுதியாயிருக்குமென்று உணர்ந்தார். அப்படியே நாமும் மனோபாவனையாக எருசலேமிலிருப்பதாக வைத்துக்கொள்ளுவோம். ஜனங்களெல்லாரும் அந்தப் பெரிதும் மகத்துவமுமான நாளுக்காகத் தங்களை ஆயத்தம் பண்ணிக்கொள்ளுகிறார்கள். அவர்கள் மேன்மையும் மகத்துவமுமான சடங்காசாரங்களினால் நகரத்தைத் தேவனுக்கென்று பிரதிஷ்டைசெய்யப் போகிறார்கள். அலங்கம் கட்டிக் கதவுபோட்டு பதின்மூன்று வருஷங்களாயிற்று. இந்தப் பிரதிஷ்டை ஆராதனையை நெகேமியா முன்னேயே ஏன் வைத்துக்கொள்ளக்கூடாது. தான் எடுத்துக்கொண்ட வேலையை ஜனங்களுக்குச் சொல்லி, பரமராஜாவின் பாதத்தில் நகரத்தைவைத்து, வேலை முடிப்பதற்கு ஏன் இவ்வளவு நாள் சென்றது? திர்ஷாதாவாகிய நெகேமியா இவ்வளவுநாள் தள்ளிவைத்ததற்கு இரண்டு நல்ல முகாந்தரங்களுண்டு. முதலாவது அலங்கம்கட்டி, கதவு போடப்பட்டபிறகு, பட்டணத்திற்குள்ளே செய்யப்படவேண்டிய வேலை இன்னுமிருந்தது; மறுபடியும் அழிந்துபோன வற்றைக் கட்டிக் குடியேற்றி, பலப்படுத்தி எல்லாம் ஒழுங்குபடுத்தவேண்டியிருந்தது. அதுவுமல்லாமல் பாரவீகத்திலிருந்து தனக்கு விசேஷமான உத்தரவு கிடைத்தாலொழிய இந்தவிதமான பெரிய கொண்டாட்டத்தை நடத்தத் துணியமாட்டார். இந்த விதமாய் ஏதாவது வெளிப்படையான ஆர்ப்பரிப்பும் கோஷ்டமும் நடக்குமானால், சமாரியர் உடனே பாரவீக ராஜாவுக்கு நெகேமியா ஒரு கலகக்கூட்டம் ஏற்பாடு பண்ணுவதாக எளிதாய் எழுதிவிடுவார்களே. ஆகையால் இப்படிப்பட்ட ஒரு காரியம் நடக்கு முன்னர் ராஜாவிடமிருந்து அனுமதிகடிதம் பெற்றுக்கொள்ளுவது புத்தியாயிருந்தது. பட்டணம் ஒழுங்காயிருக்கிறது; வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்தாயிற்று, கர்த்தருடைய பரிசுத்த நகரத்தைப் பிரதிஷ்டை பண்ணுவதாகிய பயபக்தியான சடங்காசாரத்தை நடத்தாதபடி தடைசெய்யக்கூடியது இனிமேல் ஒன்றுமில்லை.

எருசலேமின் பல வாசல்களின் வழியாய் வந்து கூடுகிற இவர்கள் யார்? பிரதிஷ்டை ஆராதனைக்கென்று தேசத்தின் பல பாகங்களிலிருந்தும் லேவியர் வருகிறார்கள், அவர்கள் தங்களோடு அநேக கீதவாத்தியங்களையும் கொண்டுவருகிறார்கள்: கைத்தாளம், தம்புரு, சுரமண்டலம் முதலிய கீதவாத்தியங்களும், தேவனுடைய மனுஷ

னாகிய தாவீதின் கீதவாத்தியங்களும் அவர்களுக்கு இருந்தது. நடக்கப்போகிற மகத்துவமான ஆராதனையில் இவைகளை உபயோகிக்கப் போகிறார்கள். தாவீது ராஜாவின் காலத்திற்குப் பிறகு அநேக புது வாத்தியங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. யூதர்கள் தங்கள் சிறையிருப்பின் காலத்தில் பாபிலோனிலும், சூசானிலும் இவைகளை உபயோகப்படுத்தியிருந்தார்கள். தானியேலின் புஸ்தகத்தில் இவைகளைப்பற்றி வாசிக்கிறோம். நாகசுரம், கின்னரம், வீணைமுதலிய புது வாத்தியங்கள் நெகேமியாவின் காலத்தில் யூதருக்குள்ளே உபயோகமாகிவந்தது.

இந்தப் புது வாத்தியங்களிலொன்றையும் இந்த ஆராதனையில் உபயோகப்படுத்தினதாக நாம் பார்க்கிறதில்லை. தேவாலயத்தில் முதலாவது உபயோகித்த வாத்தியங்களையும், தாவீதுராஜாவுக்கு அருமையான வாத்தியங்களையும், தங்கள் முன் பிதாக்கள் உபயோகித்த கீதவாத்தியங்களையுமே அவர்கள் உபயோகித்தார்கள் (5 27). கீதவாத்தியக்காரர் மாத்திரமல்ல, எருசலேமைச் சுற்றிலுமுள்ள கிராமங்களிலுள்ள பாடகரும், கூட்டிச்சேர்க்கப்பட்டார்கள். ஆலயப் பாட்டுக்கூட்டம் பலப்படும்படியாகவும், ஆலயத்தில் பாடுகிறவர்களை நடத்தும்படியாகவும் இவர்கள் கூடி வந்தார்கள் (12. 29).

ஆராதனையில் பங்குபெறுகிறவர்களெல்லாரும் கூடினவுடனே, தெளித்துச் சுத்தமாக்கப்பட்டார்கள். ஆசாரிமாரும் லேவியரும் தங்களைச் சுத்தம் பண்ணிக்கொண்டு, ஜனங்களையும், கதவுகளையும் அலங்கத்தையும் சுத்தப்பண்ணினார்கள். சிவப்புக்கிடாரி ஒன்றை (எண். 19.) ஒரு ஆசாரியன் நகரத்துக்கு வெளியே கொண்டுபோய், அங்கே அதைக் கொன்று, ஒரு சட்டியில் அதின் இரத்தத்தைப் பிடித்து, அந்த இரத்தத்தை தேவாலயத்திற்கு முன்பாக ஏழுதரம் தெளிப்பான். பிற்பாடு அதின் மாமிசத்தை நகரத்திற்கு வெளியே தான் சுட்டெரித்து, அதின் சாம்பலை பத்திரமாய்ச் சேர்த்துத் தண்ணீரில் கலக்கி, ஒரு பாத்திரத்தில் வைத்துக்கொண்டு, ஆசாரியரும் லேவியரும் பட்டணத்திற்குள்ளே போய், முதலாவது தங்கள்மேலும், பிறகு பட்டணத்திலுள்ள ஆண்கள், பெண்கள் பிள்ளைகள்மேலும் தெளித்து, பிறகு அலங்கத்தின்மேலும் கதவுகளின்மேலும் தேவனுக்கென்று பிரதிஷ்டையாக்கப்படவேண்டியது. எல்லாம் ஆயத்தமாய்ச் சுத்திகரிப்புப் பூரணமானவுடனே, கீதவாத்தியக்காரர் பெரிய கூட்டமாக, ஆலயப் பிரகாரங்களில் வந்து கூடினார்கள். ஆசாரியர் எக்காளமூதும் பெருந்தொனி ஒருபக்கமும், வெள்ளங்கி தரித்த கீதவாத்தியக்காரர் இன்னிசையாய்ப் பாடும் இனிமையான சத்தம் இன்னொரு பக்கத்திலும் கேட்கிறது. எல்லாம் ஒழுங்கானவுடனே



நகரத்தின் மேல் பாகத்திலுள்ள பள்ளத்தாக்கின் வாசலுக்கு ஒழுங்காய் நடந்துபோகிறார்கள். இங்கே நெகேமியா அவர்களை இரண்டு பாகமாகப் பிரிக்கச் சிங்காரமாக ஊர்கோலம் வரும்படியாக அலங்கத்தின்மேல் பிரிந்து போகிறார்கள். ஒரு கூட்டத்தார் வடக்கேயும், மற்றக் கூட்டத்தார் தெற்கேயுமாக நகரத்தைச் சுற்றிவந்து எதிர்ப்பக்கத்தில் சந்திக்கும்படி ஒழுங்கு செய்துகொண்டார்கள். ஜனங்களெல்லாரும் கீழே நின்றுகொண்டு பாடகரும் கனவான்களும், ஆசாரிமாரும் நீண்ட வெண்ணுடை தரித்து இரண்டுபாகமாக அலங்கத்தின்மேல் போவதைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

(இன்னும் வரும்.)



## THREE BOYS AND A CLOCK

## மூன்று பையன்களும் ஒரு கடியாரமும்

ஒரு வீட்டிலே மூன்று பையன்கள் இருந்தார்கள். இம்மூவரும் பட்டணத்துக்குள் போய் சரியான கடியாரத்தில் பார்த்து வரும்படி அனுப்பப்பட்டார்கள். ஒருவன் போய்வந்து மணி இப்போது பன்னிரண்டாயிற்றென்றான். இவனே பெரியவனானபோது ஒரு புஸ்தக வியாபாரியாயினான். இன்னொருவன் வந்து இப்போதுதான் பன்னிரண்டாகி மூன்று நிமிஷமாகிறதென்றான். மூன்றாவது பையன் மணியைப் பார்த்துவிட்டுப் போய் மறுபடியும் கடியாரத்தண்டை வந்து சேர காலம் எவ்வளவு என்று அறிந்துவந்து தற்சமயத்தில் மணி பன்னிரண்டாகி பத்து நிமிஷமும் பதினைந்து வினாடியுமாகிறதென்றான். இவன் பெரியவனானபோதோ ஒரு பெரிய பெயர்போன சாஸ்திரியானான். ஆகையினால் அற்பசொற்பமான வேலைகளிலிருந்து வேலையாளின் வளர்ச்சியை அறியலாம்.

## ANSWERS TO RIDDLES AND PUZZLES

### மார்ச் மாசத்தில் கொடுத்த விடுகதைகளின் விடைகள்

1. *a.* தண்ணீரில் ஜீவராசிகள் தோன்ற.
   *b.* தண்ணீரில் ஜீவனுள்ள குஞ்சுகள் தோன்ற.
2. *a.* விசேஷத்தின் பொருட்டு.
   *b.* விசேஷத்தின் பொருட்டு.
3. *a.* கைப் பாடாய்.
   *b.* கைப் பாடாய்.
4. *a.* மணவாட்டி மணங்களிக்க.
   *b.* மணவாட்டி மணங்களிக்க.

### ஏப்ரல் மாசத்தில் கொடுத்த விடுகதைகளின் விடைகள்

1. மத்தளம்.
2. (1) கோழிமுட்டை.
   (2) தேங்காய்.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1916 ஸு ஜூன் மீ

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வி. | உபா. | 9. 1—6 | 11 | ஞா. | உபா. | 16. 1—8 | 21 | பு. | உபா. | 28. 15—25 |
| 2 | வெ. | „ | 9. 7—21 | 12 | தி. | „ | 16. 9—15 | 22 | வி. | „ | 29. 1—9 |
| 3 | ச. | „ | 9. 22—29; 10. 1—5 | 13 | செ. | „ | 16. 16—22 | 23 | வெ. | „ | 29. [illegible]—29 |
| 4 | ஞா. | „ | 10. 6—22 | 14 | பு. | „ | 18. 15—22 | 24 | ச. | „ | 30. 1—10 |
| 5 | தி. | „ | 11. 1—9 | 15 | வி. | „ | 19. 1—10 | 25 | ஞா. | „ | 30. 11—20 |
| 6 | செ. | „ | 11. 10—21 | 16 | வெ. | „ | 19. 11—21 | 26 | தி. | „ | 31. 1—8 |
| 7 | பு. | „ | 11. 22—32 | 17 | ச. | „ | 26. 1—11 | 27 | செ. | „ | 31. 9—18 |
| 8 | வி. | „ | 12. 1—12 | 18 | ஞா. | „ | 26. 12—19 | 28 | பு. | „ | 31. 19—30 |
| 9 | வெ. | „ | 15. 1—11 | 19 | தி. | „ | 27. 1—10 | 29 | வி. | „ | 32. 1—14 |
| 10 | ச. | „ | 15. 12—23 | 20 | செ. | „ | 28. 1—14 | 30 | வெ. | „ | 32. 15—32 |

C. L. S. PRESS, MADRAS—1916

REGISTERED 7-JUL 1916 MADRAS

# மாதர் போதினி

No. 223 ஜூலை 1916 No. 7

## WOMEN'S WORK IN THE MADURA EVANGELISTIC CAMPAIGN *(Continued)*

## மதுரையில் நடக்கிற சுவிசேஷ படைமுயற்சி—அதில் ஸ்திரீகள் செய்கிற வேலை

(தொடர்ச்சி)

### III. இனிமேல் செய்யப்படவேண்டிய வேலை

### கிறிஸ்துவின் படை ஜில்லாமுழுவதையும் தாக்க ஆயத்தப்படல்

1915-வருஷ படைமுயற்சியின் நன்மைகள் என்னவென்றால்,

1. கிறிஸ்தவர்கள் உயிரடைந்து தங்கள் உத்தரவாதத்தை ஒருவாறு உணர்ந்தார்கள்.

2. ஜெபிக்கவும் ஊழியஞ்செய்யவும் புதியஆவல் உண்டானது.

3. ஒருக்காலும் சுவிசேஷ வேலைசெய்யாத அநேகர் திட்டமான வேலைசெய்யப் பழகினார்கள்.

4. ஹிந்துக்களோடு உறவாடி சிநேகம் செய்து, அவர்கள் நம்பிக்கையைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

5. ஹிந்துக்கள் கூட்டங்களுக்கு வந்ததும், காட்டின ஆசை உணர்வைப்பார்த்து கிறிஸ்தவர்கள் விசுவாசத்தில் வளர்ந்திருக்கிறார்கள்.

6. போனவருஷத்து அனுபோகம் தவறுதல், சித்தி, அடுத்த இரண்டுவருஷ வேலையை நடத்தும் விதம் வழியை தெளிவாக்கியிருக்கிறது.

VOL. XXXI.

என்றாலும் செய்யப்பட்டது கொஞ்சம், இன்னும் செய்யப்பட வேண்டியது அதிகம் என்றே நினைக்கிறோம்.

மதுரைப் பட்டணத்தில் மறுபடியும் 1917-ம் வருஷம் போன வருஷம் நடந்தமாதிரி பெரிய விசேஷித்த கூட்டங்கள் நடத்தப்படும். அந்தத்தடவை வரவேண்டிய ஐயாயிரம் ஆட்களும் முழுவதும் தனித்தாட்களால் ஆயத்தப்படுத்தப்பட்டு, வேதத்தைப்படித்து ஆராய்ந்து வருகிறவர்களாகவே இருக்கவேண்டுமென்பது பட்டண கமிற்றியின் தீர்மானம். இதை மனதில் வைத்து, தனித்தாட்கள் கையெழுத்துப்போட்ட எழுநூறு பேருக்குள்ளேயும் இன்னும் வேதபாட வகுப்புகளுக்குப் புதிதாய் வந்து சேருகிறவர்களுக்குள்ளேயும் ஒழுங்காய் வேலைநடத்த யோசித்தும், செய்தும் வருகிறார்கள். இந்த வேதபாட வகுப்புகளுக்கேற்ற புஸ்தகங்களும் அச்சிடப்பட்டிருக்கின்றன. இன்னும் இவர்களுக்கு பட்டணத்தின் பல பாகங்களிலும் உபந்நியாசங்களும் பிரசங்கங்களும் நடத்தப்பட்டு வருகிறது. ஸ்திரீகளுக்குள்ளே உணர்வடைந்த முந்நூறுபேருக்குள்ளே தொடர்ச்சியாய் வேலை நடக்கிறது. வெகுகாலம் வேதசத்தியங்களைப் படித்து அறிந்து விசுவாசமுள்ள ஸ்திரீகளுக்கு ஞானஸ்நானம் பெற்று இயேசுவை அறிக்கைபண்ணுவதின் அவசரம் காட்டப்பட்டு வருகிறது.

இந்த வருஷம் மதுரை ஜில்லாவிலுள்ள கிராமங்களில் படைமுயற்சி நடத்தவேண்டுமென்று ஜில்லா படைமுயற்சி கமிற்றி தீர்மானித்தார்கள். ஆறு விசேஷித்த இடங்களும் தெரிந்துகொள்ளப்பட்டன. அவையாவன: வடக்கு சர்க்கிளைச் சேர்ந்த திண்டுக்கல் வத்தலக்குண்டும், மத்திய சர்க்கிளைச் சேர்ந்த திருமங்கலம், கிழக்கு சர்க்கிளைச் சேர்ந்த மேலூர் திருப்புவனம், தென் சர்க்கிளிலுள்ள அறுப்புக்கோட்டை இங்கே முடிவான கூட்டங்கள் ஆகஸ்டு, செப்டெம்பர் மாதங்களில் நடக்கும். அதற்கு முன்னதாக மதுரைப்பட்டணத்தில் நடந்ததுபோல முதலாவது கிறிஸ்தவர்கள் ஊழியஞ்செய்ய ஆயத்தப்படவேண்டும். இங்குள்ள சபைகளை எவி எழுப்பக் கனம் திரோசி பண்டிதர் விசேஷித்த கூட்டங்கள் நடத்தப்போகிறார். இன்னும் சென்னைப்பட்டணத்திலுள்ள கனம் பரமானந்தம் போதகரும் சந்திக்கப்போகிறார். தனித்தாள் வேலையாட்களைப் பழக்க கனம் சித்தர் என்பவர் வரப்போகிறார். கிறிஸ்துமார்க்கத்திற்கு அனுசரணையான கிராமங்கள் தெரிந்துகொள்ளப்பட்டு அவைகளில் விசேஷித்த வேலை நடக்கிறது. இது விஷயமாக ஸ்திரீகள் வேலை என்ன என்பதைப்பற்றி, ஸ்திரீகள் வேலை தலைவர் கனம் சவிற் அம்மாள் சில ஒழுங்குகள் செய்திருக்கிறார்கள்.



முதலாவது முயற்சி என்னவென்றால், மதுரை ஜில்லாவிலுள்ள இருபத்தையாயிரம் கிறிஸ்தவர்களில், ஐயாயிரம்பேர் ஸ்திரீகள்—இவர்களில் ஆயிரத்து எண்ணூறுபேர்தான் வாசிக்கக்கூடும். மற்ற மூவாயிரத்து இருநூறுபேர் வாசிக்கத் தெரியாதவர்கள். ஸ்திரீகள் வாசிக்கத் தெரியாதவர்களானால் வேதஅறிவில் குறைவுள்ளவர்களாய்த்தான் இருப்பார்கள். அப்படியானால் படைமுயற்சி வேலையில் எப்படி பங்கெடுக்கக்கூடும்? எப்படி ஹிந்துக்களுக்கு சாட்சி சொல்லக்கூடும்? இது கிறிஸ்துமார்க்கத்திற்குக் குறைவும் வெட்கமுமான காரியம். ஆகையால் முதலாவது இந்த ஸ்திரீகளைப் படிப்பிக்கவேண்டும். வேதத்தை வாசிக்கவேண்டும். பின்புதான் அவர்கள் ஊழியஞ்செய்யக்கூடும். ஆகையால் ஸ்திரீகளின் கமிற்றி தலைவர் மதுரைஜில்லா முழுவதிலுமுள்ள படித்த கிறிஸ்தவ ஸ்திரீகளுக்கு ஒரு விருது வாக்கியத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

## 'EACH ONE TEACH ONE'

'ஒவ்வொருவரும் இன்னொருவருக்குப் படிப்பிக்கவும்.'

படித்த ஒவ்வொரு ஸ்திரீயும் படிப்பில்லாத இன்னொரு ஸ்திரீக்கு இரண்டு வருஷத்திற்குள் அவள் வேதத்தை வாசிக்கத்தக்கதாக வாசிப்பு சொல்லிக்கொடுக்கத் தீர்மானம் செய்யவேண்டும். வாசிப்பு சொல்லிக்கொடுக்கும்போதே சில வேதசரித்திரங்கள், வசனங்கள், பாட்டுகள் கற்றுக்கொடுக்கவேண்டும். அப்படிப் படிப்பிக்கப்பட்ட சகோதரி இன்னொருத்திக்கு இவைகளைப் படிப்பிக்கவேண்டும். இவ்விதமாக எல்லாரும் பிரயாசப்பட்டால் மதுரை ஜில்லா ஸ்திரீகளின் நிலைமையில் அதிசயப்படத்தக்க மாறுதல் ஐந்து வருஷங்களில் உண்டாகும். சிலர் இந்த விருதுவாக்கியப்படி செய்ய துவக்கிவிட்டார்கள். இப்படிப் படிப்பிக்கிறவர்களுக்கு உதவியாக வேதபாடங்களடங்கிய ஒற்றைத்தாள்களும், மாணாக்கிகளின் தேர்ச்சியைக்குறிக்கும் டாப்புகளும் தயார்செய்யப்பட்டிருக்கின்றன. மதுரை ஜில்லாவின் ஆயிரத்து எண்ணூறு படித்த ஸ்திரீகளும் இப்படிச் செய்வதே எங்கள் வாஞ்சையும் விண்ணப்பமுமாயிருக்கிறது.

இரண்டாவது திட்டமான முயற்சி என்னவென்றால், மதுரை நகரில் நடந்த படைமுயற்சியைப்பார்த்த, அதில் பங்குபெற்ற கிறிஸ்தவ சகோதரிகள் இந்த ஆசீர்வாதங்களைக் கிராமங்களிலுள்ள சகோதரிகளுக்குக் கொண்டுபோகவேண்டும். ஒருவாரம் அல்லது நாலு, ஐந்து நாட்கள் சிறு கூட்டங்களாகக் கிறிஸ்தவர்களுள்ள கிராமங்களுக்குப்போய் அவர்களுக்கு, சில வேதபாடங்கள் சொல்லிக்கொடுத்து, படைமுயற்சியாவது என்ன, அவர்கள் என்ன உதவிசெய்ய

லாம் என்பதைக்காட்டி, அவர்களுக்குள் வேதவாசிப்பு ஜெபக்கூட்டங்கள் ஏற்படுத்தவேண்டும். படிப்பறியாதவர்கள் படிக்கும்படி துவக்க ஆசையுண்டாக்கி ஒழுங்குசெய்யவேண்டும். அங்குள்ள உபாத்திமார் உபதேசிமார் மனைவிகளுக்குத் தனித்தாள்வேலை, ஜெபக் கூட்டங்கள் நடத்தும் முறை, மதுரையில் நடந்த வேலைகளைப்பற்றிச் சொல்லி உதவிசெய்யவேண்டும். பின்பு ஹிந்துக்களின் நடுவிலும் வேலைசெய்து அவர்களைப் படைமுயற்சிக் கூட்டங்களுக்கு ஆயத்தப்படுத்தவேண்டும். இந்த வேலையைச் செய்ய சிலாக்கியங்களைப் பெற்ற சகோதரிகள் யாவரும் எழும்பிவர இது நற்சமயம்.

மூன்றாவது முயற்சி ஜனசங்கை ஊழியம்.

கிராமங்களிலே ஜனசங்கை ஊழியம் கிறிஸ்தவர்கள் செய்வார்களானால், அது ஹிந்துக்களின் சிநேகத்தைப் பெற்றுக்கொள்ள சுவிசேஷம் அவர்களில் இடம் பெறச்செய்ய ஏற்ற வழியாயிருக்கும். என்ன ஜனசங்கை ஊழியம் செய்யலாம் ?

1. முன்பார்த்தபடி படித்த கிறிஸ்தவள் படியாத கிறிஸ்தவளைப் படிப்பித்தல்.

2. படிப்பில்லாத ஹிந்து ஸ்திரீயைப் படிப்பித்தல்.

3. இராப்பள்ளிக்கூடம் ஏற்படுத்தல்.

4. வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாசித்தல்; எழுதத் தெரியாதவர்களுக்கு எழுதிக்கொடுத்தல்.

5. தையல் தைத்துக்கொடுத்தல்.

7. சிறு பிள்ளைகளை விளையாட்டுக்காட்டல்.

8. வியாதிக்காரருக்கு உதவிசெய்யல்.

9. மதுவிலக்கு விஷயமாய் உழைத்தல்.

10. ஹிந்துப் பிள்ளைகள் பெண்களை கோவிலுக்கு அழைத்து வரல்.

11. சுகாதார விஷயங்களைப்பற்றி போதித்தல்.

வீடுகள், கிராமம் சுத்தமாயிருக்கும்படி உதவிசெய்தல் முதலியவைகளே.

மொத்தத்தில் கிறிஸ்தவர்களாகிய நாம் அடைந்திருக்கும் சரீரமானது, ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை நமது சகோதரருக்கு உதாரத்துவமாய்க் கொடுக்க ஆசையும் ஆயத்தமுமுள்ளவர்களாய் விளங்கவேண்டும்.

மேரோசைச் சபியுங்கள், அதின் குடிகளை சபிக்கவே சபியுங்கள் என்று கர்த்தருடைய தூதனானவர் சொல்லுகிறார், அவர்கள் கர்த்தர் பட்சத்தில் துணைநிற்க வரவில்லை; பராக்கிரமசாலிகளுக்கு விரோதமாய் அவர்கள் கர்த்தர் பக்ஷத்தில் துணைநிற்க வரவில்லையே.



ஜனங்களுக்குள்ளே தங்களை மனப்பூர்ணமாய் ஒப்புக்கொடுத்த இஸ்ரவேலின் அதிபதிகளை என் இருதயம் நாடுகிறது.

கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்.

G. அன்னாள்.

ஊசி பெரி கோயில் வேதபோதனாசாலை.

## EDITOR'S NOTES

## பத்திராதிபரின் நானாவிதக் குறிப்புகள்

A Muslim Girl's Scholastic Success. 'ஆப்லுல் மாத்தின்' என்கிற பத்திரிகையின் பத்திராதிபரின் மூத்த குமாரத்தியாகிய பீகம் சுல்தான் என்கிற சிறுமி மகமதிய பெண்களுக்குள் முதலாவது Cambridge Senior Local பரீட்சையில் தேறியிருக்கிறாள். பதினாறு வயதுள்ள இப்பெண் ஒரு பள்ளிக்கூடத்திற்கும் போனவளல்ல; அந்தப்புரத்திலிருந்தே தன் பாடங்களை யெல்லாம் கற்றாள். இங்கிலீஷ், பிரஞ்சு, கீதசாஸ்திரம், கணிதம், பூமிசாஸ்திரம், சரித்திரம், இயற்கை பூமிசாஸ்திரம், பிராணிதர் மருண வித்தை, சுகாதார விளக்கம் முதலிய பாடப் பொருட்களைப் பரீட்சைக்கு எடுத்துக் கொண்டாள். இதோடு இவளுக்கு உருது, பெர்சிய பாஷைகளிலும் தேற்சியுண்டு.

An Indian Lady Vakil. Miss Ragina Guha என்கிற ஒரு கல்குத்தா மாது, M. A., B. L. பரீட்சைகளில் தேறி வக்கீல் வேலை செய்யச் சம்மதங் கொடுக்கவேண்டுமென்று அலிபூர் ஜில்லா நியாயாதிபதிக்கு மனு செய்துகொண்டிருக்கிறார்.

இது விஷயமாய்க் கல்குத்தா ஐகோர்ட்டார் தங்கள் கடைசித் தீர்மானத்தைச் சீக்கிரத்தில் வெளியிடுவார்கள்.

Women Medical Graduates. சென்ற வைத்திய பரீட்சையில் Miss Lazarus, Miss Lucy என்கிற இந்திய மங்கையர் இருவர் M. B., B. S. பரீட்சையில் விசேஷித்த விதமாய்த் தேறினதாக அறியச் சந்தோஷப்படுகிறோம். இதில் Miss Lazarus மருத்துவ அப்பியாச திறமையின்பொருட்டு சாஸ்வதி முத்திரை பதக்கம் பெற்றவர்.



16142



## SOME INDIAN BIRDS (*Continued*)

## பரதகண்டத்து பட்சி வகைகள் (தொடர்ச்சி)

### II

முதலாம் அத்தியாயத்தில் கூளி, பருந்து, காகம் ஆகிய இந்து தேசத்து மூன்று சாதாரணமான பக்ஷிகளைக் குறித்துப் பார்த்தோம். இம்மாதத்தில் நமது வீடுகளைச் சுற்றியும், ரஸ்தாக்களிலும் நாம் அடிக்கடி பார்க்கிற மூன்று அழகான பறவைகளைப்பற்றிக் கவனிப்போம்.

நாம் சுலபமாய்ப் படித்துக்கொள்ளக்கூடிய ஒரு பக்ஷிக்குக் கருவாட்டு வாலி என்று பெயர். ஆங்கிலத்தில் காக வரச (King-Crow) என்று சொல்லுவார்கள். படம் பார்க்கவும். அது நிஜத்தில் காகமேயல்ல; பளபளப்பான அழகிய கரிய நிறத்தினுன் அது காகத்தை ஒத்திருக்கிறது. காக வரசு ஒரு சிறு பட்சி. அது ஒரு அடி நீளமிருந்தாலும் அதின் வால் அதில் பாதி நீளமிருக்கிறது. அதின் வாலைப் பார்த்தே நாம் இந்தப் பறவையை அறிந்துகொள்ளலாம்.

கருவாட்டு வாலியை நாம் பட்சிகளின் போலீஸ்காரனென்று சொல்லலாம். கம்பத்தின்மேலாவது, மாத்தின்மேலாவது, விசேஷமாய் மின்சாரக் கம்பிகளின்மேல் உட்கார்ந்து இதர பறவைகளை ஒழுங்காய் வைப்பது இதற்கு அத்தியந்த இஷ்டம். அது அதிக தைரியமான பட்சியாகையால் காகங்களையும் எதிர்த்துச் சண்டை செய்யும். உட்கார்ந்து தன் போலீஸ் வேலையைச் செய்யப் பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் வெடுந்தூரமான தந்திக் கம்பிகள் போட்டிருப்பதால் அது அவர்களுக்கு நன்றியுள்ளதாய் இருக்கவேண்டுமென்று ஒருவர் சொல்லியிருக்கிறார்.



கருவாட்டு வாலி பூச்சிகளைப் பிடித்துத் தின்னுகிறது. தந்திக் கம்பிகளின்மேல் உட்கார்ந்திராத சமயங்களில் ஒரு பசுவின் முதுகின் மேலாவது ஒரு கழுதையின் முதுகின்மேலாவது உட்கார்ந்து இரை தேடுகிறதைப் பார்க்கலாம். மழை பெய்துவிட்டபிறகு ஆகாயம் தும்பிகளாலும், மற்ற பூச்சிகளாலும் நிறைந்திருக்கும்போது, கருவாட்டு வாலியைக் கவனித்தால் அது ஒரு மாத்தின்மேலுட்கார்ந்திருந்து, திடீரென்று பறந்து ஒரு பூச்சியைப் பிடித்துத் தன் நீண்ட வாலின் உதவியால் வெகு சமர்த்தாய்த் திரும்பி முன் உட்கார்ந்திருந்த அதே இடத்துக்கு மறுபடியும் வந்து, இன்னொரு பூச்சிக்காகக் காத்திருக்கும். கருவாட்டு வாலி அதிகாலையில் பொழுது விடிவதற்கு முன்னே பாடுகிறது. விசேஷமாய் ஆனி, ஆடி மாதங்களில் அதைப் பார்த்திருக்கிறேன். இந்த வருஷத்தில் நீ அதைக் கவனித்துப் பார். அதின் பாட்டைத்தான் காலையில் முதலாவது நீ கேட்பாய்.

கருவாட்டு வாலியைப்போலவே வெகு சாதாரணமான இன்னொரு பட்சிக்குப் பூச்சி தின்னுகிற பட்சி (Green Bee Eater) என்று பெயர். இது கருவாட்டு வாலியைவிட அதிகச் சிறியது. ஆனால் அதைப்போலவே இதற்கும் தந்திக் கம்பிகளின்மேலும், வேலிகளின் மேலும் உட்கார்ந்து தான் தின்னுகிற பூச்சிகளைப் பிடிப்பது இஷ்டம். அதின் அழகிய பச்சை நிறத்தினாலும், மெலிந்து வளைந்த அதின் அலகினாலும், அதின் வாலின் நுனியிலிருக்கிற இரண்டு மெலிந்த இறகுகளினாலும் நீ இதை யறியலாம். அதின் தோகையில் எத்தனை வர்ணங்களிருக்கிறதென்று கவனித்துப்பார்.

(Green Bee Eater) அதிகமாய்ப் பாடுகிறதில்லை. என்றாலும் இச்சாதி பறவை கூட்டம் வந்தடையும் ஒரு ஆலமாத்தைப் பார்த்திருக்கிறேன். பொழுது அஸ்தமனத்தில் நான் அந்த வழியாய்ப் போகும்போதெல்லாம் நூறு கணக்கான சிறு மணிகள் அடித்தாற்போல் அக்குருவிகள் கீச்சிடுகிறதைக் கேட்டிருக்கிறேன்.

நாம் கவனிக்கப்போகிற மூன்றாவது பறவை எல்லாவற்றையும் விட அழகானது. அது மந்தமைனா (Blue Roller) என்று சொல்லப்படும் ஒரு பெரிய குருவி. புகைவண்டியில் போகும்போது ஒரு பெரிய மந்தமான பட்சி தந்திக்கம்பிகளின்மேல் அசைவற்று உட்கார்ந்திருப்பதை நீ கண்டதில்லையா? தோற்றத்திற்கு மந்த நிறமாயும் விரும்பப்படத்தகாததாயுங் காணப்படுகிறது. புகைவண்டி சந்தடியினால் பயமுண்டாகும்போது திடீரென்று கிளம்பி, கரிய இந்திர நீலக்கோடுகளோடு சேர்ந்த வெண்ணீலமான தன் அகன்ற செட்டைகளைக் காண்பிக்கிறது. சாயங்காலத்தில் அமைதலான ரஸ்தாவில்

உலாவப் போகும்போது இந்தப் பட்சிகளில் இரண்டொன்று புழுதியில் உட்கார்ந்திருந்து சமீபித்தவுடனே கிளம்பிப் போகிறதைப் பார்க்கலாம். இந்தப் பட்சி பாரசீக வளைகுடாவிலும் மேற்கே சின்ன ஆசியாவரையிலுங் காணப்படுகிறது. பவுல் தர்ஸு பட்டணத்தில் சின்ன பையனாயிருந்தபோது இப்பட்சியைப் பார்த்திருக்கலாம். இம்மாதம் இப்பட்சிகளின் தோற்றத்தையுங் குரலையுங் கவனிப்பதோடு அவைகளின் வழக்கங்களையுங் கவனிக்கப் பிரயாசப்படு. அடுத்த மாதத்தில் இன்னுஞ் சில பட்சிகளைப்பற்றிச் சொல்லுவேன்.

A. B. Van Doren.

## THE NEW CREATION. Chap. I. A MODEL HUSBAND

## புது சிருஷ்டி

### அத்தியாயம் I.

### மணவாள சிங்கம்

'சிங்கம்' என்று தனக்குப் பேர் வைத்துக்கொள்ளுகிறவன் அல்ல: சிங்கமாகத் தன்னை ரூபித்துக் காட்டுகிறவனே சிங்கம். உலகத்தில் பெரும் உபகாரம் செய்த மனுஷர் பேர் வெளிக்கு வருகிறதில்லை. இங்கிலாந்தில் ரடிக்ஷ் (Raddich) என்ற ஒரு சிறு கிராமத்தில், ஊசி செய்யக் கண்டுபிடித்த கொல்லன் பேரை மறைத்துப் போட்டவர்கள் செய்த அநியாயத்துக்கு யார் ஈடு செலுத்தக்கூடும்? மனுக்குலம் முழுவதும் இங்கிலீஷ்காரருக்கு நன்றி செலுத்த வேண்டியது பீரங்கிக் குண்டுகளுக்காக அல்ல, ஊசிக்காகவே. அப்படியே மாடு மேய்க்கும்போது, மாப்பட்டையின் பாலால் தன் பேரைக் கையில் ஜான் (John Gooseíleische) என்று அச்சுவடிவமாய்ப் பச்சை குத்தி உள்ளூர்க் கணக்கனாகிய (Castor) காஸ்றருக்கு இரகசியம் சொல்லக் காரணமாயிருந்தவன் பேர் யாருக்குத் தெரியும்?

'ஸ்திரீகளுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவளும், எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள்' என்று சொல்லத்தக்க மேன்மையுடையவளுமான, ஒரு மாதுக்குத் தேவனே தெரிந்தெடுத்த மாப்பிள்ளை: 'புருஷர்களில் மகா யோக்கியன்' என்று தடையின்றிச் சொல்லலாம். பழைய ஏற்பாட்டின் பொழிப்பாகிய மத்தேயு முதலாம் அதிகாரத்தில் இரட்டித்து வருகிற இரண்டுபேரைத் தள்ளி 40 ஆணுக்கு 4 பெண் பேர் வருகிறது. அதாவது 100-க்கு 10 என்ற மதிப்பு. தமிழ் பழமொழியோ 'ஐம்பது வயது பெண்ணும் சரி,



ஐந்து வயது ஆணும் சரி' என்று சொல்லுகிறது. இரக்ஷண்ய மார்க்கத்திலோ! 'ஆண் என்றுமில்லை; பெண் என்றுமில்லை', 'அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலையிலே தரித்திருக்கக்கடவன்' என்று பேசுகிறது. இங்கிலாந்துக்கு, அரும் பெரும் புகழ்ச்சி கிடைத்தது பெண்ணரசு காலங்களில் எலிசபெத்து மகாராணியாரும், விக்டோரியா மகாராணியாரும் வேண்டாம் என்று சரித்திரத்தை விட்டெடுத்துப் போடுங்கள். இப்படிச் செய்யத் துணிகிற மூடனுக்குக் கிடைப்பது அவமானமே. ஆகவே, ஸ்திரீ குலத்தைக் கேவலமாய் எண்ணாத மகா புருஷனாகிய தாவீதின் குமாரனாகிய யோசேப்பின் பேரை விட்டு விட்டு எழுதினால், இந்தப் புஸ்தகத்துக்கு மதிப்பிராது என்று நினைத்து அவரையிட்டு இங்கே எடுத்துரைப்போம். கற்பலங்கார காருண்யனாகிய அவருடைய இலக்ஷணங்களில்

1. எந்தக் காரியத்தையும் ஒரே அடியில் செய்து முடிக்கிறது.

ஆவிக்குரிய பாழான தேசமாகிய (சகரி. 14: 18) எகிப்துக்கானாலும் சரி; அங்கிருந்து தேவனுடைய மந்தையைப் பாழாக்குகிற துஷ்ட மிருகங்களுக்குப் போக்குவரத்துக் கிடமான மகா 'ராஜ பாதைகளினருகே' துளிர்த்த தழைகள், செடிகள், கொடிகள் நிறைந்த நாசரேத்துக்கானாலும் சரி.

(இன்னும் வரும்.)

## THE KING'S CUP-BEARER *(Continued)*

## ராஜாவுக்குப் பானங்கொடுப்போன் (தொடர்ச்சி)

### XII. அத்தியாயம்

### பரிசுத்த நகரம்

ஊர்கோலம் வந்தவர்களின் வரிசை பின்வருமாறு: முதலாவதாகக் கீத வாத்தியக்காரர் தங்களுடைய பற்பல வாத்தியங்களோடு எல்லாருக்கும் முன்பாக நடந்துபோனார்கள். அதன்பின் பிரபுக்களும் நிவாசர்களும் தங்களுடைய தேசாசாரப்படி மினுக்கான உடை தரித்தவர்களாய்ப் போகிறார்கள். அவர்களுக்குப் பின்னால் ஏழு ஆசாரிமார் எக்காளம் பிடித்தவர்களாய்ப் போகிறார்கள். ஒரு கூட்டத்தை நெகேமியாவும் மற்றக் கூட்டத்தை எஸ்றாவும் நடத்துகிறார்கள். எஸ்றாவின் பவனிக் கூட்டத்தார் தென் பக்கமாய்ப் போய்க் கிழ்பக்கமாய்த் திரும்பிவந்தார்கள். குப்பைகளை அப்புறப்படுத்தின இடமாகிய குப்பை மேட்டு வாசலைக் கடந்து சீலோவாம் குளத்துக்கு



எதிராயுள்ள ஊற்றுவாசலுக்கு வந்து சீலோவாம் கோபுரத்திலுள்ள படிகளின் வழியாய்க் கீழே இறங்கினார்கள். இங்கே அவர்கள் சீலோவாம் குளத்தண்டையிலுள்ள சட்டடங்களையும், வலு சர்ப்பத் துறவையும் பிரதிஷ்டை பண்ண வந்திருக்கலாம்; இங்கேயிருந்து படிகளின் வழியாய் மறுபடியும் அலங்கத்தின்மேல் ஏறி தாவீதின் நகரம் என்றழைக்கப்படுகிற அந்தப் பாகத்திற்கு வந்தார்கள். அங்கேதான் இருகூட்டத்தாரும் சந்திக்குமிடமாய் இருந்தது. அவர்கள் அங்கே சந்தித்து, நெகேமியாவின் கூட்டத்தார் பள்ளத்தாக்கின் வாசலைக் கடந்து வடபக்கமாய்த் திரும்பித் சூளையின் கொம்மையைக் கடந்து அகழ் மதிலைக் கடந்துபோனார்கள். அலங்கத்தின் இந்த பாகமாத்திரம் பழைய கட்டடமாயிருந்தது. பிற்பாடு அங்கேயிருந்து எப்பிராயீம் வாசலையும் பழைய வாசலையும் அருளியேல் கொம்மையையும் மேயா கொம்மையையும் ஆட்டுவாசலையுங் கடந்து காவல் வீட்டு வாசலண்டையில் நின்றார்கள். இந்த வாசல் சிறைச் சாலைக்குப் போகும் வழியின்மேலிருந்தது. அநேகமாய்த் தண்ணீர் வாசலண்டை இரண்டு பவனிக் கூட்டத்தாரும் சந்திக்கிறார்கள். ஆலயப் பிராகாரத்துக்குள்ளே போகிறார்கள். இருதிறத்தாரின் சங்



கீத வாத்தியங்களும் மகா இனிமையாய் முழங்குகின்றன. இரண்டு பாடகக் கூட்டத்தாரும் இசைந்து மகா கம்பீரமாய்ப் பாடுகிறார்கள். இந்த நாளில் ஜனங்களெல்லாரும் சந்தோஷப்பட்டபோது நூறு வருஷங்களுக்கு முன்னால் இன்னும் சிறையிலிருக்கும்போது தானியேல் தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்ட வார்த்தைகளையும் நினைவு கூர்ந்து இருப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை. தானியேல் தீர்க்கதரிசி யூதர்கள் சிறையிருப்பிலிருந்து வந்து எருசலேமைக் கட்டுவார்கள் என்று முன்னறிவித்தார். அவைகளின் வீதிகளும் அலங்கங்களும் மறுபடியும் கட்டப்படும்; ஆனாலும் இடுக்கமான காலங்களில் அப்படியாகும். நெகேமியாவின் வேலை தானியேலுக்கு வெளிப்படுத்தப்பட்டது. சன்பல்லாத்தைப் பற்றியும் தொபியாவைப் பற்றியும் இன்னும் யூதர்களைத் துன்பப்படுத்தின மற்றவர்களைப் பற்றியும் சொல்லியிருக்கிறார். மறுபடியும் தீர்க்கதரிசி சொல்லுகிறார்: 'எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவது முதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும் ஏழு வாரமும், அறுபத்திரண்டு வாரமும் செல்லும்.' கிறிஸ்துவாகிய இஸ்ரவேலின் ரட்சகர் வருவதற்கு இன்னும் கொஞ்சக்காலந்தானிருக்கிறது (தானி. 9. 25).

யூதர்கள் தங்களுக்குண்டாகப் போகிற நல்ல நாட்களை நினைத்தபோது எருசலேமின் களிப்பு வெகுதூரம் கேட்கப்பட்டதென்பது ஆச்சரியமல்ல.

## XIII. அத்தியாயம்

### வேலியில்லாமை

ஆகாயமானது நிஷ்களங்கமாய் ஜோதியமாயிருக்கிறது. தூரத்தில் பனிமூடி மலைகள் வெளியரங்கமாய்த் தெரிகிறது. சுற்றிலுமுள்ள சுத்த ஆகாயம் கிச்சிலி எலுமிச்சை மரங்கள் நிறைந்த தோட்டங்களிலிருந்து வரும் சுகந்த வாசனையாலும், சுற்றிலுமுள்ள ஆயிரக்கணக்கான லீலிப்புஷ்பங்களின் இனிய வாசனையாலும் நிறைந்தது. திர்ஷாதாவாகிய நெகேமியா மறுபடியும் சூசானுக்கு வந்துவிட்டார். முந்தின காலங்களைப்போல அவருடைய பாதங்கள் பாரஸீக ராஜதானியின் தெருக்களைக் கடந்து சென்றது. லீலிபட்டணத்தை விட்டு தன் சகோதரனாகிய ஆனானியோடு எருசலேமுக்குப்போய்த் தன்னால் கூடியமட்டும் அதின் அழிவைச் சீர்ப்படுத்த முயன்று எல்லாவற்றையும் சரிப்படுத்தி வர பதின்மூன்று வருஷங்கள் சென்றது. அவர் தம்முடைய வேலையை முடித்தவராய்த் திரும்பிவந்தார். அலங்கம் கட்டி முடிந்தது, வாசற்கதவுகள் போட்டாயிற்று. இடிந்துபோன

இடங்கள் கட்டியாயிற்று. முழு இடமும் பலமாய்க் காவல் செய்தாயிற்று. ஜனங்களெல்லாரும் தேவனோடு ஒப்புரவானார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, பாரஸீகத்திற்குப் புறப்படு முன்னதாக நகரமும் அதிலுள்ள யாவும் மகாதேவனுக்கென்று பிரதிஷ்டை செய்தாயிற்று.

நெகேமியாவும் சந்தோஷமுள்ளவரும் நன்றியுள்ளவருமாயிருந்தார். மலைமேல் கட்டப்பட்ட மாட்சிமையான அரண்மனையில் பிரவேசிக்கிறார். அங்கே தனக்குத் தன் சுயதேசத்திற்குப் போகும்படி உத்தரவுகொடுத்த நீண்ட கைகளுடைய இராஜாவாகிய ஆர்ட்டாசர்சகஸ் இருக்கிறார். அவருக்கு இவ்வளவு நாளும் நடந்த விசேஷங்களை எடுத்துரைக்கிறார். நெகேமியா மறுபடியும் அலங்காரமும் அந்தஸ்தும் பொருந்திய இடத்தின் மத்தியிலிருக்கிறார். சூசானுக்கும் எருசலேமுக்கும் எவ்வளவோ பேதமுண்டு. இப்போது அவருடைய வேலை முடிந்தது. பாரஸீகத்தில் இனி சுகக்ஷேமங்களை அனுபவிக்கலாம். பயம் கவலை இவைகளுக்கு நீங்கலாயிருக்கலாம். இச்சபையிலுள்ள எல்லாவிதமான இன்பங்களையும் அனுபவித்துக்கொண்டும் ராஜாவின் மேஜையில் பல தினுசுகளான நறுசுவை உண்டிகளைச் சாப்பிட்டுக்கொண்டுமிருக்கலாம். பதின்மூன்று வருஷங்களாகக் கஷ்டஜீவனம் செய்து அநேகவிதமான மோசங்களைக் கடந்து, கஷ்டங்களை மேற்கொண்டு, தன்னுடைய வேலையை மிகவும் சந்தோஷமாய் முடித்தபடியினாலே தன்னுடைய ஜீவியத்தின் மீதியான பாகத்தைச் சந்தோஷமாயும் சமாதானமாயும் ஆறுதலாயும் கழிக்கலாம்.

ஆனால் அப்படியல்ல, நெகேமியாவின் இருதயம் எருசலேமின் மேலேயே இருந்தது. தன்னுடைய முக்கியமான சந்தோஷத்தை விட எருசலேமைத்தான் விரும்பினார். அவர் அங்கேயிருந்து வந்த நாள்முதற்கொண்டு சங்கதிகள் அறிய ஆவலாயிருந்தார். ஆனால் ஒன்றும் தெரியவில்லை. அந்தப் பெரிய பாலைவனத்திற்கு ஊடே எந்தவிதமான தபால் போக்குவரவுமில்லை. இந்தக்காலத்திலிருக்கிறது போல நம்முடைய இருதயத்தின் அங்கலாய்ப்புக்குத் தந்திப் போக்குவரவுமில்லை. இவர் இல்லாத சமயத்தில் அங்கே என்ன நடக்கிறதோ? சமாரியா சும்மா இருக்கிறாளா? சன்பல்லாத்தும் தொபியாவும் இதுதான் நல்ல சமயம் என்று கண்டு, எருசலேமின் மேல் படையெடுத்து வந்துவிட்டார்களோ? ஜனங்கள் எப்படி இருக்கிறார்களோ? ஜனங்கள் எப்படி இருக்கிறார்களோ? தாங்கள் பயபக்தியோடு முத்திரை போட்ட உடன்படிக்கையின்படி நடந்துகொள்ளுகிறார்களா? இன்னும் இவைகளைப் போன்ற அநேக விஷயங்களை விசா



ரிக்க நெகேமியா விரும்பினார். இந்தக் காரணங்களினால் நெகேமியா மறுபடியும் ஒரு வருஷத்திற்குப் பிற்பாடு எருசலேமுக்கு தேசாதிபதியாக அனுப்பப்பட்டபோது, மிகவும் நன்றியுள்ளவராயிருந்தார், 'பாபிலோனின் ராஜாவாகிய அர்தசஷ்டாவின் 32-ம் வருஷத்திலே நான் ராஜாவினிடத்திற்குப் போய், சில நாளுக்குப் பின்பு திரும்ப ராஜாவினிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு, எருசலேமுக்கு வந்தேன். சில நாள் என்பது வேதாகமத்தில் ஒரு வருஷத்திற்கு வழங்கும் வார்த்தை. இதே எபிரேயவார்த்தை. இன்னும் சில இடங்களில் ஒரு வருஷமென்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது (லேவி. 25 : 29. எண். 22.). ஆகையால் நெகேமியா ஒரு வருஷகாலம் எருசலேமில் இல்லை, ராஜாவினிடத்திலிருந்து உத்தரவு பெற்றுக்கொண்டவுடனே நெகேமியா அழகிய லீலியா நகரத்தை விட்டு, வனாந்தரத்தின் வழியாய் எருசலேமுக்குச் செல்லுகிறார். இவர் வருகிற சங்கதி அங்குள்ள யாவருக்கும் தெரியாது. நெகேமியாவும் தான் திரும்பி வருவதாக நினைக்கவேயில்லை.

சூசானில் தன்னுடைய வேலை அவசியமாயிருக்குமென்று நினைத்திருந்தார். தனக்கு உத்தரவு கிடைத்த சங்கதியும் யூதர்களிலொருவருக்கும் தெரியாது. திடீரென்று ஒருநாள் ஒட்டகம், கழுதை, கோவேறுகழுதை இவைகளாலான ஓர் கூட்டம் வடக்கு வாசலண்டை வந்து நிற்கிறது. நெகேமியா வந்துவிட்டாரென்ற செய்தி பட்டணம் முழுவதும் பரம்பிற்று. இந்தச் சங்கதி அவர்களுக்கு சந்தோஷமாயிருந்ததா? அல்லது அவர்களில் யாருக்காவது விசனமாயிருந்ததா? தேசாதிபதி போய்ச் சேர்ந்தவுடனே பட்டணத்தைச் சுற்றிப்பார்த்து தானில்லாத சமயத்தில் காரியங்கள் எப்படி நடந்தேறி வந்ததென்று விசாரிக்கிறார். தேவாலயத்திற்குப்போய் வெளிப் பிராகாரத்துக்குப் போகும் வாசலைக் கடந்து உள் சென்றவுடனே, அந்த இடத்தின் தோற்றமுழுவதும் மாறிப்போயிருக்கக் காண்கிறார்; எல்லாம் வேற்றுமையாயிருக்கிறது. சில ஆசாரிமார் வெள்ளை அங்கிகளைத் தரித்துக்கொண்டு அங்குமிங்கும் அலைந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்து அவர்களோடிருந்த லேவியர் எங்கே? நெகேமியா போகும்போது 284 லேவியருக்குக் குறையாமல் அங்கேயிருந்தார்களே? இப்போ யாரையுங் காணோம். ஆசாரியருக்கு ஒத்தாசையாயிருந்த லேவியர் மாத்திரமல்ல, ஆலயத்தின் பாடகராகிய ஆசாபின் குமாரரையும், அவர்கள் கூட்டாளிகளையும் காணவில்லை. பாட்டுக் கூட்டத்தார் போய்விட்டார்கள். ஆராதனையும் தளர்ந்து போய்விட்டது.

(இன்னும் வரும்.)

## A WONDERFUL GUEST

## ஓர் அதிசய விருந்தாளி

அநேக ஆண்டுகளுக்கு முன்னே, ஒரு கிராமத்தில் பக்தியுள்ள ஒரு குடும்பத்தார் வசித்துக்கொண்டு வந்தார்கள். அவர்கள் மிகவும் ஏழைகள். ஒருநாள் அந்த வீட்டுப் பெண்பிள்ளை தன் வீட்டாருக்குச் சாப்பாடு வைத்துக்கொண்டிருக்கும்போது, ஒரு வளர்ந்த மனிதன் வந்து, 'அம்மா! எனக்கு ஒரு பிடி சாதம் கொடுக்கிறீர்களா?' என்று கேட்டார். அந்த அம்மாள் அதிக பிரியத்தோடு, 'நல்லது, வாரும், அதிகமாய் உமக்குக் கொடுக்க முடியாது. இருக்கிறதைத் தருகிறேன்' என்றாள். அவர் உள்ளே வந்து, அந்தம்மாளுக்குப் பக்கத்தில் ஒரு பிள்ளை நிற்பதைப் பார்த்து, 'அவள் உங்கள் பிள்ளையா? அவளுக்கு வயதென்ன?' என்றார். அந்தம்மாள் சிரித்துக்கொண்டு 'அவள் என் மகளல்ல, பக்கத்து வீட்டில் வசித்து வந்த ஒரு ஏழையினுடைய பிள்ளை. அவள் தாய் மரித்தபோது அவளை ஏற்றுக்கொள்வார் ஒருவருமில்லை. ஆதலால், நான் எளியவளாயிருந்தாலும் அவளை எடுத்து வளர்க்கிறேன்' என்றாள்.

அப்போது அந்த அந்நியன் அங்குமிங்கும் பார்த்துவிட்டு, 'உங்களுக்கு வேறே பிள்ளைகள் இல்லையல்லவா? ஆகையால், நீங்கள் இவளை வளர்க்கலாமே' என்றார். அப்போது அந்தம்மாள் சிரித்துக்கொண்டு, எல்லாப் பிள்ளைகளும் இராச்சாப்பாட்டிற்கு வரும்படி மணியடித்தார்கள். பத்துப் பிள்ளைகள் ஓடிவந்தார்கள். வந்தவுடன் மூத்த பெண் ஜெபம் பண்ணிவிட்டு, ஒரு உருளைக்கிழங்கை எடுத்து உரித்து, அந்த அநாதப்பிள்ளைக்குக் கொடுத்தாள். மூத்த பையன் தனக்கிருந்த வெண்ணெயை அந்தப் பிள்ளைக்குக் கொடுத்தான்.

அந்த அந்நியன் அவர்களுடைய பெற்றோரோடு பேசிக்கொண்டிருக்கிறாப்போல இதையெல்லாம் கவனித்தார்.

கடைசியாக, அவர் எழுந்து எல்லாருக்கும் நன்றியறிதலான வந்தனம் சொல்லிப் போய்விட்டார்.

அன்றிரவில், அநாதப்பிள்ளை ஒரு சொப்பனங்கண்டது. அதில், ஒரு நெட்டை மனிதன் வந்து, தன்னை எடுத்துக்கொண்டு ஏதோ ஒரு தூரதேசத்திற்கு ஓடிப்போனதாகக் கண்டு, விழித்து, அலறினது. அந்த வீட்டுப் பெண்பிள்ளை அவள் அப்படி அலறினதின் காரணத்தைக் கேட்க, அந்த அநாதப் பெண், தான் கண்ட சொப்



பனத்தை அந்தம்மாளுக்குச் சொன்னாள். அப்போது அந்தம்மாள், பிள்ளையே, நீ பயப்படவேண்டியதில்லை. இது வெறும் கனவேயன்றி வேறொன்றுமில்லை. உன்னை ஒருவரும் தூக்கிக்கொண்டுபோக இந்த இரவில் வரவில்லையென்று சொல்லி, அவளை அரவணைத்துத் தூங்கவைத்தாள். ஆனால் அந்தம்மாள் தூங்காமல் இந்த பிள்ளை கண்ட கனவைக்குறித்து எண்ணமிட்டுக்கொண்டிருந்தாள். எப்படியெனில், எங்கே நேற்றிரவு வந்த அந்த மனிதன் ஆள் அனுப்பி, நாம் இவ்வளவு நாளும் வளர்த்து வந்த இவளை எடுத்துக்கொண்டுவரக் கட்டளை அனுப்புகிறாரோவென்று பலவாறு சிந்தித்துக்கொண்டிருந்தாள்.

அதற்கிசைய அடுத்த நாள் காலையில் ஒரு போர்ச்சேவகன் தன் குதிரையின்மேல் ஏறிக்கொண்டு அந்த வீட்டின் முன் வந்து நிற்கிறதைக் கண்டவுடன், அந்த வீட்டுப் பெண்பிள்ளைக்குக் கொஞ்சம் பயமுண்டாயிற்று. ஏனெனில், அன்றிரவு தான் நினைத்த பிரகாரமே அந்த அநாதப் பிள்ளையைக் கொண்டுபோகச் சேவகன் அனுப்பப்பட்டிருக்கிறானென்று தன் மனதில் பட்டது. மேலும், சிவப்பு முத்திரை வைக்கப்பட்டு, தன்பேருக்கு மேல்விலாசம் எழுதியிருந்த கடிதத்தை அவன் கையில் கண்டது அதிகத் திகிலைக் கொடுத்தது.

அந்தக் கடிதத்தில் என்ன எழுதியிருந்தது தெரியுமா? முந்தின நாள் இரவில் அவர்களோடு பந்தியிருந்தது யாரென்றும், அந்தப் பிள்ளைகள் எல்லாரின்பேரிலும் அவருக்கு அதிகப் பிரியம் என்றும், வருஷத்திற்கு ஒவ்வொரு பிள்ளைக்கும் 10 பவுன் தாம் கொடுப்பதாகவும் அதில் கண்டிருந்தது. பிள்ளைகளுக்குச் சந்தோஷம். பெற்றோர் ஆனந்தக் கண்ணீர் விட்டார்கள்.

ஒரு விஷயம் சொல்லவில்லை. கடிதத்தின் முடிவில் ஒரு நாமம் எழுதியிருந்தது. அதில்லாவிட்டால் மேற்சொல்லிய வாக்குகளில் யாதொரு பிரயோஜனமுமில்லை. அது உல்லியம் தாமஸ் என்னும் அந்த தேசத்து ராஜாவின் நாமமே. அவருடைய நாமத்தின் மூலமாய் அதில் எழுதப்பட்டிருந்ததெல்லாம் அவர்களுக்குக் கிடைத்தது.

பிரிய சகோதரிகளே! வேதாகமத்தில் அநேக வாக்குத்தத்தங்கள் இருக்கிறது. அதில் நமது பரம ராஜாவின் கையெழுத்து வைக்கப்பட்டிருக்கிறது. அவர் நாமத்தின் மூலமாய் எல்லாம் கிடைக்கும். விசேஷமாய் 'அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான்' (அப். 10. 43). இந்த வாக்கு எல்லாருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவருடைய நாமத்தினாலே அதைப் பெற்றுக்கொள்ளுவோமாக. ஆமென்.

## RIDDLES

## விடு கதைகள்

1. கிண்ணிபோல் பூ பூக்கும்,
   கடாரப்போல் காய் காய்க்கும்

   இது என்ன ?

2. தங்கப்பறவை தன் வாலினால்
   தண்ணீர் சாப்பிடுகிறது.

   இது என்ன ?

3. அடி சிவப்பு, நடு பச்சை,
   உச்சி வெள்ளை.

   இது என்ன ?

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1916-ஞ ஜூலைமீ

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ச. | உபா. | 32. | 1—12 | 11 | வெ. | மத். | 5. | 17—32 | 21 | வெ. | மத். | 9. | 27—38 |
| 2 | ஞா. | ,, | 33. | 1—12 | 12 | பு. | ,, | 5. | 33—48 | 22 | ச. | ,, | 10. | 1—15 |
| 3 | தி. | ,, | 33. | 13—29 | 13 | வி. | , | 6. | 1—18 | 23 | ஞா. | ,, | 10. | 16—31 |
| 4 | செ. | ,, | 34. | 1—12 | 14 | வெ | ,, | 6. | 19—34 | 24 | தி. | ,, | 10. | 32—42 |
| 5 | பு. | மத். | 2. | 1—12 | 15 | ச. | ,, | 7. | 1—14 | 25 | செ. | ,, | 11. | 1—15 |
| 6 | வி. | ,, | 2. | 13—23 | 16 | ஞா. | ,, | 7. | 15—29 | 26 | பு. | ,, | 11. | 16—30 |
| 7 | வெ. | ,, | 3. | 1—17 | 17 | தி. | ,, | 8. | 1—17 | 27 | வி. | ,, | 12. | 1—13 |
| 8 | ச. | ,, | 4. | 1—11 | 18 | செ. | ,, | 8. | 18—34 | 28 | வெ. | ,, | 12. | 14—32 |
| 9 | ஞா. | ,, | 4. | 12—25 | 19 | பு. | ,, | 9. | 1—13 | 29 | ச. | ,, | 12. | 33—50 |
| 10 | தி. | ,, | 5. | 1—16 | 20 | வி. | ,, | 9. | 14—26 | 30 | ஞா. | ,, | 13. | 1—17 |
| | | | | | | | | | | 31 | தி. | ,, | 13. | 18—30 |

### ஆகஸ்டுமீ

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | செ. | மத். | 13. | 31—43 | 3 | வி. | மத். | 14. | 1—18 | 5 | ச. | மத். | 15. | 1—14 |
| 2 | பு. | ,, | 13. | 44—58 | 4 | வெ. | ,, | 14. | 19—36 | 6 | ஞா. | ,, | 15. | 15—28 |
| | | | | | | | | | | 7 | தி. | ,, | 15. | 29—39 |

C. L. S. PRESS, MADRAS—1916



*By permission of the Topical Press*

MISS EDITH CAVELL

புண்ணியவதியாகிய நர்ஸ் ஈடித் கவ்வெள்


# மாதர் போதினி

No. 224 ஆகஸ்டு 1916 No. 8


OFFICE OF THE REGISTRAR OF BOOKS 4 - AUG 1916 MADRAS

## EDITH CAVELL

## புண்ணியவதியாகிய நர்ஸ் கவ்வெல் என்பவளின் சரித்திரம்

### 1-ம் அதிகாரம்

[Mr. Herbert Leeds has written *Edith Cavell, the story of her life.* (Copyright, Jarrold & Sons). This article is compiled from it by permission of the author]

1865-ம் வருஷத்தில் டிசெம்பர் மாதம் 4-ம் தேதி ஈடித் கவ்வெள் என்பவள் பிறந்தாள். இவளுடைய தகப்பன் இங்கிலாந்திலுள்ள நாரிஜ் (Norwich) நகரத்துக்கு நாலு மைல் தூரத்திலுள்ள ஒரு சின்ன கிராமத்தில் போதகராயிருந்தார். சிறுபிராயத்தில் வீட்டில் படிக்கும்போது மிகவும் கருத்துள்ளவளாயிருந்தாள்.

அந்தக் காலத்திலேயும், இவள் அடிக்கடி வியாதியஸ்தர்களோடு பேசி அவர்களைச் சந்தோஷப்படுத்த மிகவும் பிரியப்பட்டு, வயசு போகப் போக இவர்களுக்கு உதவிசெய்ய அதிக விருப்பமுள்ளவளாயிருந்தாள். இவளுடைய பட்சத்தினிமித்தமும் தங்கக் குணத்தினிமித்தமும் எல்லாரும், விசேஷமாய் ஏழைகளும், இவளுடைய வருகையை எதிர்பார்ப்பார்கள். வியாதியஸ்தர்களுக்குத் தேவையானவை இன்னதென்று தானே அறிவாள். துன்பப்பட்டவர்கள் இருந்த அறையில் இவளுடைய மலர்ந்த முகமே வாசனையுள்ள புஷ்பத்தைப் போல் இருந்தது.

ஒரு தடவை ஏதோ ஒரு மருந்து சாப்பிடும்படியாக ஒரு வியாதிக்காரனுக்குச் சொன்னபோது, அவன் மனமற்றவனாயிருந்ததை அறிந்து, அவன் அதைச் சாப்பிட்டால், தான் அவனுக்கு ஆறு அணு

கொடுப்பதாக வாக்குக்கொடுத்தாள். அப்போதும் அவன் சாப்பிடவில்லை. இது இவளுக்குத் துக்கமாய் இருந்தது. ஆனால் அக்காலத்தில் அந்த மனுஷன் அதைக் கவனிக்கவில்லை. பிற்காலத்தில் அவன் இவளுடைய மரண செய்தி கேட்டபோது, தான் அவ்வளவு பக்தியுள்ளவளுடைய கையிலிருந்து சாப்பிடப் பிரியமற்றவனாயிருந்ததைப் பற்றி மிகவும் விசனப்பட்டான்.

பதினேழு வயதில், தகப்பன் வீட்டைவிட்டு உயர்தரக்கல்வி அடையும்படி பெரிய கல்விச்சாலைக்குப் போனாள். அங்கே தன் பெற்றோருக்கு யாதொரு செலவு உண்டாகாதபடி சிலருக்குச் சில பாடங்களைச் சொல்லிக்கொடுத்து, அதினால் கிடைத்த சம்பளத்தைத்தான் தன் படிப்புக்காகச் செலவழித்தாள். இந்தக்காலத்தில் சித்திரங்களை வரைகிறதில் மிகவும் சிரத்தை எடுத்தாள். இவளும் இவள் சகோதரிகளுமாகச் சேர்ந்து, தங்கள் சித்திரங்களினால் கிடைத்த ரூ. 4,500 தாங்கள் பிறந்த ஊரில் ஒரு பள்ளிக்கூடம் கட்டும்படிக் கொடுத்தார்கள். இவ்விதமாகவே இவள் முதல்முதல் சம்பாதித்த பணத்தைத் தர்மத்துக்குக் கொடுத்தாள். இது எவ்வளவு சிறந்த குணம்.

ஈடித் என்பவளுக்கு இரண்டு சகோதரிகளும், ஒரு சகோதரனும் உண்டு. இவளுடைய தகப்பன் இவளுடைய மரணத்திற்கு மூன்று வருஷங்களுக்குமுன் இறந்துபோனார். 1896-ம் வருஷத்தில் இவள் தான் தெரிந்துகொண்ட ஊழியத்துக்கென்று தன்னை ஆயத்தப்படுத்தும்படி லண்டன் நகரில் ஒரு ஆஸ்பத்திரியில் வியாதியஸ்தர்களைப்பேணும் வைத்தியம் கற்றுக்கொண்டாள். இதில் இவள் மகா சாமர்த்தியமுள்ளவளாய் இருந்ததினால் ஒரு ஆஸ்பத்திரிக்குத் தலைமையான நர்ஸ் (Nurse) ஆனாள். அவ்விடத்திற்கு வந்த ஜனங்கள், தாங்கள் சுகம்பெற்று, வீட்டுக்குப் போனபிறகுங்கூட, இவள் அவர்களை விசாரித்து, ஏழைகளாயிருந்தால் அவர்களுக்கு உதவிசெய்து, பூரணசுகம் கிடைக்கும் வரைக்கும், சமுத்திரக்கரைக்கு அல்லது வேறே ஏதாவது சுகமான இடத்திற்கு அவர்களை அனுப்புகிறதற்கு முயற்சி செய்வாள்.

இவளுடைய மரணசெய்தி வந்தபோது, ஏழைகள் தங்கள் குழந்தைகளுக்கும் மற்றவர்களுக்கும் இவள் செய்த நன்மைகளை நினைத்து கண்ணீர் சிந்தினார்கள்.

ஈடித் கவ்வெள் அவ்வளவு பலசாலியாய் இராவிட்டாலும், சத்துருக்களின் கையில் அகப்பட்டு, சாகிறதற்கு எப்படி தைரியமாய் இருந்தார்களோ, அப்படியே ஆஸ்பத்திரியில் இருந்த காலத்திலும் எந்த கஷ்டமான வேலையையும் செய்கிறதற்குத் தைரியமாயிருந்தார்கள்.



## 2-ம் அதிகாரம்

1907-ம் வருஷத்தில் ஈடித் கவ்வெள் பெல்ஜியம் தேசத்தில் ஒரு புது வேலைக்கு அழைக்கப்பட்டாள். அதுவரையில் அந்த தேசத்திலுள்ள ஆஸ்பத்திரிகளில் நர்ஸ்மார்கள் வியாதியஸ்தர்களைப் பேணும் வகையை அறியாமல் தங்களுக்குத் தெரிந்தமட்டும் செய்துவந்தார்கள். இப்போது இங்கிலாந்தில் செய்ததுபோல பெல்ஜிய துரைத்தனத்தார் டாக்டர்மார்களுக்கு உதவிசெய்யவும், மருத்துவம் செய்யவும், நர்ஸ்மாருக்காகப் புதிதாக ஒரு கல்விச்சாலையை ஏற்படுத்தினார்கள். இந்தக் கல்விச்சாலைக்குத் தலைவராக நர்ஸ் கவ்வெள் நியமிக்கப்பட்டாள்.

முதலாவது அநேகம் பெயர் இந்த வேலையைத் தடுத்தார்கள். ஆனால் இவளுடைய சிறந்த குணங்களினாலே எல்லாருடைய விரோதத்தையும் மாற்றி, அதில் படித்த நர்ஸ்மார்கள் தன்னை நேசிக்கவும் கனம்பண்ணவும் தக்கதாக நடந்துகொண்டாள்.

இதுவரையில் பெல்ஜியம் தேசத்தில் நல்ல குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் இந்த வேலையைச் செய்யவில்லை, ஆனால் அநேகர் நர்ஸ் கவ்வெள் நடத்தின கல்விச்சாலையில் வந்து பயிற்சி அடைந்தார்கள்.

இவர்களைக்குறித்து நர்ஸ் கவ்வெள் எழுதினதாவது: ‘படிக்க வருகிறவர்கள் மூன்று வருஷங்களுக்குள்ளாக அதிகமாய்த் தேர்ச்சியடைவார்கள். அவர்களுடைய அறிவு வளர்ந்துகொண்டே போகும். வைத்திய சாஸ்திரம் படிக்கிறவர்கள் மற்றவர்களைவிடத் தங்கள் வீட்டாருடைய சுகத்தைப் பேணவும், வியாதிகளைத் தடுக்கவும் கூடியவர்களாயிருப்பார்கள்’ என்பதே. பின்னும் அவள் எழுதினதாவது: ‘நல்ல குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் வியாதியஸ்தரான தங்கள் தேசத்தார்களுக்கும் மற்றவர்களுக்கும் உதவிசெய்கிறதில் இழிவு ஒன்றுமில்லை என்றும், செல்வமும் கல்வித்தேர்ச்சியும் மற்றவர்களுக்கு உதவிசெய்யத் தடையாயிராமல், இவ்வித உதவிபுரிவதற்கு ஏதுக்களாய் இருக்கின்றன என்றும் அறிந்துகொள்ளுவார்கள்’ என்பதே.

1909-ம் வருஷத்தில் லண்டன் பட்டணத்தில் கூடின ஒரு பெரிய சங்கத்தில் நர்ஸ் கவ்வெள் தன்னுடைய வேலையைப்பற்றி பேசும்படியாக நியமிக்கப்பட்டாள். பெல்ஜியத்தில் நடந்த அந்த வேலையைப் பற்றி அவள் பேசின வார்த்தைகளைக் கேட்ட எல்லாரும் சந்தோஷப்பட்டார்கள்.

ர்ஜா காலத்தில் எப்போதும் தாய் வீட்டுக்கு வருவாள். கடல் ஓரத்திலுள்ள ஊர்களில் சிலகாலம் போய் வசிக்க அவளுக்கு மிகவும் பிரியம்.

1914-ம் வருஷத்தில் ஜெர்மனி பெல்ஜியத்தின்மேல் படையெடுக்கிறதற்குக் கொஞ்சநாளுக்கு முன் வழக்கம்போல தன் தாயைப் பார்க்க இங்கிலாந்துக்கு வந்தாள்.

அவள் பெல்ஜியத்துக்குத் திரும்பினவுடனே ஜெர்மனியர் புசல்காற்றுபோல பெல்ஜியத்தின்மேல் வந்தபோது நர்ஸ் கவ்வெள் இரண்டில் ஒன்று தெரிந்துகொள்ளும்படியாக நேரிட்டது: அதாவது, மற்ற இங்கிலீஷ் துரைசானிமார்களைப்போல, பெல்ஜியம் தேசத்தை விட்டுவிட்டு, தங்கள் சொந்ததேசத்துக்குப் போகலாம்; அல்லது, பெல்ஜியத்திலே தன்னால் இயன்ற உதவிகளைச் செய்யலாம். 'இந்தக் காலத்தில் என்னுடைய வேலை அதிக பிரயோஜனமாயிருக்கும்' என்று சொல்லி நர்ஸ் கவ்வெள் பெல்ஜியத்தில் இருக்கும்படியாகத் தீர்மானித்தாள்.

ஜெர்மன்காரர் செய்த குரூரங்களை அவள் நாடோறும் கண்ணாரக் காணவேண்டியதாய் இருந்தபோதிலும் இவளுடைய மனம் மாறவில்லை. சீக்கிரத்துக்குள்ளாக பெல்ஜியத்தின் தலை நகரமாகிய பிரஸ்ஸல்ஸ் (Brussels) நகரத்து ஆஸ்பத்திரிகள் காயப்பட்ட போர்வீரர்களினால் நிறைந்தன. இவள் சிநேகிதர்களை மாத்திரமல்ல சத்துருக்களையும் அன்பாய்ப் பார்த்தாள். 1915-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 24-ம் தேதியில் அவள் எழுதின ஒரு கடிதத்தில் 'ஜெர்மனி இந்தத் தேசத்தைப் பிடித்தநாள் துடங்கி மற்றதேசங்களிலிருந்து செய்திகள் வருகிறது அபூர்வம். ஜெர்மனிக்காரர் அச்சடிக்கும் பத்திரிகைகள் மாத்திரம் கிடைக்கும். மற்ற தேசத்துப் பத்திரிகைகள் கிடையாது. எல்லா கடிதங்களும் மூடாமல் தபாலில் போடவேண்டும். அவைகளில் யுத்தத்தைப்பற்றி ஒன்றும் எழுதக்கூடாதாம். எங்கே போனாலும் உத்தரவு சீட்டு என்னும் 'பாஸ்போர்ட்டு' (Passport) இல்லாமல் போகக்கூடாது. பாஸ்போர்ட்டுக்காகப் பணம் கொடுக்கவேண்டும். ஜனங்கள் வழியில் கூட்டம் கூட்டமாய் நிற்கக்கூடாது. பைசிக்கிள்களும் (Bicycle) மோட்டார் கார்களும் (Motor Car) இப்போ போகிறதற்கு உத்தரவில்லை. எல்லாம் அமைதியாயும் துக்கமாயும் இருக்கிறது; ரெயிலிலாவது டிராமிலாவது (Tram) பிரயாணஞ் செய்யும்போது பக்கத்தில் உட்காரும் ஆளோடே பேச பயம். ஏனென்றால் அவன் மித்திருவோ சத்துருவோ தெரியாது. பேசுகிறதற்கு மனமுமில்லை. என்னத்தைப் பேசலாம்? புது உடுப்புகளைப்பற்றியோ, புது உடுப்புகளில்லை.



வேடிக்கைகள், நாடகங்கள், பந்தயங்கள், இவைகள் எல்லாம் நின்றுபோயின. அன்றாடகச் சாப்பாடு கிடைக்கிறது வருத்தம். வீட்டில் பிள்ளைகள் ஆகாரத்துக்காக அழுகிறார்கள். இந்தத்துன்பத்துக்குக் காரணராயிருக்கிற ஜெர்மன்காரர் நம்முடைய பக்கத்தில் இருந்து, இவைகளை ஒருவேளை கேட்டுக்கொண்டிருப்பார்கள், ஆகையால் இதெல்லாம் எப்படி பேசுகிறது? இது என்னுடைய தேசமல்ல நான் அந்நிய தேசத்தாள். சத்துருக்கள் பரிசுத்தக் குலைச்சலாக்கின தேவாலயங்கள் என்னுடைய தேசத்து புண்ணிய ஸ்தலங்கள் அல்ல. இடிக்கப்பட்ட கோவில்கள் என்னுடைய தேசத்துக் கோவில்கள் அல்ல. ஆனால் நான் இதெல்லாம் பார்க்கும்போது இந்த ஏழை ஜனங்களுடைய வியாகுலத்தையும் தீராத துக்கத்தையும் குறித்து பரிதாபப்படாமல் இருப்பது எப்படி? இவர்கள் தங்களை ஜெயித்த ஜெர்மனி தேசத்தாரை எப்படிப் பகைக்கிறார்கள் என்று இரண்டு உதாரணங்களால் காட்டுகிறேன்.

'முதலாவது.—இவர்கள் கடைக்குப் போகும்போது ஒரு ஜெர்மன்காரன் அதே கடைக்கு வந்தால், பெல்ஜியத்தான் உடனே அக்கடையிலிருந்து போய்விடுவான்.

'இரண்டாவது.—ஒருநாள் ஒரு ஜெர்மன் பட்டாளத்து, துரை தெருவிலே ஒரு பெல்ஜியம் மனுஷனை நோக்கி, சுருட்டு கொளுத்துகிறதற்காக நெருப்புக்குச்சி கேட்டான். அந்தப் பெல்ஜியத்தான் அதற்குப் பதிலாக ஒன்றும் பேசாமல், அந்த ஜெர்மன்காரன் அவனுடைய சுருட்டைக் கொளுத்தும்படி தான் குடித்துக்கொண்டிருந்த தன்னுடைய சுருட்டைக் கொடுத்தான். ஜெர்மன்காரன் அதை வாங்கித் தன் சுருட்டைக் கொளுத்திக்கொண்டு, திரும்பக் கொடுத்தபோது, அந்தப் பெல்ஜியத்தான் தன் வாயில் அதை வைக்காமல் தரையில் அதை எறிந்து காலால் அதை மிதித்தான்.'

## 3-ம் அதிகாரம்

### விசாரணையும் மரண ஆக்கினைத்தீர்ப்பும்

பெல்ஜியம் தேசத்தில் ஜெர்மனியர் நியமித்த கவர்னர் வொன் பிசிங் (Von Bissing) நாளுக்குநாள் பல கொடூரங்களையும் அநியாயங்களையும் செய்து, கடைசியாக நர்ஸ் கவ்வெளைப் பிடித்துச் சிறைச்சாலையில் அடைத்தான். ஏனென்றால் இவள் சத்துருவின் கையிலிருந்து தப்பி வந்த அங்கிலேயர், பிரான்ஸியர் போர்ச்சேவகர்களுக்கு உதவிசெய்து அவர்களை அவர்கள் சொந்த தேசங்களுக்கு அனுப்பினாள் என்கிற குற்றம் இவள்மேல் சாட்டப்பட்டது. நர்ஸ் கவ்வெள் தான் இப்படிச் செய்ததை மறைக்காமல், தான் இப்படிச்

செய்ததாக ஒப்புக்கொண்டாள். இது ஜெர்மனியர் ஏற்படுத்தின சட்டத்துக்கு நேர் விரோதம் என்றும் இதைச் செய்ததற்காகக் கிடைக்கக்கூடிய தண்டனை இன்னதென்றும் இவளுக்குத் தெரியும். மற்றவர்களுடைய ஜீவனைக்காப்பது அநேக வருஷமாய் இவளுடைய பிரதான நோக்கமாயிருந்ததுபோல, இப்பொழுது தன் சொந்த ஜீவனைப் பாராமல் சத்துருவின் கையிலிருந்து அங்கிலேயர் முதலியவர்களையும் ரட்சிக்கவே விரும்பினாள். விசாரணை நடக்கும்போது இவளுடைய சிநேகிதர்கள் நியமித்த வக்கீல் இவளுக்காகப் பேசும்படியாக ஜெர்மனியர் இடங்கொடுக்கவில்லை. ஜெர்மனியர் இவள் பட்சத்தில் பேசும்படி ஒரு வக்கீலை நியமித்தபோதிலும், நர்ஸ் கவ்வெல் எல்லாம் ஒத்துக்கொண்டதினால் வக்கீல் அவசரமில்லை என்று சொன்னார்கள். விசாரணை துவக்குகிறதற்கு முன் இவளோடே பேசவும், இவள்பேரில் சாட்டப்பட்ட குற்றம் இன்னதென்று அறியவும், விசாரணைக்குரிய ரிக்கார்டுகளை ஆராய்ந்து பார்க்கவும் அவளுக்கு உத்தரவு கொடுக்கவில்லை.

அக்காலத்தில் பிரஸ்ஸல்ஸ் (Brussels) நகரத்தில் இருந்த பற்பல தேசத்து ஸ்தானாபதிகள் இவளுக்காக அதிகமாய்ப் பிரயாசப்பட்டார்கள். ஆனால் அவர்களுடைய பிரயாசம் ஒன்றும் வாய்க்கவில்லை. அந்த வக்கீல் விசாரணை நடக்கும்போது ஸ்தானாபதிகள் கோர்ட்டுக்குப் போகிறது ஜெர்மன் உத்தியோகஸ்தருக்குப் பிரியமில்லை என்று அவர்களை கவர்னர் தடுத்துவிட்டான். தீர்ப்புக்கொடுக்கப்பட்டபோதுதான் உடனே அவர்களுக்கு அதை அறிவிப்பதாக வாக்கு கொடுத்தாலும் அவன் அதையும் நிறைவேற்றவில்லை.

ஜெர்மனிய உத்தியோகஸ்தர்கள் விசாரணையைப்பற்றி ஒன்றும் ஸ்தானாபதிகளுக்கு அறிவிக்காவிட்டாலும் விசாரணைக்கு அடுத்த நாளில் இவள் மரண ஆக்கினை செய்யப்பட்டாள் என்று தெரிய வந்தது. அமெரிக்கா ஸ்தானாபதியும் ஸ்பானியா ஸ்தானாபதியும் அப்பீல் (Appeal) செய்யும்வரைக்கும் தண்டனை செய்யக்கூடாதென்று வேண்டிக்கொண்டாலும், ஜெர்மனியர்கள் அவர்களுடைய விண்ணப்பத்தை அங்கீகரியாமல் இப்பேர்ப்பட்ட குற்றத்துக்கு மன்னிப்பேயில்லை என்றுமாத்திரம் மறுமொழி சொன்னார்கள். இதைக்கேட்ட ஸ்தானாபதிகள் தேசாபிமானத்தினால் செய்யப்பட்ட இவ்விதமான குற்றத்துக்காக ஒரு பெண்ணை மரணாக்கினை செய்வது தகாதகாரியம் என்றும், அப்படிச் செய்தால் மற்ற தேசத்தார் எல்லாரும் ஜெர்மனியை அதிக குறைவாய்ப் பேசுவார்கள் என்றும் பலவிதமான நியாயங்களை எடுத்துரைத்தபோதிலும் ஜெர்மனிய உத்தியோகஸ்தர் அவைகளைக் கவனிக்கவில்லை.



## 4-ம் அதிகாரம்

### உத்தம மாதுவின் மரணம்

பிறதேசத்து ஸ்தானாபதிகள் இவளுக்காக இவ்விதமாகப் பிரயாசப்பட்டிருக்குங் காலத்தில் அந்த நாள் சாயங்காலம் கிறிஸ்தவ போதகர் ஒருவர் சிறைச்சாலைக்குப் போகும்படி உத்தரவுபெற்று, அங்கே போய் அவளை ஆறுதல்படுத்தினார். நர்ஸ் கவ்வெல் அந்த அறையில் இரண்டரைமாதம் அடைக்கப்பட்டு, கொஞ்ச நேரத்துக்குள்ளாகத் தான் சாகப்போகிறதை அறிந்திருந்தபோதிலும், அவளிடத்தில் யாதொரு திகிலும் பயமும் காணப்படவில்லை.

இவள் கொஞ்சநேரம் போதகரோடே பேசினபிறகு, 'நான் சாகிறதற்கு பயப்படுகிறதில்லை. சந்தோஷமாய் என் ஜீவனை என் தேசத்துக்காகக் கொடுக்கிறேன்' என்று தன் சிநேகிதர்களுக்கு அறிவிக்கச் சொன்னாள்.

இன்னும் இவள் 'இந்த இரண்டரை மாதகாலம் எனக்கு ஒரு தவணைகாலம்போல் கொடுக்கப்பட்டதைப்பற்றிப் பராபரனை ஸ்தோத்தரிக்கிறேன். என் ஜீவகாலமெல்லாம் ஓயாத வேலையும் வருத்தமும் எனக்கு இருந்தது. இப்பொழுது இந்த இடத்தில் இந்த இளைப்பாறுதலின் காலம் எனக்குப் பெரிய நன்மையாயிருக்கிறது. இங்கே எல்லாரும் எனக்கு அன்புபாராட்டினார்கள். ஆனால் தேவசமுகத்திலே ஜீவனை விடும் நேரத்தில் தேசாபிமானம் மாத்திரம் போதாது என்று சொல்ல விரும்புகிறேன்.

'ஒருவருக்கும் நான் விரோதமாவது பகையாவது என்னுடைய மனதில் வைக்காமல் இருப்பது உத்தமம் என்று உணருகிறேன்' என்று சொன்னாள். போதகர் கிறிஸ்தவ சமயாசாரத்தின்படி இவளுக்குப் பரிசுத்த நற்கருணையைப் பரிமாறி, அதில் நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உத்தரித்த மரணத்தை நினைப்பூட்டினபோது, இவள் கிறிஸ்து மார்க்கத்தின் ஆறுதலை அதிக சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டாள்.

'நீங்காதிரும்! என் நேச கர்த்தரே!' என்கிற பாட்டைப் பாடினார்கள். பிறகு போதகர் போகவேண்டிய நேரம் வரைக்கும் இவள் தனது சிநேகிதர்களுக்கும் பந்துக்களுக்கும் தெரிவிக்கவேண்டியவைகளைச் சொன்னாள். காவற்காரன் வந்து போதகரை அழைத்து, அவரை வெளியே அனுப்பினபோது இவள் புன்னகையோடு மறுபடியும், 'மறுமையில் நாம் ஒருவரையொருவர் சந்திப்போம்' என்று சொன்னாள்.

கொஞ்சநேரத்துக்குள்ளாக எடித் கவ்வெல் என்கிற மாதர் சிரோமணி சிறைச்சாலை முற்றத்தில் பிரேதமாகக் கிடந்தாள்.

இவளுடைய மரணத்தைப்பற்றி மூன்று விதம் சொல்லுகிறார்கள். வழக்கம்போல இந்த மரணத்தீர்ப்பு செய்யப்பட்டது என்று ஒருவன் சொல்லுகிறான். இவளைத் துப்பாக்கியால் சுடும்படியாக நியமிக்கப்பட்ட சேவகர் திடுக்கிட்டு, உத்தியோகஸ்தனுடைய கட்டளையை மீறி, இவள்மேல் சுடவில்லை என்றும், அதைக் கண்டு பக்கத்தில் நின்ற அந்த உத்தியோகஸ்தன் தன் கைத் துப்பாக்கியால் இவளைச் சுட்டுக்கொன்றான் என்றும் ஒரு பத்திரிகை கூறுகிறது.

இவள் நெடுநாளாகச் சிறைச்சாலையில் இருந்ததினால் தனக்கு உண்டான தேக பலவீனத்தினாலே வழியில் இருக்கையில் மயக்கம் அடைந்து விழுந்தாள் என்று வேறொருவன் எழுதினான்.

இவைகளில் உண்மை இன்னதென்று நமக்குத்தெரியாது. ஆனால் இவளுடைய மரணத்தறுவாயில் இவள் கடைசிவரைக்கும் தைரியமும் சந்தோஷமுமாயிருந்தாள் என்றும், இவள் பூரண பக்தியும் திடநம்பிக்கையும் உடையவளாயிருந்து 'நான் என் தேசத்துக்காக மரிக்க ஆயத்தமாயிருக்கிறேன்' என்றும் சொல்லி ஜீவனை விட்டாள் என்றும் ஒரு ஜெர்மன் பாதிரியார் சொல்லுகிறார். சிநேகிதர்கள் இவளுடைய மரணச்செய்தியைக் கேள்விப்பட்டு, அதிகாரிகளிடத்தில் போய் இவளுடைய பிரேதத்தைக் கேட்டபொழுது, அவர்கள் அதைக்கொடாமல் முன்னமே புதைக்கப்பட்டதென்று சொல்லிவிட்டார்கள்.

## 5-ம் அதிகாரம்

### ஈடித் கவ்வெலுடைய மரணத்தைப்பற்றி உண்டான பக்தி வைராக்கியம்

**இந்தத் துக்க சம்பவம்.**—சீக்கிரத்துக்குள்ளாக உலகமெங்கும் பரவினபோது இவளுடைய பெயர் எங்கும் பிரஸ்தாபம் அடைந்தது. எண்பது வயதுள்ள இவளுடைய தாயாருக்குப் பற்பல தேசத்து ராஜாக்களும் பிரபுக்களும் தங்கள் அனுதாபத்தைக்காட்டி, நிருபங்களை எழுதினார்கள்.

அவைகளில் இரண்டை அடியில் காட்டுவோம்.

1. புண்ணியவதியாகிய ஈடித் கவ்வெலுடைய தாயாரவர்களுக்குப் பிரிட்டிஷ் ராஜ்யத்துக்கு மன்னராகிய ஜார்ஜ் சக்கரவர்த்தியின் உத்தரவினால் அனுப்பப்பட்ட நிருபமாவது :

பக்கிங்காம் அரமனை
1915—ளு அக்டோபர்மீ 23உ

கனம் அம்மாளே !

சங்கைபொருந்திய சக்கிரவர்த்தியும் சக்கிரவர்த்தினியும் உங்களுக்கு நேரிட்டிருக்கிற பெரிய துன்பத்தில் உங்களோடே அனுதாபப்பட்டு சத்துருக்கள் உங்களுடைய அருமையான மகளுக்கு பயங்கரமான விதமாய்ச் செய்த கொலைபாதகத்தைப்பற்றி வெறுப்படைகிறார்கள். உலகமெங்குமுள்ள சகல தேசத்தாரும் உங்களுக்காகப் பரிதாபப்பட்டு, உங்கள் மகள் மரணத்தறுவாயில் காட்டின பக்தியையும் தைரியத்தையும் வியந்து, அதைக்குறித்து அவளைப் புகழுவார்கள்.

ஜார்ஜ் மன்னரின் உத்தரவினால்

Stamfordham

செக்கரட்டேரி

2. ஜார்ஜ் மன்னரின் தாயாராகிய மகாகனம் அலெக்சந்திரா சக்கிரவர்த்தினியின் உத்தரவினால் எழுதப்பட்ட நிருபமாவது.

'மகாசங்கை அலெக்சந்திரா சக்கிரவர்த்தினி உங்கள் மகள் அடைந்த பயங்கரமான மரணத்தைப்பற்றிக் கேள்விப்பட்டு, உங்களோடே மிகவும் துக்கப்படுகிறார்கள். இப்பேர்ப்பட்ட சம்பவம் இம்மட்டும் நேரிடவேயில்லை. இந்தச் செய்தியை ராஜாத்தி கேட்டபொழுது அவர்களுக்கு உண்டான துக்கத்தை விஸ்தரிக்க என் வார்த்தைகள் எம்மாத்திரம். முக்கியமாய் உங்களுக்கு உண்டான நிலைசத்தைப்பற்றி ராஜாத்தி நினைத்து 'துக்கசாகரத்தில் அமிழ்ந்திருக்கிற நர்ஸ் கவ்வெலினுடைய தாயாரைப்பற்றி நான் தியானிக்கும்பொழுது என் மனம் கலங்குகிறது' என்று சொன்னார்கள்.

இந்த யுத்தகாலத்தில் அநேக ஸ்திரீகள் பேருதவி செய்தார்கள். ஆனால் எல்லா ஸ்திரீகளுடைய நாமங்களுக்கு மேலாக ஈடித் கவ்வெலுடைய பெயர் எப்பொழுதும் கனத்திலும் கீர்த்தியிலும் சிரேஷ்டம் ஆகும். 'இங்கிலாந்துக்கு ஆபத்துக்காலத்தில் உதவி செய்ய தன்னை ஆவலோடே ஒப்புக்கொடுத்தாள். சர்வேஸ்வரன் உங்களை ஆசீர்வதித்து ஆறுதல் செய்வாராக' என்று உங்களுக்காக மன்றாடுகிற சங்கை அலெக்சந்திரா சக்கிரவர்த்தினியின் உத்தரவினால்,

A. R. Grant

*Rector of Sandringham*

3. நாரிஜ்நகரத்து அத்தியட்சரவர்கள் (The Bishop of Norwich, Dr. Bertram Pollock) நர்ஸ் கவ்வெலைப்பற்றிச்செய்த பிரசங்கமாவது

மற்றவர்கள் ஈடித் கவ்வெல் செய்த வீரச் செய்கைகளைப்பற்றியும், பயங்கரமான மரணத்தில் இவளிடத்தில் விளங்கின பக்திவைராக்கி

யத்தைப்பற்றியும் பேசுகிறார்கள். இவளுடைய ஜீவியத்திலும் மரணத்திலும் எனக்குத் தோன்றிய இரண்டு நல்ல குறிப்புகளைமாத்திரம் காட்ட விரும்புகிறேன்.

முதலாவது, வீரத்தனம் சடுதியாய் ஒருவனுக்கு உண்டாகிறதில்லை. வாலிபத்திலே கற்றுக்கொண்ட கீழ்ப்படிதல் அடக்கம் முதலிய குணங்களின் பலனே இது.

'விளையும் பயிர் முளையில் தெரியும்' இந்த நீதிச்சொல்லுக்கு ஈடித்கவ்வெளின் ஜீவியமே நல்ல திருஷ்டாந்தம். மற்றவர்களுக்கு உதவிசெய்யும்படித் தன்னை ஒப்புக்கொடுக்கும் குணம் சிறு பிராயத்திலே அவளிடத்தில் காணப்பட்டது. இவள் தன் குடும்பத்தில் தலைப்பிள்ளை. இவளுக்குப்பின் பிறந்த மற்றப் பிள்ளைகளுக்கு இவள் காட்டின அன்பும் சுயவெறுப்பும் இவளுடைய பிற்கால சற்குணங்களுக்கும் ஆச்சரியமான மரணத்துக்கும் மூலகாரணமாயிருந்தன.

தங்கள் வீட்டாருக்கும் மற்றவர்களுக்கும் அன்பாயும் சந்தோஷமாயும் உதவிசெய்கிற ஆயிரக்கணக்கான பெண்களுக்கும் இவள் எப்பொழுதும் சிறந்த முன்மாதிரியாய் இருப்பாள். அப்படியிருக்க இந்தக் கீர்த்திபெற்ற மாதுசிரோன்மணியின் சற்குணங்களுக்கு சிறு பிராயத்தில் இவளிடத்தில் தோன்றிய லட்சணங்களே காரணம் என்று அறிந்து, சிறுபிள்ளைகளிடத்தில் காணப்படும் நற்குணங்களை அற்பமாக எண்ணுவது தப்பிதம்.

இரண்டாவது: பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை நன்னெறியில் வளர்ப்பது மிகவும் நன்மை.

சிறு கிராமத்துப் பாதிரியினுடைய வீட்டுக்கும் பயங்கரமான காட்சிகள் நிறைந்த யுத்தகளத்துக்கும் எவ்வளவோ தூரம்! ஆனால் இவள் பெற்றோருடைய நல்வளர்ப்பே பிற்காலத்தில் கஷ்டத்திலிருந்த அநேகருக்கு உலகத்தார் மெச்சத்தக்கதாக உபகாரியாய் இருக்கும்படி இவளை ஏவினது என்பது நிச்சயம். நான் இவளுடைய வயதுசென்ற தாயாரைச் சந்தித்தபோது, மகள் பக்தியுள்ள தன் அருமைத் தாயாரைப் பின்பற்றினாள் என்று கண்டுணர்ந்தேன்.

பராபரனின் கிருபையினால் மனுகுலத்தார் இவ்வித சிறந்த லட்சணங்களை அடைகிறதினிமித்தம் அவருக்குத் துதியுண்டாவதாக. ஏனென்றால், நம்முடைய குறைவுகளை நாம் சிந்திக்கும்பொழுது, நம்மைத் தாழ்த்தவேண்டியதாயிருந்தபோதிலும், அவருடைய அருள் பெற்றால், இவளைப்போல் நாமும் தன்னயமற்றவர்களாய்ப் பயமின்றி ஜீவவழியில் செல்லலாம்.

Dr. Bertram Pollock
*Bishop of Norwich*





## SOME INDIAN BIRDS (*Continued*)

## பரதகண்டத்து பட்சி வகைகள் (தொடர்ச்சி)

### III

நாம் சென்ற மாதத்தில் கவனித்த பட்சிகளில் மிச்சமானவைகள் பளபளப்பான தோகையை யுடையனவாய்ப் பார்வைக்கு அலங்காரமாயிருக்கும். நாம் இப்போது கவனிக்கப்போகிற பட்சிசாதி சாதாரணமும் தோற்றத்திற்கு அவலக்ஷணமுமாயிருக்கும். இவைகளை உங்கள் வீடுகளுக்குச் சமீபத்திலேயே காணலாம். இச்சாதியைத் தமிழர் பன்றிக்குருவி என்பார்கள். தரையில் தாவிக் குதிக்கும்போதும் மரக்கொம்புகளில் மாறித் தாண்டும்போதும் இடுகிற இரைச்சலினால், இவைகளுக்கு இது காரணப்பெயராக வந்திருக்கலாம். என்றாலும் இந்துஸ்தானியில் இவைகளுக்கு வழங்குகிற 'சாத் பஹாய்' (ஏழு சகோதரிகள்) என்கிற பெயர் இவைகளின் வழக்கத்தையும் தோற்றத்தையும் நன்றாய் வர்ணிக்கிறது. ஏனென்றால் இக்குருவி தனியாய்க் காணப்படுகிறதேயில்லை, எப்பொழுதும் ஏழு ஏழாய்க் கூடியிராவிட்டாலும் ஐந்து முதல் பத்து வரையில் கும்பலாய்ச் சேர்ந்திருக்கும்.

அதின் தோகை வெளுத்த சாம்பல் வர்ணமாய்ச் சற்றே தூசிபோலிருக்கும். அதின் கண்களும், கால்களும், அலகும் வெண்மையாயிருக்கும். அதின் சத்தத்தையும், புகைவர்ணத்தையும், கும்பலாய்க் கூடியிருக்கிற வழக்கத்தையும் மனதில் வைத்துக்கொண்டால் இந்தப்

பட்சியை வெகு சுலபமாய் அறிந்துகொள்ளலாம். இது இந்தியாவின் சமபூமிகள் எங்கும் மலைப்பாகங்களில் 6,000 அடி உயரம் வரையிலும் காணப்படுகின்றன. நான் இதைக் குன்னூரில் அடிக்கடி பார்த்திருக்கிறேன்.

மரங்கொத்தி மேற்சொன்னதை விட அதிக அழகும் விசேஷமுமானது. அது நீளத்தில் ஒரு அடியும், இறகுகள் பலவர்ணமாயுமிருக்கும். அதின் முதுகு பகட்டு மஞ்சளாய்ச் சிற்சில சமயங்களில் சிவப்பு கலந்திருக்கும். அதின் முகமும், கழுத்தும், கீழ்ப்பாகங்களும் கறுப்பும் வெளுப்புமாயிருக்கும். அதின் தலையின் பிற்பக்கத்தில் சோபிதமான சிவந்த கொண்டையிருக்கிறது. மரங்கொத்தி அதிக அதிசயமாய் இரை சம்பாதிக்கிறது. கருவாட்டுவாலி, தேன் தின்னி முதலான அநேகம் பட்சிகள் வித்துவிதைகளைத் தின்றுவது தரையின்மீது, அல்லது ஆகாயத்தில் அகப்படுகிற பூச்சிகளைப் பிடித்துத் தின்றுவது பிழைக்கும். ஆனால் மரங்கொத்தியோ அதிகப் பிரயாசத்தோடே தடித்த மரப்பட்டைகளின் கீழேயிருக்கும் பூச்சிகளைப் பிடித்துத் தின்னுகிறது. இது காரணத்தினால்தான் அதன் அலகு அதிக பலமாயிருக்கும். வாயிலிருந்து சற்றுதூரம் நீட்டக்கூடிய அதின் நாக்கின் நுனி கடினமாயிருக்கும். இந்த நாக்கின் உதவியால் மரப்பட்டையின் அடியிலிருக்கும் பூச்சிகளைப் பிடித்திழுத்துத் தின்னும். அதின் வாலும் அற்புதமாய் அமைந்திருக்கிறது. அது கூராயிராமல் குட்டையாயும் பலமாயுமிருப்பதினால் குருவி சரிந்து விழுந்துபோகாதபடி சரியாய் நிறுத்துகிறது.

தென் இந்தியாவில் இன்னொரு பறவையிருக்கிறது. அடிக்கடி தமிழ்நாட்டார் இதையும் மரங்கொத்தி என்று தவறாய்ச் சொல்லுவார்கள். ஆனால் வாஸ்தவத்தில் இப்பறவை வித்தியாசமானது. அதின் நியாயமான பெயர் கன்னான் (Coppersmith). அது நீளத்தில் இரண்டொரு அங்குலமுள்ள ஒரு சிறு குருவி. அதின் உடல் பச்சையாயும் முகம் மஞ்சளாயும், நெற்றியும், மார்பும், பாதங்களும் பளபளப்பான சிவப்பாயுமிருக்கும். அது பலவர்ணமாயிருந்தபோதிலும் அதின் சிறகிலிருக்கும் பச்சைநிறத்தினால் மரத்தின் இலைகள் சந்தில் அதைக் கண்டு பிடிப்பது கஷ்டம். கன்னான் மரங்கொத்தியைப்போல் மரமேறுகிறதில்லை. ஆனால் இலைகளின் மத்தியில் மறைந்த கிளைகளின்மேல் உட்கார்ந்து டுக், டுக், டுக்கென்று ஓயாமல் கன்னான் உலைக்கடத்தில் சுத்தியினால் தட்டுவதுபோல் சத்தமிட்டுக்கொண்டிருக்கும். கோடைகாலத்தில் இதின் சத்தத்தை விசேஷமாய்க் கேட்கலாம். கிழக்கே பிலிப்பியன் தீவுகள் வரையில் இப்பறவை காணப்படுகிறது. இவ்வளவு சிறு குருவி சோர்ந்துபோகாமல் நெடுநேரம் அவ்வளவு பலமான சத்தஞ்செய்வது அதிக ஆச்சரியம்.

Miss A. B. VanDoren,





## THE KING'S CUP-BEARER *(Continued)*

## ராஜாவுக்குப் பானங்கொடுப்போன் (தொடர்ச்சி)

### XIII. அத்தியாயம்

வேரில்லாமை

எங்கே பார்த்தாலும் அமைதியும் வெறுமையும் சஞ்சலமுமாயிருந்து ஒன்றும் சரியானபடி நடந்தேறவில்லை. ஏதோ தப்பு நடக்கிறதென்று நெகேமியா அறிந்துகொண்டார். இன்னும் ஆலயத்திற்குள்ளே போகப்போக, இது மெய்யென்றே கண்டார். தேவாலயத்தைச் சுற்றிலும் மூன்று பக்கங்களில் வெளிக்கட்டடங்களிருந்தன. இந்த அறைகளில் தேவாலயத்திற்கு வேண்டிய சாமான்களெல்லாம் சேகரித்து வைக்கப்படும் உக்கிராண அறைகளிருந்தன. ஆனால் அச்சமயத்தில் அந்நிய ஜாதியானாகிய தொபியா அந்த அறைகளில் வசித்து வருகிறானென்று நெகேமியா கண்டு அதிக விசனப்படுகிறார். மேலும் தான் எருசலேமை விட்டுப் போனவுடனே, ஜனங்கள் கர்த்தருடைய வீட்டிற்குத் தசம பாகங்களையும், காணிக்கைகளையும் கொண்டுவருகிறதை நிறுத்திவிட்டதினால், லேவியரும்

பாடகர்களும் வேலைசெய்யாமல் போய்விட்டார்களென்று நெகேமியா பார்க்கிறார். எருசலேமையும் அதின் குடிகளின் கேவலமான நிலைமையையும் பார்த்தபோது மனங்கசந்து துக்கப்பட்டார். பரிசுத்த நகரத்தைக் கர்த்தரின் தோட்டமாக விட்டுப்போனார். திரும்பி வந்தபோதோ சர்ப்பத்தின் விஷம் பாதிசமுழுவதையுங் கெடுத்துப்போட்டது. நெகேமியா தங்களோடிருக்கும் வரையில் மிகவும் நேர்த்தியாய் நடந்துகொண்டார்கள். அவர் போனவுடனே வலது கையிலிருந்து இடதுகைக்கு மாறுவதுபோல அவ்வளவு சீக்கிரமாய் மாறிவிட்டார்கள்.

## XIV. அத்தியாயம்

### ஆழமாய்ப் பரிசோதி

நெகேமியா பாரவசீகத்தை விட்டு மறுபடியும் எருசலேமுக்கு வந்தபோது, தான் ஆழமாய், பலமாய் வேலைசெய்யவேண்டியது அவசியமென்று கண்டார். நாலு வெளியரங்கமான தீமைகள் அவரை எதிர்த்ததுபோலிருந்தது.

(1) ஆலயத்தில்தானே அம்மோனியனாகிய தொபியாவுக்கு ஒரு நல்ல உபசார மண்டபம் ஆயத்தமாக்கப்பட்டிருந்தது.

(2) ஜனங்கள் தேவாலய ஊழியத்திற்கென்று தசம பாகங்களையும் மற்றக் காணிக்கைகளையும் கொடாமல் நிறுத்திவிட்டார்கள். அதனால் லேவியரெல்லாரும் பரிசுத்த ஸ்தலத்தை விட்டுவிட்டார்கள்.

(3) ஓய்வுநாள், பரிசுத்தக் குலைச்சலாக்கப்பட்டு, அலட்சியம் செய்யப்பட்டது. நகரத்திற்குள்ளேயும் வெளியேயும் வழக்கம்போல் வியாபாரம் நடந்தது.

(4) அந்நியரோடே விவாக சம்பந்தம் சாதாரணமாய்ப் போனபடியால், தெருவிலே விளையாடும் பிள்ளைகள் அந்நிய பாஷைகளைப் பேசினார்கள். இந்நான்கு தீமைகளும் மகா கேடுள்ள, பலமான, ஆழமாய் வேர்பிடித்த தீமைகள். இவைகளை உடனே நீக்கிப்போடவேண்டும். நெகேமியா இவைகளை எப்படி நீக்குகிறார்? ஜனங்களை விசனப்படுத்த அவர்களுக்கு வருத்தமுண்டாக்கப் பின்வாங்கினாரா? இல்லை. தன்னுடைய ஜனத்தார் பாவஞ்செய்தார்கள். பாவ வியாதி பரவிக்கொண்டே போகிறது. அழிவு தொடங்கிவிட்டது. இதற்குப் பலத்த கிரியைதான் செய்யப்படவேண்டும். வேதனையுண்டாக்குகிற அவயவங்கள் வெட்டப்படவேண்டும். அப்படியானால்தான் சரீரம் உயிரோடே காக்கப்படும். முதலாவது ஆலயத்திலிருந்து வேலை தொடங்குகிறார். உள்பிராகாரத்திற்குப் போய், தன்னுடைய உத்தம ஊழியக்காரரில் சிலரைக் கூட்டிக்கொண்டு, உக்கிராண அறைகளின்



கதவுகளைத் திறந்து தம்முடைய வேலையை நடப்பிக்கிறார். மிகக் கோபாவேசத்தோடு தம்முடைய ஊழியக்காரரை நோக்கித் தொபியாவின் சாமான்களை வெளியே எறிந்துவிடச் சொல்லுகிறாரா? இல்லை, அப்படியல்ல, தானும் அவர்களுக்கு உதவியாக அவர்களோடு வேலைசெய்து எப்படிச் செய்யவேண்டுமென்று வழி காண்பிக்கிறார். மாட்சிமையான சமைக்கடுத்த சாமான்கள், அழகிய திண்டுகள், அலங்காரமான பாய்கள், பல வர்ணமான தொங்கு திரைகள், இவைகளெல்லாம் இழுத்து வெளியே போடப்பட்டன. அதே அறையை வெறுமையாக்கி சுத்தஞ்செய்து ஒழுங்குபடுத்தி, தேவாலயத்திற்குரிய பண்டம் பாடிகளை மறுபடியும் கொண்டுவந்து வைக்க ஆயத்தப்படுத்துகிறார். இது மெய்யாகவே பலத்த கிரியைதான். மிகவும் அவசியமானதும்தான். தொபியா மறுபடியும் எருசலேமுக்கு வரும்போது என்ன நடக்குமோ? அல்லது பிரதான ஆசாரியனாகிய எலியாசிப் விசனப்படுவாரோ? அவருடைய மனதை வருத்தப்படுத்தவேண்டுமே என்று பலவாறாக நினைத்துக்கொண்டு சும்மா இருந்துவிட்டாரானால், பாவம் நிறுத்தப்படாமல், வளர்ந்துகொண்டே போகும், தேவாலயமும் சுத்தமாக்கப்படாது. பவுலப்போஸ்தலன் கிறிஸ்துவினுடையவர்களெல்லாரும் தேவனுடைய ஆலயமாயிருக்கிறார்களென்று சொல்லுகிறார் (1 கொரி. 3. 16, 17).

(இன்னும் வரும்.)

## LORD KITCHENER, THE EMPIRE'S GREAT SOLDIER—HERO

### கிச்சினர் மகாபிரபு

தற்காலத்தில் நடக்கும் யுத்தத்தில் மகாபிரித்தானியாவுக்கு யுத்தகாரிய நிர்வாகதரிசியாயிருந்த கிச்சினர் மகாப்பிரபு, சென்ற ஜூன் மாதம் ஆரம்பத்தில் ருஷிய சக்கரவர்த்தியின் வேண்டுகோளுக்கிசைந்து ருஷியாவுக்குப் போகும்போது, ஆர்க்னே தீவுகளுக்குச் சமீபத்தில் அவருடைய கப்பல் வெடிசுரங்கம் தட்டுப்பட்டு உடைந்துபோயிற்று. கடல் மும்முரமாயிருந்தபடியால் இறக்கிவிட்ட படவுகளும் கவிழ்ந்துபோயின. கிச்சினர் பிரபுவும் அவருடைய பரிவாரமும் ஆழிக்கு இரையானார்கள். பிரக்கியாதிபெற்ற அந்த மகா போர்வீரனுடைய மரணத்தைக் கேள்வியுற்ற சகல தேசத்தாரும் துக்கங்கொண்டாடினார்கள்.

கிச்சினர் பிரபு 1870-ம் வருஷத்தில், பிரான்சியருக்கும் ஜெர்மானியருக்கும் நடந்த யுத்தத்தில் பிரான்ஸ்கொடியின் கீழிருந்து சண்டை செய்தார். 1875-ம் வருஷமுதல் 1877-ம் வருஷம் வரையில் மூன்று வருஷத்தைப் பலஸ்தினு கலிலேயா இவைகளின் விஸ்தீரணத்தையும் நிலைமையையும் கண்டுபிடிப்பதில் செலவிட்டார். 1882-ம் வருஷமுதல் 1898-ம் வருஷம் வரையில் எகிப்து தேசத்தில் குதிரைப் படையில் உத்தியோகஸ்தராயிருந்து வடஆபிரிக்காவில் நடந்த அநேக யுத்தங்களில் பங்கு பெற்றார். 1899-ம் வருஷம் தென் ஆபிரிக்காவில் நடந்த யுத்தத்தில் தளகர்த்தனாயிருந்த ராபர்ட்ஸ் பிரபுவுக்கு இவர் இரண்டாவதாயிருந்து அந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்ததின்பேரில், எட்வர்ட் சக்கரவர்த்தி அவருக்கு ஒரு பெரியபட்டம் அளிக்க, பார்லிமெண்ட் சபையார் அவருக்கு 50,000 பவுன் இனாமளித்தார்கள். 1902-ம் வருஷமுதல் 1909-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 9-ம் தேதிவரையில், நமது இந்துதேசத்தின் பிரதம தளகர்த்தனாய் உத்தியோகம் பார்த்துவந்தார். அவருடைய காலத்தில் அநேக சீர்திருத்தங்கள் செய்து, தற்காலத்தில் யுத்த முகத்திலிருக்கும் சைனியங்களைச் சிறந்த நிலைமைக்குக் கொண்டுவந்தார். 1911-ம் வருஷமுதல் ஐரோப்பிய யுத்தம் ஆரம்பம் வரையில் எகிப்து தேசத்தின் அதிபதியாயிருந்து ஆங்கிலேயர் யுத்தப்பிரயத்தனம் செய்யும்போது பிரதம காரியதரிசியாக நியமகம் பெற்றார்.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1916-ஹு ஆகஸ்டு௴

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | செ. | மத். | 13. 31—43 | 11 | வெ. | மத். | 17. 14—27 | 21 | தி. | மத். | 22. 15—33 |
| 2 | பு. | „ | 13. 44—58 | 12 | ச. | „ | 18. 1—18 | 22 | செ. | „ | 22. 34—46 |
| 3 | வி. | „ | 14. 1—18 | 13 | ஞா. | „ | 18. 19—35 | 23 | பு. | „ | 23. 1—14 |
| 4 | வெ. | „ | 14. 19—36 | 14 | தி. | „ | 19. 13—30 | 24 | வி. | „ | 23. 23—39 |
| 5 | ச. | „ | 15. 1—14 | 15 | செ. | „ | 20. 1—16 | 25 | வெ. | „ | 24. 1—14 |
| 6 | ஞா. | „ | 15. 15—28 | 16 | பு. | „ | 20. 17—34 | 26 | ச. | „ | 24. 15—33 |
| 7 | தி. | „ | 15. 29—39 | 17 | வி. | „ | 21. 1—17 | 27 | ஞா. | „ | 24. 34—51 |
| 8 | செ. | „ | 16. 1—12 | 18 | வெ. | „ | 21. 18—32 | 28 | தி. | „ | 25. 1—13 |
| 9 | பு. | „ | 16. 13—28 | 19 | ச. | „ | 21. 33—46 | 29 | செ. | „ | 25. 14—30 |
| 10 | வி. | „ | 17. 1—13 | 20 | ஞா. | „ | 22. 1—14 | 31 | வி. | „ | 26. 1—13 |

### செப்டம்பர்௴

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வெ. | மத். | 26. 14—30 | 3 | ஞா. | மத். | 26. 47—58 | 5 | செ. | மத். | 27. 1—14 |
| 2 | ச. | „ | 26. 31—46 | 4 | தி. | „ | 26. 59—75 | 6 | பு. | „ | 27. 15—26 |

C. L. S. PRESS, MADRAS—1916


# மாதர் போதினி

No. 225 செப்டெம்பர் 1916 No. 9


OFFICE OF THE REGISTRAR OF JOINT... 6 SEP 1916 MADRAS

## EDITOR'S NOTES

## பத்திராதிபர் நானுவிதக் குறிப்புகள்

Miss Hilda Lazarus, B.A., M.B., B.S., சிறிது காலத்திற்கு முன்னே, மேற்காட்டிய வைத்திய பரீட்சையிற் தேறின இம்மாது, இங்கிலாந்துக்குச் சென்று அங்கே ஒருவருடம் பயின்றுவர உவாடி (Wadi scholarship) நிதியிலிருந்து ரூ. 3,500 சகாயம் பெற்றிருக்கிறார்கள். இது நமது இந்திய கிறிஸ்தவ பெண்களுக்கு வெகு உற்சாகத்தைக் கொடுக்கு மொருகாரியம்.

Brilliant Russian Victories. சமீபகாலத்தில் ஆஸ்திரியரோடும் துர்க்கியரோடும் கலந்து செய்த சண்டைகளில் ருஷியர் அநேக வெற்றி யடைந்திருக்கிறார்கள். புக்கவோனியா என்கிற மாகாணத்தில் ஆஸ்திரியரோடு செய்த சண்டையில் 2,12,000 போர் வீரரைச் சிறைபிடித்திருக்கிறார்கள். ருஷியர் அடைகிற ஜெயத்தைப்பற்றியும் அவர்கள் எடுக்கிற சிறையைப்பற்றியும் அனுதினமும் நமக்குத் தந்தி சமாச்சாரம் வந்துகொண்டே இருக்கிறது.

## GOVERNMENT BRAHMAN WIDOWS' HOME

## கவர்ண்மெண்ட் ப்ராஹ்மண வித்வாஸ்ரமம்

இத்தலைப் பெயர்கொண்ட ஒரு ஆச்ரமம் நமது பிராமணர்களுக்குள் பாலிய விவாகத்தின் பலனுகப் பரிதவிக்கும் பாலிய விதவைகளுக்காக ஏற்பட்டுப் பட்டணத்தில் செவ்வனே நடந்து வருவது நேயர் பலர் அறிந்த விஷயம்.

அவ்வாச்ரமம் 1912-ம் வருஷம் ஜூலை மாதம் ஸ்தாபிக்கப்பெற்றது. பிறகு அதேவருஷம் செப்டம்பர் மாதம் இன்ஸ்பெக்

டிரஸ் 'மிஸ் லிஞ்ச்' அவர்களின் விடாமுயற்சியால் கவர்ண்மெண்ட் ஆதீனத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. ஆச்ரமம் ஆரம்பித்த பொழுது நான்கு பெண்கள் மாத்திரமே இருந்தனர். தற்காலம் சென்னை ராஜதானியின் பல ஜில்லாக்களிலுமிருந்து பெண்கள் வந்து சேர்ந்து 42 பேர் இருக்கிறார்கள். யாவரும் பிராமணகுலத்தினர்களே.

இவ்வாச்ரமத்தினால் உண்டாகும் நன்மைகள் பல பிராஹ்மணர்கள் தமது பெண்களுக்கு எட்டு வயதிலும் பத்து வயதிலும் கலியாணம் செய்து, அக்குழந்தைகள் தெய்வகதியால் அமங்களத்தை யடையின், ஆயுள்பரியந்தம் அவர்களைத் துக்கத்துச்குள்ளாக்குகிறார்கள். ஏதோ தெய்வச்செயலால் உண்டான வருத்தத்தைக் கூடியமட்டில் குறைப்பதைவிட்டுச், தங்களுடைய செயலால் அத்துக்கத்தைப் பதின்மடங்கு அதிகப்படுத்துகிறார்கள். அந்தோ, அக்குழந்தைகளைச் சுபகோஷ்டியிலிருந்தும் வேறெவ்வித நற்காரியங்களிலிருந்தும் நீக்குவதுந் தவிர அவர்களைப் பார்ப்பதற்கும் அருவருப்படைகிறார்கள். அதுதான் போகட்டும், தங்கள் பொழுதை வீணாக்காமல் நற்பொழுதாய்க் கழிப்பதற்கு ஏதேனும் வித்தை கற்று ஞானமார்க்கத்தைத் தேடுவோமென்றாலோ அதற்குண்டாகும் வம்புகள் கணக்கில. இப்படி துரதிஷ்டத்தால் சூழப்பட்டு யாதொரு தேறுதலுமின்றிப் பரிதவிக்கும் சிறு குழந்தைகளுக்கு இந்த ஆச்ரமம் உண்டானது, ஜலத்தின் அணுவே இல்லாத பாழும் பாலைவனத்தில் பொழிந்த அமிர்தவருஷத்தையும் நித்தியதரித்தானுக்குக் கிடைத்த நிதியையும் நிகர்த்திருக்கிறது.

இப்பொழுது ஆச்ரமம் திருவல்லிக்கேணி, சமுத்திரத்தை யடுத்த ஐஸ்ஹவுஸ் (Ice House) என்னுமிடத்தில் இருக்கிறது. பெண்களுக்கு மணிப்பிரகாரம் வேலை ஏற்பட்டிருப்பதால், வேறெவ்விதக் கவலையும் சிந்தனையுமின்றிப் படிக்க சௌகரியமாயிருக்கிறது.

ஆச்ரம மேற்பட்ட முக்கிய நோக்கம் சிறு குழந்தைகள் மெட்ரிகுலேஷன் (பிரவேசப்பரீக்ஷை) வரைக்குமாவது படித்துத்தேறி நமது பெண் பாடசாலைகளில் உபாத்தியாயர்களாக வேண்டுமென்பதாதலின் 12 அல்லது 13 வயதிற்குட்பட்ட சிறுமிகள் மாத்திரமே எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள். ஆச்ரமத்திற்கு அடுத்த தெருவிலுள்ள பெண் பாடசாலையில் (Government Secondary and Training School) படிக்கிறார்கள். சாதாரணமாய் 12 வயதில் வந்து சேரும்போது தமிழ்மாத்திரம் அல்லது தெலுங்கு மாத்திரம் படிக்கத் தெரிந்து ஆங்கிலத்தில் எழுத்துகூடத் தெரியாமல் வருகிறார்கள். அவர்களை உடனே பள்ளிக்கூடம் அனுப்பினால் சிறு வகுப்புகளில் அதிகநாள் தாமதமாகுமெனக் கருதி ஆச்ரமத்திலேயே 50 ரூபாய்



கவர்ண்மெண்ட் சம்பளத்திற்கு ஒரு ஆங்கில உபாத்தியாயினி பிரதி தினமும் நான்குமணிநேரம் சொல்லிக்கொடுக்கிறார். ஆதலின் பெண்கள் வந்து சேர்ந்து முதல் மூன்றுமாதம், முதல் ஆறுமாதம் வரைக்கும் வீட்டு உபாத்தியாயினி இடமே ஆங்கிலமும் சிற்சில சமயங்களில் கணக்கும் மாத்திரமே சொல்லிக்கொண்டு பிற்பாடு நான்காவது அல்லது ஐந்தாவது வகுப்பில் சேருகிறார்கள். ஆதலின் ஆச்ரமம் ஆரம்பித்து மூன்று வருஷங்களே ஆகின்றதெனினும் தற்காலம் வருகிற வருஷம் 3 பெண்கள் ஸ்கூல் பைனல் (School Final) பரீக்ஷைக்குப் போகிறார்கள். அதற்குக் கீழ்வகுப்பில் 6 பெண்களிருக்கிறார்கள். தவிர நமது மதபோதனை அவர்களுக்கு அவசியமென்பதாகக் கருதி, அவ்வாச்ரமம் சூபரின்டெண்டென்டாகிய ஸ்ரீமதி சுப்பலக்ஷ்மியம்மாளவர்கள் பிரதிதினமும் மாலையில் அரைமணி நேரம் பகவத்கீதை சனாதன தர்மம் முதலான பலமத கிரந்தங்களைப் படிக்கிறார்கள். பிரதிதினமும் காலையில், கால்மணிநேரம் ஜெபம் செய்தே பிற்பாடு தங்கள் படிப்புகளை ஆரம்பிக்கிறார்கள். மாலையில் 5 மணி முதல் 6 மணி வரைக்கும் பாட்மிண்டன் என்னும் பந்து விளையாட்டு, தோட்டவேலை முதலான தேகாப்பியாசம் செய்கிறார்கள்.

சனிக்கிழமை ஞாயிற்றுக்கிழமைகளில் ஸ்ரீமதி பட்டம்மாள் என்பவர் (ஜட்ஜ் பி. சி. தேசிகாசாரியவர்களின் தமக்கை பெண்) ஆச்ரமத்தில் தனக்குள்ள அபிமானத்தினால் மூன்று மணிநேரம் சம்ஸ்கிருதம் சொல்லிக் கொடுக்கிறார்—தவிர அத்தினங்களில் சிலர் வீணை, சிலர் பிடில், மற்றுஞ் சிலர் ஹார்மோனியம், முதலான வாத்தியங்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இப்படியாக எல்லா வழிகளிலும் இப்பெண்களுக்கு ஞானமுண்டாகிறது. இன்னுஞ் சில வருஷங்களில் நமது பெரிய பட்டணங்களிலுள்ள ஒவ்வொரு பெண் பாடசாலையிலும், இவ்வாசிரமத்திலிருந்து உயர்தரக்கல்விகற்ற பிராமணப்பெண்கள் உபாத்தியாயர்களாக வந்து, வேறு புருஷர்களே உபாத்தியாயர்களாக இல்லாமலிருந்தால், நமது பெண்களை 15 வயது வரைக்குங்கூட நிர்ப்பயமாய்ப் படிக்க அனுப்பலாம். சில பெண்கள் வைத்தியகலாசாலையில் M. B & C. M. முதலான பெரிய பரீக்ஷைகள் படித்து லேடி டாக்டர்களாக வந்தால் நமது பிராமண ஸ்திரீகளுக்கு எத்தனை உதவியாயிருக்கும்?

இப்படியாக இன்ஸ்பெக்டிரஸ் மிஸ் லிஞ்ச், இப்பெண்கள் படிக்கும் பள்ளிக்கூடத்துத் தலைவியாகிய மிஸ் ப்ரோஜர் இவ்விருவருக்கும், இவ்வாசிரமப் பெண்களிடத்திலுள்ள விசேஷ அபிமானத்தினாலும், ஆசிரம உள் நடவடிக்கைகளைக் கவனிக்கும் ஸ்ரீமதிகள் சுப்ப

லக்ஷ்மி, வாலாம்பாளம்மா எவர்களின் ஆதரணை யிலும் இப்பெண்கள் நல்வழியில் போதிக்கப்பட்டு செவ்வனே கல்விகற்று வருகிறார்கள்.

இவ்வாசிரமத்தின் அபிவிருத்தியைக் கோரி நமது காருண்ய கவர்னர் லார்ட் பென்ட்லண்ட் அவர்கள் ஒருதடவையும், கவர்னர் மனைவி லேடி பென்ட்லண்ட் இருதடவையும், மற்றும் அநேக பெரிய மனிதர்களும் ஸ்திரீகளும் வந்து பார்த்து திருப்தியடைந்திருக்கிறார்கள்.

ஆச்ரமம் மேன்மேலும் விருத்தியாகி நமது ஸ்திரீ சமுகத்திற்கு ஒரு நன்மையுண்டாகக் கடவுள் அனுக்கிரகிப்பாராக.



## SOME INDIAN BIRDS (*Continued*)

## பரதகண்டத்து பட்சி வகைகள் (தொடர்ச்சி)

### IV

நம்முடைய வீடுகளுக்கருகாமையில் வசிக்கிற எல்லா பட்சிகளிலுந் தேன்சிட்டைப்போல் அவ்வளவு மனோகரமானது வேறொன்றில்லை. மஞ்சள்மார்புடைய தேன்சிட்டு இவைகளில் வெகு சாதாரணம். அது இந்தியாவின் வெகு சிறிய குருவிகளிலொன்று. அதன் கட்டைவால் அந்தக் குருவியை இன்னுஞ் சிறியதாகத் தோன்றும்படிச்செய்கிறது. அதன்வால் கட்டையாயிருந்தும் மூக்கு நீளம். அதன் இறகு முதுகிலும் கழுத்திலும் பளபளப்பான கறுப்பாயும், மார்பில் வெளுத்த பிரகாசமான மஞ்சளாயுமிருக்கும்.

எங்கள் வீட்டை அடுத்தாற்போலுள்ள ஒரு கல் ஸ்தம்பத்தின் மேல் ஒரு கொடி யேறியிருக்கிறது. அதன் இலைகள் அகன்றதாயும், அதன் ஊதா புஷ்பங்கள் மணிரூபமாயுமிருக்கின்றன. இந்தக்கொடியும், அதன் பக்கத்திலிருக்கும் வாதாரயணமரமுந் தேன்சிட்டுக்கு அதிக உல்லாசமான இடங்கள். சதாகாலை அவைகளின் கட்டைவால்



வெளியே நீண்டும் அவைகளின் நீண்டுவளைந்த மூக்குகள் புஷ்பங்களிலிருக்கவும் காணலாம்.

குளிர்காலத்தில் இந்தக் கொடியண்டை இன்னொரு காட்சியைக் காணலாம். அதிகாலையில் பெரியஇலைகள் பனிநீரால் நிறைந்திருக்கும்போது தேன்சிட்டுகள் நீராட அங்கே வருகின்றன. ஒவ்வொரு இலையுந் தாங்கள் குளிப்பதற்கென்று ஏற்படுத்தப்பட்ட தொட்டியென்று அவைகள் நினைத்தாற்போற் குளிர்ந்த பனித்துளிகளில் தங்கள் செட்டைகளை அடிக்கின்றன.

இந்த இனத்தைச்சேர்ந்த இன்னொரு குருவிக்கு ஊதா தேன்சிட்டு என்று பெயர். அது கையில் அல்லது சமீபத்திலிருக்கும்போது அதன் இறகு ஊதாவர்ணமாயிருக்கும்; ஆனால் சற்று தூரத்திலிருக்கும்போது கறுப்பாய்த் தோன்றும். இந்தக் குருவி இந்தியா முழுவதிலுங் காணப்படுகிறது. மலைபிராந்தியங்களில் இதை 5,000 அடி உயரம் வரையிற்காணலாம். என்றாலும் வடஆற்காடு ஜில்லாவில் மஞ்சள் தேன்சிட்டைப்போல் இதை அவ்வளவு அடிக்கடி நான் பார்த்ததில்லை. இது இந்தியாவுக்கு வெளியில் மேற்கே பாரசீகம் வரையிலும், கிழக்கே கொச்சின் சீனாவரையிலும் காணப்படுகிறது.

ஒரேஜாதி பட்சியில் ஆணுக்கும் பெட்டைக்கும் சாதாரணமாய் முழுதும் வித்தியாசமான தோகையுண்டென்பது எல்லாருக்குந் தெரிந்த விஷயமே. இந்த வித்தியாசம் ஊதா தேன்சிட்டில் நன்றாய்த் தெரியும். ஆண் முழுவதும் இருண்ட ஊதாவாயிருக்கப் பெட்டைக்கு மேல்பாகம் இருண்ட பச்சையாயும், கீழ்பாகம் மஞ்சளாயுமிருக்கிறது. இதிலும் நூதனமான விஷயமொன்று என்னவென்றால் ஆணுக்கு வித்தியாசமான காலங்களில் வித்தியாசமான வர்ணமுண்டு. முட்டையிடுங்காலம் முடிந்தவுடனே, ஆணுக்கு கறுப்புவர்ணம் நீங்கித் தொண்டையிலிருந்து மார்புவரையில் ஓடும் ஒரு ஊதாகோடு தவிர, பெட்டையைப்போலவே நிறம் மாறுகிறது.

நமது தோட்டங்களைச் சந்திக்கும் இன்னொரு குருவியைத் தமிழர் சாதாரணமாய்த் தலையில்லா குருவி (Fan-tailed Fly catcher) யென்று சொல்லுவார்கள். அது சாதாரணமாய் ஓரிடத்தில் உட்கார்ந்திருந்து பறக்கிற ஒரு பூச்சியைக் கண்டவுடனே பாய்ந்துப் பிடித்துக்கொண்டு, முன் குந்தியிருந்த இடத்திற்கே மறுபடியும் வந்து சேரும். தலையில்லா குருவி ஏறக்குறைய ஏழு அங்குல நீளமிருக்கும். நிறத்தில் புகைவர்ணமென்றாலும், கண்புருவமும் வால் நுனியும் வெண்மையாயிருக்கும்.

அதைப்பற்றி ஒரு விசேஷம் என்னவென்றால், அது கிளைக்குக் கிளை தாண்டும்போதும் தரையில் குதித்துப் போகும்போதும் அதன்

வாலை விசிறிபோல் திறந்து மூடிப் பக்கத்துக்குப் பக்கம் திருப்புகிறது. ஒரு குருவி தன்வாலை மூடித்திறக்கும்போது அது தலையில்லா குருவியென்று கண்டுகொள்ளுவாய்.

Miss A. B. VanDoren.

## THE NEW CREATION *(Continued)*

## புது சிருஷ்டி (தொடர்ச்சி)

### ஒரே பாய்ச்சல்

*(a)* பத்து மாதக் கர்ப்பஸ்திரீயோடு சுமார் நாலரை நாள் பயணம் நாசரேத்தூரிலிருந்து பெத்லகேம் ஊருக்குப் போகிறது.

*(b)* ஏறக்குறைய இரண்டு வயதுப்பாலகனை வந்தி நாற்பது நாள் பயணம் எகிப்து தேசத்திற்கும் போகிறது.

*(c)* அங்கிருந்து சுமார் 50 நாள் பயணம் மூன்று நாலு வயதுப் பாலகனை எடுத்துக்கொண்டு போகிறது. இந்த மூன்றையும் செய்ய ஒப்பந்த சம்பளம் பேசினாலுங்கூட, கூலிக்கு ஆள் கிடையாது. கால் நடைப்பயணமானால், இக்காலத்து வாலிப ஸ்திரீகள் புருஷரை விட்டுப்பிரிந்துபோக நேரிடும். புருஷரும் சுமக்கிறதைவிட உதறிப்போடுகிறது நலமென்று எண்ண நேரிடுமே. யோசேப்பின் அன்பே: நீயடைந்த தயாள சிந்தையையும், கலங்கா மனதையும், கைவிடா நோக்கத்தையும், கனிந்துருகும் கஷ்டகாலங்களில் கையில் இல்லாதபொருளைச் சம்பாத்தியம் பண்ணிக்கொடுத்து, பூரண சவதரிப்புச்செய்து வரும் சமர்த்தையும், ஒரே அடியில் ஒரே பாய்ச்சலில் செய்து முடித்தாயே; நீயே சிங்கம்.

2. பெண் சிங்கமும் பால சிங்கமும் துள்ளிக் களிகூர்ந்து மகிழ்ந்திருக்கும்போது, ஆண்சிங்கம் அமர்ந்து, அசைவின்றிப் பார்த்துக்கொண்டிருக்கிறது. ஆண்தகை.

3. தன் குடும்பச் செலவுக்குத் தேவையானதை வெகு சீக்கிரத்தில் சவதரித்துக் கொடுத்துவிடுகிறது. நுகப்பன்.

பாலகனாகிய இயேசுவை மேய்ப்பர் பார்க்கவந்தபோது புல்லணை, கந்தை; அந்நியராகிய சாஸ்திரிகள் வந்தபோது வஸ்திரங்களினாலும் பாலகன் சிறப்பாய் விளங்கினார். ஆகையால் ராஜமேன்மை பொருந்தின இவரைவிட வேறே குழந்தைகள் கிடையாதென்று சாஷ்டாங்கமாய் விழுந்து பணிந்துகொண்டார்கள். ஆனால், இரவில் வெகு நேரத்திற்குப் பிறகு, சொற்பக் கூலியும் வாங்கிக்கொண்டு தச்சுவேலை



ஆயுதங்களையும் சுமந்துகொண்டுவந்த 'யூதருக்கு ராஜா' வினுடைய் தகப்பன், வீட்டுக்குள் பிரவேசித்தது: சாஸ்திரிகளுக்கு என்னமாயிருக்கும்? அவர்கள் வாய் பேசாமற்போனது மாத்திரமல்ல, மனமுந் திமிர்பிடித்துப்போனார்கள்.

கைத்தொழிலை அற்பமாய் எண்ணிவந்த சாஸ்திரிகளுக்கு மேனத்து அல்ல, உழைப்பே ஒரு மனுஷனைப் பூரணப்படுத்தும் என்பதற்கு இதைவிட வேறே என்ன இரகசியம் சொல்லவேண்டும்?

4. பெண்சிங்கமாவது பாலசிங்கமாவது தங்கள் பாட்டைத் தாங்களே பார்த்துக்கொள்ளட்டும், அல்லவென்றால் எனக்குத் தேடிக் கொண்டு வந்து போடட்டும் என்ற எண்ணமே மனதில்பட இடங்கொடாமலிருந்தது. மிருகேந்திரன் ஐயோ! பாவம்! யோசேப்புக்குச் சாலொமோனால் கிடைத்த மேன்மை 'மரியாள்' என்ற ஒரு பெண்ணே. நகை உண்டா? சொத்துண்டா? கைப்பொருளுண்டா? அனாதிப் பெண் ஆனாலும் அவளை ஊழியங்கொள்ள அல்ல, அவளுக்கு ஊழியஞ் செய்யவே ஒப்புக்கொண்டார். மாம்சத்தின்படியே, எகோனியாவோடு சாலொமோன் வம்சம் அற்றுப்போயிற்று. (ஏசா. 22. 25; எரே. 22. 30). இந்தக் குலத்தின் மேன்மை செருபாபேலின் மகன் ஒருவனுக்குப் போனது. அவன் குலமும் மரியம்மாளோடு அற்றுப் போகிறதாயிருந்தது. ஏனென்றால், அவளுடைய பந்துக்களில் அநேகர் லேவியராகத் தெரிகிறது (மல்கி. 3: 3.) அவர்கள் குடிமதிப்பின் காலத்தில் பங்குக்கு நிற்கவில்லை, வரவுமில்லை.

4. கிறிஸ்து இரட்சகரை அசட்டை பண்ணின நாத்தான் குலமே வெட்கமடைந்து அவரை ஏற்றுக்கொள்ளும் (சகரி. 12: 10). சாலொமோன் பேர்முதலாய் இஸ்ரவேலுக்கு கர்த்தர் இராஜ்யத்தைக் கொடுக்கும் காலத்தில் சொல்ல ஏதுவிராது, அது நாத்தான் வீட்டிற்கும் (ஏசா. 22: 22-24) செருபாபேலுக்கும் (சகரி. 4: 9) அவன் குலசிகாமணியாகிய யோசேப்புக்கும் உறுதிபண்ணப்பட்டது. மரியம்மாளையும், அவர்களுடைய இரண்டு சகோதரிகளில் ஒருத்தியும் அவள் ஆறுபிள்ளைகளையும்; இன்னொருத்தியும் அவள் இரண்டு குமாரரையும் அடுத்த அதிகாரத்தில் எடுத்துப்பேசுவோம். சுருங்கச் சொன்னால், மரியம்மாளுக்கு யோசேப்பைவிட நெருங்கின பந்துக்களாவது அவள் தகப்பன் வீட்டைத் தனதாக்கி அதிகாரம் செலுத்தும் உறவின்முறையாராவது வேறே கிடையாது. மரியம்மாள்: அவர் 'தமது அடிமையின் தாழ்மையை நோக்கிப்பார்த்தார்' என்று சொன்னதையும் லூக் 2: 4-ல் 'யோசேப்பு தாவீதின் வம்சத்தானும் குடும்பத்தானுமாயிருந்தான்' என்பதையும் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

5. வீட்டைவிட்டு வெளியேறுகிறதுண்டானால் வீட்டின் லாபத்

தையே தேடிப்போய் லாபத்தோடு திரும்புகிறது. (3-ம் குறிப்பு கலந்து வாசிக்கவும்.) இல்லற நேசன்.

6. பிழைப்பின் அவசரங்களினிமித்தம் தூரமான இடங்களுக்குச் சென்றிருந்தாலும், பூர்வீகமான முன்னோர் இடத்தை மறவாமலிருப்பது (லூக். 2: 41) சிங்கமானது: ஏக வெளியில் பெண் சிங்கத்தோடும் குட்டிகளோடும் அடிக்கடி ஒரே இடத்தைக் குறிப்பிட்டு அங்கு வந்து படுத்திருக்கும் புலி காடிகளைப்போல் புதரில் ஒளித்திராது. சீயோனை நேசித்த யோசேப்புக்குச் சீயோனே. சிங்கத்தாவு.

6. ஏழையாய்ப் போனாலும் யோசேப்புக்கே தேவாலயம் சொந்தம் (1 நாளா. 22: 1).

இவ்விடத்தில் ஆசாரியன் அல்லாத தன் பிதாவாகிய தாவீது பலி செலுத்த, தேவன் அதை அங்கிகரித்தார் (1 நாளா. 21: 26. சகரி. 4: 9). இதிலுண்டான மாம்சப்பிரகாரமான அதிகாரப்படியேயும், தேவனுடைய சித்தத்தின்படியேயும் (சகரி. 6: 13). இயேசு இரட்சகர் 'என் பிதாவின் வீடு' என்கிறார். தேசாபிமானி: மதாபிமானி, மதாபிமானி: குலாபிமானி, குலாபிமானி: தேவதாபக்தன். பக்தன் தன் நடத்தையில் சுத்தமுள்ளவன்.

7. எந்த ஆபத்திலும் மோசத்திலும் புறத்தியார் கையை எதிர்பாராமலும், வறுமையிலும் தன் வசம் 'உள்ளதைக்கொண்டே நல்லதைச் செய்துகொள்வது.' ராஜலக்ஷணம் பொருந்திய குழந்தைக்கு 'புல்லுங்கந்தையும்' போதுமென்று அங்கே படுக்கவைத்துக்கொண்டது. பலிக்கான ஆட்டுக்குட்டிக்குக் காசு சிக்காவிட்டால் 'காட்டுப்புறா' போதுமென்று பலிசெலுத்தினது. காரிய சமர்த்தன்.

8. 'கானா ஊரானாகிய நாத்தான்வேலிடம்' (யோவா. 21: 2). 'பெத்சாயிதா பட்டணத்தானாகிய பிலிப்பு' (1: 44) 'யோசேப்பின் குமாரனே: மேசியா' என்றபோது யோசேப்பின்பேரிலாவது அருமை ஆண்டவர்பேரிலாவது குற்றஞ்சாட்ட யாதொரு வழியுங்காணாமல், ஊரைத்தான் பழித்துப்பேசுகிறான். தேவனுடைய மனுஷனுக்கு அடுத்த ஊர்க்காரன் சாட்சி மிக அவசியமானது. நாசரேத், கானா, பெத்சாயிதா, கப்பர்நகூம் எல்லாம் 4, 8, 10 மைல்களுக்குள்ளாக அடுத்தடுத்துள்ள கிராமங்கள்தான். பந்துக்களாகவும் இருந்தார்கள். அடுத்த ஊர்க்காரன் சாட்சியைவிட அடுத்த வீட்டுக்காரன் சாட்சி நல்லது. மரணத்துக்குப் பின்னிட்டும் 'இஸ்ரவேலில் களங்கமற்ற ஒரு உத்தமனால்' குற்றஞ்சாட்டப்படாத உத்தம புருஷன்.

8. களங்கமற்ற சிந்தையுடையவர்களே! பின்புறணி பேசமாட்டார்கள். குற்றங் கண்டாலுங் கர்த்தாவிடஞ் சொல்லுவதே



யன்றி காரியத்துக் குதவா வீணரிடஞ் சொல்லி வெளியேற்றமாட்டார்கள். யாரையும் அற்பமாய் எண்ணமாட்டார்கள். யாருடைய சஞ்சலத்திலும் மகிழ்ச்சியடையமாட்டார்கள். நன்மை செய்கிறதிலேயேயன்றி மற்றொரு விஷயத்திலும் புறத்தியார் காரியத்தில் தலையிடமாட்டார்கள். அன்பற்ற அதிகாரம் அவர்களுக்குக் கண்ணிவிட்ட படிகாரம். நியாயமான காரணம் நேரிட்டாலும் துணிந்து சண்டைபோடமாட்டார்கள். சத்தியத்திற்குச் சாட்சிகொடுப்பதிலோ உற்சாகமும் ஊக்கமும் ஆண்மையும், அளவற்ற தைரியமும் உள்ளவர்கள். இவர்களுக்கே தேவதரிசனங்கிடைக்கும். தரிசனங்கிட்டினாலும் இவர் மேட்டிமை யடையமாட்டார்கள். அருமை ரட்சகர் வசனத்தினால் மாத்திரமல்ல 'ஆவியினாலும்' உண்மையினாலும், இவர்களிடம் அன்புகூருகிறார்.

ஒரு நிமிஷம் கையிலேந்திய 'பாலகனை' கண்டு மகிழ்ந்த சிமியோனைக் குறித்து

'என்ன பாக்கியம்—எவருக்குண்
டிந்த சலாக்கியம்?' என்று

ஒரு சர்ச்சு மிஷன் உபதேசியார் பாடியிருக்கிறார். அப்படியானால் சர்வலோக சிருஷ்டி கர்த்தனும் கூட 'அப்பா' என்று அழைத்த 'அன்பனை' சகல புருஷர்களிலும் மகா யோக்கியன் என்று சொல்லத் தடையென்ன? இராஜலக்ஷணம் குடும்ப பரிபாலனம், தேவதா பக்தி, மனநேர்மை, குணமேன்மை, சினந்தாங்கல், எடுத்ததையெல்லாம் அன்போடு துவக்கி இன்பமாய் முடித்தல், இவை முதலிய அமிர்தகுண சுகிர்த புருஷனே மணவாள சிங்கம். இவரைக் கண்ணுற்று கண்டாலும், இவர் வாய்மொழிப்படி ஒரு அற்பக்காரியம் செய்தாலும் அது ஒருபோதும் வீண்போகாது.

## THE KING'S CUP-BEARER *(Continued)*

## ராஜாவுக்குப் பானங்கொடுப்போன் (தொடர்ச்சி)

### XIV. அத்தியாயம்

முதல்திரை நீக்கப்பட்டாயிற்று. தொபியாவின் சாமான்கள் ஆலயத்திற்குப் புறம்பே தள்ளப்பட்டாயிற்று. நெகேமியா அடுத்த காரியத்தைச் செய்யப்போகிறார். இதுதான் எருசலேமுக்கு வந்தவுடனே அவருக்கு மகாவிசனத்தைக் கொடுத்தது. அதென்ன? ஆலயத்தின் ஊழியத்திற்கென்று ஜனங்கள் கொடுக்கவேண்டிய அவரவருடைய



பாகங்கள்தான். ஆளுகிறவர்களையும் ஜனங்களை நடத்துகிறவர்களையும் ஜனங்களெல்லாருக்கும் பதிலாக அழைத்து இந்த விஷயத்தில் தனக்கிருக்கிற விருப்பத்தை வீரதீரமாய் வெளிப்படுத்துகிறார். மெதுவான வார்த்தைகளைச் சொல்லவில்லை. 'நான் அவர்களோடு வழக்காடி அவர்களைக் கண்டித்து (அவர்களோடு வாதாடி) தேவனுடைய ஆலயம் கைவிடப்படுவானேன் என்று சொன்னேன்' என்கிறார். அவர் கேட்டுக்கொண்டவற்றிற்கு மறுமொழி கிடைக்கும்படி காத்திராமல், லேவியரையும் பாடகரையும் வந்து மறுபடியும் வேலை தொடங்கிச் செய்யும்படியாகச் சொல்லியனுப்புகிறார். இந்த விஷயம் தீர்மானிக்கப்பட்டாயிற்று, இதை விட்டுவிடுவது கூடாத காரியம் என்று கண்டு, ஜனங்களெல்லாரும் தானியம், திராட்சரசம், எண்ணெய் முதலியவற்றைக் கொண்டுவந்து வெறுமையான அறைகளை நிரப்பினார்கள். 'அப்பொழுது யூதர் எல்லாரும், தானியம், திராட்சரசம், எண்ணெய் என்பவைகளின் தசமபாகத்தைப் பொக்கிஷ அறைகளில் கொண்டுவந்தார்கள்.

இப்படிப்பட்ட காரியம் மறுபடியும் சம்பவியாதபடி தடுக்கும்படியாக, ஆலயப் பொக்கிஷங்களை ஜாக்கிரதையாய் விசாரிக்கும்



படி உக்கிராணக்காரரை நியமித்தார். முன் காலங்களில் எலியாசிப் உக்கிராணக்காரனாய் இருந்தார். ஆனால் அவர் தன்னுடைய வேலைக்கு அபாத்திரவானாகக் காணப்பட்டார். பொக்கிஷங்களைச் சேகரிக்கும்படியாக நாலுபேர் ஏற்படுத்தப்பட்டார்கள். பிற்பாடும், அவர்கள்தான் அதை ஆசாரிமாருக்கும், லேவியருக்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டியவர்களாயிருந்தார்கள். ஒருவன் ஆசாரியன், ஒருவன் லேவியன், ஒருவன் கனம்பெற்ற சபையான், மற்றவன் வேதபாரகன் (5–13). இவர்களை ஏற்படுத்தினதற்குக் காரணம் 'அவர்கள் உண்மையுள்ளவர்களென்று எண்ணப்பட்டார்கள்' ஆகையால் இவர்கள் தங்கள் வேலையைச் சரியாய் நிறைவேற்றுவார்களென்று நம்பலாம்.

இப்போ, தேவாலயத்தை ஒழுங்காய் வைத்துவிட்டு, ஓய்வுநாளை ஆசரிப்பதைப்பற்றிய விஷயத்தில் ஜனங்களோடு போராடப்போகிறார். மறுபடியும் பிரபுக்களோடு காரமாயும் பலமாயும் பேசுகிறார். இவர்கள்தான் ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்கினதற்குக் காரணமாயிருந்தார்கள். முதலாவது இடங்கொடுத்தது இவர்கள்தான். நேர்த்தியான பழங்களும், ருசியான பதார்த்தங்களும், தங்களுடைய ஓய்வுநாள் சாப்பாட்டிலிருக்கும்படி விரும்பினார்கள்.

ஆகையால் ஓய்வுநாளிலும் வியாபாரம் நடக்கும்படி இடங்கொடுத்தார்கள். அதுமாத்திரமல்ல, உற்சாகப்படுத்தினார்கள். அதற்கு இசைவாக, தற்காலத்திலும் நடக்கிறதுபோலவே, அநேக ஜனங்கள் நாலாங் கற்பனையை மீறும்படி பிரயத்தனம் செய்த பிரபுக்களுக்கு இசைவாகவே நியாயஞ் சொல்லுகிறவர்களாயிருந்தார்கள். இவ்வளவு கஷ்டப்பட்டுக் கட்டின நகரமாகிய எருசலேம் பட்டணத்தின் அழிவு, ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்கினதினாலேதான் என்று அந்தப் பிரபுக்களுக்கு நினைப்பூட்டுகிறார். எரேமியா அவர்களுடைய முற்பிதாக்களுக்குச் சொன்ன வார்த்தைகளாவன: 'நீங்கள் ஓய்வுநாளைப் பரிசுத்தமாக்கும்படிக்கும், ஓய்வுநாளிலே சுமையை எருசலேமின் வாசல்களுக்குள் எடுத்துவராதிருக்கும்படிக்கும், என் சொல்லைக் கேளாமற்போனீர்களாகில், நான் அதின் வாசல்களில் தீக்கொளுத்துவேன். அது எருசலேமின் அரண்களைப் பட்சித்தும், அவிந்துபோகாதிருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்' (எரே. 17. 27). தேவனுடைய வார்த்தைகள் மெய்யாயிற்று. அவர்களுடைய முற்பிதாக்கள், தேவனுடைய எச்சரிப்பை அலட்சியம் செய்தார்கள். ஓய்வுநாளை மீறிக்கொண்டேவந்தார்கள். ஆகையால் நேபுகாத்நேச்சார் ஓய்வுநாளில் சுமை கொண்டுவரப்பட்ட அதே வாசல்களை அழித்து அக்கினியால் சுட்டெரித்தான். அப்படியானால் இப்போது

அவர்களுக்கு என்ன நம்பிக்கையுண்டு? தங்களுடைய முற்பிதாக்களின் அடிச்சுவடுகளிலே நடந்து, தேவன் எரேமியாவின் வாயினால் கண்டித்த அதே விஷயத்தைச் செய்தார்களானால், புதிதாய்க் கட்டப்பட்ட இந்த வாசல்களை அழிவிலிருந்து எப்படி நீக்கிக்கொள்ளக்கூடும்? 'ஆகையால் நான் யூதாவின் பிரபுக்களைக் கடிந்துகொண்டு நீங்கள் ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிற இந்தப் பொல்லாத செய்கை என்ன? உங்கள் பிதாக்கள் இப்படிச் செய்ததினாலல்லவா நமது தேவன் நம்மேலும், இந்த நகரத்தின்மேலும், இந்தத் தீங்கையெல்லாம் வரப்பண்ணினார். நீங்களோவென்றால் ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறதினால், இஸ்ரவேலின்மேலிருக்கிற உக்கிரத்தை அதிகரிக்கப்பண்ணுகிறீர்கள் என்று அவர்களுக்குச் சொன்னேன்' என்கிறார். நெகேமியா பெரியோர்களைக் கடிந்துகொண்டபோதிலும் இங்கே நின்றுவிடவில்லை. இன்னும் ஆழமாய்ப் போகிறார். வெள்ளிக்கிழமை சாயரட்சைகளில் வழக்கமாய்ச் சாத்துகிறதற்கு அரைமணி நேரத்திற்கு முன்னதாகவே வாசல் கதவுகளைச் சாத்தும்படியாக வாசல் காப்போருக்குக் கட்டளையிடுகிறார். மற்ற இரவுகளில் சூரியன் அஸ்தமித்தவுடனே சாத்துவார்கள். வெள்ளிக்கிழமைகளில், நிழல் நீண்டிருக்கும்போதே, நாள் முடியுமுன்னதாகவே கதவுகளைச் சாத்திவிடுவார்கள். இனிமேல் ஓய்வுநாள் முழுவதும் அந்தக் கதவுகள் சாத்தப்பட்டேயிருக்கவேண்டும். கழுதை, கோவேறு கழுதை, ஒட்டகம், மற்றெந்த சுமைகொண்டு வருகிற மிருகமும் பரிசுத்த நாளில், வாசல்வழியாய் நகரத்திற்குள் பிரவேசியாதபடி கதவுகள் மூடப்படவேண்டியது அவசியமாயிருந்தது. இந்தப் பெரிய வாசலுக்குள்ளே சின்னவாசலொன்றிருந்தது; அதன் வழியாய்ப் பட்டணத்திற்கு வருகிறவர்களும் போகிறவர்களும் கால்நடையாய்ப் போகலாம், அதுமாத்திரம் சுற்று கிராமத்திலுள்ளவர்கள் தேவாலயத்திற்கு ஆராதனைக்கு வரும்படியாகத் திறந்து வைக்கப்பட்டிருந்தது. இந்த வாசலிலும் தன்னுடைய உத்தமமான ஊழியக்காரரைக் காவலாகவைத்து, ஓய்வுநாளில் சுமைகளாவது, கூடைகளாவது, மற்றெந்த சாமானாவது, உள்ளேவர இடங்கொடாதபடி, கண்டிப்பாய் உத்தரவு கொடுத்திருந்தார் (13. 19). சாதாரணமாய் வியாபாரிகளும், விற்கிறவர்களும் ஓய்வுநாளில் தங்களுக்கு வரும் வருமானத்தை எளிதாய் இழந்துபோகமாட்டார்கள். அவர்கள் என்ன செய்தார்களென்று பார்ப்போம். பட்டணத்திற்குள்ளே வர தடைசெய்யப்பட்டவுடனே, வெளியே கடை பரப்ப ஆரம்பித்தார்கள். எருசலேம் பட்டணத்திலுள்ளவர்கள், கடினக் கழுத்தும் குறுகிய மனமுடைய நெகேமியாவினிமித்தம் வாங்காவிட்டாலும், கிராமங்



களிலிருந்து ஆலயத்திற்கு வரும் ஜனங்களாவது, தங்கள் வீடுகளுக்குப் போகும்போது வாங்கிக்கொண்டு போவார்களே. இவ்விதமாய் ஓய்வுநாளிலும் தங்கள் வேலையைச் செய்து, அதிகலாபம் கிடையாவிட்டாலும், கொஞ்சமாவது பணம் சம்பாதிப்பார்கள். இதுமாத்திரமல்ல, பட்டணத்திலுள்ள யூதர்களும் இந்த நாளில் இந்த வாசல்வழியாய் உலாவுகிறவர்களாக, தங்கள் மடிகளில் ஒரு மாதுளம்பழம், மெலாம்பழம், அல்லது மீன், அல்லது புதிதாய்ப் பறித்த வெள்ளரிக்காய் அல்லது திராட்சக்குலை இவைகளை மறைத்து வைத்து வாசலில் நிற்கிற நெகேமியாவின் வேலைக்காரருக்குத் தெரியாமலே வீடுகளுக்குக் கொண்டுபோய் விடுவார்கள். இப்படி எருசலேமின் குடிகளில் அநேகர் செய்தார்கள். நெகேமியா இவைகளையும் கவனித்து இன்னும் ஆழமாய் வெட்டவேண்டுமென்று உணர்ந்தார். இந்த வியாபாரிகள் வாராதபடி தடுக்கவேண்டும். அவர்களண்டைபோய் மறுபடியும் ஓய்வுநாளில் பட்டணத்திற்குச் சமீபமாய் வந்தால், பிடித்து சிறைச்சாலையில் அடைக்கப்படுவார்களென்று எச்சரித்தார். 'அதினால் வர்த்தகரும், சகலவித சரக்குகளை விற்கிறவர்களும், இரண்டொருதரம் எருசலேமுக்கு வெளியே ராத்தங்கினார்கள். அப்பொழுது நான் அவர்களைத் திடசாட்சியாய்க் கடிந்துகொண்டு, நீங்கள் அலங்கத்தண்டையிலே ராத்தங்குகிறதென்ன? நீங்கள் மறுபடியும் இப்படிச் செய்தால், உங்கள்மேல் கைபோடுவேன்' இது ஒரு நல்ல வழி. 'அது முதல் அவர்கள் ஓய்வுநாளில் வராதிருந்தார்கள்' (13. 20, 21). பிற்பாடு இதிலிருந்து இந்தக் கட்டளையைச் சரியாய் நிறைவேற்றும்படி லேவியருக்கு உத்தரவாதமான வேலையைக் கொடுத்தார். ஆரம்பத்தில் தன்னுடைய ஊழியக்காரர் காவல் செய்து வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்தார்கள். இப்பொழுது லேவியர் அந்த வேலையைச் செய்து, தங்கள் முழு பலத்தோடே பரிசுத்த நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்கும்படியாகத் தகுந்த ஏற்பாடுகளையும் முயற்சிகளையும் செய்யட்டும். இப்போ நம்முடைய தேசத்திலும், மெதுவாயும், கொஞ்சங் கொஞ்சமாயும் ஓய்வுநாள் ஆசரிப்பு அலட்சியஞ்செய்யப்பட்டுவருகிறது. இதை நிறுத்திப்போடும்படியாக பலமாய் வேலை செய்கிற தற்காலத்து நெகேமியர்கள் நமக்குள்ளும் எழும்பவேண்டியது அவசியமாயிருக்கிறது.

குறுகிய புத்தியான், இடுக்க மனமுடையோன், யூதத்தனமுடையான் என்று பலவாறாய் அழைக்கப்பட்டபோதிலும் பயப்படாமல் இப்பேர்ப்பட்ட விசேஷித்த விஷயத்தைப்பற்றி தன்னுடைய மனதைத் தெளிவாயும் திட்டமாயும் வெளிப்படுத்தி, ஓய்வுநாள் மீறுதலை அடியோடே தொலைத்து, நம்முடைய தேசத்திற்கு அழிவு உண்டாக்

க்கூடிய தேவனுடைய கட்டளையை மீறுதலாகிய பாவத்தை நீக்கக் கூடிய திடசித்தமுள்ள மனிதர் நமக்குள் எழும்பவேண்டியதவசியம்.

நாமொவ்வொருவரும் மனுஷனானாலும் ஸ்திரீயானாலும் நான் இந்த விஷயத்தில் எப்படி நடந்துகொள்ளுகிறேன் என்று விசாரித்தறிவோமாக. ஓய்வுநாளை நான் எப்படி ஆசரிக்கிறேன். தேவன் முழு நாளையும் கேட்கிறார். நான் அப்படியே கொடுக்கிறேனா? அல்லது மிகுதியான நேரத்தைப் படுக்கையில் செலவிடுகிறேனா? கர்த்தருடைய நாளில் எனக்கே பிரியமாய் நடவாமலிருக்கிறேனா அல்லது அந்தநாளில் எனக்கு இஷ்டமானபடி நடந்துகொண்டு அதினால் வெட்கமில்லை என்று நினைக்கிறேனா? பிரயாணம் பண்ணுவதினாலாவது, பக்திக் கடுக்காத புஸ்தகங்களை வாசிப்பதினாலாவது, இன்னும் மற்றும் தகாத காரியங்களைச் செய்வதினாலாவது என் இஷ்டப்படி செய்கிறேனா? அந்த முழு நாளையும் முற்றிலுமாய் கர்த்தருக்கென்று தத்தம்செய்ய ஆவலாயிருக்கிறேனா? அவருடைய ஊழியத்திற்கென்றே அந்தநாளைப் பிரத்தியேகமாய் வைக்க விரும்புகிறேனா? வைக்கிறேனா? இனிமேல் வரப்போகிற மாட்சிமையான நித்திய ஓய்வுநாளுக்கு முன்னடையாளமாக நான் அதை இங்கேயே ருசிபார்க்கிறேனா? நான் கர்த்தருடைய ஓய்வுநாளை மதித்துக் கைக்கொள்ளுவேனானால், எனக்குக் கீழ்ப்பட்டவர்களும் அதே மாதிரியாகச் செய்கிறார்களா என்று கவனிக்கிறேனா? என்னுடைய பிள்ளைகளும் ஊழியக்காரரும் என்னைப் பார்க்க வருகிறவர்களும் இன்னும் வீட்டிலிருக்கும் மற்றெல்லாரும் ஓய்வுநாளை என்னைப்போலவே ஆசரிக்கவேண்டுமென்று விரும்புகிறேனா? என்னால் கூடியமட்டும் இந்த விஷயத்தில் அவர்களுக்கு உதவி செய்கிறேனா? என்னுடைய வீட்டிலாவது, தேவனுடைய பங்கு கிடைக்கும்படியாகப் பிரயாசப்படுகிறேனா? என் வீட்டில் ஓய்வுநாள் சரியாய் ஆசரிக்கப்படுமானால், வெளியே, என்னுடைய பட்டணத்தில், அல்லது கிராமத்தில் எனக்குப் பழகினவர்களிடத்தில் சிநேகிதரிடத்தில் நான் என்ன செய்கிறேன்.

(இன்னும் வரும்).

## SORE EYES—HOW TO PREVENT THEM

## கண் நோவு

கண் நோவு குழந்தைகளுக்கும் பிள்ளைகளுக்கும் பெரும்பாலும் வருவது வழக்கம். கண்களில் அழுக்கு சேருவதினாலும், ஈக்கள்



அல்லது கொசுக்களின் மூலமாயும், மணல், தூசி கண்ணுள் செல்லுவதினாலும் கண் நோவு உண்டாகிறது. கண் நோவு உண்டானவுடன் சீக்கிரத்தில் அதற்கு தகுந்த பக்குவங்கள் செய்து அதை அதிகரிக்காதபடி தடுக்கவேண்டும். அப்போது இரண்டொரு தினத்தில் பூரணசுகம் கிடைக்கும்.

தாமதித்தால் கண்ணுள் உண்டான புண் வெகு சீக்கிரத்தில் அதிகப்பட்டு பிள்ளையின் கண் திறக்கமுடியாமல் கஷ்டப்படுவதோடு கூட, கண் இறப்பைகளில் சதை வளர்ந்து உபத்திரவப்படும். சில சமயங்களில் கண்ணின் நடு கருவிழியில் பார்வை மறையத்தக்க ஒரு விதமான வெள்ளை படர்வதும் உண்டு. இதைக் கவனியாமல் சிலர் தங்கள் சொந்த வைத்தியங்களைச் செய்து பிள்ளைகளின் கண்கள் குருடாய்ப் போவதற்குக் காரணராய் இருக்கிறார்கள். கண்ணுள் வெள்ளை படர்ந்துகொண்டு போவதை அறியாமல் மற்றவர்கள் சொல்லும் நாட்டு மருந்துகளை ஊற்றுவதினால் இந்தமாதிரி கெடுதி உண்டாகிறது. வைத்தியசாலைக்குச் சமீபமாய் வசிப்பவர்கள் உடனே பிள்ளைகளைக் கொண்டுவந்து சிகிச்சை பெற்றுப் போகவேண்டும். கிராமங்களில் வசிப்பவர்களுக்குச் சமீபத்தில் வைத்தியசாலைகளிரா விட்டால், பிள்ளைகளை அப்படிப்பட்ட இடங்களுக்கு எடுத்துக் கொண்டுபோவது நல்லது.

ஒரு வீட்டில் கண் நோவு ஒரு பிள்ளைக்கு வந்திருந்தால், அந்தப் பிள்ளையை மற்ற பிள்ளைகளுடனிராமல் வேறுபடுத்தி, இன்னொரு இடத்தில் வைக்கவேண்டும். அதோடு அந்தப் பிள்ளையின் முகம் துடைக்க உபயோகிக்கும் துண்டை, வீட்டிலுள்ள மற்றப் பிள்ளைகள் அல்லது பெரிய ஆட்கள் முகம் துடைத்துக்கொள்ள உபயோகிக்கக்கூடாது. ஏனெனில், கண் நோவு யாருக்கும் தொற்றக்கூடியது. இன்னும் கண் நோவுள்ள பிள்ளையின் கண்களின் இறப்பைகளில் உட்கார்ந்த ஈக்கள் அல்லது கொசுக்கள் மற்றவர்கள் கண் இறப்பைகளில் உட்கார்ந்தால், அதன் மூலயாயும் கண் நோவு தொற்றக்கூடும்.

விசேஷமாய் காற்றடி காலங்களில் கண் நோவு வருவது வழக்கம். அந்தக் காலங்களில் பிள்ளைகள், குழந்தைகள் கண்களில், மணல், தூசி பிரவேசியாதபடிக்குப் பார்த்துக்கொள்ளவேண்டும். கண்களில் அழுக்கு சேர்ந்து, அவற்றினுள் வலி எடுப்பதாக தோன்றினால் அந்த சமயத்திற்கேற்ற பரிகாரமாக நன்றாய்க் கழுவின ஒரு சிறு பாத்திரத்தில் சுத்த ஜலத்தை ஊற்றிக் கொதிக்கவைத்து, அது ஆறின பின்பு மெல்லிய வெள்ளை இளந்துணியை அதில் நனைத்து கண்களைக் கழுவுதல் நல்லது.

## RIDDLES AND PUZZLES

## விடு கதைகள்

1. பொரிச்சதில் நடந்த தென்ன?
அவிச்சதில் பச்சை யென்ன?
அரைச்சதில் முளைத்த தென்ன?
2. மாமிசமும் எலும்பும் இல்லை
ஆனால் ஐந்து விரல்களுடையது.
இது என்ன?
3. இத்தினி இத்தினி பூ பூக்கும்,
அப்படா அப்படானு காய்காய்க்கும்.
இது என்ன?

---

ஜுலை மாசத்தில் கொடுத்த விடு கதைகளின் விடைகள்

1. பூசணிக்காய்.
2. எரியும் விளக்குத் திரி.
3. வெண்காயச் செடி.

---

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1916-ஆ செப்டெம்பர் மீ

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வெ. | யாத். | 26 | 14—30 | 11 | தி. | சங். | 119. | 1—16 | 21 | வி. | சங். | 119. | 161-176 |
| 2 | ச. | ,, | 26. | 31—46 | 12 | செ. | ,, | 119. | 17—32 | 22 | வெ. | ஆமோ. | 3. | 1—10 |
| 3 | ஞா. | ,, | 26. | 47—58 | 13 | பு. | ,, | 119. | 33—48 | 23 | ச. | ,, | 5. | 1—15 |
| 4 | தி. | ,, | 26. | 59—45 | 14 | வி. | ,, | 119. | 49—64 | 24 | ஞா. | ,, | 9. | 1—15 |
| 5 | செ. | ,, | 27. | 1—14 | 15 | வெ. | ,, | 119. | 65—80 | 25 | தி. | மீகா. | 4. | 1— 8 |
| 6 | பு. | ,, | 27. | 15—26 | 16 | ச. | ,, | 119. | 81—96 | 26 | செ. | ,, | 6. | 1—15 |
| 7 | வி. | ,, | 27. | 27—38 | 17 | ஞா. | ,, | 119. | 97-112 | 27 | பு. | ,, | 7. | 5—20 |
| 8 | வெ. | ,, | 27. | 39—45 | 18 | தி. | ,, | 119. | 113-128 | 28 | வி. | சங். | 91. | 1—16 |
| 9 | ச. | ,, | 27. | 55—66 | 19 | செ. | ,, | 119 | 129-144 | 29 | வெ | ,, | 92. | 1—15 |
| 10 | ஞா. | ,, | 28. | 1—20 | 20 | பு. | ,, | 119. | 145-160 | 30 | ச. | ,, | 93. | 1— 5 |

### அக்டோபர் மீ

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஞா. | ரோம. | 1. | 1—15 | 3 | செ. | ரோம. | 2. | 1—16 | 5 | வி. | ரோம. | 3. | 1—18 |
| 2 | தி. | ,, | 1. | 16—25 | 4 | பு. | ,, | 2. | 17—29 | 6 | வெ. | ,, | 3. | 19—31 |

C. L. S. PRESS, MADRAS—1916

# மாதர் போதினி

No. 226 அக்டோபர் 1916 No. 10

OFFICE OF THE REGISTRAR OF ... 7 - OCT 1916 MADRAS

## EDITOR'S NOTES

## பத்திராதிபர் நானாவிதக் குறிப்புகள்

The Christian Central Co-operative Bank (Ltd.) மேற்படி பெயர்கொண்ட ஒரு கூட்டு நிதி கிறிஸ்தவர்களுக்கென்று சென்னை, பாபம்ஸ் பிராட்வே, 22-வது நெம்பர் வீட்டில் ஸ்தாபகமாயிருக்கிறது. தற்சமயம் ஸ்ரீமான் பால் அப்பாசாமி, பேரிஸ்டர் அவர்களும், சங்கை ஜெ. பாஸ்யோர் ஐயர் அவர்களும், ஸ்ரீமான் ஜெ. யி. புரோயிலிக் அவர்களும், ஸ்ரீமான் எம். டி. தேவதாஸ், பேரிஸ்டர் அவர்களும், ஸ்ரீமான் கே. டி. பால் அவர்களும், சங்கை எச். ஏ. பாப்லே ஐயர் அவர்களும் இந்த நிதிக்கு முகாமைக்காரராயிருக்கிறார்கள்.

கிறிஸ்தவ கூட்டு கடன்கொடுக்கும் சங்கங்களுக்கு (Christian Co-operative Credit Societies) கடன் கொடுத்து, இப்படியாக நமது கிறிஸ்தவர்களை முன்னுக்குக் கொண்டுவர பிரயத்தனஞ் செய்வதே இந்நிதியின் நோக்கம். இதில் 2 லட்சம் ரூபாய் இருவிதமாய், 250 ரூபாய் பாகமும், 50 ரூபாய் பாகமுமாக பிரிக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி சவிஸ்தாரமாய் அறிய விரும்புவோர் மேற்கொடுத்திருக்கும் விலாசம், காரியதரிசிக்கு மனுசெய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

Female Education in the Madras Presidency. பெண் கல்வி விஷயமாய்ப் பல காரியங்கள் ஆலோசிக்கும்பொருட்டு சென்னை, டைரக்டர் ஆவ் பப்ளிக் இன்ஸ்டிரக்ஷன் (Director of Public Instruction) ஒரு ஆலோசனைச் சங்கம் கூட்டுமாறு துரைத்தனத்தாரால் உத்தரவு பெற்றிருக்கிறார். இக்கூட்டம் நமது பத்திரிகை பிரசுரமாவதற்குள் முடிந்திருக்கும். பெண் கல்வி விஷயமாய் உழைத்து வந்த அநேகர் இதில் கூடுவோர்களாகையால், நமது பெண்கள் கல்வி விஷயமாய்ப் பெருநன்மை விளையப்போகிறதென்று நம்ப நியாயமுண்டு.

VOL. XXXI.

Lady Hardinge College, Delhi. வைத்திய விஷயமாய் நமது தேசத்தின் பெண்களைப் பயிற்றுவிப்பதற்கென்று ஸ்தாபனமாயிருக்கிற மேற்கூறிய பெயரையுடைய வைத்திய கலாசாலை, நாளது வருஷம் செப்டம்பர் மாதம் 28–ம் தேதி டில்லி பட்டணத்தில் திறக்கப்படுமென்று கேள்வியுறச் சந்தோஷப்படுகிறோம். இதில் M. B., B. S., முதலிய பரீட்சைகளுக்குப் பெண்கள் பக்குவப்படுத்தப்படுவார்கள்.

India's Blind, Deaf and Dumb. சமீபகாலத்தில் எடுத்த குடிமதிப்பின் கணக்கின்படி 5 முதல் 15 வயது வரையில் 41,558 கபோதபிள்ளைகளும், அதே வயதுள்ள 58,804 செவிடும் ஊமையுமான பிள்ளைகளுமாயிருக்கிறார்கள். இவர்களில் 500 பிள்ளைகளுக்கு மாத்திரம் 18 பாடசாலைகளிருக்கின்றன. பெரும்பான்மையோர் அபிவிருத்திக்கென்று ஒன்றுங்காணோம். இந்தியா துரைத்தனத்தார் இது விஷயமாய்ச் சிரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார்களென்று கேள்விப்பட்டுச் சந்தோஷப்படுகிறோம்.

Munitions and Women Workers. மகா பிரித்தானியாவில் குண்டுமருந்து செய்யுந் தொழிலிலிருந்த 1,600,000 புருஷர்களுள், யுத்த ஆரம்பத்தில், 384,000 பேர் சைனியங்களைச் சேர்ந்துகொண்டார்கள். இப்படி காலியான இடங்களை ஸ்திரீகள் நிரப்பி வருகிறார்கள். 1914–ம் வருஷம் 184,000 பெண்கள் யுத்த சம்பந்தமான தொழில் துறைகளில் வேலைசெய்து வந்தார்கள். இன்றைக்கோ 666,000 பெண்மணிகள், 471 வித்தியாசமான குண்டுமருந்து செய்யும் வேலைகளிற் பிரவேசித்திருக்கிறார்கள்.

A New Ally. இப்போது நடந்தேறுகிற மகா ஐரோப்பிய யுத்தத்தில் நமது சக்கிரவர்த்திக்கும் அவரது கூட்டாளிகளுக்கும் அனுசரணையாக ருமேனிய நாட்டார் சேர்ந்துகொண்டார்கள். யுத்தத்தைத் துரிதமாய் முடிவுக்குக் கொண்டுவருவதில் இதுவும் ஒரு சாதனமாயிருக்கும்.

## SOME INDIAN BIRDS (*Continued*)

## பரதகண்டத்து பட்சி வகைகள் (தொடர்ச்சி)

### V

நாம் சென்ற மாதத்திற் கவனித்த பட்சிகளுள், ஆண்பறவைக்கும் பெண்பறவைக்குமுள்ள தோகையில் வித்தியாசமிருக்கிறதென்று பார்த்தோம். சிலவகை பட்சிகளுள் தாய் பறவைகளிரண்டும் ஒரே





மாதிரியாய்க் காணப்படும்; மற்றவைகளுள் தாய் பறவைகள் அதிக வித்தியாசமாயிருப்பதனால் அவைகள் சம்பந்தமானதென்று நினைக்க ஏதுவிராது.

இந்தத்தடவை விசித்திரமான சிற்பாசாரிகளும், கூடுகட்டுகிற வித்தையைக் காட்டிக்கொடுக்கக் கூடியதுமான இரண்டு குருவிகளைக் குறித்துப் பார்ப்போம். இவைகளுள் முதல் பறவைக்கு இலைச்சிட்டு (The Tailor-Bird) என்று பெயர். பழக்கமான இச்சிறு பறவை வீடுகளுக்கும் ஜனங்களுக்கும் அருகாமையில் வசிக்கிறது; படம் பார்க்கவும். அதின் முதுகு ஒலிவ பச்சையாயும், வயிறு வெண்மையாயுமிருக்கும். வாலை விட்டுவிட்டால் அதின் நீளம் நாலு அங்குலத்துக்குக் குறைவாயிருக்கும். குஞ்சுபொரிக்குங் காலத்தில் ஆணுக்கு வாலில் இரண்டு நீளமான இறகு முளைக்கின்றன. பிறகு இவைகள் விழுந்துபோகப் பெட்டையின் வாலைப்போலவே ஆணின் வாலும் கட்டையாகிறது. நீளமாயிருந்தாலுஞ் சரி, குட்டையாயிருந்தாலுஞ் சரி, இலைச்சிட்டு பறக்கும்போதெல்லாம் தன் வாலை நேராய் நட்டு வைத்துக்கொண்டே பறக்கிறது. இதினாலும், அதன் சத்தத்தினாலும் அதை அறிந்துகொள்ளலாம். அது பாடாமற்போனாலும் 'டுவிட், டுவிட்' என்று உரத்த சத்தமாய்க் கூப்பிடுகிறது. கன்னான் விஷயத்திற் போலவே, இவ்வளவு சிறிய குருவி அவ்வளவு பெரிய சத்தம் எப்படி செய்கிறதென்று ஆச்சரியத்தை உண்டாக்குகிறது. அது கட்டுகிற கூடே இப்பறவையைப்பற்றின மிக்க விசேஷித்த காரியம். வாஸ்தவத்தில் ஒரு தையற்காரனைப்போல தன் கூட்டின் வெளிப்பாகமாய் அமைந்திருக்கிற இலைகளை ஒன்றாய்ச் சேர்த்துத்

தைக்கிறது. அதின் கூர்மையான அலகினால் இலைகளில் துவாரஞ் செய்து, அவைகளின் வழியாய் நூலை நுழைத்திழுத்துக் கோப்பை வடிவமாக இலைகளைத் தைக்கிறது. நூலுக்காகச் சிலவேளைகளில் ஓர் வித புழுக்கூட்டிலிருந்து பட்டும், சிலவேளைகளில் அது பொறுக்கக் கூடிய பஞ்சுநூலையும் உபயோகிக்கிறது. அடிக்கடி விடியற்காலத்தில் காப்பி சாப்பிடும்போது, ‘டேவிட், டேவிட்’ என்று தூரத்திற் கூப்பிடுகிற சத்தத்தைக் கேட்டிருக்கிறேன். அதற்குக் கொஞ்சநேரத்திற்குள் இலைச்சிட்டு திண்ணையில் தட்டிக்குத்தட்டி தாண்டிக் குதிப்பதைப் பார்த்துத் தட்டி கயிறுகளிலுள்ள நாரைத் திருட வந்திருக்கிறதென்று அறிந்துகொள்வேன்.

நாம் கவனிக்கப்போகிற இரண்டாவது பறவைக்குத் தூக்கணங் குருவி (Weaver-Bird) என்று பெயர். இலைச்சிட்டைப்போல் அவ்வளவு பழக்கமான பட்சியல்ல. வீடுகளுக்குத் தூரத்தில் வயல்களிலும், விசேஷமாய் ஈச்சமரங்களுள்ள ஏரி குளக்கரைகளிலும் வசிப்பதினால் அதை நான் வீடுகளுக்கும் தோட்டங்களுக்கு மருகாமையிற் கண்டதில்லை. நாம் இதுவரையிலுங் கவனித்த மற்ற பறவைகளைப் போல இது அவ்வளவு சாதாரணமல்ல.

தூக்கணங் குருவி வெகுவாய் அடைக்கலான் குருவியைப்போல் தோன்றுகிறது. அது இருண்ட கோடுகளமைந்த வெளுத்த ஊதா நிறமாயிருக்கிறது. முட்டையிட்டுக் குஞ்சு பரிபலிக்குங் காலத்தில் ஆணுக்குத் தலையும் மார்பும் பிரகாசமான மஞ்சளாயும், கழுத்து கறுப்பாயு மிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இலைச்சிட்டைப் போலவே கூடுகட்டும் விஷயத்தில் இக்குருவி அதிக விசேஷமானது. அதின் கூட்டை இலைகளினாலல்ல, சிலவேளைகளிற் புல்லினாலும் விசேஷமாய் ஈச்சன் ஓலை நாரினாலுஞ் செய்கிறது. அதைப்போன்ற பூரணமும் விசித்திரமுமான குருவிக்கூண்டு நாம் எங்குங் காணக்கிடையாது. அதின் கூடு எப்பொழுதும் ஈச்சன் ஓலையின் முனையிலிருந்தாவது, முட்செடி கிளைகள் முனையிலிருந்தாவது தொங்கிக்கொண்டிருக்கும். அது இரண்டு பாகமாயிருக்கும், மேற்பாகம் முட்டையிடுவதற்கென்றமைந்த வட்டமான ஓர் அறை! கீழ்ப்பாகம் நீண்ட குழாய்போன்றது. குழாய்போன்ற கீழ்ப்பாகத்தை அக்கூட்டின் ‘நடை’ யென்று சொல்லலாம். பட்சிகள் கீழ்முனையிலுள்ள துவாரத்தில் நுழைந்து மேலுக்கு ஏறுகிறது. கூடுகட்டும்போது முதலில் ஆணும் பெண்ணுமாய்க்கூடி வேலைசெய்கிறது. மூதற்பாகம் முடிந்தவுடனே தாய்ப் பறவை உள்ளே உட்கார்ந்து, ஒரு மனையாள் வீட்டினுள்ளே இல்லற விஷயங்களைக் கவனிக்கிறதுபோல, கூட்டின் உட்புறத்தில் வேலைசெய்ய, ஆண் வெளிப்புறத்தைக் கட்டு



வதிற் சோலியாயிருக்கிறது. இந்தக் குருவி கூண்டில் அடிக்கடி கொஞ்சங் களிமண் காணலாம். இதன் உபயோகம் இன்னதென்று திட்டமாய்த் தெரியாமற்போனபோதிலுங் காற்று பலமாய் அடிக்குஞ் சமயங்களில் கூடு குலுங்காதபடி நிறுத்த உதவுகிறதென்று சிலர் எண்ணுகிறார்கள்.

ஒரு தூக்கணங் குருவிக்கூட்டைப் பார்க்கப் பிரயாசப்படுவதோடு கூட யூகமாய்க் கூடுகட்ட குருவிகளுக்குக் கற்பித்திருக்கிற கடவுளின் ஞானத்தை உணர்தற்பொருட்டு பற்பல விதமான கூண்டுகளைக் கவனிக்கவும் முயற்சிப்போமாக.

Miss A. B. VanDoren.

## LIFE OF LADY HUNTINGDON

## ஹண்டிங்டன் பெருமாட்டியின் ஜீவிய சரித்திரம்

செலினு ஹண்டிங்டன் அம்மாள், பொரஸ் என்கிற ஒரு கனவானின் குமாரத்தி. அவள் இங்கிலாந்து தேசத்தில் 1707-ம் வருஷத்தில் பிறந்தாள். அவள் அதிக கனத்திலும் செல்வத்திலும் வளர்க்கப்பட்டதினால், கடவுளைப்பற்றி சிந்திக்கக்கூடாத நிலைமையில் இருந்தாள். ஆனாலும் கடவுள் ஒவ்வொரு ஆத்துமாவிலும் ஆச்சரிய விதமாகக் கிரியை செய்கிறார் என்பதற்குச் சந்தேகமில்லை. அவள் ஒன்பது வயதுள்ளவளாய் இருந்தபொழுது தன்னைப்போல ஒரு சிறு பெண்ணின் மரணத்திற்குப் போயிருந்தாள். அதிலிருந்து அவள் மரணத்தைப்பற்றி அதிக கவலையுள்ளவளாய்த் தான் மரித்தால் தன் ஆத்துமா எங்கே போகும் என்கிற ஒரு கவலை இவள் மனதில் உண்டானது.

அவள் அடிக்கடி அந்தப் பெண்ணின் கல்லறையண்டை போய், மனங் கசந்து அழுது, தான் மரித்தால் மோட்சத்திற்குப் போகவேண்டும் என்று அடிக்கடி ஜெபித்து வந்தாள்.

அதுவுமல்லாமல் தான் விவாகம் செய்தால் தனக்கு கடவுளைப்பற்றி அதிகமாக கற்றுக்கொடுக்கும் ஒரு உண்மையுள்ள கிறிஸ்தவனை மணம் புரியவேண்டுமென்று ஜெபித்தாள். அந்தப்படியே இருபத்தோராம் வயதில் ஹண்டிங்டன் பிரபுவை விவாகம் செய்தாள். இந்த பிரபு கிறிஸ்தவரா யிருந்தபொழுதும், பரிசுத்த ஜீவியத்தைப்பற்றி அறியாதவராய் இருந்தார். அதினால் அவர்களுக்கு மரித்தபின் ஆத்துமாவிற்கு என்ன நடக்கும் என்பதை அறியாதவளாய் மனதிற்கு திருப்தியற்ற

வளாயிருந்தாள். ஆனால் ஏழைகளுக்குத் தன்னால் கூடிய உதவியை செய்து, அதின் மூலமாகத் தன் ஆத்துமாவைச் சந்தோஷப்படுத்தப் பிரியப்பட்டாள். ஹன்டிங்டன் பிரபுவுக்கு நான்கு சகோதரிகள் இருந்தார்கள். அதில் மூத்த சகோதரி, ஒருநாள் கனம் இன்காம் என்கிற துரை நடத்தின ஒரு பெரிய கூட்டத்திற்குப் போய் அங்கே அவள் கேட்ட பிரசங்கத்தின் மூலயாய் அசைக்கப்பட்டு, உடனே ஆத்தும இரட்சிப்பை அடையவேண்டுமென்கிற ஆவலோடு ஜெபித்தபின், தானும் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் பெற்றுக் கொண்டவளாய் வீட்டிற்கு வந்து, ஹன்டிங்டன் பெருமாட்டியினிடம் தான் அடைந்த இரட்சிப்பைப்பற்றிச் சொன்னாள். சில நாளைக்குப்பின்பு ஹன்டிங்டன் பெருமாட்டி அதிக வியாதிப்பட்டு, தன்னுடைய படுக்கையிலே கடவுளுக்குத் தன்னை முற்றிலும் ஒப்புக் கொடுத்து ஆத்தும ரட்சிப்பைப் பெற்றுக்கொண்டாள். அதிலிருந்து அவளுக்கு மரண பயம் நீங்கினது. அவள் சுகமான பிற்பாடு, தன்னை முற்றிலுமாய் சுவாமிக்கு ஒப்புக்கொடுத்துச் சந்தோஷத்தோடும் சமாதானத்தோடும் ஜீவித்தாள். அவள் மேன்மையான குடும்பத்தில் பிறந்தவளானதால் மற்றவர்கள் இவளை கேலிசெய்யத் துவக்கினார்கள். ஆனாலும் அவள் தன் பொறுமையினாலும், சாந்தத்தினாலும் மற்றவர்களைத் தேவனிடத்தில் கொண்டுவர ஒரு கருவியாயிருந்தாள். அவளுக்கு ஆறு குழந்தைகள் பிறந்தன. அதில் இரண்டு பேர் வைசூரியினால் மரித்துப்போனார்கள். பிறகு தன்னுடைய புருஷனும் இறந்துபோனார். அதிலிருந்து அவள் தன் பணத்தையும் நேரத்தையும் கடவுளுக்கென்று செலவழித்தாள்.

ஏறக்குறைய நூறு ஆலயங்களைக் கட்டினாள். தேவ ஊழியத்திற்கென்று பயற்றுவிக்கப் பள்ளிக்கூடங்களையும் ஸ்தாபித்தாள். எண்பத்துநாலு வயதில் மரணம் அடைந்தாள். மரிக்கும்பொழுது சொன்ன கடைசி வார்த்தை என்னவென்றால், 'என் வேலை முடிந்தது. என் பரம தகப்பன் வீட்டிற்குப் போக ஆயத்தமாயிருக்கிறேன்' என்றாள். இதை வாசிக்கும் என் சகோதரிகளே, இந்த அம்மாளைப்போல நாமும் நம்முடைய கடவுளைச் சந்திக்க ஆயத்தமாய் இருக்கிறோமா?

Mrs. Aaron.



## THE NEW CREATION. Chap. II.

## MARY THE MUCH GRACED

## புது சிருஷ்டி (தொடர்ச்சி)

### அத்தியாயம் II.

### மரியம்மாள் என்னுங் கிருபை பெற்றாள்

வேதாகமத்தில் 'கிருபை' என்னும் வார்த்தை ஒரு இடத்தில் மாத்திரம் 26 தடவைகளில் சங். 136ல் திரும்பத் திரும்ப வருகிறது. முதல் 22 வாக்கியங்களிலும், தேவன் செய்த பொது நன்மைகளைப் பேசிக்கொண்டு: ஒரு பெருமூச்சும், ஒரு ஏங்கலும், அடங்காத ஒரு துயர தொனியோடும், சங்கீதக்காரன்:

'நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவரைத் துதியுங்கள்; அவருடைய கிருபை என்றுமுள்ளது' என்று இன்பமாய் வசனிக்கிறார்.

உலகம் முழுவதிலும் உள்ள சகல ஞானிகளிலும் சிறந்த அறிவாளிகள் கொடிவழியில், ஒரு ஏழைப் பெண் தனிப்பட்டவளாய் ஒரு அறையில் வாசமாயிருந்தாள். அங்கு அவளிருந்த வேளையில் யாதொருவரும் துணைக்கு இருக்கவில்லை. பெரியோருடைய 'வம்ச மணி தீபிகை' அவள் கையிலிருந்தது. ஆனால், அது அவளை அவர்களெல்லாரையும்விடத் தாழ்ந்த நிலைமையில் இருக்கிறதாக எண்ணி எண்ணி மனம் புண்ணாகச் செய்தது. ஆனாலும் அந்த அம்மணி இருந்த அறை ஒரு ஜெபவீடு. அவளிடத்தில் சுடர்விட்டெரிந்த பக்தி யென்னும் அனல் அவள் தானே மூட்டிக்கொண்டதாகத் தெரியவில்லை. ஐந்து ஆறு கட்டை விறகு வைத்துச் சுவாலைவிட்டெரிந்த அடுப்பில் ஒரு கட்டை மாத்திரம் இருந்து சுடர்விட்டெரியும் வண்ணமாக அந்த கொஞ்ச வயது அம்மாளிடம்: பெரியோருடைய வைராக்கியமான ஆவியின் அனலும் சிறியோருடைய ஊக்கமான 'உண்மை கடைப் பிடித்தலும்' காணப்பட்டது. கவனிப்பாரில்லாவிட்டால் சற்று நேரத்திற்குள் இது காணாமற்போய் விடும். குலத்தைப் பிடித்த குறைவை உணர்ந்த அந்த அம்மாள் உள்ளத்தில், மிகுந்த பலத்தை யருளும் தேவகிருபை உதயமாக வேண்டுமென்பது அவளில் காணப்பட்ட ஆவியின் வைராக்கியத்திற்கு ஆதிகாரணராகிய அன்பர் திருவுள்ளத்திலிருந்தது: 'விழுந்து

போன தாவீதின் கூடாரத்தில்,' இழந்துபோன இந்த ஒரு ஆட்டுக்குட்டி அவர் திருச்சமுகத்தில் இரக்கம்பெற்றதாய் இருந்தது.

மழைகாலம் ஆரம்பிக்கும்போதுதான், கம்பளி தனக்கு வேண்டுமென்று, ஆட்டுக்குட்டிகளுடைய கம்பளியை மேய்ப்பன் கத்தரித்துக் கொள்ளுகிறான். அதுபோலவே, இந்த ஏழைப் பெண்ணுக்குப் பல நிர்ப்பந்தங்களும் நெருங்கி வந்தது. ஆயினும், கம்பளி பறிகொடுத்த ஆட்டுக்குட்டிக்கென்று, காற்றை நிதானித்தனுப்புகிற இரக்கமுள்ள தேவன், இவளையுங் கண்ணோக்கிப் பார்த்தார். மாம்சத்திற்கு நெருக்கடிப்பு நேரிடுகிற காலமே தேவன் மனுஷனை எட்டிப் பிடிக்க ஏற்ற சமயம். ஜெப வீட்டிலே ஆள் தொகை குறைந்தாலும், ஜெப அனல் குறையாது. ஜெபிக்கப் பழகின மரியம்மாள் ஒண்டியாய் ஜெபம் செய்துகொண்டிருந்தாள். இந்த வேளையிலேதான் தேவதூதனுடைய தரிசனம் கிடைத்தது. இவளுடைய மன நிலைமையை இவள் படித்த பாட்டினால் அறியலாம். அது முழுவதும் அவளுடைய சம்பத்தாய் தெரியவுங் காணோம். அதில்,

பெற்றோருடைய வளர்ப்பு, சங். 89. சங். 132

போதகருடைய போதனை சிக்ஷை, லூக். 1: 68–80

மாணாக்கியினுடைய திறமை; என்னும் 'முப்புரி நூல்' தெளிவாய்க் காணப்படுகிறது. இதுவுமல்லாமல் நாலாங் காரியமாகிய 'இரட்சிப்பின் நிச்சயம்' சர்க்கார் வடங்களில் (British Cables) காணப்படுகிறதுபோல, குறுக்கே வெட்டிப்பார்த்தால் வெகு திட்டமாய் விளங்குகிறது.

அநேகர் பெரிய யாக்கோபின் தாயாகிய சாலோமே என்பவளுக்கும் சின்ன யாக்கோபின் தாயாகிய கிலேயோப்பா மரியாளுக்கும் மூப்பான விருத்தாப்பிய கன்னியாக மரியம்மாளைப் பாவிக்கிறார்கள். சுவிசேஷம் அப்படிச் சொல்லவில்லை. ஆனால், 'வேத அறிவு', 'ஜெபத்தியானம்' என்னும் உவாக்கர் போதகர் தாற்பரியப்படுத்துகிறதான இரண்டு 'பொற் குழாய்கள்' தேவ சமுகத்தோடு நம்மைச் சேர்த்து இணைத்துவிடவேண்டும். வேத அறிவில் மாத்திரம் சிறந்தவர்கள், மற்ற தேவனுடைய பிள்ளைகளை அற்பமாய் எண்ணத் தலைப்படுவார்கள். ஜெப சிந்தையிலேயே பிடிவாதமாயிருப்பவர்கள், தங்களுக்கு ஏதோ ஒரு அற்புத வல்லமை இருக்கிறதென்று மாய்மாலம்பண்ணி வருகிறார்கள். மரியம்மாளிடம் இரண்டும் சமநிலைப் பிரமாணமாய்க் காணப்படுகிறபடியால், கர்த்தருக்கு உகந்தவளாய் இருந்தாள். தன்னை எலிசபெத்து மிகவும் சிறப்பித்துப் பேசின சமயம் அவளுடைய மனநிலைமையைச் சோதித்தறிய ஏற்ற சமயமாயிருந்தது. அப்பொழுது அவள்:



'தாகத்தால் மிக ஆவலாய்' என்ற இராகம்.

[Based on Dr. Weymouth's Translation of N. T. in Modern Speech]

1. ஏத்திப் போற்று தென் னாத்துமா
   எகோவா ரோவி (Rophi) யிற் றுள்ளியே:
   காத்தடி மையின் சஞ்சலம்;
   நீக்கினா ரென் றெண்ணியே.

2. வாய்க்கு வாய் வம்மி ஷங்தோறும்,
   பாக் கியவதி யென்றின் னாள்,
   தூக்கி யெனைக் காத்த வல்லவர்,
   'தூயர் தூயர் தூயர்' ரென்னுமே.

3. தலைமுறை தலைமுறை சென்றாலும்,
   அலை அலை முறை யனு தப்பாது,
   பல முறை பயந்தண்டி னோரையே;
   பல முறைக் காத்தனர் பார்! ஐயே!

4. செருவிக ளுள்ளங் கெட்டுமே,
   க்ரீடாதாரி தரை யொட்டினர்
   அரும் பசி நிறை செல்வ மூதவே
   ஐயோ! வென்றனரா ரியர்.

5. எண்ணினபடி இஸ்ரேலைத் தாங்கி,
   'எப்ரஹாம்' குல மாதரித்தார்
   கண்ணி கண்ணியாம் பல வாக்குகள்—என்
   கழுத்திற் பூண்டன, நாணியாய்.

என்று சொற்சுவை பொருட்சுவை பொருந்தப் பாடினாள்.

ஆகவே தேவனுடைய கிருபை விளங்குகிறது. அவருடைய 'சாட்சி விளங்கும் பெட்டி' முன்னிலையில் இங்கே நிறுத்தப்பட்ட 'பொற்றீபம்' கிளை என்பவளால் சுடர்விட்டெரிகிறது. சக. 7: 13. கிறிஸ்துவின் கீழ்ப்படிதல் என்னும் ஒரு கொம்பிலே அவருடைய பிரதான ஆசாரியத்துவமும் இராஜாங்க மேன்மையும் விளங்குகிறது. எபி. 5. 9, 10. அவிசுவாசத்தினால் ஏவாள் இழந்துபோன தேவசுபாவம் விசுவாசத்தினால் மரியம்மாள் பெற்றுக்கொள்ளக்கூடியதாயிருந்ததுபோலவே கீழ்ப்படியாமையினால் இழந்துபோன தேவ சமாதானம், மரியம்மாளுடைய கீழ்ப்படிதலினால் வந்து லபித்தது. பூரண கீழ்ப்படிதலுக்கே பூரண கிருபைவாக்கு பண்ணப்பட்டிருக்கிறது. பூரண விசுவாசம் இருந்தாலன்றி பூரணமாய்க் கீழ்ப்படிகிறது கூடாத காரியமென்று ஆபிரகாம் ஈசாக்கைப் பலியிட்ட காரியத்தினால் அறிய வருகிறோம்.

## AN AMERICAN WOMEN'S COLLEGE

## அமெரிக்கா தேசத்து பெண் கலாசாலை

உவெல்லஸ்லி கலாசாலை (Wellesley College) அமெரிக்காவிலுள்ள பெரிதும் பழமையானதுமான பெண்பாடசாலைகளிலொன்று. இது பாஸ்டன் (Boston) பட்டணத்திலிருந்து 15 மைல் தூரத்தில் ஒரு அழகான ஏரிக்கரையின்மேல் புதர்களும் பசும்புற்றரைகளும் சிறு குன்றுகளும் அடர்ந்த மூன்னூறு ஏக்ரா விஸ்தீரணமுள்ள பூமியில் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அந்தக் கலாசாலையைச் சேர்ந்த 1400 பெண்களும், 200 போதனாசிரியரும் எப்போதும் சிங்காரமான ஒரு பூங்காவனத்தின் கண் வசிக்கிறார்கள். இந்த நந்தவனத்தில், இங்குமங்கும் 20 கட்டடங்களுக்கு மேலிருக்கின்றன. மையத்திலிருக்கிற பெரிய கட்டடத்தில் எல்லா வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. அதோடு சேர்ந்து ஒரு ஆலயம், சங்கீதக்கூடம், சித்திரக்கூடம், சோதிமண்டபம், தேக அப்பியாச சாலை, சாஸ்திரப் பயிற்சி கூடம், புஸ்தகசாலை ஆகிய இவைகளெல்லாங் கட்டப்பட்டிருக்கின்றன. மீதிகட்டடங்கள் பெண்கள் வசிக்கிற விடுதிகள். ஒவ்வொரு வீட்டிலும் வீட்டுத்தாயென்று அழைக்கப்படும் ஒரு முதிர்வயதுள்ள ஒரு அம்மாளிருக்கிறாள். அவள் தன்னைச்சேர்ந்த பெண்களை ஏகக் குடும்பமாகச் சம்ரட்சணை செய்வதில், விசேஷித்த சிரத்தை எடுத்துக்கொள்ளுவள்.

இந்தக் கலாசாலைக்கு அமெரிக்காவின் ஒவ்வொரு பாகத்திலிருந்தும், இங்கிலாந்து, சீனா, ஜப்பான், முதலிய சீமைகளிலிருந்தும் பெண்கள் வருகிறார்கள். உவெல்லஸ்லி பாடசாலை சந்தோஷமும், சுறுசுறுப்புமான ஓர் இடம். காலை ஏழரைமணிக்குப் பெண்களெல்லாரும் எழுந்திருந்து, உணவு அருந்தி, அரைமணிநேரம் அவரவர் அறைகளை ஒழுங்குபடுத்தி எட்டரைமணிக்கு ஆலயத்தில் தலைமை பெருமாட்டியினால் நடத்தப்படும் காலை ஜெபத்துக்கு ஆயத்தமாவார்கள். கட்டடங்கள் தூரத்துக்குத் தூரமாயிருப்பதனால் சில பெண்கள் மையத்திலிருக்கிற சில கட்டடங்களுக்கு வர ஒருமைல் நடக்கவேண்டியதாகும். சுருக்கமான ஜெப ஆராதனை முடிந்தவுடனே பற்பல கட்டடங்களுக்குப் பெண்கள் கலைந்துபோவார்கள். கொஞ்சநேரம் கூச்சலும், பேச்சும், நகைப்பும், பாட்டுமாயிருக்கும். ஒன்பது மணி அடித்தவுடனே, எல்லாம் அடங்கிப்போம்.

ஒவ்வொருமணிக்கும் வகுப்புகள்மாறும்; ஓய்வாயிருக்கும் நேரங்களில் புஸ்தகக்கூடத்திற்காவது, தங்களறைகளுக்காவது போவார்



கள்; உஷ்ணகாலத்தில் விருட்சங்களினடியிலுட்கார்ந்து வாசிப்பார்கள். மத்தியானத்தில் சாப்பாட்டுக்கென்று விடும் ஒரு மணி நேரம் தவிர, மாலை நாலேகால் மணிவரையில் வகுப்புகள் நடக்கும். புஸ்தகக்கூடத்தில் அநேக மணிநேரம் வாசிப்பதிலும் ஆராய்ச்சிசெய்வதிலும் செலவிடும் நேரமும், வகுப்புகளில் உபந்நியாசங்களுக்கும், வினாவிடைகளுக்கும் பிடிக்கும் நேரமும் அந்தக் கலாசாலையின் ஜீவியத்தில் அதிக அருமையானது.

மாலை நாலேகால் மணிக்கெல்லாம் தேக அப்பியாசத்திற்கென்று ஆயத்தஞ்செய்யும் பெண்கள் கும்பல் கும்பலாய்த் தோட்டமெல்லாம் நிற்பார்கள். சிலர் டென்னிஸ், ஹாக்கி, முதலான விளையாட்டுகளை விளையாடப் போவார்கள்.

இன்னும் ஒரு கூட்டத்தார் தாங்கள் வெளியேறிப்போகுங் காலத்தில் நடத்தப்போகிற நாடகத்தை ஏரியை அடுத்த ஒரு அமைதியான இடத்தில் அப்பியாசஞ்செய்து கொண்டிருப்பார்கள். அநேக பெண்கள் லேசான தோணிகளிலேறி பாடிக்கொண்டு தண்டுவலித்துப் போவார்கள். விளையாட்டு மைதானத்தில் பதினேழு டென்னிஸ் கோர்ட்டுகளும் ஐந்து கூடைப்பந்து கோர்ட்டுகளும், இரண்டு ஹாக்கி விளையாடும் ஸ்தலங்களுமிருக்கின்றன.

பெண்களுடைய ஆத்துமமும் மனது மாத்திரமல்ல, அவர்களுடைய தேகமும் விருத்திபண்ணப்படவேண்டுமென்று அந்த கலாசாலையிலுள்ள போதனாசிரியர் நம்புகிறார்கள். பயிற்சியுடைய ஏறக்குறைய இருபது உபாத்திமார் தங்கள் முழுநேரத்தையும் தேகப்பியாசத்திற்கென்று செலவிடுகிறார்கள். இவ்விதமான தேகப்பியாசங்கள் முடிந்தபின்னர் எல்லாரும் வீடுகளுக்குத் திரும்பி வஸ்திரங்களை மாற்றிக்கொண்டு, ஆறரைமணிக்கு இராச்சாப்பாட்டுக்கு உட்காருவார்கள். சாப்பாடு முடிந்தவுடன் அரைமணி நேரத்திற்குச் சங்கீத காலக்ஷேபம் நடக்கும்.

பிறகு மணி அடிக்கும்போது அவரவர் பாடங்களைப் படிக்க ஆரம்பிப்பார்கள். அநேகர் சித்திரக் கூடத்திற்கும், புஸ்தகசாலைக்கும், சங்கீத கூடத்திற்கும், பல சங்கங்களின் கூட்டங்களுக்கும் போவார்கள். அந்த நந்தவனத்தில் சில பெண்கள் நட்சத்திரங்களைக் கவனித்து, தங்கள் வானசாஸ்திர வகுப்புக்குச் சென்று, அவைகளைப் பற்றின குறிப்புகள் செய்வார்கள். பத்துமணிக்கெல்லாம் கதவு சாத்தப்படுமாகையால் அவரவர்கள் தங்கள் தங்கள் விடுதிகளுக்குப் படுக்கப்போகவேண்டும்.

இந்த கலாசாலை ஒரு சிறு பட்டணம் போலிருக்கிறது. கொடுக்கப்பட்டிருக்கும் சட்டங்கள் அதிக சொற்பம். அவைகளில் அநேகம்

அங்கேயுள்ள வித்தியார்த்திகளாலேயே நிருமிக்கப்படுகின்றன. இச்சட்டங்களுக்குக் கீழ்ப்படியாத பெண்களிருந்தால் அவர்களை அனுப்பிவிடவும் வித்தியார்த்திகளுக்கு அதிகாரமுண்டு. வருஷாவருஷம் அவர்கள் தங்கள் சொந்த அக்கிராசனாதிபதியையும் உத்தியோகத்தாரையும் நியமித்துக்கொண்டு அநேக பெரிய கூட்டங்களும் சிறிய காரிய நிர்வாகக் கூட்டங்களும் பற்பல வீடுகளில் நடத்துகிறார்கள். இவைகள் எல்லாஞ்சேர்ந்து பொதுக்கூட்டங்களில் பேசவும், சங்கங்கள் ஸ்தாபிக்கவும், காரியம் நிர்வாகிக்கவும், பிரமாணங்களுக்குக் கீழ் அடங்கவும் பெண்களைப் பயிற்றுவிக்கின்றன.

இங்கேயிருக்கும் கிறிஸ்தவ சங்கம் பக்திவிருத்திக் கேதுவான அநேக கூட்டங்களை வைத்து, பாடசாலைகளில் வேலைசெய்கிறவர்களுக்குள்ளும், எளிய அயலகத்தாருக்குள்ளும் பரோபகாரமான உதவிசெய்வதோடுகூட சீனு, இந்தியா இவைகளிலுள்ள சில மிஷன்களை ஆதரிக்கிறது.

இவ்விதமாக இந்த கலாசாலையிலும் அமெரிக்காவின் இதர கலாசாலைகளிலும் தேறி அநேகர் தேசமெங்கும்போய் மனைவிகளாக்வும், தாய்களாகவும், உபாத்தினிகளாகவும், வைத்தியர்களாகவும், உழைத்து வருகிறார்கள். சென்றவருஷத்தில் சென்னையில் பெண்களுக்கென்று இரண்டு கலாசாலைகள் ஸ்தாபனமாயிருக்கின்றன. இவைகளும் நாளடைவில் உவெல்லஸ்லி (Wellesley) பாடசாலையைப்போலவே எல்லாவிதத்திலும் விருத்தியடைந்து, இந்து தேசத்திற்கு ஆசீர்வாதமாகுமென்று நம்புகிறோம்.

C. W.

## WATER DRINK *versus* ALCOHOLIC DRINKS

## ஜலபானத்துக்கும் மதுபானத்துக்குஞ் சண்டை

இராகம், பியாகு.

ரூபகதாளம்.

பல்லவி

தாகமுள்ளோனே, இதோ! தண்ணீர் இருக்கிறது;
தாகந் தீர்த்துக்கொள்ள நீ வா, வா, வா; ஓ

அநுபல்லவி

தாகந்தீர்க்கத் தண்ணீர்தான் வேண்டும்; தாகம்போக்க வெந்நீரும் போ
சோகந் தீர்ப்பது தண்ணீர்; தேகம் ஏற்பது நன்னீர்; [தும்;
பானம்பண்ணிச் சோதித்துப் பார், பார், பார்: ஓ



சரணங்கள்

1. கள்ளுக்கடைக்கு நீ போய், கள்ளுக்குடுவை தூக்கி,
கள்ளேன் நீ குடிக்கிறாய்? சொல், சொல், சொல்;
புளித்து நுரைத்த கள் குலைத்துவிடும் மானம்
மதிகெடுக்கும், இது மெய், மெய், மெய்;

புளித்துப்போன பனங்கள்ளும், சளித்துப்போன தென்னங்கள்ளும்
ருசித்தால் தலைக்கேறும்; குடித்தால் குரங்காட்டம்;
குடுவையை விட்டோடிப் போ, போ, போ; ஓ

2. சாராயக் கடைக்குப் போய், சாராயப்புட்டி தூக்கி,
சாராயங் குடிப்பதேன்? சொல், சொல், சொல்;
காய்ச்சி வடித்த மது சாய்த்துப்போடுங் குடித்தால்;
வேர்த்து விழுவாய், இது மெய், மெய், மெய்;

யார்க்கு ரத்தங் கலங்கினகண்? யார்க்குக் காரணமில்லாக் காயம்?
யார்க்குப் புலம்பல், சண்டை? யார்க்குத் துக்கம், வேதனை?
சாராயம் நாடுவோர்க்கே—ஐ – யை – யோ! ஓ

3. ஜொலிக்கும் ஷாப்புக்குள், பளிங்குப் பாத்திரத்தில்,
குடித்த பானம் என்ன? சொல், சொல், சொல்;
பிடித்துக்கொள்ளும் உன்னை உவிஸ்கி, ஜின், ரம், பிராந்தி;
எரித்துவிடும், இது மெய், மெய், மெய்;

ஏல், ஸ்றவுற்று, ஏற்கா உனக்கு; ஷெரி, போர்ட், கிலாரெட், ஷாம்
தோலும் எலும்புமாகி வீடுவாசு விழப்பாய்; [பேன் ஆகா;
பேரும்போம், குறிசொன்னேன் கேள், கேள், கேள்; ஓ

சத்திய தூதன்

## THE KING'S CUP-BEARER *(Continued)*

## ராஜாவுக்குப் பானங்கொடுப்போன் (தொடர்ச்சி)

### XV. அத்தியாயம்

### பழைய பாவம்

நாம் இதுவரையில் நெகேமியா மிகவும் வெளியரங்கமான மூன்று தீமைகளை எருசலேமைவிட்டு நீக்க பலத்த முயற்சி எடுத்ததாகப் பார்த்தோம். இப்போது கெட்ட பழக்கமாகிய—பயங்கரமான சாபத்தை அகற்ற, அதோடு போராடப் போகிறார். மூன்று தீமைகளை அகற்ற ஆழமாய் வெட்டவேண்டியதிருந்தால், நாலாவதும் மகா



விசேஷித்ததுமான இந்தத் தீமையை நீக்க பதின்மடங்கு அதிகமாய் பலமும் உறுதியுமான வேலை நடத்தவேண்டும் என்று உணருகிறார். எருசலேமின் வீதிகளில் அவர் காண்கிறதென்ன? பரிசுத்த நகரத்தின் குடிகள் அந்நியரும் அஞ்ஞானிகளுமா யிருக்கிறார்கள். வீதியில் விளையாடும் பிள்ளைகள் தானறியாத பாஷையைப் பேசுகிறார்கள். அஞ்ஞானிகளாகிய அந்நியரோடு விவாக சம்பந்தம் மிகவும் சாதாரணமாய்ப் போனபடியால், இதை நிறுத்த வழிதேடாவிட்டால், அடுத்த தலைமுறை முற்றிலும் பாஷையிலும், நடை உடை பாவனையிலும், முக்கியமாய் மார்க்க விஷயத்திலும் யூதர்களல்லாதவர்களாகிவிடுவார்கள். மரமும் கல்லுமான விக்கிரகங்களைப் பணிந்துகொண்டு, எருசலேமில், துன்மார்க்கமும் அருவருக்கப்படத்தக்கதுமான அஞ்ஞான வழக்க பழக்கங்களை யெல்லாம் கொண்டுவந்துவிடுவார்கள். 'அழகுள்ள பெண்களும், அதேமாதிரியான ஆண்களுமிருந்தால், நாம் ஏன் கொண்டு கொடுத்துக்கொள்ளக்கூடாது?' என்று நெகேமியா இல்லாதபோது எருசலேமின் ஜனங்கள் பேசிக்கொண்டார்கள். இப்படிச் செய்வதினாலுண்டாகும் தீமைகளை முழுதுமாய் மறந்துவிட்டார்கள். கெட்ட தோழமையினாலுண்டாகும் அபாயத்தைப்



பாராதபடி தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள். தங்களுக்குப் பிரியமானதையும் இன்பமானதையுமே நினைத்தார்கள். இது சரியா யென்றும், தேவனுடைய சித்தமா என்றும் அவர்கள் விசாரித்து அறியவில்லை.

எருசலேமின் அதிபதியாகிய நெகேமியா, அந்நிய அஞ்ஞானப் பெண்ணை விவாகம் பண்ணின எருசலேமிலுள்ள ஒவ்வொருவனையும் தன்னுடைய நியாய சபையில் வந்து ஆஜராகும்படி கட்டளை பிறப்பிக்கிறார். எல்லாரும் வந்து கூடினபோது :—

(1) அவர்களோடே சண்டை போடுகிறார். அவர்களைக் கடிந்துகொண்டு, அவர்களோடே வழக்காடி, ஓய்வுநாள் ஆசரிப்பைப்பற்றி அதிகாரிகளோடே நடந்துகொண்டதுபோல நடந்துகொள்ளுகிறார்.

(2) அவர்களைச் சபிக்கிறார் அல்லது நிந்திக்கிறார். எருசலேமின் அதிபதியா யிருந்தபடியால், தேவனுடைய நாமத்தில் அவருடைய சட்டத்தை மீறுகிற ஒவ்வொருவர் மேலும் கர்த்தருடைய கோபாக்கினையைக் கூறுகிறார்.

(3) அவர்களில் சிலரை அடிக்கிறார். வெளியரங்கமாய் அடிக்கிறார். தன்னுடைய நியாய சபையின் உத்தியோகஸ்தரை நோக்கி இந்த விசேஷித்த குற்றவாளிகளுக்குப் புத்தி கற்பிக்கும்படியாக அவர்களுக்கு சரீர தண்டனை கொடுக்கும்படி சொல்லுகிறார்.

(4) அவர்களுடைய மயிரைப் பிய்க்கிறார். அவர்களை மொட்டையடித்தார். எபிரேய வார்த்தை 'மாராட்' என்றால் மெதுவாக்கு, மளமளப்பாக்கு, தோலுரி என்று அர்த்தம். மயிர் என்கிற பதம் மூலத்தின எபிரேய வேதாகமத்திலில்லை. நெகேமியா தன்னுடைய சொந்தக் கைகளால் அவர்களை அடிக்கவாவது, மயிரைப் பிய்க்கவாவது செய்தாரென்று நாம் எண்ணக்கூடாது. அவர் செய்ததென்னவென்றால், குற்றத்தைத் தண்டிக்கும் அதிகாரியாக, அவர்களுக்கு நியாய தண்டனை விதித்தார். அது இரட்டிப்பான தண்டனை.

இப்போது நெகேமியா, அஞ்ஞானப் பெண்களை விவாகம் செய்த யூதர்களுக்கு இந்த தண்டனையைக் கொடுக்கிறார். வெட்கத்திற்கும் அவமானத்திற்கும் அடையாளமாக, அவர்களுடைய தலைகளை மொட்டையடிக்கும்படி கட்டளையிடுகிறார். குற்றத்திற்குத் தகுந்த குறிப்பான தண்டனைதான். அவர்கள் தங்களுடைய பங்கை புறஜாதியாரோடே தெரிந்துகொண்டார்கள். ஆகையால் புறஜாதியாராகவே இருக்கட்டும். அவர்களுடைய அடையாளம் இவர்கள் மேலும் சூடு போட்டாற்போலிருக்கட்டும். மொட்டை அடிக்கப்பட்டபடியால் இனிமேல் அவர்கள் எருச்லேமின் குடிகளல்ல, அந்நியரும், பரதேசிகளும் புறக்கணிக்கப்பட்டவர்களுமானார்கள். இப்படிச் செய்து முடி

த்தபிறகு அவர்களை அழைத்து இனிமேல் இந்தமாதிரியான பாவத்தை மறுபடியும் செய்யமாட்டோம் என்று தேவனுக்கு முன்பாக பயபக்தியாய் ஆணையிடும்படியாக வற்புறுத்துகிறார்.

S. A. Vethanayaham.

(இன்னும் வரும்)

## RIDDLES AND PUZZLES

### விடு கதைகள்

1. கொணமான ஈ
   அவன்தம்பி இ
   கருப்புமுட்டை மி
   நாலுகால் ஆ
2. காய்மேலே மரம்
   மரத்தின்மேலே கொடி
   கொடிமேலே விரல்கள்
   இவை என்ன?
3. பசியில்லாதவன் ஒருவன்
   எல்லாரோடும் ஸ்நானம் செய்வான்.

## LESSONS FOR FAMILY WORSHIP

### வேத வாசிப்பு ஒழுங்கு

1916-ஞ அக்டோபர் மீ

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஞா, | ரோம. | 1. 1—15 | 11 | பு. | ரோம. | 6. 12—23 | 21 | ச. | ரோம. | 12. 10—21 |
| 2 | தி. | ,, | 1. 16—25 | 12 | வி. | ,, | 8. 1—13 | 22 | ஞா. | ,, | 13. 1—14 |
| 3 | செ. | ,, | 2. 1—16 | 13 | வெ. | ,, | 8. 14—27 | 23 | தி. | ,, | 14. 1—12 |
| 4 | பு. | ,, | 2. 17—29 | 14 | ச. | ,, | 8. 28—30 | 24 | செ | ,, | 14. 13—23 |
| 5 | வி. | ,, | 3. 1—18 | 15 | ஞா. | ,, | 10. 1—11 | 25 | பு. | ,, | 15. 1—16 |
| 6 | வெ. | ,, | 3. 19—31 | 16 | தி. | ,, | 10. 12—21 | 26 | வி | ,, | 15. 17—33 |
| 7 | ச. | ,, | 4. 1—12 | 17 | செ. | ,, | 11. 1—12 | 27 | வெ | ,, | 16 1—16 |
| 8 | ஞா. | ,, | 4. 13—25 | 18 | பு. | ,, | 11. 13—24 | 28 | ச. | ,, | 16. 17—27 |
| 9 | தி. | ,, | 5. 1—11 | 19 | வி. | ,, | 11. 25—36 | 29 | ஞா. | சங். | 94 1—11 |
| 10 | செ. | ,, | 6. 1—11 | 20 | வெ. | ,, | 12. 1—9 | 31 | செ. | ,, | 95. 1—11 |

நவம்பர் மீ

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பு. | யோபு. | 1. 1—2 | 3 | வெ. | யோபு. | 2. 1—13 | 5 | ஞா. | யோபு. | 9. 1—18 |
| 2 | வி. | ,, | 1. 13—22 | 4 | ச. | ,, | 4. 1—19 | 6 | தி. | ,, | 9. 19—35 |

C. L. S. PRESS, MADRAS—1916

மாதர் போதினி

No. 227 நவம்பர் 1916 No. 11

OFFICE OF THE REGISTRAR ... NOV 1916 ... MADRAS.

## EDITOR'S NOTES

### பத்திராதிபர் நாளுவிதக் குறிப்புகள்

The Big Allied Push on the Somme. செப்டம்பர் மீ 18-ம் தேதியிலிருந்து பிரிட்டிஷ் சைனியங்கள் பிரான்ஸ் தேசத்தில் ஸாம் (Somme) நதி தீரங்களில் முன்னேறிச்சென்று ஜர்மானியருடைய பலமான கொத்தளங்களைப் பிடித்துக்கொண்டே வருகிறார்கள். இத்தீரங்களில் நமது சக்கிரவர்த்தியின் படைகள் ஜூலை மீ முதல் தினத்திலிருந்து சத்துருவைச்சேர்ந்த 588 உத்தியோகஸ்தர்களையும், 26,147 போர்ச்சேவகர்களையும் சிறைப்பிடித்திருக்கிறார்கள்.

The Madras Hero, who brought down a Zeppelin. செப்டம்பர் மீ ஜர்மானியர், லண்டன் மா நகரை ஆகாயத்திலிருந்து தாக்கும்படி 'ஜெப்பிலின்' என்கிற பிரமாண்டமான ஆகாயக்கப்பல்களில் ஏறிச்சென்றார்கள். அச்சமயங்கள் ஒன்றில் சென்னை ராணுவத்தைச் சேர்ந்த ராபின்ஸன் என்கிற ஆங்கிலேய உத்தியோகஸ்தர் ஒருவர் ஒரு சிறிய ஆகாய விமானத்தில் ஏறிச்சென்று ஒரு பிரமாண்டமான ஜெப்பிலினைச் சுட்டு விழுத்தினார். இவர் செய்த வீரச்செயலுக்கீடாக கௌரவசின்னம் பெற்றார்.

The evils of zenana system. கல்குத்தா நகரத்தில் சுகாதாரகாரியநிர்வகியஸ்தர், அப்பட்டணத்தில் ஸ்திரீகளுக்குள் ஆயிரத்துக்கு 38·5 வீதமும், புருஷருக்குள் ஆயிரத்துக்கு 23·5 வீதமும் மரணம் நேரிடுவதாகத் துரைத்தனத்தாருக்கு அறிக்கை செய்திருக்கிறார். அந்தப்புரங்களில் சுத்தமான ஆகாயமும் வெளிச்சமும் இல்லாமல் அடைக்கப்பட்டிருப்பதே பெண்களின் மரணத்தொகை அதிகரிப்பதற்குக் காரணமென்று அவர் எடுத்துக்காட்டுகிறார்.

Poetess LL. B. டி. என். போனர்ஜி பாரிஸ்டர் அவர்களின் குமாரத்தி Miss Dorothy Bonarji இரண்டு வருஷங்களுக்கு முன்னே, தான் செய்த ஒரு இங்கிலீஷ் செய்யுளுக்காக வெகுமதி

பெற்றார். இப்போது இவர் B. A. பரீக்ஷையில் தேறியிருப்பதாகவும், லண்டன் சர்வகலாசாலையில் LL. B. பரீக்ஷைக்குப் பயிலயத்தனித்திருப்பதாகவும் நாம் கேள்வியுற்றுச் சந்தோஷப்படுகிறோம்.

Military decorations for women. ஆண்களைப்போலவே பெண்களும் ராணுவமுத்திரை பதக்கங்களுக்கு உரிமையுள்ளவர்களாவார்கள் என்று ராஜாங்கத்தார் அறிவித்திருக்கிறார்கள். தங்களுடைய பிராண நஷ்டத்தையும் பாராமல் அதிக சிரமத்தோடு உழைத்துவரும் நர்சுகளுக்கு இந்த சைனிய கௌரவங்கள் முதல்முதல் கிடைக்குமாம்.

## THE NEW CREATION. Chap. II.

## MARY THE MUCH GRACED

## புது சிருஷ்டி (தொடர்ச்சி)

### அத்தியாயம் II.

### மரியம்மாள் என்னுங் கிருபை பெற்றாள்

கிறிஸ்துவின் பிறப்பைக்குறித்த தேவனுடைய வாக்குத்தத்தம் மரியம்மாளுக்கு உண்டாயிற்று. இந்தச் சமயத்தில் நடந்துகொண்ட ஞானமான நடத்தைகளை நாம் கவனித்தறிவது நலமாயிருக்கும். உடனே அல்ல, சில அவசரமான ஒழுங்குகள் செய்துகொண்டு, தன்னுடைய குலகுருவாகிய சகரியா வீட்டை நோக்கிப்போனாள். குருவானவரைவிட ஞானத்தில் எவ்வகையிலும் குறைவற்றவளாயிருந்த எலிசபெத்து தேவ ஆவியானவரால் எல்லாம் முன்னதாகவே அறிந்துகொண்டதைப் பார்த்தது, மரியம்மாளுக்கு 'பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலிருந்தது.' வாய்க்கால் மீனைப் பிடித்து குளத்தில் விட்டாற்போல, மரியம்மாள் ஆனந்தத்தால் பரவசமாகி அமிர்த கவி பாடி அகமகிழ்ந்தாள். இங்கே ஊர் குருக்கள் உபதேசிக்க முடியாமல் உட்கார்ந்தவண்ணமாயிருக்க, எலிசபெத்தும் மரியம்மாளும் தேவ ஆராய்ச்சியிலும் ஜெபத்திலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். சகரியாவின் மனம் அணையைப் பிடுங்கப்பார்க்கிற வெள்ளம்போல அநேக சமயங்களில் இவர்களுக்கு உதவி செய்திருக்கும் என்பதை மறுக்கக்கூடாது.

சுருங்கச் சொல்லவேண்டுமானால் மரியம்மாளிடத்தில்

1. ஜெபசிந்தை.
2. வேத அறிவு.
3. பெரியோரைக் கனம்பண்ணல்.



4. 'சுருங்கச் சொல்லல்;' 'விளங்க வைத்தல்.'
5. அளவு அறிந்து, சமயம் அறிந்து, ஆளறிந்து பேசுதல்.
6. குடும்பத்திலே குற்றமில்லாமல் நடந்துகொள்ளுதல்.
7. நாயகனைவிட்டு எக்காலத்திலும் பிரியாதிருத்தல்.
8. குடும்பத்துச் சோலிகளோடுங்கூட 'தையல் வேலையிலும் பின்னல் வேலையிலும் அதிசயமான தேர்ச்சி.' யோவா. 19 : 24.
9. சகோதரிகளிடத்திலும் அவர்கள் பிள்ளைகளிடத்திலும் அன்பும் பாசமும் குறையாதிருத்தல்.
10. ஆண்டவருக்கடுத்த எந்தக்காரியத்திலும் கருத்தும், உண்மையும், ஒழுக்கமும் உஜாராயுமிருத்தல்.
11. வாழ்விலும் தாழ்விலும் பெருமை கொள்ளாமலும் மாய்மாலம் பண்ணாமலுமிருத்தல் என்னும் சுபாவங்களிருந்தன.
12. இன்னொரு சுபாவத்தை எப்படி எடுத்துப்பேச என்று வழி தோன்றாமலும் வகை காணாமலும் கலங்கித் தவிக்கிறேன். அது அடக்கத்தோடும் சாந்தத்தோடும் கூடிய பொறுமையே. நான் ஒரு சிறு பையனாய் இருந்தகாலத்தில், மகா கனம் ஜெல் பிசப் அவர்களைச் சந்திக்கும் கூட்டத்தோடு சேர்ந்து, முதல்முதலாக நான் பார்த்த ஒரு இங்கிலீஷ் பிரபுவின் மாட்சிமையையும், அவருடைய நடையுடை பாவனைகளையும் இமைதட்டாது பார்த்து, இயன்றமட்டும் ஆனந்தங் கொண்டாடினேன். சுமார் 15 வருஷங்களுக்குப் பிறகு சாதாரண உடை தரித்து கோவிலில் உட்கார்ந்து, பிரசங்கமுங் கேட்டு இன்னொருவரால் என்னைப்போலவே ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டு போனது சொல்லமுடியாத ஆச்சரியத்தை உண்டாக்கிற்று. திருநெல்வேலி நாட்டையர்மார் மட்டுங் கண்டு கலந்து பேசக்கண்ட முகம் எனக்கு நேராகவும் திரும்பி வலிய என் கையைப்பிடித்துக் குலுக்கினது ஒரு நடுக்கத்தையுந் திகிலையும் உண்டாக்கிற்று. அவருடைய சுபாவம் அவ்வளவு தங்கம்போன்றதென்று நான் கண்ட முதல் நாளில் எண்ணவேயில்லை. ஆளில் வளர்ந்தவராயிருந்த அவர் தேவனால் உயர்த்தப்பட்டவராயிருந்தும் 'அம்பலத்தில் சற்றேனும் வளராதவர்போல நடந்துகொண்டார்.' இந்த விண்பலமாகிய பொன் பலும் மங்காது, இயேசுபெருமான் சபையிலும் கண் கலந்து, கை கலந்து, களிகூரக் கர்த்தர்தாமே கிருபைசெய்வாராக. இதேபிரகாரமாகப் பேதுருவுக்காக ஜெபம் நடந்த கூட்டத்தில் ரோதாள் என்ற சிறு பெண் தைரியமாய்ச் சாதித்த வார்த்தைகளின் சத்தமுங் கேட்கப்பட்டாலும், மரியம்மாள் சத்தங் கேட்கப்படவேயில்லை. மாம்சமான யாவர்மேலும், அதிகாரமுடைய (யோவா. 17 : 2) ஏகோவாவாகிய இயேசுமேசியா முன்னிலையில், தான்

மேன்மைபாராட்டத் துணியாமல், சபையாரோடுங்கூட ‘ஜெபத்திலும், உபவாசத்திலும், அப்பம் பிட்குதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.’ ‘உமது காருண்யம் என்னைப் பெரியவளாக்கும்’ என்ற வசனத்திற்கிசைய தேவனையும் அவருடைய மகிமையையும் நாடுகிறவர்களே மனுபுத்திரர் யாவரிலும் மேலானவர்கள்.

இவ்வளவு மேன்மை தங்கிய மாதுசிரோமணியவர்களுடைய முகச்சாயல், அங்கலக்ஷணங்கள் எப்படிப்பட்டதென்று சற்றே பார்ப்போம். அருமை இரட்சகருக்கும் மரியம்மாளுக்கும் உடற்கூற்று விஷயங்களில் அநேக ஒற்றுமைகளிருந்ததாகப் பாரம்பரியம்.

மரியம்மாள் வளர்த்தியும், சற்றே உள்வளைவுமுள்ள அழகான முகப்பார்வையுள்ளவர்கள். அவர்களுடைய முட்டைவடிவான முகத்திற்கு அழகுபொருந்திய நீலநிறக் கண்களும், மாசுமறுவற்று களை திரையில்லாத முகவிலாசத்திற்கு அவர்களுடைய மூக்கும் வாயும் எவ்வளவு அமைப்பும் அழகும் பொருந்தினவைகளாயிருந்ததென்பது கண்ணாரக் கண்டவர்களுக்கே விளங்கும். அவர்களுடைய நெற்றி அடர்ந்த புருவங்களுக்கும், உச்சி எடுத்து இருபுறமும் சுருள்சுருளாய் நிதானமாய் மடங்கிவந்த ரோமங்களுக்கும் ஊடே ஞானம், ராஜ மேன்மை, பொறுமை என்னுங் குணங்களுக்கு உறைவிடமாயிருந்தது. பார்ப்போர் யாவரும் மனமிளகி இரங்கத்தக்க பதுமையான குணமுடையவர்கள். நன்றாய் பழுக்காத புளியம்பழத்துக் கொட்டை நிறமான அழகான மேனியுடையவர்கள். உதடுகள் பேசக்கொடுக்கிறாப்போல் தோற்றும் மன அடக்கத்தால் அமர்ந்திருக்கும்.

இயேசுவானவர் சாமானிய ஜனங்களைவிட வளர்ந்தவரென்பது:—

1. நாயீனூர் விதவைமகன் பாடையைத்தொட்டது. லூக். 7: 11-15.

2. குற்றவாளியான ஸ்திரீ விஷயத்தில், எல்லாரையும் குறிப்பாய், ஆள் தவறாமல், பார்த்துக்கொண்டதினால் அவர் நிமிரும் முன்னே, ஒருவனாவது நில்லாமல் ஓடிவிட்டான்.

3. தேவ சிங்கத்தின் கண்ணோட்டம் தீவட்டி ஈட்டியோடும் வந்த சகலரையும் ஆள் தவறாமல் பார்த்துக்கொண்டபடியால் யாவரும் நடுங்கி கீழே விழுந்தார்கள். யோவா. 18 : 6.

4. விசாரணை நடக்கும்போது, திரள் கூட்டத்திற்கு மறைவாய் தூரத்திலே நின்ற பேதுருவை ஆண்டவர் குறிப்பிட்டுப் பார்த்துக் கொண்டார். இவை முதலான நியாயங்களால் ஆண்டவர் நெட்டையும் நேர்மையும் உள்ள மிகவும் விரும்பப்படத்தக்கவராயிருந்தார் என்பது விளங்குகிறது. குதிரைமேல் சவுல் இருந்தது உண்மையானால், ஆண்டவர் அவனைக் கீழேநின்று எட்டியெட்டிப் பார்த்து பேசக் கொடுத்திருக்கமாட்டார். சமநிலையாய் முகத்துக்கு முகம், கண்ணுக்



குக் கண், எதிரிட்டுப் பேச்சு கொடுத்தபடியினாலேதான், காந்தியை எதிர்த்து விழிக்கமுடியாமல், சவுலின் கண்கள் இருளடைந்தது. இந்த நியாயங்களினாலே மரியம்மாளும் வளர்ந்தவர்கள்தானென்பது அகச்சாட்சி.

பூர்வத்தில் கிரேக்கர் தங்கள் தேவி (Minerva) யை ஜனங்கள் கண்டு கனம்பண்ணும் நோக்கமாய் ‘தங்க ஒட்டியாணம்’ போட்டு அலங்கரிப்பார்களாம். மனுஷரைத் தூண்டி ஏவவும், அடக்கி ஆளவும் இது அறிகுறியாகும் என்று எண்ணினார்கள். தன்னையும் தன் பக்தரையுங் காத்து இரட்சிப்பவள் என்று காட்ட, அவளுக்கு ஒரு ‘கேடகமும் ஈட்டியும்’ கொடுக்கப்படுமாம். இதுபோலவே மரியம்மாளுக்கு ஆக்ஷேபனைக்கிடமான அநேகம் சிறப்புப் பெயர்களைச் சாற்றுவதும், இடறலுக்கேதுவான போதனைகளால் மற்றவர்களுக்கு மயக்கம் உண்டாகப் போதிப்பதும் அஞ்ஞானமாகும்.

1. பேதுரு 3: 4-ல் திருஷ்டாந்தமாகப் பேதுரு குறிப்பிட்டெழுதுகிற ஆள் மரியம்மாளாகவே இருக்கலாம். ஏனென்றால், யோவானுடைய காரியங்கள் அநேகமானவைகளில் பேதுருவுக்கு உரித்துங் கரிசனையும் உண்டென்பது நமக்குத் தெரிந்ததுபோலவே ‘யோவானுடைய தாயையும்’ தனக்குத் தாயாகப் பாவித்து எழுதுவதுங் கூடியதுதான். போர்டிங் பாடசாலைப் பிள்ளைகளுக்குத் தாய்மார் வெகு சுளுவாய்க் கிடைப்பது அவர்களுக்கு நன்றாய்த் தெரிந்த இரகசியம். அப்படியே ‘யோவானுடைய தாய்’ துடுக்குள்ள யோவானை அடக்கமுள்ள தேவாட்டுக்குட்டிக்கு இசைந்த சகோதரன் என்று ஒப்புக்கொண்டாள். அவனுடைய சுபாவமும் அப்படியே மாறிற்று. ‘பாக்கியவதியாகிய’ மரியம்மாளைப் ‘பாக்கியவதி’ என்று வாயால் சொல்லுகிறதில் அல்ல, அவளுடைய சுபாவங்களை அணிந்துகொள்வதே மேன்மை.

போஜனம் பண்ணும்முன் ஜெபம் பண்ணுகிற வழக்கம் (1 சாமு. 9: 13) சாமுவேல் தீர்க்கதரிசி மூலமாய் உண்டாயிற்றாம். அவன் அதை தாயிடத்தில் கற்றுக்கொண்ட முன்மாதிரி என்பதற்குத் தடையென்ன? அப்படியே, தேவனுடைய இராஜ்ஜியத்தில் போஜனபானம் பண்ண எதிர்பார்க்கிற நாமும், மரியம்மாளிடம் கற்றுக்கொள்ளவேண்டிய ஒரு போதனை இருக்கிறது. ‘அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ அதின்படி செய்யுங்கள்’ என்பதே (யோவா. 2: 5). இப்படி நடந்துகொண்ட (அப். 4 : 33) ‘அவர்களெல்லார்மேலும் பூரணகிருபை உண்டாயிருந்தது.’ சகோதரியே உனக்கு வேண்டாமா இந்தப் பூரணகிருபை? ‘நான் உயர்த்தப்பட்டிருக்கும்போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்வேன்’ என்ற

பரமராஜா சிலுவையிலிருக்கும்போது மரியாதைக் குறைவாய் 'ஸ்திரீயே' என்று சொல்லவில்லை. மூலபாஷையில் அதாவது வீட்டு வழக்கப்படியே 'ஆந்நா' [அகத்தாளே!] என்று சொன்னார். 'பூஜை முடிந்தது புளியடி காவலா?' என்றபடி நன்றிக் கேடு மறதி கொஞ்சமாவது ஆண்டவரிடம் இல்லை. தாம் மார்போடணைத்துக் காத்த சீஷன், தன் 'அகம்' எப்படியிருந்தால் இயேசு சாமிக்கு மனங் குளிரும் என்பதை நன்றாய் அறிந்திருந்தால், திரும்பத் திரும்பக் கெஞ்சப் போக்கு புகலற்றுப்போய் பவுல் அப்போஸ்தலன் (பிலே. 12 வாக்.) 'என் உள்ளம் போலிருக்கிற அவனை நீர் ஏற்றுக்கொள்ளும்' என்று சொன்னதுபோலவே மரியம்மாளிடம் யோவானையும் யோவானிடம் மரியம்மாளையும் ஒப்புவித்தார். அவர்களிருவரும் நமக்குச் சொல்லும் ஆலோசனை என்னவென்றால் 'எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது. உங்களுடைய சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கு அறிவிக்கிறோம்' (1 யோவா. 1 : 3) என்பதே.

மைவினை யிதய மாய வகலுளை மலினம் போக்கி
மெய்விசு வாச மென்னும் வியன்றிரி கொளுவி மாறாத்
தெய்விக வருளை யூற்றித் திவ்விய சுடரை யேற்றி
நெய் விளக் கலர்த்தி யென்று ணிலவி வீற்றிருந்தி நீண்டோய்.

U. A.

(*Concluded*)

## SOME INDIAN BIRDS (*Continued*)

## பரதகண்டத்து பட்சி வகைகள் (தொடர்ச்சி)

### VI

நமது தோட்டங்களுக்கு வரும் மிகவும் சாதாரணமானதும் பழக்கமானதுமான பறவைகளில் சிறிய வண்ணாத்திக்குருவி (Robin) ஒன்று. அது ஏழு அங்குலத்துக்குக் குறைவான நீளமுள்ளது. அது முழுவதும் பளபளப்பான கறுப்பு நிறம்; ஆனால் பறக்குப்போது ஒவ்வொரு இறக்கையின் அடியிலும் வெள்ளைப் படலங்களிருக்கின்றன. பெண், இருண்ட மங்கலான கபில நிறம். சேவலும் பெட்டையும் வால் நேராய் நிற்கிறவரையில் அதை ஆட்டும். வண்ணாத்திக் குருவி அதிகம் பாடுகிறதில்லையென்றாலும் சூரியோஸ்தமன காலத்தில் ஒரு தாழ்ந்த மரத்தின் மேலாவது கத்தாழை வேலியின் மேலாவது உட்கார்ந்து இன்பமாய்க் கீச்சிடும். அதிகாலையில் அல்லது மாலை மயங்குகிற நேரத்தில் கிணற்றுக்குத் தண்ணீருக்குப்





போகும்போது செடியின்மேல் உட்கார்ந்து வாலை ஆட்டிக்கொண்டு கீச்சிடுகிற ஒரு சின்னக் கறுப்பு பறவையைக் கவனி. அது அதிக பழக்கமான ஒரு குருவி ஆகையினால் சீக்கிரம் அதின்மேல் பிரியங் கொள்வாய். பெரிய வண்ணாத்திக் குருவி (Dhyal or Magpie Robin) சாதாரண வண்ணாத்திக் குருவியைச் சேர்ந்தது. ஆனால் அதை விட பெரியதாயும் அழகாயுமிருக்கும். சின்ன வண்ணாத்தியை ஒரு எளிய கிராமவாசியென்றும், பெரிய வண்ணாத்தியைப் பட்டணத்துக்குப்போய்த் தனவந்தனான ஒரு உத்தியோகஸ்தனென்றுஞ் சொல்லலாம். படம் பார்க்கவும். அதனுடைய தோகை கறுப்பும் வெள்ளையுங் கலந்த அழகு நிறமாயும், வண்ணாத்தியைப் போலவே அசைத்து மேலே உயர்த்தும் அதின் வால் நீளமாயுமிருக்கிறது. ஆண்பறவை பெண்பறவையைப் போலிருந்தாலும் பெண்ணின் இறகுகள் புகைவர்ணமாயும், ஆண் இறகுகள் கறுப்பாயுமிருக்கும். ஆணைவிடப் பெண் அதிக பயங்காளியாகையினால் அதிகமாய் வெளியே காணப்படுவதில்லை. ஆண் அடிக்கடி நமது தோட்டங்களுக்கு வருகிறது. பச்சை இலைகளுக்குக் குறுக்கே அது கிளைக்குக் கிளை பறக்கும்போது கறுப்பும் வெள்ளையுங் கலந்த அதனுடைய தோகை சோபிதமாய்த் துலங்கப்பார்ப்பது வெகு அழகிய காட்சி.

மேற்சொல்லிய பறவையைப்போலவே தோன்றுகிறது வாலாட்டிக் குருவி. அதைப்போலவே இதற்கும் கறுப்பும் வெள்ளையுங் கலந்த தோகை உண்டு என்றாலும், இவை இரண்டுக்கும் சில வித்தியாசங்கள் உள. பெரிய வண்ணாத்தியில் கறுப்புக்கும் வெள்ளைக்கும் இடையிலுள்ள கோடு நேராயிருக்கும்; ஆனால் வாலாட்டிக்கோ அது ஐரோப்பிய பிள்ளைகள் தரிக்கும் மாராடையைப்போல் வட்டமாயிருக்கும். பெரிய வண்ணாத்தியை அடிக்கடி மரக்கொம்புகளில் பார்க்கலாம்: வாலாட்டியோ குளக்கரை, ஏரிக்கரைகளுக்கு அடுத்த திறந்த தரையில் குதித்து நடப்பதைப் பார்க்கலாம். மூன்றாவது, பெரிய வண்ணாத்தி சமயா சமயத்தில் வாலாட்டுகிறது. ஆனால் வாலாட்டியோ அதின் காரணப்பெயர் குறிப்பிக்கிற பிரகாரம் ஓயாமல் வாலை அசைத்துக்கொண்டேயிருக்கும். மேலும் அது இன்பமாய்ப் பாடுகிறது. குளிர்காலத்தில் வாலாட்டியை அடிக்கடிக் காணலாம். நவம்பர், டிசம்பர் மாதங்களில் நீ அதைப் பார்த்து பெரிய வண்ணாத்தியோடு ஒப்பிட சமயமிருக்கும்.

அவ்வளவு சாதாரணமல்லாத இன்னொரு வாலாட்டியுண்டு (Grey Wag-tail); அது வெளுப்பாயிருப்பதோடு சிறியதாய் மெலிந்து நீண்ட வாலோடுகூடி அழகாயிருக்கும். அதின் மேற்பாகம் வெண்மையாயும் கீழ்ப்பாகம் மஞ்சளாயுமிருக்கும். அது கோடைகாலத்தில் வடக்கே வெகுதூரத்துக்குப் போகிறது. அது தென் இந்தியாவுக்கு வர ஆரம்பிக்கும்போது குளிர்ந்தகாலம் தொடங்கினதென்பதற்குத் தவறாத அடையாளம்.

Miss A. B. VanDoren.

## THE KING'S CUP-BEARER *(Continued)*

## ராஜாவுக்குப் பானங்கொடுப்போன் (தொடர்ச்சி)

### XV. அத்தியாயம்

### பழைய பாவம்

'நீங்கள் உங்கள் குமாரத்திகளை அவர்கள் குமாரருக்குக் கொடாமலும், அவர்கள் குமாரத்திகளில் ஒருவரையும் உங்கள் குமாரருக்காகிலும் உங்களுக்காகிலும் கொள்ளாமலும் இருக்கவேண்டுமென்று அவர்களைத் தேவன்மேல் ஆணையிடப்பண்ணி'

பிற்பாடு, பெரிய ஞானியும் தேவனால் நேசிக்கப்பட்டவருமாகிய மகத்துவமும் மேன்மையும்பொருந்திய சாலொமோன் ராஜா இந்த பாவத்தில் விழுந்தபடியால், எவ்வளவு கேடும் பயங்கரமும் நேரிட்டது என்று நினைப்பூட்டுகிறார். சாலொமோன் ராஜா அந்நிய தேசத்





துப் பெண்களை நேசித்தபடியால், தேவனைவிட்டுப் பாவத்திற்கு வழிவிலகிப் போயிருக்கிறாரே. ஞானிகளிலெல்லாம் ஞானியும் தேவனால் நேசிக்கப்பட்டவருமாகிய அவரே விழுந்துபோனாரானால், அதே விதமான வலைக்குள்ளே நடந்துபோகிற இவர்கள் அதேவிதமாய் பிடிக்கப்பட்டு வலையிலகப்படாதிருப்பதெப்படி? 'இஸ்ரவேலின் ராஜாவாகிய சாலொமோன் இதினால் பாவஞ்செய்தானல்லவா? அவனைப்போன்ற ராஜா அநேகம் ஜாதிகளுக்குள்ளே உண்டாயிருந்ததில்லை. அவன் தன் தேவனால் சிநேகிக்கப்பட்டவனாயிருந்தான். தேவன் அவனை இஸ்ரவேலனைத்தின்மேலும் ராஜாவாக வைத்தார்; அப்படிப்பட்டவனையும் மறு ஜாதியான ஸ்திரீகள் பாவஞ்செய்யப்பண்ணினார்களே. நீங்கள் மறு ஜாதியான ஸ்திரீகளைச் சேர்த்துக்கொள்ளுகிறதினால், நம்முடைய தேவனுக்குத் துரோகிகளாகி, இந்தப் பெரிய பொல்லாப்பையெல்லாம் செய்யும்படிக்கு உங்களுக்கு இடங்கொடுப்போமோ?'

நெகேமியா, அப்படியானால் அந்நிய பெண்களை அனுப்பிவிடச் செய்தாரோ? அதைப்பற்றி நமக்குச் சொல்லப்படவில்லை. அப்படிப்பட்ட விவாகம் நடக்கக்கூடாது என்று மிகவும் பலமாயும் தீர்க்கமாயும் வற்புறுத்தினார். இந்த துர்வழக்கத்தைக் கவலையீனமாய் விட்டுவிட்டால், அழிவும், அவமானமும், நிந்தையும் வந்து நேரிடும்.

ஆகையால் இதை நிறுத்தும்படி, அதிகமான சிரத்தை எடுத்துக் கொண்டது சரியான விஷயமே. இந்தத் திட்டமான ஏற்பாட்டை இன்னும் வற்புறுத்திக் காட்டும்படியாக, ஒரு மனிதனை அவர்களுக்கு முன்பாக மாதிரியாக நிறுத்துவது தகுதியானதென்று அறிந்தார்—இடறலுண்டாக்குகிற ஒரு அவயவம் வெட்டுண்டுபோவது நல்லது என்றுணர்ந்தார். இது பிரதான ஆசாரியனுடைய பேரனாகிய மனாசேதான். இந்தப் பிரதான ஆசாரியன்தான் தொபியா தேவாலயத்திற்குள் பிரவேசிப்பதற்குக் காரணமாயிருந்தார். மனாசேயினாலே தான் எலியாசீபுக்கும் சமாரியருக்கும் சிநேகபந்தம் இருந்துகொண்டேயிருந்தது. இங்கே, ஆசாரியனாகிய மனாசே, தேவாலயத்தில் வசித்துக்கொண்டு, வெள்ளை அங்கிதரித்து, தேவஊழியத்தில் பங்கு பெற்றுக்கொண்டிருக்கிறார். அவருக்கோவென்றால், காலமெல்லாம் அஞ்ஞான மனைவி இருக்கிறாள். வீட்டுக்குள்ளே அஞ்ஞான நடபடிகள் நடந்தேறிக்கொண்டு வருகிறது. மனாசேயின் மனைவி சன்பல்லாத்துடைய மகள்தான். இவர்களிருவரும் ஆலயப் பிராகாரங்களில் வசிக்குமட்டும் சன்பல்லாத்தின் அதிகாரத்திற்கு முடிவிராதென்று அறிந்து மனாசேயை ஆலயத்திலிருந்து துரத்திவிடுகிறார். 'அவனை என்னை விட்டுத் துரத்தினேன்.' மனாசே தன் மனைவியோடே சமாரியாவிலுள்ள மாளிகையாகிய மாமன் வீட்டிற்குப் போய்விட்டார். அந்த இரவு நெகேமியா எருசலேம் பட்டணத்தாரால் இகழப்பட்டிருப்பார். அவர்களில் அநேகர் இவர் மகா கடினமுள்ளவரென்றும், இறுக்க நெஞ்சரென்றும் பலவாறாய் நிந்தித்திருப்பார்கள். இன்னும் அநேகர் துணிந்தார்களானால், நெகேமியாவுக்கு விரோதமாய்க் கலகம் பண்ணியிருக்கலாம். எல்லாக் காரியமும் செய்து முடித்தாயிற்று. மனுஷனை அல்ல, தேவனைப் பிரியப்படுத்தும்படியாகவே இந்த பலத்த கிரியைகள் நடத்தப்பட்டன. ஆண்டவர் அவரைப் புகழ்ந்தால் போதும், மனிதர் அவரைப்பற்றி என்ன சொன்னாலும் சொல்லட்டும். 'கர்த்தாவே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்' என்பதே நெகேமியாவின் அன்றாட ஜெபமாயிருந்தது. ஆகையால் அவர் செய்த வேலை அடிக்கடி ஜனங்களுக்கு இஷ்டமில்லாமலும் வெறுப்பாயும் இருந்தபோதிலும், நெகேமியா அதைத் தைரியமாய்ப் பயமில்லாமல் செய்தார்.

காலங்கள் மாறிமாறி வருகிறது. தேச சரித்திரங்கள் அடிக்கடி சொல்லப்பட்டுவருகிறது. பாவமும் திருப்பித் திருப்பிச் சொல்லப்பட்டும் செய்யப்பட்டும் வருகிறது. அக்காலத்திலுள்ள பாவம் இக்காலத்திலும் காணப்படுகிறது. எருசலேமின் ஜனங்களைக் கவிழ்த்துப்போட்ட அதே சோதனை நாகரீகம்பெற்ற இந்தக் காலங்களிலும்



நம்மை வருத்துகிறதில்லையா? நமக்கு சிநேகிதர் வேண்டும். நாம் தனிமையாயும் ஏகாந்தமாயும் இருக்கக்கூடாது. இது நம்முடைய இயல்பான சுபாவம். அந்த சுபாவம் நம்மோடே பிறந்திருக்கிறது. இது நமக்கு நம்முடைய ஆதித்தகப்பனாகிய ஆதாமினிடத்திலிருந்து வந்தது. 'மனிதன் ஒண்டியாயிருப்பது நல்லதல்ல' என்று கர்த்தர் தம்முடைய அன்பினால் உருக்கமாய்ச் சொல்லுகிறாரே.

ஆனால் சிநேகிதரைத் தெரிந்துகொள்ளுவதில் ஜாக்கிரதை வேண்டும். நம்முடைய இனத்தார் தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஒருவனும் தன்னுடைய தகப்பனையாவது, தாயையாவது, சகோதரரையாவது தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. சிநேகிதரைத்தான் நாம் தெரிந்துகொள்ளவேண்டும். நாம் அதை எப்படித் தெரிந்துகொள்ளுகிறோமோ, அதிலிருந்துதான் நித்தியத்தில் நம்முடைய பங்கும் தெரிந்துகொள்ளப்படும்.

மகா பிரகாசமுள்ள மோட்சமா அல்லது அந்தகாரமும் நிர்ப்பாக்கியமுமுள்ள நரகமா, எது என் பங்காயிருக்கும்? அதற்கு உத்தரவு வேண்டுமோ? நாம் தெரிந்துகொள்ளும் சிநேகிதரால் தான் அது ஊர்ஜிதப்படவேண்டும். நம்முடைய உலகத்தில் இரண்டு பிரிவு, இரண்டு கூட்டம், இரண்டு மந்தை உண்டு. அந்தகாரத்தின் ராஜ்ஜியம், வெளிச்சத்தின் ராஜ்ஜியம்; கர்த்தருடைய ஜனங்கள், அவருடையவர்களல்லாதவர்கள்; வெள்ளாடுகள் செம்மறியாடுகள். எந்தப் பிரிவிலிருந்து, எந்தக்கூட்டத்திலிருந்து, எந்த மந்தையிலிருந்து நமக்குச் சிநேகிதரைத் தெரிந்துகொள்ளுவோம்? 'அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடனே பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? (2 கொரி. 6 : 14.)

'மருவிய காதன் மனையாளுந் தானும்
இருவராய்ப் பூண்டுய்ப்பி னல்லால்—ஒருவரால்
இல்வாழ்க்கை யென்னு மியல்புடைய வான்சகடம்
செல்லாது தெற்றிற்று நின்று.'

விசேஷமாய் மிகநெருக்கமும் அருமையுமான அந்த சிநேகத்தைத் தெரிந்துகொள்ளுவதில் ஜாக்கிரதை வேண்டும். நம்முடைய உயிரை விட அதிகமாய் நேசிக்கிற அந்த ஆள் திருச்சபைக்கு வெளியே, மந்தைக்கு வெளியே இருக்குமானால், எப்படி அதோடு ஒன்றாக்கப்படலாம்? மகா உறுதியும் பரிசுத்தமுமான கட்டால் எப்படிக் கட்டப்படலாம்? அப்படிப்பட்ட விவாகங்களில் தேவாசீர்வாதமிராது. அந்தக் கலியாணவீட்டில் இயேசுவானவர் அழைக்கப்பட்ட விருந்தாளியாயிருக்கமாட்டார். நம்முடைய இரட்சண்ணிய அதிபதியின்

எக்காள சத்தம் அதிக தெளிவாயும் விவரமாயும் உரைக்கிறது என்னவென்றால் ‘அவர்களினின்று புறப்பட்டுப்போய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள்’ என்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார். (2 கொரி. 6 : 17.)

S. A. Vethanayaham.

(இன்னும் வரும்.)

# THE MOTHER'S INFLUENCE

## மாதாவின் செல்வாக்கு

நன்மைக்கோ தீமைக்கோ புருஷன்பேரில் இல்லாளுக்குச் செல்வாக்குண்டு. கணவர்பேரில் நன்மைக்கென்று மாத்திரம் செல்வாக்குச் செலுத்தப் பிரயாசப்படுவது சகல பெண்கள் சிகாமணிகளின் கடமையாம். இங்கே பெற்றதாயார் தன் பிள்ளைகளின்பேரில் செலுத்துஞ் செல்வாக்கைப்பற்றி மாத்திரஞ் சொல்ல ஆலோசிக்கிறேன். இதனால் தற்சமயம் தாய்மாராய் இராதவரும் பிரயோசனமடையலாம், பெற்ற பிள்ளைகள் இல்லையாதலினாலே தங்களுக்கு உத்தரவாதமில்லையென்று நினைக்கலாகாது. இவர்களும் செல்வாக்குச் செலுத்த இடமுண்டு; வாழ்க்கைப்பட்டவளுடைய பிள்ளைகளைப்பார்க்கிலும் அநாதஸ்திரீயினுடைய பிள்ளைகள் அதிகமென்று வேதத்தில் கண்டிருக்கிறது.

புருஷன்தான் வீட்டுக்குத் தலைவனென்று சொல்லி, தாய்மாரே உங்கள் உத்தரவாதத்தை உதறிவிடாதேயுங்கள். புருஷன் வீட்டுக்குத் தலைமையென்றால் அவரைக் கனம்பண்ணவேண்டும். ஆனால் தாய் குடும்பத்துக்கு இருதயமும் கைகளுமாய் இருக்கிறாளென்பதை மறக்கலாகாது. ஆங்கிலத்தில் வழங்குகிற முதுமொழியொன்றுண்டு: ‘தொட்டிலை ஆட்டும் கையே தொல்லுலகை ஆளும் கை.’ இதில் எவ்வளவு சத்தியம் அடங்கியிருக்கிறதென்று கூர்ந்து யோசித்துப்பாருங்கள்.

மேலும் ‘தாயைப்போற் பிள்ளை, நூலைப்போற் சேலை’ என்பது உங்கள் நாட்டுப் பழமொழியல்லவா? இது மெய்வார்த்தை. தாய் முன்கோபக்காரியும், எப்பொழுதும் குற்றஞ் சாட்டுகிறவளும், சோம்பேறியும், எத்துக்காரியும், வஞ்சனைசெய்கிறவளுமாயிருந்தால், குடும்பமும் அப்படியே யிருக்கும். உன்னுடைய குடும்பத்தில் யாதாம் பிரியவீனமான காரியங்களுண்டா? இருந்தால் நீதான் அதற்கு உத்தரவாதி; அந்த பழி உன்பேரில்தான் வரும்.

அநியாயமாய்த் தாய்மேல் பாரம்போடுகிறேன் என்று நினைக்காதே. மட்டுக்கு மிஞ்சி அவளுக்குச் செல்வாக்குண்டென்று நான்



சொல்லவில்லை. நான் அப்படி நினைக்கவில்லை. உன் வீட்டில் எப்படியிருக்கிறது? பிள்ளைகள் எப்பொழுதும் வீட்டில் சண்டையுஞ் சச்சரவுமாயிருக்கிறார்களா? இருந்தால் அது உன் தப்பிதமே. அவர்கள் லச்சைபண்ணித் தொந்தரவுகொடுக்கும்போது நீயுங் கோபங்கொண்டு நன்றாய்த் திட்டி அடிக்கிறாயா? அதுதான் பெரிய தப்பு. அந்த சமயத்தில் உன் கோபத்தை அடக்கிக் குளிர்ந்த முகத்தோடே அமைதலாய்ப் பேசவேண்டும். ‘உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக’ என்றும், ‘அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள்’ என்றும் வேதமிருக்கிறது. அமைதலான வார்த்தைகள் கலங்கின தண்ணீரின்மேல் எண்ணெய் ஊற்றுவதைப் போலிருக்கும். கோபமான வார்த்தைகளோ அதிக வருத்தங்கொடுக்கும். உன் கோபகுணத்தை அடக்கிக்கொள்; தன்னடக்கங் கற்றுக்கொள். இது ஒரு கடினமான பாடந்தான்.

பிள்ளைகள் எப்பொழுதும் ஒருவர்மேல் ஒருவர் குற்றஞ்சாட்டுகிறார்களா? அப்படியானால் நீ வழக்கமாய்க் குற்றம் பிடிக்கிறதை அவர்கள் கேட்டிருப்பார்கள். அவர்கள் சோம்பேறிகளாயும் கவலையீனராயுமிருக்கிறார்களா? நீ என்ன முன்மாதிரி காண்பிக்கிறாய்?

நான் பேசவிரும்புகிற இன்னொரு விஷயமுண்டு; அது உண்மை. உன்னுடைய பிள்ளைகள், உண்மையுள்ள பிள்ளைகளாயிருக்க விரும்புகிறாயா? இது இலேசான காரியமல்ல. நீயே முதலாவதாகப் பேச்சிலேயும் செய்கையிலேயும் அவர்களிடத்தில் உண்மையாயிருக்கவேண்டும். திருஷ்டாந்தமாக, ஒரு சின்னபிள்ளையை அமர்த்தப் ‘பூச்சி வருகிறது, பூச்சிவருகிறது’ என்று சும்மா பயப்படுத்துகிறாய், அல்லது ‘துரைசானி உன்னைப் பிடித்துக்கொண்டு போவார்கள்’ என்று சொல்லுகிறாய். இது பொய் வார்த்தை. இதே பிரகாரம் ‘உன்னை விட்டு விட்டுப் போகிறேன்’ என்றும், ‘நான் எங்கும் போகமாட்டேன்’ என்றும், வஞ்சிக்கச் சும்மா சொல்லுகிறாய். இது தகாது. எப்பொழுதும் மெய்யைப் பேசு, உண்மையாயிரு. மேலும் அவர்கள் பொய் பேசினாலும், மோசஞ் செய்தாலும் அவர்களைக் கண்டிக்கவுந் தண்டிக்கவும் நேரிடும்.

நாம் நம்முடைய பிள்ளைகளைச் சரியாய் நடத்தி வளர்க்கவேண்டும். நடத்துகிறதாவது என்ன? ஒருநாளில் செய்யக்கூடிய வேலையா? ஒரே பிரமாணத்தினாலாவது, ஒரே சிட்சையினாலாவது ஆகுமா? ஆகாது. அநேக பிரமாணங்களும், அனுதின செல்வாக்கும், அன்றாடக முன்மாதிரியும் அதற்கு அவசியமாகும். நாம் அவர்களோடு பட்சமாயும் கரிசனையாயுமிருப்பதோடுகூட உறுதியாயுமிருக்கவேண்டும்.

திருஷ்டாந்தமாக, ஒரு பிள்ளை தான் வைத்திருக்கத் தகாத ஒரு பொருளை எடுக்க ஆசிக்கிறது. முதலில் தாய் இல்லை, கொடுக்கமாட்டேன் என்று மறுக்கிறாள். ஆனால் பிள்ளை அழுது தொந்தரவு செய்து கேட்டுக்கொண்டே இருக்கிறது. கடைசியாய்த் தன் பிள்ளையை அமர்த்தும்படி அதைக் கொடுக்கிறாள். இது சரியா? இல்லையே. ஒரு தரம் இல்லையென்று சொன்னால் கடைசிவரையில் இல்லை என்றே சொல்லவேண்டும். குழந்தைப் பருவத்திலிருந்து இப்படி கற்றுக்கொடுத்தால் தன் தாய்க்கு பேச்சு ஒன்றே யென்றும் அழுது இலச்சைக் கொடுப்பதினால் பிரயோசனமில்லை யென்றும், பிள்ளை அறியும்.

ஒரு மிருகக் குட்டியைப் பழக்க அநுதினம் அதற்கென்று அதிக நேரம் செலவிடுவோம். ஒரு மரச்செடியை நேராய் வளர்க்கவேண்டுமென்றால் சின்ன செடியாயிருக்கும்போதே நிமிர்த்தி வைத்துக் கட்டமாட்டோமா? பெரிய செடியாகும் மட்டும் விட்டுவிடமாட்டோமல்லவா? அப்படியே 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?'

பிள்ளைகளைச் சிறு பிராயத்தில் தங்கள் இஷ்டத்திற்கென்று விட்டுவிட்டால் பெரியவர்களாகும்போது நமக்குச் சந்தோஷமும் கனமுமாயிருப்பார்களா? இல்லை, இருக்கமுடியாது. பிறந்த நாள் முதற்கொண்டு தாய் தன் செல்வாக்கைச் செலுத்தவேண்டும்.

'பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான்' என்றும், 'தன் இஷ்டத்திற்கு விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்க்கு வெட்கத்தை உண்டுபண்ணுகிறான்' என்றும் ஞானி சொல்லுகிறான்.

ஏலியின் சரித்திரத்தை ஞாபகத்தில் வை. ஏலி தேவபக்தியுள்ள ஒரு நல்ல மனுஷன். ஆனால் அவனுக்குள் ஒரு குறைவு இருந்தது; அவன் குமாரர் தங்கள்மேல் சாபத்தை வரப்பண்ணுகிறதை அவன் அறிந்திருந்தும் அவர்களை அடக்காமற் போனான். 'பிள்ளையைத் தண்டியாமல் விடாதே' என்று நீதிமொழி புஸ்தகம் உரைக்கிறது.

சிலவேளைகளில் பிள்ளைகளைத் தண்டிக்கவேண்டியது அவசியமே; ஆனால் ஒரு விசேஷித்த காரியத்தை ஞாபகத்தில் வைக்கவேண்டும். அதாவது, கோபத்தோடு தண்டிக்காதே. கோபத்தோடு தண்டித்தால் உன் பிள்ளை உனக்கு பயப்படும்; அமைதியாய்த் தண்டித்தால் உன்னை நேசிக்கும். பிள்ளை கோவினாலே அழுதாலும் உன் அண்டைக்கு வந்து தன் முகத்தை உன் மடியிலே வைத்து அழும்; அந்தத் தண்டனையின் நியாயத்தை அறியும். கொஞ்சநேரம் அழுது நிற்கும்போது ஒரு நல்ல வார்த்தை சொல்ல தாய்க்கு ஏற்ற சமயங் கிடைக்கும். 'கண்மணி, உன்னைத் தண்டிக்க எனக்கு மனங்



கேட்கவில்லை. ஆனால் நான் சொன்னபடியே செய்யவேண்டும். இன்னொருதரம் நீ என் பிரமாணத்தை மறக்கமாட்டாய்' என்று சொல்லிப் பிள்ளைக்கு ஒரு முத்தங் கொடு. இது ஒரு படிப்பினையைக் கற்பிப்பதோடு உனக்கும் பிள்ளைக்குமுள்ள பந்தத்துவத்தையும் பலப்படுத்தும்.

முன்மாதிரியினால் தாய் தன் பிள்ளைகளின்பேரில் பெலமாய்ச் செல்வாக்குச் செலுத்தலாம். அவர்கள் தேவவசனத்தை நேசிக்கவேண்டுமென்றிருக்கிறீர்களா? கதை கேட்கப் பிரியப்படுகிறீர்களா? அப்போது அவர்களுக்கு வேத கதைகள் சொல்லு; தீமோத்தேயுவைப்போல சிறுவயதுமுதல் வேதம் அறிந்தவர்களாவார்கள். அவர்கள் ஜெபம்பண்ண வேண்டுமென்றிருக்கிறீர்களா? நீ முழங்கால் படியிட்டு ஜெபம் பண்ணுகிறதைப் பார்த்தால் சின்னபிள்ளை வந்து உன் பக்கத்தில் முழங்கால்படியிடும். அப்போது அவர்களுக்கு ஏற்ற படி ஒரு சிறு ஜெபம் பண்ணு. பள்ளிக்கூடத்தில் அவர்கள் நன்றாய்த் தேறவேண்டுமென்பது உங்கள் மனதா? அவர்களுடைய பாடங்களைப்பற்றி விசாரித்துப் பாடங்களை ஆயத்தம்பண்ண உதவிசெய்யுங்கள்.

கடைசியாய்ச் சொல்லவேண்டிய விசேஷமொன்றுண்டு.

'தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்' என்ற பழமொழிப்படி சிறு வயதில் தாய் செலுத்தும் செல்வாக்கே பலத்த செல்வாக்கு. அப்படியானால் அந்த காலத்தைப் பிரயோசனப்படுத்திக்கொள்வோமாக. வாலிபப்பிராயத்தில் தகப்பனோ, ஆசானோ அல்லது அவர்கள் மதிப்புக்குப் பாத்திரமாய் இருக்கிற யாரோ செலுத்துகிற செல்வாக்குதான் பெலமாயிருக்கும். ஆகையினால் இந்த பத்து, பன்னிரண்டு வருடம் வரையில் தாய் தன் செல்வாக்கைப் பிரயோசனமாயும் உறுதியாயும் செலுத்தட்டும். அப்படிச் செய்தால் மெய்யாகவே நம்முடைய பிள்ளைகள் எழும்பி நம்மைப் பாக்கியவதிகள் என்பார்கள். 'பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்' என்று வேதமுரைக்கிறது.

E. F. Scudder.

## BIBLICAL PUZZLES AND RIDDLES

## விடு கதைகள்

4. ஆட்டை மேய்த்தவன் விண்ணாட்டை நாடியே
ஆருயிர்ப் பலி யீந்தனன்—நல்ல
காட்டை யாண்டவன் னாயனுக் கென்ன
காட்டி யன்பை நாடினன்?

5. ஜீவனுயக ஜுக்கிவேதற் கேற்ற
சிந்தையை யெவன் முந்தி யீந்தனன்?—சற்றும்
பாவ சிந்தை யில்லா இறைவனைப்
பார்த்துற வாட லாகுமோ?

6. தம்பிமேற் கோபந் தும்பிட வாபேல்
தான்செய்த துரோகம் மென்?—வீணர்
கண்டிடாப் பிழை பக்தரி லுண்டோ?
காரணம், வேதங் காட்டுதோ?

## ANSWERS TO PUZZLES GIVEN IN SEPTEMBER

## செப்டெம்பர் மாசத்தில் கொடுத்த விடுகதைகளின் விடைகள்

1. கோழிக்குஞ்சு, வெண்ணெய், பருத்திக்கொட்டை.
2. கையுறை.
3. மிளகாய்ச் செடி.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1916-௵ நவம்பர் ௴

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பு. | யோபு. | 1. | 1—12 | 10 | வெ. | யோபு. | 22. | 1-3, 21-30 | 20 | தி. | யோபு. | 42. | 1—17 |
| 2 | வி. | „ | 1. | 13—22 | | | | | | 21 | செ. | கலா. | 1. | 1—17 |
| 3 | வெ. | „ | 2. | 1—13 | 11 | ச. | „ | 23. | 1—17 | 22 | பு. | „ | 2. | 11—21 |
| 4 | ச. | „ | 4. | 1—19 | 12 | ஞா. | „ | 28. | 1—14 | 23 | வி. | „ | 3. | 1—14 |
| 5 | ஞா. | „ | 9. | 1—18 | 13 | தி. | „ | 28. | 15—28 | 24 | வெ. | „ | 3. | 15—29 |
| 6 | தி. | „ | 9. | 19—35 | 14 | செ. | „ | 29. | 1—18 | 25 | ச. | „ | 4. | 1—15 |
| 7 | செ. | „ | 14. | 1—15 | 15 | பு. | „ | 33. | 14—30 | 26 | ஞா. | „ | 5. | 1—15 |
| 8 | பு. | „ | 15. | 1—16 | 16 | வி. | „ | 35. | 1—16 | 27 | தி. | „ | 5. | 16—26 |
| 9 | வி. | „ | 19. | 1—6, 20—29 | 17 | வெ. | „ | 38. | 1—18 | 28 | செ. | „ | 6. | 1—18 |
| | | | | | 18 | ச. | „ | 38. | 19—38 | 29 | பு. | சங். | 96. | 1—13 |
| | | | | | 19 | ஞா. | „ | 40. | 1—14 | 30 | வி. | „ | 97. | 1—12 |

### டிசெம்பர் ௴

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வெ. | சங். | 98. | 1—9 | 3 | ஞா. | ஏசா. | 40. | 1—17 | 5 | செ. | ஏசா. | 41. | 8—20 |
| 2 | ச. | „ | 99. | 1—9 | 4 | தி. | „ | 40. | 18—31 | 6 | பு. | „ | 42. | 1—11 |

C. L. S. PRESS, MADRAS—1916


# மாதர் போதினி

No. 228 டிசெம்பர் 1916 No. 12




## A CHRISTMAS SONG

## கிறிஸ்துஜயந்திச் சாழல்

### நாலடித் தாவுகொச்சகக்கலிப்பா

(இராகம்: 'முத்திநெறி யறியாத' என்பதுபோலப் பாடலாம்.)

1. என்னப்பன் எம்பெருமான் எல்லார்க்குந் தான்கடவுள்
மன்னுமுல கத்தின்பால் வைத்தஅன்பெத் துணைத்தேடி.
மன்னுமுல கத்தில்அன்பு வைத்ததனுற் றந்தானே
தன்னரிய ஒருமகனைச் சாவதற்கே சாழலோ.

2. அன்னவன்றன் றிருமகனை நம்பினவன் அழிவதில்லை
மன்னும்மொழி யாவாழ்வு பெற்றுய்வான் காணேடி
மன்னும்மொழி யாவாழ்வு மனிதர்கள்தாம் பெற்றுய்யப்
பொன்னுலகைத் திறந்துவைத்தான் புவிதனக்கே சாழலோ.

3. வான்பழித்திம் மண்புகுந்து மனிதனையாட் கொண்டவள்ளல்
மான்பழித்த நோக்கிமரி வயிறுதித்தான் காணேடி
மான்பழித்த நோக்கிமரி வயிறுதித்த தாலன்றோ
யான்பழிச்சம் இலக்கானான் யாவர்க்கும் சாழலோ.

4. கடவுளுரு தனக்கிருந்தும் கடவுளுக்குச் சமத்துவமே
படுபோரிற் பண்டமெனப் பற்றினனோ காணேடி
படுபோரிற் கொள்ளைகொண்ட பண்டமெனப் பற்றுமற்
கடவுள்வெறு மையனான காட்சியன்னே சாழலோ.

5. அடிமையுரு தானெடுத்தே அமரர்பிரான் குருசதனிற்
கொடுமரணம் என் அடைந்தான் மான்அறியக் கூறேடி
கொடுமரணம் குருசின்மிசை கொற்றவன்றான் உற்றிலனேற்
கடவுள்அருள் வாழ்வதனைக் காணுவமோ சாழலோ.

6. ஆடவன்தோள் சேர்ந்தறியா அணங்குமரி ஒருசேயை
ஈடுபுவி தனிற்பெற்ற நேர்மையது என்னேடி
ஈடுபுவி தனிற்கன்னி சேய்பெற்ற நேர்மையது
தேடரிய புண்யாத்மா செயலதுகாண் சாழலோ.

Francis Kingsbury.

## A CHRISTMAS STORY

## கிறிஸ்துஜயந்திக் கதை

கொஞ்சங்குறைய எண்ணூறு வருஷங்களுக்கு முன்னே, சோழநாட்டிலே குலோத்துங்கன் என்னும் பெயருள்ள இராசன் ஒருவன் ஆண்டுவந்தான். குலோத்துங்கன் என்னும் பெயருள்ள மூவர்களில் இவன் இரண்டாங் குலோத்துங்கன். இவனுக்குப் பட்டமகிஷியாய் வாய்த்தவள் பாண்டிய இராசனுக்கு மகள். ஒருகாலத்தில்



ஒரு காரணத்தினால் அரசனிடத்திற் பத்தினிக்கு ஊடல்* தோன்றிற்று. தோன்றவே, இராசபத்தினி அந்தப்புரஞ் சென்று கதவைத் தாழிட்டு உள்ளே வருந்தியிருந்தாள். அரசன் தன் மனைவியின் ஊடலைத் தணிக்கும்பொருட்டுப் பல உபாயங்கள் செய்தும் அவை எல்லாம் வீணாய்ப்போயின. போகவே, அரசன் தன் மனைவியிடத்துத் தனக்குள்ள காதலினாலே அவள் ஊடலை எப்படியும் தணிப்பிக்கவேண்டுமென்று நிர்ணயித்து, தன் சபையின் வித்துவான்களில் ஒருவரும் இராசபத்தினியின் ஆப்தருமாகிய புகழேந்திப் புலவரை யழைத்துத் தன் பத்தினியிடஞ் சென்று அவள் ஊடலை எப்படியும் தணிவிக்கும்பொருட்டு வேண்டினான். புகழேந்திப்புலவர் இராசபத்தினியின் அந்தப்புரத்தின் வாயிலில் நின்று உருக்கமாய்ப் பேசிய இனிய சொல் தன் காதில் விழவே, அரசி கதவைத் திறந்து அவருக்கு மரியாதைசெய்து அவரை ஏற்றுக்கொண்டதுமன்றி, அவர் வேண்டிக்கொண்டபடியே ஊடல் தணிந்து அரசனையும் ஏற்றுக்கொண்டு முன்போலவே அரசனிடம் காதல்கொண்டு வாழ்ந்து வந்தாள்.

இக்கதை கர்ணபரம்பரையாய் வழங்கிவரும் புகழேந்திப்புலவர் சரித்திரத்திற் காணப்படும். இங்கே இதனை ஒருவண்மையாகப் பார்ப்போம். (உபமானத்திற்) குலோத்துங்கன், (உபமேயத்திற்) கடவுள்; பாண்டியன் புதல்வியாகிய இராசபத்தினி மனுஷாத்துமா; ஒரு காரணத்தினாலே இராசபத்தினி அரசனிடம் ஊடல்கொண்டதுபோல, பல காரணங்களினாலே மனுஷாத்துமா கடவுளிடத்தில் வெறுப்புற்று தன் இருதயமாகிய அந்தப்புரத்தின் கதவைத் தாழிட்டு அடைத்துக் கொண்டது. ஊடல் எல்லாம் அரசியிடம் இருந்ததேயொழிய, அரசனுக்கு ஊடல் சற்றேனுமில்லாதவாறுபோல, மனுஷாத்துமாவுக்குக் கடவுளிடம் வெறுப்பேயொழியக் கடவுளுக்கு மனுஷாத்துமாவிடத்திற் சிறிதும் வெறுப்பில்லை. அரசியிடம் நிறைகாதல்கொண்ட குலோத்துங்கன் அவள் ஊடலைத் தீர்க்கப் பல உபாயங்கள் செய்ததுபோல, மனுஷாத்துமாவுக்குத் தம்மிடம் உள்ள வெறுப்பைப் போக்க அருளுருவாகிய கடவுள் செய்துவந்த வழிகளுக்கும் அளவு கணக்கில்லை. சோழன் செய்த பல உபாயங்களும் பலன் தாராமற்போனது போல கடவுள் செய்த பல மார்க்கங்களும் பயன் தாராமற்போயின போலும். குலோத்துங்கன் கடைசியாய்ப் புகழேந்திப்புலவரை அரசியிடம் அனுப்பினதுபோலக் கடவுளும் மனுஷாத்துமாவைத் தம்மிடம்

* ஊடல் என்பது கணவன் மனைவியாகிய இருவருக்குள்ளும் நிகழும் மனஸ்தாபம்.

சேர்த்துக்கொள்ளும்பொருட்டுப் புருஷோத்தமாகிய இயேசுவை மனுஷாத்துமாவிடம் அனுப்பினர். மனுஷரைப் பரமபிதாவிடம் சேர்க்கும்படி இயேசு உலகில் ஜென்மித்த சம்பவத்தை உலகத்துக்கு நினைப்பூட்டுவதே கிறிஸ்து ஜயந்தி உற்சவத்தின் நோக்கமாம். சோழன் மனைவி ஊடல் தீர்ந்து புகழேந்திப்புலவரையும் புகழேந்தி மூலமாய்ச் சோழனையும் ஏற்றுக்கொண்டதுபோல, மனுஷாத்துமாக்களாகிய நாமும் நம் வெறுப்பெல்லாம் விட்டு இயேசுவையும் இயேசுவின் மூலமாய்க் கடவுளையும் ஏற்றுக்கொள்வோமாக.



## SOME INDIAN BIRDS (*Continued*)

## பரதகண்டத்துப் பட்சிவகைகள் (தொடர்ச்சி)

### VII

**நா**ம் படத்திற் காண்பது இந்தியாவிலுள்ள மிக அழகியதும், கவனத்தைக் கவரக்கூடியதுமான பட்சி சாதிகளிலொன்று. இதுதான் மஞ்சாக்குருவி (the Black-headed Oriole). இது அதிக சாதாரணமான பட்சி அல்லாவிட்டாலும் நாம் அதை ஒரு தடவை பார்த்தால் மறுபடி மறந்துபோகமாட்டோம். அதின் தோகை பளபளப்பான மஞ்சள் நிறம். அதின் தலையும், கழுத்தும், இறக்கையும், வாலின் ஒரு பாகமும் கறுப்பாயிருக்கும். நான் பார்த்த பட்சிக்குக் கறியவாலில் இரண்டு மூன்று மஞ்சள் புள்ளிகளிருந்தன. இவ்



வழகிய பறவைகள் மரங்களில் தொட்டிலைப்போல் தொங்குகிற கூடு கட்டி வசிக்கும். பழவர்க்கங்களும் பூச்சிகளுமே அவைகளுக்கு இரை.

இந்தியாவில் மெத்தச் சாதாரணமாய்த் தெரிந்த குருவி புல்புல் (the Madras Bul-bul). அது வர்ணத்தில் கறுப்பும் வெள்ளையும் கலந்ததாயிருக்கும். அதின் வாலின் கீழிருக்கும் பெரிய செந்நிறமான சுழிகளால் அதை இலேசாய்க் கண்டுகொள்ளலாம். குளிர்காலத்தில் நான் அதை அடிக்கடிப் பார்த்து அதின் பாட்டைப் பிரியத்தோடு கேட்டிருக்கிறேன். ஆனால் அதிலும் சாதாரணமானது நீலகிரி புல்புல் (the Nilgiri Bul-bul). இது குன்னூர் முதலிய நீலகிரி பாகங்களிலும் பழனிமலைத் தொடரிலும் காணப்படுகிறது. குன்னூரில் ஒவ்வொரு மரத்திலும் செடியிலும் குறைந்தது ஒரு குருவியிருந்தாற்போல் அவ்வளவு சாதாரணமாயிருக்கிறது. அவைகள் அதிக சுறுசுறுப்பான பறவைகள்; எப்பொழுதும் ‘உர்’ என்கிற சத்தத்துடன் கிளைக்குக்கிளை பறந்தபடியே இருக்கும். இந்த புல்புலுக்கு வாலின் கீழேயிருக்கும் சிவப்புச் சுழியோடு கன்னங்களில் இரண்டு சிவப்புப் புள்ளியும், உயர்ந்து கூரிய தொப்பிப்போன்ற கொண்டையுமிருக்கிறது. அதிகாலையிற் தொடங்கி நாள்முழுதும் பாடிக்கொண்டேயிருக்கும். தான் வசித்துவந்த வீட்டு ஜன்னலில், அதிகாலையில் ஒரு புல்புல் வந்து உட்கார்ந்து, ‘Peace be with you,’ என்கிற பாட்டைப் பாடினாற்போல் ஒரு சின்னபாட்டைப் பாடிப் போவது வழக்கமென்று, குன்னூரில் பல வருஷங்களாக நோயாளியாயிருந்து வசித்துவந்த ஒரு வயோதிக ஸ்திரீ எனக்குச் சொன்னதுண்டு.

இதுவரையிலும் நமக்குப் பழக்கமான ஒரு பறவையைப்பற்றிக் கவனியாமற் போனோம். இதுதான் மைனா. இந்தக் கடைசி அதிகாரத்தில் அதைப்பற்றி நன்றாய்க் கவனிப்பது நியாயமே.

சாதாரண மைனா ஒரு பெரிய குருவி. நம்முடைய தோட்டங்களிலும் வீட்டு வட்டகைகளிலும் அது தரையில் இங்குமங்கும் ஓடி இரை தேடிக்கொண்டிருப்பதை நாம் எந்த நாளிலும் பார்க்கலாம். நாம் காகத்தை விட்டுவிட்டால் மைனா நமது தோட்டங்களிலுள்ள பெரிய பறவைகளில் ஒன்று. அதன் செம்பட்டை வர்ணத்தையும், கறுப்புத் தலையையும் இறக்கைகளிலும் வாலிலுமுள்ள வெண்கோடுகளையும் பார்த்து நாம் அதைச் சுலபமாய்க் கண்டுகொள்ளலாம். அது செட்டைவிரித்துப் பறக்கும்போது வெண்கோடுகள் தெளிவாய்த் தெரியும். அது பாடுவதற்குப் பதிலாகக் கத்துகிறதினால் அதன் இராகம் அதிக இனிமையாயிராது.

ஆனால் மைனா அதிக சாதுவான பட்சி; அது சுலபமாய்ப் பழகிக் கொள்ளுமாகையால் நாம் அதின்மேல் பிரியப்படுகிறோம்.

மைனா இனத்தைச் சேர்ந்த சிறியதும் அழகானதுமான இன்னொரு குருவிக்குப் பாப்பார மைனா என்று பெயர். அது எட்டு அங்குல நீளமுள்ளதாய் ஒடுங்கியிருக்கும். அதின் தோகை கருவாப் பட்டை வர்ணமாயும் அதன் இறக்கைகளிலும் வாலிலும் வெண்மையுங் கறுப்புமான சிறுகோடுகளுமிருக்கும். இதன் குரல் சாதாரண மைனாவை விட இன்பமாயிருக்கும். எங்கள் தாழ்வாரத்துக்குமேல் பாப்பார மைனா கூடுகட்டுவதைப் பார்த்திருக்கிறேன். அடிக்கடி அதிகாலையில் எங்கள் தட்டிகளின்மேல் ஒரு ஜோடு மைனா வந்து உட்கார்ந்து அதிக உல்லாசத்துடன் பாடுவதினால், நாங்கள் அதை மலர்ந்த மைனா (the cheerful Mynah) வென்று அழைப்பதுண்டு.

நாம் இப்போது பட்சிகளைப்பற்றிப் பேசுவதை நிறுத்தப்போகிறோம். உங்களில் எத்தனைபேர் பறவை ஜாதியான இவ்வயலகத்தாரைக் கவனிக்கவும் நேசிக்கவும் ஆரம்பித்திருக்கிறீர்களென்று மனோதஞ்செய்ய ஆசிக்கிறேன். அவைகளைப்பற்றிப் படித்துக் கொள்ள கட்டுச்சோறு கட்டிக்கொண்டு பிரயாணம்போவது அவசியமில்லை. ஒவ்வொரு தோட்டத்திலும், வீட்டுவட்டகைகளிலும் பறவைவாசிகளிருக்கின்றன. நாம், நம்முடைய கண்களையும் காதுகளையும் உபயோகப்படுத்திக் கவனிக்கிற நமது தத்துவத்தை இப்படியாக விருத்திபண்ணுவதே அவசியம். அப்படிச் செய்கிறவரையில் பறவைகளின் தோழமையினால் வருகிற சுகத்தைக் காணமாட்டாய்.

Miss A. B. VanDoren.

## A STORY OF CHRIST'S CHILDHOOD

## இயேசுவின் பாலிய சம்பவம்

இயேசுகிறிஸ்துவின் பாலிய பிராயத்தைக்குறித்து கிறிஸ்தவ தேசங்களில் பலவித கதைகள் எற்பட்டின வென்பது நமக்குத் தெரிந்த விஷயமே. பின்வருங் கதை ஸ்வீடன் தேசத்தில் வழங்கி வருகிறது.

யோசேப்பு என்ற ஒரு எழைமனிதனும் அவன் மனைவியும், இயேசு என்று பெயர்கொண்ட தங்கள் பாலிய மகனோடு எருசலேமிலிருந்த மிகப் பெரிய புராதன தேவாலயத்தைச் சுற்றிப்பார்த்துக் கொண்டு திரிகிறார்கள். அந்த பாலியன் சகல லக்ஷணங்களும்





பொருந்தி சுருட்டைமயிரும் கருடப்பார்வையுமுள்ளவராய்க் காணப்பட்டார். அந்த பாலியன் பகுத்தறிவு உண்டானபிறகு இதுதான் முதல்தரமாக தேவாலயத்துக்குப் போனது. அவருடைய பெற்றோர் தேவாலயத்தின் சிறப்பையும் அதின் அதிசயங்களையும் அவருக்குக் காட்டினார்கள். குருக்கள் தங்கள் சிஷருக்குப் பரிசுத்த வேதாகமத்தைப் போதிக்கிறதையும், பிரதான ஆசாரியர் விலையுயர்ந்த கற்களாற் செய்யப்பட்ட மார்க்கவசத்தைத் தரித்துப் பலவித பூஷணங்களை அணிந்து ஆலயத்தில் பணிவிடை செய்வதையும், தங்கரோசா புஷ்பங்கள் இழைத்த பாபிலோனின் தொங்கு திரைகளையும், முப்பது மனிதர்கூடித் தள்ளினாலொழிய அசைக்கக்கூடாத வெண்கலக் கதவுகளையுங் காட்டினார்கள். வேறெங்கும் பார்க்கக்கூடாததும் பூலோகத்தில் உள்ளவற்றிலெல்லாஞ் சிறந்ததுமான அதிசயங்களைத் தங்கள் பையனுக்குக் காட்டினாலும், இவைகளைக்குறித்து அவர் யாதொரு வியப்படையாமல், தங்கள் ஊராகிய நாசரேத்தின் தெருவீதியில் விளையாடித் திரிவதுதான் மேன்மையென்று அவர் சிந்திக்கிறதுபோல் தோன்றிற்று.

அவர்கள் ஆலயத்தில் வெகுநேரங் கழித்துவிட்டபடியால், அங்கிருந்து தீவிரித்துப் புறப்பட்டு வந்தார்கள். வரும் வழியில் சாலமோன் ராஜா இந்த ஆலயத்தைக் கட்டுமுன் இருந்த மகா புராதன வில்லவளைவான ஒரு கட்டடமிருந்தது. அதின் சுவர் ஒன்றின்மேல் பித்தளையாற் செய்யப்பட்ட ஒரு பெரிய எக்காளமிருந்தது. அந்த எக்காளத்தை அநேக நூற்றாண்டுகளாக உபயோகப்படுத்தாததினால் அது தூசி நிறைந்து சிலந்திப்பூச்சிக் கூடுகளால் மூடப்பட்டிருந்தது. அதின்மேல் வரைந்திருந்த எழுத்துகள் மங்கி வாசிக்கக்கூடாமல் தெளிவற்றிருந்தது.

பாலியன் இதைப் பார்த்தவுடன் ஆச்சரியத்தால் நிறைந்து அதைக் கூர்மையாய் உற்றுப்பார்த்துக்கொண்டு, தன் தாயைப் பார்த்து, இது என்ன, அம்மா? என்று கேட்டார். அப்போது மாதா, அப்பா! இது வனாந்தரத்திற் சிதறியிருக்கும் இஸ்ரவேலரைக் கூட்டவேண்டுமென்றிருந்தால், மோசே என்பவர் இதை ஊதுவார். இதற்குப் 'பூச்சக்கா ராஜாவின் சத்தம்' என்று பேர். மோசேயின் காலம் முதல் இதை ஒருவரும் தொனிக்கக்கூடாதவர்களாய் இருக்கிறார்கள். இதை ஒருவர் சப்திக்கக்கூடுமானால், அவர் பூலோகத்தின் சகல ஜாதிகளையும் தமது பாதபடியிற் கொண்டுவந்து ஆட்கொள்ளுவார் என்று சொல்லுவார்கள் என்று சொல்லிப் புன்சிரிப்பாய்ச் சிரித்து, இது கூடாத காரியம், இது ஒரு கதை என்றாள். பாலியனோ அதை வெகு கூர்மையாய் உற்றுநோக்கிக்கொண்டேயிருந்து, தாயார் தன்னைக் கூப்பிடும்வரை அங்கிருந்து போக மனமற்றிருந்தார். இதற்குப்பிறகு இன்னும் அங்கிருந்த பல அற்புதக் காட்சிகளைப் பார்த்து ஆனந்தித்து, அனைவரும் எருசலேம் பட்டணத்துக்கு வெளியே தாங்கள் தங்கியிருந்த கூடாரத்துக்குப் போனார்கள்.

இரவு முழுவதும் பாலியன் கண்களுக்கு நித்திரை வரவேயில்லை. அவர் கண்களுக்குமுன் 'பூச்சக்கா ராஜாவின் சத்தம்' முதலிய அற்புதக்காட்சிகள் நின்று வேறொன்றையும் சிந்திக்கமுடியாதவராயிருந்தார். பொழுதுவிடிந்தும் அவைகளைக்குறித்த எண்ணம் திரும்பத் திரும்ப வந்தது. அன்று நாசரேத்திலிருந்து எருசலேமுக்கு வந்திருந்தவர்களெல்லாரும் புறப்படத் தீர்மானித்திருந்தார்கள். பெற்றோரும் பிரயாணத்திற்கென்று ஆயத்தஞ்செய்துகொண்டிருந்தார்கள். பாலியன் ஒருபக்கம் உட்கார்ந்து தான் கண்ட காட்சிகளைக்குறித்து யோசித்துக்கொண்டேயிருந்து, திடீரென எழுந்து, அவைகளை இன்னுமொருமுறை பார்த்துவரத் தீர்மானித்தார். அப்படியே எல்லாரும் புறப்படுவதற்குள் திரும்பிவிடலாமென்று யோசித்து ஒருவருக்கும் சொல்லாமல் துரிதமாய் ஓடிப்போனார்.



தேவாலயத்தைச் சேர்ந்தவுடன் அங்கே பல அரிய பெரிய காரியங்களையும் நன்மைக்குக் காரணமான காரியங்களையும் செய்துவிட்டு, பெற்றோரைப் போய்ச் சேருமுன் பூச்சக்கா ராஜாவின் எக்காளத்தையும் சற்று பார்த்துவிட்டுத் திரும்புவோமென்று அங்கு சென்றார்.

வெகு துரிதமாய் அந்த வில்லவளைவான கட்டடத்தின்மேலுள்ள எக்காளத்தினிடம் வந்தார். அந்த எக்காளம், பூச்சிக் கூடுகளாலும் தூசிகளாலும் நிறைந்திருந்தது. அங்குள்ள ஓர் இடத்தில் முனிவன் ஒருவன் உட்கார்ந்து அங்கு கூடிவந்த மாணாக்கருக்கு வேதாகமத்தைப் போதித்துக்கொண்டிருந்தார். அச்சமயத்தில் அங்கு தமக்குமுன் உட்கார்ந்திருந்த ஒரு சீஷனைப் பார்த்து, நீ ஏன் என்னை மோசம்போக்கினாய்? நீ இஸ்ரவேலன் அல்ல, என்றாலும் உண்மையான இஸ்ரவேலனைப்போல மாயம்பண்ணுகிறாய். இங்கிருந்து ஓடிப்போ; நான் உனக்குப் போதிக்க யாதொரு பாத்தியதையுமில்லை என்றார். அந்த மாணாக்கன் எழுந்து நின்று தாபந்தத்தோடு, ரபீ, என் ஆத்துமா வேதாகமங்களின்மேல் தவனமாயிருக்கிறது; நான் இஸ்ரவேலனல்லவென்று சொல்லியிருப்பேனாகில் இங்குவர எனக்கு இடங்கிடைக்காது. ஒன்றான மெய்த்தேவனை அறியும் அறிவையும் ஞானத்தையும் நான் இழக்கவேண்டும். ஆகையால் எனக்குள்ள தாகத்தைத் தணிக்க ஆசைகொண்டு பொய் சொன்னேன்; என்னை மன்னித்து இங்கிருக்க எனக்கு உத்தரவுகொடுக்க மன்றாடுகிறேன் என்றான். அந்த முனிவனோ வெகு கோபத்துடன், அங்கிருக்கும் அந்த பூச்சக்கா ராஜாவின் எக்காளத்தை ஒருவன் எடுத்து ஊதுவது எவ்வளவு கூடாத காரியமோ, அவ்விதமே நீ என்னோடிருந்து போதனை பெறுவது கூடாதகாரியம் என்றார்.

இவ்வித வார்த்தைகள் நடக்கையில் இயேசுபாலியன் அங்கு சமீபத்தில் உட்கார்ந்து எல்லாவற்றையுங் கேட்டுக்கொண்டிருந்தார். ஒருவன் இந்த எக்காளத்தை எடுத்துத் தொனிக்கக்கூடுமானால் இந்த வாலிபன் பேருதவி பெறுவானே என்று யோசித்துக்கொண்டிருந்து உடனே எழுந்திருந்து தமது கையை எக்காளத்தின்மேல் வைத்து, அதைத் தூக்கமுடியுமோவென்று பார்த்தார். உடனே அநேக நூற்றாண்டுகளாகத் தூசிப்படிந்திருந்த அந்த எக்காளம் தானே எழும்பி அதைத் தொனிக்குந் துவாரம் பாலியனின் வாயின் சமீபத்தில் வந்தது. அதில் சத்தம் உண்டோவென்று பரீட்சிக்க அதை ஊதினார். உடனே அதிலிருந்து பலத்த எக்காள சத்தமுண்டாகி ஆல்யத்தையும் அதிரச்செய்தது. அப்போது முனிவன் அந்தப் புறஜாதியானை தன் மாணாக்கனைப் பார்த்து, நீ வந்து என் மாணாக்கரோடு உட்காரு. கட

வுள் ஒரு அற்புதத்தால் உன்னைச் சேர்த்துக்கொள்ளத் தமது திருவுளத்தை வெளிப்படுத்தினார் என்றார்.

இதற்குள்ளாக அவருடைய பெற்றோர் அவரைத் தேடிக்கொண்டு வந்து, அவர் அங்கிருக்கக்கண்டு அழைத்துக்கொண்டு நாசரேத்தூர் போயினர்.

## THE KING'S CUP-BEARER *(Continued)*

## ராஜாவுக்குப் பானங்கொடுப்போன் (தொடர்ச்சி)

### XVI. அத்தியாயம்

### தேவன் நினைவு கூர்ந்தார்

அநேகர் பழைய புஸ்தகங்களைச் சேகரம்செய்வதில் அதிகப் பிரீதியுடையவர்களாய் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட புஸ்தகங்களுக்கு அதிக விலையுண்டு. நானூறு அல்லது ஐந்நூறு வருஷங்களுக்குமுன் உள்ள புஸ்தகம் யாருக்காவது கிடைக்குமானால், அதற்கு நமக்கிஷ்டமான எந்த விலைபோட்டாலும், ஒரு புராதனக்கலைஞன் அதாவது பழைய பொருளை ஆராய்வோன், வாங்கிக்கொள்ளுவார் என்பதற்குச் சந்தேகமில்லை.

இங்கே தோல்சுருள் புஸ்தகமொன்றிருக்கிறது. அது ஆட்டுத் தோலினால் செய்யப்பட்டு, 25 அங்குல அகலமும், ஏறக்குறைய 15 அடி நீளமுமுள்ளது. அந்தத் தோல் மிக நேர்த்தியாய் இணைக்கப்பட்டு, சில இடங்களில் கிழிந்து தைக்கப்பட்டிருக்கும். இந்தச் சுருள் சித்திரந்தீர்ந்த வெள்ளிபூசின குழாயில் போட்டு வைக்கப்பட்டிருக்கும். அந்தக் குழாயின்மேல் தேவாலயம், உடன்படிக்கைப்பெட்டி, இரண்டு பலிபீடங்கள், எக்காளம், பலிபீடத்தில் உபயோகிக்கப்பட்ட பலவிதமான கருவிகள் சித்திரந்தீர்க்கப்பட்டிருக்கும். பொன்னூலால் வேலைசெய்யப்பட்ட சிவப்புப் பட்டுத்துணி அந்த விலையேறப்பெற்ற புஸ்தகத்தின்மேல் மூடியிருக்கும். இந்தப் பழைய புஸ்தகம் எபிரேயப்பாஷையில் எழுதப்பட்டுள்ளது. இது நெகேமியாவின் புஸ்தகத்தில், முன்னமே நமக்குத் தெரிந்த ஒரு மனுஷனால் எழுதப்பட்டதென்று யூதர்கள் சொல்லுகிறார்கள். பிரதான ஆசாரியனாகிய எலியாசிபுக்கு மனாசே என்று ஒரு பேரன் இருந்ததாகவும், அவன் சமாரியாவின் அதிபதியாகிய சன்பல்லாத்தின் மகளை விவாகம் பண்ணினதாகவும், நெகேமியா, இப்படி ஆசாரிமாரே அஞ்ஞானப்பெண்களையுடையவர்களாய் தேவாலயத்தில் வசித்து சன்பல்லாத்தோடும் அடிக்கடி போக்குவரத்தாயிருந்தால் தங்களுடைய ஜாதியார்மேல்



தேவனுடைய ஆசீர்வாதம் இறங்காதென்று கண்டு, உடனே மனாசேயை தேவாலயத்தைவிட்டும், மேன்மையான அந்தஸ்தைவிட்டும் துரத்திவிட்டதாகவும், ஆகவே மனாசே சமாரியாவிலுள்ள தன்னுடைய மாமன் வீட்டிற்கு அதிக வெறுப்போடும், கோபத்தோடும், தன்னுடைய மனைவிமக்களைக் கூட்டிக்கொண்டு போய்விட்டதாகவும் வாசித்தோம். இந்த மனாசேதான் யூதர்கள் சொல்லுகிறபடி மோசேயின் பழைய புஸ்தகங்களாகிய பஞ்சாகமங்களை எழுதினதாக எண்ணப்படுகிறது. இது மிகவும் பூர்வமான புஸ்தகம் என்று சமாரியர் சொல்லுகிறார்கள். இது இஸ்ரவேலர் கானான் தேசத்திற்குப் போனவுடனே ஆரோனுடைய பேரனுடைய பேரனால் எழுதப்பட்டது. மனாசே நெகேமியாவோடு கோபமாய் சமாரியாவுக்குப்போய், அங்கே பழிவாங்க நினைத்து, அவனும் அவனுடைய மாமனும் யூதர்களால் இழிவாய் நினைக்கப்படாதபடி தீர்மானம் பண்ணிக்கொண்டார்கள். எருசலேமில் யூதர்களுக்கு தேவாலயம் இருக்கிறதே, அதே மாதிரியாக சமாரியாவிலும் ஒரு பெரிய ஆலயம் கட்ட நினைத்தார்கள். அவர்களுக்கு அழகிய மரங்களடர்ந்த கெரிசீம் என்று ஒரு மலை இருந்தது. இம்மலை மோரியாமலையைவிட விசேஷித்தது என்று நினைத்தார்கள். இந்த மலையின்மேல் ஆலயம் கட்டப்படும்படியாகச் சகலவிதமான முயற்சியும் எடுத்துக்கொண்டார்கள். இதின்மேலேதான் 1000 வருஷங்களுக்குமுன் யோசுவாவின் காலத்தில் நியாயப்பிரமாணத்தின் ஆசீர்வாதங்கள் வாசிக்கப்பட்டன. ஆனால் இதற்கு எதிராயுள்ள ஏபால்மலையிலிருந்து சாபங்கள் கூறப்பட்டன. ஆசீர்வாதங்கள் கூறப்பட்ட இந்த மலையின்மேல் புது ஆலயம் எழும்புகிறது. கட்டுகிறவர்களின் முக்கிய நோக்கம், அது எருசலேம் தேவாலயத்தைவிட மாட்சிமையாய் இருக்கவேண்டுமென்பதே. இது கட்டப்பட்டவுடனே மனாசே பிரதான ஆசாரியனாக்கப்பட்டான். இப்போது தன்னிஷ்டம்போல நடக்கலாம், காரியங்களை நடத்தலாம். தன் மாமனுடைய மாகாணத்தில் தன்னிஷ்டப்படி தன் அதிகாரத்தையெல்லாம் கொண்டு செலுத்தலாம். கெரிசீம் ஆலயத்தில் மனாசே ஆசாரியன் மாத்திரமல்ல, இன்னும் அநேக ஓடிப்போன ஆசாரிமார் அவனோடே சேர்ந்துகொண்டார்கள். நெகேமியாவோடே கோபங்கொண்டவர்கள், எந்த விதத்திலாவது விசனப்படுத்தப்பட்டவர்கள், ஓய்வுநாளை மீறுகிறதைப்பற்றியாவது வேறெந்தப் பாவத்தைப்பற்றியாவது கண்டிக்கப்பட்டவர்கள் எருசலேமைவிட்டு சமாரியாவுக்கு ஓடிப்போய்விட்டார்கள். மோரியாமலையின்மேலுள்ள பரிசுத்த தேவாலயத்தைவிட்டு கெரிசீம் மலையின்மேலுள்ள ஆலயத்தைத் தெரிந்துகொண்டார்கள். ஆனாலும் சமாரியரைப்பற்றி சொல்லப்படுகிறதென்ன? ‘அவர்கள் கர்த்தருக்

குப் பயந்தார்கள், ஆனால் தங்கள் சொந்த தெய்வங்களைச் சேவித்து வந்தார்கள்’.

இது பாதிபாதியான மார்க்கம், யூதமதமும் அஞ்ஞானமதமும் கலந்தது. தெய்வவணக்கமும் விக்கிரகவணக்கமும் பிரியாமலிருந்தன. நெகேமியாவின் காலத்திற்கு அநேக நூற்றாண்டுகளுக்குப் பின்னாலுங்கூட, இந்த சமாரியர் யூதர்களுக்கு அதிகத் தொந்தரவைக் கொடுத்துக்கொண்டேயிருந்தார்கள். கட்டுக்கடங்காத, கீழ்ப்படியாத யூதர்களை கெரிசீமுக்கு வந்துவிடும்படியாக ஏவுவார்கள். இந்தவிதமாய் யூதருக்கு அநேக விஷயத்தில் தொந்தரவையும் கஷ்டத்தையும் கொடுத்துக்கொண்டே வந்தார்கள். அந்த வழியே கடந்துபோகிறவர்கள் எருசலேமுக்குப் போகிறதாகக் காணப்பட்டால் சமாரியர் அவர்களை ஏற்றுக்கொள்ளவுமாட்டார்கள், அவர்களுக்குத் தகுந்த மரியாதை செய்யவுமாட்டார்கள். நமது கர்த்தரும் அவருடைய சீஷர்களும் விருந்துக்குப் போகும்போது, வழியில் சமாரியருடைய ஒரு கிராமத்திற்கு வந்ததாக வாசிக்கிறோம். அங்கே கர்த்தர் ஆளனுப்பித் தாங்கள் வழியிலே தங்கி இளைப்பாறும்படியாக இடம் ஆயத்தம்பண்ணும்படி சொன்னார். ஆனால், அவர் எருசலேமுக்குப் போக நோக்கமாயிருந்தபடியால் அவ்வூரார் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை (லூக். 9. 53).

சிலவேளைகளில் அவர்கள் தங்களுடைய விரோதத்தன்மையை அதிகமாய்ப் பாராட்டி, எருசலேமுக்கு வரும் பிரயாணிகளை வழிமறித்து, அவர்களைக் கொலைசெய்வதுமுண்டு. ஆகையால் இந்தப் பிரயாணிகள் யோர்தானைக் கடந்து, கிழக்குப்பக்கமாய்ப் பிரயாணம் செய்து, எரிகோவுக்கு எதிர்ப்பக்கமாய் வந்து, அதிக கஷ்டமான சுற்றுப்பாதை வழியாய் எருசலேமுக்கு ஏறிப்போவார்கள். இந்தப் பாதை வெகுதூரமானதாய் இருந்தது. ஒரு தடவை சமாரியர், யூதருக்கு அதிகமான மனநோவை உண்டாக்க எத்தனித்து, மகா பெரிய நிந்தைக்கு ஆளானார்கள். எருசலேமில் பஸ்காபண்டிகை ஆசரிக்கப்பட்டு வந்தது. அது ஆசரிக்கப்படும் வாரத்தில், ஆசாரியன் தேவாலயத்தின் கதவுகளை நடுஜாமம் கடந்தபிற்பாடு திறந்துவைப்பது வழக்கம். இப்படித் திறக்கப்பட்ட வாசல்களின் வழியாய் இரவின் இருட்டான நேரத்தில் சமாரியர், திருட்டளவாய் இறந்துபோனவர்களின் எலும்புகளையும் சரீரத்துண்டுகளையும் தங்களுடைய அங்கிகளின் மறைப்பில் கொண்டுவந்து, தேவாலயத்தை அசுசிப்படுத்தித் தீட்டுப்படுத்தும்படியாக அங்கே போட்டுப் பரப்பிவைத்தார்கள். மிகப் பழமையானதும் யூதர்களுக்கு மிகவும் பிரிய



மானதுமான இந்த நல்ல வழக்கத்தை நிறுத்தும்படியாகச் சமாரியர் இந்தமாதிரியாகச் செய்தார்கள்.

வெகுகாலமாய் எருசலேமிலிருந்த யூதர்கள், பாபிலோனிலுள்ள தங்கள் சகோதரருக்கு அவர்களும் தங்களோடே பண்டிகையை ஆசரிக்கும்படியாக பஸ்கா சந்திரன் எழும்பும் அந்த சமயத்தைத் தெரிவிப்பார்கள். அவர்கள் செய்த மாதிரி மகா விநோதமானது. அது நாம் அறியவேண்டிய ஒரு விஷயம்தான். ஒலிவமலையின் மேலிருந்து ஜாமங் காக்கிறவர்கள் சந்திரன் எழும்பின உடனே பெரிய நெருப்புக் கொளுத்துவார்கள். எருசலேமிலிருந்து பாபிலோன் வரையில் மலை உச்சிகளில் வரிசையாய் ஒன்றின்பின் ஒன்றாய் ஒருவிதமான பந்தங்கள் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கும். ஒலிவமலையின்மேல் வெளிச்சங்கண்டவுடனே அடுத்த பந்தம் கொளுத்தப்படும், பின்பு அடுத்தது, பிறகு அடுத்தது. இப்படியாகக் கொஞ்சநேரத்திற்குள்ளாக பாபிலோனின் தண்ணீரருகே உட்கார்ந்திருக்கும் யூதர்கள் இந்தக் குறிப்பைக்கண்டு, அநேக நூறுமைல்களுக்கு அப்பாலுள்ள எருசலேமிலுள்ள தங்கள் சிநேகிதரோடு சேர்ந்து பஸ்கா பண்டிகையின் சந்தோஷத்தில் பங்குபெறுவார்கள்.

இந்த விஷயமானது அவர்கள் மறக்கப்படவில்லையென்று காட்டுகிறது. அதுமாத்திரமல்ல, ஜெபத்திலும் துதியிலும் தங்கள் பிதாக்களின் பூமியிலுள்ளவர்களோடு தாங்களும் சேர்ந்துகொள்ளுவதற்கு இது உதவியாயிருந்தது. இந்தச் சமாரியர், யூதரைக் கெடுத்து இந்த நேர்த்தியான வழக்கத்தையும் நிறுத்திவிட்டார்கள். எப்படியெனில், தப்பிதமான நாட்களில், தப்பிதமான நேரங்களில், மற்ற மலைகளில் இதேவிதமான வெளிச்சங்களைப்போட்டு இதற்காகக் காத்துக்கொண்டிருப்பவர்களைக் கலங்கடித்துச் சந்தேகத்துக்குள்ளாக்கினார்கள். இப்படித் தப்பிதமாய்க் காட்டப்பட்ட வெளிச்சங்களினால் அநேக தீமைகள் உண்டானபடியால், யூதர்கள் இந்த வழக்கத்தை முற்றிலும் நிறுத்திவிட்டு, ஆட்களை அனுப்பி, கொஞ்சநாள் சென்றபோதிலும் தங்கள் காரியத்தைத் தெரிவித்துக்கொள்ளுவார்கள்.

இப்பொழுது நாம் நெகேமியாவின் சரித்திரத்தின் முடிவுக்கு வந்திருக்கிறோம். பழைய ஏற்பாட்டின் கடைசிச் சரித்திரத்தின் கடைசி பாகத்திற்கும் வந்துவிட்டோம். சரித்திரப் புஸ்தகங்களையெல்லாம் காலக்கிரமப்படி வரிசையாய் வைப்போமானால் நெகேமியாவின் புஸ்தகந்தான் கடைசியில் வருகிறது. இதற்குப் பிற்பாடு மத்தேயு சுவிசேஷகன், எதிர்பார்க்கப்பட்ட மேசியாவின் பிறப்பு விஷயத்தை எழுதும்வரைக்கும், வேறெந்த உலகச் சரித்திரமும் தேவனுடைய புஸ்தகத்தில் பழைய ஏற்பாட்டில் எழுதப்படவில்லை. நெகேமியாவின் புஸ்தகத்திற்கும் மத்தேயு சுவிசேஷத்திற்கும்

இடையில் 400 வருஷங்கள் கடந்துபோயின. இந்த வருஷங்கள் யூதச்சரித்திரத்தில் மிகவும் விசேஷித்தவைகளாயிருந்தபோதிலும் வேதச்சரித்திரத்தில் சொல்லப்படவில்லை.

நெகேமியாவின் காலத்தில் மல்கியா என்று இன்னொரு தீர்க்கதரிசி இருந்தார். அவருடைய புஸ்தகம் நெகேமியாவின் புஸ்தகத்திற்கு வியாக்கியானம்போலிருக்கிறது. மல்கியா தீர்க்கதரிசி அதே சமயத்தில் எருசலேமில் வசித்துக்கொண்டிருந்தார். இந்தப் புஸ்தகத்தைப் பார்த்தால் நெகேமியாவின் புஸ்தகத்தில் நாம் படிக்கிற அநேக விஷயங்களை இங்கேயும் பார்க்கலாம் (மல். 3. 8 - 10). தேவாலயத்தின் பொக்கிஷ அறைகள் வெறுமையாயிருந்தபோதிலும் ஜனங்கள் தசம பாகங்களையும் காணிக்கைகளையும் கொண்டுவராத போதும், எருசலேமின் குடிகளுக்கு நெகேமியா சொன்ன வார்த்தைகளும், அவர்களுடையதில் தேவனுக்குக் கொடுக்கவேண்டிய பங்கைக் கொடுக்கவேண்டும் என்பதைப்பற்றியும் மல்கியா சரியாய்ச் சொல்லுகிறார். 'மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சித்தீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசம பாகத்திலும், காணிக்கைகளிலும்தானே நீங்கள் சலிக்கப்பட்டவர்கள். ஜனத்தாராகிய நீங்களெல்லாரும் என்னை வஞ்சித்தீர்கள். என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசம பாகங்களையெல்லாம் பண்டகசாலைகளில் கொண்டுவாருங்கள்.'

இப்படியாக, மல்கியாவின் புஸ்தகத்தைக் கவனமாய் வாசித்தால் அதில் நெகேமியாவின் சரித்திரத்தை விளக்கிக்காட்டுகிற அநேக சங்கதிகளுண்டு. இந்தப் பெரிய சீர்திருத்த முண்டாக்கினவரை, அவருடைய சோதனையும் கஷ்டமும் நிறைந்த ஊழியத்தில், இந்தத் தீர்க்கதரிசியினுடைய அனுதாபமும் உதவியும் எவ்வளவாய் உற்சாகப்படுத்தி பலப்படுத்தியிருக்குமென்று நாமே உத்தேசித்துக் கொள்ளலாம்.

எருசலேமின் அதிபதியும் பானபாத்திரக்காரனுமான நெகேமியாவுக்கு அப்புறம் என்ன நடந்ததென்று நமக்குத் தெரியாது. அவர் பாரஸீகத்திற்குப் போய், இராஜ அரண்மனையில் தன்னுடைய பழைய ரப்சாகே உத்தியோகத்தை எடுத்துக்கொண்டாரோ, அல்லது எருசலேமிலேயே இருந்து அந்த அருமையான நகரத்தை வெளிச் சத்துருக்களினின்றும் உள்ளான கள்ளச்சிநேகிதரினின்றும் காவல் செய்துகொண்டிருந்தாரோ ஒன்றும் சொல்லப்படவில்லை. வாலிபத்தில் மரித்தாரோ, நல்ல முதிர்வயதில் மரித்தாரோ, அதுவும் வேதாகம சரித்திரத்திலாவது மற்றெந்தப் புஸ்தகங்களிலாவது சொல்லப்படவில்லை.

S. A. Vethanayaham.

(*Concluded*)



## EDITOR'S NOTES

## பத்திராதிபர் நாநாவிதக் குறிப்புகள்

Summary of the War. அநேக மாதங்களாக ஜெர்மானியர் Verdun என்கிற பிரான்சிய பட்டணத்தைப் பிடிக்க வெகு பிரயத்தனஞ் செய்ததை அறிவோம். ஜெர்மானியர், அப்பட்டணத்தின் பேரிலும் அதைச் சூழ்ந்திருக்குங் கொத்தளங்களின்பேரிலும் சில மாதங்களாக 6000 பீரங்கி இரவும் பகலும் உபயோகம்பண்ணியிருக்கிறார்கள். அப்படியிருந்தும் பிரான்சியர், சுத்தவீரருக்குரிய குண விசேஷத்துடன் அப்பட்டணத்தைப் பர்துகாத்ததுமன்றி, சென்றமாசம் ஒப்புயர்வற்ற மகா வீரியத்துடன் சண்டைசெய்து சத்துருக்களைத் தோற்கடித்து அவர்கள் வசமிருந்த அநேக கோட்டைகளைத் தங்கள் வசமாக்கிக்கொண்டார்கள்.

ஜெர்மானியர், தங்களுடைய பலம் குன்றிவருங்காலையில், இதுவரையில் பொதுமனுஷராயிருந்து இப்போது எதிர்க்கட்சியைச் சேர்ந்துகொண்ட ருமானியர்மேல் தீராத பகை சாதித்துப் பழி வாங்கவேண்டுமென்று திரண்ட சைனியங்களைச் சேர்த்துக்கொண்டு, அவர்களை நொறுக்கப் பகீரதப் பிரயத்தனஞ் செய்துவருகிறார்கள். இவர்கள் உத்தேசித்திருக்குஞ் சதியை அவமாக்கும் நோக்கமாய் நமது சக்கிரவர்த்தியின் கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்களால் இயன்ற சகல ஏற்பாடுகளையும் செய்துவருகிறார்கள்.

பிரிட்டிஷ் சைனியங்களும் இத்தாலியா சைனியங்களும் சில இடங்களில் முன்னேறிச் செல்லுகிறார்கள். இதர இடங்களில் மாறுதலில்லாமல் யுத்தம் முன்போலவே நடந்துவருகிறது.

The Benson Memorial Gold Medal. 'இல்லற வாழ்க்கை விஷயமாயும் பொதுஜன சங்க விஷயமாயுந் தற்காலத்தில் இந்திய மாதர் பிரதானமாய் நோக்கவேண்டிய காரியங்கள் இன்னது' என்கிற பொருளின்மேல் சிறந்த பிரபந்தமொன்று எழுதுகிற ஒரு இந்திய மாதுக்கு ரூ. 38 பெறுமான ஒரு தங்கப்பதக்கங் கொடுக்கப்படும். நவம்பர் மீ 1உக்குள் இப்பிரபந்தம் முடிவுபெறவேண்டுமாகையால் இதர காரியங்களைக்குறித்து எழுதாமல் விடுகிறோம். இந்துதேசத்து ஸ்திரீகள் தங்கள் பொறுப்பை யுணரும்படி எழுப்பிவிடுகிற எந்தப் பிரயத்தனத்திற்காகவும் நாம் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்.

Indian Lady Professor. 'Indian Social Reformer' என்கிற பத்திரிகையின் பதிப்பு ஆசிரியரான ம-ா-ா-ஸ்ரீ நடராஜன் அவர்

களின் புதல்வி மிஸ் காமகோட்டி அம்மாள், B.A., அவர்கள் சென்னை கவர்ன்மெண்டு பெண்கலாசாலையில் சரித்திரப்பாடம் போதிக்கும் உதவி ஆசிரியராக நியமனம்பெற்றிருக்கிறார்.

Lady Chelmsford as a Linguist. செல்மஸ்போர்டு பெருமாட்டியார் நமது தேசத்துக்கு வந்த மூன்று மாதத்துக்குள் இந்திபாஷையில் வெகு தேர்ச்சியடைந்திருக்கிறதாக அறிகிறோம். சிம்லா நகரில் ஸ்திரீகளுக்கென்று கூடின ஒரு கூட்டத்தில் இவர்கள் இந்தியில் பேசியிருக்கிறார்கள். சீமை தேசங்களிலிருந்து வரும் மாதர்களுக்குமாத்திரமல்ல, இந்துதேசத்து மாதர்களுக்கும் இது ஓர் சிறந்த முன்மாதிரி என்பதற்கு ஐயமில்லை.

Killed by wild animals. இந்தியா துரைத்தனத்தார் பிரசுரஞ்செய்திருக்கிறபடி 1915-ம் வருஷத்தில் நமது தேசத்தில் 1,923 பேர் புலி, சிங்கம், சிறுத்தை முதலிய காட்டுமிருகங்களினால் மரணமடைந்திருக்கிறார்கள். பாம்பு கடியினால் மாத்திரங் கொல்லப்பட்டவர்களின் தொகை 26,385.

---

LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

1916-ளு டிசெம்பர் மீ

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வெ. | சங். | 98. | 1—9 | 11 | தி. | ஏசா. | 45. | 1—6, 15—25 | 21 | வி. | ஏசா. | 59. | 1—13 |
| 2 | ச. | ,, | 99. | 1—9 | 12 | செ. | ,, | 48. | 9—22 | 22 | வெ. | ,, | 59. | 14—21 |
| 3 | ஞா. | ஏசா. | 40. | 1—17 | 13 | பு. | ,, | 50. | 1—11 | 23 | ச | ,, | 60 | 1—12 |
| 4 | தி. | ,, | 40. | 18—31 | 14 | வி. | ,, | 51. | 1—16 | 24 | ஞா. | ,, | 60 | 13—22 |
| 5 | செ. | ,, | 41. | 8—20 | 15 | வெ. | ,, | 52. | 1—15 | 25 | தி. | ,, | 61. | 1—11 |
| 6 | பு. | ,, | 42. | 1—12 | 16 | ச. | ,, | 53. | 1—12 | 26 | செ. | ,, | 62. | 1—12 |
| 7 | வி. | ,, | 43. | 1—13 | 17 | ஞா. | ,, | 54. | 7—17 | 27 | பு. | ,, | 63. | 1—14 |
| 8 | வெ. | ,, | 43. | 14—28 | 18 | தி. | ,, | 55. | 1—13 | 28 | வி. | ,, | 64. | 1—12 |
| 9 | ச. | ,, | 44. | 1—13 | 19 | செ. | ,, | 57. | 15—21 | 29 | வெ | ,, | 65. | 13—25 |
| 10 | ஞா. | ,, | 44. | 14—28 | 20 | பு. | ,, | 58. | 1—14 | 30 | ச. | ,, | 66 | 10—24 |
| | | | | | | | | | | 31 | ஞா. | சங். | 100. | 1—5 |

C. L. S. PRESS, MADRAS—1916

# மாதர் போதினி

600 008.
JAN 1917
MADRAS

No. 229 ஜனவரி 1917 No. 1

## EDITOR'S NOTES

## பத்திராதிபர் நானாவிதக் குறிப்புகள்

British success on the Ancre. நவம்பர்மாதம் பிரான்ஸ் தேசத்திலுள்ள பிரிட்டிஷ் சைனியங்கள் ஆன்கிரி என்னும் நதிக்கரையில் நேர்ந்த ஒரு சண்டையில் ஜர்மானியரைத் தோற்கடித்து 1,700 பேரைக் கைதிகளாகப் பிடித்திருக்கிறார்கள்.

Air-raid on Britain—Two Zeppelins brought down. நவம்பர் மீ 28உ ஜர்மானியர் ஆகாயமார்க்கமாய்ப் பெரிய கப்பற்களிலேறி வந்து இங்கிலாந்திலுள்ள சில பட்டணங்களின்மேல் சட்டி பீரங்கிகளை எறிந்தார்கள். அதனால் உண்டான சேதம் பிரமாதமல்ல. ஆனால் ஆங்கிலேயர் ஆகாய விமானங்களிலேறிச் சென்று இரண்டு பெரிய ஜர்மானிய ஆகாயக்கப்பற்களைக் கிழே விழுத்தினார்கள்.

Fall of Monastir. இதுவரையில் பல்கர் வசமாயிருந்த மானாஸ்டிர் என்கிற செர்பியர் பட்டணத்தைச் செர்பியரும் அவர்களுடைய கூட்டாளிகளும் கொடிய போர்செய்து மறுபடியும் தம் வசமாக்கிக் கொண்டார்கள். இது பல்கருக்கும் ஜர்மானியருக்கும் பெரிய அபஜெயமாம்.

Situation in Greece. கிரேக்க தேசத்தில் சங்கதிகள் அதிகக் குழப்பமாயிருக்கிறது. தேசம் இருகட்சியாகப் பிரிந்து, ஒரு தாத்தார் நமது சக்கிரவர்த்தியாதியோர் கட்சிக்கு அனுகூலமாய்ப் பல்கர்மேல் யுத்தம் தொடுக்கச் சித்தமாயிருக்கிறார்கள். மறுபக்கத்தார் ஜர்மானியருக்கு அனுகூலமாய் இருப்பதாகத் தோன்றுகிறது. எப்படியென்றாலும் கிரேக்க தேசத்தின் காரியங்கள் ஆங்கிலேயர், பிரான்சியர், இத்தாலியர் முதலானவர்களுடைய கையிலிருக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை.

Brutality at sea—Hospital ship sunk. நவம்பர் மாதத்தில் பஞ்சமாபாதகங்களுக்கு மிஞ்சிய பாதகம் உலகத்தில் நடந்திருக்கிறது. சாலோனிக்கா பட்டணத்திற்குக் காயப்பட்டவர்களை ஏற்றிக்கொண்டு வரும்படிச் சென்ற பிரிட்டானிக் என்ற பெரிய ஆஸ்பத்திரி மரக்கலத்தைச் சத்துருக்கள் சுட்டு அமுக்கியிருக்கிறார்கள். இது காயப்பட்டவர்களுக்கென்று 3,000 படுக்கைகள் அடங்கியதும் பிரிட்டிஷ் காரரிடமிருந்த மகா பிரமாண்டமானதுமான கப்பல்.

First in Aid and Nursing Examination. சமீபகாலத்தில் உதகமண்டலத்தில் நடந்த 'காயப்பட்டவர்களுக்கு முதலுதவி' என்கிற பரீட்சையில் நமது கவர்னர் அவர்களின் பத்தினியார் நூற்றுக்கு 81 மார்க்கு வாங்கி முதல் வகுப்பில் தேறியிருக்கிறார்கள். இது நமது நாட்டுப் பெண்களுக்கும் முன்மாதிரியாயிருக்குமென்று நம்புகிறோம்.

Cyclone in the Madras Presidency. ஒரு பெரும் புயற்காற்று, சென்னை இராஜதானியின் தெற்கு பாகங்களில், நவம்பர்மீ 23௳ இரவு தொடங்கி 24௳ வரையில் அடித்ததறிவோம். இதனால் பல பாகங்களிற் பெருஞ்சேதம் விளைந்திருக்கிறது. தென் இந்தியா இருப்புப்பாதையில் ஒரு புகைவண்டி கவிழ்ந்துபோயிற்று. தென் ஆற்காடு ஜில்லாவில் பிராணநஷ்டமுண்டாயிருக்கிறது. புதுச்சேரியில்மாத்திரம் 304 பேர் பிரேதமானதாகப் புதுச்சேரி கவர்னர் நமது சென்னை கவர்னருக்குத் தந்தியின்மூலமாய்த் தெரியப்படுத்தியிருக்கிறார்.

The death of the Austrian Emperor. நமது சக்கிரவர்த்திக்குச் சத்துருவும் ஜர்மன் சக்கிரவர்த்திக்கு மித்துருவுமான ஆஸ்திரியா தேசத்துச் சக்கிரவர்த்தி 68 வருஷங்கள் இராஜ்ஜியபாரஞ் செய்த பின்னர் சென்ற நவம்பர்மீ 19௳ தேகவியோகமானார். Archduke Carl Franz Joseph என்பவர் அவருக்குப்பின் ஆஸ்திரியாவின் சிம்மாசனமேறுவர்.

## NURSE AND SOLDIER

## நர்ஸாகிய யுத்தவீரி

மைக்கலெளனா ஐவனோவா ஒரு ருஷிய பெண். இவள் ஆழ்ந்த தேசாபிமானமுள்ளவள். ருஷிய சக்கிரவர்த்தியின் படைகளைச் சேர்ந்த பெலமும் சாதாரணமுமான ஜனங்களிடத்தில் அனுதாபம் நிறைந்தவள். மைக்கலெளனாவின் சகோதரன் இராணுவத்தில் ரணவைத்தியனாயிருந்தான். ஜர்மானியருக்குமுன் உவார்ஸா பட்ட



ணத்திலிருந்து பின்வாங்கிப்போன ருஷிய இராணுவங்களில் ஒன்றைச் சேர்ந்தவன்.

யுத்தம் ஆரம்பிக்கும்போது ஜர்மானியரைத்தவிர மற்ற யாவருக்கும் அது நீடியபோராய் இருக்குமென்றும், அதில் காயப்படுகிறவர்கள் நூறு நூறாகவும் ஆயிரம் ஆயிரமாகவும் இருக்குமென்றும் யாவருக்குந் தெரியும்.

வைத்தியனாகிய அவளுடைய சகோதரன் கீழிருந்த வைத்திய கூட்டத்தில் மைக்கலெளனா ஒரு நர்ஸாய் நியமிக்கப்பட்டாள். இந்த இராணுவம் யுத்தமுகத்தின் மும்முரத்திலிருந்தது. வான் ஹிண்டன்பர்க் ருஷியரை அதமாக்கவேண்டி தாக்கினபோதெல்லாம் விளைந்த சண்டைகளில் இந்த இராணுவம் எதிர்த்துப்போய்ப் போரிட்டது. ஜர்மானியர் பிரயோகித்த குண்டுகளாலும், சூத்திர பீரங்கி வெடிகளாலும் காயப்பட்டு விழுந்தவர்கள் அனந்தம்பேர்.

சண்டைகளுக்கிடையில் கிடைக்கும் ஓய்வு நேரங்களில் மைக்கலெளனாவின் சகோதரனும், அவனைச் சேர்ந்த வைத்திய சிகிச்சைக்காரரும், டோலி தூக்குகிறவர்களும் காயப்பட்டவர்களைக் கவனிக்க யுத்தகளத்திற்குப் போவார்கள். இவர்கள் தங்கள் உயிரைக் கையில் ஏந்திக்கொண்டு போகவேண்டியதாயிருந்தது. இவர்கள் 'ரெட்கிராஸ்' (Red cross) என்கிற சின்னத்தை, அதாவது, அவர்கள் நிராயுதபாணிகளும், காயப்பட்டவர்கள் மித்துருவாயினும் சத்துருவாயினும் பக்ஷபாதமில்லாமல் உதவிபுரிபவர்களென்று குறிக்கும் சின்னத்தைத் தரித்துக்கொண்டிருந்தாலும் ஜர்மானியர் அவர்களையும் அடிக்கடிச் சுட்டு விழுத்தியிருக்கிறார்கள். ஆகவே ஜீவகாருண்ணியம் பாராட்டின ஒரே குற்றத்தின் நிமித்தம் வைத்தியரும் டோலி தூக்குகிறவர்களுமான வெகுபெயர் ஜீவனைத் துறந்திருக்கிறார்கள்.

தமையன் போனவிடமெல்லாம் மைக்கலெளனாவும் சென்றாள். மழைப்போற் சொரிந்த குண்டுகளானாலும், மரண அவஸ்தையிலும் வேதனையிலுமிருந்து புரண்ட கை கால் போனவர்களுடைய அகோரக் காட்சியானாலும் அவளைத் தடுக்கவில்லை. சூழ்ந்திருக்கும் அபாயத்தை எண்ணமற் சுயவெறுப்போடு குண்டுமாரி பொழிந்தபோதிலும் பாளம்பாளமான காயங்களையும் கட்டுவாள். அவளுடைய தமையனும், அந்த இராணுவத்தைச்சேர்ந்த உத்தியோகஸ்தரும், காயப்பட்டவர்களுங்கூட ஒதுக்கிடந் தேடிக்கொள்ள அவளை வேண்டிக்கொண்டார்கள். ஆனால் மைக்கலெளனாவோ புன்னகைகொண்டு சத்துருக்கள் அடுத்தமுறை தாக்கினபோது குண்டுகளால் விதைக்கப்பட்டதும் ருஷியர் பின்வாங்கிப்போனதுமான பூமியின்மேல் தன்னுடைய க்ஷேமத்தைப்பற்றி ஒரு எண்ணமுமில்லாமல் காயப்பட்டவர்களுக்கு

உதவிசெய்துகொண்டே இருந்தாள். அந்த இராணுவத்தைச்சேர்ந்த சேனாபதி முதற்கொண்டு சாதாரண சேவகன் வரையில் அவளைக் கையெடுத்துக் கும்பிடாதவர் இல்லை.

ஒரு பயங்கரமான தினம் வந்தது. 1915-ம் வருஷம் ருஷியர் பின்வாங்கினதுபோல, ஒரு சேனை பின்வாங்க நேரிடும்போது சில பட்டாளங்கள் பின்னாக நின்று, மற்றவர்கள் புதிய இடங்களிற்போய் நிலைக்கும் வரைக்கும், சத்துருவை எவ்விதத்திலும் தடுத்து நிறுத்தவேண்டும். இவ்விதமாய்ப் பின்வாங்கிப்போகிற சைனியத்தைக் காபந்து செய்வது அதிக மோசகரமானதோடு மிகவும் முக்கியமானது. சத்துருவினுடைய முழுபலத்தையும் ஏககாலத்தில் தாங்கவேண்டியதாகையால் பின்காபந்து செய்கிற பட்டாளத்தின் வேலை அதிக அபாயமானது. பின்வாங்கிப்போகிற சைனியங்களின் க்ஷேமம் துரத்திக்கொண்டுவரும் சத்துருவைத் தடுக்கிற வல்லமையிலிருப்பதனால் அது முக்கியமானது. ஒரு நாள் காலையில் ருஷிய சைனியங்கள் அவர்களுடைய தேசத்திற்குப் பின்சென்றுபோக இடமுண்டாகும்படி ஜர்மானியரைத் தடுத்துவைக்க மைக்கலெளனாவின் இராணுவத்திற்குத் தளகர்த்தன் ஆக்ஞாபித்தான். மைக்கலெளனாவின் இராணுவம் நாள் முழுவதிலும் நல்ல வேலைசெய்தது. வான் ஹிண்டன்பர்க் சைனியங்களை நெடுநேரமாக எதிர்த்துத் தடுத்துக்கொண்டிருந்தது. இருபக்கங்களிலுள்ள சைனியங்கள் காபந்துள்ள இடங்களைப் போய்ச் சேர்வதைக் கண்டது.

அச்சமயத்தில் வெற்றியடைவதைக் குறித்து நிச்சயமாயிருந்த ஜர்மானியர் முன்னேறிச் செல்வதற்கு இது ஒரே தடை. காரியங்கள் அடுத்த வருஷம் மாறினபோதிலும் 1915-ம் வருஷத்தில் ருஷியாவை நசுக்கிப்போடுவோம் என்கிற நம்பிக்கை ஜர்மானியருக்கிருந்தது. ஆகவே பின்வாங்கிப்போகிற சைனியங்களைப் பின்தொடர்ந்து மேற்கொள்ளும்படி மைக்கலெளனாவின் இராணுவத்தை அடியோடு தொலைத்துப்போட எண்ணி அதை அநேக மணிநேரம் தாக்கினார்கள்.

ஓரிடத்தில் ஜர்மானியர் ஒரு பள்ளம் வெட்டி அதில் சூத்திர பீரங்கிகளை நிறுத்திச் சுட ருஷியருடைய படைகளில் அநேகம் பேர் விழுந்தார்கள். அந்தப் பள்ளத்தைப் பிடிக்க ருஷிய இராணுவ உத்தியோகஸ்தர் ஒருவர்பின் ஒருவராய்ச் செய்த பிரயத்தனமெல்லாம் விருதாவாயிற்று. ஒரு சேனாபதிக்குப்பின் ஒருவனாக மரணத்துக்கிரையானார்கள்; கடைசியாக ஒரு சேனாபதியும் மிச்சமாயிருக்கவில்லை. தலைவனில்லாமல் விடப்பட்ட யுத்தவீரர் தடுமாறத் தொடங்கினார்கள். அந்த இடத்தை இதுவரையில் காபந்து செய்துகொண்டிருந்த சிலர் பின்வாங்கிப்போகிற சேனை சென்ற மார்க்கத்தை நோக்கி



மெதுவாய்ப் போய்விட ஆரம்பித்தார்கள். மிச்சமானவர்களும் அப்படியே செய்ததுண்டானால் ஜர்மானியர் அதிக காலமாய் எதிர்பார்த்த வண்ணமாய்ப் பின்வாங்கிப்போகிற ருஷிய படைகளைச் சுலபமாய் மேற்கொண்டிருப்பார்கள். நர்ஸ் மைக்கலெளனா மோசகரமான இந்நிலைமையைக் கண்ணுற்று ஒரு க்ஷணமேனுங் காலகரணஞ்செய்யாமல் யுத்தவீரரை நோக்கித் தன்னைப் பின்பற்றி வரச்சொன்னாள். அவளுடைய கெம்பீர தோற்றமும், அவளுடைய வீரியவார்த்தைகளும் ருஷியருடைய இருதயங்களிற் பக்தியனல் மூட்டிவிட்டது. ஒரு சம்மனசு அவர்களை அழைத்தாற்போல் தோன்றிற்று. அவர்களுக்குள் காயப்பட்டிருந்தவர்களில் அநேகரைப் பேணிக்காப்பாற்றினவள். உயிரைக் கையில் ஏந்திக்கொண்டு காயப்பட்ட அவர்கள் தோழர்களுக்குச் சிகிச்சைசெய்யப் போனவள். ஆகவே அவர்கள் எல்லாரும் ஒன்றுபோல் சேர்ந்து அவளைப் பின்பற்றிச்சென்று முன்னே அவர்கள் பிடிக்கத்தவறிப்போன பள்ளத்தைப் பிடித்துக்கொண்டார்கள். சூத்திர பீரங்கிகளைப் பிரயோகித்த ஜர்மானியர் சிதறினார்கள்; மிச்சமானவர்கள் வெட்டுண்டு விழுந்தார்கள். மைக்கலெளனாவின் சைனியம் எதிர்த்துவந்த சத்துருவைத் தோற்கடித்தது. ஜர்மானியருடைய பலம் சற்றே முறிந்தது. பின்வாங்கிப்போன ருஷிய படைகளும் சுகபத்திரமாய்ச் சென்று வேண்டிய ஒழுங்குகள் செய்துகொண்டு பெலம் சிதைவுபடாமலே வான் ஹிண்டன்பர்கின் மேல் வந்து விழுந்தது. ஆனால் மைக்கலெளனாவின் வேலை முற்றுப்பெற்றது. அவள் இராணுவத்தை வெற்றிக்கு நடத்தும்போது குண்டுபட்டு விழுந்துத் தன் வீரச்செயலின் விசேஷத்தை அறிந்தவளாகவே உயிர்நீத்தாள்.

A. C. C.

## GOLD BELLS AND POMEGRANATES

## பசும்பொன் மணிகளும் மாதளம்பழங்களும்

> ‘ அங்கியின் ஓரத்தைச்சுற்றிலும் ஒரு பசும்பொன் மணியும் ஒரு மாதளம்பழமும் ஒரு பசும்பொன் மணியும் ஒரு மாதளம்பழமுமாய் இருந்தது.’

### I.

என்னுடைய குடிசையின் பின்பக்கத்திலிருந்த சிறு அறையிலே, என்னுடைய வேலை அறைக்குப் போகிற வாசலுக்கு நேர் மேலே,



இந்த சொற்கள் ஒரு வருஷமாக ஒட்டிவைக்கப்பட்டிருக்கின்றன. உள்ளே போகும்பொழுதும், வெளியே வரும்பொழுதும், ஒரு நாளைக்கு இருபது முறை இந்தச் சொற்களைக் காண்கிறேன். அவைகள் அநேக காரியங்களை எனக்குப் பேசிக்கொண்டிருக்கின்றன. சில மனுஷர் அவைகளைப் பார்த்து, ஆச்சரியத்தோடு இந்த வசனத்திலும் 'வேறே ஏதும் வசனம் நேர்த்தியான காட்சியாய் இருக்குமே' என்று சொல்லுகிறார்கள். நானோ அப்படி நினைக்கிறதில்லை. பொன்னிலும் பலவித நிறங்களிலும் தீட்டியிருக்கப்பட்ட நேர்த்தியான வசனங்கள், என்னுடைய அறையிலே வரிசையாய் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளினால் என்னுடைய சின்ன இருட்டறை பிரகாசமாகிறது; என்னுடைய இருதயம் சந்தோஷிக்கிறது. அவைகளெல்லாம் ஆசீர்வாதம் நிறைந்த வார்த்தைகள்தான். ஆனாலும், என்னுடைய பிள்ளை ஓவென் என்பவன் எனக்காக எழுதிவைத்த



இந்த (கிழியல்) பழங்கடுதாசிக்கு அவைகள் நிகரல்ல. எழுத்துகள் நல்ல கறுப்பு மையால் எழுதப்படவில்லை. எல்லா எழுத்துக்களும் ஒரே அளவானவைகளுமல்ல. வரிகள் நேரில்லை. கடுதாசி சுருண்டு போனது; புகை பிடித்தது. ஆனால் என்னுடைய அலுவலில் நான் அங்குமிங்கும் போகையில், அந்தச் சொற்களை நோக்கிப் பார்த்து, அவைகள் ஒரு வருஷத்திற்கு முன்னே எனக்குக் கொண்டு வந்த சந்தோஷ செய்திக்காகக் கர்த்தரைப் போற்றிவருகிறேன்.

ஒரு போதகர் அந்த வார்த்தைகளை முகவுரையாகக்கொண்டு ஒரு ஓய்வுநாள் சாயந்திரம் பிரசங்கம்பண்ணினார். அன்றைக்கு நான் கொஞ்சம் நம்பி மோசம்போனவளானேன். அந்த நாட்களிலே தானும் ஓய்வுநாள் பிரசங்கங்களுக்காக மெத்த ஆசையோடே எதிர்பார்த்துக்கொண்டிருப்பேன். நான் ஒரு விதவை. என்னுடைய குழந்தைகளைத் தாபரிப்பதற்கு என்னுடைய சிறு அறையிலே மெத்தப் பிரயாசத்தோடு நான் வேலைசெய்யவேண்டியது. நான் என்னைக் கிறிஸ்தவள் என்று நினைத்துக்கொண்டேன். ஆராதனைகளிலே எனக்குப் பிரியம். எங்களுடைய போதகரின் பிரசங்கங்களை அதிகமாய் மதித்தவர்கள் என்னிலும்பார்க்க வேறொருவருமில்லை. தெரிந்துகொள்ளுதல்—இலவசமான கிருபை—விசுவாசம்—கிரியைகள் முதலிய விஷயங்களிலே நேர்த்தியாய்ப் பேசுவார். அவைகளெல்லாம் எனக்கு வாய்ப்பாடமாய்விட்டன.

அந்தக் கிழமை, போதகர் ரோமருக்கு எழுதிய நிருபத்திலுள்ள சில வாக்கியங்களின் பேரில் பிரசங்கங்கள் செய்துவந்தார். ஒரு பிரசங்கமும் தவறவிடாமல் கேட்கவேணுமென்று தீர்மானம் பண்ணிக்கொண்டேன். நல்லது, போதகர் யாத்திராகமத்தில் மேலே குறித்திருக்கிற வசனத்தோடு இன்னும் சில வசனங்களையும் வாசித்தபோது, நான் முன்சொன்னதுபோல நம்பி மோசம்போனவளானேன். 'யூதருடைய பிரமாணங்கள், சடங்காசாரங்களுக்கு இவர் ஏன் திரும்பவும் போகிறார்? அவைகளெல்லாம் முடிந்தாயிற்றே, நாங்கள் இப்போது சுவிசேஷ ஒளியில் ஜீவிக்கிறோமே' என்று எனக்குள்ளே சொல்லிக்கொண்டேன்.

காரியம் என்னவென்றால், எங்களுடைய சபையார் எல்லாரிலும் நான் விசேஷமானவள் என்று எனக்குள் நினைத்துக்கொண்டேன். அன்று பின்னேரம் போதகர் முகவுரையாக எடுத்துக்கொண்ட அந்தச் சொற்கள் மூலமாக என்னுடைய இருதயத்திற்குள் ஒளி உதிக்கப்போகிறதென்பதைக் கொஞ்சமும் நான் நினைக்கவில்லை. தேவாலயத்திலுள்ள ஆசனத்தில் இளைப்பாறி இருந்துகொண்டு, கடைசியாய் வந்த வெண்ணெய் நேற்று வந்த வெண்ணெயைப்போலப்

புதிதும் சேர்த்தியான நிறமுமாய் இருக்குமோ என்றும், பாற்ஒகிறேரி என்பவன் எனக்குத் தரும்படியான கணக்கைத் தீர்க்க அவனுக்கு ஏதும் வழிவகை உண்டோ என்றும் சிந்தித்துக்கொண்டிருந்து, நடுப்பிரசங்கத்திலே இனியாகிலும் போதகருடைய பிரசங்கத்தைக் கவனிப்போமென்று துவக்கினேன். அந்த வசனங்கள் எனக்கு ஏற்றவைகளென்று நான் முன் நினைக்கவில்லை. மற்றவர்களுக்கு முன்மாதிரியாகப் பிரசங்கத்திலே நான் கவனக்காரிபோலக் காணப்படப் பிரயாசப்பட்டேன். பிரசங்கத்தின் முதற்பாகத்தை நான் கவனியாது விட்டேன். ஆனாலும் கிறிஸ்தவர்களெல்லாரும் ஆசாரியர்களாய் இருக்கிறார்களென்று சொன்னது என் காதில் விழுந்தது. பிரதான ஆசாரியனைப்பற்றித்தான் முதலாவதாகப் பேசியிருக்கவேணும் என்று நினைத்துக்கொண்டேன். போதகர் ‘இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் இருக்கிறீர்கள்’ என்ற வசனத்தை வாசித்தார். அப்புறம் போதனையைப்பற்றியும் சாதனையைப்பற்றியும் பேசத்துவங்கி, அவைகளிரண்டும் ஒன்றித்துப்போகவேண்டுமென்றும், தனியே மணிக்கோவையாய் மாத்திரமில்லாமல், முதல் ஒருமணி திரும்ப ஒரு மாதளம்பழம், இப்படியே இனிய ஓசையும் கனிந்த பழமுமாய் இருக்கவேண்டுமென்றும் பேசினார். அதற்குப் பிறகு கேட்கிறவள்போலப் பாசாங்குபண்ணாமல் உண்மையாய்ப் பிரசங்கித்ததைக் கேட்கத் துவக்கினேன். போதகர் மணிகள் பசும்பொன்னும் பழங்கள் கொழுமையும் நல்லவையுமாய் இருந்தனவென்றும் விஸ்தரித்துப் பேசினார். நான் மணிகளுடையவள் என்பது நிச்சயம். என்னுடைய மார்க்கத்தைக் குறித்து நான் ஒருபோதும் வெட்கப்படவில்லை. நான் எப்படிப்பட்டவளென்று ஒவ்வொருவருக்குள்ளும் தெரியும். என்னிலே மணிச்சத்தங்கள் அதிகம். ஆனால் அவைகளெல்லாம் பொன்மணிகளோ என்பதைப்பற்றி எனக்கு அவ்வளவு நிச்சயம் இருக்கவில்லை.

## THE USE OF BETEL

## தாம்பூலம்

வெற்றிலையை வெத்து இலையாக நினைப்பார் பலர். பாக்கு வெற்றிலைத் தரிப்பதற்குச் சாக்குபோக்குச் சொல்வார் பல்லாயிரம். இது நிற்க, சாஸ்திரம் சொல்வதைச் சற்றே கவனிப்போம். பிரக்கி



யாதிபெற்ற வைத்தியரொருவர் சொல்லுகிறதாவது: ‘வெற்றிலை பிருக்கச் சம்பந்தமான நீரிழிவு, குடற்கட்டி முதலிய ரோகங்களுக்கும், பாக்கு தொண்டைப்புண், இருமல் முதலிய வியாதிகளுக்குங் காரணமாம். வெற்றிலைச் சாற்றிலிருக்கும் நஞ்சு இரத்தாசயம், தீனிப்பை இவைகளிலுள்ள நரம்புகளைப் பெலவீனப்படுத்துகிறது. பாக்கிலுள்ள பாஷாணம் கண் பார்வையைக் குறைக்கிறது. வெற்றிலை பாக்குத் தின்பவர்களின் பிள்ளைகள் நேத்திர திருஷ்டி குறைந்தவர்களாயிருப்பது எவ்வளவு வியப்பும் பயங்கரமுமாகவிருக்கிறது. வெற்றிலையோடு சேர்க்குஞ் சுண்ணாம்பு தீனி இறங்குங் குழாயின் மேலும் இரைப்பையின்மேலுமுள்ள மெல்லியதோலைத் தின்றுவிடுகிறதோடு பற்களையுங் கெடுக்கிறது.’ வெற்றிலைத் தின்பவருள் சிலர், தாம்பூலம் தந்தத்திற்குப் பலஞ்செய்கிறதென்பார்கள். இது ஒப்புயர்வில்லாத பிழை. தாம்பூலம் தரிப்பவருள் நாற்பது பிராயத்திற்கு மேற்பட்டவர்களை பலமான தந்தமுள்ளவர்களாய்க் காண்பதரிது. சிலருக்கு பற்களெல்லாம் வரிசையாயிருந்தும் அவைகள் கறுத்து பட்டுப்போயிருக்கும்.

வெற்றிலையினால் உண்டாகுந் தீமைகளுள் மலங்கட்டுதல் சர்வசாதாரணம்; கீழ்த்தேசங்களுக்கு வழக்கமான அநேக ரோகங்கள் அதிலிருந்து முளைக்கின்றன. வெற்றிலை பாக்கோடு புகையிலையையும் சேர்த்து அசைப்போடுவதிலும் பெருந்தீமை வேறில்லை.

வெற்றிலை தின்று உமிழ்ந்துவிடுவது பல கெடுதிகளை நிவர்த்தி செய்தாலும் அப்படி உமிழ்வதே ஒரு பெரிய கெட்ட பழக்கமாம். சாப்பிடுகிற சாதத்தை ஜீரணிக்கச்செய்ய உதவுகிற எச்சில், மெல்லும்போது அதிகமாய் ஊறி விருதாவாய்ப்போகிறது. மேலும் இப்படித் துப்புவதினால் க்ஷயம் முதலிய பயங்கர ரோகங்கள் பரம்ப ஏதுவாகிறது. எச்சிலிலுள்ள வியாதிப்பட்ட பூச்சி அணுக்கள் வெளிப்படும்போது அவ்வியாதிகளுக்குப் பக்குவமாயிருப்பவர்கள் சுவாசிக்கும்போது அவர்களுக்குள் நுழைந்து அவ்வியாதிகளைப் பிறப்பிக்கிறது. க்ஷயரோகம் ஆயிரக்கணக்கான பேர்களை வாரிக்கொண்டு போகிறது; அது பரம்ப நாம் காரணராயிருந்தால் நாம் துன்மார்க்கரேயல்லாமல் சன்மார்க்கராவோமா ?

எச்சில் துப்புவது அசங்கியமான ஓர் பழக்கம். கறுத்த பற்கள் விகாரமாய்த் தோன்றும்; எச்சில் உமிழ்வது அரோசிகமாயிருக்கும். தளங்கள்மேலும், சுவர்களின்மேலும், சாலைகளிலும் வெற்றிலை தின்று உமிழ்ந்துவைப்பது அருவருக்கப்படத்தக்கது. அதோடு எவ்வளவு திரவிய நஷ்டம். வெற்றிலை பாக்குத் தின்பவர்களின் பிள்ளைகள் பெலவீனராய்ப்போவது எவ்வளவு பரிதாபம். இதையெல்லாம்

அறிந்தும் வெற்றிலை பாக்குத் தின்பவர்கள் அறிவீனராயிருக்க வேண்டும்; இல்லாவிட்டால் தற்பிரியராயிருக்கவேண்டும்.

தன்னடக்கம், பரநேசம் இவைகளை விருத்திபண்ணுவோமாக. நாமே சுத்த ஜீவியஞ்செய்ய ஆசிப்போமாக. இவ்விதமாய் நமது அயலகத்தாருக்கும் நாட்டாருக்கும் நன்மைசெய்யும் தர்மிஷ்டர்களாயிருக்கலாம்.

'Progress.'



## THE HISTORY OF ESTHER

## வீரசிலி எஸ்தர் என்பவளின் சரித்திரம்

ஏறக்குறைய கி. மு. 521-ம் ஆண்டு கீர்த்திபெற்ற பாரசீக இராஜ்யத்தை ஆகாயபரியந்தம் உயர்த்த முழுலோகமும் தன்னால் ஜெயிக்கப்பட்டு கீழ்ப்படுத்த எண்ணங்கொண்ட ஆகாஸ்வேரு என்ற பெர்சிய இராஜாவுக்கு மனைவியாகத் தெரிந்துகொள்ளப்பட்ட யூதஸ்திரீயாகிய எஸ்தர் என்பவளின் சரித்திரம் பழைய ஏற்பாட்டின் புஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ளது.



பாரசீக இராஜ்யத்தின் தலைமைப்பட்டணமாகிய சூசான் கோட்டையானது பாபிலோனியா தேசத்திற்குத் தென்கிழக்கே ஏறக்குறைய 200 மைலுக்கு அப்பாலுள்ளது. இக்கோட்டை குளிர்காலத்தில் வசிக்கும் தலைமைப்பட்டணமாகவிருந்தது.

நேபுகாத்நேச்சார் எருசலேமை முற்றுகைபோட்டு, சூறையாடி, யூதர்களில் அநேகப் பிரபுக்களைச் சிறைப்படுத்தி தன் இராஜ்யம் கொண்டுபோய்ச் சேர்த்தான். யூதர்களில் எண்ணிறந்த குடும்பத்தார் மேதிய பெர்சிய இராஜ்யங்களிலும் பரவியிருந்தார்கள். இப்படி சிறைபட்டுவந்த மேன்குலத்தானான மொர்தேகாய் என்ற யூதன் ஆகாஸ்வேரு இராஜாவின் அரண்மனையில் உத்தியோகத்தில் அமர்ந்திருந்தான். இவன் பென்யமீன் வமிசத்தானான யாவீரின் மகன். யூதாவின் இரண்டு கோத்திரங்களை யல்லாத மற்ற பத்து கோத்திரங்களைச் சேர்ந்தவனன்று.

மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி, தகப்பனற்ற பிள்ளைகளைச் சேர்த்து தேசத்து ஜனங்கள் தங்கள் தங்கள் ஆதரவில் வைத்துக் காப்பாற்றவேண்டுமாகையால் மொர்தேகாய் பெற்றோரற்ற தன் சிற்றப்பன் மகளாகிய எஸ்தரை சிறுவயது முதற்கொண்டு பரிபாலனம் பண்ணிவந்தான். இவள் பென்யமீன் வமிசத்தில் பிறந்த அபிகாயேலின் குமாரத்தி. இவளுக்கு பெர்சிய பாஷையில் 'ஷாதாஸ்' அதாவது நட்சத்திரம் என்று பெயரிருந்தது. இவள் மகா ரூபவதி. மொர்தேகாய் தன் அந்தஸ்துக்கு ஏற்றபடி சகல நல் அறிவிலும் ஒழுங்கிலும் சூசான் அரண்மனையில் வளர்த்துவந்தான்.

இராஜாவாகிய ஆகாஸ்வேரு தன் இராஜ்யபாரத்தின் மூன்றும் வருஷத்தில் தன் இராஜ்யமெங்குமுள்ள சிற்றரசுகளுக்கும் பிரபுகளுக்கும் ஜனங்களுக்கும் அநேக மாதங்களாக விருந்தளித்துவந்தான். இந்த இராஜாங்க விருந்தினால் சூசான் நகரம் கலக்கத்துக்குள்ளானது. எப்படியெனில், வேதசரித்திரத்தைக்கொண்டு நமக்குத் தெரிந்தபடி அவனுடைய மகிமையான இராஜாங்கத்தின் கனம்முழுதும், ஐசுவரிய முழுதும் வீணாய்ச் செலவழிக்கப்பட்டது. இச்சந்தோஷத்தின் பின்னர் ஒரு துக்கமான சம்பவம் நேரிட்டது. அதாவது, ஒருநாள் இராஜா மதுபானத்தினால் வெறிகொண்டு புத்தி மயங்கி தன் பெண்சாதியாகிய வஸ்தியின் அழகை பிரஸ்தாபிக்க எண்ணி இராணியாகிய வஸ்தியை இராஜசபைக்கு அழைத்தான். வஸ்தியோ தன் மானம் கெடாதபடி இராணிபதவியை இழந்துபோவதைத் தெரிந்துகொண்டு, வரமாட்டேன் என்று பதில் அனுப்பினதினால், வெறிகொண்ட இராஜாவும் இராஜசபையாரின் தீர்மானமும் அவளை இராணிபதவியிலிருந்து தள்ளினது.

இப்படி இவள் தள்ளப்பட்டபின் இவளுக்குப்பதிலாக இராஜாவுக்கு வேறொரு இராணியைத் தெரிந்துகொள்ள இராஜ்யமெங்குமுள்ள அழகிய கன்னிகைகளை ஒன்றுசேர்க்கும்படி இராஜகட்டளை பிறந்தது. இக்கட்டளையின்படி தெரிந்துகொள்ளப்பட்டவர்களில் எஸ்தரும் ஒரு கன்னிகை. இவள் அதிக ரூபவதியாயிருந்தபடியால் இராஜாங்க உத்தியோகஸ்தர் எல்லாரின் கவனங்களையும் இழுப்பவளாயினள். இதினால் எஸ்தர் இராஜாவின் வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டு, பெண்களைப் பாதுகாக்க ஏற்பட்டுள்ள் யேகாய் என்றவனின் ஆதாவில் விடப்பட்டாள். ஆனால் இந்தக் காரியம் எஸ்தருக்கும் மொர்தேகாயிக்கும் சந்தோஷத்தையல்ல, அதிக வருத்தத்தைக் கொடுத்தது என்பதை நாம் மறுக்கமுடியாது. எப்படியெனில், மொர்தேகாயின் மார்க்கத் திடவிசுவாசம் அவனுடைய முன்னோர்களில் அவனை மேன்மையாகவும் தகுதியுள்ளவன் என்றும் தீர்ப்பதுடன் அவன் வளர்ப்புப் பிள்ளையாகிய எஸ்தரை அவன் தகப்பனின் உறுதியான விசுவாசத்தினின்று பிரிக்க அவனுக்குக் கொஞ்சமென்கிலும் பிரியம் இருந்தில்லை. அஞ்ஞான இராஜாவுக்கு மனைவியாக இருப்பது எஸ்தருக்கும் சற்றென்கிலும் பிரியமில்லை.

'எல்லாம் தெய்வச்செயல்' என்று முதுமொழியின் அர்த்தத்தை அவர்கள் கவனித்ததில்லை. 'கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுகிறவர்கள் விருதாவாய் அதில் உழைக்கிறார்கள்' என்று சங்கீதக்காரன் சொல்லுகிறதுபோல் மொர்தேகாயும் எஸ்தரும் சொல்லவில்லை. தேவன் தமது ஜனத்துக்கு வரும் துன்பங்களிலிருந்தும் மோசங்களிலிருந்தும் மீட்டு இரட்சிக்க அப்போதைக்கப்போது தமக்குப் பிரியமான பணிமூட்டைத் தெரிந்துகொள்ளுகிறார் என்பதை நாம் சத்தியவேதத்தினால் அறிந்துகொள்ளும் சத்தியம். யாக்கோபையும் அவன் வீட்டாரையும் பஞ்சத்தில் காப்பாற்ற தேவன் ஏற்கனவே யோசேப்பை எகிப்து தேசத்துக்குக் கொண்டுபோய் இராஜாவாக்கி அவனைக்கொண்டு தம்முடைய ஜனங்களைக் காப்பாற்றினார். இதுபோல பெர்சிய இராஜ்யமெங்கும் பரவியிருந்த யூதருக்கு பின்னால் வரப்போகிற பெரிய மோசத்திலிருந்து இரட்சிக்க எஸ்தரை முன்னாடியே தெரிந்துகொண்டார். தேவன் எக்காலும் தம் ஜனத்தை விடார். இஸ்ரவேல் ஜனங்களோ அடிக்கடி தேவனைவிட்டு விலகிப்போய் உலக மக்களைப்போல் தங்களை விக்கிரகாராதனைக்கு ஒப்புக்கொடுத்தார்கள். அப்போது தேவன் எரிபந்தமடைந்து அவர்களைத் தண்டிக்க அஞ்ஞான இராஜாக்களைத் தெரிந்துகொண்டார். என்றாலும், இரக்கமுள்ள தேவன் தம்முடைய ஜனங்களை, அவர்கள் தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு இரக்கத்துக்காகக்



கெஞ்சும்போது, மனஸ்தாபப்படும் பாவிகளை நோக்கிப்பார்த்து அவர்களை இரட்சிக்கத் தமக்குப் பிரியமானபடி ஆட்களைத் தெரிந்துகொள்வது வழக்கம்.

இப்படியாக எஸ்தர் சூசான் அரண்மனையில் யேகாய் என்ற பிரதானியின் ஆதரவில் இருக்கும்போது, யேகாய் மற்ற எல்லாரையும்விட எஸ்தருக்கு அதிக பட்சமும் மரியாதையும் காட்டினான் என்பதை மறுக்கமுடியாது. இவன் இப்படி காட்டின பட்சமும் மரியாதையும் அவளின் அழகினிமித்தமல்ல. ஏனெனில் அவன் அழகினிடம் பழகாதவனல்ல. எத்தனையோ அழகுள்ள கன்னிகைகள் அவனுடைய ஆதரவின்கீழ் இருந்தார்கள். எஸ்தரிடத்தோ தெய்வகிருபையும் அறிவின் பயிர்ச்சியும் காணப்பட்டன. இவ்வித இலட்சணங்கள் இருந்ததினால் அழிவுரும் முக அழகுக்கு ஒரு உற்சாகமும் மற்றவர்களின் கவனத்தைக் கவரும் சக்தியும் மற்றக் கன்னிகைகளுக்கு இல்லாதபிரகாரம் எஸ்தருக்கு தேவனால் அளிக்கப்பட்டிருந்தது. இதுதான் யேகாய் என்பவனின் பிரியத்தையும் பட்சத்தையும் கவர்ந்தது. மேலும், இதுவே இராஜாவின் உள்ளான சிநேகத்தைத் தகுந்தநேரத்தில் உண்டுபண்ணினது.

ஆகாஸ்வேரு இராஜ்யபாரம்பண்ணின 7-ம் வருஷத்தில் எஸ்தர் இராணியாக பட்டாபிஷேகம் பண்ணப்பட்டாள். அதாவது, முன் இராணியாயிருந்து தள்ளப்பட்ட வஸ்திக்கு 4-ம் வருஷம் இச்சம்பவம் நடந்தது. இதன் மத்தியில் மொர்தேகாயின் உத்திரவுப்படி எஸ்தர் தன்னைப்பற்றி யாதொன்றும் அரண்மனையில் தெரியப்படுத்தினதில்லை இப்படியாக மூன்று வருஷங்கள் எஸ்தர் இன்னார் என்று தெரியப்படுத்தாமலிருந்தது நமக்கு ஒருவேளை ஆச்சரியமும் நம்பத்தகாதவிதமாகவும் இருக்கும். ஏனெனில் பெண்ணாய்ப் பிறந்தவர்களில் அநேகம் பேர் எந்தக் காரியத்தையும் ஒளித்துவைக்கிறவர்களல்ல. இதினால்தான் ஒரு இந்து ஞானி என்ன சொன்னார்? 'உள்ளதை பெண்டிர்க்குச் சொல்லாதே' என்கிறார். இவர் இப்படிச் சொல்லுவதற்குக் காரணம் இதை வாசிக்கும் மாதுக்களுக்குத் தெரியும். மொர்தேகாய் எஸ்தருக்கு இவ்விதமாகக் கட்டளைபண்ணினதற்குக் காரணமும் நமது புத்திக்கு விரோதமாயும் வெறுக்கத்தக்கதாயுமிருந்தாலும் மொர்தேகாயோ தினந்தோறும் எஸ்தரைப்பற்றிய சுகசங்கதிகளைப்பற்றி விசாரித்தான் என்று நாம் வேதத்தில் வாசிக்கிறதினால் அவனுடைய சிநேகம் எவ்வளவு பெரிது என்று நாம் அறிகிறோம். எஸ்தரைச் சுற்றி இராஜாங்கமும் செல்வமும் இருந்தாலும் அவளுக்கு அவைகள் எல்லாம் ஆறுதலையும் சந்தோஷத்தையும் கொடுக்கவில்லை. அவளுக்கு ஆறுதல் தேவையாயிருந்தது. இந்த ஆறுதலும் சந்தோஷமும்

மொர்தேகாயினால் அவளுக்கு உண்டாயிற்று. எஸ்தர் தன் சிறு வயது முதல் அதிக தாழ்மையிலும் தெய்வபக்தியிலும் வளர்க்கப்பட்டிருந்தாள். அவளுடைய பற்றுதல், பழக்கவழக்கங்கள், கூட்டுறவுகள் எல்லாம் இராஜாவின் வீட்டிலல்ல, தன் சொந்த வீட்டில் அடக்கப்பட்டிருந்தது. எஸ்தர் இளைய வயது முதற்கொண்டு கற்றுவந்தபடி அவள் முன்னோர்களின் தேவனாகிய எகோவாவின்பேரில் தன் முழு நம்பிக்கையையும் வைத்து அவரையே தன் சந்தோஷமும் ஆறுதலுமாக வைத்துக்கொண்டாள். அவருடைய சித்தத்தின்படி கிரீடத்தை ஏற்றுக்கொண்டாள். ஆனாலும் அது அவளுக்கு ஒரு பாரமும் துக்கமுமாய் இருந்தது என்பது எதினால் நமக்குத் தெரியும்? தன் தனித்த நேரங்களில் கிரீடத்தைக் கழற்றிவைத்துவிடுவது வழக்கம். அந்நேரங்களில் தேவனோடு ஐக்கியமாயிருக்குதலையும் அவரிடத்தில் பூர்த்தியான ஆறுதலை அடையவும் தெரிந்துகொண்டு தன் நடுக்கமுற்ற இருதயத்திற்கு பலத்தையும் திடாரிக்கத்தையும் பெற்றுக் கொள்வதில் செலவழித்தாள். அவளைச் சுற்றியிருந்த அஞ்ஞானிகளுக்கு மத்தியில் அவளுடைய விசுவாசம் அவளைப் பாதுகாத்து வந்தது. எஸ்தர் ஆவியில் தனித்தவளாயிருந்தாள். இதினால் நாம் என்ன அறியவேண்டும்? மொர்தேகாய் எவ்வளவு விடாமுயற்சியாயும் மார்க்கவைராக்கியமாயும் எஸ்தரை சிறுவயது முதற்கொண்டு பழக்கி வைத்திருக்கவேண்டும்! இந்தப் பழக்கங்கள் அவளுடைய முழு தனிமையில் நேரான வழியில் நெறிதவறாமல் நடத்துகிறது. அவள் தன் தகப்பனுக்காவது கடவுளுக்காவது செய்யும் ஊழியத்தை அலட்சியம்பண்ணினவளாயிருந்ததில்லை.

(இன்னும் வரும்.)

## THE POWER OF A LITTLE CHILD

## ஓர் சிறுபெண்ணின் வல்லமை

கொரியா நாட்டிலுள்ள சியூல் பட்டணத்திலே ஒரு மனிதன் இருக்கிறான். அவனுக்கு மலைப்புல் அறுத்து விற்பது தொழில். சாமர்த்தியவானானதலால் தன் குடும்ப சவரக்ஷணைக்கு மிச்சமான பணம் சம்பாதித்து குடிவெறியிலே பழகிவிட்டான். வரவரப் பெரிய குடிகாரனாகி இராமாறு தெருவிலே நின்று, ஜனங்களை வெகு இடுக்கண் செய்கிறவனாகிவிட்டான். அவன் பார்க்கிற பார்வையும், போடுகிற சத்தமுமே மனிதரை மிகவும் திடுகலங்கப்பண்ணும். தெருவில் நடப்பாரையெல்லாம் கூப்பிடுவான். அவர்கள் பதில் பேசாமல் விலகிப்போனாலும் வைதுக்கொண்டே அவர்களைப் பின்தொடருவான்; சண்டைக்கு அழைப்பான். அலங்கோலமாய்க் கூத்தாடிப் பல கோரணிகளெல்லாம் செய்வான். போலிஸ்காரரும் அவனுடைய நிலைமையைக் கவனித்து, லேவியன் செய்தவாறு விலகிப்போவார்கள்.



இப்படிப் பல வருஷங்களாய் நடந்தபின் இதெல்லாம் திடீரென நின்றுபோய்விட்டது. குடியனான அந்த மனிதன் தன்னுடைய புற்கட்டை விற்கவும், குடும்பத்திற்குவேண்டிய பதார்த்தங்களை வாங்கவும், இதர ஜோலிகளைப் பார்க்கவும் ஊருக்குள்ளே போவது தவிர மற்றப்படி அங்கே காணப்படுகிறதேயில்லை. தெருக்களில் செல்லுங்கால் வெகு அமைதியாகவும் யாவரிடத்திலும் மரியாதையாகவும் நடந்து கொள்ளுவான். ஊரார் யாவருக்கும் பெரிய ஆச்சரியமுண்டாயிற்று. சாராயக்கடைவழியாகச் சென்றாலும், கடைக்காரன் அவனைக் குடிக்கத் தூண்டினாலும் அவன் மதுபானத்தைத் தொடவுமாட்டான்; அது சரீரத்துக்கும் ஆத்துமாவுக்கும் விரோதமான பாவமென்று போதனை செய்வான். இதெல்லாம் இவனுக்கு எப்படி வந்தது? இந்தப் பரம துஷ்டனை மாற்றின மகா பிரசங்கி யார்? அவனுடைய சிறிய மகள் தான். அவள் மிஷன் பாடசாலையொன்றிலே படித்துவந்தாள். இயேசுவைத் தன் இரட்சகராக அறிந்து ஏற்றுக்கொண்டாள். வேதத்தை வாசித்து ஜெபித்துவந்தாள். கிறிஸ்தவ முயற்சிக்காரியுமானாள். தன் தகப்பனுடைய ஜீவியத்தை நினைத்து மனஸ்தாபப்பட்டு, அவனுக்காக ஜெபித்துப் போராடி, பின்பு அவனோடே நாளுக்குநாள் இரட்சகரைப்பற்றியும் அவருடைய வல்லமையால் எந்தப் பாவத்தையும் துர்ப்பழக்கத்தையும் ஜெயிக்கத்தக்கதான சக்தியைப்பற்றியும் வெறியருக்காக வைக்கப்பட்டிருக்கிற நித்தியவேதனையைப்பற்றியும் நாளுக்குநாள் கண்ணீரோடே பேசிவந்தாள். தகப்பனுடைய உள்ளம் உடைந்தது. அவனும் இயேசுவுக்குத் தன்னை ஒப்புக்கொடுத்தான். குடியின் அடிமைத்தனத்தை மேற்கொள்ளத்தக்கதான கிருபையைப் பெற்றான். இரட்சிப்பின் சந்தோஷத்தால் நிறைந்து ஜீவிக்கிறான்.

'ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான்' என்று ஏசா. 11. 6-லே சொல்லப்பட்ட திருவசனம் எவ்வளவு பிரத்தியக்ஷமாய் நிறைவேறிவருகிறது.

'United Church Herald.'

## RIDDLES

### விடுகதைகள்

1. அண்ணன் வெட்டின கிணற்றில் தம்பி இறங்குவான்.
தம்பி வெட்டின கிணற்றில் அண்ணன் இறங்கமாட்டான்.
இவைகள் என்ன?

2. குதிரை நடக்கும், குதிரை ஓடும்.
தண்ணீரைக் கண்டால் முழிக்கும்.
அதென்ன?

3. காயும் கோணக்காய் கொள்ளடியக்காள்.
கதையும் விடுவித்தேன், சொல்லடியக்காள்.
அதென்ன?

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1917-ஞு ஜனவரி மீ

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தி. | சங். | 101. | 1—8 | 11 | வி. | எரே. | 3. | 12—25 | 21 | ஞா. | சங். | 104. | 1—9 |
| 2 | செ. | ,, | 102. | 1—15 | 12 | வெ. | ,, | 4. | 1—10 | 22 | தி. | ,, | 104 | 10—18 |
| 3 | பு. | ,, | 102. | 16—28 | 13 | ச. | ,, | 4. | 10—18 | 23 | செ. | ,, | 104. | 19—23 |
| 4 | வி. | ,, | 103. | 1—22 | 14 | ஞா. | ,, | 4. | 19—31 | 24 | பு. | ,, | 104. | 24—35 |
| 5 | வெ. | எரே. | 1. | 1—10 | 15 | தி. | ,, | 5. | 1—9 | 25 | வி. | எரே. | 7. | 1—7 |
| 6 | ச. | ,, | 1. | 11—19 | 16 | செ. | ,, | 5. | 10—18 | 26 | வெ. | ,, | 7. | 8—16 |
| 7 | ஞா. | ,, | 2. | 1—8 | 17 | பு. | ,, | 5. | 19—31 | 27 | ச. | ,, | 7. | 17—28 |
| 8 | தி. | ,, | 2. | 9—19 | 18 | வி. | ,, | 6. | 1—8 | 28 | ஞா. | ,, | 7. | 29—34 |
| 9 | செ. | ,, | 2. | 20—30 | 19 | வெ. | ,, | 6 | 9—17 | 29 | தி. | சங். | 110. | 1—7 |
| 10 | பு. | ,, | 2. | 31—37 | 20 | ச. | ,, | 6. | 18—30 | 30 | செ. | ,, | 111. | 1—10 |
| | | | | | | | | | | 31 | பு. | ,, | 112. | 1—10 |

C. L. S. PRESS, MADRAS—1917

# மாதர் போதினி

No. 230 பெப்ருவரி 1917 No. 2

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 - FEB 1917
MADRAS

## EDITOR'S NOTES

### பத்திராதிபர் நாநாவிதக் குறிப்புகள்

The New Ministry. யுத்தவிஷயமாய்ப் பல ஒழுங்குகள் செய்ய வழி திறக்கும்படி இதுவரையில் மஹா பிரித்தானியாவுக்குப் பிரதம மந்திரியாயிருந்த ஸ்ரீமன் அஸ்குவித் என்பவர் தமது உத்தியோகத்தை இராஜிநாமா கொடுக்க, ஸ்ரீமன் லாயிட் ஜார்ஜ் என்பவர் பிரதம மந்திரியாக சக்கரவர்த்தியினால் நியமிக்கப்பட்டிருக்கிறார். புதியதாய் உத்தியோகத்திற்கு வந்திருக்கும் மந்திரிகள் யுத்தத்தை விமரிசையாய் நடத்துவார்கள் என்று நம்ப ஏதுவுண்டு.

Roumania. பெல்ஜியம், செர்பியா தேசங்களைப்பிடித்த பீடையே ருமேனியாவையும் பிடித்திருப்பதாகத் தோன்றுகிறது. ருமேனியாவில் முக்காற்பாகம் சத்துருக்கள் வசமானது. கிரேக்கர் சதிக்கு அஞ்சி பிரித்தானியர், பிரான்சியர் முதலிய கூட்டாளிகள் ருமேனியருக்கு உதவிசெய்ய முடியாமற்போனமையாலும், சத்துருக்கள் பிரயோகிக்கும் பிரமாண்டமான பீரங்கிகள் ருமேனியர் வசமிராமையாலும் இந்த அபஜெயம் நேரிட்டதாம். என்றாலும், ருமேனிய சைனியங்கள் சிதறாமலே, ருஷியருடைய உதவியினால் உவாலச்சியா என்கிற மாகாணத்தில் சத்துருவை எதிர்த்துத் தாக்கிக்கொண்டு வருகிறார்கள்.

Egypt. எகிப்தில் மேக்டாயா என்கிற இடத்திற்குச் சமீபத்தில் துர்க்கியரோடு நடந்த சண்டையில் நமது சக்கரவர்த்தியின் சைனியங்கள் வெற்றி அடைந்தார்கள். சத்துருக்களில் 1,350 பேர் சிறையானார்கள்.

Somme Offensive. சாமிநதி தீரத்தில் நடக்கும் யுத்தத்தில் காயப்பட்டும், மரித்தும், சிறையாகவும்போன சத்துருக்களின் தொகை 6,90,000 என்று கணிக்கப்படுகிறது.

VOL. XXXII.

The Verdun Victory. இவ்வளவுகாலமாய்ச் சத்துருக்கள் வெர்டேன் பட்டணத்தைப் பிடிக்கச் செய்த பிரயத்தனம் அனைத்தும் வியர்த்தமாயிற்று. சத்துருக்கள் வசம் கடைசியாயிருந்த கோட்டைகளையும் பிரான்சியர் கைப்பற்றிக்கொண்டார்கள். அவர்கள் அடைந்த ஜெயம் காலவிசேஷத்தினால் மிக முக்கியமானதென்று ஆங்கிலேய பத்திரிகைகள் கூறுகின்றன. டிசம்பர்மீ 15-ம் தேதியிலிருந்து இதுவரையில் சத்துருக்களில் 11,387 பேரை சிறையாக்கியும், 115 பீரங்கிகளும், 107 சூத்திர பீரங்கிகளும் கைப்பற்றியுமிருக்கிறார்கள்.

Germany's peace offer. ஜெர்மானியர் தங்களுடைய பலம் நாளுக்குநாள் ஒடுங்குவதையும், முடிவில் தங்களுக்கு அபஜெயம் நேரிடுவது அகத்தியமென்றும் அறிந்து தந்திரமாய்ச் சமாதானஞ் செய்ய ஆலோசித்து, அவர்கள்மேல் சண்டையிடுகிற இராஜ்யங்களுக்கு மனுசெய்துகொண்டிருக்கிறார்கள். சமாதானம் தேடும் நிபந்தனைகள் அவர்களுக்கே அனுகூலமாயிருக்கின்றன. பிரிட்டிஷ், ருஷிய, பிரான்சிய இராஜாங்கத்தார் அவர்களுடைய தந்திரங்களுக்கு முகங்கொடுத்ததாகக் காணோம்.

The Temperance Conference. லக்னௌபட்டணத்தில் நடக்கும் கான்பிரன்சில் மதுபான விஷயமாய்ச் செய்யவேண்டிய சில சீர்திருத்தங்களைப்பற்றி பேசிக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் ஆலோசனையாகச் சொல்லும் சீர்திருத்தங்களில் இரண்டு அதிக விசேஷமானவை. ஒன்று இந்திய பெண்பாலருக்கும் சிறுவர்களுக்கும் மதுபானம் விற்பனை செய்யக்கூடாதென்றும், இன்னொன்று எந்தெந்த ஜாதியார் மதுபானம் அதிகமாய்ச் செய்கிறார்களோ அவர்களுக்கு உபதேசிக்கப் பிரசங்கிமாரை ஏற்படுத்தவேண்டுமென்றும் கூறுகின்றது.

## THE HISTORY OF ESTHER

## வீரசீலி எஸ்தர் என்பவளின் சரித்திரம்

(தொடர்ச்சி)

இப்படியிருக்க சில வருஷங்களுக்குப் பிறகு ஆகாஸ்வேரு இராஜாவுக்கு விரோதமாய், வாசல் காக்கிற இரண்டு பிரதானிகள் இராஜாவைக் கொலைசெய்ய சதியாலோசனைபண்ணி, இராஜாவின்மேல் கைபோட பதிவிருந்தார்கள். இதை மொர்தெகாய் அறிந்து, தானே தன்னைப்பற்றி ஒன்றும் பிரஸ்தாபித்துக்கொள்ளாமல் தன் மகளாகிய எஸ்தரின் மூலமாய் இராஜாவுக்குத் தெரிவித்தான். இராஜா





இந்தக் காரியத்தைப்பற்றி விசாரணைசெய்ததின்பேரில், குற்றவாளிகள் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொள்ள, இருவரும் கொல்லப்பட்டார்கள். இந்த முக்கியமான சம்பவம் பெர்சிய இராஜாக்களின் இதிகாசங்களில் எழுதப்பட்டது. ஆனால் இக்காரியத்தை அறிவித்த மொர்தெகாய்க்கோ யாதொரு இராஜகனமும் நன்மையும் கிடைத்ததில்லை. இது விஷயத்தில் மனிதர் மறந்தாலும், ஆண்டவரோ மறவாமல் தக்க சமயத்தில் நன்மை கிடைக்கப்பண்ணினார். ஏனென்றால், மொர்தெகாய் தன் புகழ்ச்சியை நாடாமல், தன் கடமை என்று இருந்தான்.

இந்தக் காலத்தில் எஸ்தர் ஆளுகையின் அதிகாரம் அதிகரித்துவந்தாலும், எஸ்தர்கூட தான் தன் தகப்பனுக்கு நியாயப்பிரகாரம் வரவேண்டிய உயர்ந்த பதவியைப்பற்றிப் பேசாமல் இருந்ததற்குக் காரணம், ஆண்டவரின்பேரில் இருந்த விசுவாசந்தான். மொர்தெகாய் பிரஸ்தாபித்திருந்தால் பின்னால் கிடைத்த பெரிய கனத்தை முன்னாலேயே அடைந்திருப்பான்.

இவைகளுக்குப் பிறகு, நாம் வேதத்தில் வாசிக்கிறபடி, ஆகாஸ்வேரு இராஜா, ஆமான் என்ற ஒரு பிரபுவை அவன் செல்வத்தின் நிமித்தம் அரண்மனையிலுள்ள எல்லாப் பிரதானிகளையும்விட மேலாக உயர்த்தினார். ஆனால் இவன் இப்படி யாதொரு நிமித்தமுமின்றித்

திடீரென்று உயர்த்தப்பட்டதற்குக் காரணம், ஒருவாறு அவன் ஆஸ்தி என்று நினைக்கலாம். எப்படியெனில், அவன் யூதரைப் பழிவாங்கும்படி இராஜ முத்திரையை அடையவேண்டி இராஜாவினிடத்தில் சொன்ன வார்த்தைகளினால் தெரியவருகிறது. இராஜ மந்திரியாகிய ஆமான் பெருமைகொண்டு, தன்னை அரண்மனை உத்தியோகஸ்தர் எல்லாரும் கண்டவுடன் வணங்கவேண்டுமென்று உத்தரவுபண்ணியிருந்தான். அப்படியே எல்லாராலும் மரியாதை பண்ணப்பட்டாலும் மொர்தெகாய் ஒருவனால்மாத்திரம் மரியாதை பண்ணப்படவில்லை. இதினால் மந்திரியாகிய ஆமான் மொர்தெகாயின்பேரில் பொறாமைகொண்டு யூதஜாதியனைத்தையும் அழிக்கப் பிரயத்தனஞ்செய்து அதற்காக இராஜகட்டளையைப் பெற்றான்.

ஆமான் தன்னைக் கனம்பண்ணாத மொர்தெகாயை மாத்திரம் பழிவாங்குவது எளிதாயிருந்தாலும் அது அவனுக்கு அவ்வளவு மேன்மையைக் கொடுத்திருக்காதாம். மேலும் எஸ்தருக்கும் மொர்தெகாயுக்கும் ஒரு சம்பந்தம் உண்டு என்பதை இரகசியத்தில் சமுசயப்பட்டிருப்பான். பழிவாங்கும் காரியம் வாஸ்தவத்தில் மகா பயங்கரமும் நடுக்கமுமுள்ளது.

‘ஒரே மனுஷனால் பாவமும், பாவத்தால் மரணமும் உலோகத்துக்குட்பட்டதுபோல்’ மொர்தெகாய் ஒருவனால் ஆகாஸ்வேரு இராஜ்யமெங்குமுள்ள யூதஜாதியனைத்தின்மேலும் மரணம் வருகிறது. தேவன் தம்முடையவர்களைப் பார்த்து ‘நீங்கள் நன்மைசெய்து தீங்கு அனுபவிப்பதானால் பயப்படாதீர்கள்’ என்று சொல்லுகிறார். பராபரன் நமக்கு அனுசாரியாயிருந்தால், நமக்கு விரோதயாய் இருப்பவன் ஆர்? மொர்தெகாய் இதை யறிந்து இராஜாவின் வாசலுக்கு முன்பாக இரட்டு உடுத்திக்கொண்டு ஓர் பிரதானியின் மூலமாய் எஸ்தர் இராணிக்கு இந்தச் செய்தியை அறிவித்து, அவள் கட்டாயம் இராஜாவினிடம்போய் தன் ஜனத்திற்காக மன்றாடவேண்டும் என்றும் சொல்லி யனுப்பினான்.

மந்திரியாகிய ஆமான் கட்டளையைப்பெற்றுச் சீட்டுப்போட்டுப் பார்த்தான். இச்சீட்டின்படி யூதஜாதியின் ஆண் பெண் பிள்ளைகள் வயதுசென்றவர்கள் எல்லாரும் அவர்கள் சொத்துக்களும் அழிக்கப்படவேண்டுமென்றும், இச்சங்காரம் 12-ம் மாதமாகிய ஆதார் மாதம் அதாவது மார்ச்சு மாதம் 12-ம் 13-ம் தேதிகளில் நடத்தப்படவேண்டுமென்றும் இராஜமுத்திரை பெற்றதாய் தேசமெங்குமனுப்பினான். ஆபத்துக்காலத்தில் தங்களைக் காத்துக்கொள்ளவாவது அல்லது அதற்குத் தப்பியோடவாவது வழியில்லாத அவ்வளவு பயங்கரமான நிலையில் இருக்க, தங்களோடு அதிக சிநேகமும் பழக்கமுமாயிருந்த



அந்த ஊர் ஜனம் தங்களைக் கொல்லும் எமதூதர்களாகத் திடீரென்று மாறுவதைக் கண்டால், எவ்வளவு விசனத்துக்குட்பட்டிருந்திருப்பார்கள்! நமது அருமை இரட்சகர்கூட தன்னோடு உண்டு படுத்து மூன்றரை வருஷகாலம் தனக்குச் சிநேகனாயிருந்த யூதாஸ்காரியோத்து திடீரென்று மாறி தன்னைக் காட்டிக்கொடுக்கும் எமதூதனாக வருவதைக் கண்டு விசனப்பட்டார். இதிலும் எவ்வளவோ அதிகம் யூதஜனங்கள் விசனப்பட்டிருக்கலாம். இருந்தாலும், ஆண்டவர் தம்முடைய ஜனத்தை இரட்சிக்க ஒரு பெண்பிள்ளையைத் தெரிந்துகொள்ளுதல் அவருடைய நித்திய தீர்மானமாயிருந்தது.

மொர்தெகாய் சாம்பலும் இரட்டும் உடுத்தினவனாய் இராஜஅரண்மனைக்குப் போனவன் வாசலுக்குள்ளே பிரவேசிக்கவில்லை. ஏனெனில், அப்பேர்ப்பட்ட அலங்கோல ரூபத்துடன் அரண்மனை வாயிலுக்குள் பிரவேசிக்கக்கூடாது என்பது இராஜகட்டளை. மொர்தெகாய் அனுப்பின பிரதானி எஸ்தருக்குச் சங்கதிகளைத் தெரிவித்தவுடன், பாலிய பருவமுள்ள எஸ்தர் இராணிக்கு இவ்விஷயம் எவ்வளவு பயத்தை உண்டுபண்ணியிருக்கும்! அடிவயிற்றில் இடிவிழுந்தாற்போல் எஸ்தர் திகைத்துநின்றாள். இவளும் நம்மைப்போல் பெலவீனப்பாண்டந் தானே. மேலும் மொர்தெகாயின் கண்டிப்பான கட்டளை எஸ்தரை அதிக விசனத்துக்குட்படுத்தினது. ‘இருகொள்ளி எறும்புபோலானாள்.’ அவள் தைரியமும் பரிந்துபேசக்கூடிய ஆவியுமுள்ள பெண்ணாய் இருந்தாளேயானால், அவள் முதலிலிருந்து மற்றவர்களால் நடத்தப்பட்ட அந்த தயவினாலே அவள் தான் விரும்பியபோதெல்லாம் அவளுடைய புருஷனைக் கிட்டிச் சேர்வதற்கு சிலாக்கியத்தை எந்தப் பிரமாணத்துக்கும் எதிரிடையாகப் பெற்றிருப்பாள். ஆனால், எவ்வளவு பயங்கரமும் பெரிதுமான ஆபத்துகூட எஸ்தரின் இயற்கையான பயத்தை மேற்கொள்ள முடியாது.

மேதிய பெர்சிய இராஜாக்கள் சிங்காசனத்தில் வீற்றிருக்கும்போதாவது அல்லது எந்த சமயத்திலாவது, இராணியாயிருந்தாலும் சரி, பிள்ளைகளானாலும் சரி, எவரானாலும் சரி, அழைக்கப்பட்டாலொழிய இராஜசமுகம் போவது கூடாது. போனால், இராஜ அங்கீகரிப்புக்கு அடையாளமாக இராஜனால் செங்கோல் நீட்டப்பெற்றவர்கள் தவிர மற்றவர்கள் சாகவேண்டும் என்பது கண்டிப்பான இராஜகட்டளை.

இப்படியிருக்க, எஸ்தர் என்ன செய்வாள்! இராஜாவால் இன்னம் அவள் அழைக்கப்படவில்லையே. ஒருபக்கத்தில் சிற்றப்பனுக்குக் கீழ்ப்படிந்து தன் ஜாதியாரின் உயிரை மீட்கத் தெரிந்துகொண்டால், மறுபக்கத்தில் தன் உயிரை வெறுத்து மரணத்தையே தெரிந்துகொள்ள

வேண்டியதாயிருக்கிறது. ஆனால் அவள் தன் உயிரைப் பெரிதாக எண்ணி மன்னுயிரை அற்பமாக எண்ணினதில்லை. ஆகையால் தன் ஜாதியார் அனைவரும் உயிர் இழப்பதைப்பார்க்கிலும் தான் உயிர் இழப்பதையே தெரிந்துகொண்டு, தன் இருதயத்தில் முதலில் அடைந்த நடுக்கத்தையும் பயத்தையும் கட்டோடே யவிழ்த்து, அரண்மனை வாயிலண்டை அலங்கோலமாய் நிற்கும் தன் சிற்றப்பனுக்கு என்ன ஆறுதலான பதில் அனுப்புகிறாள் என்றால், சூசான் கோட்டையில் இருக்கும் எல்லா யூதரையும் ஒன்றுசேர்த்து மூன்றுநாள் இரவும் பகலும் குடியாமலும் புசியாமலும் உபவாசம் பண்ணவேண்டுமென்றும், அப்படியே தானும் தன் தோழிகளும் உபவாசம் பண்ணி, நாலாம் நாள் தான் இராஜாவினிடம் போவதாயும் சொல்லி அனுப்பினாள். இவ்வாறுதலான வசனங்களைக் கேட்ட மொர்தெகாய் எஸ்தர் உத்தரவுபடியே செய்தாள். இந்த மூன்றுநாள் உபவாசத்திலும் சிறுவயது முதல் பழகிவந்த எஸ்தரின் உள்ளான பக்தி வெளிப்படுகிறது. 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்றபடி, எஸ்தரின் ஜெபப்பழக்கம் இப்போது அவளை நிரப்பினது. இவளின் ஜெபத்தில் அதாவது உபவாசத்தில் ஜெபம், பாவஅறிக்கை, விசுவாசம் என்ற மூன்று முக்கியபொருள் அடங்கியிருந்தது. எஸ்தர் பண்ணின ஜெபத்தை அப்போகிரிப்பா ஆகமத்தில் பின்வருமாறு எழுதியிருக்கிறார்கள்.

(இன்னும் வரும்.)

## FAIR JUDGEMENT

By the Rev. M. Vethamanickam, Travancore.

## கருல் நியாயம்

அந்தோனி, அருளப்பன் என்னும் இரு சகோதரர் ஆஸ்திமானான தங்கள் பிதா மரித்தபின், சர்க்காரிலிருந்து சில கணக்கப்பிள்ளைமாரையும் பின்னும் சில ஊர்ப்பிரதானிகளையும் அழைத்து விஸ்தாரமான தங்கள் தோப்புகள், நிலங்கள், புறவிடங்களை அளந்து பெருக்கியும், வீட்டிலிருந்த நாணயங்கள் நகை நட்டுகளை எண்ணித் திட்டம் வருத்தியும் இருபங்காகப் பகுத்து ரிஜிஸ்தரில் ஒரு பாக உடம்படிக்கைப்பிரமாணம் எழுதப் புறப்படும்போது, வீட்டுச்சாமான்களில் சில பட்டிகையில் உட்படாமல் தவறிப்போனதாகக் கண்டுபிடிக்கப்பட்டன. எவையெனில், தங்கள் தாய்தந்தையர் தாம்பூலம் பக்குவப்படுத்தி வந்த ஒரு இடிகல்லும், கிணற்றில் தண்ணீர்



இறைத்துவந்த ஒரு கயிறுமே. திரும்பவும் கணக்கப்பிள்ளைமாரை அழைக்க அவர்கள் இவை சொற்ப காரியங்கள் என ஊர்ப்பிரதானிகளிடம் ஒப்புவித்தனர். பிரதானிகள் சில நாளாய் பலவித ஏற்பாடுகள் செய்தும் கருல் நியாயம் பிறவாமையால் தர்க்கந்தீர்க்க வேறுவகையின்றிக் கடைசியாய் அந்தக் கல்லை துண்டுதுண்டுகளாய் நொறுக்கித் தராசிலிட்டு சமநிறையாய்க் கட்சிகளுக்கு ஒப்புவித்தனர். இதைக்கண்ட ஊரார் பிரதானிகளை இகழ்ச்சியாய்ப் பேசக்கண்டு, பிரதானிகள் தங்கள் அரும்பிரயாசங்களை மதியாமல், உழுதமாட்டை நுகங்கொண்டடித்தாப்போல் பேசும் இந்த ஊரின் தலைமை நமக்கு வேண்டாமென இராஜிநாமா கொடுத்தனர். அப்பால் கயிற்றின் சங்கதி தங்கள் சபையின் மிஸ்டர் சமாதானம் உபதேசியாரிடம் வந்து சேர்ந்தது. அந்தத் தேசிகர் மேற்படி விஷயத்தின் பாரதூரம் ஒன்றுங் கவனியாமல், கயிற்றை இருவரில் யாராவது ஒருவர் எடுத்துக்கொண்டு, கால தாமசமின்றி பாக உடம்படிக்கைப் பத்திரத்தை ரிஜிஸ்தர் செய்யுங்கள் என்றார். தங்களில் யார் அதை எடுத்துக்கொள்வதெனக் கட்சிகள் கேட்கவே, மூதலாவது அண்ணன் எடுத்துக்கொள்ளட்டும் என்றார். தம்பி கட்சியார் அது நியாயமல்லவென்று தர்க்கித்ததால், அப்படியானால் தம்பிதான் எடுத்துக்கொள்ளட்டும் என்றார்.

இதையறிந்த சபைப் பிரதானிகள் சிலர், 'இருவருக்குச் சேரவேண்டிய ஒரு சம்பத்தை, ஒருதரம் அண்ணனுக்கென்றும் பின்னொருதரம் தம்பிக்கென்றும் இப்படி மூடுந் தலையுமற்ற நியாயம் செய்கிற உபதேசியார் சபையை எப்படி செம்மையாய் நடத்துவார்?' என்றனர். வயோதிபரான சிலர், 'மூப்பர் ஆலோசனையின்றி சுய இஷ்டம்போல் காரியாதிகளை நடத்தினால் இப்படியெல்லாம் வரும்' என்றனர். மேற்படி கட்சிகளும் ஒன்றுசேர்ந்து, 'உபதேசியார் இப்படி விதித்தது நியாயந்தானா?' என்றனர். தேசிகர், 'நான் செய்தது தெற்றுத்தான், ஆனால் நீங்கள் ஐக்கியப்பட்டது மகா சந்தோஷம். கயிற்றை யாராவது எடுத்தாலும் சரி, எறிந்துவிட்டாலும் சரி, உடம்படிப் பிரமாணத்தைச் சீக்கிரம் ரிஜிஸ்தர் செய்யுங்கள்' என்றார். கட்சிக்காரர் உடனே, 'நீர் சந்தோஷப்படுவதைத்தான் பார்ப்போம்' என்று, பின்னும் கயிற்றுக்காக ஒருவரோடொருவர் கைகலந்து சண்டையிட்டனர். சபையில் பலரும், 'ஊர்ப்பிரதானிகள் இராஜி கொடுத்தனர், உபதேசியாரும் இப்படிப்பட்ட குழப்பங்களின் மத்தியில் விலகிக்கொள்வது யுக்தி' என்றனர்.

உபதேசியார் கேசு விசாரிப்பதால் தமக்கும் ஜனங்களுக்கும் மனஸ்தாபங்கள் உண்டாகின்றனவென்று கண்ட மக்கண்மார் மேற்படி சங்கதி

யைக் கவுன்சிலுக்குக் கொண்டுவந்தார். மிச்சப்பாகத்தார் சம்மதிப்படி அந்தக் கயிற்றின் மத்திபம் அடுத்திருந்த ஒரு தேய்வில் அறுத்துக் கயிற்றை இருபங்காக்கி ஆளுக்கொரு துண்டுங் கொடுத்தனர். துண்டுகளை அளந்து பார்த்தபோதோ ஒரு துண்டு 27 அடியும் மறு துண்டு 32 அடியுமெனக் கண்டதால் குறைந்த துண்டு பெற்றவன் விதிக்குட்பட மறுத்தான். அப்பால் சீட்டுப்போட்டனர். அதுவும் சித்திபெறாமற்போயிற்று. பிற்பாடு கட்சிகள் வக்கீல்மாரிடம் ஆலோசிக்கவே, அவர்கள் 'தேசசட்டம் தெரியாதவர்கள் செய்யும் தீர்ப்புகள் அங்கீகாரம் பெறமாட்டா. தகுந்த பீஸ் கொடுக்கிறவனுக்கு முழுக்கயிறும் கிடைக்கும்படி விதி செய்யலாம்' என்றனர். வக்கீல்மார் வழியாய்ச் சென்றால் பணச்செலவு நேரிடுமென்று, அந்தோனி டிஸ்திரிக்ட்டு மாஜிஸ்திரேட் கோர்ட்டிலும், அருளப்பன் ஸெஷன் ஜட்ஜியிடத்திலும் பிராதுகொடுத்தனர். இரு கோர்ட்டுகளிலும் கேசு தள்ளப்பட்டது. உயர்ந்த சம்பளம் பெற்றும் பிரஜைகளின் சங்கடங்கேளாத இவர்களை விசாரிப்பாரில்லையா என்று அட்டகாசம்பண்ணிவிட்டு, கடைசியாய் ஸ்மால்காஸ் கோர்ட்டுக்குச் சென்றனர். அங்கிருந்த ஜட்ஜி சங்கதியைக் கேட்டுவிட்டு, 'இவர்களைப் பார்த்தால் துரைமக்களைப் போலிருக்கிறார்கள். ஆனால் இப்படிப்பட்ட மூடர் உண்டா?' என்றார். கட்சிகள், 'நாங்கள் வருஷத்துக்கு ஆயிரம் ரூபாய் கிஸ்தி செலுத்துகிறவர்கள். எங்களை மூடரென்றுரைத்தால் ஹைகோர்ட்டில் பிராதுகொடுப்போம்' என்றனர். ஜட்ஜி தலையை அசைத்துக் கொண்டு, 'உங்கள் ஊரில் இந்த வழக்கைத் தீர்ப்பாரில்லையா?' என்றார். அந்தோனி: 'சுவாமிகளே, ஊரிலே பிறந்த நியாயத்தைக் கேளுங்கள். இதோ ஒருவனுக்கு இந்த நெடியகயிற்றைக் கொடுக்கவேண்டுமாம். மற்றவன் கட்டைக்கயிற்றை எடுத்துக்கொள்ளவேண்டுமாம். நாங்கள் இருவரும் எங்கள் பிதாவுக்குச் சமஅவகாசிகள்தான் என்றும் சொல்லுகிறார்கள். பின்னே, எங்கள் குருவானவர் நியாயம் இதைவிடக் கறால்தான். ஒன்றில் யாராவது ஒருவனே கயிற்றை எடுத்துக்கொள்ளவேண்டுமாம்; அல்லது ஒருவனுக்கும் வேண்டாமாம். நாங்கள் கோர்ட்டுக்குப் போகிறோம் என்றபோது ஒரு கதை சொன்னார்: இரண்டு பூனைகள் ஒரு பாற்கட்டியைப் பாகிக்கும்படி ஒரு குரங்கினிடம் சென்றனவாம், குரங்கு அதனை இரண்டாகப் பிட்டு, பெரியதுண்டில் கொஞ்சம் கடித்துத் தின்றதாம். முன்பு சிறிதாயிருந்த துண்டு இப்போது பெரிதாய்க் கண்டதால் அதையுங் கடித்தெடுத்ததாம். இப்படி மாறிமாறிக் கடித்து பாற்கட்டி முழுவதும் தானே தின்றதாம். பூனைகள் ஏமாந்து விருதே போயினவாம். அவர் வார்த்தையைக் கேளுங்கள், சுவாமி. நாங்கள் பூனை



களாம், தாங்கள் குரங்காம். இப்படிப் பேசுகிறவர்கள் நல்ல கறாலாய் நியாயம் செய்வார்களா?' என்றான். 'அப்படியானால் வக்காலத்து கொடுங்கள்' என்று ஜட்ஜி சொல்ல, அருளப்பன்: 'சுவாமிகளே, அது சங்கடம். என் தகப்பனுக்கும் அவர் தம்பிக்கும் ஒரு பசுமாட்டைக் குறித்து தர்க்கம் உண்டாயிருந்தபோது வக்கீல் ஒருவர் வந்து, ஒருவர் கொம்பையும் ஒருவர் வாலையுமாகப் பசுவைப் பிடித்து இழுக்கச்சொன்னார். இருவரும் இழுத்து நிற்கவே, வக்கீல் பாலைக் கறந்துகொண்டுபோனார். வக்கீல்மாரிடம் போனால் இப்போதும் பாலைக் கறந்துபோடுவார்கள்' என்றான்.

அப்பால் கோர்ட்டிலிருந்த வக்கீல் ஒருவர், தாமே இந்தக் கேசைத் தீர்மானிக்க உத்தரவு பெற்றுக்கொண்டு, கட்சிகளைப் பார்த்து, 'உங்கள் தகப்பன் பசுவிலே வக்கீல் பால்கறந்தது வாஸ்தவந்தான். ஆனால் இந்தக் கயிற்றிலே கறக்கப் பால் இல்லை. எனக்குக் கயிறும் வேண்டாம், பீசும் வேண்டாம். இல்வசமாய் நியாயம் செய்கிறேன். நீங்கள் இருவரும் இந்தக் கோர்ட்டு வராந்தாவின் அற்றத்திலே நில்லுங்கள். இரண்டு கயிற்றுத் துண்டுகளையும் ஒன்றாய் முடியுங்கள். ஒருவர் கயிற்றின் ஒரு நுனியையும், மற்றவர் மறு நுனியையும் பிடியுங்கள். நான் மூன்று எண்ணினவுடனே, இருவரும் கயிற்றை தனக்கு நேரே இழுங்கள்' என்றார். இருவரும் கொஞ்சமேனும் விட்டுக்கொடாமல் ஒன்றுபோல் முழுப்பெலன் கூட்டி தங்கள் உடலின் கனதியை பாலன்சிலே விட்டு இழுத்துநின்றனர். கயிறு ஒரு கம்பிபோல் முறுகி வலுவாய் நின்றது. வக்கீல் கயிற்றை அளந்து நடுமத்தியே ஒரு அடையாளமிட்டு, ஒரு கத்தி கொண்டு திடீரென அறுத்துவிட்டார். முன்னோக்கி இழுத்தவன் முகங்குப்புற விழுந்து மூக்கு முறிந்தது. பின்னுக்கு நேராய் இழுத்தவன் மல்லாக்க விழுந்து கழுத்து முறிந்தது. இருவரையும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோயினர். சிலகாலம் அங்கிருந்து சுகப்பட்டபின், இருவரும் மேற்படி வக்கீலிடம் போய் 'அநேகர் நியாயம் செய்கிறது கண்டிருக்கிறோம். ஆனால் தங்களைப்போல் கறாலான நியாயம் செய்ய ஒருவரும் அறியார்' என வியந்து பேசி, வெகுமதி அளித்து தம் வீடு புக்கினர். கயிறு போன விடமோ எவரும் அறியோம்.'

'தாய்க்குத் தவிடிடியான்
தம்பிரானுக் கிரும்பிடிப்பான்.'

'United Church Herald.'



## GOLD BELLS AND POMEGRANATES

## பசும்பொன் மணிகளும் மாதளம்பழங்களும்

(தொடர்ச்சி)

### II.

போதகர் சொன்னது:—பரிசேயர் அநேக மணிகளையுடையவர்களாய் இருந்தார்கள். அவர்கள் ஜெபம் பண்ணும்போதும் மணிகள், உபவாசிக்கும்போதும் மணிகள், தருமம் கொடுக்கும்போதும் மணிகள். ஆனால் கீழ்ப்படிதல், இரக்கம், அன்பு இவைகளின் கனிகளோ அவர்களிடமில்லை. அவர்களுடைய மணிகள் கடினமும் கிணுகிணுத்தவையுமாயிருந்தன. அவைகளிலே இனிய ஓசையில்லை. அவை பசும்பொன்னாலே செய்யப்படவுமில்லை. பேதுருவுடைய வஸ்திரங்களிலே மணிகள் தொங்கின. அவைகளின் சத்தத்தைக் கேளுங்கள்: 'உம்மோடு மரிக்கவேண்டியதாய் வந்தாலும் நான்



உம்மை மறுதலிப்பதில்லை.' ஆனால் அவனுடைய மாதளம்பழங்களைப்பற்றி என்ன? நிக்கோதேமுவுடைய அங்கியிலே முதல் முதல் மாதளம்பழங்கள் மாத்திரம் தொங்கின. சத்தமுள்ள மணிகளைக் குறித்து அவன் பயந்து இருட்டில் பதுங்கி எங்கள் ஆண்டவருடைய பக்கம் போகிறான். சில காலம் சென்றபின், அவனுடைய மணிகள் ஓசையாயும் தெளிவாயும் ஒலித்தன. பரிசேயர் கிறிஸ்துவில் குற்றம் பிடித்தபோது அவருக்காகத் தைரியமாய்ப் பேசி பஸ்காநாளிலே அவருடைய பரிசுத்த சரீரத்துக்குப் பரிமள தைலம் பூசினபோது அவனுடைய மணிகளும் பழங்களும் அக்கம்பக்கமாய் இருந்தன. எங்கள் பிரதான ஆசாரியராகிய ஆண்டவரின் அங்கிகளில் பரிசுத்தபோதனைகளின் மணிகளும் அன்பான கிரியைகள், கிருபையுள்ள அற்புதங்களின் விலையேறப்பெற்ற பழங்களும் தொங்கின.

போதகர் பிரசங்கத்தின் கடைசியிலே சொன்னதுதான் என்னிலே தைத்தது. மணிகள் என்ன கருத்தென்றும், கிறிஸ்த சபையிலே நாம் பிரவேசித்தபோதும், நம்முடைய வீடுகளிலே குடும்ப ஆராதனைகள் வைத்தபோதும், எங்கள் அயலார் காண ஓய்வுநாட்களை அனுசரித்தபோதும், மிஷன் சங்கங்களுக்கும் வேறு நல்ல காரியங்களுக்கும் தருமங் கொடுத்தபோதும், எங்கள் வஸ்திரங்களில் மணிகள் எப்படி ஒலித்தனவென்றும் பேசினார். மாதளம்பழப் பகுதியைப்பற்றி மாத்திரம் கொஞ்சம் ஆறுதல் இல்லாமல் இருந்தேனேயன்றி, மற்றப்படி மணிகள் என்னிடத்திலிருக்கின்றனவென்றும் எனக்குள்ளே சொல்லிக்கொண்டேன்.

திரும்பவும் போதகர்:—மணிகளை உடையவர்களே, உங்கள் அயலாருடைய காதுகளில் உங்கள் மணிகள் எல்லாம் எவ்வகையாய் ஒலிக்கின்றன? கோடைகாலத்திலே அமைதியான சாயந்தரவேளையில், இனிமையுங் கனிவும் மிருதுவுமான ஓசையாய் ஒலிக்கிற தேவாலய மணிகளைப்போலும், யாவரும் ஆசையோடே உற்றுக்கேட்கிற தேவதூதரின் சத்தம்போலும் அவைகள் ஒலிக்கின்றனவா? அல்லது கேட்டவுடனே காதுகளைப் பொத்திக்கொள்ளவேண்டிய ரெயில் வண்டி மணிகளைப்போல கரடாய் முரடாய் அவலக்ஷணமாய் அவைகள் ஒலிக்கின்றனவா? என்று வினவினார்.

ஆ! போதகர் இதைச் சொன்னபோது தலையைக் கவிழ்ந்துகொள்ள வேண்டியிருந்தது. ஏனெனில், என்னுடைய மணிகள் இனிமையானவைகள் அல்லவென்று எனக்கு நன்றாய்த் தெரியும். அது எனக்குரிய அலுவல் அல்லவென்று எப்போதும் நினைத்துக் கொண்டேன். என்னுடைய வழிகள் மற்றவர்களுக்குப் பிடியா

திருந்தால் அது அவர்களுடைய குற்றம். நான் குணப்பட்டதுபோல அவர்கள் குணப்படாததினாலும், என் வழிகள் தேவனுக்கேற்றவைகள் என்று அவர்கள் ஒத்துக்கொள்ளாதது அவர்களுடைய இருதயங்கள் பொல்லாதவைகளாய் இருக்கிறபடியினாலும் என்று சொல்லிக்கொண்டேன். இப்போதோ குற்றம் என்னிலே இருக்கிறதென்று நான் காணத்தக்கதாயிருந்தது.

## III.

போதகர் அவ்வளவில் பிரசங்கத்தை முடிக்கவில்லை. தேவமகிமைக்காகக் கிறிஸ்தவர்கள் கொடுக்கிற நற்கனியாகிய மாதளம்பழங்களைப்பற்றிப் பேசத்துவங்கினார். அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, சாந்தம் முதலிய இன்னும் எத்தனையோ கனிகளைப்பற்றிப் பேசினார். ‘இப்போது அவர் நல்ல செய்கைகளைப் பற்றிப் பேசப்போகிறார். என்னிடத்தில் நற்செய்கைகள் அநேகம் உண்டே. தருமச் சேகரிப்புக்குக் கொடுக்கிறேன். ஆராதனை நடத்துகிறதற்குக் கொடுக்கிறேன்’ என்று என்னுடைய பல நற்செய்கைகளையும் மனதுக்குள்ளே சொல்லிக்கொண்டிருக்கையில், சடுதியாய் இவைகள் மணிகளன்றிக் கனிகளல்லவே யென்று என்னுடைய மனதிலே தட்டிற்று. அவைகள் பெருஞ்சத்தம் கொடுக்குமென்று கருதியிருந்தேன். ஆ! என் மணிகள் பசும்பொன் மணிகளல்ல. அவை அவலக்ஷணமான காகாத்த சத்தமுடையன என்று பயந்தேன். நானொரு கெட்டவள் என்று உணர்ந்தேன். அப்புறம் பிரசங்கம் கேட்க என்னால் கூடாமல் போய்விட்டது. போதகர் கடைசியாய் ‘உங்கள் மணிகள் பசும்பொன்னாயும் அவைகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு மாதளம்பழம் இருக்கத்தக்கதாயும் பார்த்துக்கொள்ளுங்கள்’ என்று சொன்னபோது எனக்குக் குறுவேர்வை வேர்த்தது. ஜெபம் முடிய, தரித்து நின்று ஒருவரோடும் பேசாமல் ஏதோ ஒரு மயக்கம் பிடித்தவள்போல வெளிக்கிட்டு நேரே வீட்டுக்கு வந்தேன். அங்கே இருந்துகொண்டு பின்னால் வருகிறவகையாக யோசிக்கத் துவக்கினேன்: ‘நான் கர்த்தருடையவள். அவரைச் சேவிக்கவேண்டும். அது வெளிப்படை. பயங்கரமான தப்பிதங்களைச் செய்து வந்துவிட்டேன். ஆனால் இளக்கரிக்கவேமாட்டேன். என்ன காரியத்திலே தவறிப்போனேன் என்று கண்டுபிடித்து, என்னைச் சரியாக்கிவைக்கும்படி தேவனிடத்தில் கேட்கவேண்டியதே நான் இப்போது செய்யவேண்டிய காரியம். நான் கர்த்தருடைய ஒரு ஆசாரியனாக இருக்கவேண்டுமானால் மணிகளும் இருக்கவேண்டும், மாதளம்பழங்



களும் இருக்கவேண்டும்’ என்று இப்படியே சிந்தித்துக்கொண்டு முழந்தாளில் நின்று ‘தேவரீர் எனக்கு வழியைக் காண்பியும்’ என்று ஜெபித்துக்கொண்டு புதிய ஏற்பாட்டை எடுத்து அன்பு, சந்தோஷம், சமாதானம் என்ற ஆவியின் கனிகளைப்பற்றிப் பேசுகிற வசனத்தைப் பார்க்கத் துவக்கினேன். அவசரத்தில் இசைவான வாக்கியங்கள் திருப்பக்கூடாதிருந்தன. கடைசியாய்க் கொலோசெயரிலே பின்வரும் வசனம் தென்பட்டது. ‘நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய் உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு, ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடுண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.’ இதிலே நிரைகனிந்த மாதளம்பழங்களிருந்தன. அப்படிப்பட்ட கனிகள் நான் அதிகங் கொடுக்கவில்லையென்று என் இருதயத்தில் அறிந்தேன். இப்பொழுது நான் அப்படிச் செய்யவேண்டுமென்று உணர்ந்தேன். உண்மையான பசும்பொன் மணிகளோடு மாதளம்பழங்களும் அக்கம் பக்கம் தொங்கவேண்டுமென்று தீர்மானம்பண்ணினேன்.

இப்படித் தீர்மானம்பண்ணிக்கொண்ட அந்தக் கிழமை என் பாடு ஒன்றும் நேர்போகவில்லை. சரியான யாதொன்றைச் செய்யவேண்டுமென்று மனதிலே தீர்த்துக்கொள்ளும்போது சம்பவிக்கிறதெல்லாம் அதற்கு மாறாயிருப்பது ஒரு நூதனந்தான். அந்தக்கிழமை மாதளம்பழங்கள் கொடுக்கிறது பிரயாசமான வேலையாயிருந்தது. கர்த்தர் எனக்கு உதவிசெய்யாதிருந்தால் அவைகளெல்லாம் காஞ்சிரம் பழங்களாய்த்தான் இருந்திருக்கும்.

நான் முன் சொன்னதுபோல அந்தக்கிழமை ஒன்றும் நேர்போகவில்லை. என்னுடைய மூத்தமகள் சாளொற்று கால் சுளுக்கினதினால் திங்கட்கிழமை காத்திராப்பிரகாரம் வீட்டுக்கு வந்துவிட்டாள். அவளாலே ஒன்றுஞ்செய்ய ஏலவில்லை. அந்தக்கிழமை முழுவதும் மாறிமாறி அவளைப் பராமரிக்கிறதும் சாய்ப்பில் அலுவல் பார்க்கிறதுமாய் இருந்தேன். சாளொற்று நல்ல பிள்ளை. அவளாலே எனக்கு ஒரு தொந்தரவும் ஒருபோதும் இருந்ததில்லை. அவள் ஓய்வுநாள் பள்ளிக்கூடத்தில் மெத்த கவனம். அவள் படவேண்டிய பாடுகளைப் பொறுமையோடு சகித்துவந்தாள். நான் அவளுடைய பக்கத்திலே இருந்துகொண்டு, ‘மகளே, கொஞ்சக்காலம் நீ நொண்டியாயும் உதவியற்றவளாயுமிருப்பது தேவசித்தம். அதற்கு நியாயம் அவரே அறிவார். அவரிலேதான் நம்பிக்கை வை’ என்று அவளோடு பேசினேன். நான் பேசின வார்த்தைகள் மணிகள்தான். அவைகள்

பொன்மணிகளென்று நம்புகிறேன். அவைகள் ஒவ்வொன்றுக்கும் இடையில் கனிகளும் வரவேண்டியதென்று நினைத்தேன். கனிகளுக்கு இடமும் மெத்த இருந்தது.

(இன்னும் வரும்.)

## A WORD TO WOMEN

## மாதர்க்கோர் வார்த்தை

கடவுள் சிருஷ்டித்தவைகளில் மனுஷியே மகா விசித்திரமானவள். அவளுடைய சரீரத்தை மேலாகப்பாருங்கள்; அவளுடைய அங்கலக்ஷணத்தை என்னென்று சொல்ல! உச்சிக்கோட்டிலிருந்து மூக்கின் முகட்டுவழி நெஞ்சுக்குநேரே நீட்டுவாக்கில் ஓர் நேர் கோடிட்டால் வலப்பக்கம் ஒரு புருவம், ஒரு கண், ஒரு மூக்குத்துவாரம், ஒரு கன்னம், ஒரு கை, ஒரு கால் முதலியன பாங்காய் அமைந்திருப்பதுபோல் இடப்பக்கத்திலும் அமைந்திருப்பதைப் பார்க்கும்போது உங்களுக்கு வியப்பு உண்டாகிறதில்லையா? அவைகளுக்கிருக்கும் ஒற்றுமையாகிய இலக்ஷணத்தைப் (Symmetry) பார்த்து உங்கள் வீட்டிலுள்ள படங்கள், நாற்காலிகள், பெட்டிகள், சட்டிபானைகள், தட்டுமுட்டுகள் முதலிய பொருட்களை எவ்வாறு ஒழுங்குபடுத்த வேண்டுமென்று நீங்கள் கற்றுக்கொள்ளல் வேண்டாமோ? முகத்தில் குழிந்திருக்குங் கண்கள் தலை உச்சியில் மேலாக மிதந்திருக்குமானல் சீக்கிரம் பழுதடைந்துபோவதல்லாமல், கால்கள் வழிதெரிந்து நடத்தல் கூடாதல்லவா? காதுகள் முகத்திலிருக்குமானல் தங்கள் தொழிலைச் சரியாய்ச் செய்யக்கூடுமா? மூக்குத்துவாரங்கள் மேல்நோக்கி இருந்தால் மூக்கு முகருமா? கைகளிருக்கும் இடங்களில் கால்கள் இருந்தால் அவைகள் சரீரத்தைச் சுமந்து திரிய இயலுமா? கைவிரல்கள் எல்லாம் ஒரே உயரமாயிருந்தால் அவைகள் பொருட்களைப் பற்றிப்பிடிப்பதெப்படி? இவைகளைக் கவனிக்குங்கால், எந்தெந்தப் பொருட்களை எந்தெந்த விடங்களில் எவ்வாறு ஒழுங்குபடுத்த வேண்டுமென்று கற்றுக்கொள்ளவேண்டுமல்லவா? ஆடவரினும் மாதரே அழகின்மேல் ஆசையுள்ளோர். ஆதலால், மாதரே, நீங்கள் உங்கள் அங்கலக்ஷணத்தைக் கவனித்து, உங்களையும் உங்கள் வீட்டையும் அழகுபடுத்தும் ஒழுங்கைக் கற்றுக்கொள்ளுங்கள்.

மனுஷியுடைய மேல் உறுப்புக்களைவிட அவளுடைய உட்கருவிகளே மகா அற்புதமானவைகள். இரத்தத்துக்கு ஊற்றாகிய இருந்தாசயமும், இரத்தத்தைத் தேகமெங்கும் பரவச்செய்யும் இரத்தநாளங்களும் அவள் தேகத்தைப் போஷிக்கின்றன; சுவாசக்கருவிகளாகிய



நுரையீரல்கள் அவளுடைய இரத்தத்தைச் சுத்திகரித்து அதிலுள்ள அழுக்கை வெளியேற்றுகின்றன; ஜீரணக்கருவிகளாகிய இரைப்பை, சிறுகுடல், ஈரல் முதலியவை அவள் சாப்பிடும் போஜனத்தை ஜீரணிக்கச் செய்கின்றன; மூளை புத்திக்கு ஆதாரமாயிருக்கிறது; தசைகள் சுருங்கி, விரிந்து, இயங்குந் தன்மையுள்ளவைகளாயிருக்கின்றன; தோல் பரிசக்கருவியாகவும், கழிவு பதார்த்தங்களை வெளியேற்றுங் கருவியாகவும், தசைகளைப் பாதுகாக்கும் போர்வையாகவும் இருக்கின்றன; எலும்புகள் தசைகளுக்கு ஓர் சட்டமாகவும், சரீரத்தைச் சுமக்கவும் சரீரத்திலுள்ள நுண்ணிய கருவிகளைக் காக்கவும் உதவுகின்றன. மேற்கூறிய கருவிகளும் தேகத்திலுள்ள மற்றக் கருவிகளும் பழுதுபடாதிருந்து, தத்தம் தொழிலைச் சரியாய் நிறைவேற்றி வரும்பொழுதுதான் அவள் சுகமாயிருப்பாள். ‘நிழலின் அருமை வெயிலுக்குப் போனல்தான் தெரியும்’ என்ற பழமொழிப்படி, சுகத்தின் அருமை அவள் வியாதிக்குட்பட்டு படாதபாடு படும்போதுதான் ‘உள்ளங்கை நெல்லிக்கனிபோல்’ விளங்கும்.

ஒரு தகப்பன் வியாதிப்பட்டால் தாய்க்குப் பல சங்கடங்கள் நேரிடுவதன்றி வறுமை குடும்பத்துக்குள் பிரவேசிப்பதால் முழுக்குடும்பமும் உபத்திரவப்பட நேரிடும். தாய் வியாதிப்பட்டால் குடும்பகாரியம் சீர்குலைந்துபோவதன்றி பிள்ளைகளின் நிலைமை பரிதபிக்கப்படத்தக்கதாகும். பிள்ளைகளின் சுகம் கெட்டால் தாய் கண் விழித்துப் பாடுபடுவதால் தாயின் சுகமுங் கெடுவதுண்டு. சுகவீனத்தால் பணத்தை இழந்தவர்களும், படிப்பை இழந்தவர்களும், உத்தியோகத்தை இழந்தவர்களும் அநேகர். கஷ்டப்பட்டுப் படித்து பல கௌரவப்பட்டங்களைப் பெற்றும் தாங்கள் பட்ட பிரயாசத்தின் பலனை அனுபவிக்கக்கூடாதபடி வியாதியிலகப்பட்டு, தங்களுக்கும் பிறருக்கும் பாரமாயிருக்கிறவர்களும் உண்டு. வியாதி சிலரை ஆயுள் பரியந்தம் பலவீனர்களாகவும், சிலரை அங்கவீனர்களாகவும் ஆக்குவதன்றி, ஏராளமான பேர்களை மரணத்துக்கு இரையாகவுஞ் செய்கின்றது.

வியாதி குணத்தைக்கூடக் கெடுத்துப்போடும். சிலர் வெடுவெடுப்பாய்ப் பேசுவதற்கும், ஒருக்காலும் சிரிக்காமல் குறுவின முகமுடையவர்களாயிருப்பதற்கும், எப்போதும் நம்பிக்கையற்றவர்கள்போல் பேசி துன்பந் தங்களைச் சூழ்ந்திருப்பதாக நினைத்து பயங்காளிகளாயிருப்பதற்கும், வேலைசெய்ய மனமற்றுத் தங்களுக்கும் பிறருக்கும் பாரமாயிருப்பதற்கும் சுகவீனமே காரணம்.

சுகத்தினல் விளையும் நன்மைகளை இங்கு பூரணமாய் விவரிக்க முடியாது. ஸ்திரீகள் புருஷர் பிள்ளைகளுக்கும், சிங்காசனத்தில்

உட்கார்ந்து செங்கோல் கையில் பிடித்திருக்கும் இராஜாமுதல், துடைப்பம் கையில் பிடித்துத் தெருப்பெருக்குந் தோட்டிவரையுள்ள எல்லா நிலைமைகளிலுள்ளவர்களுக்கும் சுகம் இன்றியமையா ஆசீர்வாதமாக இருக்கிறது. சுகமிருந்தால் கல்வி, ஆஸ்தி, சந்தோஷம், தீர்க்காயுசு முதலிய பல ஆசீர்வாதங்கள் இயல்பாயுண்டாகும். 'சுகத்தைக் கொடுத்தும் சுகத்தை வாங்கு' என்னும் பழமொழி சுகத்தின் அருமையைக் காட்டச் சொல்லப்பட்டது.

மாதரே, குடும்பகாரியங்களை நடத்துவது உங்கள் கடமையல்லவா? குடும்பத்திலுள்ளோர் சுகத்துக்கு உத்தரவாதிகள் நீங்களல்லவா? ஆடவர் ஆஸ்பத்திரிகளிலும் மாதரே தாதிகளாயிருப்பது உங்களுக்குத் தெரிந்த விஷயமல்லவா? குடும்ப நிர்வாஹ சாஸ்திர விதிகளையும், குடும்ப சுகாதார சாஸ்திர விதிகளையும் உங்களுக்குப் போதிப்பது மாதர்போதினியின் கடமைகளில் ஒன்றுதலால் 'மாதர்க்கோர் வார்த்தை' என்ற தலைப்பின் கீழ் இவ்விஷயங்களைப்பற்றி வேளாவேளைகளில் எழுதுவோம்.

மாதரே, உங்கள் விஷயமாயும் உங்கள் குடும்ப விஷயமாயும் மேற்சொல்லியவைகளிலிருந்து நீங்கள் கற்றுக்கொள்ளவேண்டிய சாதனை விதிகளாவன :—

1. அழகைக் கவனியுங்கள்.
2. ஒழுங்கைக் கவனியுங்கள்.
3. சுகத்தைக் கவனியுங்கள்.

Y. G. Bonnell, P.B.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1917-ஆம் பெப்ருவரி மீ

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வி. | எரே. | 8. | 1—12 | 11 | ஞா. | எரே. | 11. | 18—23 | 20 | செ. | எரே. | 13. | 22—27 |
| 2 | வெ. | ,, | 8. | 13—22 | 12 | தி. | சங். | 113. | 1— 9 | 21 | பு. | ,, | 14. | 1— 9 |
| 3 | ச. | ,, | 9. | 1— 8 | 13 | செ. | ,, | 114. | 1— 8 | 22 | வி. | ,, | 14. | 10—16 |
| 4 | ஞா. | ,, | 9. | 9—16 | 14 | பு. | ,, | 115. | 1—18 | 23 | வெ. | ,, | 14. | 17—22 |
| 5 | தி. | ,, | 9. | 17—26 | 15 | வி. | ,, | 116. | 1—19 | 24 | ச. | ,, | 15. | 1— 9 |
| 6 | செ. | ,, | 10. | 1—10 | 16 | வெ. | எரே. | 12. | 1— 6 | 25 | ஞா. | ,, | 15. | 10—21 |
| 7 | பு. | ,, | 10. | 11—18 | 17 | ச. | ,, | 12. | 7—17 | 26 | தி. | சங். | 117; 118. | 1—13 |
| 8 | வி. | ,, | 10. | 19—28 | 18 | ஞா. | ,, | 13. | 1—11 | 27 | செ. | ,, | 118. | 14—29 |
| 9 | வெ. | ,, | 11. | 1—10 | 19 | தி. | ,, | 13. | 12—21 | 28 | பு. | ,, | 119. | 1— 8 |
| 10 | [illegible] | ,, | 11. | 11—17 | | | | | | | | | | |

C. L. S. PRESS, MADRAS—1917

மாதர் போதினி

No. 231 மார்ச்சு 1917 No. 3

REGISTERED 6 - MAR 1917 MADRAS



## GOLD BELLS AND POMEGRANATES

## பசும்பொன் மணிகளும் மாதளம்பழங்களும்

(தொடர்ச்சி)

### IV

அந்தக்கிழமை எனக்கு இருந்த தொந்தரவுகள் எவ்வளவு! குழந்தைகளைப் பார்க்கவேண்டும், சாய்ப்புக்காரியம் பார்க்கவேண்டும்,

மேலறையிற் துன்பமாய்ப் படுத்திருக்கும் சாளொற்றையும் பரிகரிக்க வேண்டும்! இப்படியிருக்க சாளொற்றுடைய எசமாட்டியும் ஒரு நாள் காலமே வந்து 'இந்த அவசரமான நேரத்தில் சாளொற்று வராமவிருப்பது எவ்வளவு தொந்தரவு. அவளுக்கு ஒரு வருத்தமுமில்லை' என்று உறுக்கி மிகவும் கடுமையாய்ப் பேசினாள். அவள் அப்படிக் கடுமையாய்ப் பேசினது எனக்குக் கோபமாயிருந்தது. என்னுடைய மகள் முழங்காலிலே சுளுக்கி வருத்தமாய் இருக்கையில் அவளைக் கொண்டு அந்த எசமாட்டி வேலை செய்வித்த கோபமும் எனக்கிருந்ததினால் நானும் அவளோடு கடுமையாய்ப் பேசினேன். அப்போது அவள் 'உன்னுடைய நிலையை மறந்து இப்படி மூர்க்கங்கொள்ள நீ நல்ல மாதிரியான கிறிஸ்தவள்தான்' என்று சொல்லிக்கொண்டு போய்விட்டாள். அவள் போனபிறகு எனக்கு மெய்மெய்யாய்த் துக்கமுண்டானது. அந்த நாளிலே என்னில் ஒரு மாதளம்பழந் தானுமில்லை. மணிகளும் எல்லாம் பிசகாய்ப்போயின.

அடுத்த நாள் சற்றே தேற்றங்காணப்பட்டது. என்னுடைய சாய்ப்புக் கதவருகில் கெரி அம்மாளுடைய பையன் மெத்தப் பரிதாபமாய் அழுதுகொண்டிருந்தான். அந்தப் பிள்ளையின்பேரில் ஒருக்காலும் எனக்குக் கரிசனையிருக்கவில்லை. மெத்தத் தொந்தரவுகாரப் பையன் அவன் அழுத பரிதாபத்தைக்கண்டு ஒரு சீனிக்கட்டியைக் கொண்டுபோய் அந்தச் சின்ன பையனுக்குக் கொடுத்தேன். ஆ! அவனுடைய முகம் எவ்வளவாய் மலர்ந்தது! எனக்கு 'உபகாரம்' சொன்னான் என்று நான் நினைக்கவில்லை ஆனால் அதைப்பற்றிப் பறவாயில்லை. அவள் அவனுடைய முகமலர்ச்சியைக்கண்டு நான் ஒரு 'உருக்கமான மனது' உடையவள் என்பதை அறியவரும்போது, என்னுடைய மணிகள் அவளுடைய காதுகளில் சற்றே மெல்லிய சத்தமாய் ஒலிக்குமே என்று எண்ணிக்கொண்டேன்.

அன்றைக்குச் சாளொற்றுக்கும் கொஞ்சம் சௌக்கியமாயிருந்தது. சாயந்திரத்தில் ஆராதனைக்குப் போயிருந்தேன். பாட்டுகளும் பிரசங்கமும் எல்லாம் எனக்குத்தான் போல இருந்தன. வழமையாய் எனக்குமுன் ஆசனத்திலிருக்கிற கைம்பெண் கிறுய்ப் அம்மாளை அன்றைக்கு அந்த இடத்தில் காணவில்லை. ஆராதனை முடிந்து நான் வீட்டுக்குப் போகையில் 'கிறுய்ப் அம்மாளைப் பார்த்துக்கொண்டு போ' என்று ஏதோ எனக்குள்ளே சொன்னதுபோல் இருந்தது. எனக்கோ சம்மதமில்லை. சாளொற்றிடத்தில் போக அவசியப்பட்டேன். ஆனாலும் ஏதோ வகையாகக் கிறுய்ப் அம்மாளைப் பார்த்துப் போவோமென்று உள்ளே போனேன். கிறுய்ப் அம்மாள் வாதத்



தினால் மெத்த வருத்தமாயிருந்தாள். அதினால் அவளுடைய குணம் வெடுவெடுப்பாயிருந்தது. போய்ச் சந்திக்கிறதற்கு அவள் ஒரு சந்தோஷமான ஆளல்ல. நான் போனவுடனே 'என்ன காரியத்தைப் பற்றி இங்கே வந்தாய்?' என்று வெடுவெடுப்பாய்க் கேட்டாள். ஆராதனையிலே உன்னைக் காணாததினால் உன்னுடைய சுகமெப்படியென்று அறியவந்தேன் என்று சொல்லிப் பிரசங்கத்தைப்பற்றியும் சாளொற்றைப்பற்றியும் சற்றுநேரம் பேசி அவளுடைய வருத்தத்தில் அவளை ஆற்ற எத்தனித்தேன். அவள் அதிகமாய்ப் பேசாமல் நெடுக என்னைப் பார்த்தபடியிருந்து நான் வெளியேவருந் தருணம் 'ஆராதனையிலே நீ மெத்தக் கவனக்காரி; மற்றவர்களிலோ நீ அனுதாபமில்லை. ஆகையினாலே நீ இங்கே வந்தது எனக்கு ஆச்சரியமாய் இருந்தது' என்று பேசினாள்.

அவள் அப்படிச் சொன்னபோது என் குறையைக் கண்டேன். என்னுடைய மணிகள் அவளுக்கு இன்பமாய்த் தொனிக்கவில்லை என்பது நிச்சயம். என்னிலே கனியையும் காணவில்லை. ஆனாலும் அந்த இடத்திலேதானே 'பட்சம்' என்னும் மாதளம்பழத்தைக் கொடுத்தேன் என்று நினைத்துக்கொண்டேன்.

## V

அடுத்தநாள் சில அயலகத்தார் வந்தார்கள். ஓய்வுநாளில் பிரசங்கத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். நான்தான் அதைப்பற்றி அதிகமாய்ப் பேசினேன். அந்தப் பிரசங்கத்தில் நான் விளங்கிக்கொண்டதில் அரைவாசிதானும் சிலர் விளங்கிக்கொள்ளாததுபோல் காணப்பட்டது. அந்தப் பிரசங்கத்தின் பிறகு நான் கனிகொடுத்து வருகிறேன் என்று சற்றே என்னைக்குறித்து பெருமையாய்ப் பேசினேன். நான் இப்போது, கொஞ்சம் வித்தியாசமான ஆளாய் விட்டேன் என்று அவர்கள் என்னைப்பற்றி ஏதோ குசுகுசுத்துப் பேசிக்கொண்டதாக எனக்கு விளங்கிற்று. என்னுடைய மணிகள் முன்னே பசும்பொன் மணிகளாய் இருக்கவில்லை. இப்போது அவைகள் இனிமையான ஓசையுடையவைகளாய் இருக்கின்றனவென்று மாத்திரம் சொல்லிப் பேசாமல் இருந்தேன். 'தாழ்மை' என்னும் மாதளம்பழம்: கிணுகிணுத்து வீம்படிக்கிற இருபது மணிகளிலும் விலையுள்ளது.

சிலநாள் சென்றபின் தாழ்மை, சாந்தம் இவைகளைச் சாதிக்க எனக்கு அதிக வசதியிருந்தது. சாளொற்றுடைய எசமாட்டி அவளுடைய சுகம் அறியத் திரும்பவும் ஒருநாள் வந்தாள். 'நான் முந்தினமுறை பேசினவகை தப்பிதம், அதைக்குறித்து துக்கமாய்

இருக்கிறேன்' என்று அவளுக்கு அறிக்கைபண்ண என் பெருமை விடவில்லை. ஆனாலும் அறிக்கைபண்ணினேன். என்ன சொல்லுகிறதென்று தெரியாது, திகைத்து நின்றாள். அவள் என்னைப் பார்க்கிலும் அதிகந் துக்கப்பட்டு பக்ஷமாய்ப் பேசி, 'சாளொற்று இன்னும் ஒரு கிழமை நிற்க இடந் தருகிறேன்' என்று சொல்லிப் போய்விட்டாள். என்னிலே மணிகளுக்கிடையில் ஒரு மாதளம்பழத்தைக் கண்டிருப்பாளென்பது நிச்சயம்.

நான் முன் சொன்னதுபோல எனக்குத் தொந்தரவுகள் அதிகம். என்னுடைய மகன் ஓவன் என்பவனாலேதான் எனக்குப் பெரிய தொந்தரவு. அவன்தான் என்னைக் கோபம் மூட்டிவிடுவான். ஒரு நாள் என் பாடு திகிலடிப்பாயிருந்தது. என்ன, சாய்ப்புக்குரிய அலுவல்களெல்லாம் பிசகிப்போயின; குழந்தையொன்றுக்குக் குக்கல் மகன் அன்று சாயந்திரம் எசமான் வேலையில்லாமல் துரத்திவிட்டான். அவனுக்கு நல்ல வேலையொன்று வாங்கிக்கொடுத்து அவன் அதிலே முதற்றரமான ஆளாய் வருவானென்று எண்ணியிருந்தேன். அவன் அவ்வளவு கெட்ட பையன் அல்ல. கொஞ்சம் விளையாட்டுக்காரன். எசமான் அவனை எதிர்பார்த்திராப்பிரகாரம் வேலையினின்று நீக்கிப்போட்டான். மெத்த வெட்கத்தோடுதான் வீட்டுக்கு வந்தான். வேலையினின்று நிறுத்தப்பட்ட நியாயஞ் சொல்லுகிறானில்லை. நான் அடிப்பேனென்ற பயமும் அவனுக்கு உண்டு. இரண்டொரு கிழமைக்கு முன் அவனுடைய காதுகளைப் பொத்தியடித்துப்போட்டேன். இப்போ ஒன்றும் பேசாமல் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டிருக்கிறான். எனக்கு மெத்த விசனமாயிருக்கிறது. சற்றுக் காரமாய்ப் பேசினபின், வந்து இராச்சாப்பாட்டைச் சாப்பிடச் சொன்னேன். வந்திருந்து சாப்பிட்டபின் ஒன்றும் பேசாமலும், இராவந்தனங்கூடச் சொல்லாமலும் படுக்கைக்குப் போய்விட்டான்.

இவனுடைய மாதிரியைக் குறித்து மிகுந்த கவலையோடே நான் சிந்தித்துக்கொண்டிருக்கையில் அந்த ஓய்வுநாளிரவு நான் வாசித்த வசனங்களிலொன்றை என் காதுக்குள்ளே யாரோ சொல்லுகிறதுபோலிருந்தது. 'நீங்கள் தேவனாலே தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய் உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொள்ளுங்கள்.' நீடிய பொறுமை யென்ற இந்தக் கடைசிச் சொல் பத்துக்கற்பனைகளளவு வரவரப் பருத்து என்னுடைய காதுக்குள்ளே தொனித்துக்கொண்டிருக்க மற்ற சொற்களை மறந்துபோனேன். நீடிய பொறுமை! என்னுடைய பையனிலே நான் எவ்வளவு நீடிய பொறுமையாயிருந்தேன்? ஆசீர்வதிக்கப்பட்ட கர்த்தர்



என்னிலே இதிலும் பதின்மடங்கு பொறுமையாயிராவிட்டால் என் பாடு என்னவாயிருக்கும்! வெட்கமுந் துக்கமுமான கண்ணீர் தாரை தாரையாய் ஓடத் துடங்கிற்று. மன உருக்கமும், கிருபையும், நீடிய பொறுமையுமுடைய கர்த்தர் என்னோடு பேசி ஆறுதல்படுத்தி மன்னிப்பையும் தந்தார்.

## VI

உடனே நான் மேல்வீட்டுக்குட்சென்று என்னுடைய பிள்ளை படுத்திருந்த அறைக்கு சந்தடியில்லாமல் மெதுவாய்ப் போனேன். வரும்போது மெத்த தொய்ந்தவனாய் வந்ததினால் பிள்ளை நித்திரையாயிருப்பானென்று நினைத்தேன். நிலவுவெளிச்சம் கொஞ்சம் இருளாயிருந்ததினால் பிள்ளையுடைய முகம் தெரியவில்லை. அவன் மூச்சுவிடுகிற சத்தங் கேட்க அமைதியாயிருந்தேன். பிள்ளை நித்திரையாகவில்லை. என்னைக் கண்டுவிட்டான். மெத்த மெள்ளமாய் 'ஆச்சி' என்றான். நான் அவனுக்குக் கிட்டப்போய் நிலவுவெளிச்சத்தில் அவனுடைய படுக்கைக்கருகில் முழந்தாளில் நின்று அவன் ரோசாப்பூ அழகுள்ள பாலகனாய் தொட்டிலிற் படுத்திருந்தபோது முத்தமிட்டவண்ணமாய் முத்தமிட்டபின், 'ஓவென் காரியமென்ன? மகனே உனக்கிருந்த இடைஞ்சல் என்ன? சொல்லு; உன்னுடைய எசமான் திரும்பவும் உன்னை வேலையில் வைப்பாரோ? அல்லவோ? பார்ப்போம்' என்று நான் பதமையாய்ப் பேசினேன். அதன்பின் நடந்த வரலாற்றையெல்லாம் தெளிவாய்ச் சொன்னான். எல்லாம் ஒரேமுறையில் வரவில்லை. கண்ணீர்தான் முதல்முதல் வந்தது. ஓவென் எந்து குழந்தையாயிருந்தபோது எதும் விளையாட்டுப்பொருள்களை உடைத்துப்போட்டு அழுகிறதுபோல் அன்றைக்கு விம்மி விம்மி அழுதான். அப்புறம் நடந்த சரித்திரத்தைச் சொன்னான். காரியத்தைப் பார்த்தால் அவனிலே பெரிய குற்றத்தையுங் காணவில்லை. சற்றே நினைவில்லாமலும் கவலையீனமுமாய் இருந்ததினால் எஜமான் கோபங்கொண்டு வீட்டுக்கு அனுப்பிவிட்டான். எஜமானும் ஒரு வெடுவெடுத்த ஆள். இது என்னுடைய இருதயத்தைப் பிளந்தது. ஓவென் கடைசியாய்ச் சொன்னதாவது: 'ஆச்சி, நீங்கள் என்னிலே கோபங்கொள்வீர்களென்றும், நான் சொல்லுவதைக் கவனமாய்க் கேட்கமாட்டீர்களென்றும் நான் நினைத்ததினால்தான் உங்களோடு ஒன்றும் பேசாமலிருந்து, இரண்டொரு நாளைக்கு உம்முடைய கடிந்துகொள்ளுதலைப் பார்த்துவிட்டு எங்கேயாகிலும் ஓடித் தப்ப யோசனையாயிருந்தேன்.'

ஆ! இந்தச் சொற்கள் எவ்வளவாய் என்னைக் குத்தின; நான் நேசித்த பிள்ளை, என் உயிரை விடவேண்டிவந்தாலும் விடுகிறதற்கு

நான் ஆயத்தமாயிருந்த என் பிள்ளை என்னைவிட்டு ஓடிவிடவா? அவன் பிறந்தநாள் முதலாய் அவனுக்காக ஜெபம்பண்ணினேன். நன்மையானதெதுவோ அதைப் பிடித்தேன். தேவாலயத்திற்குக் கொண்டுபோய் அங்கே அவனிலே விழிப்பாயிருந்தேன். இப்படி வளர்க்கப்பட்ட பிள்ளை என் நல்லபிள்ளையாய் வரவில்லையென்ற கவலைதான் எனக்கு. மணிகள், மணிகள்—மாதளம்பழங்களோ இல்லை! அவனோ என்னிடத்திலே அநேக போதனைகளைக் கேட்டான். என்னிலே கண்ட கனிகளோ மெத்த சொற்பம். கொஞ்சம் 'நீடிய பொறுமை' என் பிள்ளையைச் செயித்தது. அன்றுமுதல் என் பிள்ளை முழுவதும் வித்தியாசமான பிள்ளையாய்விட்டான்.

இன்னும் ஒரு மாதளம்பழம், அத்தோடு என்னுடைய கதை முடியும். என்னுடைய சாய்ப்புசன்னலிலே கம்பியினுற் செய்யப்பட்ட ஒரு சிறு கூடு இருக்கிறது. என்னுடைய கோழிகள் இட்ட முட்டைகள் அதற்குள் நிறம்ப இருந்தன. எல்லாம் புதுக்கயிட்ட முட்டைகள். என்னுடைய அழகான கோழிகளுக்குத் தீனிகொடுக்கும்படி கோழிகள் நிற்கிற முற்றத்துக்கு நான் போனுல் அவைகள் தங்கள் வாலை ஆட்டியாட்டி நிலத்திலே விழுந்ததைப் பொறுக்கும், கையிலிருக்கிறதைக் கொத்தும், கையிலிருக்கிற பெட்டிக்குள்ளும் பறந்துவந்து பொறுக்கும். ஒருநாள் கோழிகளுக்குச் சாப்பாடு கொடுக்கப் போனேன். நான் ஒருநாளும் கண்டிராத துக்கக் காக்ஷியை அன்றைக்கு அங்கே கண்டேன். பார்த்தவுடனே அந்தக் காக்ஷி நான் அழத்தக்கதாய் என்னை துக்கப்படுத்திவிட்டது. என்னுடைய அழகான செல்லக்கோழிகள் எல்லாம் செத்துப்போய் அங்கங்கே சிதறிக்கிடந்தன. ஒன்றுமாத்திரம் சாகவில்லை. அதின் அழகான செட்டையொன்று முறிந்துபோயிற்று. கண்கொண்டு பார்க்கக்கூடாத காக்ஷியாயிருந்தது. இது கள்ளர் செய்த வேலை அல்ல. ஏனெனில் ஒன்ருவது களவுபோகவில்லை. நாய், பூனைகள் செய்ததுமல்ல. ஒன்ருவது பீறுண்ணவுமில்லை, கடிக்கப்பட்டிருக்கவுமில்லை. ஆ! அங்கேகிடந்த கற்கள் தங்கள் கதையை எனக்குச் சொல்லியிராவிட்டாலும், இது யார் செய்த வேலையென்று எனக்கு நன்ருய்த் தெரியும்.

ஜனங்கள் என்னிலே நம்பிக்கையும் என்னுடைய அடுத்த வீட்டுக்காரியாகிய உவின்றன் அம்மாளிலே அவநம்பிக்கையுமாயிருப்பதையிட்டு, அவளுக்கு என்மேலே மெத்த எரிச்சல். என்னிலே அவள் பகை சாதிக்கத் தருணம் பார்த்துக்கொண்டிருந்தது எனக்குத் தெரியும். அவள் அப்படியிருந்தாலும், என்னுடைய மணிகள் அவள் காதுகளில் பசும்பொன் மணிகளாய்த் தொனிக்கவில்லையென்பது நிச்சயம்.



உவின்றன் அம்மாளுடைய குறும்புத்தனமான பையன்கள் யோவான், லூக் என்பவர்கள் என்னுடைய கோழிகளைக் கல் எறிந்து கொன்ருர்கள் என்பதற்கும், தாயும் அதற்கு உதவிக்காரியாய் இருந்தாளென்பதற்கும் ஐயமேயில்லை. செத்துஞ்சாகிறதுமாய் நிலத்திலே கிடக்கிற அப்பிராணிகளை நான் பார்த்துக்கொண்டு நின்றபோது என்னுடைய இரத்தம் கொதித்தது. என்னுடைய பையன் ஓவென் வீட்டுக்குவந்து அந்தக் கொடிய காக்ஷியைப் பார்த்தவுடனே அவனுக்குக் கோபம் மூண்டது. நான் அவனைப் பிரயாசப்பட்டு தடுக்காதிருந்தால் அன்றைக்கு அந்த இரண்டு பையன்களுக்கும் பதில்கொடுத்திருப்பான். ஆனுல் நானும் என்னுடைய மகனும் பேசாமல் மவுனமாயிருந்தோம். இரண்டொருநாள் செல்ல என்னுடைய கோபந் தணிந்தது. கோபம் பைத்தியம்போல் வந்த அன்று, நான் ஒன்றும் பேசாமல் மவுனமாயிருந்ததை யிட்டுச் சந்தோஷப்பட்டேன். இரண்டொரு முறை, உவின்றன் அம்மாளை நான் வழியிலே சந்தித்தும் 'குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்' என்பதுபோல் எனக்குக் கூச்சப்பட்டு ஒதுங்கிக்கொண்டு போய்விட்டாள்.

(இன்னும் வரும்.)

## THE HISTORY OF ESTHER

## வீரசீலி எஸ்தர் என்பவளின் சரித்திரம்

(தொடர்ச்சி)

### எஸ்தரின் ஜெபம்

இஸ்ரவேலின் தேவனுகிய கர்த்தாவே, என் கர்த்தாவே நீர்மாத்திரம் எங்கள் இராஜாவாயிருக்கிறீர்; உதவிசெய்யும். உம்மையன்றி எனக்கு வேறு துணையில்லை, ஏனெனில் என் மோசம் என் கையில் இருக்கிறது. என் ஜாதியில், என் குடும்பத்தில், நான் சிறுவயதுமுதற் கேட்டிருக்கிறதாவது: 'ஆ! கர்த்தாவே! இஸ்ரவேலை எல்லா மனுஷ ஜாதியிலிருந்தும், எங்கள் முன்னோர்களிலிருந்து எங்கள் பிதாக்களையும், நீண்டகால சுதந்தரத்துக்கு எடுத்து வந்தீர். அவர்களுக்கு என்னென்ன வாக்கு அளித்தீரோ அவைகளை எல்லாம் கொடுத்தருளினீர். ஆனுல் நாங்களோ, உமக்கு விரோதமாகப் பாவம் செய்தோம். ஆகையால் எங்களைச் சத்துருக்களின் கையில் ஒப்புக்கொடுத்தீர். ஏனெனில், நாங்கள் அவர்கள் தேவனை வணங்கினேம். ஆ! கர்த்தாவே! நீர் நீதிபதி. நாங்கள் இவ்வளவு கொடு



மையான கஷ்டத்தில் இருக்கிறது அவர்களுக்கு ஒருபோதும் திருப்தி கொடுக்கிறதில்லை. அவர்களோ தங்கள் விக்கிரகங்களோடு சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். நீர் உம்முடைய வாயினால் ஏற்படுத்திய காரியத்தை அவர்கள் எடுத்துப்போட்டு உம்முடைய சுதந்தரத்தை அழிக்கிறார்கள். உம்மைத் துதிக்கிற வாயை அடக்கி உம்முடைய வீட்டின் மகிமையையும் உம்முடைய பீடத்தின் மகிமையையும் தணித்து விக்கிரகங்களை ஸ்தோத்தரிக்க அக்கியானிகளின் வாயைத் திறக்க சரிப்படுத்தி என்றைக்கும் அழிந்துபோகும் மாமிசத்தையுடைய இராஜாவைப் புகழுகிறார்கள். ஆ! கர்த்தாவே! அவர்களுக்கு உம்முடைய செங்கோலைக் கொடாதேயும். எங்கள் நிலைமையைப் பார்த்து அவர்களைச் சிரிக்கவிடாதேயும். ஆனால் அவர்கள் வழிகளை அவர்கள் மேலேயே திருப்பும். எங்களுக்கு விரோதமாய்த் தொடங்கின இந்தக் காரியத்தை நிறைவேற்ற அவனை ஒரு முன்மாதிரியாக வைக்காதேயும். ஆ! கர்த்தாவே! எங்கள் துன்பகாலத்தில் உம்மை எங்களுக்கு வெளிப்படுத்த நினையும். எனக்கு தைரியத்தைக் கொடும். எல்லா வல்லமையின் தேவனும் எல்லா ஜாதியின் தேவனுமாகிய கர்த்தாவே! சிங்கத்திற்கு முன்னால் சாதுரியமான பேச்சை என் வாயில் வையும். எங்களுக்கு விரோதமாய்ச் சண்டைசெய்கிற அவனைப் பகைக்க அவன் இருதயத்தைத் திருப்பும். அவனுக்கும் அவனைப்போல் மனதுள்ள



வர்களுக்கும் ஒரு முடிவு உண்டாவதாக. உம்முடைய கையினால் எங்களை மீட்டு இரட்சியும். உம்மையன்றி வேறு துணையில்லாத திக்கற்ற எனக்கு உதவிசெய்யும். உம்முடைய சகாயம் எனக்குத் தேவை; உம்முடைய கிருபை என் வாஞ்சை. ஆ! கர்த்தாவே! உமக்கு எல்லாம் தெரியும். நான் அநீதமான மகிமையைப் பகைக்கிறேன் என்றும் உமக்குத் தெரியும். இந்துக்களையும் சுன்னத்தில்லாதவர்களையும் தள்ளுகிறேன். என்னுடைய தேவை உமக்குத் தெரியும். என் தலையின்மீது சுமத்தப்பட்ட இந்த பெரிய வேலையின் அடையாளத்தை வெறுக்கிறேன். அதை நான் தனித்திருக்கும்போது தரித்துக்கொள்ளுகிறதில்லை. உம்முடைய அடியாள் ஆமான் மேஜையில் சாப்பிட்டவளுமல்ல, இராஜாவின் விருந்தை நான் மதித்தவளுமல்ல, குடிபானங்களை குடித்தவளுமல்ல; ஆபிரகாமின் தேவனாகிய கர்த்தாவே! உம்மைத் தவிர வேறொன்றினாலும் நான் இங்கு கொண்டுவரப்பட்டவளல்ல. இங்கு வந்ததுமுதல் உமது அடியாளாகிய எனக்கு சந்தோஷம் தோன்றினதில்லை. சர்வத்திற்கும் வல்ல தேவனே! கைவிடப்பட்டவர்களின் சத்தத்தைக் கேளும். என்னுடைய பயத்திலிருந்தும் துஷ்டர்களுடைய கையிலிருந்தும் விடுவித்தருளும்.'

எஸ்தர் இவ்வித வார்த்தைகளால் ஜெபித்ததாக எஸ்தரின் புஸ்தகத்தை நன்றாய் வாசித்தாராய்ந்த ஒரு சாஸ்திரி எழுதுகிறார். இங்கு இந்த ஜெபத்தை வாசிக்கிற நாம் எஸ்தரிடத்தில் என்ன கவனிக்கிறோம்? ஜெபம் பண்ணுவதிலும், எவ்விதமாய் செய்யவேண்டுமென்பதிலும், ஜெபத்தில் என்னென்ன கேட்கவேண்டுமென்பதிலும் சிறுவயது முதல் பயிர்ச்சி அடைந்திருக்கிறாள் என்பதே.

இவ்வித ஜெபப்பயிற்சி நம்முடைய தேசத்துப் பெண்களில் எத்தனைபேரிடத்தில் காணலாம்? ஐயோ! பரிதாபம்! அநேக பெண்களும் விசேஷமாய்க் கல்விப்பயிற்சியடைந்த பெண்களும் ஜெபம் பண்ணுவதில் அதிக சோம்பலுள்ளவர்களாயிருந்து சாக்குபோக்கு சொல்லுகிறார்கள். இயேசுநாதர்தாமே ஜெபம்பண்ணுங்கள் என்று நமக்குச் சொல்லியிருக்கிறார். நீங்கள் என் நாமத்தில் பிதாவை என்ன கேட்டாலும் பெற்றுக்கொள்வீர்கள் என்று சொல்லியிருக்கிறார். கேளுங்கள் அப்போது கொடுக்கப்படும் என்றும், நெருக்கப்படுகிற நாளிலே நம்மை நோக்கிக் கூப்பிடு என்றும் கற்பித்திருக்கிறார். இதிலும் அதிகமாக தாமே முன்மாதிரியாக ஜெபித்து, ஜெபத்தில் கேட்கவேண்டிய காரியங்களையும் நமக்கு தெளிவாய்க் கற்பித்திருக்கிறார். இப்படியிருந்தும் எத்தனையோ கிறிஸ்தவர்கள் வீட்டில் ஜெபமே இல்லை. ஜெபம் இல்லாத வீடு அபம் அல்லவா? ஜெபம்

ஆண்டவரோடு பேசும் பேச்சு. ஜெபமே எவ்வளவு பலயீனரையும் பலப்படுத்தும் பரம அவிழ்தம். ஜெபமானது பரலோகத்தின் பண்டகசாலையைத் திறக்கும் திறவுகோலாய் இருக்கிறது.

எஸ்தர் மூன்றுநாளும் ஜெபம் பண்ணுவதில் இடைவிடாமல் தரித்திருந்தாள். அவள் வல்லமையாய் ஜெபித்ததினால் ஜெயம்பெற்றாள். வல்லமையாய் ஜெபிக்கிறவர்கள் வல்லமையும் ஆச்சரியமுமான ஜெயத்தையும் அடைவார்கள். எஸ்தருக்கு தேவனிடத்தில் இருந்த நம்பிக்கையினாலேயே மனுஷரை மேற்கொள்ளும் வல்லமை கொடுக்கப்பட்டது. எஸ்தர் தன் தனித்த நேரங்களில் தேவனோடு சஞ்சரித்ததினால் அவரோடு ஜெபத்தின்மூலமாய் ஐக்கியப்பட்டிருந்தாள். எஸ்தர் விசுவாசத்தோடு ஜெபஞ்செய்து தன் பாவங்களை அறிக்கையிட்டதினால் ஆவியின் புதுபலன் அடைந்தாள். ஜெபத்தின் பலனாக கர்த்தர் அவள் வேண்டினபடியே அவளுக்கு இராஜாவின் கண்களில் தயவு கிடைக்கப்பண்ணினார்.

எஸ்தரின் உத்தரவுபடி மொர்தெகாயும் செய்தான் என்று பார்த்தோம். யூதர்கள் பெரிய ஆபத்து உண்டாகும் காலத்தில் அல்லது உதவி ஒத்தாசையெல்லாம் அற்றுப்போய் நம்பிக்கை ஒன்றும் இல்லாதிருக்கிற காலத்தில் தேவனை நோக்கிக் கூப்பிட தூண்டப்பட்டார்கள். மொர்தெகாய் எல்லாரையும் வருந்தியழைத்திராவிட்டால் ஒருபோதும் ஜெபம் செய்திருக்கமாட்டார்கள் என்று நினைக்கலாம். இப்படியே கிறிஸ்தவர்களில் அநேகர் செய்கிறார்கள். சர்வலோகத்தின் ஆண்டவர் ஜெபத்தின்மூலமாய்த் தம்மண்டை அழைக்கிறார். 'வா, பாவி! நீ ஆரானாலும் சரி, வா. உன் பொல்லாத வழியைவிட்டு குனிந்துசேர்ந்து, யாவரையும் தள்ளாத இரட்சகரைக் கிட்டு' என்று ஒரு பக்தன் சொல்லுகிறார். இப்படி அவர் நம்மைத் தம்மண்டை ஜெபத்தின்மூலமாய் அழைக்கப் பிரியமுள்ளவரும் கட்டளை கொடுத்தவருமாய் இருக்கிறார். ஆகையால் நாம் விசுவாசத்தோடு அவருடைய நாமத்தில் எதைக்கேட்டாலும் அடைவோம் என்கிற நிச்சயத்தோடு கேட்கக்கடவோம்.

எஸ்தரின் ஜெப வார்த்தைகளை வாசிக்கிற நாம், பெண்களுடைய இருதயத்தைப்பற்றியும் எஸ்தருக்கு வந்த மேன்மை அவளுக்கு எவ்வளவு துன்பத்தை உண்டுபண்ணிற்று என்றும் அறிந்துகொள்ளலாம். தன்னுடைய அதாவது அவளுடைய சாமர்த்தியமாவது அல்லது இராஜா தன்னை எல்லாரையும்விட அதிகமாய் நேசித்தார் என்பதாவது அவளுக்குப் போதுமான தைரியத்தையும் திடனையும் கொடுக்கவில்லை. சிறுவயதுமுதல் இஸ்ரவேலின் தேவனை நோக்கிப்பார்க்க பழக்கப்பட்டிருந்ததினால் அவரிடத்தில் உதவியையும் ஆறுதலையும் சந்



தோஷத்தையும் அடைந்தாள். தேவனோடு சம்பாஷித்தபிறகு அவளுடைய நடுக்கமுற்ற இருதயம் திடப்பட்டது. ஆனால், அநேகம் பெண்கள் எஸ்தரைப்போல் மூன்றுநாள் காத்திருப்பது அதிக கஷ்டமாயிருக்கும். அவர்கள் உடனே இராஜாவினிடம் போயிருந்திருப்பார்கள்; அல்லது ஒருபோதும் போயிருக்கமாட்டார்கள். ஆனால் புறம்பான பிரகாரம் நாம் அப்பேர்ப்பட்ட பெண்களைப் பார்க்கும்போது அவர்களைக் குறித்து என்ன சொல்லுவோம்? மெய்யாகவே இவர்கள் எஸ்தரைவிட அதிக தைரியமுள்ளவர்களாயும், மனோபலனுடையவர்களாயுமிருக்கிறார்கள் என்போம். ஆனால் எஸ்தரிடத்தில் கண்டுபிடிக்கப்படும் பலயீனமான குணமே அவளுடைய சரித்திரத்தில் அதிக வியப்பைக் கொடுக்கிறது. எஸ்தருடைய எண்ணங்களும் ஸ்திரீ ஜாதிக்குரியது. அவளுடைய பொறுமை, சுயநம்பிக்கையை விட்டு தேவனிடத்தில் பலனைத் தேடினது. தன்னுடைய சந்தேகங்களையும் அவநம்பிக்கையையும் மேற்கொண்டு, அவள் தன் ஜனத்திற்குச் செய்த காரியம் மூன்றுநாளாய் இடைவிடாமல் செய்த ஜெபத்தின் பலனேயன்றி அவளின் முக அழகும் புத்தியுமல்ல. இக்காரியங்களினால் எஸ்தரிடத்தில் நமக்கு அன்பும் ஆச்சரியமும் உண்டாகின்றன.

இவைகளுக்குப் பிறகு எஸ்தர், தன்னை இராஜ உடைகளால் அலங்கரித்தாள். ஆண்டவர் அவளுக்கு இலவசமாய் அளித்த அழகும் அவள் இராஜ உடையும் ஒன்றோடொன்று பொருந்தி ஜோதிமயமாய் இராஜன் சமூகம் சென்றாள். இராஜன்முன் நிற்கையில் தன் ஜெபமும் தன் நம்பிக்கையும் உண்டுபண்ணினது இன்னது என்பதையறியாதவளாய் நின்றாலும், அழைக்கப்படாதபோது இராஜசமூகத்தில் வந்து நிற்பது கீழ்ப்படியாமைக்குச் சரியாயிருந்தாலும் கடவுளை நம்பினவளாய் நிற்கிறாள். ஆண்டவர் அவளோடு இருந்தபடியால் அவள் சட்டத்துக்கு மாறாக ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கடையாளமாக இராஜாவின் செங்கோலைப் பெற்றாள். மேலும் அவள் அச்செங்கோலருகே சென்று தான் ஒரு விண்ணப்பம் செய்ய மனதாயிருப்பதாக செங்கோலைத் தொடுவதினால் தெரிவித்தாள். அவள் செய்த ஜெபம் அவளுக்கு தைரியம் கொடுத்திராவிட்டால் இராஜாவினிடம் ஒருபோதும் போய் நின்றிருக்கமாட்டாள். அவளுடைய அழகும் நடுக்கமும் இராஜாவை அவளிடத்தில் பட்சம் காண்பிக்கும்படி ஏவின. அவள் நடுக்கமுற்ற இருதயத்தைத் திடப்படுத்த பட்சமான வார்த்தைகளில் பேசினான். இராஜ்யத்தில் பாதி கேட்டாலும் தருவேன் என்று அரசன் சொன்னான். எஸ்தர், இவ்விதமான சந்தோஷத்தையும் ஆறுதலையும் கொடுத்த அரசனின் பதிலினால், தனக்கு வந்த மோசம் ஒருவாறு நீங்கிற்று என்று எண்ணி பெருமைகொண்டு உடனே தான்

வந்த நோக்கத்தை வெளியிட்டவளல்ல. ஏன்? அப்படி செய்வது இராஜாவின் அச்சமயத்து நற்சுபாவத்தை மாற்றிவிடக்கூடுமென்று நினைத்து தான் வந்த நோக்கத்தைத் தெரிவியாமல் என்ன சொல்லுகிறாள் என்றால், இராஜாவும் ஆமானும் தான் ஆயத்தம் செய்திருக்கும் விருந்துக்கு வரவேண்டுமென்று மாத்திரம் வேண்டினாள். எஸ்தர் தன் அழகினால் வீண் பெருமைகொண்டு அதினால் தன் தெய்வ பக்தியை இழக்கவில்லை. ஆனால் நம்மில் அநேகரோ தங்கள் அழகை பெருமைக்கு ஓர் ஆபரணமாகப் பூண்டு மற்றவர்களையும் தங்கள் சொந்த கணவர்களையும் கூட வேளாவேளைகளில் மதியாமல் கிறிஸ்தவர்கள் என்று பெயர் வைத்துக்கொண்டு தங்கள் தெய்வ பக்தியை வீணாய் இழந்துபோகிறார்கள். இது எத்தனை பெரிய பாவம்! எஜமானுடைய சித்தத்தை யறிந்தும் அதின்படி செய்யாதவர்கள் அநேக அடிகளுக்குட்படுவார்கள் என்று வேதம் சொல்லுகிறது. இப்படிப்பட்டவர்களுக்கு எஸ்தர் ஒரு நல்ல முன்மாதிரியாய் இருக்கிறாள்.

(இன்னும் வரும்.)

## WAR NOTES

## யுத்தக் குறிப்புகள்

Britain's reply to Germany. ஆங்கிலேயரும் அவர்களுடைய கூட்டாளிகளும் அமெரிக்கா ஐக்கியமாகாணங்களின் பிரதிநிதியாகிய உவில்ஸன் என்பவர் யுத்தத்தில் பாத்தியப்பட்டிருக்கிற ஜனங்களின் சமாதானத்தைக் கோரி அனுப்பிய பத்திரத்திற்கு ஆங்கிலேயரும் அவர்களுடைய கூட்டாளிகளும் பதில் அனுப்பியபிறகு, ஸ்ரீமான் பேல்பர் அமெரிக்கா துரைத்தனத்தாருக்கு இன்னமொரு விளம்பரம் அனுப்பினார். பிரதிநிதி உவில்ஸன் சீக்கிரமாய் நீடியசமாதானம் உண்டாகவேண்டுமென்று கோருகிறதுபோலவே இவரது கோரிக்கையும். ஆனால் சமாதானம் நீடித்திருப்பதற்கு அதின் தன்மையே விசேஷமென்று காட்டுகிறார். மேலும் ஜர்மானியர் உடன்படிக்கைகளை மதிக்கிறவர்களாகக் காணோம். பெல்ஜியம் இதற்கொரு சிறந்த திருஷ்டாந்தம். அதில் நடக்கிற கொடுங்கோன்மையும், குடிகளைச் சிறையாகக் கொண்டுபோகிறதையும், மிச்சமான போர்களை கடினமாய் நடத்துகிற மாதிரியையும் பார்க்கும்போது, யுத்தத்தில் சேராத பொது தேசத்தாரைப் பயமுறுத்த வேண்டுமென்பதே அவர்கள் நோக்கமெனத் தோன்றுகிறது. அவர்களுடைய சைனியங்களைப்போலவே ஜர்மானியர், ஆஸ்திரியருடைய கொடூர்தன்மையைக் காட்டுகின்றன. சத்துரு வெற்றியடைந்தால், அவர்கள் தரையிலும் ஜலத்திலும் நடப்



பிக்கக்கூடிய பயங்கர கிருத்தியங்களே அதற்குக் காரணமாகும். ஆங்கிலேயராதியோர் சத்துருவை முறியடித்து ஜெயித்தாலொழிய சமாதானந்தேடுவது விருதா. நிலையான சமாதானத்திற்கு மூன்று நிபந்தனைகள் அவசியம்.

முதலாவது, தேசாதேசங்களுக்குள்ள சம்பந்தங்கள் விஷயமாய் உண்டாயிருக்கிற அதிருப்தி நீங்கவேண்டும்.

இரண்டாவது, தேசங்களைக் கட்டிக்கொள்ள வேண்டுமென்றும், எவ்வித கோணலான முறையினாலும் ஜெயமடைவதே சிரேஷ்டமென்றும் ஜர்மானிய ஆஸ்திரிய துரைத்தனத்தார் கொண்டிருக்கும் நோக்கங்களை அவர்களுடைய குடிகளே நிராகரிக்கவேண்டும்.

மூன்றாவது, தேசாதேசங்களைக் கட்டும் பிரமாணங்களையும் உடன்படிக்கைகளையும் காபந்துசெய்யவும், இனிமேல் ஒரு தேசமும் இன்னொரு தேசத்தின்மேல் வைரஞ்சாதிக்க இடமில்லாமற்போகவும் தகுதியான திட்டங்கள் சகல தேசத்தாரும் ஏற்படுத்தவேண்டும்.

இவ்வித நிபந்தனைகளை நிறைவேற்றவே, மகாபிரித்தானியர் முன்னொரு காலமுமில்லாத திரள் திரவியத்தையும் உதிரத்தையுஞ் செலவிட ஆயத்தமாயிருக்கிறது. வரப்போகிற உலகத்தின் சமாதானமும், நாகரீகமும், விருத்தியும், ஆங்கிலேயராதியோர் அடையப்போகிற வெற்றியின்மேல் சார்ந்திருக்கிறது என்றும் ஸ்ரீமான் பேல்பர் தெளிவாய்க் காட்டுகிறார்.

Enemy's Food Problem. ஜர்மனியில் டிக்கட்டுகள் கொடுத்து போஜனபதார்த்தங்கள் வாங்கவேண்டும். ஒவ்வொரு ஆளுக்கும் வாரத்துக்குக் கால்சேர் மாமிசமும், கொஞ்சம் வெண்ணெயும், இரண்டு வாரத்துக்கு ஒரு முட்டையும் மாத்திரம் கிடைக்கும். சிலவேளைகளில் இதுவும் கிடைக்கிறதில்லை.

ஆஸ்திரியாவில் இதிலுங் கஷ்டம். வியன்னா என்கிற பட்டணத்தில் ஐந்து தினங்கள் ரொட்டியே கிடைக்கவில்லையென்று ஜனுவரி 26-ந் தேதி வந்த தந்தியினால் அறிகிறோம்.

Greece Saved. கிரேக்கர் ஆங்கிலேயராதியோர் கேட்ட நிபந்தனைக்குள்ளடங்குவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதற்கறிகுறியாக சென்றமாதம் 29-ந் தேதி ஐக்கியத்தைச் சேர்ந்தவர்களின் கொடிகளுக்குப் பகிரங்கமாய் மரியாதைசெய்தார்கள். கிரேக்கர் வடக்கே இருந்த சைனியங்களை தெற்கே அனுப்பிவிட்டதோடு அநேக சைனியங்களை நிராயுதபாணிகளாக்கினார்கள்.

East African Campaign. ஆப்பிரிக்காவின் கிழக்கில் ஆங்கிலேய சைனியங்களை நடத்திவந்த ஸ்மட்ஸ் தளகர்த்தன் இங்கிலாந்

தில் வேலை பார்க்கவும் தம்முடைய வேலையை வேறொருவருக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார். சத்துருக்கள் சேனை கொஞ்சம் கொஞ்சமாகப் பிடிக்கப்பட்டிருக்கிறது. சீக்கிரத்தில் ஜர்மானியர் பெலம் முறிந்து முற்றிலும் பிடிக்கப்பட்டுப்போவார்களெனத் தெரிகிறது.

## THE WOMAN'S CAUSE IS MAN'S

FROM 'ATTRIBUTES OF WOMAN'

## ஐயர்க்கு வந்ததே ஆச்சிக்கானது.

சாலேமின் ராஜா சங்கையின் ராஜா என்ற இராகம்

கண்ணிகள்

மோகனம்

ஆதிதாளம்

1. ஐயர்க்கு வந்ததே ஆச்சிக்கென் றுகுதென்
   மனதில் [ஐயா]—உயர்
   பட்டமும் பட்டினி யுற்றது மங்கே
   அந்த ஒரே சொல்லில்.
2. கட்டியே காஞ் சேவித்தாலு மதி
   காரஞ் சென்றாலும்—இவர்
   பக்தி விளங்கலோ? புத்தி மழுங்கலோ?
   பார்! அதங் கொன்றே.
3. சின்னத் தனமும் சிருப்பாணிக் கோலமும்
   சீரழிப்புமே—அம்மன்
   சிந்தையி லிருந்தால், செம்ம லெங்கிருந்து
   தோன்று வான்? பெண்ணே!
4. பெண்ணீர்மை யென்பதைப் பேதக மின்றிப்
   பிடித்திருப்பளேல்!—இவள்
   எண்ண மெல்லா மாசுக் கமைச்சென
   ஆகுதோர் சொல்லில்.
5. இளமை பூண்ட ஆணென் றிவளை
   யிகழ்ந்துரைக் காயே ஐயா—மனம்
   பழமை யாக *எதிரி ஜெயிக்க
   பார்! இதிடங் கை.

* வலதுகையால் சத்துருவுக்கு அடி கொடுக்குமுன், இடதுகையாலவனை பலமாய்ப் பிடித்து நிறுத்திக்கொள்வது இதில் குறிப்பிடப்பட்டதைக் காணவும்.



6. ஆண்மை பூண்டு பெண்டீ ரெல்லாம்
   ஆ! எழுந்தாலோ? ஐயோ!—அன்பு
   தானு மிராது தயாளம் பறந்திடும்
   [தாரணி யெங்கே?]
7. பொன்னுக்குப் பொன்னாய் வெள்ளிக்கு வெள்ளியாய்ப்
   பொருந்தினதல்ல ஐயா—மற்று
   பொன்னுக்கு மாணிக்கம் போலொரு தட்டாய்
   பொருத்தினா னீசன்.
8. காலாந்த மிவர் காந்தியி லொன்றாய்க்
   களிக்கவே சால—ஞான
   சீராண்மை தன்மை தேவியில் விளங்க
   ஸ்திரி, மன்னு மாவார்.
9. பாச மிகுத்தையர் பன்னாற் றெளிவால்
   ப்ரபை யுற்றாலும்—சற்றும்
   ரோசங் குறையா தலகிற் றவஜ
   ராஜனும் மாவார்.
10. தயாளத்தி லம்மை தான் பெருகத்
    தன்னரும் புதல்வரில்—புலவர்
    ஞானத்திலே மதி கியானத்திலே சுதி
    கண்டது போற் றேரும்.
11. ஐயருக் காச்சி என்ன வேண்டு
    மதற்கொரு வார்த்தை—கடைசி
    கியானன் னிறைந்த வாய் மொழிந்த
    ஞானன் னிறைந்த சொல்.

U. T.

## RIDDLES

## விடுகதைகள்

1. நிறத்தில் பச்சை, ஆனால் மாங்காயல்ல.
   முட்களை யுடையது, ஆனால் பிலாக்காயல்ல.
   உடைத்தால் வெள்ளைநிறம், ஆனால் தேங்காயல்ல.
   உருக்கினால் நெய்யாகும், ஆனால் வெண்ணெய் அல்ல.
   அதென்ன?

2. வெள்ளிக்குள்ளன் கண்ணில்
இரு புறமும், ஒரு மூடியும், அரை மூடியும்.

அதென்ன ?

3. வானத்தை அண்ணார்ந்து பார்க்கிறது.
தன் பசுமையான இறகுகளை விரிக்கிறது.
இனிமையான முட்டைகளை யிடுகிறது.

அதென்ன ?

---

ஜனவரி மாசத்தில் கொடுத்த விடுகதைகளுக்கு விடைகள்

1. ஒருபடியும், அரைபடியும்.
2. செருப்பு.
3. கொள் அல்லது காணம்.

## LESSONS FOR FAMILY WORSHIP

# வேத வாசிப்பு ஒழுங்கு

1917-௵ மார்ச்சு ௴

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வி. | மாற். | 1. 1—13 | 11 | ஞா. | மாற். | 5. 1—20 | 21 | பு. | மாற். | 8. 14—26 |
| 2 | வெ. | ,, | 1. 14—28 | 12 | தி. | ,, | 5. 21—34 | 22 | வி. | ,, | 8. 27—38 |
| 3 | ச. | ,, | 1. 29—45 | 13 | செ. | ,, | 5. 35—43 | 23 | வெ. | ,, | 9. 1—13 |
| 4 | ஞா. | ,, | 2. 1—12 | 14 | பு. | ,, | 6. 1—13 | 24 | ச. | ,, | 9. 14—32 |
| 5 | தி. | ,, | 2. 13—28 | 15 | வி. | ,, | 6. 14—29 | 25 | ஞா. | ,, | 10. 13—27 |
| 6 | செ. | ,, | 3. 1—19 | 16 | வெ. | ,, | 6. 30—44 | 26 | தி. | ,, | 10. 28—40 |
| 7 | பு. | ,, | 3. 20—35 | 17 | ச. | ,, | 6. 45—56 | 27 | செ. | ,, | 10. 41—52 |
| 8 | வி. | ,, | 4. 1—12 | 18 | ஞா. | ,, | 7. 1—16 | 28 | பு. | ,, | 11. 1—18 |
| 9 | வெ. | ,, | 4. 13—29 | 19 | தி. | ,, | 7. 24—37 | 29 | வி. | ,, | 11. 19—33 |
| 10 | ச. | ,, | 4. 30—41 | 20 | செ. | ,, | 8. 1—13 | 31 | ச. | ,, | 12. 13—27 |

C. L. S. PRESS, MADRAS—1917

# மாதர் போதினி

No. 232 ஏப்பிரல் 1917 No. 4

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 APR 1917
MADRAS

## EDITOR'S NOTES

## பத்திராதிபர் நானாவிதக் குறிப்புகள்

The Submarine Problem. ஆங்கிலேயாதியோர் தங்கள் போர்க்கலங்களைக்கொண்டு சத்துருக்கள் தேயங்களின் வர்த்தகபோக்குவரத்தை நாளுக்குநாள் ஒடுக்கிக்கொண்டு வருவதினால், சத்துருக்கள் பழிவாங்குவதற்கென்று முழுகு கலங்களை அனுப்பி கண்ணுக்குத் தென்படுகிற கப்பல்களையெல்லாம் சத்துரு மித்துரு என்கிற தாக்ஷிணியமில்லாமலும், பிரயாணிகளை ஆண் பெண் என்றும் பாராமலும் அமிழ்த்தி நாசஞ்செய்யத் தீர்மானித்திருக்கிறார்கள்.

சத்துருக்களின் முழுகு போர்க்கலங்களைத் தடுத்து நிர்மூலஞ் செய்ய பிரிட்டிஷ் இராஜாங்கத்தார் சகல பிரயத்தனமுஞ் செய்துவருகிறார்கள்; அதற்கென்றே ஒரு பிரத்தியேகமான கூட்டமும் ஸ்தாபனமாயிருக்கிறது. பெப்ருவரி மாதம் முதல் பதினெட்டு தினத்தில், 47 பிரிட்டிஷ் மரக்கலங்களை அமிழ்த்தியிருக்கிறார்கள். ஆனால் அதே நாட்களில் இதரதேசங்களிலிருந்து 6,076 மரக்கலங்கள் பிரிட்டிஷ் துறைமுகங்களுக்கு வந்தும் 5,873 அத்துறைமுகங்களிலிருந்து வெளியே சென்றுமிருக்கின்றன. இதோடு சத்துருக்களின் கப்பல் போக்குவரத்தை ஒத்துப்பார்க்கும்போது அவர்களுடைய மரக்கலங்களெல்லாம் துறைமுகங்களில் அடைபட்டு துறைமுகப் பட்டணங்களுஞ் செயலற்றிருக்கின்றன. இவைகளை கவனிக்கும்போது, பிரிட்டிஷ் இராஜாங்கத்தார் ஜெர்மானியருடைய முழுகு போர்க்கலங்களை நிர்மூலமாக்கச் செய்யும் பிரயத்தனம் எவ்வளவென்று காணப்படும்.

United States of America and Germany. சத்துருக்கள் சண்டையிற் சம்பந்தப்படாத தேசத்தாரின் கப்பற்களை முழுகடிப்பத

னால் உண்டான வாக்குவாதத்தினாலும், தங்களுடைய தேசத்துப் பிரஜைகளுக்கு உண்டாகும் ஜீவநஷ்டத்தையும் வியாபார நஷ்டத்தையும் எண்ணி அமெரிக்கா ஐக்கியமாகாணத்தாரும், ஜெர்மானியர் ஒருவரோடு ஒருவர் கலகப்பட்டு இராஜாங்க சம்பந்தத்தை முறித்துத் தங்கள் தங்கள் தேசங்களின் பிரதிநிதிகளை வரவழைத்துக்கொண்டிருக்கிறார்கள். மேலும் ஐக்கியமாகாணத்து மஹாஜன சபையார் தங்கள் தேசத்து ஜனங்களின் உயிரையும் வர்த்தகத்தையும் காக்க இராஜ்ஜியத்தின் சேனைகளை உபயோகப்படுத்தத் தங்கள் அதிபதிக்கு உரிமை கொடுத்திருக்கிறார்கள். ஆகவே அமெரிக்கா ஐக்கியமாகாணத்தாரும் யுத்த ஆயத்தஞ் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று சொல்லத்தகும்.

Dutch Neutrality Violated. யுத்தத்தில் எவ்விதத்திலும் சம்பந்தப்படாத சிறியதேசத்தாராகிய டச்சுக்காரருடைய மரக்கலங்களில் சிலவற்றை ஜெர்மானியர் யாதொரு நிமித்தமுமின்றி அமிழ்த்தியிருக்கிறார்கள். சண்டையிற் சேராத எந்தத்தேசத்துக்கும் இவ்வளவு அநியாயம் நடந்ததில்லை. டச்சு துரைத்தனத்தார் இவ்வித அக்கிரமச் செய்கையை நிவிர்த்திக்க முறைப்பாடு செய்கிறார்கள்.

Turkish Horrors. துருக்கிய துரைத்தனத்தார் தங்களுடைய ஆளுகைக்குட்பட்ட சீரியரை அகோரவதை செய்கிறார்கள். சென்ற வருடம் நவம்பர் மாதம் ஆரம்பம்வரை பஞ்சத்தினாலும் வியாதியினாலும் மரித்தவர்கள் 1,70,000 பேர். இதோடு மாரிகாலத்தில், மழையினாலும் குளிரினாலும் மாண்டவர்கள் 30,000 பேர். இது மாத்திரமா? சீரியரை வதைத்துக் கொலைசெய்யும்படி ஏற்படுத்தப்பட்ட பக்கிரி பாஷா என்பவனுக்குத் துரைத்தனத்தார் அவன் செய்த பாதகத்தொழிலை மெச்சி தங்கபதக்கம் அளித்திருக்கிறார்களென்று நாம் கேள்விப்பட்டு அழாமலிருப்பதெப்படி? இக்கொடியோன் சீரியருக்குள் கொஞ்சம் சொத்தும் மரியாதையுமுள்ள பெரியமனுஷர் வீடுகளையெல்லாம் தாக்கிச் சூறையாடி, பெரியவர்களைச் சுட்டுக் கொன்றும் மற்றவர்களை அகோரவதைக்கும் பாதகங்களுக்கும் உட்படுத்தியுமிருக்கிறான். துருக்கியர் செய்யும் இவ்வக்கிரமக்கிரியைகளைப்பற்றி அவரது கூட்டாளிகளான ஜெர்மானியர் ஆஸ்திரியர் முதலாயினோர் பாராமுகமாயிருப்பது என்னவென்று சொல்ல!

Turkish defeat on the Tigris. சமீபகாலத்தில் டைகிரிஸ் நதியின்மேல் துருக்கியருக்கும் ஆங்கிலேயருக்கும் கடும்போர் விளைந்தது. இதில் ஆங்கிலேய சைனியங்கள் சத்துருக்களை முறியடித்து பூரண வெற்றி யடைந்தார்கள். துருக்கியர் நதியின் இடதுகரைக்குப் பின்வாங்கி ஓடிப்போனார்கள். சத்துருக்களில் 89 இராணுவ உத்தியோகஸ்



தர்களும் 1,906 சேவகரும் சிறைபட்டதோடு ஐந்து சூத்திர பீரங்கிகளும், 2,500 துப்பாக்கிகளும், மிச்சமான குண்டுமருந்துகளும் வெற்றிவீரர் கைவசமாயின. இந்தச் சண்டையில் ஆங்கிலேய இராணுவங்கள் அடைந்த வெற்றியை மெச்சி நமது சக்கிரவர்த்தியவர்கள் அவர்களுக்குச் சந்தோஷசெய்தி அனுப்பியிருக்கிறார்.

## A WORD TO WOMEN

## மாதர்க்கோர் வார்த்தை

நமது நெஞ்சக்கூட்டுக்குள் இரத்தாசயம், நுரையீரல்கள் என்னும் அதிசயமான யந்திரங்கள் இருக்கின்றன; இவைகள் தத்தம் தொழிலைச் செய்யாவிட்டால் நமக்கு மரணம் உடனே சம்பவிக்கும். ஆதலால் இவைகள் நமது உயிர்நிலைகள் என்று சொல்லப்படுகின்றன. இவைகள் தங்கள் தொழிலைச் செய்யவேண்டுமானால் ஆகாயம், ஜலம், போஜனம் என்னும் வேறு மூன்று பொருட்களும் தேவை. இவைகளின்றியும் நாம் உயிருடன் இருக்கமுடியாது. ஆதலால் நாம் சுவாசிக்கும் ஆகாயமும், பருகும் ஜலமும், உண்ணும் போஜனமும் ஜீவாதார வஸ்துக்கள் என்றும், ஜீவனுக்கு இன்றியமையாப் பொருட்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. இவைகளில் ஆகாயமே முக்கியமானது. ஏனென்றால் ஜலமும் போஜனமுமின்றி நாம் சிலநாட்கள் பிழைத்திருக்கலாம்; ஆனால் ஆகாயமின்றிச் சில நிமிஷங்கள்கூட நாம் உயிரோடிருக்க முடியாது. மூக்குத் துவாரங்களையும் வாயையும் இறுக மூடிக்கொள்வீர்களானால் இதன் உண்மை விளங்கும்.

ஆகாயத்தை நாம் காணக்கூடாதென்றாலும் அதை உணர்ந்தறியலாம். விசிறியால் நம்மை விசிறிக்கொள்ளும்போது ஆகாயம் நம்மை அடிப்பதை உணருகிறோம்; ஆகாயம் வீசி அடிக்கும்போது அதைக் காற்று என்கிற பெயரால் அழைக்கிறோம். இவ்வாறே கடவுளை நாம் பார்க்கக்கூடாதாயினும் அவருடைய திருச்செயல்களைக் கண்டு கடவுள் இருக்கிறார் என்று அறிந்துகொள்ளுகிறோம். ஆகாயம் ஒரு பொருள் என்பதையும், அது நமது வீட்டையும், சட்டி பெட்டி புட்டி முதலிய சகல சாமான்களையும், அவைகள் வேறு பொருட்களால் நிறைந்திராதபோது நிரப்பிக்கொண்டிருக்கிறதென்பதையும் அறியவேண்டுமானால், வெறும் பான பாத்திரத்தை ஜலத்தின்மேலாகக் கவிழ்த்து அமுக்கிப் பார்ப்பதினாலும், வெறும் புட்டி

யின் வாயில் குவிகுழல் (Funnel) வைத்து, சுற்றிலும் மெழுகினால் அடைத்து, குவிகுழல் வழியாய் ஜலம்விட்டுப் பரீட்சிப்பதினாலும் எளிதில் கண்டுகொள்ளலாம்.

ஆகாயம் பஞ்சபூதங்களிலொன்று என்று சாதாரணமாய்ச் சொல்லப்பட்டபோதிலும், அது தனிப்பொருள் அல்ல; பிராணவாயு, உப்புவாயு, கரியமலவாயு, நீராவி முதலிய பொருட்களாலாகிய கலப்பு வஸ்து. ஆகாயத்தின் மிகுதியான பாகம் பிராணவாயுவாலும் உப்புவாயுவாலும் உண்டாயிருப்பதால், ஆகாயம் இவ்விரண்டு வாயுக்களின் சேர்க்கையாலானது என்று பொதுவாய்ச் சொல்லுகிறோம். ஆகாயம் பூமியெங்கும் நாற்பத்தைந்து மைல் உயரம் வியாபித்திருக்கிறபடியால் எந்தக் காலத்திலாவது ஆகாயப் பஞ்சம் உண்டானதில்லை. அதற்கு நிறையும், விரியுந்தன்மையும், பாவுந்தன்மையும் உண்டு. அது சமுத்திரமட்டமுள்ள இடங்களில் ஒவ்வொரு சதுர அங்குலப்பரப்பில் 15 பவுண் நிறையுள்ளது. அது ஓயாமல் அசைந்து, பூமியெங்கும் பறந்துகொண்டே இருக்கிறது. அது செல்லும் விரைவுக்கும் மாதிரிக்கும் தக்கதாக அதற்குக் காற்று, சூறாவளி, பிரசண்டமாருதம் முதலிய பல பெயர்களுண்டு.

பிராணவாயுவானது ஆகாயத்தைப்போலவே நிறமும், சுவையும், வாசனையுமற்ற ஆவியான பொருள். இது ஆகாயத்திலடங்கிய மற்ற பொருட்களைவிட முக்கியமானது. ஜீவ பிராணிகள் பிழைப்பதற்கும்; நெருப்பு எரிவதற்கும் இது உதவுகிறது. இது இல்லாவிட்டால் மனுஷரெல்லாரும் மாண்டுபோவார்கள்; மற்ற பிராணிகளுஞ் செத்துப்போம்; நெருப்பும் எரியாது. கண்ணாடிச் சாடிக்குள் ஒரு சிறு பட்சியை விட்டு ஆகாயம் உள்ளே போகாதபடி சாடியின் வாயை அடைத்துவிட்டால் அப்பட்சி கொஞ்சநேரத்துக்குள் செத்துப்போகும். அப்படியே எரிகிற மெழுகுவர்த்தியைக் கண்ணாடிச் சாடியால் மூடினால் கொஞ்சநேரத்தில் அது அணைந்துபோகும். பட்சியும் எரிகிற நெருப்பும் சாடியிலிருந்த ஆகாயத்தை, சரியாய்ச் சொல்லவேண்டுமானால், பிராணவாயுவை உண்டுவிட்டபடியால் பிராணவாயுவில்லாமல் பட்சி செத்தது, வர்த்தி அணைந்தது.

இலவணவாயு என்று சொல்லப்படும் உப்புவாயு பிராணவாயுவைப்போலவே நிறமும், சுவையும், வாசனையுமற்ற ஆவியான பொருள். ஜீவஜெந்துக்கள் இதைச் சுவாசித்துப் பிழைக்கமுடியா. அது நெருப்பு எரிவதற்கும் அநுகூலமானதல்ல. ஆகாயம் முழுவதும் பிராணவாயுவாலானதாயிருந்தால் நாமும், மற்ற ஜீவஜெந்துக்களும் மகா துரிதமாய்ச் சுவாசித்துச் சீக்கிரம் மடிந்துபோவோம்; நெருப்பு ஓரிடத்தில் பற்றுமானால் பூமி முழுவதும் பற்றிக்கொண்டு



எரிந்துபோகும். ஆகையால் சர்வஞானமுள்ள கடவுள் பிராணவாயுவின் வேகத்தைத் தணித்து, அதை நமக்குப் பிரயோஜனமுள்ளதாக்க அதனோடு நாலுபங்கு உப்புவாயுவைக் கலந்திருக்கிறார்.

கரியமலவாயுவானது கரியும், பிராணவாவும் சேர்ந்துண்டானது. இதற்கு நிறமில்லையாயினும் ஓர்வகை வாசனையும், புளிப்பான சுவையுமுண்டு. நாம் சுவாசிக்கையில் உட்கொள்ளும் ஆகாயத்திலுள்ள பிராணவாயு நமது நுரையீரல்களுக்குள் பிரவேசித்து, அங்கிருக்கும் இரத்தத்திலுள்ள கரியுடன் சேர்ந்து, கரியமலவாயுவாக வெளிப்பட்டு ஆகாயத்துடன் கலக்கிறது. மேலும் நெருப்பு எரியும்போது ஆகாயத்திலுள்ள பிராணவாயுவானது விறகு, எண்ணெய் முதலியவைகளிலுள்ள கரியுடன் சேர்ந்து கரியமலவாயுவாக மாறி, மறுபடியும் ஆகாயத்துடன் கலந்துபோகிறது. மரம் செடி கொடி முதலிய தாவரங்கள் இரவிலும், முளைவிடும்போதும், பூப்பூக்கும்போதும் கரியமலவாயுவை வெளியே விடுகின்றன. ஜீவஜெந்துக்களும், தாவரவஸ்துக்களும் அழுகிப் பதங்கெடுவதினாலும் கரியமலவாயு உண்டாகிறது. இது பிராணவாயுவைப்போல் ஜீவஜெந்துக்களுக்குப் பிராணாதாரமாயிராமல், அவைகளுக்கு நஞ்சாகவிருக்கிறது. 1756-ம் வருஷத்தில் கல்கத்தாவிலிருந்த 18 அடிச் சதுரமான இருட்டறையில் அடைபட்ட 146 இங்கிலீஷ்காரரில் 123 பேர் ஓரே இரவில் மடிந்தது பிராணவாயு இல்லாமையாலும், விஷவாயுவாகிய இந்தக் கரியமலவாயுவால் நஞ்சூட்டப்பட்டதாலுந்தான். சாடிக்குள் அடைபட்ட பட்சி செத்ததற்கும், சாடியால் மூடப்பட்ட வர்த்தி அணைந்ததற்கும் இந்த விஷவாயுவே மற்றொரு காரணம். ஆகையால் அநேகர் ஓரே அறையில் படுத்துத் தூங்குவதும், சுத்த ஆகாயம் உள்ளே வரவும் அசுத்த ஆகாயம் வெளியே போகவும் வழியில்லாதபடி கதவுகளையும் ஜன்னல்களையும் அடைத்துக்கொண்டு தூங்குவதும், படுக்கையறையில் நெருப்பு எரியவிடுவதும், இரவில் செடிவைத்திருப்பதும் சுகத்துக்கநுகூலமல்ல, மோசத்துக்கிடம். கரியமலவாயு ஆகாயத்தைவிட அரைப்பங்கு அதிக கனதியானபடியால் பள்ளத்தை நாடும். ஆதலால் தரையில் படுப்பதிலும் கட்டிலின்மீது படுப்பது உத்தமம்.

ஆகாயத்திலுள்ள நீராவி குளிர்காலத்திலும் குளிர்தேசத்திலும் அளவில் குறைந்து, உஷ்ணகாலத்திலும் உஷ்ணப்பிரதேசங்களிலும் அதிகப்படும். இது தாவரவர்க்கங்களுக்கும் ஜீவவர்க்கங்களுக்கும் அத்தியந்த அவசியம். ஆகாயம் நீராவியின்றிக் காய்ந்திருக்குமானால் மரஞ்செடி முதலியவைகளிலுள்ள நீரெல்லாம் ஆவியாக மாறிப்போக, அவைகள் காய்ந்து பட்டுப்போகும்; நமது தேகத்திலுள்ள நீரும் அப்படியே ஆவியாக மாற, நாம் கருவாடுபோல் காய்ந்து

போவோம். மேலும் பனியும், மழையுமின்றி தாவரவர்க்கங்களும் ஜீவவர்க்கங்களும் அற்றுப்போம்.

மூக்கே சுவாசிப்பதற்கு எற்ற கருவி; வாயினால் சுவாசிப்பது சரியல்ல. மூக்குக்குத்தான் துர்நாற்றமிருப்பது தெரியும்; மூக்கைப் பிடித்துக்கொண்டால் துர்நாற்றமுள்ள ஆகாயம் வாய்வழியாய் உட்செல்லும். நமது மூக்குக்குள் சல்லடைத்தட்டு ஒன்றிருக்கிறது; அது விஷபதார்த்தங்களை ஒருவாறு வடிகட்டித் தள்ளிவிடுமாதலால் மூக்கினால் சுவாசிக்கிறவர்கள் மோசத்துக்கு ஒருவாறு தப்பலாம்; வாயினால் சுவாசிக்கிறவர்கள் இலேசாய் வியாதிக்குட்படுவார்கள். ஆதலால் பேசும்போதும் பாடும்போதுந் தவிர மற்ற நேரங்களில் வாய் திறந்திருக்கப்படாது. வாயினால் சுவாசிக்கும் துர்ப்பழக்கத்தைப் பிள்ளைகளிடத்திலிருந்து நீக்கவேண்டும். துர்நாற்றமிருந்தால் வாயை இறுக மூடவேண்டும், மூக்கையல்ல.

மாதரே, நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் ஆகாய விஷயமாய்க் கீழே சொல்லப்படும் சாதனைவிதிகளைக் கைக்கொள்ளப் பாருங்கள்.

1. அநேகர் ஓரே அறையில் நித்திரைசெய்யலாகாது.

2. படுக்கை அறையிலுள்ள கதவு, ஜன்னல்களை யெல்லாம் அடைத்துக்கொண்டு தூங்கப்படாது.

3. படுக்கையறையில் விளக்கு எரிந்துகொண்டிருக்க விடலாகாது.

4. படுக்கைக்குரிய சாமான்கள் தவிர வேறு சாமான்கள் படுக்கையறையில் இருக்கவிடலாகாது.

5. வாயைத் திறந்துகொண்டிருக்கலாகாது.

Y. G. Bonnell, P. B.

## THE HISTORY OF ESTHER

## வீரசீலி எஸ்தர் என்பவளின் சரித்திரம்

(முடிவு)

### எஸ்தரின் ஜெயம்

எஸ்தர் தான் ஆயத்தம்பண்ணின விருந்துக்கு இராஜாவைமட்டுமல்ல ஆமானையும் அழைத்ததினால் ஆமானுக்கு எஸ்தர்பேரில் யாதொரு சமுசயம் உண்டாகவில்லை. இப்படி தான் ஆயத்தம்பண்ணின முதல் விருந்தை வெகு விமரிசையாக முடித்தாள். இராஜாவோ, என்னதான் எஸ்தர் கேட்கப்போகிறாள் என்று ஆசையோடு எண்ணத்தக்கதாக, இரண்டாம் விருந்துக்கு அவர்கள் இருவரையும்





அழைத்தாள். இவ்விரண்டு விருந்துகளுக்கிடையில் ஒரு இரவு இராஜாவுக்கு நித்திரைபிடியாததால் இராஜாக்களின் புஸ்தகத்தை வாசிக்கக் கேட்டபோது மொர்தெகாயின் சங்கதி வந்தது. இராஜாவோ மறுநாள் மொர்தெகாயுக்கு நியாயப்படி வரவேண்டிய இராஜ கனம் செலுத்தி ஆமானுக்கு மரணதண்டனை விதிக்கவும் செய்தார்.

இரண்டாம் விருந்துக்கு வருமுன்னே ஆமான், எஸ்தர் தனக்குக் காட்டின மரியாதையினால் வீண்பெருமைகொண்டு எஸ்தரைப்பற்றி தன் வீட்டாரோடும் மற்றவர்களோடும் வெகுவாய் மெச்சிப் பேசினாலும், தன் பழிவாங்கும் நோக்கத்தை நிறைவேற்றும்படி மொர்தெகாயின்மேல் அதிக எரிச்சலடைந்து அவனைக் கொலைசெய்ய ஒரு தூக்குமரம் செப்பனிட்டு வைத்திருந்தான். என்னதான் கேட்கப் போகிறாள் என்று ஆவலோடு காத்திருந்த இராஜா தன் வாயைத் திறந்து கேட்க, எஸ்தரோ என்ன விண்ணப்பம் செய்கிறாள் என்றால்: தன் ஜனத்தைப் பழிவாங்கும்படி இராஜமுத்திரை பெற்று ஆமான் அனுப்பின நடபடிக்கைகளை முத்தரிக்கவும், என் ஜீவனைக் காப்பாற்றவும் வேணுமென்றாள். உடனே தன் மூடத்தனமான உத்தரவுக்காக விசனப்பட்டாலும், ஒருதடவை செய்த கட்டளையை மாற்றவும் முடியாதவனாய், என்ன கட்டளையிட்டான் என்றால், ஆமான் சாகவும், யூதர் யாவரும் தங்கள் பிராணனைக் காப்பாற்றிக்கொள்ளவும், தங்களை

விரோதித்த சத்துருக்களை அழிக்கவும் உத்தரவுகொடுத்தான். படுகுழியை வெட்டினோர் குழியில் விழக்கடவர் என்றாற்போல், மொர்தெகாயுக்காக செய்த தூக்குமரம் ஆமானுக்கே தூக்குமரமானது.

எஸ்தரின் சரித்திரத்தை வாசிக்கிற நாம் என்ன அறியவேண்டுமென்றாலோ, வாஸ்தவத்தில் எஸ்தர் ஒரு சாமானிய பெண் அல்ல. அவளிடத்தில் ஆச்சரியமும் சிநேககுணமுமான அநேக நற்குணங்கள் உடையவளாயிருந்திருக்கிறாள். உண்மையில் அவள் ஒரு தைரியசாலியல்ல. எப்படியெனில் அபிகாயேல், சூலமித்து என்றவர்களின் குணங்களில் நாம் கவனித்திருக்கிறபடி, அபாயத்துக்கும் சோதனைக்குமிடையில் விநோதமான சுறுசுறுப்பும் விடாமுயற்சியும் எஸ்தரிடத்தில் நாம் பார்க்கிறதில்லை. எஸ்தரின் அமைதியும் கீழ்ப்படிதலும் அவள் நிலைமைக்கு வெகு அவசியமாயிருந்தது. ஏனென்றால் அவள் அஞ்ஞான இராஜாவின் மனைவியாகத் தெரிந்துகொள்ளப்பட்டவள். அவள் சாமர்த்தியமற்றவளாய் இருந்தபோதிலும், தேவன் தமது ஜனங்களுக்கு நன்மைகள் செய்வாரென்ற நம்பிக்கை அவளிடத்தில் பூரணமாயிருந்தது. சில ஸ்திரீகள்மாத்திரம் தாங்கள் நினைத்த காரியத்தை முடித்தே தீருகிறார்கள். ஆனால் கொஞ்சம் பேர்தான் எஸ்தரைப்போலிருக்கிறார்கள். பயங்காளிகளுக்கும் மந்தகுணமாயிருக்கிறவர்களுக்கும் எஸ்தரின் சரித்திரம் ஒரு நல்ல படிப்பினையைத் தருகிறது. அதாவது, அவள் கையாடினதுபோல் இவர்களும் ஜெபத்தையே கையாடவேண்டியது. எஸ்தர் தன் நிலைமைக்குத் தகுந்தபடியே கீழ்ப்படிந்து வீரியத்தையல்ல, காரியத்தையே கண்ணுயினாள். அவள் தன் உற்றார் பெற்றார் இனஜனம் யாவரையும் விட்டுப்பிரிந்திருந்தாலும், அவளுடைய பொறுமையுள்ள குணம் அவளுடைய வருத்தத்தைக் குறைத்து அவசரமாய் ஒரு காரியத்தைச் செய்வதைவிட, கஷ்டத்தோடு பொறுத்திருப்பது அவளுக்குச் சுலுவாயிருந்தது. அவளுடைய ஆவி எப்போதும் பின்தாங்கிற்று. அழைக்கப்படாமல் இராஜாவினிடம் போவது, அநேக ஆயிரம் ஜனங்களுக்கு வரும் மோசத்தைக்காட்டிலும் பெரியதாயிருந்தது. எப்படியெனில், ஆயிரக்கணக்கான தன் ஜனங்களோடு தானும் ஒருத்தியாய் சாவதைவிட்டு, வலிய தனக்கு மரணத்தைத் தெரிந்துகொண்டாள். மேலும் தன் வளர்ப்புத் தகப்பன் வார்த்தைக்குச் சம்மதித்து, இராஜாவைப் பார்க்க ஒப்புக்கொண்டபோது, அவள் மரணத்தையே எதிர்பார்த்தவளாயிருந்தாள்.

எஸ்தர் சிறையிலகப்பட்டு இருந்ததுபோல், நாமெல்லாரும் சிறையிலகப்பட்டு இருக்கிறோம். அவள் சொந்த தேசத்தில் இருந்ததில்லை. அதுபோல நாமும் நமக்குச் சொந்தமில்லாத தேசத்தில்



இருக்கிறோம், பரதேசிகளாயிருக்கிறோம். அவள் பெரிய பயங்காளியாயிருந்தபோதிலும், தன் திடமான விசுவாசஜெபத்தினால் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு இரட்சிப்பை சம்பாதித்தாள். அவளைப்போல் நாமும் ஒரு இராஜாவின் கோபத்திற்கும் ஒரு ஜாதியாரின் இரட்சிப்புக்கும் யாதொன்றும் செய்யவேண்டியதில்லை. ஆனால் நாம் செய்யவேண்டியதோ, நம்மைச்சுற்றிலும் அந்தகாரப் பிரபுவினால் ஆளப்பட்டு, இருட்டில் இன்னமும் சஞ்சரிக்கிற நமது இந்த சகோதரங்களை வெளிச்சத்தண்டை கொண்டுவந்து சேர்க்க பிசாசு, லோகம், மாமிசம் முதலிய சத்துருக்களோடு போராடி வெற்றிகொள்ளவேண்டியது நமது முக்கிய கடமையும் நமது அன்புள்ள இரட்சகரின் கட்டளையுமாயிருக்கிறது. ஆகையால் நாம் நமது அன்றாடக ஜீவியத்தில் நம்மைத்தானே ஜெயிக்கவேண்டியதாயிருக்கிறது. நம்முடைய பெலவீனத்தை நாம் கவனியாமல் நமக்கு வரும் இடையூறுகளையும் நாம் கவனியாமல் எத்தனையோதரம் சோர்ந்துபோய் உட்கார்ந்திருக்கிறோம். சோதனைகளை மேற்கொள்ளப் போதுமான தைரியம் நமக்கு இல்லாமற்போகிறது. இருந்தாலும் எஸ்தரைப்போல் நான் செத்தாலும் சாகிறேன் என்று கடமையை மேற்கொண்டு செல்வோமாக. சாவும் ஜீவனும் நம்முடைய கையில் இல்லை. கர்த்தரிடத்தில் இருக்கிறது. நாம் சாவோம் என்று நினைக்கிறபோது எத்தனையோதரம் உயிரோடு பிழைக்கிறோம். நாம் போகப் பயந்த விடத்தில் அநேகதடவைகளில் சந்தோஷத்தையும் ஆசீர்வாதத்தையும் கண்டடைகிறோம்.

நாம் துன்பத்தை பலதடவைகளில் அடைகிறோம் என்பது வாஸ்தவமாயிருந்தாலும் அது வீண்போகாது. சரீர பலவீனம் பலதடவைகளில் நமக்கு முன்னேயிருப்பதை நாம் சரியாய்ப் பார்க்காதபடி நமது கண்ணை மூடிவிடுகிறது. ஜெபம் செய்யக்கூடிய நிலைமையை விட்டு அநேகதடவைகளில் பெயர்ந்துவிடுகிறோம். அப்போது நமது சரீரம் சுகநிலைமையில் இல்லையென்று அறிந்துகொண்டு நமது மனதைத் திடப்படுத்தவேண்டியது. பண்ணவேண்டிய ஜெபத்தை நம்முடைய அசதி மறிக்கிறது. அந்த அசதிக்கு நாம் இடங்கொடுத்துப் பின்வாங்கக்கூடாது. 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்றபடி எஸ்தர் ஓரே முயற்சியாய் நின்று தான் நினைத்த காரியத்தை முடித்தபடியால் தன் ஜனத்திற்கு வந்த தீங்கு விலக்கப்பட்டது. தன் பலவீனத்தைப்பற்றி அவள் சாக்குப்போக்கு சொல்லவில்லை. ஜெபத்தினால் அவள் புது பலத்தையும் மனோதிடத்தையும் அடைந்தாள். அப்படியே நாமும் செய்யவேண்டிய கடமைக்கு பெலனும் ஞானமும் கொடுக்கும்படி ஜெபித்தால் அவரிடத்திலிருந்து

பெறுவோம். எஸ்தர் தான் ஜெபித்ததுமல்லாமல் மற்றவர்களையும் தனக்காக ஜெபிக்க வேண்டினாள். நாம் சரீரப் பிரகாரமாவது அல்லது வேறுவிதமாயாவது மற்றவர்களைவிட பலவீனமுள்ளவர்களென்று சொல்லி நம்மிடத்தில் தேவன் ஒன்றையும் தேடுகிறதில்லையென்று எண்ணாதிருக்கக்கடவோம். இவ்விதமாக சாக்குப்போக்கு சொல்லுகிறவர்கள் கணக்குப்பார்க்கும் நாள் வரும்போது தாங்கள் செய்யவேண்டிய அநேக காரியத்தைச் செய்யாமல் விட்டோமென்று அறியும்போது மனஸ்தாபம் அடைவார்கள்.

எஸ்தரின் சரித்திரத்தை நாம் வாசிக்கும்போது, அவள் எவ்வளவு பலவீனமான பாண்டமாயிருந்தபோதிலும், எவ்வளவு பலவீன பாண்டமாயிருக்கிற ஸ்திரீ ஜாதிக்கும் சத்தியவேதமானது ஆறுதலையும் தேறுதலையும் கொடுக்கிறது என்று படித்துக்கொள்ளுகிறோம். அவள் தன்னில் தான் பலனற்றவளாயிருந்ததினால் பலத்திற்காக வேண்டினாள். அவளுக்கு பலம் கொடுக்கப்பட்டது. அதைப்போல் நாமும் விசுவாசத்தோடு கேட்டால் கொடுக்கப்படும். 'கேளுங்கள் அப்போது உங்களுக்குக் கொடுக்கப்படும்' என்று நமது அன்புள்ள இரட்சகர் திருவாய்மலர்ந்திருக்கிறார். எல்லா ஜாதியாருக்கும் மதத்தாருக்கும் அவளுடைய சரித்திரம் அதிக ஆறுதல் தருகிறதாயும் போதனையடங்கியதாயும் இருக்கவேண்டியது.

ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக அவளுடைய பின் சந்ததியாராகிய இஸ்ரவேல் பெண்களுக்கு அவளுடைய ஞாபகம் புகழ்ச்சிக்குரியது. எஸ்தரின் மூலமாய் யூதருக்குண்டான இரட்சிப்பு கடவுளின் தீர்மானம். ஆண்டவர் அற்புதம் செய்ய வல்லவர். எஸ்தரைப் போல் பெலவீனப்பாண்டங்களாகிய நாமும் நம்மை தேவனுடைய கையில் ஒப்புக்கொடுத்தால் நம்மைக்கொண்டும் ஆண்டவர் அற்புதங்களைச் செய்வார். அவள் இராஜாவின் பெண்சாதியாயிருந்தபோதிலும் சிறையில் கொண்டுபோகப்பட்டவள்தான். ஆகையால்தான் நினைத்ததெல்லாம் செய்ய அவளுக்கு அதிகாரம் இருந்ததில்லை. அதைப் போல் நாமும் நமது பக்திக்குரிய அதாவது மதத்துக்குரிய ஆசார ஒழுக்கங்களைச் செய்யக்கூடாத பல சமயங்கள் நமக்குச் சம்பவிக்கும் போது நாம் அதிக துக்கப்படுகிறோம். அப்போது நாம் செய்ய வேண்டியது என்னவென்றால், நம்முடைய உடன்விசுவாசிகளோடு நம்மை ஐக்கியப்படுத்தி நம்மை கர்த்தருக்கு ஒப்புவிக்கவேண்டியது. இப்படியாக நம்முடைய மதத்தை நாம் மேன்மைப்படுத்தி மற்றவர்களும் அதை மேன்மைப்படுத்தும்படியாகச் செய்யப் பிரயாசப்படவேண்டும். இதோடு விட்டுவிடாமல் நாம் நம்முடைய பிள்ளைகளிடத்தும் அந்த ஆவியை எழுப்பிவிட்டு அவர்களும் நாம் செய்கிறது



போலவே செய்யப் போதிக்கவேண்டும், எஸ்தர் மன்றாடினது போல நாம் கர்த்தருடைய கிருபையால் எவரையும் போய் மன்றாட அவசியமில்லை. ஆனால் அவளைப்போல் நாம் நம்முடைய விசுவாசத்தில் வைராக்கியமுள்ளவர்களாயிருக்கவேண்டும். மதத்தின் வெளிவேஷம்மாத்திரம் நமக்கு இராமல், எஸ்தருக்கு இருந்ததுபோல, துன்பத்தின் நடுவேயும், துக்கத்தின் நடுவேயும் நம்முடைய மதத்தின் ஆவியும் நமக்கு இருக்கவேண்டியது. அதினால் நம்முடைய பொறுமையான வேலைக்குப் பலன் மெய்யாகவே உண்டாகும். அதினால் நமக்கு நம்முடைய இருதயத்தில் ஆனந்தமும் பூரிப்பும் உண்டாகும்.

எஸ்தரின் மூலமாய் உண்டான இரட்சிப்பை எக்காலமும் மறந்து போகாதபடி யூதர்கள் வருஷாவருஷம் பூரீம் பண்டிகை கொண்டாடினார்கள். ஆனால் மரியாளின் குமாரனாகிய நமது அன்புள்ள இரட்சகரினால் யூதருக்குமாத்திரமல்ல முழுலோகத்திற்கும் உண்டான பூரணரட்சிப்பை நாம் நமக்கு வரும் ஒவ்வொரு பண்டிகைகளிலும் நினைவுகூர்ந்து, நம்முடைய நிலமைக்குத் தகுந்தபடியே நேசம் உள்ளவர்களாயும் அறிவுள்ளவர்களாயும் நம்முடைய பரிசுத்த மதத்துக்காக உண்மையோடு உழைக்கிறவர்களாகவும் அந்த மதத்திற்கென்றும் அதினுடைய மேன்மைக்கென்றும் நம்மால் இயன்ற எல்லாவற்றையும் செய்கிறவர்களாகவும் ஆண்டவரின் பார்வையில் கண்டுபிடிக்கப்பட்டால் நமக்குப் பரிபூரணம் கிடைக்கும்.

### ஞானப்பாட்டு

1. இயேசுவின் ஐக்கியத்தில் நிலைநின்று
யாக்கோபின் தேவனைத் தானே—தன்
அடைக்கலமாகத் தெரிந்து கொண்டோர்
மெய்ப்பாக்கியராமே—இக்கர்த்தர்பேரில் நம்பினோர்
ஞானமும் பெலனும் பெற்றோர்—அல்லேலூயா.

2. அக்கிரமக் காரர்பின் வாங்குவார்கள்,
அவர்களைக் கவிழ்க்கிறார்—சொந்தவலையில் சிக்குவார்கள்
கலங்கடிக்கிறார், சீயோனின் ராசா தேவரீர்—எங்களை
என்றும் காக்கிறீர்—அல்லேலூயா.

3. நான் உம்மை ராவும் பகலும்—அன்புள்ள சுவாமி, பாடி
பலியாய் உமக்கென்னையும்—தினம் படைக்க நாடி,
கருத்தாய் உம்மை நித்தமும்—எல்லா நடக்கையாலேயும்
இஸ்தோத்தரிக்கப் பார்ப்பேன்—எப்போதைக்கும் இப்பாவியை
நீர்மீட்ட உபகாரத்தை என் ஞாபகத்தில் காப்பேன்.

B. Savariammal
*Headmistress, London Mission*
*Hindu Girls' School, Egmore, Madras*

## FRENCH HEROINE

## ஓர் பிரான்சிய வீரி

மார்செல் செம்மர் (Marcelle Semmer) என்பவள் இருபத்தொரு வயதுள்ள ஓர் அனாதைப்பெண். இவள் யுத்த ஆரம்பத்தில் சாமிநதியின் மேலுள்ள ஒரு கிராமத்தில் வசித்துவந்தாள். பிரான்சியர் ஒரு பட்டணத்திலிருந்து பின்வாங்கிவர, ஜர்மானியர் அவர்களை அதிவேகமாய்ப் பின்தொடர்ந்து வந்தார்கள். இவளுடைய கிராமத்துச்கு இடையில் கால்வாயின் மேலிருந்த பாலத்தைப் பிரான்சியர் கடந்துவிட்டவுடனே அந்தப் பாலத்தைச் சத்துருக்கள் கடந்து வாராதபடிக்கு அதைத் திறந்து சாவியை ஆற்றில் எறிந்துவிட்டாள். ஆகவே ஒரு பெரிய ஜர்மானிய பட்டாளமுழுவதும், இராவுமுழுதும் காத்திருந்து விடியற்காலத்தில் படகுகளைச் சேர்த்துக்கட்டி ஒரு பாலமுண்டாக்கி அந்தக் கால்வாயைக் கடக்கவேண்டியதாயிற்று. சத்துருக்கள் சாமிநதியைக் கடந்து இவள் இருந்த கிராமத்தைச் சேர்ந்தார்கள். பின்வாங்கும்போது சில பிரான்சிய போர்வீரரும் அந்த ஊரிலுள்ள ஜனங்களும் கரிசைகளிலும் சந்துபொந்துகளிலும் ஒளித்துக்கொண்டிருந்தார்கள். ஜர்மானியர் அந்த கிராமத்தின்மேல் குண்டு பிரயோகம் செய்துகொண்டிருந்ததினால் அதிலுள்ளவர்கள் வெளியேபோக முடியவில்லை. ஆனால் இவள்மாத்திரம் சொந்தப் பிரயத்தனத்தினால் வெளியேறிச்சென்று அங்குள்ளவர்களெல்லாருக்கும் ஆகாரம் கொண்டுவந்து கொடுத்துவந்தாள். அதுமாத்திரமல்ல, அங்கே புகுந்துகொண்டிருந்த பதினாறு பிரான்சிய போர்வீரரைச் சாதாரண பட்டணவாசிகள்போல உடுத்தி வெளியேகொண்டுபோய் தப்பவிட்டாள். பதினேழாவது ஆளை அவள் கொண்டுபோகும்போது சத்துருக்கள் அவளையும் அவனையும் பிடித்துக்கொண்டார்கள். அவர்கள் பட்டாளத்தைச் சேர்ந்த நியாயவிசாரணை ஸ்தலத்தில் அவளை விசாரித்தபோது சொன்னதாவது: 'இவன்தான் நான் தப்பிப்போகும்படியாகச் செய்த முதற் போர்வீரன் என்று நினைத்துக்கொள்ளாதேயுங்கள். இதற்கு முன்னமே பதினாறுபேரை அனுப்பிவிட்டிருக்கிறேன். உங்களுக்கு என்னை என்ன செய்ய வேண்டுமென்று தோன்றுகிறதோ அப்படியே செய்யலாம். நான் ஒரு அனாதை. பிரான்ஸ் என் மாதா. சாகிறதைப்பற்றி எனக்கு அக்கரையில்லை.'

அவளுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது; அவளைச் சுட நினைத்த சமயத்தில் பிரான்சியர் குண்டு பிரயோகஞ்செய்து சத்துருக்களைப் பின்வாங்கிப்போகச் செய்தார்கள். அத்தருணத்தில் மார்செல்



மறைந்து தப்பிப்போய் ஒரு கரிசையில் ஒளித்துக்கொண்டாள். பிரான்சியர் அவளுடைய கிராமத்தைக் கைவசப்படுத்திக்கொண்டபோதிலும் சத்துருக்கள் சைநியங்கள் அருகாமையில் இருந்தன. ஒருநாள் அவள் தப்பிதமாக சத்துருக்கள் பாளையத்துக்குப்போகவே அவளைப் பிடித்துக்கொண்டு சிரச்சேதம் செய்வதற்குமுன்னமே, ஒரு ஆலயத்தில் அடைத்துவைத்தார்கள். ஒருவிஷயத்தில் இவள் பெரிய அதிர்ஷ்டசாலி. ஒரு பிரான்சிய பீரங்கிகொண்டு இவள் அடைக்கப்பட்டிருந்த ஆலயத்தின் சுவரில் துவாரம் உண்டாக்கவே இவள் அதின்வழியாக ஏறி பிரான்சியர் பாளயம்போய்ச் சேர்ந்தாள். இதற்குப்பிறகு பதினைந்து தினங்கள் அதே கிராமத்தில் தங்கியிருந்து காயப்பட்டவர்களுக்கு உதவிசெய்ததோடுகூட பாரிசவியாதியினால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த 90 வயதுள்ள ஒரு கிழவியையும் ஆதரித்துவந்தாள். இப்படியிருக்கும் ஒருநாள், ஒரு பிரான்சிய தளகர்த்தன் அங்கே வந்து The Cross of the Legion of Honour என்கிற கௌரவ சின்னத்தைச் சூட்டினான். பிறகு Military Cross என்கிற வீரசின்னமும் அவளுக்குக் கிடைத்தது.

இவைகளுக்குப் பிற்பாடு ஆங்கிலேயர் யுத்தஞ்செய்கிற பிராந்தியத்தில் வேலைசெய்துகொண்டு வருகிறாள். ஆங்கிலேயர் Edith Cavell என்கிற மாதை மதிக்கிறதுபோலவே இவளையும் மதிக்கிறார்கள். பிரிட்டிஷ் தளகர்த்தன், அவள் போக்குவரத்தாயிருக்கும்போது அவளைக் காணும் போர்வீரர் அசைவரநின்று மரியாதை செய்யவேண்டுமென்று ஆக்ஞாபித்ததோடு அவளுக்குக் கௌரவமாக ஒரு பாட்டுக்கச்சேரியும் நடத்தினார்.

## GOLD BELLS AND POMEGRANATES

## பசும்பொன் மணிகளும் மாதளம்பழங்களும்

(தொடர்ச்சி)

### VII

ஒரு கிழமை சென்றபின் ஒருநாள் ஓவென் வேலையொழிந்து வீட்டுக்கு வருகையில் 'அம்மா! அம்மா! எங்கள் அயல் வீட்டுக்காரருக்குப் பதில் இறக்கப்பட்டாயிற்று' என்றான். 'என்ன காரியம் மகனே!' என்றேன். 'உவின்றன் இன்று காலமே சாரமாத்திலிருந்து விழுந்துவிட்டான். அவனை வீட்டுக்குக் கொண்டுவந்துவிட்டார்கள். அவன் பிழைப்பானென்று அவர்கள் நினைக்கவில்லை' என்றான். இதைக் கேட்டதே, என்னுடைய குணம் முற்றும் மாறத்



துவக்கிற்று. 'உவின்றன் அம்மாளிலே நான் பகை சாதித்துக்கொண்டிருக்கிறேன். அவளோ ஒரு ஏழைப்பெண். தன் புருஷனைச் சாகக்கொடுக்கிறாளே!' என்று எனக்குள்ளே சொல்லிக்கொண்டேன். என்னுடைய மகனுக்கு நான் என்ன சொன்னேனென்று தெரியவில்லை. தேவன் என்னுடைய கடன்களை மன்னிக்கவேண்டும் என்று காத்திருக்கிற நான் அவளுக்கு மன்னியாமலிருக்கிறேனே என்று நினைத்தபோது முற்றாய் என்னுடைய மனதிலே தாக்குண்டேன். 'போய் உவின்றன் அம்மாளுடைய புருஷன் எப்படியிருக்கிறானென்று பார்,' என்று ஒரு சிறு சத்தம் சொல்லிற்று: ஆயினும் அன்றைக்கு நான் போகவில்லை. அடுத்தநாளும் வெகு போராட்டமிருந்தது. போராட்டமிருந்துங் கடைசியாய்ப் போனேன். பெரிய வெட்கமாயிருந்தது. என்னைப்பார்க்கிலும் உவின்றன் அம்மாளுக்கு அதிக வெட்கமிருந்திருக்குமென்று நம்புகிறேன். அவள் கதவைத் திறக்க 'உவின்றன் அம்மா, உம்முடைய புருஷனுக்கு இப்போது எப்படியென்று விசாரிக்கவந்தேன்' என்று மெள்ளவாய்ச் சொன்



னேன். 'அவருக்கு இருந்ததில் சுகமில்லை' என்று வெகு வெடுத்த முகத்தோடே சொன்னாள். 'அதிக வருத்தமோ?' என்று கேட்டேன். 'ஆம், அதிக வருத்தந்தான். அல்லாதிருந்தால் ஏன் அங்கே படுத்திருக்கிறார்? மாரீசம் பண்ணுகிறாரென்று நினைத்தாயோ?' என்றாள். அவள் பேசினவகை எனக்குக் கொஞ்சம் வெட்கமாயிருந்தது. அப்படியிருந்தும் நான் ஏதோ அவளுக்குப் பட்சமாய்ச் சொல்லத்துவக்க, அவள் முன்னிலும் மூர்க்கமாய் 'இங்கே நடக்குங் காரியங்களை விசாரணைசெய்ய இங்கே யாதாமொருவர் வரவேண்டியதுமில்லை; வருகிறவர்களோடு அலப்பிக்கொண்டு நிற்க எனக்கு நேரமுமில்லை' என்று சொல்லிக்கொண்டு கதவைச் சாத்தினாள். நான் வந்ததினாலே ஒரு நன்மையுமில்லையே, இவ்வளவு கடுமையான பிரியவீனமிருக்க நான் ஏன் இங்கே வந்தேன் என்று கவலையோடே வீட்டுக்குத் திரும்பினேன்.

இரண்டொருநாள் சென்றபின் உவின்றன் அம்மாளைக் கண்டேன். என்னுடைய வீட்டுக்குமுன்னிருந்த சிறு தோட்டத்துக்குள்ளே நின்றபோது அவள் பக்கத்தாலே போனாள். பாரக் கவலையுள்ளவளாய்க் காணப்பட்டாள். 'உவின்றனுக்கு இப்போ எப்படி?' என்று கேட்டேன். முந்தின வெடுவெடுப்பில்லை. பதமையாய் 'வரவரக் கடுமையாகிறது' என்று சொன்னாள். இப்படிச் சொல்லுகையில் அவளுடைய கண்களில் கண்ணீர் ததும்புகிறதைக் கண்டேன். 'இராப்பகல் அவரைப் பராமரித்ததினால் தொய்ந்துபோனேன். அவர் வியாதிப்பட்ட காலந்தொடுத்து சற்றுநேரமாவது நான் ஆறியிருக்கக் கிடைக்கவில்லை. என்ன பாடுபட்டும் அவர் சுகப்பட்டுவிட்டால் காரியமில்லை. அவர் சீக்கிரம் மரித்துவிடுவார்போலிருக்கிறது' என்று கண்ணீரோடே சொன்னாள். அதிக கவலையினால் ஏதோ ஒரு கட்டி என்னுடைய தொண்டைக்குள் அடைத்துக்கொண்டதுபோலிருந்ததினால் அதிகம் பேசக்கூடாமல், நான் பிடுங்கி வைத்திருந்த வடிவான ஒரு பூங்கொத்தை வேலிக்கு மேலாலே எட்டிக் கொடுத்து 'உவின்றன் அம்மா, நீர் இடந்தந்தால் நான் வந்து இன்றிரவு உம்முடைய புருஷனைப் பராமரிப்பேன். நீர் கொஞ்சம் ஆறிக்கொள்ளும்' என்று சொன்னேன். அந்நேரம் அவள் என்னை நோக்கிப்பார்த்த விதத்தை நான் ஒருபோதும் மறவேன். என்னோடு ஒரு வார்த்தையும் பேசாமல் பூங்கொத்தை வாங்கிக்கொண்டு திரும்புகையில் அவளுடைய கண்களிலிருந்தும் கண்ணீர் ததும்பிற்று. பசும்பொன்மணிகளுக்கிடையில் ஒரு மாதளம்பழத்தை என்னிலே கண்டாளென்று நினைக்கிறேன். எப்படியென்றாலும், நான் போய் அவளுக்கு உதவிசெய்ய அவளுக்குச் சம்மதமென்று விளங்கிக்கொண்டேன்.

போய் ஒருநாளல்ல, ஆறுநாள் பராமரித்து உவின்றன் அம்மாளை இளைப்பாற்றி விட்டேன். உவின்றனுக்கும் சுகமாய் விட்டது. கொஞ்சக்காலமானபின் கல்லாலெறிந்து கொல்லப்பட்ட கோழிகளுடைய சரித்திரத்தை எனக்கு அறிக்கைசெய்தாள்.

அதன்பிறகு நாங்கள் நெருங்கிய சிநேகிதர்களாயிருந்தோம். ஆராதனையிலே ஒருமிக்க இருக்கிறோம். யோவானும் லூக்கும் என்னுடைய ஒவெனும் அக்கம்பக்கங்களிலே இருப்பார்கள். இதெல்லாம் பொறுமையினாலும் நீடிய சாந்தத்தினாலும் வந்த சமாதானம். 'ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல் நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.'

இப்பொழுது கிறிஸ்துவின் சமாதானம் என்னிருதயத்தில் ஆளுகை செய்கிறது. அது பூரணமாயல்ல. நான் அகற்றவேண்டிய பாவங்கள் இன்னும் இருக்கின்றன என்பது கர்த்தருக்குத் தெரியும். ஆயினும் இப்போது நான் ஒருபோதும் நிர்ப்பந்தமாய் இருக்கவில்லை; நம்பிக்கையற்றவளாய்ப் போகவுமில்லை. என்னுடைய நாளாந்த நடையிலே பசும்பொன்மணிகள் கிலுங்கும்போது ஒவ்வொரு பசும்பொன்மணிகளுக்கும் ஆவியின் ஏதோ கனிகளை நான் கூட்டிக் கூட்டி வருவதற்குக் கர்த்தர் உதவிசெய்துவருகிறார்.

'அங்கியின் ஓரத்தைச் சுற்றிலும் ஒரு பசும்பொன்மணியும் ஒரு மாதளம்பழமும் ஒரு பசும்பொன்மணியும் ஒரு மாதளம்பழமுமாய் இருந்தது.'

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1917-ஆ எப்ரல் மீ

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஞா. | மாற். | 12. 28—44 | 11 | பு. | மாற். | 15. 33—47 | 21 | ச. | எபி. | 7. 1—14 |
| 2 | தி. | ,, | 13. 14—27 | 12 | வி. | ,, | 16. 1—20 | 22 | ஞா. | ,, | 7. 15—28 |
| 3 | செ. | ,, | 13. 28—37 | 13 | வெ. | எபி. | 1. 1—14 | 23 | தி. | ,, | 8. 1—13 |
| 4 | பு. | ,, | 14. 1—16 | 14 | ச. | ,, | 2. 1— 9 | 24 | செ. | ,, | 9. 1—14 |
| 5 | வி. | ,, | 14. 17—31 | 15 | ஞா. | ,, | 2. 10—18 | 25 | பு. | ,, | 9. 15—28 |
| 6 | வெ. | ,, | 14. 32—45 | 16 | தி. | ,, | 3. 1—11 | 26 | வி. | சங். | 50. 1—13 |
| 7 | ச. | ,, | 14. 46—59 | 17 | செ. | ,, | 3. 12—19 | 27 | வெ. | ,, | 50. 14—23 |
| 8 | ஞா. | ,, | 14. 60—72 | 18 | பு. | ,, | 4. 1—16 | 28 | ச. | ,, | 51. 1—19 |
| 9 | தி. | ,, | 15. 1—15 | 19 | வி. | ,, | 5. 1—14 | 29 | ஞா. | ,, | 52. 1— 9 |
| 10 | செ. | ,, | 15. 16—32 | 20 | வெ. | ,, | 6. 10—20 | 30 | தி. | ,, | 53. 1— 6 |

C. L. S. PRESS, MADRAS—1917

# மாதர் போதினி

No. 233 | மே 1917 | No. 5

REGISTRAR OF BOOKS
7 -MAY 1917
MADRAS

## WAR NOTES

## யுத்த குறிப்புகள்

The Fall of Bagdad. மெசோப்பொத்தேமியா நாட்டில் நடைபெறும் உக்கிரபோரின் பயனாக பலவிடங்களை நமது நேசப்படைகள் கைப்பற்றிக்கொண்டாலும், அவற்றிலொன்றும் சின்னாட்கட்கு முன்னர் பிடிக்கப்பட்ட பாக்டத் நகரவ்வளவு விசேஷித்தவையல்ல. சென்ற வருஷம் இதைப் பிடிக்க வெடுத்த பிரயத்தனங்கள் வீணாகப் பெரு நஷ்டம் விளைந்தது. என்றாலும், கிஞ்சித்தும் தளராது பாக்டத் நகரைச் சத்துருக்களிடமிருந்து எடுத்துக்கொள்ளவேண்டுமென்னும் ஒரே நோக்கத்தோடு தாக்கி, இறுதியில் அதைத் தங்கள் வசமாக்கிக்கொண்டது அதி தீர்க்கமாய்ப் போர்முகம் நின்று பொருத வீரருக்கும், அவர்களை யூகமாய் நடத்திவந்த தளகர்த்தாவாகிய மாட் என்பவருக்கும் பெரிய மேன்மையே. குதிரைப்படைகளுங் காலாட்களுமான ஜெயவீரர்கள் இவர்களில் பெரும்பாலாரும் நம் இந்து தேசத்தவரே. தவிரவும் யுத்த சாமான்களை இடந்தோறும், இடந்தோறும் ஜாக்கிரதையுடன் கொண்டுபோய்த் தருணத்துக்குத் தகுந்த உதவி புரிந்தவரும் அன்னவரே. இதுகாறும் இப்பட்டணத்தைக் கைப்பற்றக்கூடாதிருந்தது சத்துருக்களுடைய கூடுதல் சாமர்த்தியத்தினாலன்று. இக்கொடுஞ் சமர் நடக்குமிடம் இராணுவங்களுக்குக் கஷ்டத்தைக் கொடுக்கும் பெரும் பாலைவனம். அந்நாட்டின் சீதோஷ்ண ஸ்திதி சிறிதாயினும் பொருந்தத்தக்கதன்று. ஓரிடமிருந்து இன்னோரிடஞ் செல்ல ரஸ்தாக்களும் வண்டிகளுங் கிடையா. இயற்கையமைப்பே இவ்விதமாய் நமது சேனைகளுக்கு இடர்விளைக்க, அவர்கள் இவற்றையும் வென்று சத்துருக்களோடு கைகலந்தவண்ணமாக அவரைக் கொடும்போரிடைத் தாக்கி, அவரது சைன்யங்களையும்,

யுத்த தளவாடங்களையுஞ் சின்னபின்னமாக்கினது மெச்சப்படத் தக்கதே.

பாக்டத் நகரம் கிடைத்ததினால் சத்துருக்கள் வெகுகாலமாய் எண்ணிக்கொண்டிருந்த பல வெண்ணங்கள் வீணாய்ப்போயிற்று. பாரசீக தேசவழியாய் நமது இந்தியா தேசத்துக்கு ஓர் பாதை கண்டு பிடிக்கவேண்டுமென்பது இவ்யுத்தம் ஆரம்பிக்கு முன்னதாகவே சத்துருக்களுக்கிருந்த வோர் பேரவா. அந்த நோக்கத்தோடுதான் அவர்கள் பாக்டத் நகரத்தையும், பாரசீகக்குடாக்கடலையு மோர் இருப்புத்தொடர் மார்க்கத்தினாலிணைக்க முயன்றனர். அங்ஙன மவர்கள் முயற்சி கைகூடியிருப்பின் நமது தேசத்துக் கின்னல் விளைக்குமோர் கருவியாயிருக்கு மென்பதற்சைமயமில்லை. ஆதலின் பாக்டத் நகரம் நமது படைகள் வசமானதினாலெய்தும் நன்மைகள் இராணுவ விஷயமாயும், இராஜ்யானுகூல விஷயமாயும் மிகவும் விசேஷமானவையே.

The Western Theatre. பிராஞ்சு தேசத்தில் நடைபெறுஞ் சண்டையில் இப்போது சிலகாலமாய் நேசப்படைகளே வெற்றியடைந்து வருகின்றன. சத்துருக்கள் தங்கள் வசமாக்கியிருந்த அநேக விடங்களை நேசப்படைகள் திரும்பப் பிடித்துக்கொண்டனர். சத்துருக்களுக்குப் பெருநஷ்ட மூண்டாக்கி அவர்களைக் கொஞ்சங் கொஞ்சமாகத் துரத்திவிட்டு, முதலாவது அவர்கள் மிகுந்த பிரயாசத்துடன் தாங்கள் கைவசப்படுத்தின பலவிடங்களை விட்டுப்போக, அவைகள் நம்மவருடைய ஆதீனத்துக்குள்ளாகின்றன.

## THE WOMEN'S COLLEGE AT CONSTANTINOPLE

## கான்ஸ்டான்டிநோபிலிலுள்ள பெண் கலாசாலை

இக்காலத்தில் இந்தியாவிலுள்ள பெண் கலாசாலைகளைப்பற்றி அநேகர் பலவிதமாய்ப் பேசிக்கொள்ளுகிறார்கள். மற்ற தேசங்களில் இதுவிஷயமாய் என்னசெய்து வருகிறார்களென்பதை அறியவேண்டிய தவசியம். இன்னும் அழகுவாய்ந்த கான்ஸ்டான்டிநோபிலுக் கருகில் ஸ்குடாரி (Scutari) பட்டணத்தில் வாசிக்கும் பெண்களுக்காக, மிஸ் எஸ்டர் ஜென்கின்ஸ் துரைசானி (Miss Hester D. Jenkins) அமெரிக்காவிலுள்ள கலாசாலைகளைப்பற்றி, யுத்த ஆரம்பத்திற்கு முன்னமே, புஸ்தகமொன்றில் விவரமாய்ச் சொல்லியிருக்கிறார்கள்.

ஆசியாகண்டத்தில் கலாசாலையுள்ள மேற்கூறிய ஸ்குடாரி தேசம் இயற்கை அழகையே அதிகமாய் உடையது. இது பாரத பாஸ்





பொரஸ் (Bosporus) கடற்கரையின்மீது இருப்பதாலும் கிழக்கில் மார்மோரா (Marmora) கடலும், டார்டனல்ஸ் (Dardanelles) பூசந்தியுஞ் சூழ்ந்திருப்பதனாலும், விநோதக்காட்சியையும், ஆரோக்கியத்தையுந் தருகின்றது. இதில் நேர்த்தியான குன்றுகளும், வளப்பமுள்ள வயல்களும், இதற்கெதிரிலுள்ள தேசத்திலிருக்கும் மஹம்மதியர்கள் தங்களுடைய அரண்மனைகளின் உச்சியில் கட்டியிருக்கும் வட்டமான கோபுரங்களும் மிக்க அழகாயிருக்கின்றன. இது தகுதியான இடத்தில் அமைந்திருப்பதால், போக்குவரவு முதலிய எல்லா சௌகரியங்களுக்கும் வசதியாயிருக்கிறது. ஆனால் ஸ்குடாரி நகரத்தினுள்ளே எப்படியிருக்கிறதென்பதைச் சற்று ஆராய்வோமாகில், இது மிக்க அசுத்தமாயும் ஒழுங்கீனமாயுமிருக்கிறது. வீதிகள் ஒரு முறையிலில்லை. எந்த வீதியும் நேராக இல்லை. வீடுகள் சில முன் வந்தும் சில உள்ளடங்கியும், சில நேராகவும் சில கோணலாகவும்,

சில உயர்ந்தும் சில தாழ்ந்தும் இருக்கின்றன. அவைகளினுள்ளே காற்று நுழையவும், வெளிச்சம் உட்பிரவேசிக்கவும் தக்க பலகணிகள் கிடையா. சுவருகளில் சிறிய சந்துகள்மாத்திரம் இருக்கின்றன. ரஸ்தாக்கள் கற்களால் நிறைந்தும், கரடுமுரடாயுமிருக்கின்றன. அவை மனிதர்களுக்கு மிக்க அபாயகரமானவை. மனிதர்கள் நடக்கத் தனிப் பாதைகளுமில்லை. மாரிகாலங்களில், மழைவெள்ளம் செல்லக் கால்வாய்களில்லாததனால் நடு ரஸ்தாக்களில் சென்று அதிக இடையூறு உண்டாக்குகிறது.

இப்பாடசாலையில், கிரேக்கர், ஆங்கிலேயர், பெர்சியர் முதலிய பதினைந்து ஜாதிப் பிரிவுள்ள மாணவர்களிருக்கிறார்கள். இவர்கள் ஏறக்குறைய ஏழு பாஷைக் கற்றுவருகிறார்கள். இவர்களுள் அநேகருக்கு மூன்று முக்கியமான யூத, மஹம்மது, கிறிஸ்துவ மதங்களையும், சிலருக்கு கிரேக்க மதத்தையும், ரோம மதத்தையும், ஆங்கிலேய மதத்தையும், புரொடெஸ்டான்ட் மதத்தையும் போதிக்கிறார்கள். இவர்கள் ஜாதியாலும், மதத்தாலும், தேசத்தாலும், மற்றும் பலவகையாலும் அநேக வகுப்பினர்களாக விருக்கிறார்கள். தனவான்கள், ஏழைகள், வியாபாரிகள், இராஜாங்க உத்தியோகஸ்தர்கள், கனவான்கள் மக்களும், குடியானவர் மக்களும் வாசிக்கிறார்கள். மேற்கூறிய பற்பல வகுப்பினர்களையும் ஒருமித்து வைக்கவேண்டுமென்று அநேக ஆண்டுகளாக அதிக முயற்சியும் பிரயாசையும் எடுத்துக்கொண்டதினால் ஒருமைப்பாட்டில் அதிக சித்தியுண்டாயிருக்கிறது.

வித்தியாசாலையில் அயல்தேசத்தாரென்றும் உள்நாட்டாரென்றும், வறியவர்களென்றும் ஐசுவரியமுள்ளவர்களென்றும், தாழ்ந்தவர்களென்றும் மேலானவர்களென்றும், தன் மதத்தினரென்றும் புறமதத்தினரென்றும் வித்தியாசமில்லை. பல்கர்களும் இங்கிலீஷ்காரர்களும், ஹங்கேரியர்களும், ஆர்மீனியர்களும், ருஷியர்களும் கிரேக்கர்களும் ஒருவர்க்கொருவர் ஆப்தமித்திரர்களாக விருக்கிறார்கள். இதற்கு நேர் விரோதமாக, கிழக்குப்பாகங்களிலுள்ள பிரைமரி பாடசாலைகளில் கற்கும் மாணவர்களே அதிகமாய் ஜாதி வித்தியாசம் பாராட்டுகிறார்கள். கான்ஸ்டான்டிநோபிலிலுள்ள ஓர் பிரைமரி பள்ளிக்கூடத்தில் ஆர்மீனியர்களும் கிரேக்கர்களும் கலந்து விளையாடமாட்டார்கள். துருக்கியப் பிள்ளைகளோ விளையாடும் இடத்திற்கே போகமாட்டார்கள்.

இக்கல்விசாலைக்கு பெண்கள், அருகிலுள்ள பல்கேரியா, கிரீஸ், கிரீட் (Crete) முதலிய இடங்களிலிருந்தும், சிலர் தூரதேசங்களிலிருந்தும் வருகிறார்கள். ஆனால் பலர் கான்ஸ்டான்டிநோபிலிலுள்ள ஸ்டாம்பௌலி (Stamboul) லிருந்தும், மிக்க சிறப்புபொருந்திய



பெரா (Pera) விலிருந்தும், பாஸ்பொரஸ் (Bosporus) கரையின் மீதுள்ள கிராமங்களிலிருந்தும் இதில் பயிற்சியடைகிறார்கள்.

இப்பள்ளியில் பயிலும் பிள்ளைகளுக்கு அதிக ஞாபகசக்தியும், கலைகளிலும் சாஸ்திரங்களிலும் சித்திரவேலையிலும் மிக்க ஞானமுமுண்டு. ஆராய்ந்தறியும் திறமையோ அவர்களுக்கில்லை. இவர்கள் புஷ்பங்களை அலங்கரிப்பதிலும் வீடுகளைச் சிங்காரிப்பதிலும் அவாகொண்டு அதிக சிரமமெடுத்துக்கொள்ளுகிறார்கள். கவிகளை வாசிக்கும்போது இசையை நோக்குமிடத்து சந்தோஷப்படுகிறார்கள். சந்டா சோபியா (Santa Sophia) கோவிலைக் கண்ணுறும்போதெல்லாம் பேரானந்தமடைகிறார்கள். வானசாஸ்திரம் கற்குங்கால், சூரிய சந்திர சுடர்கள் பெரியனவாயினும், மிகச்சிறியனவாகத் தோன்றுகிறதை அறியும்போது அதிக வியப்பும் நடுக்கமு முறுகிறார்கள். கணித சாஸ்திர சம்பந்தமாக கேள்விகேட்கும்போது ஆச்சரியமுற்று, தாங்கள் அவைகளைப் படிக்கவில்லையென்று பதிலளிக்கிறார்கள். இவர்களுக்கு ஞாபகசக்தி அதிகம். இது இவர்களுக்குள் அத்தியாவசியமாயிருக்கவேண்டுமென்று கருதி கஷ்டமெடுத்துக்கொள்ளவேண்டிய பாடங்களை விட்டுவிடுகிறார்கள். இவர்கள் மேல்வகுப்புகளில் படிக்கும்போது தத்துவசாஸ்திரத்தில் மிகுந்த ஆராய்ச்சியும் ஞானமும் பெறுகிறார்கள்.

ஒவ்வொருவரும் முக்கிய பாஷைகளாகிய இங்கிலீஷிலும், பிரெஞ்சிலும், ஓர் அந்நிய பாஷையிலும் முதிர்ந்த தேர்ச்சியடைகிறார்கள். முடிவில் இவர்கள் மூன்று அல்லது அதிகமான பாஷைகளைப் பயிலுகிறார்கள். ஒருகாலத்தில் ஓர் ஹங்கேரியப் பெண் ஒருமணி நேரத்திற்குள் ஆறுபாஷைகளில் சம்பாஷித்தாள். உபாத்தியாயரிடத்திலும் பள்ளிக்கூடத்திலும் இங்கிலீஷ் பிரெஞ்சு பாஷைகளிலும், வெளியில் இவர்களுக்குப் பிரியமான எப்பாஷையிலும் பேசுகிறார்கள். மெதுவான சப்தத்தையுடைய துருக்கிய பாஷையையும், கடின கண்டாக்ஷரமுள்ள ஆர்மீனிய பாஷையையும், t's, k's, f's, th's சப்தத்தோடு முடிகிற கிரேக்க பாஷையையும், எளிதில் உச்சரித்து அறியக்கூடிய இங்கிலீஷ் பாஷையையும், பல்கேரியா, ஜர்மானிய பாஷைகளையும், இவர்கள் விளையாடும்போதும் மற்ற இடங்களிலும் உபயோகிக்கிறார்கள். இதனால் என்ன குழப்பம் உண்டாகுமென்பதை நாமே யூகித்தறியலாம்.

வித்தியாசாலையில் நடக்கிற ஒழுங்கீனங்களை பிள்ளைகள் தாங்களே தண்டித்துத் திருத்திக்கொள்ளுகிறார்கள். ஒரு பிள்ளை ஒழுங்குக்குத் தவறிநடந்தால், ஒருவரும் அவளுடன் இரண்டு நாளைக்குப் பேசக்கூடாதென்று கட்டளையிடுவார்கள். இவ்விதத் தண்டனை அடைந்

தவள் பைத்தியம்பிடித்தவள் போலாகிறாள். அவள் வாயாடியாக இல்லாவிடினும் அச்சமயத்தில் கட்டாயம் பேசவேண்டுமென்று அவாக் கொள்ளுகிறாள். இங்ஙனம் ஒருநாள் முழுதும் கஷ்டத்துடன் கழித்து, அதிக வெட்கமும் அடக்கமு முண்டானால், மறுநாள் அவளுடன் பேசலாமென்று உத்தரவளிப்பார்கள். இந்த ஏற்பாடு எவ்வித கிரமமுமின்றி நடந்தேவருகிறது. பள்ளிக்கூடத்து அதிகாரிகள் மாணவர்களுடைய நடை, உடை, பாவனைகளையும் பரிசோதிக்கிறார்கள்.

பெண்களுக்குத் திரேகப்பயிற்சி தரும் கைத்தொழிற்சாலைகள் இல்லாவிடினும், அவர்களுடைய உயர்தரக் கல்வியினால் அவர்களுடைய குடும்பநிர்வாக சாமர்த்தியம் குறைவுபடுகிறதில்லை. நற்குண நற்செய்கையுடையவர்களாயும், நன்றாய் வாசிக்கவும் ஆராய்ந்தறியக் கூடியவர்களாயும், கல்விக்கேள்விகளில் மேம்பட்டவர்களாயும், தங்களுக்குக் கூடுமானவரையில் உதவிபுரிபவர்களாயுமுள்ள மடந்தைகளை அந்தஸ்துள்ள மனிதர்கள் மணம்புரியவேண்டுமென்று விரும்புகிறார்கள். 'எவ்வளவு செல்வமிருப்பினும் நல்ல மனையாளில்லாத வீடு பயனில்லாவாம்' என்றபடி, மௌடிகம், அஞ்ஞானம், அறிவின்மை, தீய ஒழுக்கங்கள் இவைகள் முற்றும் குடிகொண்டிருக்கும் காதலியினால் நாயகனுக்கு என்ன உதவி? பால்கன் தீபகல்பத்திலுள்ள மங்கையர்கள் இதற்காகவே, கல்வி தங்களுக்கு இன்றியமையாததென நன்குணர்ந்து, இதில் சிரமத்தையும் கவலையையும் எடுத்துக்கொள்ளுகிறார்கள்.

ஜெர்மனி, பிரான்சு, கிரேக்கு, துருக்கி, அரேபியா, அமெரிக்கா முதலிய தேசப் பெண்கள் எல்லாரும், சகோதரவாஞ்சையுடன்கூடி, மகிழ்ந்து பரஸ்பர சிநேகங் கொள்ளுகிறார்கள். ஒருவருக்கொருவருள்ள கவர்ச்சி, மதிப்பு, சிநேகத்தன்மை ஆகிய இவைகளே அவர்களை இணைத்துக்கட்டும் பந்தம். குலப்பெருமை, மதப்பேதம், சம்பத்து முதலியன அவர்கள் பரஸ்பர சிநேகத்துக்கு இடையூறல்ல.

மதவிஷயத்திலும், கல்விப்பயிற்சியிலும், ஒன்றுகூடுதலிலும் எவரும் பேதமின்றி நடந்துகொள்ளுகிறார்கள். கலாசாலையில், புரொடெஸ்டான்ட் (Protestant) மதப்படி நடத்தும் ஜெபத்திற்கு எல்லாப் பிள்ளைகளும் போகிறார்கள். வேதம் கற்பிக்கப்படும்போதும், தினம் ஜெபாலயத்திலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் செய்யும் தேவாராதனைகளுக்கும், யாவரும் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சனிக்கிழமை, திங்கட்கிழமைகளில் நடத்தப்படும் ஜெபக்கூட்டத்திற்கு யாதொரு நிர்ப்பந்தமில்லாவிடினும், தவறாது போகிறார்கள். அநேகமாய் தங்களுக்குத் தெரியாத அந்நியபாஷை



களில் செய்யும் ஆராதனைக்குப் போய் வழக்கப்பட்டிருந்தவர்கள் மேற்கு தேசங்களின் மாதிரியான ஜெபக்கூட்டங்களில் சுலபமாய்ப் பழகிக்கொள்வது ஆச்சரியம். ஞாயிற்றுக்கிழமைகளில் கூடும் ஸ்திரீகளின் கிறிஸ்தவ சங்கத்துக்கு ஏராளமானபேர் விஜயஞ்செய்து, விமரிசையாய் நடத்துகிறார்கள். ஒவ்வொரு பெண்ணாக, தெரிந்தெடுக்கப்பட்ட வசனங்களைச் சொல்லுவார்கள்; அல்லது முழுமனதுடன் ஜெபஞ்செய்வார்கள். இக்கூட்டங்களில் இங்கிலீஷ் பாஷை விசேஷமாய் உபயோகிக்கிறார்கள். ஆனால் பிள்ளைகள் பக்தி மேலிடும்போது தங்களுக்கு விருப்பமான பாஷைகளாகிய துருக்கி, ஆர்மீனிய பாஷைகளில் கடவுளை ஸ்தோத்திரிக்கிறார்கள்.

மேற்கிலுள்ள பெண்களைவிட இவர்கள், மதவிஷயமாயும் சன்மார்க்க சம்பந்தமாயும் கற்பிக்கப்படும் போதனைகளை எளிதில் அறிந்துகொள்ளுகிறார்கள். மேற்கிலுள்ளவர்கள் கடவுளை வணங்கும் முறைமையைப் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொள்வதுபோல, அமெரிக்கர் கொண்டுவரும் ஆழ்ந்த கருத்துகளும், மேலான நீதிகளும், சத்தியவாக்கியங்களுமுள்ள கிறிஸ்துமதத்தை அநுசரிக்கத் தயாராகவிருக்கிறார்கள். பள்ளிக்கூடத்தில் மதத்தில் முழுத்தேர்ச்சி யடைந்தபின்னர், தங்கள் சொந்த நாடுகளாகிய பல்கேரியா, கிரீஸ், துருக்கி முதலியவிடங்களுக்குச் சென்று, உபாத்தியாயர்களாகவும் மருத்துவச்சிகளாகவும் அமருகிறார்கள்; உத்தம மனையாட்டிகளாகவும் வாழ்க்கைப்படுகிறார்கள்.

## A STORY OF THE MUTINY

## இந்திய சிப்பாய் கலகத்தில் நடந்த ஓர் சரித்திரம்

இந்திய சிப்பாய்கள் செய்த கலகமானது இந்துதேச சரித்திரத்தைப் பயங்கரமாக கறைப்படுத்தின வருஷமாய் இருக்கிறது. இது லார்ட் கானிங்க் கவர்னர்ஜெனரலாக இருந்தபோது 1857-ம் வருஷம் கிளம்பினது. இந்தக் கலகம் இந்தியா முழுவதும் பரவி இங்கிலீஷ் ஏகாதிபத்தியத்தைக் கவிழ்த்துவிடுவதுபோல் காணப்பட்டது.

லார்ட் டல்ஹௌஸி காலத்தில் அநேக மாறுதல்கள் உண்டாயின. பழைய இராஜ்யங்கள் இருந்த இடமெல்லாம், இங்கிலீஷ் அரசாக்ஷி ஏற்பட்டது. இன்னும் சில ஸ்வதேச இராஜ்ஜியங்களைக்கூடக் கொஞ்சக்காலத்தில் இங்கிலீஷ் துரைத்தனத்தார் தங்கள் அரசாக்ஷி

யில் சேர்த்துக்கொள்வார்களோ என்று ஜனங்கள் அஞ்சினார்கள். ரெயில் மார்க்கங்களையும், தபால் சாவடிகளையும், தந்தித் தபால்களையும் பரபரப்பாக ஏற்படுத்தியதைக் கண்டு ஜனங்கள் இவை சாதாரணமான மனிதரால் செய்துமுடிக்கக்கூடியவைகளாவென்று பிரமித்தார்கள். பழைய மாமூல்களெல்லாம் பலவிதத்திலும் வெகு சீக்கிரத்தில் புது ரீதியாக மாறிவிட்டதனால் ஜனங்களுடைய மனதில் ஒருவிதமான திகைப்பு உண்டாயிற்று. மிகவும் பழமையான தங்கள் மதத்தையும் ஆசாரங்களையும் மாற்றிவிட்டு துரைத்தனத்தார் தங்களைக் கிறிஸ்தவர்களாகும்படி நிர்ப்பந்திப்பார்களோ என்கிற அச்சமே ஜனங்களுக்குப் பெரிதாயிற்று.

இதுவுமன்றி இங்கிலீஷ் துருப்புகளுக்குக் கொடுத்த புதுமாதிரியான துப்பாக்கிகளில் தோட்டாக்களுக்கு கொழுப்பு தடவியிருப்பதைக் கண்டு, ஜாதிகட்டுப்பாட்டைக் கெடுக்கவேண்டுமென்கிற எண்ணத்தோடு துரைத்தனத்தார் இப்படிச் செய்கின்றனர் என்ற ஒரு வதந்தி உண்டாயிற்று. அந்த வதந்தியை சிப்பாய்கள் உறுதியாக நம்பினார்கள். உடனே அதற்குப் பரிகாரமான காரியங்களைத் துரைத்தனத்தார் அநுசரித்தும், சிப்பாய்கள் வெடிமருந்து தோட்டாக்களைத் தொடுவதில்லையென்று மறுத்தார்கள். கீழ்ப்படியாத குற்றத்தின் பொருட்டாகச் சிலரைத் தண்டித்தபோது, கலகப்பிரியர்கள் அதுதான் சமயமென்று பலவிதமாகத் தூற்றினார்கள். கலகக்காரர்கள் யாவரும் பற்பல இடங்களில் ஒன்றுகூடி ஐரோப்பிய புருஷர்களையும், ஸ்திரீகளையும், குழந்தைகளையும் துப்பாக்கியால் சுட்டும், நெருப்பில் எரித்தும், கத்திகளால் வெட்டியும், கிணறுகளில் தூக்கிப்போட்டும் வதைசெய்து கொன்றார்கள்.

அலகாபாத்தில் கிடுகிடுக்கத்தக்கதும் எக்காலமும் மறக்கப்படாததுமான அந்த இரவு, மேசையில் டீனிக்கு உட்கார்ந்திருந்தவர்களில் எட்டு யுத்தாப்பியாச வாலிபர் இருந்தார்கள். எவரும் அவர்களின் முகங்களைப் பார்த்தமாத்திரத்தில் புதியதாய் இத்தேசம் வந்தவர்களென்று சொல்லுவார்கள். சீக்கிரத்தில் அவர்களில் காணப்பட்ட பசுமையும் வெண்மையுமான முகத்தோற்றமானது புதியதாய்க் கிழக்கு தேசத்துக்கு வந்த இங்கிலீஷ் வம்சத்தைச் சேர்ந்தவர்களென்று ஐயமறச் சொல்லக்கூடும். அந்த எட்டு வாலிபரும் மிகவும் மகிழ்ச்சியுள்ளவர்களாயும், தங்களுடைய நோக்கங்களை முடிக்க எதிர்நோக்கினவர்களாயும் காணப்பட்டார்கள்.

அவர்கள் சாப்பிட்டுக்கொண்டிருந்த சமயத்தில் இராணுவ ஸ்தலத்திலிருந்து ப்யூகிள் சத்தம் முழங்க அவர்களில் ஒருவர் ‘அது என்ன? உற்றுக்கேள்’ என்றார்.



‘அது இராணுவஸ்தலத்திலிருந்து வரும் ப்யூகிள் சப்தம்.’

உடனே உத்தியோகஸ்தரும் வாலிபரும் ஏகமாய் எழுந்து, சப்தம் பிறந்த இடத்திற்கு ஓடி, கலகக்காரரின் மத்தியிலேயே சென்று, கண்டங்கண்டமாய் தங்கள் சொந்த மனிதர்களாலேயே பச்சாத்தாபமில்லாமல் சங்கரிக்கப்பட்டார்கள்.

அன்று இராத்திரி உயிர் துறந்தும் பிரக்ஞையற்றுமிருந்த அவர்களின் காக்ஷியைப் பார்ப்பதற்கு பயங்கரமாய் இருந்தது. எட்டு வாலிபரில் ஏழுபேர் கொல்லப்பட்டுக் கிடந்தார்கள்.

அவர்களுடைய தொண்டைகள் ஆடுகளைப்போல அறுக்கப்பட்டுக்கிடந்தன, ஆனால் ஒருவன் மாத்திரம் இன்னும் மெதுவாய் சுவாசித்துக்கொண்டும் அகோரமாய் காயப்பட்டுமிருந்தான். சத்துருக்கள் அவனை மரித்துப்போனான் என்று நினைத்துவிட்டுப் போனார்கள்.

பதினாறு வயதுள்ள இந்த தைரியமான வாலிபன் மெதுவாக நகர்ந்து அருகிலிருந்த கணவாயில், பின்தொடர்ந்துவரும் சத்துருக்களுக்குக் காணப்படாமல் ஒளித்துக்கொண்டான். நாலு நாளாக அவனுடைய காயங்கள் கட்டப்படாமலும் இரத்தம் வடிந்துகொண்டும் சகிக்கப்படாத வேதனையோடும் அங்கே கிடந்தான். அவன் அடைந்த கஷ்டத்தை வாயின் வார்த்தைகளால் விவரிக்கமுடியாது; அவ்வித நிலைமையில் அவன் பிழைத்திருந்தது ஆச்சரியமே. ஐந்தாம் நாள் ஆரம்பித்தது. அமைதலாய் இருந்த அந்தக் கணவாயில் பெரும் சப்தம் கேட்டது. மிருக குணமுடைய அவனுடைய பகைவர்கள் அவன் அங்கே இருக்கிறதைக் கண்டார்கள்.

‘இதோ! இன்னொரு கைதி இருக்கிறான். நாம் இவனை இழுத்துக்கொண்டுபோய் மற்றவர்களோடு சேர்க்கலாம்’ என்றார்கள்.

அப்படியே அவனை இழுத்துக்கொண்டு ஒரு சுதேச குடிசையில் அவனைச் சிறையில் வைத்தார்கள். அவனோடுகூட மகமது மார்க்கத்திலிருந்து கிறிஸ்துரக்ஷகரை ஏற்றுக்கொண்ட ஒரு சுவிசேஷகர் இருந்தார். சத்துருக்கள் அவரை மிகவும் வதைத்தார்கள்.

அப்போது அச்சுவிசேஷகர் ‘கிறிஸ்துவை மறுதலிக்கும்படியாக என்னை உபத்திரவப்படுத்துகிறார்கள். அக்கஷ்டத்தை என்னால் தாங்க முடியவில்லை. என்னுடைய தைரியம் போய்விட்டது’ என்று சொன்னார்.

அப்போது கூட வருத்தப்பட்டுக்கொண்டிருந்த வாலிபன், சுவிசேஷகருடைய நம்பிக்கையற்ற வார்த்தைகளைக் கேட்டு, வேதனையோடு தன் தலையைத் தூக்கி மிகுந்த தாபந்தத்தோடே ‘ஐயா, கிறிஸ்துவை மறுதலிக்கவேண்டாம்! ஒருபோதும் மறுதலிக்கவேண்டாம்’ எனப் பரிந்துபேசினான்.

அவர்கள் நம்பியிருந்ததைவிட விடுதலை அதிக சமீபமாய் இருந்தது. தளகர்த்தரான நீல் என்பவர், இவர்கள் இருவரையும் இரக்ஷிக்க மிகவும் துரிதமாக அலகாபாத் சென்றார்.

அந்த யுத்தாப்பியாச வாலிபன் நாலுநாள் கஷ்டப்பட்டு கிறிஸ்துவோடு சந்தோஷமாய் என்றும் ஜீவித்திருக்க மரித்துப்போனான். ஆனால் அவன் சொன்ன வார்த்தைகள் இன்னும் இருக்கின்றன. அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்.

'கிறிஸ்துவை மறுதலிக்கவேண்டாம்,
ஒருபோதும் மறுதலிக்கவேண்டாம்.'

வெளிப்படுத்தல் 2. 10.

## WOMEN'S SHARE IN SPREADING THE GOSPEL

## இந்தியாவின் சுவிசேஷ பிரபல்யவேலையில் ஸ்திரீகளின் பாகம்

**நமது உத்தரவாதம்.**—சுவிசேஷவேலை ஆண்களுக்குமாத்திரமல்ல பெண்களுக்கு முரியது. 'மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள்' என்று யோவேல் தீர்க்கதரிசி உரைத்தான். மகதலேனா மரியாள், யோவன்னாள், சூசன்னாள், மார்த்தாள், மரியாள் முதலான ஸ்திரீகள் கிறிஸ்துவுக்கு உத்தம ஊழியம் செய்தார்களென்றறிகிறோம். சமாரியஸ்திரீ தன் கிராமத்திலுள்ள ஆண்கள் பெண்கள் யாவரும் கிறிஸ்துவை வந்து பார்க்கவும் அவரை மேசியாவாக ஏற்றுக்கொள்ளவும் உதவியாயிருந்தாள். தொற்காள், பிரிஸ்கில்லாள், பெபேயாள் முதலியோரும் ஆதி திருச்சபையில் பல பக்தியுள்ள ஸ்திரீகளும் கிறிஸ்துவுக்கு உத்தம சாட்சிகளாய் விளங்கி, சிலர் ரத்தச்சாட்சிகளாகவும் மரித்தார்களென வாசிக்கிறோம். இக்காலத்திலுங்கூட கல்வியும் பக்தியும் மிகுந்த மேற்கத்திய ஸ்திரீகளான பலர் உலகத்தின் நாநாபாகங்களுக்குஞ் சென்று கல்விச்சாலைகளையும், ஆஸ்பத்திரிகளையும், வேதாகம ஸ்திரீகளின் சங்கங்களையும் ஸ்தாபித்து சுவிசேஷ ஒளியைப் பரப்பி வருகிறார்களென்று கண்ணாரக் காண்கிறோம். நமது நாட்டிலுங்கூட பண்டித ராமபாய் முதலிய ஸ்திரீ சிரோமணிகளும், நமது சொந்த மிஷனில் எத்தனையோ வேதாகம ஸ்திரீகளும் உபாத்தினிகளும் செய்துவரும் வேலையினால் உண்டாயிருக்கும் பலன்கள் நமக்குத் தெரி



யாதவையல்ல. இவ்விதமாய் அந்நாள்முதல் இந்நாள்வரை ஸ்திரீகள் ஆண்டவருக்கு மகிமையான ஊழியத்தைச் செய்துவந்திருக்க, சுவிசேஷ பிரபல யுகமாகிய இக்காலத்தில் இவ்வேலையில் நமது பாகம் விசேஷித்ததாயிருக்கவேண்டும் என்பது தெளிவாகிறது.

மேலும் நமது நாட்டின் நிலைமையைக் கவனிக்கையில் நமது உத்தரவாதத்தின் மிகுதியைக் காணலாம். சராசரி 100 பெண்களில் 99 பேர் வாசிப்பறியாதவர்கள். அந்தர்ப்புரம் என்னும் சிறையிலிருப்பவர்களின் தொகை, 4 கோடி. பத்து வயதுக்குட்பட்ட மங்கிலிகளின் தொகை 26 லட்சமாயிருக்க 15 வயதுக்குட்பட்ட அமங்கிலிகளின் தொகையோ 6 லட்சம். இந்திய விதவைகள் $2\frac{1}{2}$ கோடி. துன்மார்க்க ஜீவியம் செய்வதாக ஒப்புக்கொள்ளும் ஸ்திரீகள் லட்சத்தெழுபதினாயிரம். ஐயோ! என்ன பரிதாபம்! புருஷர் முன்னின்று போதனைகேட்க வழக்கப்படாத இவர்கள் மத்தியில் சென்று அவர்கள் நிலைமைக்கேற்ற வார்த்தைகளைப் பேசி சுவிசேஷவேலை செய்யக்கூடியது பெண்களல்லாது ஆண்களல்லவே. ஸ்திரீகள் குணப்படும்போதுதான் இந்தியாவும் குணப்படும். ஆகையால் பின் காட்டப்படும் சில முறைகளைக் கையாடுவது நன்மையாகும்.

**ஊழியம்.**—(a) பிள்ளைகளை ஆதாயப்படுத்துவது பெரியோரைக் குணப்படுத்துவதற்கேற்ற ஓர் சிறந்த முறை. ஆறு வயதுக்கும் 14 வயதுக்கும் இடையிலுள்ள சுமார் 2 கோடி சிறுமிகள் இந்தியாவிலுண்டு. இவர்களில் பாடசாலையில் கல்விகற்பவர்களின் தொகை 6 லட்சம் மாத்திரம். வருங்காலத்து தாய்மாராகவும் மனைவிகளாகவும் இருக்கப்போகிறவர்கள் இக்காலத்தில் சோம்பேறிகளாக காலம்போக்குகிறார்கள். இதை அறிந்தே மிஷனெரிமார் அநேக பாடசாலைகளை ஸ்தாபித்திருக்கின்றார்கள். சிறுபிராயத்தில் அவர்கள் அடையும் பயிற்சி பயன்படாமல் போகவேமாட்டாது. சிறுபருவத்திலடைந்த போதனையினாலேயே பலர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருப்பதாகச் சாட்சியிடுகிறார்கள். பாடசாலைகளையும், கிறிஸ்தவமுயற்சி சங்கங்களையும், ஓய்வுநாள்பள்ளிக்கூட வகுப்புகளையும் ஸ்தாபித்து மார்க்கசத்தியங்களைச் சிறுவருக்கு தெளிவாய்ப் போதித்துவர நாம் கவலையெடுத்துக்கொள்ளவேண்டும்.

(b) ஸ்திரீகள் சாவகாசமான நேரங்களில் கூட்டமாகவும் பவிஞ்சுகளாகவும் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கித்து சன்மார்க்கப் பிரதிகளையும் வேதபங்குகளையும் வாசிக்கக் கொடுக்கலாம். கிராமங்களில் தாய்மாரின் சங்கம், வேதபாட வகுப்பு, ராஜகுமாரத்திகளின் சங்கம், தொற்காளின் சங்கம் முதலியவைகளை சிரத்தையுடன் நடத்தி ஜனசங்கத்துக்கும் மார்க்கத்துக்குமடுத்த சத்தியங்களைப் போதிப்பது

பேராசீர்வாதமாயிருக்கும். கடந்தகாலங்களில் மதுரைச்சபையில் செய்து சித்தியடைந்திருப்பதுபோல, பல ஸ்திரீகள் போதகருடன் கிராமங்களுக்குச் சென்று சுவிசேஷ ஊழியம் செய்து இரவில் ஒளிச் சித்திரப்படம் காட்டி போதிப்பது நல்லது. திருநெல்வேலி சபை நடத்துவதுபோல் சுவிசேஷ ஞாயிறு ஒன்று ஏற்படுத்தி வேலைசெய்வதும் அனுகூலமாயிருக்கும். பேதமையாக எண்ணப்படும் நமது வார்த்தைகள் ஜனங்களின் கவனத்தை இழுக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை.

(c) இவ்வூழியத்தில் தனித்தாள்வேலை அதிக முக்கியமானது. வேதாகம ஸ்திரீகளாக வீடுகளுக்குட்சென்று தனித்தாள்களுக்கு வாசிப்பு கற்பித்தும், வேதவசனங்கள், பாட்டுகள், கிறிஸ்துவின் சரித்திரம் முதலியவற்றைப் படிப்பித்து சமயம் கிடைக்கும்போதெல்லாம் சுவிசேஷத்தைப் பரப்பிவரவேண்டும். அந்தர்ப்புர ஸ்திரீகளுக்கும் விதவைகளுக்கும் நமது அன்பான வார்த்தைகள் ஆறுதலையளித்து குணப்படுத்த ஏதுவாகும். சமயத்திற்கேற்ற தையல் முதலிய ஜனசங்க உதவிகளைப் புரிவதால் சிநேகஞ்செய்து தனிச் சம்பாஷணை செய்யலாம். கிராமங்களில் கிறிஸ்தவர்களிலுங்கூட வாசிப்பறியாத முக்கால்வாசி பெண்களுண்டு. வாசிப்பறிந்த ஒவ்வொரு சகோதரியும் தன் கிராமத்திலுள்ள ஒரு பெண்ணுக்காவது வாசிப்பு கற்பிக்க ஏற்படுவது அவசியம். எப்படியாவது ஒவ்வொரு கிறிஸ்தவபெண்ணும் தினந்தோறும் ஒரு ஸ்திரீயினிடமாவது கிறிஸ்துவைக்குறித்து சில வார்த்தைகள் பேசும் பழக்கம் உடையவர்களாதல் வேண்டும்.

ஜீவியம்.—வார்த்தைகளால் மாத்திரமல்ல, நமது பரிசுத்த ஜீவியத்தாலும் உத்தம ஊழியம் செய்யலாம். நமது வார்த்தைகளைவிட ஜீவியத்தையே அதிகமாய்க் கவனிக்கிறார்கள். போதனையைப்போலவே சாதனையும் இருக்கும்போதுதான் நமது ஊழியம் நற்கந்தமும் பிரயோஜனமுமானதாகும். இந்தியாவில் சுவிசேஷம் பரம்பாமலிருப்பதற்குப் பெரியதடை கிறிஸ்தவர்களின் குறைவான ஜீவியமே. நமது ஜீவிய வெளிச்சம் அவர்களுக்குமுன்பாக பிரகாசிப்பதால் அநேகரை ஒளியில் நடத்தும் கருவிகளாயிருப்போமாக.

பொருள் உதவி.—சுவிசேஷவேலைக்குப் பொருள் அத்தியந்த அவசியம். சுவிசேஷத்தில் பல ஸ்திரீகள் தங்கள் ஆஸ்திகளால் கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்தார்களென்று சொல்லியிருக்கிறது. மிஷனெரிமாரும் நமது தேசம் குணப்படும்படி திரண்ட பணத்தைச் செலவிடுகிறார்கள். இது நமது தேசமாகையால் நமது தேசத்தின்மீது அபிமானமுள்ளவர்களாய் செய்யப்பட்டுவரும் வேலைக்குதவியாக நாம் பொருளுதவி செய்வதும் அவசியம்.



ஜெபம்.—என் உடன் சகோதரிகளே, நமது சகோதரிகளின் நிர்ப்பந்த நிலைமையை உணர்ந்து, உழைத்து பொருளுதவி செய்வதுடன் ஜெபிப்பதும் நமது கடமையே. அதிகமாய் ஜெபிப்பவர்களே அதிகமாய் உதவிசெய்கிறவர்கள். மூடி துரையின் சித்தியுள்ள வேலைக்கும் பல ஆவிக்குரிய எழுப்புதலுக்கும் சில பக்தியுள்ள ஸ்திரீகளின் ஜெபமே காரணமாயிருந்தது. செய்யப்பட்டுவரும் வேலைக்காகவும் சகல மிஷனெரி சங்கங்களுக்காகவும் வேண்டிக்கொள்வோமாக. நமது சகோதரிகளுக்காக எஸ்தரைப்போல் 'என் ஜனத்தின்மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படி பார்க்கட்டும், நான் செத்தாலும் சாகிறேன், என் மன்றாட்டுக்கு என் ஜனங்கள் கட்டளையிடப்படுவதாக' என்று ஊக்கமாய் ஜெபத்தில் தரித்திருப்போமாக. ஜெபமே ஜெயம்.

## SOME MISTAKES ABOUT ALCOHOLIC DRINK

## மதுபானத்தைப்பற்றிய சில தப்பான அபிப்பிராயங்கள்

சென்ற 1916-ம் வருஷத்தில், வைத்திய சாஸ்திரத்தில் தேறினவர்களும் இந்தியர்களின் தேக சுகாதார நிலைமையை அனுபவத்தில் கண்டறிந்தவர்களுமான சென்னையிலுள்ள டாக்டர்களாகிய பன்னிரண்டு வைத்திய சிரோமணிகள், கள், சாராயம் முதலிய லாகிரி பானங்களை உபயோகிப்பதில் தாங்கள் கண்ட அனுபவங்களைப்பற்றி திட்டமாய் ஆராய்ச்சிசெய்து, அடியிற்கண்ட விபரங்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

1. இத்தேசத்திலுள்ள அநேகர், பிரசவமான ஸ்திரீகளுக்கு பிராந்தி முதலிய மதுபானத்தைக் கொடுப்பதினால் அவர்களுடைய பலவீனம் நீங்குவதுடன் பிரசவத்தினால் நேரிடும் பற்பல வியாதிகளையும் அது கண்டித்து புது பெலத்தை உண்டாக்கும் என்று நினைக்கிறார்கள். இது மிகவும் தப்பான எண்ணம். குழந்தை பெற்ற தாய், சாராயம் முதலிய லாகிரி பானத்தை அருந்துவது நஞ்சை உட்கொள்ளுவதற்குச் சமானம்.

2. பிரசவித்த பெண் தலை முழுகும்போதும், குழந்தைக்கு ஸ்நானம் செய்விக்கும்போதும், தண்ணீரினால் குளிர்ச்சி தாக்காதபடிக்கு தாயாருக்கும் சில சமயங்களில் குழந்தைக்கும் மதுபானம் கொடுப்பது வழக்கம். இத்தேசத்தவரின் நிலைமையைத் திட்டமாய் அறிந்த டாக்டர்மார், இப்படிச் செய்வதினால் எவ்வித அனுகூலமு

யில்லை என்றும், சில சமயங்களில் இது மோசத்தை விளைவிக்கும் என்றும் கண்டறிந்திருக்கிறார்கள்.

3. பலவீனமுள்ள குழந்தைகளுக்கு சமயாசமயத்தில் பிராந்தி, பீர் முதலியவற்றை மருந்தாக உபயோகிப்பதனால் நன்மையுண்டாகும் என்பது சிலருடைய அபிப்பிராயம். ஆனால் இந்த வைத்திய சாஸ்திரிகள் இதைப்பற்றி விசாரணைசெய்து, பிள்ளைகளுக்கு இவைகளைக் கொடுப்பதினால் பிரயோஜனமில்லை என்று ஏகசம்மதமாய் வெளியிடுகிறார்கள். மேலும் அவர்களில் ஐந்து பேர் இதைப்பற்றி விசேஷித்த ஆராய்ச்சிசெய்து, லாகிரிபானத்தை உட்கொள்ளும் பிள்ளைகள் மிக்க பலவீனமாய்ப்போக நேரிடுகிறது என்று சொல்லுகிறார்கள்.

4. லாகிரிபானத்தை உட்கொள்ளுகிறவனுக்கு, அது புத்திக் கூர்மையையும் மனோபலத்தையும் உண்டாக்கும் என்பது சிலருடைய நம்பிக்கை. இந்த வைத்தியர்களில் ஒருவர், மதுபானத்தை ஒருவன் மட்டாய் உபயோகிக்கும்போது, அச்சமயத்தில் அதினாலே அவனுக்கு சற்று புத்தி தெளிவு உண்டாகும் என்கிறார். ஆனால் மற்ற யாவரும் இதை ஒப்புக்கொள்ளுகிறதில்லை. இதைப்பற்றி ஆழ்ந்த யோசனையோடு விசாரணை செய்தவர்களின் தீர்மானத்தின்படி, மதுபானத்தினால் மூளைக்கு அபாயம் நேரிடுகிறதேயொழிய புத்திக் கூர்மை வராது.

5. சிலர், மதுபானம் ஜீரணசக்திக்கு அனுகூலமாயிருக்கிறதென்று நினைத்து, போஜனத்துடன் இதை உபயோகித்தல் நலம் என்கிறார்கள். அநேகர் இவ்வித அபிப்பிராயங்கொண்டிருப்பதினால், டாக்டர்மார் இதைப்பற்றித் தீர்க்க ஆலோசனை செய்திருக்கிறார்கள். அவர்களில் எட்டுப் பேர் மதுபானம் ஜீரணசக்திக்கு அனுகூலமானதல்ல என்றும், மற்ற நான்கு பேர், வியாதியினால் பீடிக்கப்பட்ட ஒருவன் பசிதாகம் அற்றவனாய்ப் போகும்போது, வைத்தியரின் அளவுப்பிரமாணத்தின்படி மதுபானத்தை மட்டாக உட்கொள்வதினால், அந்தக் காலத்தில் மாத்திரம் அது சற்றுப் பிரயோஜனமாயிருக்குமேயொழிய மற்ற சமயங்களில் அதினால் பிரதிகூலமே உண்டாகுமென்றும் கூறுகிறார்கள். சுருக்கமாய்ச் சொல்லுமிடத்து, அது சுகதேகிகளின் ஜீரணத்துக்கு அனாவசியமென்றே தீர்மானித்திருக்கிறார்கள்.

6.* ஒருவன் பிரயாணத்தினாலாவது, பந்தாட்டம் முதலிய சரீர அப்பியாசத்தினாலாவது, நெடுநேரம் படித்ததினாலாவது சோர்படைந்திருக்கும்போது, பிராந்தி முதலிய பானத்தை அருந்தினால் அது சோர்பை நீக்கிவிடும் என்பது சிலருடைய கோட்பாடு. மதுபானம்



இவ்வண்ணமே பலரை வஞ்சித்துப்போடுகிறது. எப்படியெனில், ஒருவன் அதை உட்கொண்டவுடன் அவனுடைய சோர்பு நீங்கி ஓர் வித உற்சாகம் உண்டாவதுபோலத் தோன்றுவது வாஸ்தவமே. ஆயினும் சிறிதுநேரத்தில் அந்த உற்சாகமும் களையும் நீங்கவே, முன்னிலும் மகாசோர்பும் மனத்தளர்ச்சியும் அடைகிறான்.

7. மதுபானம் அயர்ந்த நித்திரைக்கு அனுகூலம் என்பது குருட்டாட்டமான ஒரு கொள்கை. ஒருவன் மதுபானத்தை மட்டுக்குமிஞ்சி சாப்பிடும்போது மிதமிஞ்சின உறக்கம் உண்டாவது நிச்சயமே. ஆனால் இது சுகநித்திரைக்கு அனுகூலமென எவருமே சொல்லத் துணியார். பன்னிரண்டு டாக்டர்களும் இப்படியே கூறுகின்றனர். அவர்களில் ஒருவர், வியாதியஸ்தனுக்கு வைத்தியரின் அளவு பிரமாணத்தின்படி சமயாசமயத்தில் இதைக் கொடுப்பதால் நித்திரைக்கு சற்று அனுகூலமெனக் கூறினாலும், சுகநித்திரைக்கு மதுபானம் பிரதிகூலமென்பதே வைத்திய பண்டிதர்களின் சர்வசம்மதமான கோட்பாடு.

கள், சாராயம், பிராந்தி முதலிய லாகிரிவஸ்துக்களை அருந்தும் வாடிக்கையுடையவர்கள், மேற்கூறிய விஷயங்களை யோசித்தாராய்ந்து, அப்படிச் செய்வது தங்களுக்கு மோசத்தையே விளைவிக்கும் என்பதை நன்குணர்ந்து, அந்தத் துர்ப்பழக்கத்தை முற்றிலும் நீக்குவது அவசியம். மேலும் அதை உபயோகிக்கும் வழக்கமில்லாதவர்கள் அதைத் தொடாமல் இருப்பதே மேன்மை.

'நஞ்சுண்பார் கள்ளுண்பவர்.'

## LOSS THROUGH GREED

## பேராசை பெருநஷ்டம்

ஓர் ஊரில் ஒரு பிச்சைக்காரனிருந்தான். அவன் ஒரு வீதியில் உட்கார்ந்துகொண்டு வருவார் போவாரிடமிருந்து பிச்சைவாங்கும் காசைத் தன் பையில் போட்டுவைப்பான். அவன் தனக்குண்டான தரித்திரத்தை நினைத்து முறுமுறுத்துக்கொண்டிருக்கும்போது, ஓர் ஆச்சரியமான சங்கதி நடந்தது. அதென்னவென்றால் :—

'பூலோகத்தில் எத்தனையோ ஜனங்கள் சம்பத்துள்ளவர்களுங்கூடத் தங்கள் நிலைமையை எண்ணி ஆனந்தப்படாமல், தங்களுக்கு இன்னும் வேணுமெனக் கருதுகிறார்களல்லவா? ஆனால் நான், எனக்கு அன்ன வஸ்திரத்துக்குப் போதுமானதிருந்தால் பூரண திருப்தியுள்ளவனாயிருப்பேனே' என்று மனதில் யோசித்துக்கொண்

டிருக்கும்போது, சுவாமியே அப்பிச்சைக்காரனிடம் வந்து, அவனுடனே: 'அப்பா! இங்கே பார், உனக்குச் சகாயம்பண்ணவேண்டுமென்று நான் வெகுகாலமாய் ஆசைகொண்டிருந்தேன். உன் பையைப் பிடி, நான் அதற்குள் சுவர்ண நாணயங்களைப் போடுகிறேன்; ஆனால் ஒரு சங்கதியை நீ மறக்கக்கூடாது. என்னவென்றால், நான் போடும்போது பூமியில் விழுகிற சுவர்ணங்களெல்லாம் மண்ணாய் விடும்' என்றார். பிச்சைக்காரன் மகா சந்தோஷங்கொண்டவனாய் 'ஆகா! நல்லதாகட்டும், சுவாமி' என்று சொன்னான். அப்போது சுவாமி பிச்சைக்காரனை நோக்கி, 'உன் பை பழசாயிருப்பதினால் ஜாக்கிரதையாயிரு' என்றார். பிச்சைக்காரன் அவசரமாய்த் தன் பையை விரித்துப் பிடித்தான். சுவர்ணங்கள் பையில் விழத் தொடங்கின. 'இப்போது போதுமா?' வென்று சுவாமி கேட்க, பிச்சைக்காரன் 'போதாது, போதாது, இன்னும் கொஞ்சம் ஜாஸ்தி வேண்டும்' என்றான். அப்போது இன்னும் இரண்டு மூன்று பிடி நாணயங்கள் பைக்குள் விழுந்தன. பிறகு சுவாமி, 'எச்சரிக்கை, உன் பை பாரத்தினால் கிழியும்போலத் தோன்றுகிறது' என்று சொல்லி அவனை எச்சரித்தும், அவன் பேராசையினால் இன்னொரு பிடி விழவே, பை ஒரு முனையிலிருந்து மறுமுனை வரையில் கிழிந்து போய் நாணயங்களெல்லாம் நிலத்தில் விழுந்து மண்ணாய் மாறிப் போயிற்று. சுவாமியும் மறைந்துபோனார். பேராசை பெருநஷ்டம் அல்லவா? போதுமென்கிற மனதுடனே கூடிய தெய்வ பக்தியே மிகுந்த ஆதாயம்.

[இது ஒரு கிரேக்க புராணக்கதை.]

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

1917-௵ மே௴

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | செ. | எபி. | 10. | 1—14 | 11 | வெ. | யோவ. | 1. | 1—17 | 21 | தி. | அப். | 2. | 25—36 |
| 2 | பு. | ,, | 10. | 15—25 | 12 | ச. | ,, | 2. | 1—10 | 22 | செ. | ,, | 2. | 37—47 |
| 3 | வி. | ,, | 10. | 26—39 | 13 | ஞா. | ,, | 3. | 1—10 | 23 | பு. | ,, | 3. | 1—10 |
| 4 | வெ. | ,, | 11. | 1—16 | 14 | தி. | ,, | 4. | 1—11 | 24 | வி. | ,, | 3. | 11—26 |
| 5 | ச. | ,, | 11. | 17—29 | 15 | செ. | யாக. | 1. | 1—15 | 25 | வெ. | ,, | 4. | 1—12 |
| 6 | ஞா. | ,, | 11. | 30—40 | 16 | பு. | ,, | 2. | 1—13 | 26 | ச. | ,, | 4 | 13—22 |
| 7 | தி. | ,, | 12. | 1—13 | 17 | வி. | அப். | 1. | 1—14 | 27 | ஞா. | ,, | 4. | 23—37 |
| 8 | செ. | ,, | 12. | 14—29 | 18 | வெ. | ,, | 1. | 15—26 | 28 | தி. | ,, | 5. | 1—16 |
| 9 | பு. | ,, | 13. | 1—14 | 19 | ச. | ,, | 2. | 1—13 | 29 | செ. | ,, | 5. | 17—32 |
| 10 | வி. | ,, | 13. | 15—25 | 20 | ஞா. | ,, | 2. | 14—24 | 30 | பு. | ,, | 5. | 33—42 |
| | | | | | | | | | | 31 | வி. | ,, | 6. | 1—15 |

C. L. S. PRESS, MADRAS—1917.

# மாதர் போதினி

No. 234 ஜூன் 1917 No. 6

## A TAMIL ECHO OF REV. N. V. TILAK'S 'MY MOTHERLAND'

By N. ALAGUMANI

தேச வாஞ்சை யில்லாத சிதடன்றன்
நாசி மூச்சதும் நஞ்சை நிகர்க்குமே.

'மற்றுப்பற்றெனக்கின்றி'—என்ற தேவாரப்பண்.

(இசையொடு படித்தாலன்றி இன்பம் பயவாது.)

1 உன்றன்மீதுறு வாசையால்ஓடெ டுத்துக்கந்தை யுடுத்துவேன்,
அந்தமார்புகழ் யாவையும்அற்பக் குப்பையென்றுதான் எண்ணுவேன்.
எந்தவேளையி லாகிலும்உயிர் உடலைநீப்பது நிச்சயம்,
அந்தவேளையி லும்உனைநினைந் தடிக்குமேயென தாருயிர்.

2 உன்னுதாரத் துதிப்பதைவிட உயர்பொருளொன்று வேண்டிலேன்;
மன்னுயிர்கவர் மறலியும்அதைக் கவர ஆற்றலுளன் கொலோ?
உன்றன்சேவையில் உயிர்உடலெல்லாம் உவந்தளிப்பேனென் றேசமே;
கொன்னென்றுபலர் இகழினும்அதைக் குறிக்கொளேனொரு பொருளென.

3 மகனும்நானுனைக் காற்றுமுதவி மகிழ்ந்துசெய்வேனென் றேசமே!
பகருப்பக்த ரஞ்சனாவருள் பாலிப்பாயிதை மேற்கொள!
எம்புகழ்பொருள் புந்தியொன்றையும் வேண்டிலேஎன்றன் கண்மணி,
எம்மையேயர்ப்பணம் பண்ணவமுறுகிறாய் எமதம்மையே.

4 கவைக்குதவாக் கடையேனுமெனைக் கமலச்சேவடி சாத்தினேன்,
நவையறுமெந்தை யுந்தையாம்ஜக தந்தைஜேசுவை மானவே:
அலகிலாப்பரம் பொருளேயேசு அண்ணல்சற்குரு ஒப்பவே,
உலகுக்கும்ஹிந்த வன்னைக்கும்பல பணிசெய்யக் கிருபை பாலியே.

VOL. XXXII.

5 இன்னணம்பரன் மைந்தன் போல்நினக் கேற்ற சேவைநான் செய்திடின்,
மின்னிசர்ஜடம் தன்னரும்பல தாளிதாளியாய் மாறினும்,
என்னரும்மாதாய் பண்ணரும்பல கோடிகோடியுகங்களாய்,
உன்னரும்ஒரு மைந்தனுயுனக் குற்றதொண்டுவு ருற்றுவேன்.

சேடன்=கீழ்மகன்; அர்தம் ஆர்=அழகுபொருந்திய; நீப்பது=விடுவது; உதாம்=வயிறு; மறலி=மரணநாதன்; கொன்னென்று=வீணென்று; ஆற்றும்=செய்யும்; புந்தி=அறிவு; ஏறுதல்=ஆசித்தல்; நவையறு=குற்றமற்ற; மான=போல; அலகிலா=அளவிட முடியாத; தாளி=தாசி; உருற்றுவேன்=செய்வேன்.

(The United Church Herald)

## THE TRUTH ABOUT THE WAR

## தற்கால யுத்தத்தைக் குறித்த சத்தியம்

### (ஓர் வழிச்சம்பாஷணை)

வேனிற்காலப் பகலில் ஒரு தினம் நான் ஒரு கிராமத்திற்குச் செல்லுகையில், நாயர் ஜாதியார் என்று எனக்குத் தோன்றின இந்துக்களான நான்கு வழிப்போக்கர் என்னோடு வழிநடந்து வந்தார்கள். அவர்களில் ஒருவர் என் கையிலிருந்த ஒரு பத்திரிகையைக் கேட்கவும், நான் அதை அவருக்கு எட்டிக்கொடுத்தேன். அப்பத்திரிகையின் பேர் ஏசுவின் நாமம் என்பது. அதை அவர் வாசிக்க ஆரம்பிக்கவே, கூடவந்தவரில் இன்னொருவர் ‘அந்த நாமம் நமக்கு வேண்டியதில்லை. பத்திரிகையைத் திரும்ப அவருக்கே கொடுத்துவிடும், அவர்தான் அதைக் கொண்டுபோகட்டும். அது அவருக்கும் அவருடைய ஜாதியாருக்கும் தான் ஏற்றது’ என்று உக்கிர பார்வையோடு அதட்டினார். ‘நண்பரே, ஏன் இப்படி பேசுகிறீர்?’ என்று கேட்கவும், அவர் ‘உங்கள் ஜாதியாருடைய தந்திரங்கள் எல்லாம் எனக்குத் தெரியும், உங்கள் மார்க்கமானது சீக்கிரமாய் முடிவடையப் போகிறதென்பதை நீர் அறியாமலிருக்கிறீரா?’ என்றார். ‘அதெப்படி?’ என்று யான் வினவ, ‘அது இன்னும் உமக்குத் தென்படாதது ஆச்சரியம்! ஐரோப்பா கண்டத்தில் ஒருவரோடொருவர் சண்டை செய்கிற ஜாதியார் உங்கள் ஏசுவை வழிபட்டு வருகிறவர்களான ஒரே மார்க்கத்தார் அல்லவா? தங்கள் உடன் சிருஷ்டிகளை ஆயிரமாயிரமாகவும் லட்சாதிலட்சமாகவும் இத்தனை குரூரமானவிதமாய் சங்காரம் செய்து அவர்கள் சண்டைபோடுகிறதென்ன? உங்கள்



பாதிரிமார் வந்து இத்தேசத்திலும் உலகத்தின் நானுபாகங்களிலுமுள்ள க்ஷேத்திரங்களையெல்லாம் தீட்டுப்படுத்தின காரணத்தையிட்டு உண்டான எமது தேவர்களுடைய கோபத்தால் தற்கால யுத்தம் நிகழ்ந்தது என்று நீர் அறியவேண்டியது. கிறிஸ்தவ ஜாதியார் என்று சொல்லப்படுகிற யாவரும் நிர்மூலமாகி எங்கள் இந்துமார்க்கம் அதன் ஸ்தானத்தில் ஸ்தாபிதமாகும் வரையில் இந்த யுத்தம் ஓயமாட்டாது’ என்று அவர் சொன்னார். அதற்கு நான் கிறிஸ்து மார்க்கம் பரம்பியிராத தேசம் உலகத்தில் இல்லை என்றும் இந்து மார்க்கமோ உலகத்தின் ஒரு சிறிய பங்காகிய இந்துதேசத்திலன்றி வேறெங்கும் அனுசரிக்கப்படுகிறதில்லை என்றும் ரூபித்தேன்.

அப்பால் இந்தக் கொடிய யுத்தத்தைக் குறித்து பின்வருமாறு சொன்னேன்:—இக்காலத்தில் சம்பவித்திருக்கும் இப்பயங்கர போருக்கும் ஆவிக்குரிய மார்க்கமாகிய கிறிஸ்துமார்க்கத்திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. கைழும் சமர் ஜெர்மன் சக்கரவர்த்திக்கும் அத்தேசத்தின் புருஷியான தலைவருக்கும் உண்டாயிருந்த பேராசையினாலே எழும்பிற்று. அவர்கள் தங்களுடைய இராணுவப் பலம் உலகத்தின்கண் உள்ள சகல ராஜாங்கத்தாருடைய இராணுவப் பலத்திலும் மிஞ்சினது என்றும் தங்கள் இராணுவ சக்தியை ஜெயிக்க ஒரு இராஜாங்கத்தாராலும் இயலாது, அதை எதிர்க்க திறமை வாய்த்தோர் ஒருவருமில்லையென்றும் அகங்காரங் கொண்டார்கள். இந்த எண்ணத்தால் அவர்கள் யூரோப்பின் மற்ற வல்லரசகளோடு போர்பொருதி இங்கிலாந்து, ருஷியா முதலான சகல ராஜ்யங்களின் அரசர்களையும் தங்கள் கீழ் அரசர்களாக்கவேணும் என்று தீர்மானம் கொண்டார்கள். “பராக்கிரமமே பலம்” என்ற சித்தப்பிரமைகொண்டவராய் ஜெர்மன் சக்கரவர்த்தி பிரான்ஸோடும் பெல்ஜியத்தோடும் அகங்காரயுத்தம் தொடுத்தார். இந்த நிஷ்டூரத்துணிவு யூரோப்பின் பஞ்சவல்லரசுக்களில் ஒன்றாகிய ஜெர்மனியும் கூடிச்சேர்ந்து செய்திருந்ததான ஒரு உடன்படிக்கையின் நிபந்தனைக்கு விரோதமானதாயிருந்தது. அவ்வுடன்படிக்கையின்படி, பெல்ஜியம் முதலான சிற்றரசுக்களோடு வல்லரசுக்கள் யுத்தத்திற்கு துணியக்கூடாது என்றுமாத்திரமல்ல, அவைகளுக்கு விரோதமாய் சத்துருக்கள் படையெடுத்துப்போக நேரிடுமேயாயின் அவற்றைப் பாதுகாக்க வேண்டியதும் வல்லரசுக்களின் கடமை என்று பிரத்தியட்சமாயிருந்தது. ஜெர்மானியர் பெல்ஜியத்தின்மீது படையெடுத்து வந்தபோது பெல்ஜியத்தார் இங்கிலாந்தோடு சகாயத்துக்காய் அபேட்சித்தார்கள். இங்கிலாந்து அத்தருணம் யுத்தத்திற்கு எத்தனமில்லாதிருந்ததினால் ஜெர்மனியிடம் அவ்வுடன்படிக்கையின் நிபந்

தனைகளைக்குறித்து உணர்த்திக்காட்டிற்று. ஜெர்மனி அதன் வேண்டுகோளுக்கு இணங்காமல் ஏழை பெல்ஜியத்தின்மீது தன் மிருகத்தனமான கொடுமையை நடத்த துணிவுற்றது. பெல்ஜியத்தைப் பிடித்தால் சுளுவில் பிரான்ஸ்தேசத்தைப் பாழாக்கிவிடலாம், பின்பு இங்கிலாந்துக்கும் அவ்வாறு செய்யலாம் என்பதே ஜெர்மனியின் உத்தேசம். காத்திரதேகியான அரக்கன் ஒருவன் திக்கற்ற ஒரு பெலவீன ஏழையை தன் புஜபலத்தால் நசுக்கி உயிர்வாங்குவதைத் தூரநின்று தரிசித்துக்கொண்டுமாத்திரம் நிற்பது கிறிஸ்தவ கருமம் ஆகுமா? இங்கிலாந்து இந்தக் கொடிய யுத்தத்தில் சிக்கப்பட்டுப்போக உண்டான காரணம் இதுதான். கிறிஸ்தவ ஆவியினால் நடத்தப்பட்டு தான் இராணுவ மூஸ்திப்பு சற்றேனும் இல்லாதிருந்த சந்தர்ப்பத்தில் ஜெர்மனி உன்னியதுபோல கைவலிமையல்ல, நியாயமே பிரமாணம் என்பதை ஸ்தாபிக்க முயன்று பெல்ஜியத்தின் விடுதலைக்காக யுத்தத்தில் பிரவேசிக்க நேரிட்டது.

அப்போது என்னோடு சம்பாஷித்தவரோடு கூடிவந்த மூன்றாம் ஆள் 'யுத்தம் முடிவடைந்து, சமாதானம் எப்போது உண்டாகப் போகிறது?' என்று கேட்டார். அதற்கு நான் 'அது ஒருவரும் சொல்லிக்கொள்ளக் கூடியதல்ல. ஜெர்மனியின் இராணுவ வல்லமைத் துணிவு அடியோடே நொறுக்கப்பட்டாலொழிய சமாதான உடன்படிக்கை உண்டாவது கூடிய காரியமல்ல. ஏனென்றால் ஜெர்மனி தான் செய்திருந்த முன் உடன்படிக்கைப்படி யுத்தம் செய்யக்கூடாது என்று இங்கிலாந்து கூறியபோது, ஜெர்மனி அதைச் சற்றேனும் வகைவையாமல் "ஒரு கடுதாசி துண்டுக்காக ஏன் யுத்தத்திற்கு புறப்படுகிறீர்கள்" என்று பகிடிபண்ணிற்று. நாகரீகம் வர்த்தனையாய் வருகிற இக்காலத்தில் நமது உடன்படிக்கைகள் அல்லது பிரமாணங்கள் யாவும் கடுதாசியில்தான் எழுதி முத்திரிக்கப்பட்டு வருகின்றன. தான் பட்ட கடத்திற்காக கடப்பத்திரம் எழுதி ரெஜிஸ்தர் செய்தவனை ஒரு மனிதன் தான் செய்த உடன்படிக்கையை நிறைவேற்றாமல் தான் செய்த பிரமாணங்கள் விலைபிடியாத ஒரு துண்டு கடுதாசியேயன்றி தன்னைக் கட்டுப்படுத்தும் பிரமாணம் அல்ல என்று புரளுவானானால் அந்த மனுஷனைக்குறித்து உமக்கு என்ன எண்ணம் இருக்கும்? அந்த மனுஷன் தன் கடன்களையெல்லாம் சரிவர தீர்க்கும்வரையில் நீர் அவனோடு சண்டை செய்யமாட்டீரா? இப்போது நடக்கும் யுத்தத்தின் யதார்த்த நிலைமையும் அப்படியே இருக்கிறது.

சமாதான உடன்படிக்கைகளைக் கடுதாசியில்மாத்திரம் எழுதிவைப்பதினால் சமாதானம் உண்டாகமாட்டாது. ஏனெனில் ஜெர்மானியர்



தங்கள் வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுகிறதில்லை. உடன்படிக்கைகள் கடுதாசியில் எழுதப்படக்கூடாதாயின் ஜெர்மானியரின் உள்ளத்தில் அது எழுதப்படவேண்டியது' என்றேன். கூடிவந்தவர்களான அந்த சிநேகிதர் இங்கிலீஷ்காரரை இதில் குற்றம் சுமத்த நியாயமில்லை என்று சம்மதித்தார்கள். அதில் நான்காம் ஆள் அப்போது 'ஜெர்மன் சக்கரவர்த்தி ஜெயமடைந்து இத்தேசத்தில் வருகிறதானால் இத்தேசத்து ஜனங்களாகிய நமக்கு அனந்தம் நன்மைகள் உண்டாகுமே' என்றார். 'அது பயித்தியமான எண்ணம். இத்தேசத்தில் உள்ள சிலருக்கு ஜெர்மானியரின் தந்திரமான அரசு முறைமையைக் குறித்து அறிவில்லாததினால் இவ்வித வீண் எண்ணம் கொள்ளுகிறார்கள். ஜெர்மன் சக்கரவர்த்தி இந்த யுத்தத்தில் ஜெயமடைவதில்லை, அது நிச்சயம். ஆனால் ஜெர்மன் சக்கரவர்த்தி இத்தேசத்தில் கால் வைக்க நேரிடுமாயின் அவர் எவ்விதம் செய்வார் என்று அறிவீர்களா? சோம்நாத் கோவில் விம்மத்தை நசிப்பித்த காஸ்னி மகம்மது செய்தது போலவே அவருடைய முதல் செய்கை உங்கள் விம்மங்களைத் தகர்த்து, உங்கள் க்ஷேத்திரங்களையும் கோவிலையும் கொள்ளையடித்து, ஒரு விதத் தப்புமார்க்கத்தைக் கிறிஸ்துமார்க்கம் என்று கொண்டுவந்து ஸ்தாபித்து, அதை ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்தம் செய்து, பாரமான இறையை இரக்கமில்லாமல் ஏற்படுத்தி, தன் இராணுவ வல்லமையால் தன் சட்டங்களை ஸ்தாபிப்பதாயிருக்கும்' என்று நான் பதில் சொன்னேன். 'அப்படியா, இது ஒருபோதும் படாது' என்று அவர்கள் சொன்னார்கள். இப்படி சம்பாஷித்துக்கொண்டுபோகையில் ரோட்டுகள் பிரிகிற இடத்தில் நாங்கள் வந்து சேர்ந்து ஒருவரை ஒருவர் வழியனுப்பிக்கொண்டோம். ஆனால் அம்மனிதர் சத்தியத்தை உணர்ந்தவர்களாய்ப் பிரிந்துபோனார்கள் என்பது என் உத்தம விசுவாசம்.

வாஸ்தவத்தில் நடந்த இந்தச் சம்பாஷணையின் தாற்பரியத்தைப் பிரசித்தப்படுத்துவது பிரயோசனமாயிருக்கும். உலகத்தை அந்தகாரப்படுத்தும் இந்தப் பயங்கர யுத்தத்தைக்குறித்து அறிவடைந்த இந்தியர் தங்கள் உடன்தேசத்தாருக்கு எவ்விதமாய் உபதேசிக்கக் கூடும் என்பதை இது திருஷ்டாந்தப்படுத்துகிறது. யுத்தத்தைக் குறித்த சத்தியங்களை உண்மையாய் இங்கே கூறினோம். ஆனால் யுத்தம் நடக்கும் பிரதேசங்கள் மகா விஸ்தாரமாயிருக்கின்றன. இந்தியாவில் வரும் சமாசாரங்கள் நம்பிக்கைக்குரியவையாயிராமல் சிக்கலானவையானதால் பொதுஜனங்களின் மனசு குழம்பிப்போக ஏதுவுண்டு. யுத்தத்தினால் விளையும் பலாபலன் லோகம் முழுவதையும் சம்பந்திக்கிறதாயிருப்பதால் புத்தியுள்ள யாவரும் இதன் பயங்கரத்தைக்குறித்து கிரகிக்கவேண்டியது அவசியம். ஜெர்மானியரின் உத்

தேசம் கைகூடி வருமேயாயின் அனேக நூற்றாண்டுகளாய் உலகத்தில் ஸ்தாபிதமான நாகரீகமுறைமை அழிக்கப்பட்டு நிஷ்டூரங்களும் நீதிகேடுகளும் தலையெடுத்து சகலமும் ‘பராக்கிரமமே பிரமாணம்’ என்பதாய் மாறிவிடும் என்பதற்கு ஐயமில்லை. ஐக்கிய கட்சிகள் ஜெயமடைகிறதானால் சகல தேசத்தாருக்கும் இருக்கவேண்டிய சுயாதீனைப்பிரமாணம் வரவர பெலப்பட்டு சிறிதும் பலவீனமுமான ராஜ்யங்கள் தங்கள் நாட்டம்போல் அரசாட்சிகளை நிலைப்படுத்தி வாழக் கூடும். ஆகையால் ராஜபக்தியும் விவேகமும் அறிவுமுடைய இந்தியர் ஒவ்வொருவரும் தங்களைவிட அறிவில் குறைந்தவர்களான தங்கள் உடன்தேசத்தாருக்கு இந்த மகா யுத்தத்தில் கலந்திருக்கும் பிரிட்டிஷ் ராஜாங்கத்தாருக்கும் அவர்களைச் சேர்ந்த ஐக்கிய கட்சியாருக்கும் உண்டாயிருக்கும் நோக்கத்தைத் தெரியக்காட்டுவது அவர்கள் மேல் விழுந்த கடமையாயிருக்கிறது.

## MARY SLESSOR OF CALABAR

## மேரி சிலசர் மாது

மேரி சிலசர் என்னும் மாது, 1848-ம் வருஷம், டிசம்பர் மாசம் 2-ந் தேதியில், ஸ்காத்லாந்து தேசத்திலே, ஆபர்டீன் பட்டணத்தின் அருகாமையிலுள்ள ஒரு கிராமத்தில் பிறந்தார்கள். பெற்றோர் மிகவும் ஏழைகள். சிறுவயதிலேயே இம்மாது கஷ்டஜீவியத்தின் கொடுமையைக் கண்டறிந்தமையால், அது தமது பிற்காலஜீவியத்தில் பிறர் வருத்தங்களில் உதவிபுரிய அனுகூலமாயிருந்தது. சிறுவயதாயிருக்கும்போதே மிகவும் பக்தி காண்பித்தார்கள்.

1874-ம் வருஷத்தில் லிவ்விங்ஸ்டன் பண்டிதர் ஆப்பிரிக்காவில் இறந்துபோனார் என்று கேள்விப்பட்டபோது, ஸ்காத்லாந்து தேசத்திலே ஒரு பெரிய மார்க்க எழுப்புதல் உண்டாயிற்று. நாகரீகமும் கல்வியுமற்ற காப்பிரிகளின் மத்தியில் தன்னை முழுவதும் கடவுளுடைய பாதத்தில் வைத்து சுயநயமின்றி உழைத்து மரிக்க யார் ஒப்புக்கொடுக்கத் துணிவார்? மேரி அம்மாள் தான் போவதாகத் தீர்மானித்து மிஷன் கமிட்டியாரிடம் சொன்னார்கள். தன் ஜீவியத்தை மீட்டுக்கொண்ட கிறிஸ்துவுக்காக, தன் ஜீவனைப் பொருட்டாக எண்ணாமல், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் காப்பிரிகளுக்குக் கூற நினைத்தது ஆச்சரியமன்றோ?

1876-ம் வருஷம் அவர்கள் ஸ்காத்லாந்து தேசத்திலிருந்து கப்பலேறி, ஆப்பிரிக்காவின் வடமேற்கேயுள்ள கலபார் சமஸ்தானத்திற்கு வந்து சேர்ந்தார்கள். காப்பிரிகளின் ஜீவியத்தைப் பார்த்தபோது அவர்கள் மனம் உருகினது. கடவுளுக்குப் பதிலாக மண்டையோட்டை வணங்கும் மூடச்சாதி; மதுபானம் பருகுவதிலும், களியாட்டிலும், மற்ற பற்பல கேவலமான ஜீவியத்திலும் தங்கள் நாட்களைக் கழித்துவரும் ஜனங்கள். இவர்களுக்குள்ளே கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறும்படி, முதலாவது ஒரு பாடசாலையை ஏற்படுத்தினார்கள். காலஞ் செல்லச் செல்ல அவ்வூரார் அந்த அம்மாளின் தன்னயமற்ற ஊழியத்தை மதித்து, அவர்களிடமிருந்து மிகுந்த உதவிபெற்றார்கள்.



சில வருஷங்கள் சென்றபின், இதுவரையிலும் சுவிசேஷம் கூறப்படாத ஆக்கோயாங் என்னுமிடத்திற்குப் போய் பதினாலு வருஷகாலங்களாய் அங்கே உழைத்துவந்தார்கள். கவர்ண்மெண்டார் அவர்களுடைய திறமையைக்கண்டு, காப்பிரியாருடைய வழக்குகளைத் தீர்க்கும் அதிகாரத்தைக் கொடுத்தார்கள். மிகவும் சாமர்த்தியமாய்த் தன் கடமையைச் செய்ததால் ஜனங்கள் மென்மேலும் அவர்களை மதித்து, சுவிசேஷ வசனங்களுக்குச் செவிகொடுத்தார்கள்.

1902-ம் வருஷத்தில், எளியாங்கிரீக் என்னும் பாகத்தில் உழைக்கும்படி அவர்களுக்கு எண்ணமுண்டானதால், எட்டு வருஷங்களாய் அங்குள்ள காப்பிரிகளை முன்னுக்குக் கொண்டுவரும்படியாய் வேலைசெய்துவந்தார்கள். ஒரு அன்னதான பள்ளிக்கூடமும், ஒரு ஆஸ்பத்திரியும் ஸ்தாபித்து ஜனங்களை நாகரீகத்திலும் கல்வியிலும் நடத்திவந்தார்கள்.

1910-ம் வருஷத்தில், அடிமை வியாபாரத்தில் பெயர்போன இக்பே என்னுமிடத்திற் சென்று ஓர் பள்ளிக்கூடம் ஸ்தாபித்தார்கள்.

இம்மாது செய்துவந்த அரிய ஊழியத்தைக் கேள்வியுற்ற ஜியார்ஜ் சக்கிரவர்த்தி, அவ்வேலையின் சிரேஷ்டத்தை மதித்து வெள்ளிப் பதக்கமொன்று அனுப்பிவைத்தனர். மிகவும் தாழ்மையோடு அவர்கள் அதைப் பெற்றுக்கொண்டு கடவுளை ஸ்தோத்திரித்தார்கள்.

இன்னும் அதிக சுயவெறுப்பாய் உழைத்து அவர்கள் தங்கள் 63-ம் வயதில், 1915-ம் வருஷம் ஜனுவரிமாதம் 12-ந் தேதியில் இக்பே என்னுமிடத்தில் பரலோக ப்ராப்தியானார்கள்.

என் ஜீவன், சுகம், செல்வம்
ப்ரதிஷ்டை செய்கிறேன்;
உற்சாக பலியாக
நான் ஒப்பு விக்கிறேன்.

என் நாதா அடியேனை
நீர் ஏற்றுக் கொள்ளுமேன்
நான் உம்தன் சொந்தமாக
எந்நாளும் ஜீவிப்பேன்.

J. A. Jacob



## THERE'S MANY A SLIP TWIXT CUP AND LIP

## கைக்கெட்டினது வாய்க்கெட்டவில்லை

பாகீரதி நதிதீரத்தில் திரிகூடமலைச்சாரலில் வசித்துக்கொண்டிருந்த சஞ்சீவகனென்னும் நரியானது உண்பதற்கு ஏதும் ஆகாரங் கிடையாததினால் இன்னது செய்வதென்று தெரியாமல் மயங்கி நிற்கையில், யாரோ இருவர் கூடி சம்பாஷிக்குஞ் சத்தங்கேட்டு, இவர் யார், பார்ப்போம் என்று, அருகேயிருந்ததோர் புதரொன்றில் மறைந்து கொண்டு பார்த்துக்கொண்டிருக்கையில், மந்தகனென்னும் ஆமையும் சித்திராங்கி யென்னும் கோழியும் பின்வருமாறு சம்பாஷித்துக் கொண்டு அவ்வழியே வந்தன.

சித்திராங்கி 'நண்பனே, நான் எங்கு போவேன், நீ தான் எனக்குத் துணை. அடைக்கலமென வந்தோரை அம்பலத்து விடாதிருப்பதே பெரியோரின் கடமை. ஆதலின் ஏழைமேல் இரக்கம் வைத்துச் சற்றே இடங்கொடு' என்று கேட்க, மந்தகன் 'நீ சொல்வதெல்லாம் சரிதான். நான் ஆயிரமுட்டைகளை யிட்டும் சற்றேனும் கூக்குரலிடாமல் என் முட்டைகளைக் காத்துவருகிறேன். அதுவும் அன்றி தற்காலம் என் வீட்டில் ஒருவருக்குமேல் இருவரிருக்க



இடமில்லை. ஆதலின் நீ வேறெங்கேயாவது போய் இடம்பார்த்
துக்கொள்' என்று சொல்ல, சித்திராங்கி கோவென்று அலறி, 'நான்
அகதி, திக்கற்றவள், எனக்கோ அதிக அவசரமாயிருக்கின்றது,
வேறே இடத்திற்குப் போக நேரமில்லை; ஆனபடியினால் நீ தயவு
செய்து சிறிது இடங்கொடு, நான் முட்டையிட்டபின்னர் சந்தடி
செய்யாமல் போய்விடுகிறேன்' என்று சொன்னது.

கேட்ட மந்தகன் திடுக்கிட்டு, மூக்கின்மேல் விரலை வைத்து;
'ஓகோ! உனக்கு இடங்கொடுத்தால் நுகரும்பிள்ளைக் கிடங்கொடுத்
ததுபோலாகுமே' என்று செல்லியும், அக்கோழி படும் பாட்டைப்
பார்க்கக்கூடாமல் 'முட்டையிட்டபிறகு கோழிகள் சாதாரணமாய்
பெரிய கோஷம் செய்வதுபோல் நீ செய்யாமல் என் வீட்டை விட்டுப்
போய்விடுவதற்குச் சம்மதமானால் நீ இங்கே இருக்கலாம்' என்று
சொல்லிற்று.

அப்படியே சித்திராங்கி சம்மதித்து, மந்தகனுடைய வீடாகிய
மரப்பொந்து நோக்கி நடவாநின்றது. இவ்வாலாற்றைக் கேட்ட
சஞ்சீவகன் என்னும் நரி ஆனந்த பரவசமாகிக் கும்பிடப்போன
தெய்வம் குறுக்கேவந்தது என, அவ்வழிப்போக்கர் பின்னே செல்
லும்பொழுது,'இனி நான் ஆகாரந்தேட அவசியமில்லை, தினந்தோறும்
இங்கு வந்து ஆமையின் முட்டைகளையும் கோழியின் முட்டைகளை
யும் ஒவ்வொன்றாகத் தின்று பசியாறுவேன். ஆயிரநாட்களுக்கேற்ற
போஜனம் எனக்குண்டு' என்று தனக்குள்ளே மனோராஜ்ஜியம்
பண்ணிக்கொண்டிருந்தது.

இதிப்படியிருக்க, சித்திராங்கி முட்டையிட்டு வெளிவந்தமாத்தி
ரத்தில் 'குசவனுக்கு சம்புத்திதானே வரும்' என்பதைப்போல்
'கொக்கரக்கோ! முட்டையிட்டுவிட்டேன், வெள்ளைமுட்டை, பெரிய
முட்டையிட்டுவிட்டேன், கொக்கரக்கோ!' என்று உரத்துக் கூவி
னது. இதனைக் கேட்டமாத்திரத்தில் மந்தகனென்னும் ஆமை, இடி
விழுந்த நாகம்போல் நடுநடுங்கிப் பதைபதைத்து, 'என் செய்வேன்
தெய்வமே! அற்பசகவாசம் பிராணசங்கடம் என்று பெரியோர் சொல்
வது உண்மை, அவ்விதமே நானிந்த அற்பனுக்கு இடங்கொடுத்தால்
என் பிராணனுக்கே மோசம் வரும்போலிருக்கிறதே' என்று தனக்
குள்ளே எண்ணுகிற்கையில், தங்களுடைய கோழியைக் காணோ
மென்று துக்கித்துக்கொண்டிருந்த காட்டுமனிதர் சிலர், சித்திராங்கி
யின் சத்தத்தைக் கேட்டமாத்திரத்தில், அதோ சித்திராங்கி யெனக்
கூவி, தாவிக்குதித்து, ஆனந்தக் கூத்தாடி, சத்தங்கேட்ட வழியே
சென்று, சித்திராங்கியையும் ஆமையையுங் கண்டு அவைகளைப் பிடித்
துச் செல்லுகையில், துக்கசாகரத்தில் மூழ்கிய மந்தகன் சித்திராங்

கியை நோக்கி, 'அடா துஷ்டா! உனக்குப் பாவம் பார்த்ததினாற்றானே எனக்கு இக்கதி வந்தது' என்று சினந்து கூறியது கேட்ட சஞ்சீவகனென்னும் நரியானது, 'ஆமாம்! பாவம் பார்த்துப் புண்ணியம் சம்பாதித்துக்கொண்டதுமன்றி, என் வாயிலும் மண்போட்டாய். போதும், போதும், அமைதியாய்ப் போ; வருகிறது வந்தேதீரும். கடந்ததைக்குறித்து விசனப்படுவதில் யாது பயன்?' எனச் சொல்லிவிட்டுத் தன் தலைமேல் புழுதியை வாரிப்போட்டுக்கொண்டு கைக்கெட்டினது வாய்க்கெட்டவில்லையே என்று வந்த வழியே தன் வீடு நோக்கிச் சென்றது.

## A WORD TO WOMEN

## மாதர்க்கோர் வார்த்தை

ஜீவாதார வஸ்துக்களில் இரண்டாவது முக்கிய பொருள் ஜலம். இதுவும் ஆகாயத்தைப்போலவே விலையின்றி நமக்குக் கிடைக்கிறது. ஜீவஜெந்துக்களையும் மரஞ்செடிகளையும் பரீட்சித்துப்பார்த்தால், அவைகளின் நிறையில் நாலில் மூன்றுபங்கு ஜலமென விளங்கும். மேலும் பூமியின் நாலில் மூன்றுபாகம் ஜலத்தால் மூடப்பட்டிருக்கிறது. ஜலம் பஞ்சபூதங்களில் ஒன்றென்று நாம் சாதாரணமாய்ச் சொன்னாலும் அது தனிப்பொருள் அல்ல; பிராணவாயு, ஜலவாயு என்னும் இரண்டு வாயுக்கள் சேர்ந்துண்டானது.

பிராணவாயுவைப்பற்றி முன்னமே சொல்லிவிட்டோம். ஜலவாயுவுக்கு நிறமுமில்லை, உருசியுமில்லை, மணமுமில்லை. இது நமக்குத் தெரிந்த எல்லாப் பொருட்களிலும் இலேசானது. பலூன் (Balloon) என்று சொல்லப்படும் ஆகாயவாகனம் இந்த வாயுவால் நிரப்பப்பட்டிருக்கும்பொழுது, அது மேலே கிளம்பிப் பறப்பதுமல்லாமல், மனுஷரையுந் தூக்கிக்கொண்டு போகத்தக்க அவ்வளவு இலேசானதாகிறது. எரிகிற திரியை இந்த வாயுவினருகில் கொண்டுவந்தால், அது நெருப்புப்பற்றி ஆகாயத்தில் எரிவதுமல்லாமல், ஆகாயத்திலுள்ள பிராணவாயுவுடன் சேர்ந்து ஜலமாக மாறுகிறது. ஜலவாயு ஜலத்தில் மாத்திரமல்ல, நிலக்கரி, விறகு, எண்ணெய், கொழுப்பு முதலிய எரியும் வஸ்துக்களிலெல்லாம் உண்டு. அது எரியும்போதெல்லாம் ஜலமாக அல்லது கண்ணுக்குத் தெரியா நீராவியாக மாறும். இலேசாய் நெருப்புப்பற்றி எரியும் ஜலவாயுவும் நெருப்பு எரிவதற்கு ஆதாரமாகிய பிராணவாயுவும் சேர்ந்துண்டாகிய ஜலமே நெருப்பை அவிக்க உதவுவதும், பிராணனுக்காதாரமாகிய பிராண



வாயுவானது ஜலத்தில் ஒன்பதில் எட்டுப்பங்காயினும் நிலத்தில் வாழும் பிராணிகள் ஜலத்தில் இரண்டொரு நிமிஷத்தில் மாண்டு போவதும் என்ன ஆச்சரியம்!

ஜலம் மழையினாலும், ஆறு, குளம், கிணறு முதலியவைகளிலிருந்தும் நமக்குக் கிடைக்கிறது. ஆனால் இவைகளுக்கெல்லாம் மூலகாரணம் சமுத்திரஜலமென்றே சொல்லவேண்டும். சூரிய உஷ்ணத்தால் சமுத்திரஜலம் ஆவியாக மாறி, மேலே கிளம்பி, மேகமாகி, குளிர்ச்சியினால் மறுபடியும் ஜலமாகி, மழையாக வருஷிக்கிறது. நாம் துப்பும் எச்சிலும், கொட்டும் அழுக்கு ஜலமும் இவ்வாறே ஆவியாக மாறி மழையாக வருகின்றன. சூரிய உஷ்ணம் உப்பு, அழுக்கு முதலியவைகளைக் கீழே விட்டுவிட்டு சுத்த ஜலத்தையே ஆவியாக மாற்றுவதால் மழை சுத்த ஜலமாகவிருக்கிறது. ஆயினும் அது ஆகாயத்தில் மிதந்துகொண்டிருக்கும் தூசிகளையும், வீட்டுக்கூரையின் மேலுள்ள அசுத்தங்களையும் அடித்துக்கொண்டுவருவதால் அசுத்தமாகிறது. ஆற்றுஜலம் அது பாயும் பூமியிலுள்ள அசுத்தங்களாலும், மனுஷர் அதில் குளித்து ஆடுமாடுகளைக் குளிப்பாட்டுவதாலுங் கெட்டுப்போகிறது. கிணற்று ஜலமும், ஊற்று ஜலமும் அவை ஊறிவரும் இடத்துக்குத்தக்கதாக விருக்கும். ஆதலால் சுத்த ஜலத்தின் தன்மைகள் எவையென அறிவது அவசியம்.

1. சுத்த ஜலம் பளிங்கைப்போல் தெளிவாயிருக்கும். கையினால் அள்ளினால் அதற்கோர் நிறமில்லாததாகக் காணப்படும். பால்போல் வெண்மையாயிருக்கிறதென்று அறிவீன ஜனங்கள் புகழ்ந்துபேசும் நீர் சுத்த ஜலம் அல்ல.

2. சுத்த ஜலத்திற்குச் சுவை இல்லை. இளநீர்போல் தித்திப்பாயிருக்கிறதென்று அறிவீனர் புகழும் நீரும் சுத்தமானதல்ல. சர்க்கரை, தேனைப்போல் மதுரமான போஜனம் நாவுக்கு இதமாயிருந்தபோதிலும் அவைகள் அடிக்கடி வியாதிக்குக் காரணமானவைகள். போஜனத்திலும் மிக முக்கியமான ஜலமும் ஆகாயமும் சுவையின்றியிருப்பது நாம் வருத்தமின்றி அவைகளை உட்கொள்ளுவதற்கேற்றதாய் இருக்கிறது.

3. சுத்த ஜலத்திற்கு வாசனை இல்லை. ஆகாயத்திற்கும் ஜலத்திற்குமிருக்கும் இந்தத் தன்மை சுகத்திற்கேற்றதும் நமக்கு வசதியுமானது. பூ முதலியவைகளின் நறுமணம் முகருவதற்கு இன்பமாயிருந்தாலும் எப்போதும் அது நமக்கு ஒவ்வாது.

4. ஜலம் குளிரப்பண்ணுந் தன்மையுள்ளது. வறண்டதும் விடாய்த்ததுமான நமது நாட்டுக்கும், தாகங்கொண்ட நமக்கும் ஜலம் அருமையாயிருப்பது அதற்குரிய குளிரப்பண்ணுந் தன்மையினால்

தான். நமது நா வறண்டுபோயிருக்கையில் நாம் குடிக்கும் ஜலம் நமது வாயையும் இரைப்பையையுங் குளிரச்செய்து, நமது தாகத்தைத் தீர்க்கிறது. நமது தோல் வறண்டிருக்கையில் நாம் குளிக்கும் ஜலம் நமது தேகத்தைக் குளிரச்செய்து, நமக்கு ஆரோக்கியத்தைத் தருகிறது. ஜலத்தைப்போல் சீக்கிரம் தாகத்தைத் தீர்த்து, குளிர்ச்சியை உண்டுபண்ணத்தக்க பொருள் வேறில்லை.

5. ஜலமானது சில வஸ்துக்களைக் கரைந்து, சிலவற்றைக் கிரகித்து, சிலவற்றோடு சேர்ந்துகொள்ளுந் தன்மையுள்ளது. சர்க்கரை, உப்பு முதலிய கனபதார்த்தங்களைக் கரைக்குந்தன்மை அதற்குண்டு; ஆனால் கண்ணாடி, கல் முதலியவை ஜலத்துக்குள் எவ்வளவு காலங் கிடந்தாலுங் கரையா. பிராணவாயு, உப்புவாயு, கரியமலவாயு முதலிய வாயுக்களை ஜலம் கிரகித்துக்கொள்ளுகிறது. இப்படி ஜலத்தில் கலந்திருக்கும் பிராணவாயுவினால்தான் மீன் முதலிய நீர்வாழ் ஜெந்துக்கள் பிழைத்திருக்கின்றன. சாராயம் முதலிய நீர் பதார்த்தங்களுடன் அது கலந்து அவைகளின் காட்டத்தைத் தணிக்கிறது; ஆனால் எண்ணெய்போன்றவைகளுடன் கலக்குந்தன்மை அதற்கு இல்லை. இப்படிப் பொருட்களைக் கரைத்தும், கிரகித்தும், அவைகளுடன் கலந்துமிருக்குந் தன்மையிருப்பதால்தான் எந்த இயற்கை ஜலமும் பூரண சுத்தமுள்ளதல்ல.

மகா சுத்தமாய்க் காணப்படும் ஜலம் முதலாய் அழுக்கும் விஷவித்துக்களும் உள்ளதாயிருக்கலாம். களிமண், மணற்பொடி முதலியவைகள் சேர்ந்த ஜலத்தைக் குடிப்பதால் சிலருக்கு வயிற்றோட்டம் உண்டாகும். இரும்பு முதலியவை சேர்ந்த கடினஜலம் மலபந்தத்தை யுண்டாக்கும். மலம் முதலியவைகளால் பழுதுபட்ட ஜலம் விஷபேதி, விஷஜுரம் முதலியவைகளுக்குக் காரணமாயிருக்கிறது. ஈயக்குழாய் முதலியவைகளிலுள்ள ஈயம் ஜலத்தோடு சேர்வதால் வயிற்றுநோவுண்டாகும். நரம்புச்சிலந்தி முதலியவைகளுக்கு ஜலத்தில் விடப்பட்ட கிருமிகளின் முட்டைகளே காரணம். ஓர்வகைக் கொசுக்கள் ஜலத்தில் விடும் முட்டைகளினால் ஓர்வகை குளிர்ஜுரம் உண்டாகிறது. இப்படி ஜலத்தின்மூலமாய்ப் பலவகை வியாதிகள் உற்பத்தியாகி, அநேகரை மாணத்துக் கிரையாக்கி, ஏராளமான பேர்களைப் பலவீனர்களாக்குகிறபடியால் ஜலத்தைச் சுத்திகரித்து உபயோகிக்கவேண்டும். சிலவகை அசுத்தம், ஜலத்தில் ஆகாயம் படுவதினால் நீங்கிப்போகும். ஓடிக்கொண்டிருக்கும் ஜலம் இப்படிப்பட்ட வேறு காரணங்களினாலும் சுத்தமாவதுண்டு. இங்கு அவைகளைப்பற்றிப் பேசாமல் அசுத்தஜலத்தை நாம் சுத்தமாக்கும் சில வகைகளைச் சொல்வோம்.



1. காய்ச்சிவடித்தல். ஜலத்தைக் காய்ச்சி, அதிலிருந்து புறப்படும் நீராவியை ஓர் பாத்திரத்தில் பிடித்து, குளிரச்செய்து, மறுபடியும் ஜலமாக்கின நீர் எல்லா அசுத்தமும் நீங்கி, மகா சுத்தமான ஜலமாக விருக்கும். ஆனால் இந்த முறையை நாம் கையாடுவது இலேசல்ல.

2. கொதிக்கவைத்தல். அசுத்தநீரை நன்றாய்க் கொதிக்கவைப்பதினால் அதில் கலந்திருக்கும் அசுத்தவாயுக்கள் பறந்துபோகும்; வியாதியின் வித்துக்கள் அழிக்கப்படும்; சில அசுத்தங்கள் நீருக அடியில் அமிழ்ந்துபோம். பின்பு அந்த ஜலத்தைக் குளிரவைத்து இறுத்து உபயோகிக்கலாம்.

3. வடிகட்டுதல். ஜலத்தைச் சுத்தமான வஸ்திரத்தினால் வடிகட்டலாம். வடிகட்டும் கருவிகள் பலவுண்டு. அவைகளில் ஏணிப்பானை வடிகருவி நாம் இலேசாய்ச் செய்துகொள்ளக்கூடியது; பானைகளிலுள்ள மணல், கரி முதலியவைகளால் வடிகட்டப்பட்ட ஜலம் ஒருவாறு சுத்தமாயிருக்கும். ஆனால் வடிகட்டுவதினால் எல்லா அசுத்தமும் நீங்காததலால் வடிகட்டியபின் ஜலத்தை நன்றாய்க் கொதிக்கவைப்பது உத்தமம்.

4. மருந்துகள். துர்நாற்றமுள்ள ஒரு காலன் (Gallon) ஜலத்தில் பத்துப் பதினைந்து துளி காண்டிஸ் திராவகம் (Condy's fluid) சிலமுறை விட்டு அதைக் கலக்கிக்கொண்டிருந்து, அத்திராவகத்தின் நிறம் மாறியபின் மறுபடியும் பத்துத் துளி விட்டு, ஆறுமணி நேரம் அப்படியே விட்டுவிடவேண்டும்; பிறகு அதில் ஆறு கிரெய்ன் படிகாரத்தைக் கரைத்துப் பலமணிநேரம் பொறுத்து அந்த ஜலத்தை உபயோகிக்கலாம். குளங்குட்டைகளிலுள்ள மண்டிஜலத்தை உபயோகிக்க நேரிட்டால் அதில் கொஞ்சம் படிகாரத்தைப் போட்டாலும், அல்லது தேத்தாங்கொட்டை, கசப்பான வாதுமைப்பருப்பு மாம்பருப்பு முதலிய துவர்ப்பான வஸ்துக்களினால் அதைத் தேற்றினாலும் அழுக்கு அடியில் படிந்துவிட ஜலம் தெளிவானதாகும். கிணறுகளிலும், சிறு குளங்களிலும் உள்ள ஜலத்தைச் சுத்திகரிக்க பெர்மங்கனேற்று (Permanganate) என்னும் வஸ்துவை உபயோகிக்கிறதுண்டு.

மாதரே, ஜலவிஷயமாய் நீங்கள் கைக்கொள்ளவேண்டிய சாதனை விதிகளாவன:—

1. ஸ்நானபானத்திற்கு உபயோகிக்கும் ஜலம் சுத்தமானதாயிருக்கட்டும். 'தாயைக்கழித்தாலுந் தண்ணீரைக் கழிக்காதே' என்ற பழமொழியைக் கைக்கொள்ளாதேயுங்கள்.

2. குடிக்கும் ஜலத்தைத் தளதளவென ஆவிகிளம்ப நன்றாய்க் கொதிக்கவையுங்கள். சுடவைப்பது போதுமென்று எண்ணாதேயுங்கள். வேலைக்காரர் செய்தாலும் கண்காணிப்பது உங்கள் கடமை.

3. ஜலமிருக்கும் பாத்திரங்களை எப்போதும் மூடிவையுங்கள். மற்றப்படி தூசி முதலியவைகளால் ஜலம் பழுதுபடும்; கொசுகு முதலிய ஜெந்துக்கள் ஜலத்தில் முட்டையிடும்.

4. வேர்த்திருக்கையில் குளிர்ந்தஜலங் குடியாதேயுங்கள். அதனால் வியாதிக்குட்படுவீர்கள்.

5. அதிகக் குளிர்ந்த ஜலமும், அதிகச் சூடுள்ள ஜலமுங் குடிக்காதேயுங்கள். மட்டுக்குமிஞ்சிய குளிர்ச்சியும், சூடுமுள்ள ஜலம் இரைப்பைக்குக் கெடுதியை உண்டுபண்ணும்.

6. கிணறு, குளம் முதலியவைகளிலுள்ள பருகும் ஜலத்தை அசுசிப்படுத்தாதேயுங்கள்; மற்றவர்கள் அசுசிப்படுத்தப் பார்த்துக் கொண்டுமிராதேயுங்கள். குடிக்க ஜலமெடுக்குங் குளத்தில் குளிப்பதும், துணி துவைப்பதும், ஆடுமாடுகளைக் குளிப்பாட்டுவதும் கட்டோடொழிக்கவேண்டிய அக்கிரமம்.

Y. G. Bonnell, P.B.

## RIDDLES

## விடுகதைகள்

1. ஜீவன் இல்லா குதிரையேறி,
சவுக்கு கையில் பிடித்து, இலையில்லாத காட்டுக்கு
வேட்டைக்குப் போனான்.

இவன் யார்?

2. கை காலில்லை,
வயிறு பெரியது,
தொட்டால் அழும்.

இது என்ன?

மார்ச்சு மாசத்தில் கொடுத்த விடுகதைகளுக்கு விடைகள்

1. கொட்டைமுத்து.
2. ஊசியும் நூலும்.
3. தென்னமரம்.



## FOUR WAYS OF LIVING

## நாலுவித ஜீவியம்

பூர்வம் உலகாளும் மன்னர் ஒருவருக்கு அருமையான ஏக புதல்வனொருவன் இருந்தான். இளவரசன் சகல கலைஞானங்களிலும் வித்தியார்த்தி யடையவேணுமென்று, அரசன் ஓர் வித்துவானை ஆசானாக நியமனஞ்செய்தார். இளவரசனும் அவனது குருவுங் கூடி சம்பாஷணை செய்யுங்காலையில் ஒருநாள் குரு சீஷனை நோக்கி, இவ்வுலகில் நாலுவித ஜீவிய முறைமைகள் கையாடப்படுகின்றனவென்றும் அவைகளைப்பற்றி அடுத்த நான்கு தினம் வார்த்தையாடத் தனக்கு மனதாயிருப்பதாகவுஞ் சொல்ல, இவை என்னவாயிருக்குமென்று பாரயோசனை செய்துகொண்டே தன் மாளிகை சென்றான்.

மறுநாள் உதயத்தில் ஆசான் தன் மாணாக்கனைச் சிறைச்சாலைக்கு அழைத்துக்கொண்டுபோய் ஒரு கைதியைக் காண்பித்து, 'இளவரசே, இவன் ஜீவிய முறைமைகளில் ஒன்றைமாத்திரங் கையாடினவன். சுயேச்சையே அவன் ஜீவியத்தின் பிரமாணம். தன் இஷ்டமே பெரியதென்று எண்ணுகிறவன்; சாட்சாத் கடவுளுக்குத் தூரமாவதோடு சுயபோகத்தையே நாடி இதர ஸ்திரீ புருஷர்களுக்குந் துன்பஞ் செய்கிறான். தன் மனம் போனபடியெல்லாம் நடந்தபடியினாலேதான் இவன் இந்தக் கதியடைந்தான். இனி இவன் பிறருக்குத் தீங்கு செய்யாவண்ணம் இவனுக்கு விலங்கிட்டிருக்கிறார்கள்' என்றார்.

மறுநாள் ஆசான், இளவரசனைக் கூட்டிக்கொண்டு நகரத்தின் வீதிகளிலே உலாவப்போனான். அவர்கள் பேசிக்கொண்டே ஒரு தனவந்தனுடைய மனையை நெருங்கினார்கள். அத்தருணத்தில் அந்த ஐசுவரியவானும் அவனுடைய பிள்ளைகளும் போஜனஞ் செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் நாய்களும் அந்நேரத்தில் தின்றுகொண்டிருந்தன. ஏக காலத்தில் அதிதி ஒருவன் பிச்சை கேட்கும்படி அங்கு வந்தான். 'அக்ஷணமே நாய்கள் அவன்மேல் பாய்ந்து கடித்து விரட்டித் துரத்தின. இதைக் கண்ணுற்ற குரு இராஜகுமாரனைப் பார்த்து: 'இது சுயநயமுள்ள ஜீவியத்திற்குச் சிறந்த திருஷ்டாந்தம். நாய்கள் எப்படி தங்கள் சாப்பாட்டுக்குச் சேதம் வரப்போகிறதோ என்ற பயத்தினால் பிச்சைக்காரனைத் துரத்திவிட்டதோ, அப்படியே தங்கள் வயிறே தெய்வமென்று எண்ணுபவர்கள் உலகில் அனந்தம்பேர் உண்டு.

'யாவர்க்கு மாமிறைவற் கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசுவிற் கொரு வாயுறை
யாவர்க்கு மாமுண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரைதானே'

என்ற திருமூலருடைய திருமந்திரத்தைக் கனவிலும் நினைக்கிறதில்லை' என்றார்.

மூன்றாம் நாள் குரு, சிற்றாசனைத் தோட்டிகள் வசிக்கும் கிராமத்துக்கு அழைத்துக்கொண்டுபோனார். ஒரு ஏழைக்கிழவி இரண்டு பிள்ளைகளுக்குச் சாப்பாடு ஊட்டிக்கொண்டிருப்பதைக் கண்டார்கள். இளவரசன் விருத்தாப்பிய ஸ்திரீயை நோக்கி, ‘ஏன் அப்பிள்ளைகளுக்குச் சாதம் ஊட்டுகிறாய்?’ என்று வினவ, கிழவி சொல்லுகிறாள்: ‘இந்த இரண்டு பிள்ளைகளும் பசியால் வருந்திக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். எனக்குக் கிடைத்த கூழில் இவர்களுக்குங் கொஞ்சங் கொடுக்கிறேன்.’ இதைக் கேட்ட வித்துவான், ‘மனுஷர் உங்களுக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குஞ் செய்யுங்கள்’ என்கிற நீதிவாக்கியத்தின்படி இவள் மூன்றாம் முறைமையைக் கைக்கொள்ளுகிறாள் என்று சொன்னார்.

நாலாந்தினம் ஆசான் இளவரசை வீட்டிலேயே நிறுத்தி உபதேசம் புகட்டினார். முற்காலத்தில் கருணைக்கடலாகிய இயேசுகிறிஸ்து ஜீவகாருண்ணியம் நிறைந்தவராய்ச் செய்த திரு அவதார சரிதையை விவரமாய்ச் சொல்லி, அவ்வுலக நாயகன் கற்பித்த நாலாம் முறைமையாகிய ‘உங்களில் எவன் பெரியவனாயிருக்க விரும்புகிறானோ அவனே எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன்’ என்கிற திருவாக்கையுமெடுத்து உபதேசித்து நான்கு சுவிசேஷங்களையுங் கையிற் கொடுத்து அதைக் கருத்தாய் வாசிக்கச் சொன்னார். இளவரசனும் அப்புத்தகங்களை ஒழுங்காய் வாசிப்பதாக வாக்குக் கொடுத்ததுமன்றி, இயேசுகிறிஸ்துவில் நம்பிக்கைவைத்து அவர் முன்மாதிரியின்படி நடந்து, அநுதினம் அவரைப் பிரார்த்தித்து வழிபடுவதாக வாக்குக்கொடுத்தான்.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1917-ஆம் ஜூன் மீ

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வெ. | அப். | 7. 1—16 | 11 | தி. | அப். | 10. 1—16 | 21 | வி. | அப். | 13. 42—52 |
| 2 | ச. | ,, | 7. 19—29 | 12 | செ. | ,, | 10. 17—33 | 22 | வெ. | ,, | 14. 1—18 |
| 3 | ஞா. | ,, | 7. 30—43 | 13 | பு. | ,, | 10. 34—48 | 23 | ச. | ,, | 14. 19—28 |
| 4 | தி. | ,, | 7. 44—60 | 14 | வி. | ,, | 11. 1—18 | 24 | ஞா. | ,, | 16. 1—13 |
| 5 | செ. | ,, | 8. 1—13 | 15 | வெ. | ,, | 11. 19—30 | 25 | தி. | ,, | 16. 14—24 |
| 6 | பு. | ,, | 8. 14—25 | 16 | ச. | ,, | 12. 1—12 | 26 | செ. | ,, | 16. 25—40 |
| 7 | வி. | ,, | 8. 26—40 | 17 | ஞா. | ,, | 12. 13—25 | 27 | பு. | ,, | 17. 1—15 |
| 8 | வெ. | ,, | 9. 1—16 | 18 | தி. | ,, | 13. 1—12 | 28 | வி. | ,, | 17. 16—34 |
| 9 | ச. | ,, | 9. 17—31 | 19 | செ. | ,, | 13. 13—25 | 29 | வெ. | ,, | 18. 1—17 |
| 10 | ஞா. | ,, | 9 32—43 | 20 | பு. | ,, | 13. 26—41 | 30 | ச. | ,, | 18. 18—28 |

C. L. S. PRESS, MADRAS—1917.

# மாதர் போதினி

No. 235 ஜூலை 1917 No. 7

## WAR NOTES

## யுத்த குறிப்புகள்

The Mother of Revolution in Russia. ருஷிய தேசத்தில் உண்டான பெரிய துரைத்தன மாறுதலுக்கு மூலகாரணமாயிருந்த Catherine Breshkoodky என்கிற மாது ஒரு ருஷிய பிரதானியின் புதல்வி. எழுபத்துமூன்று பிராயமுள்ள இந்த ஸ்திரீ தன் ஆயுள்காலத்தில் மிச்சமான காலத்தை கொடிய குளிர் நாடாகிய சைபீரியாவின் சிறைச்சாலைகளில் கழித்தாள். ருஷியராஜாங்கத்தில் ராஜரீகந் தொலைய உண்டான சர்வஜன அரசாட்சியின் பயனாக இவள் விடுதலைபெற்றதைக் கேட்ட யாவரும் களிக்கிறார்கள்.

The Russian crisis. ருஷியாவில் உண்டான பெருங்குழப்பத்தை முன்னிட்டு, ஜெர்மானியரும் ஆஸ்திரியரும் அத்தேசத்தோடு தனியாய் ஒரு உடன்படிக்கை செய்துகொள்ளத் தந்திரமாய் முயன்றும் பலிதப்படாமற்போயிற்று. பிரான்சியர், ஆங்கிலேயர் முதலாயினரோடு தங்களை இணைத்திருக்கிற பந்தம் சிதைவுபடாதென்றும் சமாதான உடன்படிக்கை இதர கூட்டாளிகளின் சம்மதமின்றி தாங்கள் செய்ய நினைத்ததில்லையென்றும், ருஷிய ராஜாங்கத்திற்குத் தலைமையாய் உள்ளவர்கள் தெளிவாய்க் காண்பித்திருக்கிறார்கள். ஜெர்மானியர் முதலிய சத்துருக்கள் சமாதானங் கோரும்பக்ஷத்தில் அவர்கள் யுத்தஞ்செய்து, கட்டிக்கொண்டிருக்கிற நாடுகளை விட்டுவிட்டு, அவர்களால் பல இராஜ்ஜியங்களுக்குண்டாயிருக்கிற பெருநஷ்டத்திற்குக் கட்டிக்கொடுக்கவேண்டுமென்றும், பல தேசத்து மந்திரி, பிரதானிகள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

Big Italian victories. இத்தாலியர் ஏகாந்தமான மலைப்பிராந்தியங்களில் ஆஸ்திரியரோடு ஓயாப் போர்புரிந்து வருகிறார்கள். இத்தாலிய சைனியங்கள் செய்துவருகிற வீரதீரமான செய்கைகளைக் கண்ட யாவரும் அவர்களைக் கொண்டாடி புகழ்கின்றார்கள். சமீப

காலத்தில் கார்ஸோ நதி தீரத்துக்கும் ஆஸ்திரியா கடலுக்கும் இடையில் நடந்த ஒரு கடும்போரில் இத்தாலியர் ஆஸ்திரியரை முறிய அடித்ததோடு 300 இராணுவ உத்தியோகஸ்தரோடு 9,000 பேரையுஞ் சிறைபிடித்தார்கள். இந்த யுத்தத்தில் மாத்திரம் 130 ஆகாய விமானங்கள் இராணுவங்களுக்குச் சகாயமாகவிருந்து பத்து டன் பாரமுள்ள சட்டிப்பீரங்கிகளைச் சத்துருக்களின் பாளையங்கள் மேல் எறிந்திருக்கிறார்கள்.

U. S. A. and the Allies. அமெரிக்காதேயத்திலிருந்து யுத்த களத்திற்குப்போக வந்த இரணவைத்திய கூட்டத்தாரை நமது சக்கிரவர்த்தியவர்கள் பக்கிங்காம் மாளிகையில் நல்வரவு கூறினார். அமெரிக்கர் யுத்தவிஷயமாய்ச் செய்துவருகிற பேருபகாரத்தை மிகவும் மெச்சிப் பேசினார். மேலும் கூடியசீக்கிரத்தில் ஒரு பெரிய சேனையைத் திரட்டி யுத்தசன்னாகமாக ஆயத்தஞ்செய்து பிரான்ஸ் நாட்டிற்கு அனுப்புவதாக அமெரிக்கா துரைத்தனத்தார் பிரசுரஞ் செய்திருக்கிறார்கள். பேர்போன பெர்ஷிங் என்கிற வீரன் தளகர்த்தனாக இச்சைனியத்தை நடத்துவார். இதோடு அநேக அமெரிக்கா யுத்த கலங்கள் ஆங்கிலேயராதியோருடைய போர்க்கலங்களோடு சேர்ந்து சத்துருக்களின் முழுக்கப்பல்களை நிராகரிக்க உதவிபுரிகின்றன.

## LAZINESS AND INDUSTRY

## சோம்பலும் சுறுசுறுப்பும்

பட்டுநூல் சுற்றுகிற வேலைசெய்யும் சுந்தரவதியான ஒரு சோம்பேறிப் பெண் இருந்தனள். அவள் சுற்றும்போது, சிக்குப்பட்டு முடிச்சுவிழும் நூல்களைப் பிரித்தெடுக்காமல், சோம்பலினால் அவைகளை அறுத்து எறிந்துவிடுவாள். இவளுக்கு ஒரு வேலைக்காரப்பெண் இருந்தனள். எசமாட்டி எவ்வளவு சோம்பலாயிருந்தாளோ, அவ்வளவு சுறுசுறுப்பாயிருந்தனள் அவ்வடிமைப்பெண். அவள் எசமாட்டி எறிந்துவிட்ட சிக்குமுக்கான நூல்களையெல்லாம் பொறுக்கி, வெகு கஷ்டத்தோடு பிரித்துச் சுற்றி தனக்கொரு விநோதமான வஸ்திரம் நெய்துகொண்டனள்.

அவ்வூரிலுள்ள வாலிபனான தனவானொருவன் இச்சோம்பேறி மாதை மணம்புரிய நிச்சயம்பண்ணிக்கொண்டிருந்தான், விவாக நாளும் குறிக்கப்பட்டது. இவ்வாலிபனும் சோம்பேறிப்பெண்ணும் உலாவப்போனபோது, சில ஜனங்கள் நடனம்பண்ணுகிறதையும்,



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 JUL 1917
MADRAS



இவர்கள் நடுவில் தன் அடிமைப்பெண் மேற்சொன்ன அழகான வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டு நின்றிருப்பதையுங் கண்ட எசமாட்டி, தன் கணவனுடனே 'இதோ பார்! என் வேலைக்காரி நான் வேண்டாமென்று எறிந்துவிட்ட பட்டுநூலினால் ஒரு வஸ்திரம் நெய்து தரித்துக்கொண்டு தான் மகா சுந்தரமான பெண் என்று எண்ணிக்கொள்கிறாள்' என்று பரிகாசமாய்ச் சொன்னாள். அவ்வாலிபன்: 'நீ சொல்வது எனக்கு விளங்கவில்லை' என, சோம்பேறிப் பெண், நடந்தவைகளை ஆதியோடந்தமாய்ச் சொன்னாள். இவ்விஷயங்களைக் கேட்ட அவ்வாலிபன், சோம்பலும் அசட்டைத்தனமுமான ஒரு சுந்தரியை மணம்புரிந்து வருத்தப்படுவதைவிட, கஷ்டத்தைச் சகிக்கும் ஓர் ஏழை அடிமைப்பெண்ணை மணம்புரிவது எவ்வளவோ மேன்மை என்று சொல்லித் தன் கலியாண வாக்கை ரத்துசெய்து, அந்தச் சுறுசுறுப்பான ஏழைப்பெண்ணை மணம்புரிந்து ஆனந்தமாய் வாழ்ந்தான்.

லீ தியாள் வேதநாயகம்.

# TYPES OF INDIAN WOMANHOOD

# இந்திய மாதர் லக்ஷணம்

## பதிவிரதை—1.

சீன தேசத்தைப் பார்க்காத ஓர் ஆங்கிலேயன் ஒரு கும்பல் சீனர்களைப் பார்ப்பானேயானால், எல்லோரும் ஒரே மாதிரியாயிருப்பதாக அவனுக்குத் தோன்றும். இதர ஜாதியார்களின் படங்களை நாம் பார்த்தால், அநேகமாக அந்தந்த ஜாதியார் ஒரே முக ஜாடையுள்ளவர்களைப்போல நமக்குக் காணப்படுவார்கள். இதனால் அந்தந்த தேசத்தாருக்கடுத்த தன்மையும் முகச்சாயலும் ஒரே மாதிரியாக அமைக்கப்பட்டிருக்கிறதோவென்று சிலர் நினைக்கிறார்கள். இந்திய மாணாக்கர் எல்லா ஆங்கிலேய ஸ்திரீகளும் அவர்கள் புருஷரோடு சமமாய் நடத்தப்படவேண்டுமென்று வழக்காடுபவர்கள் என்று நினைத்துக்கொள்கிறார்கள். அதே மாதிரியாக ஆங்கிலேயர்களும் இந்திய மாதர்கள் அமைதலுள்ளவர்களும், தங்கள் வீட்டுக் காரியங்களைப் பெரிதென்று எண்ணுபவர்களும், தாங்களே ஒன்றும் எடுத்து முடிக்கக் கூடாமல் மற்றவர்களாலே நடத்தப்படுபவர்களென்றும் நினைக்கிறார்கள். இதர ஐரோப்பிய தேசத்தைப்போலவே இந்தியாவிலும் அநேகவிதமான ஸ்திரீகள் உண்டென்று காண்பிப்பதே இந்த வியாசத்தின் நோக்கம்.

எல்லோருக்கும் தெரிந்ததும் பெயர்பெற்றதுமான இந்தியாவின் கற்புடைய மனைவிகளின் குணசீலங்களை இங்கு விஸ்தரித்தெழுதுவோம். இந்தியாவின் கலைஞானங்கள் உண்மையுள்ள மனைவியைப் பற்றிப் புகழ்ந்து கூறுகிறது. ஸர் எட்வின் அர்னால்ட் இந்திய மாதர்களுக்குப் புருஷர்கள் பேரிலுள்ள பயபக்தியைப்பற்றியும், வீட்டுக்காரியங்களிலுள்ள ஜாக்கிரதையைப்பற்றியும், பிள்ளைகள் மேலுள்ள ஊக்கத்தைப்பற்றியும் போற்றிப் புகழ்ந்து பேசுகிறார். மகாபாரதத்தைத் திரட்டிச் சேர்த்தவர் சொல்லுகிறார்: 'மனைவிகள் தோழர்கள், கடமை செலுத்துவதில் கருத்துள்ளவர்கள், கூர்மையான புத்தியுடையவர்கள், அன்பான உபாத்திமார், துன்பத்திலும் துக்கத்திலும் தாய்போன்றவர்கள், விலைமதியா சிநேகிதர், எல்லா நற்குணங்களுக்கும் மூற்று, இம்மைக்கும் மறுமைக்கும் துணை.' இவ்விதமாக இந்தியாவின் கலைஞானங்களெல்லாம் உண்மையுள்ள மனைவியைப் போற்றிப் புகழ்கின்றன.

இந்நாட்டின் கட்டுக்கதைகளில் இப்போர்க்கொத்த மனைவிகள் அநேகர் உண்டு. அப்பேர்ப்பட்ட மனைவிகளில் ஒருவர் தமயந்தியே.

161421



இவள் விதர்ப்பதேசத்தின் இராஜனாகிய பீமனின் மகள். இவள் அழகும், இவள் மேனியும் நிஷடதேசத்தின் இராஜனாகிய நளனுக்கு வந்தியர்களின் மூலமாய் எட்டினது. அவ்வாறே அவனுடைய வீரத்தைப்பற்றியும், அவனுடைய மாட்சிமையைப்பற்றியும், அவளும் கேள்வியுற்றிருந்தாள். ஒருகால் அவள் தகப்பன் சுயம்வரம் வைக்கப்போவதாக எல்லோருக்கும் தெரிவிக்க, நாலாபக்கங்களிலுமிருந்து அநேகர் வந்தார்கள். இந்திரன், வருணன், அக்கினி, எமன் ஆகிய நான்கு தேவர்களும் பிரசன்னரானார்கள். இவர்கள் சுயம்வரத்திற்குப் போகிற நளனை வழியிற்கண்டு, தங்களுக்குத் தூதாக தமயந்தியிடம் போகவேண்டுமென்று கட்டளையிட்டார்கள். தேவர்களைத் தடுக்கக்கூடாதென்று அவன் மிக விசனத்தோடு ஒத்துக்கொண்டு, தமயந்தியிடம் தூதாகப்போனான். ஆனால் அவளோ அவனை அடையாளம் கண்டுபிடித்து, அவனையே நேசிக்கிறதாகவும் அவனுக்கே பூமாலை சூட்டுவதாகவும் மொழிந்தாள். தேவர்களுக்கு உண்மையாயிருக்க அவள் எண்ணத்தை மாற்றும்படியாகப் பிரயாசப்பட்டான். ஆனால் அவளோ உறுதியாயிருந்தாள். நளன் திரும்பி, தேவர்களுக்கு நடந்த காரியங்களையெல்லாம் திட்டவட்டமாகக் கூறினான்.

இதைக் கேட்ட தேவர்கள், நளன் சாயலைத் தரித்துக்கொண்டு சுயம்வரத்துக்குப் போனார்கள். தமயந்தி என்ன செய்வது என்று தெரியாமல் மயங்கினாள். தயவுகூரவும், நீதியாய் நடக்கவும், தன்னுடைய கற்புக்கு இடைஞ்சல் உண்டாகாதபடிக்குத் தவிர்க்கவும் அவள் அவர்களை மன்றாடினாள். தேவர்கள் இரங்கி தங்கள் சொந்த சாயலைத் தரிக்க, தமயந்தி நளனுக்கு மாலை சூட்டினாள். இப்படியாக அவ்விருவரும் திருமணம்புரிந்து பன்னிரண்டு வருஷமாக ஒற்றுமையாகவும் சந்தோஷமாகவும் வாழ்ந்திருந்தார்கள். அவர்களுக்கு ஒரு ஆண் பிள்ளையும், ஒரு பெண் குழந்தையும் பிறந்தன.

இப்படியிருக்குங்கால் அவனை ஓர் துர்ப்பாக்கியம் தொடர்ந்துகொண்டேயிருந்தது. காளி என்பவன் தான் இச்சித்த பெண்ணை அவன் மணங்கொண்டானே என்ற கெர்வத்தோடு அவனுடைய வேலைக்காரனாகிய துவாபரைக் கூப்பிட்டு, நளனின் இராஜ்ஜியத்தையும் அவனுடைய மனைவியையும் சூதாட்டத்தில் கெலித்துவிடும்படியாகக் கட்டளையிட்டான். பன்னிரண்டு வருஷம் அவனால் கூடியவரைக்கும் பிரயத்தனஞ்செய்தும் நளனை ஜெயிக்க முடியவில்லை. எப்படியோ ஒருநாள் சடங்குக்கடுத்த சுத்தத்தில் நளன் தவறிப்போனான். இதை ஒரு சாக்காகக் கொண்டு ஓர் பெரிய சூதாட்டத்தில் நளனின் இராஜ்ஜியத்தை அவனுடைய தமயனாகிய புஷ்கரன் ஜெயித்துவிடும்படியாக செய்வித்தான். தமயந்தியும் குடிகளும், அவனை மீட்கும்

படியாக எவ்வளவோ பிரயாசப்பட்டும் முடியவில்லை. புஷ்கரன் தமயந்தியின்பேரிலும் ஆடலாமாவென்று கேட்டான்.

இதைக் கேட்ட நளன் வெட்கமும் கோபமுங்கொண்டு, தனது உத்தமியோடு நாடு நகர் விட்டுப் புறப்பட்டு பிள்ளைகளோடும் தாயின் பெற்றோர் வீடு சேர்ந்தார்கள்.

நளன் வனவாசஞ் செய்ய மனதாய் தமயந்தியை அவள் தாய்வீட்டிற்குப் போய்விடும்படியாகக் கெஞ்சினான். அவளோ புருஷன் துன்பகாலங்களில் ஆறுதலாயிருக்க மனைவியே ஏற்ற துணை என்று சொல்லிப் புருஷனோடு தங்கியிருந்தாள். நளனின் ஒரே மேற்போர்வையைப் பொற்பறவைகள் தூக்கிக்கொண்டு போய்விட்டன. அந்த இரவு அவன் வஸ்திரமில்லாமல் தூங்கப்போனதினால் தமயந்தி தன் முந்தானையை அவன்மேல் போர்வித்தாள். நளனுக்கு தூக்கம் வரவில்லை. தமயந்தி வெறுந்தரையில் படுத்திருப்பதைப் பார்த்து வியாகுலப்பட்டு அவளைத் துன்பத்திற்குட்படுத்தாதபடிக்கு, அவளைவிட்டு ஓடிப்போகத் தீர்மானித்தான். ஆகையால் அவன் மேலே போர்த்துக் கொண்டிருந்த முந்தானையைக் கிழித்துக்கொண்டு, அவள் தூங்குகையில் ஓடிப்போய்விட்டான். தமயந்தி விழித்துப்பார்த்து கணவனைக் காணாமல் மனந்தடுமாறினாள். நளனைக் கண்டுபிடிக்க சாத்தியப்படவில்லை. எங்கே அலைவாள்! பீமன் தூதாட்கள் அவளைக் கண்டு பிடித்து அவள் தாய்வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோனார்கள். அவளோ ஆறாக் கவலைக் கடலினுள் மூழ்கினாள். ஆடை ஆபரணம் வேண்டாமென்று, தன் புருஷன் மீண்டும் வைத்துப்போன பாதி துணியே போதுமென்றிருந்தாள்.

இப்படியிருக்குங்காலையில் வாகு என்று மறுநாமம் பூண்ட நளன், அயோத்தி ராஜனுக்கு இரதசாரதியாகிவிட்டான். சர்ப்பங்களின் ராஜன் தனக்கு நளன் செய்த நன்மைக்கு நன்றியறிதலாய்த் தன்னுடைய கடியினால் அவன் முகச்சாயலை மாற்றிவிட்டது. குதிரைகளை நடத்துவதில் நளன் கெட்டிக்காரன். அயோத்தி ராஜனோ பேர்போன சூது விளையாட்டுக்காரன். எப்பொழுது சூதாட்டத்தில் நளன் கெட்டிக்காரனாகிறானோ அப்பொழுது அவன் கஷ்டங்கள் ஒழியும்.

தமயந்திக்கோ தன் கணவனுக்காகக் காத்திருந்து கண்ணும் பூத்துப்போனது. அவளால் துக்கத்தைச் சகிக்கமுடியவில்லை. ஆகையால் பிராமண வந்தியர்களை அனுப்பி ஊர் ஊராய்த் தேடி நளனைக் கண்டு பிடிக்கும்படியாகப் பெற்றோரை வேண்டிக்கொண்டாள். அவர்களும் இணங்க அந்தப் பிராமணருக்கு ஒரு பா கற்றுக்கொடுத்தாள். நளன் எப்படி அவன் பாதித்துணியைக் கிழித்துக்கொண்டு ஓடிவிட்டா



னென்றும் எப்படி அவன் மனைவி அவனுக்காகக் காத்திருக்கிறாள் என்றும் அந்தப் பாட்டில் அர்த்தம் அடங்கியிருக்கிறது.

பிராமண பாவலர்கள் நானாபக்கங்களிலுஞ் சுற்றித் தேடினார்கள். ஆனால் ஒரு பிராமணன் திரும்பிவந்து, வாகு என்கிற சாரதி தன் பாட்டைக் கேட்டவுடனே முகமாறினான் என்று சொன்னான். ஆனால் அவனை எப்படி அழைக்கிறது? ஓர் உபாயமுங் கண்டுபிடித்தாள். நளன் திரும்பிவாராதபடியினால் இன்னொரு சுயம்வரக் கலியாணம் வைப்பதாகப் பிரசித்தம்பண்ணவேண்டுமென்று அவள் தன் தகப்பனைக் கெஞ்ச, அவனும் அப்படியே செய்வித்தான். இதை அயோத்தி அரசன் கேள்வியுற்று வாயுவேகம் மனோவேகமாய்ப் புறப்பட்டான். தமயந்தி பதிவிரதா தருமம் தப்புகிறாளே என்ற விசனம் இதைக்கேட்ட நளனை மேற்கொண்டது. வெகுசீக்கிரம் விதர்ப்பநகர் வந்து சேர்ந்தார்கள். ஆனால் தமயந்தியோ நளனை அடையாளம் கண்டுபிடிக்கவில்லை. ஒரு தாதிப்பெண்ணை அனுப்ப அவள் தமயந்தியைப்பற்றிப் பேசும்போதெல்லாம் வரும் மனச்சஞ்சலத்தை அறிந்துகொண்டாள். தமயந்திக்கு தன் கணவன் வந்துவிட்டார் என்று பரிஷ்காரமாகத் தெரிந்துவிட்டது. அவளுடைய இரு பிள்ளைகளையும் அனுப்பினாள். வாகு அவர்களை வாரி முத்தமிட்டான். தமயந்தி பதபதப்படைந்து வாகுவைத் தன் அறைக்கு வருவித்தாள். என்ன மங்களகரமான காரியம்! காணாமற்போன நாயகனும் நாயகியும் ஒன்றாய்ச் சேர்ந்தார்கள். அவனுடைய அவலக்ஷணரூபம் மாறினது. அங்கேயே சிலநாள் தங்கியிருந்து தங்கள் இராஜ்ஜியத்தைக் கைவசப்படுத்திக் கொண்டு பிறகு சொந்த நகரம் போய்ச்சேர்ந்து பல்லாண்டு சகல சம்பத்தோடும் இராஜ்ஜியபாரஞ் செய்துகொண்டிருந்தார்கள்.

M. B.

## STORY OF DYALU

## தர்மகுண தயாளு

முன்னோர் காலத்தில் பஞ்சத்தினால் மெலிந்து தீமையினால் நிறைந்த ஓர் தேசத்தில் ஆஸ்திவந்தனான ஓர் வர்த்தகனிருந்தான். அவன் தன் ஒரே புதல்வனான தயாளுவை அழைத்து, 'அப்பா, நம் குடும்ப சம்ரக்ஷணைக்கு வேண்டிய பணமில்லாததால் நீ தூரதேசம் சென்று நம்முடைய வர்த்தகக்கப்பல்களில் ஒன்றைக்கொண்டு வியாபாரம் செய்து வருவாய்' என, மகனும் அதற்கு உடன்பட்டு நேர்த்தியான சாமான்களால் நிறைந்த தன் தந்தையின் கப்பலேறினான்.



சற்றுதூரம் செல்லவே, இவன் செவியில் ஓர் அழுகுரல் கேட்டது. உடனே கப்பலை நிறுத்தி அதென்னவென்று கவனிக்க, இன்னோர் கப்பல் இவனுக்கு நேரே வருவதைக் கண்டான். அக்கப்பலில் ஓர் சிறுபெண்ணும் அவளது செவிலித்தாயும் ஆறாத்துயரத்தோடு அலறி அழுதுகொண்டிருந்தனர். தயாளமே தலைமேற்கொண்ட தயாளு, அவர்களெவ்வூரார் என்றும், அவர்களுக்கு நேர்ந்த துன்பம் என்னவென்றும் கேட்க, அவர்கள் ஓர் அரசமாளிகையின் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருக்கையில் சில துஷ்டர்களால் கைதுசெய்யப்பட்டு வருவதாக அறிந்து, அவர்களை விடுவிக்கக் கோரினான். பிறகு அவன் அக்கப்பற்றலைவனைப் பார்த்துப் பேசி, தன் கப்பலிலுள்ள எல்லாத் திரவியத்தையுங் கொடுத்து அவ்விருவரையும் மீட்டு சுயதேசம் அனுப்பிவிட்டு, வெறுங்கையனாக வீடுவந்து சேர்ந்தான். தயாளுவின் தந்தை தன் அருமைப் புதல்வனின் அறியாமைக்காக வருத்தமுற்று, மற்றோர் கப்பலை நிரப்பி, 'மகனே, இத்தருணமே மறுபடியும் சென்று, புத்தியாய் வியாபாரம் செய்து, எங்கள் துன்பத்தைத் தீர்ப்பாய்' என்று சொல்லி அனுப்பினான். மகனோ, இம்முறை பஞ்சத்தால் பட்டினிகிடந்து சாகும் ஓர் எளிய கிராமத்தை அடைந்து, அங்குள்ள குடிகளைச் சில மாதகாலங்களாகக் காப்பாற்றிக்கொண்டிருந்து, பிறகு முன்போலவே வீட்டிற்கு வர, தந்தை கோபாவேசத்தோடு தயாளுவை வீட்டைவிட்டகற்றிவிட்டார். மூன்று தினங்களாக உண்ண உணவின்றி, தாகத்தால் நாவறண்டு, காட்டுமார்க்கமாய் வழிநடந்து,



கடைசியாக ஓர் தூரவண்டை வந்துசேர்ந்தான் தயாளு. அங்கே தண்ணீர் மொண்டு தன் தாகத்தைத் தீர்த்துக்கொண்டிருக்கும் வேளையில், தாகத்தால் வருந்தி ஓடிவந்த ஓர் எலியையும் ஓர் நரியையும் கண்டு, அவைகளின் தாகத்தையும் தீர்த்தான். நன்றியுள்ள அப்பிராணிகள் அவனைப் பார்த்து, 'ஐயா, நீர் செய்த உபகாரத்திற்கு நாங்களென்ன பதிலுபகாரம் செய்யப்போகிறோம்! நீர் எதாவதோர் துன்பத்திலகப்பட்டு வருந்தும் காலத்தில் எங்களை நினைப்பீராகில், தருணத்தில் வந்து எங்களாலியன்றதைச் செய்ய ஆயத்தமாயிருக்கிறோம்' என்று சொல்லிப் போயின.

தயாளு தனக்குள் வியப்புற்று புன்சிரிப்புகொண்டு தன் வழியே சென்றான். சென்றவன் ஓர் சிறப்புற்ற நகர் அடைந்து, அதன் வீதிவழியே வாடிய முகத்தோடு பசியால் துவண்டு நடந்துகொண்டிருக்கையில், ஓர் பொற்கொல்லன் அவனைப்பார்த்து, 'அப்பா, நீ அன்னிய தேசத்தான்போல் தோன்றுகிறதே, யார் வீட்டைத்தேடி அலைகிறாய்?' என வினவ, தயாளு, 'நான் ஒரு பரதேசி; இந்நகரில் எனக்கு எவருமில்லை' என்று துக்கத்தோடு அறிவித்தான். தந்திரமுள்ள அப்பொற்கொல்லன், இதுதான் தன் எண்ணத்தை நிறைவேற்றத்தக்க சமயமென்றெண்ணி, அவனைத் தன் வீட்டிற்கழைத்துச்சென்று வெகுவாய் உபசரித்து, பின்பு அவனை வீட்டிலிருக்கச் செய்துவிட்டு, அரச சமூகத்தை யடைந்து, 'அரசே, வெகுநாளைக்குமுன் தங்கள் அரண்மனையில் காணாமற்போன தங்கநகையை இன்று நான் கண்டுபிடித்தேன்; அது இன்று என் வீட்டிற்கு விருந்துண்ண வந்த ஓர் வாலிபனின் மூட்டையிலிருந்தது; தாங்கள் இப்போதே சேவகரை அனுப்பி அவனைக் கைதுசெய்யவேண்டும்' என்று சொல்லி ஓர் தங்கநகையைக் காண்பிக்கவே, அரசன் அது தன் மனைவியினதுதான் என அறிந்துகொண்டு, முன்பின் யோசியாமல், ஊரெல்லாம் அதை எடுத்தவன் இக்கொல்லன்தான் எனப் பிரசித்தமாயிருந்தபோதிலும், சேவகரை அனுப்பி தயாளுவைக் கடுங்காவல் கிடங்கில் அடைக்கும்படிக் கட்டளையிட்டான். ஒரு பாவமும் அறியாத தயாளு, காவல் கிடங்கிலிருந்து 'இப்படி அநியாயமாய்ச் சிறையனுபவிக்கும் எனக்குச் சிநேகிதர் ஒருவருமில்லையா?' என ஏங்கினான்.

இங்ஙனமிருக்க, தயாளுவின் துன்பத்தை அவன் சிநேகிதனான நரி எவ்விதமாகவோ அறிந்து, தான் அவனை எப்படியாவது மீட்கவேண்டுமென்றெண்ணி, தன் குலத்தைச் சேர்ந்த எல்லா நரிகளையும் அழைத்துக்கொண்டு வயல்களெங்கும் போய் பயிர்களை நாசமாக்கத் துணிந்து துடங்கிவிட்டது. அந்த அகோர கோஷ்டத்தை நிறுத்த ஒருவராலும் கூடாமற்போயிற்று. தேசத்தின் விளைச்சல் அவமாய்ப்

போனபடியால், பஞ்சமும் பசியும் மேலிட்டு ஜனங்கள் வருந்தவேண்டியதாயிற்று. தன் குடிகள் வருத்தமடைவதைச் சகிக்கவொண்ணாத வேந்தன், துக்கத்தில் மூழ்கி, பல தெய்வங்களுக்குப் பூஜைசெய்தும் பல பொருத்தனைகள் பண்ணியும் வந்தான்.

ஒருநாள் அவன் தன் நந்தவனத்தில் உலாவிவரும்போது, 'அநீதியே வேந்தர்க்கு விசாரமாய' என ஓர் அசரீரிவாக்கு உண்டாயிற்று. அதுகேட்ட அரசன் திடுக்குற்று, 'அந்தோ! இனி என்னசெய்வேன்! இம்மட்டும் என் இராஜ்ஜியத்தில் அநீதிசெய்ததில்லையே ; இன்றே சிறைச்சாலை அடைந்து ஆங்குள்ள எல்லாக் கைதிகளையும் நேரே மறுபடியும் விசாரணைசெய்வேன்' என்று சொல்லிச் சிறைச்சாலையை நோக்கிச் சென்றான். அங்கு போய் எல்லாக் கைதிகளின் காரியாதிகளையும் தனித்தனியாய் விசாரிக்கலானான். கடைசியாக, தயாளு கடுங்காவலிலிருந்த அவ்வறையை அடைந்து, பசி அவனை வருத்தாவண்ணம் எலிகள் கூடி ஓர் பெரிய துவாரம் செய்து அதன் வழியாய்ப் பற்பலவித தின்பண்டங்கள் கொண்டுவந்து, கொடுப்பதைப் பார்த்து ஆச்சரியமடைந்தான். பிறகு குற்றமில்லா தயாளுவைக் கிட்டி அவனது முகத்தின் தேஜஸைக் கண்டு வியந்து, 'அப்பா, உன் முகத்தைப் பார்த்தால் ஒரு பாவமுமறியாத பாலகனைப்போலிருக்கிறதே உன்னை இக்கோலமாக்கினோர் எவர்?' என வினவ, அவன் தன் சரித்திரத்தை ஆதியோடந்தமாய் உரைத்தான். அரசன் தன் அஜாக்கிரதையை உணர்ந்து கண்ணீர்விட்டான். பிறகு பொற்கொல்லனை அழைப்பித்துத் தீர விசாரித்து, அவனது சூதை உண்மையாய் அறிந்துகொண்டு, அவனைத் தயாளுவின் இடத்தில் காவலிலிருத்திவிட்டுத் தயாளுவை விடுவித்தான். அந்தக்ஷணமே நரிகள் ஊரைவிட்டு ஓடிவிட்டன ; குடியானவர்கள் பயிர்த்தொழில் ஆரம்பித்தார்கள்.

பிறகு அரசன் மனமகிழ்ந்து, தயாளுவுக்குத் தன் இராஜ்ஜியத்தில் ஓர் பெரிய உத்தியோகம் அளித்து, சிறப்புடனே அவனைத் தந்தை வீட்டுக்கனுப்பினான்.

இதற்குள் தந்தையான வர்த்தகனும் வியாபாரத்தினால் நல்ல பலன் அடைந்து, தன் நேசமகனைத் துரத்திவிட்டதனால் அதிகக் கவலையுள்ளவராயிருந்தார்.

வெகுநாளாய்ப் பிரிந்திருந்த புதல்வனை மறுபடியும் கண்டு மிகவும் ஆநந்தித்து, தன் கொடிய செய்கைக்காகத் துக்கப்பட்டு தன்னை மன்னிக்கும்படி வேண்டினார். தயாளுவும் தன் தர்மசிந்தை குன்றாமல் தன் தந்தையை ஆதரித்து ஜீவித்துவந்தான்.



## THE WOMEN'S CHRISTIAN COLLEGE

## மாதர் கிறிஸ்தவக் கல்லூரி

மாதர் கல்விப்பயிலும் கிறிஸ்தவ கல்லூரியின் சிறப்பை, ஈண்டு வர்ணிக்கப் புகுந்துள்ளேன் :—

நீர்வளமும், நிலவளமும், மலைவளமும் மிக்க சென்னை ராஜதானியின் கிழக்கு சமுத்திரக்கரையில் சென்னைமாநகர் என்னும் வாணிபஸ்தலமிருககின்றது. இந்நகரின் தென்மேற்குத்திக்கில், பசுமையான வெளிநிலங்களை யுடையதும், ஆங்கிலேயர் சௌகரிய காதலாற் கொள்ளும் பேறுள்ளதுமான 'நுங்கைபாக்கம்' என்னும் உபநகரத்தில் மேற்கூறிய கல்லூரி அமையப்பட்டுள்ளது.

இக்கல்லூரியின் உத்திரத்தில் 'கூவம்' என்னும் ஆறு நிசப்தமாய் ஓடி, சிறிது தூரம் கிழக்குமுகமாய் சமுத்திரத்தை நோக்கிச் செல்லுகின்றது. நானாஜாதி மச்சங்கள் இவ்வாற்றில் திரளாய் உண்டு. இவைகளைப் பிடிக்க கரையோரம் உல்லாசமாய்த் திரியும் ஆடவர் வெகுபேர்.

கல்லூரியின் நிலத்தை அணுகி நோக்கில், மரகதம்போன்ற பசும் புற்கள் கலவிச் செழித்து, கண்களுக்கு சீதளத்தையும், மனதிற்கு ரமணியத்தையும் விளைவிக்கும். கோரமாய் அடர்ந்துள்ள, மா, வில்வம், வேம்பு, அரசு, புரசு, கொன்னை, புன்னை, வாழை, பருமூங்கில் முதலிய பல்வகை விருட்சங்களை அடையப்பெற்றது. தென்றல் வாடை வீசும் இவ்விருட்சங்களின் காட்சி மனோரம்மியத்தை விளைவிக்கும். ரோஜா, சூரியகாந்தி, கேந்தி, சிவந்தி முதலிய புஷ்பங்கள் நிறைவாகப் பூத்திருக்க, தேனீக்கள் இரீங்கார நாதத்துடன் காத்திருந்து, மகரந்தத்தையும் மணத்தையும் வீசும் தேனைப் பானஞ் செய்யும்.

புல்வெளியில் ஆடு, மாடு முதலிய மிருகங்கள் அனுதினமும் புல் பூண்டு, தழை குழைகள் மேய்ந்து அந்திப்பொழுதில் தங்களிருப்பிடம் செல்வதையுங் காணலாம்.

பிரபுத்துவம் வாய்ந்த கிறிஸ்தவ ஐக்கிய சீமான்களின் முயற்சியினால் இக்கட்டடம் புத்திபூர்வமாய் குறித்தெடுக்கப்பட்டது. இதற்கு இரண்டு வாசல்கள் உண்டு. இவைகளினின்று இரு பாதைகள் உள் நோக்கிச் சென்று ஒன்றோடொன்று சந்திக்குமிடத்தில் பிரதான கட்டடம் உண்டு. இக்கட்டடத்தின் மனைவகுப்புகள் விசாலமாகவும் புத்திபூர்வமான கம்மியரால் அலங்காரமாகவுங் கட்டப்பட்டுள்ளது.

மூன்றாவது மெத்தையினின்று திருஷ்டித்தால், தொலைதூரத்தில் ஓங்கி வளர்ந்திருக்கும் விருட்சங்களும், தென்னிந்தியா புகைவண்டி ஓடும் காட்சியும், பரங்கிமலையின் மாட்சிமையும் கண்களைக் கவரச் செய்யும்.

இரண்டாவது மெத்தையில் பீ. ஏ. சீனியர், ஜூனியர் இண்டர் மீடியேட் வகுப்புக்களும், ஆயிரம் புஸ்தகங்கள் அடங்கிய ஓர் விஸ்தாரமான புத்தகசாலையும் உண்டு. கீழ்த்தரையில் பீ. ஏ. ஜூனியர், இண்டர்மீடியேட் சீனியரும் வாசிக்கும் அறைகளும் உண்டு. இதுவுமன்றி கல்வி கற்கும் மாதர்கள் வசிப்பதற்காக இரண்டு தனித்தனி கட்டடங்களும் உண்டு.

இக்கல்லூரியில் ஏறக்குறைய எழுபத்தைந்து மாதர்கள் பயிலுகின்றனர். இதில் இந்திய ஐரோப்பியர், தமிழர், மலையாளிகள், தெலுங்கர் முதலிய பெண்களிருக்கின்றனர். இவர்களுள் பெரும்பான்மையோர் கிறிஸ்தவர்கள். இந்துக்களோ வெகு சொற்பம்.

தாபர சாஸ்திரம், தர்க்க சாஸ்திரம், தத்துவ சாஸ்திரம், சகள சாஸ்திரம் முதலிய சாஸ்திரங்களையும், தமிழ், மலையாளம், தெலுங்கு கன்னடம், பிரெஞ்சு, லத்தீன் முதலிய பாஷைகளையும் சாதிக்க வல்ல நிபுணர்களால் போதிக்கப்பட்டு வருகின்றோம்.

புத்திபூர்வமாகவும், அபுத்திபூர்வமாகவும் நாடோறுங் குற்றத் துக்குட்படும் எங்களை கனிவுமுகங்காட்டி நலப்படுத்தியும் 'இடனில் பருவத்து ஒப்புரவு கொல்கார் கடனறி காட்சியவர்' என்னும் பொய்யாமொழிக் கிணங்க அறிவுறுத்தியும், கல்லூரியின் விழுமிய நோக்கம் அறிவோடு குணஞ்செயல்களை வளர்ப்பதென்பதை நினைப்பூட்டிவரும் ஞானாசிரியர்களுக்கு யாங்கள் செலுத்தக்கூடிய கைம்மாறு உண்டோ? 'எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய்ந்நன்றி கொண்ட மகற்கு.' இவர்கள்பால் என்றும் நன்றியறிதலுடையவர்களாய் வாழ்வது எங்கள் கடனாம். பெரியீராக இவர்களுக்கு நீண்ட நாளும், நோயற்ற யாக்கையும், பொருட்பேறும் மென்மேலும் ஓங்குவதற்காக எங்களது பிரார்த்தனை செலுத்துகின்றோம்.

இது நிற்க, பின்சந்ததியாருக்கு முன்செல்லும் தூதுவர்போலும் தற்போதுள்ள சந்ததியாரின் மத்தியில் சிறந்து விளங்கும் சுடர் விளக்காகவு மிருக்க எம்பெருமான் எங்களெல்லோருக்கும் அருள் புரிவாராக.

பரதகண்டமாகிய நம் இந்துதேச மகான்கள் சுயநாட்டின் முன்னேற்றத்தைக் கருதி மாதர்கள் உயர்தரக்கல்வி பயில என்று பிரயாசிப்பார்களோ அன்றே நம் இந்துதேசம் நவமணிபோல் விளங்கும்.



அப்படிப்பட்ட காலம் சம்பவிக்க நெடுநாளுள்ளதால், முயற்சியினாலொழிய அது நிறைவுறாது.

ஓ இந்தியாவே! உன் கண்களைத் திறந்து, உன் மாதர்களுக்கு உயர்தரக்கல்வி பயிற்றுவிக்க முன்வருவாயாக! சுபம்!

Neelambal Velayutham,
Women's Christian College,
Nungambakam.

## THE WOMEN'S EXCHANGE

## ஸ்திரீகளின் ஆச்சிரமம்

மதுரை சுவிசேஷப் படைமுயற்சி சம்பந்தமாக ஒரு விசேஷித்ததும் புதிதானதுமான வேலை ஆரம்பித்திருக்கிறது. கிறிஸ்தவ ஸ்திரீகளும் ஹிந்து ஸ்திரீகளும் உபயோகிக்கத்தக்கதான ஒரு கட்டடம் மதுரை புதுமண்டபத்திற்கெதிராக மாதம் 60 ரூபாய்க்கு வாடகைக்கு வாங்கப்பட்டிருக்கிறது. இதில் நிலையான செக்ரட்டேரியம்மாள் இருப்பார்கள். கிறிஸ்தவப் பெண்கள் இங்கு கூடி அந்நியோந்நியக் கூட்டங்கள் வைக்கவும், விசேஷித்த உபந்நியாசங்கள் செய்யவும், சுவிசேஷப் படைமுயற்சி சம்பந்தமான கூட்டங்கள் வைக்கவும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. இங்கு யாவரும் வாசிக்கத்தக்கதாக புஸ்தகங்களும், புதின பத்திரிகைகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. அயலூரிலிருந்து மதுரையைப் பார்க்கவரும் ஸ்திரீகள் இங்கு தங்க இடமுண்டு. இதைத்தவிர ஹிந்துப்பெண்கள் இங்கு தாராளமாக வர இடம் உண்டு. விருப்பப்படுகிறவர்களுக்கு இங்கிலீஷ்பாஷை, தையல்வேலை, சங்கீதம் முதலியவைகளும் கற்பிக்கப்படும். இன்னும் பல பாடங்களும் கற்பிக்கப்படுவதுடன் விசேஷித்த உபந்நியாசங்களும் செய்ய ஒழுங்குசெய்யப்படும். இந்தக் கட்டடம் ஒதுக்கான இடத்தில் இருக்கிறது. ஸ்திரீகள் தாராளமாய் வந்துபோகலாம். இக்கட்டடம் மிகவும் விசாலமானது. சென்ற மாதம் 18-ந் தேதி பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்நூதன வேலையின் அவசியத்தை நன்குணர்ந்து ஆரம்பித்தவர்கள் கனம் சுவிற் மிஸியம்மாளவர்களே. கர்த்தர் இவ்வேலையை மென்மேலும் ஆசீர்வதிப்பாராக. இக்கட்டடத்திற்குப் பல தேவைகள் உண்டு. மேசை, நாற்காலி, அல்மோரா, புஸ்தகங்கள் முதலியன அவசியம். சுவிசேஷப் பிரபல்யத்தில் ஆசைப்படுவோர் தங்கள் ஆசையை நிறைவேற்ற இது ஏற்ற சமயமே.



## A STORY FOR LITTLE CHILDREN

## சிறு பிள்ளைகளுக்காக ஒரு கதை

சிந்துநதிக்கரையில் இரத்னபுரி என்ற ஒரு அழகிய சிறு பட்டணம் உண்டு. தென்னை, பலா, கொய்யா, வாழை முதலிய மரங்கள் அடர்ந்து வளர்ந்திருந்தபடியால் அந்தப் பட்டணமே ஒரு சோலை போல் விளங்கிற்று. (அங்குள்ள விசேஷம் என்னவென்றால் சிறுவர் சிறுமிகள் எல்லாரும் பள்ளிக்கூடத்தில் கட்டாயமாய்ப் படிக்க வேண்டியது. ஆனபடியால் அப்பட்டணம் கல்வியால் நிறைந்திருந்தது. அதினால் சிறுவர் சிறுமிகள் நல்லொழுக்கமுள்ளவர்களாயிருந்தனர்.) ஒருநாள் சாயரட்சையில் கமலாட்சி, விசாலாட்சி என்ற இரு பெண்கள் ஆற்றின் மார்க்கமாய் உலாவும்படி போனார்கள். கமலாட்சி அதிகம் கற்ற பெரிய பெண்ணாயிருந்தாள். விசாலாட்சியோ வெகு சிறியவள். இருவரும் ஆற்றின் பாலத்தின் மீது நின்றுகொண்டு, தண்ணீர் ஓடுவதையும், மீன்கள் சுளும்புவதையும், மாடுகள் தண்ணீர் குடிப்பதையும், தம்மைப்போல் சில பெண்கள் குடம் விளக்கி ஜலம் மொண்டு போவதையும் பார்த்துக்கொண்டு நிற்கையில், ஒரு குதிரை வண்டி வருகிற சப்தம் கேட்டது. ஒணானைப் பிடித்து விளையாடிக்



கொண்டிருந்த ஒரு பையன்மேல் வண்டி தாக்கியதால் அவன் காயப்பட்டு விழுந்து கத்திய சத்தமும் கேட்டது. உடனே கமலாட்சி விரைந்தோடி வண்டியை நிறுத்தி, ஆற்றில் தண்ணீர் மொண்டு வந்து காயப்பட்டவனுக்குக் குடிக்கக் கொடுத்துக் களையாற்றிக் காயத்தைக் கட்டி அந்த வண்டியிலேயே அவனை எற்றி அவனுடைய பெற்றோரிடம் கொண்டுபோய் விட்டுவந்தனள். இந்தப் பெண்மணியை அவர்கள் புகழ்ந்து அநேக ஆசீர்வாதங்களால் வாழ்த்தி தங்கள் பையனின் மதியீனத்தைக் குறித்து விசனித்தனர். கமலாட்சியின் தாய் தகப்பன்மாரும் அவள் குணத்தை மெச்சினார்கள். விசாலாட்சியும் தன் தோழியின் அருமையான குணத்தைக் கண்டு சந்தோஷப்பட்டுத் தானும் அவ்வாறு நற்குணமுடையவளாக வேண்டுமென்று அதிகம் விரும்பினாள். படித்த பிள்ளைகளே, கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவி செய்வதே உத்தம குணம். சிறிய பிராணிகளை வதைப்பது பாவமாகும். எதைத் தெரிந்துகொள்வீர்கள்? கமலாட்சியைப்போல கஷ்டப்படுகிறவர்களுக்கு எந்தச் சமயத்திலும் அன்புடன் உதவிசெய்வதே சிறந்த குணமாகும். இந்தக் குணமே உங்களை அபரஞ்சிப் பூஷணம்போலாக்கும்.

### பாடல்

காவடிச்சிந்து

'திருவுற்றிலகுகங்கை, முதலடி or பாளைவாய் கமுகில் வந்தார்'
என்ற மெட்டு.

1. சிந்துநதி தீரத்திலே அந்தமாயோர் பட்டணமாம்
விந்தையாய்ப்பேர் இரத்னபுரி யென்பரே—அதில்
சந்தத மகிழ்ச்சிகொள்வ ரென்பரே.

2. கமலாட்சி யென்றொருபெண் கன்னி விசாலாட்சியோடு
கண்யமா யுலாவச்சென்றா ளாற்றோரம்—வெகு
நன்னயமாய்க் காட்சியுண்டார் பின்னேரம்.

3. மீன்சுளும்பல் அலைமோதல் மேலேபசு தண்ணீருண்ணல்
ஆண்பெண்டிர் குடத்தினுள் நீர்மொண்டு—போகக்
காணவெகு ஆசைகொண்டாரே நின்று.

4. அவ்வேளையோர் குதிரைவண்டி அங்குநின்ற பையன்மீது
தவ்வியோடிக் காயப்படச் செய்தது—கமலம்
எவ்விதமோ கண்டு அங்கே சென்றனள்.

5. தண்ணீரூட்டிக் களையாற்றித் தக்கதாய்ச் சிகிச்சைசெய்து
தன்னோடவனை வண்டியி லேற்றியே—சென்றானவன்
தன்னைப் பெற்றோரில்லம்வரை கூட்டியே.

6. இச்சிறுமி செய்கையதை எல்லவரும் மெச்சினரே
ஈன்றதாயர் தந்தையரும் மெச்சினர்—நாமும்
இச்சிறுமி மாதிரியைக் கைக்கொள்வோம்.

'United Church Herald.'

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1917-ஆம் ஜூலை மீ

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஞா. | அப். | 19. | 1—12 | 11 | பு. | அப். | 22. | 17—30 | 21 | ச. | அப். | 27. | 18—29 |
| 2 | தி. | ,, | 19. | 13—27 | 12 | வி. | ,, | 23. | 1—17 | 22 | ஞா. | ,, | 27. | 30—44 |
| 3 | செ. | ,, | 19. | 28—41 | 13 | வெ. | ,, | 23. | 18—35 | 23 | தி. | ,, | 28. | 1—16 |
| 4 | பு. | ,, | 20. | 1—12 | 14 | ச. | ,, | 24. | 1—16 | 24 | செ. | ,, | 28. | 17—31 |
| 5 | வி. | ,, | 20. | 13—24 | 15 | ஞா. | ,, | 24. | 17—27 | 25 | பு. | லூக். | 1. | 1—17 |
| 6 | வெ. | ,, | 20. | 25—38 | 16 | தி. | ,, | 25. | 1—12 | 26 | வி. | ,, | 1. | 18—38 |
| 7 | ச. | ,, | 21. | 1—14 | 17 | செ. | ,, | 25. | 13—27 | 27 | வெ | ,, | 1. | 46—56 |
| 8 | ஞா. | ,, | 21. | 15—26 | 18 | பு. | ,, | 26. | 1—18 | 28 | ச. | ,, | 1. | 57—66 |
| 9 | தி. | ,, | 21. | 27—40 | 19 | வி. | ,, | 26. | 19—32 | 29 | ஞா | ,, | 1. | 67—80 |
| 10 | செ. | ,, | 22. | 1—16 | 20 | வெ. | ,, | 27. | 1—17 | 30 | தி | ,, | 2. | 1—17 |
| | | | | | | | | | | 31 | செ. | ,, | 2. | 18—38 |



# மாதர் போதினி

No. 236 ஆகஸ்டு 1917 No. 8

## EDITOR'S NOTES

## பத்திராதிபர் நானாவிதக் குறிப்புகள்

### 1. யுத்த போட்டிகள்

The Messines Victory. மெஸ்ஸீனிஸ் என்கிற இடத்திற்குக் கிழக்கே பிரிட்டிஷ்காரர் வெகுதூரம் முன்னேறிச் சென்றிருக்கிறார்கள். லைஸ், ஸீட்ஸ் என்கிற நதிகளுக்கிடையிலுள்ள முக்கியமான கொத்தளங்களைச் சத்துருக்கள் துறந்து ஓடியிருக்கிறார்கள். ஏழாந்தேதியிலிருந்து எட்டுதினத்திற்குள் நமது சக்கிரவர்த்தியின் சைனியங்கள் 7,432 பேரை சிறையாக்கியும், 46 பீரங்கிகளையும், 244 சூஸ்திர பீரங்கிகளையும், 60 சூஸ்திர ரதங்களையும் கைப்பற்றியுமிருக்கிறார்கள். மேலும், ஆங்கிலேயர் ஆராஸ் நதிதீரத்தில் சிற்சில இடங்களைப் பிடித்ததுமன்றி, ஜெர்மானிய படை அணிகளைப் பல இடங்களில் முறித்துமிருக்கிறார்கள்.

Air raid on Britain. சென்ற மாதத்தில் சத்துருக்களுடைய யுத்த ஆகாய விமானங்கள் இருமுறை இங்கிலாந்தின்மேல் படையெடுத்திருக்கின்றன. முதன் முறையில் லண்டன் நகரத்தின் கிழக்கு மூலையில் சட்டி பீரங்கிகள் விழுந்து நூற்றுநால்வர் சேதமானதுமன்றி நானூற்றுமூவர் காயமும் பட்டார்கள். வடகடலில் பிரிட்டிஷ் யுத்தகலங்கள் ஒரு பிரமாண்டமான ஜெப்பிலின் என்கிற ஆகாயவிமானத்தை விழுத்தின. இரண்டாந்தடவை சத்துருக்களுடைய ஆகாயவிமானங்கள் பிரித்தானியாவின் கிழக்குக்கரையிலும் தென்கிழக்குக்கரையிலுந் தோன்றி, அக்கினிப் பீரங்கிகளை எறிந்தன. சில வீடுகள் சேதமானதுமன்றி கொஞ்சம் ஜீவநஷ்டமும் உண்டாயின. காவற்காரர் சத்துருக்களுடைய ஆகாயக்கப்பல்களில் ஒன்றை பீரங்கிகளால் சுட்டு விழுத்தினார்கள்.

VOL. XXXII.

**German Peace Offer to Russia.** ஜர்மானிய பிரதம மந்திரிகளில் ஒருவராகிய ஆப்மென் என்பவர் தனது இராஜாங்கத்தின் சமாதான உடன்படிக்கையின் நிபந்தனைகளை சுவிற்ஜர்லாந்து துரைத்தனத்தின் மூலமாய் ருஷியாவிற்கு அறிவிக்க முயற்சி செய்திருக்கிறார். என்றாலும் அம்முயற்சி வியர்த்தமாயிற்று. பிரத்தியேகமாய்ச் சத்துருவோடு உடன்படிக்கை செய்வதும், வெகுகாலத்துக்கு யுத்தமுயற்சிகளை விட்டு ஓய்ந்திருப்பதும் ஆங்கிலேயாதியோருக்குப் பெருந்துரோகமென்றும், சகல பிரயத்தனமுஞ் செய்து யுத்தத்தை விமரிசையாய் நடப்பிப்பதே ருஷியாவிற்கு சுகத்தையுஞ் சுயாதீனத்தையுங் கொண்டுவருமென்றும், ருஷிய மஹாஜன மந்திராலோசனை சபை தீர்மானஞ் செய்திருக்கின்றது.

ஜெர்மானிய பிரதம தளகர்த்தனாகிய உவான் ஹின்டன்பர்க் ருஷிய தளகர்த்தரோடு செய்ய முயன்ற சமாதான முயற்சிகளும் சிதறிப் போயின.

**Greece—The king abdicates.** இருதலைக்கொள்ளி எறும்பு போல் அகப்பட்டு சத்துருவையும் ஆங்கிலேயாதியோரையும் பிரியப்படுத்தப் பார்த்துக்கொண்டிருந்த கிரேக்க மன்னனும், ஜெர்மனி சக்கிரவர்த்தியின் மைத்துனனுமாகிய கான்டான்டைன் ராஜரீகபட்டத்தைத் தமது புதல்வன் அலெக்ஜாந்தருக்கு வைத்துவிட்டு, சுயதேசம் நீங்கி, சுவிற்ஜர்லாந்து தேசஞ் செல்ல மனதுள்ளவராய் இத்தாலியாவுக்குச் சென்றிருக்கிறார். இவர் இப்படி செய்ததினால் நமது சக்கிரவர்த்தியைச் சேர்ந்தவர்கள், கிரேக்கதேசத்தில் காரியங்களைத் திருப்திகரமாய் நடத்த இடமுண்டாயிருக்கிறது. இதற்குள் பிரான்சிய சைனியங்கள் தெஸ்ஸலி என்கிற பிராந்தியத்தில் நுழைந்து அங்குள்ள விளைச்சல்களைக் காபந்துசெய்துவருகிறார்கள்.

**Prisoners of War.** இவ்வருடம் ஜெர்மனிதேசத்தில் சிறையாக விருக்கிற ஆங்கிலேயரின் மொத்தத் தொகை 42,831. பிரித்தானியாவில் சிறைபட்டிருக்கிற ஜெர்மானியர்களின் தொகை 58,138 என்று பிரித்தானியாவின் மஹாஜன சபைக்கு அறிவிக்கப்பட்டது.

**The situation in Spain.** ஸ்பானியாநாட்டில் உள்நாட்டுக் கலகத்திற்கு ஏதுகரமான பல காரியங்கள் நேரிடினும், இப்போது எல்லாம் அமர்ந்திருக்கிறதாகக் கேள்விப்படுகிறோம். முன் உத்தியோகம் வகித்திருந்த பிரதம மந்திரி தமது வேலையை ராஜிநாமா கொடுக்க, வேறொருவர் அவருடைய ஸ்தானத்திற்கு வந்திருக்கிறார். தற்சமயம் அதிகாரத்திலிருக்கும் பிரதானிகள், யுத்தத்தில் பிரவேசித்திருக்கிற துரைத்தனங்களோடு சம்பந்தமாயிருக்க முயலுகிறார்கள். என்



றாலும், அத்தேசத்துப் பத்திரிகையில், ஸ்பானியா பிரான்ஸியரோடு சேர்ந்து ஜெர்மானியருக்கு விரோதமாக யுத்தஞ் செய்வதே யுக்தமென்று கூறுகின்றன.

## 2. இதர சமாசாரங்கள்

**Revolt in China.** தற்சமயத்தில் சீனாவில் உள்நாட்டுக் கலகங்களும் குழப்பங்களும் உண்டாயிருக்கின்றன. சேங்குசுன் என்கிற தளகர்த்தன் சர்வஜன சங்க ஆளுகை ஆரம்பித்த காலம் முதல் இவ்வித கலகத்துக்குத் தூண்டுகோலாய் இருந்திருப்பதாகத் தோன்றுகிறது. தேசத்தின் வடக்கிலும் மையத்திலுமுள்ள பிராந்தியங்களின் கவர்னர்கள் தங்கள் சுயாதீனமாய் அரசாட்சி செய்யப்போகிறதாகப் பிரசுரஞ் செய்திருக்கிறார்கள். இராணுவதலைவர்களெல்லாருங் கூடி ஒரு துரைத்தன ஒழுங்கு செய்திருக்கிறார்கள். இதில் ஊஷிச்சேங் சர்வதிகாரமுள்ள அதிபதியாகவும் உவாங்கஹீடின் பிரதமமந்திரியாகவும் வேலை பார்ப்பார்களெனத் தோன்றுகிறது.

**Earthquake disaster in South America.** தென் அமெரிக்காவில் சால்வேடார் மாகாணத்தின் தலைநகரியாகிய சேன்சால்வேடார், ஓர் அபூர்வ பூகம்பத்தினால் நிர்மூலமாயிற்றென்று தெரியவருகிறது. அப்படியானால் அப்பட்டணத்திலிருந்த 30,000-க்குமேற்பட்ட குடிகளில் எத்தனைபேர் உயிர்தப்பினார்களோ அறியோம். அதோடு இன்னும் ஆறு பட்டணங்களும் பூகம்பத்திற்கிரையாயினவென்று பிந்திவந்த தந்திசமாசாரத்தினால் அறிகிறோம்.

## THE WAR LOAN

## இந்திய யுத்தகடன்

இவ்விஷயம் எவ்வளவோ முக்கியமானதென்பதை நாம் வற்புறுத்த விரும்புகிறோம். யுத்தம் சித்தியுடன் நடத்தப்படவேண்டுமானால் ஒவ்வொருவரும் இந்த யுத்தகடனுக்குத் தங்களால் இயன்றதைச் செய்வது நன்மையாகும். தபால் ஆபீசில் $7\frac{1}{2}$ ரூபா கொடுத்தால் ஒரு ஸர்ற்றிபிக்கேற் கொடுப்பார்கள். ஐந்து வருடங் கழித்து இது 10 ரூபா பெறுமதியுள்ளதாகும். பெருந்தொகையுடையோர் இந்த ஸர்ற்றிபிக்கேற் வாங்கலாம். அல்லது யுத்த கடன்பத்திரங்கள் வாங்கலாம். இவைகளின் மதிப்பு ஒருநாளும் குறையாது.

20 ரூ. ஸர்ற்றிபிக்கேற் வாங்க ரூ. 15-8-0 கொடுக்கவேண்டும்.
56 ரூ. ,, ,, ரூ. 38-12-0 ,,

வேண்டிய தொகையில் இன்னும் கால்வாசிப்பாகம்கூட வந்து சேரவில்லை. ஆதலால் யாவரும் முயற்சிசெய்வது முக்கியமான காரியம். இந்த விஷயமாய் உதவிசெய்யவேண்டியதற்கு மூன்று முக்கிய காரணங்கள் உண்டு.

1. சுயாதீனத்திற்காகவும் நீதிக்காகவும் செய்யப்படும் இந்த யுத்தத்தில் நாம் உதவிசெய்யத்தக்க ஏற்றவழி இதுவாகும்.

2. நம்முடைய பணம் மோசம்போகாமல் பத்திரமாய் வைக்கப்பட இது ஏற்ற வழியாகும்.

3. இப்படி உதவிசெய்வதால் இந்தியாவின் க்ஷேமத்திற்காக உதவிசெய்கிறவர்களாய் இருப்போம்.

இன்னும் சொற்பகாலமாத்திரமிருப்பதால் நாம் உடனே முயற்சி செய்வோமாக.



## THE THREE WISHES

## மூன்று வரங்கள்

ஓர் ஊரில் ஒரு எளிய மனிதன் இருந்தான். அவனுக்கொரு மனைவி. அவளும் அவனைப்போல் ஓர் ஏழை. இப்படியிருக்கும் போது ஒருநாள் அந்த எளியவள் தன் வீட்டு வாசற்படியில் நின்றுகொண்டு, உள்ளே இருந்த தன் கணவனோடு, 'இதோ, நான் கோரி



னது எனக்கிருந்தாலோ, பக்கத்துவீட்டு ஈரக்காளைபோலவும் அயல் வீட்டு போக்காளைப்போலவும் இருக்கமாட்டேன். அவர்களுக்கு எவ்வளவு இருந்தால்தான் என்ன' என்று சொன்னாள். அதற்கு அவள் புருஷன் 'அப்படியா? வேறொன்றும் வேண்டாமா? எனக்கும் அப்படியிருக்கப் பிரியந்தான்' என்றான். இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் மேலேயிருக்கிற பரமேஸ்வரன் கேட்டு, ஒரு அழகான தேவ கன்னிகை ரூபமெடுத்துக்கொண்டு அவர்களுக்குத் தென்பட்டு 'ஓ! எளிய பெண்ணே, நீ நினைத்தபிரகாரம் உங்களுக்கு மூன்று வரங்களைக் கொடுத்தேன். நீங்கள் எதைக் கோருகிறீர்களோ அதே நடக்கும். அதன்பிறகு யாதொரு சகாயமும் செய்யமுடியாது' என்று சொல்லிப் போய்விட்டது. அப்பொழுது,

மனைவி: 'நானிப்போதே கோரிக்கொள்ளமாட்டேன். திரண்ட செல்வமுள்ளவளாயிருந்தால் நன்றாயிருக்குமா? அதைவிட உத்தமமானது ஒன்றுமில்லை என்று நினைக்கிறேன்' என்றாள்.

கணவன்: 'ஆனால் அப்பேர்ப்பட்டவர்களும் வியாதிப்பட்டு செத்துப்போகிறார்கள். அதைப்பார்க்கிலும் நல்ல சுகத்தையும், பலத்தையும் நீடிய ஆயுசையும் கோரிக்கொண்டால் நன்றாயிருக்கும்' என்று சொன்னான்.

மனைவி: 'நிஜந்தான். ஆனால் எளியவனாயிருந்து ஜீவகாலமெல்லாம் பலமாயிருந்தால் என்ன பிரயோஜனம்? என்னத்தைக் கோரிக்கொள்ளவேண்டுமோ நாளைக்குப் பார்க்கலாம்' என்றாள்.

அவர்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில், ஒருவன் நல்ல முந்திரிப்பழங்களைக் கூடையில் வைத்துக்கொண்டு வந்தான். அவைகளை அவள் பார்த்து, 'ஆகா! எனக்கொரு காய் கிடைத்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!' என்றாள். அப்படி அவள் சொன்னவுடன் அவளுடைய காலின் முன்னே ஒரு பெரிய பழம் விழுந்தது.

'அடி! நீ எவ்வளவு மதியற்றவள்! நல்ல கோரிக்கை கோரினாயே! அது உன் மூக்கிலிருந்தால் இன்னும் நன்றாயிருக்கும்!' என்று கணவன் சொன்னான். உடனே கீழிருந்த காய் குதித்து அவளுடைய மூக்கில் ஒட்டிக்கொண்டு தொங்கினது. பாவம்! அவளுக்கு மூக்கு அதிக பளுவானது. மூக்கிற்கு நல்ல ஆபரணம் கிடைத்ததல்லவா? அவள் அழ அழ அந்தப் பழம் செம்மண்ணாக மாறிவிட்டது.

அப்பொழுது அவளுடைய கணவன், 'ஐயோ! பாவம்! நீ அழாதே, நான் நினையாமல் சொல்லிவிட்டேன். இதோ, இனி நான் அதிகமான பணம் கிடைக்கும்படி கோரிக்கொள்ளுகிறேன், அதோடு அந்தப் பழத்தின்மேல் பொன்னினால் பதிக்க ஏதாவது செய்வேன்'

என்றான். அப்பொழுது அவள், ‘இல்லை, இல்லை, நீ ஒன்றும் கேட்கவேண்டாம். நானே வேண்டிக்கொள்ளும்படி செய்’ என்று சொல்லி, ‘இப்பழம் கீழே விழுந்துவிடக்கடவது’ என்று சொன்னாள். உடனே அது கீழே விழுந்துவிட்டது.

இதினால் அந்த ஸ்திரீக்கு நல்ல புத்தி வந்தது. அப்போது அவள், இதோ! அந்த தேவ கன்னிகை நம்மைப் பரியாசஞ் செய்யத்தான் இம்மூன்று வரங்களைக் கொடுத்தது போலிருக்கிறது. போதும், போதும். இப்போது எப்படி இருக்கிறோமோ அப்படி இருந்தால் நல்லது.

அப்படிதான் இருப்போம். தேவன் எந்த நிலைமையில் வைத்தாலும் அந்த நிலைமையிலிருப்பது உத்தமம்.



**TYPES OF INDIAN WOMANHOOD**

இந்திய மாதர் லக்ஷணம்

The Philosopher. கலைஞானி—2.

இந்திய பெண்களுக்குள் கலைஞானிகள் இருந்திருக்கிறார்கள் என்று கேள்விப்படுவது அநேகருக்கு அற்புதமாகவிருக்கும். ஏனெனில், பல்லாயிரம் வருஷங்களாகத் தத்துவசாஸ்திரத்தின் பாஷையாகிய வடமொழியை ஸ்திரீகள் நாவிலாகிலும் உரைக்கப்படாது



என்றும், வேதங்களை ஓதலாகாதென்றும் கண்டிப்பாய் விதித்திருப்பதை நாம் அறிவோம். மேலும் நமது தேசத்தில் தற்காலத்திலுங்கூட ஸ்திரீகளில் நூற்றுக்கொருவர் படித்து, எழுதக் காண்பது அபூர்வம் என்றமையால், அவர்களுக்குள் கலைஞானிகளைக் காண்பது அசாத்தியம் என்று சொல்லுவார் பலர். ஆயினும் இது சரியன்று. கல்வி பயிலாதவர்களுக்குள்ளும் தத்துவசாஸ்திரத்தைப்பற்றிய அறிவு இருக்கிறதென்று காண்பது ஆச்சரியமல்ல. வல்லமை இருந்தும், அது பிரயோஜனத்திற்கு வராமையினாலே துருப்பிடித்தாற்போல் மங்கி இருக்கலாம்.

பிரிகத் ஆரண்யத்தில் பின்வருகிற வரலாறு காணப்படுகிறது:—விதேய தேசத்து மன்னனாகிய ஜனகர் யாகஞ்செய்த காலத்தில் ஆசாரியருக்கு அநேக விதமான சன்மானங்களைக் கொடுத்தார். குரு நாட்டிலிருந்தும், பாஞ்சால நாட்டிலிருந்தும் வந்திருந்த வேதியருக்குள் யார் கல்வியிற் சிறந்தவர், என்று கண்டுபிடிக்க ஜனகர் விரும்பினார். ஆகவே ஆயிரம் பசுக்களைப் பிடித்து ஒவ்வொரு பசுவின் கொம்பிலும் பத்துப் பொன் நாணயங்களைக் கட்டி, ஜனகர் பிராமணர்களை நோக்கி, ‘ஓ அந்தணரே! உங்களில் யார் ஞானத்தில் சிறந்தவரோ, அவர் இப்பசுக்களை ஓட்டிக்கொண்டு போகட்டும்’ என்றார். இதைக்கேட்ட பிராமணர்கள் எல்லாரும் மௌனமாயிருக்க, யாஞ்ஞவற்கியர் தன் சிஷ்யனைப் பார்த்து அப்பசுக்களை ஓட்டிக்கொண்டு போகச்சொல்ல, அவரும் அப்படியே செய்தார். இதைக் கண்ட பிராமணர்கள் மூர்க்கங்கொண்டு, அவர் தன்னைத்தானே ஞானிகளில் சிறந்தவரென்று சொல்ல என்ன நியாயம் உண்டு, என்று வாதாடத் தொடங்கினார்கள். பலர் அவர் வித்தியா சாமர்த்தியத்தைக் கண்டறிய பற்பல கேள்விகளைக் கேட்டார்கள். ஒருவன் யாஞ்ஞவற்கியரை நோக்கி, ‘நீர் யாவரினுஞ் சிறந்த ஞானியோ?’ என்று வினவ, அதற்கவர், ‘சிறந்த ஞானிகளுக்கு முன், நான் சாஷ்டாங்கம் பண்ணுகிறேன் என்றாலும், இப்பசுக்களை என்னுடையதாக்கிக்கொள்ள எனக்கு மெத்தப் பிரியம்’ என்றார். அப்படியே ஒருவர்க்குப்பின் ஒருவராகக் கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் யாஞ்ஞவற்கியர் சொன்ன மறுமொழியைப் பெற்று, அவர் சிறந்த ஞானத்திற்கு முன் அமர்ந்திருந்தார்கள். அச்சமயத்தில், கார்கிவாசக்னவி என்கிற ஒரு மங்கை எழுந்து நின்று, பல கேள்விகளைக் கேட்டு, கடைசியாக, ‘பிரமனுடைய வார்த்தைகள் எதுபோல் நெய்யப்பட்டிருக்கிறது?’ என்று கேட்க, யாஞ்ஞவற்கியர் சற்றே தடுமாறி, ஒரு உபாயம் தேடலானார். அவர் அவள் வாயை அடக்க எண்ணி, அவளை நோக்கி, ‘கார்கியே! சுயம்புவாகிய பராபரவஸ்துவைக்குறித்து நீ அதிகமாய் வின

வினால், உன் சிரம் சிதறிப்போம். மனோவாக்குக்கெட்டாத கடவுளைக் குறித்து அதிகமாய் விசாரிக்காதே’ என்றார். இப்படி பயமுறுத்தப்பட்டபோதிலும், சற்றே தாமதித்து, பின்னுங் கேள்வி கேட்கத் தொடங்கினாள். ‘யாஞ்ஞவற்கியரே! விதேய தேசத்திலிருந்து ஓர் போர்வீரன் வில்லோடும், கூரிய இரண்டு அம்புகளோடும் யுத்த சன்னத்தன் ஆகுதல்போல, இரண்டு கேள்விகளைக் கொண்டு நானும் உம்மைத் தாக்க மனதாயிருக்கிறேன். என் கேள்விகளுக்கு விடை சொல். வானங்களுக்குமேலும், பூமண்டலத்திற்குக் கீழுமிருந்து சகலத்தையும் அணைத்துக்கொண்டு இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய முக்காலத்திற்கும் பொதுவாயிருக்கும் வஸ்து எதனால் நெய்யப்பட்டிருக்கிறது?’ என்று கேட்க, யாஞ்ஞவற்கியர் பிரமனுடைய குணங்களை எடுத்து விஸ்தாரமாய்ச் சொல்லி, அவளைப் பேசாமலிருக்கச் செய்கிறார்.

அவருடைய அண்ணன் மகளாகிய மைத்திரியை அவளினும் பிரசித்திபெற்றவள். பண்டிதர் தத்துவபூஷணம் பிரிகத் ஆரண்யத்திலிருந்து சேர்த்த விஷயங்களைக்கொண்டு அவளைப்பற்றியும் அவளுடைய அத்தையைப்பற்றியும் கதாரூபமாய் எடுத்து எழுதியிருக்கிறார்.* மைத்திரியை யாஞ்ஞவற்கிய முனிவரது இருபத்தினிகளில் ஒருத்தி என்றும், பிரமனைக்குறித்து தெளிந்த அறிவுடையவளென்றும் உபநிடதத்தில் சொல்லியிருக்கிறது.

பண்டிதர் தத்துவபூஷணம் அம்முனிவர் அவரது தபோகிரஹத்தில் அவரது பத்தினிமாரோடு தத்துவசாஸ்திரத்திற்கடுத்த காரியங்களின்மேல் வார்த்தையாடுவதாகக் காட்டியிருக்கிறார். யாஞ்ஞவற்கியர் துறவறம் பூணுவதற்குமுன், தமது இருபத்தினிகளையும் அழைப்பித்து, தமது ஆஸ்திகளையெல்லாம் அவர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பதைப்பற்றிப் பேசும்போது, மைத்திரியை தன் கணவனை நோக்கி, ‘நாயகனே! இப்பூமண்டலத்திலுள்ள பொருள்களெல்லாம் என்னுடையதாயினும், அது என்னை மரணத்தினின்று விடுவிக்குமோ?’ என, யாஞ்ஞவற்கியர், ‘இல்லை, கோடீஸ்வரர்களுடைய ஜீவன் எப்படி முடியுமோ, அப்படியே உன்னுடையதுமாம்; திரவியம் வைத்திருப்பதனால் மரணமின்மை உண்டாகிறதில்லை’ என்று விடைபகர, மைத்திரியைப் பின்னும் ‘நீடூழி ஜீவனைத் தராத பொருள் எனக்கு என்னத்திற்கு? மரணம் அடையாமல் இருக்கும் வழியைத் தாங்கள் எனக்குத் தெளிவாய்ப் புகலவேண்டும்’ என்று வேண்ட, யாஞ்ஞவற்கியர் சொல்லுகிறார்: ‘என் கண்மணியே! நீ உன்னிடத்தில் எனக்குள்ள காதலை ஆறாய்ப் பெருகப் பண்ணுகிறாய். சொல்லக்கேளாய் பெண்கள் நாயகமே! உலகம் யாவருக்கும் அருமை



யானது. கணவன், மனைவி, புத்திரர், செல்வம், தாவரஜங்கம், அறிவு ஆகிய இவைகள் எல்லாம் மனுஷருக்கு அருமையானது. ஏனெனில், இவைகள் ஆன்மாவிற்குச் சொந்தம். மைத்திரியே! ஆன்மாவைக் கேட்கலாம், பரிசிக்கலாம், குறிக்கலாம். இப்படி ஆன்மாவைக் கண்டு, கேட்டு, பரிசித்தறியும்போது சகலத்தையும் அறியலாம். அவன் கூடுவிட்டுப் பிரியும்போது அறிவும் ஒழியும்.’ அப்போது மைத்திரியை, ‘திசை தெரியாத மாலுமிபோல் மயங்கப்பண்ணுகிறாய். அவனை நான் அறிய முடியவில்லையே’ என, கணவன் சொல்லுகிறான்: ‘நான் உன்னைத் தியங்கச்செய்யும் ஆன்மா அழியாதது. அதை அழிக்க முடியாது. ஆன்மாவை விவரித்துச் சொல்லவேண்டுமானால், இல்லை, இல்லை என்கிற பதங்களினால்தான் சொல்லமுடியும். அதைக் கிரஹிக்கமுடியாது. அது அழியாதது; அது தொடர்புடையதன்று; அதற்குப் பந்தமில்லை; தவறுதலில்லை. காதலியே! மரணமின்மை இப்படியே இருக்கிறது.’ இப்போதனைகளைச் செய்தபிறகு யாஞ்ஞவற்கியர் இல்லறந் துறந்து வனஞ் சென்றார்.

மைத்திரியையைக் கிரேக்க பெண்கலைஞானியாகிய ஐபாத்தியாவோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். ஐபாத்தியா புருஷர்களோடு சரிசமானமாய்க் கலந்தும் பெரிய கூட்டங்களில் பேசியும் பழகப்பட்டவள். அவளிருந்த காலத்தில் பல மதங்கள் ஒன்றோடொன்று சச்சரவுபட்டும், அவளுடைய பட்டணம் சுறுசுறுப்பானதாயுஞ் செல்வமுள்ளதாயுந் துன்மார்க்கம் நிறைந்ததாயு மிருந்தது. மைத்திரியையோ ஜனகர் ராஜ்யத்தில் அந்தப்புரத்தில் வசித்தவள். ஆகவே இந்த இரண்டு ஸ்திரீகளுடைய குணாதிசயங்களும் வித்தியாசமாயிருக்கின்றன. இவர்களைச் சித்தரித்து ஒரு படம் எழுதவேண்டுமானால் அதில் ஐபாத்தியா கெட்டியும், தோற்றமும், பெருந்தன்மையும், கிரேக்கருடைய கல்விமுறையில் ஒரு விசேஷமாயிருந்த தேகத்தேர்ச்சியுமுள்ளவளாயுமிருப்பாள். மைத்திரியை தோற்றத்தில் சிறியவளும், ஒழுக்க அலங்காரமும், அடக்கமுள்ளவளாயு மிருப்பாள். மனுஷர் அதிகப் பிரயாசைப்பட்டு ஜீவிக்கவேண்டிய நானிலத்தில் ஒன்றாகிய மலைநாட்டில் ஐபாத்தியா வளர்ந்தாள். மற்றவளோ அதிகப் பிரயாசமில்லாமலே ஜீவனஞ்செய்யக்கூடிய உஷ்ணமும் சரீர அயற்சி உண்டாக்கக் கூடியதுமான ஒரு நதிதீரத்தில் வளர்ந்தவள்.

இந்த இரண்டு விதமான குணாதிசயங்களுள்ள மாதர் இன்றுமுளர். ஒருபான்மையோர் உழைப்பின் மேன்மையையும், இன்னோர் தரத்தார் அடக்கத்தையும் சயநயமின்மையையும் உலகத்திற்குப் போதிப்பார்.

Marguerite Butler.

## THE TONGUE

## நாவு

நாவை, தொழிலாளிகள் கையாடும் கருவிகளுக்கும், சேனைவீரர் உபயோகிக்கும் ஆயுதங்களுக்கும் ஒப்பிடலாம். தொழிலாளிகள் தங்கள் கருவிகளால் மனுஷருக்குப் பிரயோஜனமான பல காரியங்களைச் செய்து உலகத்தைச் சிறப்பிக்கின்றனர். ஆனால், யுத்தவீரரோ தங்கள் ஆயுதங்களால் மனுஷரின் உயிரை மாய்த்து, உலகத்திற்குத் துக்கத்தை யுண்டாக்குகின்றனர். இவ்விதமே நாவைச் சரியானபடி உபயோகிப்பதால் உலகத்திற்கும் உலகத்திலுள்ளவர்களுக்கும் நாம் நன்மை செய்யலாம். அப்படிக்கில்லாமல் நாவினால் பொல்லாத காரியங்களைப் பேசி, சண்டையுண்டாக்கிச், துக்கத்தைப் பிறப்பிக்கவும் செய்யலாம். நாவினால் கடவுளையும் அவருடைய சிறந்த செயல்களையும் எடுத்துக்கூறி அவருக்கு ஊழியம் செய்யலாம். அல்லது மற்றவர்கள்மேல் நிந்தையான பேச்சுக்களைப் பேசி, அவதூறுபண்ணி, பிசாசுக்கு ஊழியஞ் செய்யலாம். எத்தனையோபேர் தங்கள் காரியங்களைப் பற்றி மாத்திரம் சிந்திக்காமல் பிறர் காரியங்களில் தலைப்பட்டு, ஓரிடத்திற் கேட்டதை மற்றோரிடத்திற் சொல்லி, சிநேகிதர்களையும் பிரித்துவிடுகிறார்கள்.

ஒருநாள் ஒரு ஸ்திரீ வேலையில்லாமல் அயல்வீட்டிற்குச் சென்று, முற்றத்தில் நின்றுகொண்டிருந்தாள். அந்த வீட்டுக்காரியோ வெகு சுறுசுறுப்பாய் வேலைசெய்துகொண்டிருந்தாள். வேலையாயிருந்தும் வந்தவளை உட்காரும்படி சொன்னாள். அவளோ, 'இல்லை, அக்கா, சும்மா நிற்கிறேன்' என்று சொல்லிக்கொண்டே 'ஏன் அக்கா, அந்தப் பெண்பிள்ளைக்கும் (—பேர்) உங்களுக்கும் மனஸ்தாபமா?' என்று கேட்டாள். அதற்கு வீட்டுக்காரி வேலைசெய்துகொண்டே 'இல்லை அம்மா; என்ன சங்கதி?' என வினவினாள். அப்போது அவள் சொல்லுவாள்: 'ஒன்றுமில்லை அக்காள், உங்களைப்பற்றி என்னென்னமோ பேசிக்கொண்டிருந்தாள். அதுதான் கேட்டேன்.' இதற்குள் அவளும் வேலையை விட்டுவிட்டு இருவரும் பேச ஆரம்பித்தார்கள். இதன் பலனாக, அன்றிரவு அந்தத் தெருவில் பெரிய சண்டையிருந்தது. அந்தச் சண்டை புருஷருக்குள்ளும் பரவினது. பார்த்தீர்களா, ஒரு பெண்பிள்ளையின் கோள்பேசும் வார்த்தையினால் வந்த பலன். நாவானது பெரிய நெருப்புத்தான். எச்சரிக்கையாயிருப்போமாக.

பகச் சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர்
நகச் சொல்லி, நட்பாடல் தேற்றாதவர்.—(குறள்.)





## A WORD TO WOMEN

## மாதர்க்கோர் வார்த்தை

ஜீவாதார வஸ்துக்களில் மூன்றாவது முக்கிய பொருள் போஜனம். ஆகாயமும் ஜலமும் நமக்கு இலவசமாய்க் கிடைத்தபோதிலும் போஜனத்தை நாம் கஷ்டப்பாடுபட்டுச் சம்பாதிக்க வேண்டியதாயிருக்கிறது. ஆகாயமும் ஜலமுமில்லாவிட்டால் நாம் பிழைத்திருக்கக் கூடாததுபோல, போஜனமில்லாவிட்டாலும் நாம் உயிரோடிருக்க முடியாது. ஏனென்றால், நாம் வேலைசெய்யும்போது மாத்திரமல்ல, பேசும்போதும், நடக்கும்போதும், நமது சரீரம் குறைந்து மெலிவடைகிறது. நாம் தூங்கும்போதுகூட நாம் விடும் சுவாசத்தினாலும், நமது இரத்தாசயந் துடிப்பதினாலும், நமது சரீரம் மெலிவடைகிறது. நாம் நினைக்கிற நினைவுங்கூட நமது மூளையை மெலிவடையச் செய்கிறது. இவ்விதமாய் நாம் செய்யும் வேலையினாலும், நமக்குள் இடையறாது நடந்தேறும் பல தொழில்களினாலும் அழிவடைந்த வஸ்துக்கள் மலஜலம், வேர்வை, சுவாசம் முதலியவைகளாக நமது தேகத்தைவிட்டுக் கழிந்துபோவதால் நமது சரீரத்தைச் சரிப்படுத்தவும், அதை வளர்க்கவும் போஜனம் நமக்கு அத்தியந்த அவசியமாயிருக்கிறது. மேலும் சரீர அனலைக் காக்கவும் அது அவசியம்.

நமது சரீரத்தைக் கவனித்தால், அது தசை, கொழுப்பு, எலும்பு என்பவைகளால் ஆனது என்றறிவோம். ஆதலால் நமது சரீரத்தை

வளர்க்க நாம் உபயோகிக்கும் போஜன பதார்த்தங்கள் இந்த மூன்று பொருட்களை உண்டாக்கத்தக்கவைகளாய் இருக்கவேண்டியது அத்தியந்த அவசியம். நமது சரீரத்தில் எறக்குறைய பதினொன்பது தனிப் பொருட்களுண்டு. அவைகளில் முக்கியமானவை பிராணவாயு, ஜலவாயு, உப்புவாயு, இருந்தை என்று சொல்லப்படும் கரி. நுரையுண்டு பண்ணும் போஜனம் (Nitrogenous food) இந்த நான்கு பிரதான பூதங்களாலாக்கப்பட்டு, நமது தசைகளுக்கும், மூளைக்கும், நரம்புகளுக்கும் வளர்ச்சியையும் பலத்தையுந் தருவதால் போஜனவகுப்புகளில் இதுவே சிறந்தது என்று சொல்லலாம். பால், முட்டை, இறைச்சி, மீன் முதலியவைகளும், பலவகைப் பயறுகளும், கோதுமை, கேழ்வரகு, வரகு, கம்பு, அரிசி முதலிய தானியங்களும் இவ்வகுப்பைச் சேர்ந்த போஜன பதார்த்தங்கள். முட்டையின் கருவிலுள்ள அல்பூமன் (Albumen), பாலிலுள்ள கேசின் (Casein), இறைச்சியிலுள்ள ஃவைபிரின் (Fibrin), பயறுகளிலுள்ள லெகுமின் (Legumen), தானியங்களிலுள்ள குளூட்டன் (Gluten) என்னும் வஸ்துக்களெல்லாம் நைற்றிரோஜன் என்னும் உப்புவாயுவாலானவைகளாதலால் அவைகள் நமது தேகத்தை வளர்க்கிறதற்கேற்றவைகள். இந்த வகுப்புப் போஜனம் குறைவுபடும்போது இரத்த ஓட்டம், சுவாசம் விடுதல், போஜனத்தை ஜீரணமாக்கல் முதலிய தொழில்கள் தக்க பிரகாரம் நடந்தேறாமல் சரீரமும் மனமும் பலவீனப்பட்டுப்போகின்றன.

இரண்டாவது வகுப்புப் போஜனமாகிய சரீர அனலைத்தரும் போஜனம் (Carbonaceous food) நமக்கு அத்தியந்த அவசியமான சரீர அனலைத் தந்து, சரீர அனலைக் காப்பதற்கு வேண்டிய கொழுப்பையும் உண்டுபண்ணுகிறது. இந்த வகுப்புப் போஜனங்கள் கரி, பிராணவாயு, ஜலவாயு ஆகிய மூன்று தனிப்பொருட்களாலானவை. முதல்வகுப்புப் போஜனத்திலடங்கியிருக்கும் உப்புவாயு இதிலில்லை. கொழுப்பு, வெண்ணெய், நெய், பலவகை எண்ணெய், சர்க்கரை, வெல்லம், மாப்பண்டம் முதலியவைகள் இந்த வகுப்பைச் சேர்ந்த போஜனங்களாம். இவைகளிலுள்ள கரியானது பிராணவாயுவுடன் கலந்தெரிவதால் அனலுண்டாகிறது. இவைகள் கொழுப்பாகவும் மாற, இந்தக் கொழுப்பு சரீரத்திலுள்ள அனல் இலேசாய் வெளியே செல்லாதபடி காக்கின்றது. அனலான இரத்தமுடைய திமிங்கிலம் முதலிய நீரில் வாழும் ஜெந்துக்களுக்கு அவைகளிலுள்ள கொழுப்பே ஓர் போர்வைபோல் அனலைக் காப்பதாய் இருக்கிறது. இவ்வகைப் போஜனம் குறையும்போது சரீரத்தில் பல கேடுபாடுகளுண்டாகும்; மட்டுக்கு மிஞ்சிச் சாப்பிடுவதால் நமது சரீரம் கொழுத்துப்போய்,



நமது இருதயமும் தசைகளும் சீர்கேடடையும். ஆதலால் ஸ்தூலித்த தேகக்காரர் இந்த வகுப்புப் போஜனத்தை மட்டாய்ச் சாப்பிடவேண்டும். சிறு பிள்ளைகளுக்கும், மெலிந்த தேகமுள்ளவர்களுக்கும் சர்க்கரைப் பண்டங்களும், மாப்பண்டங்களும், நெய்ப்பதார்த்தங்களும் அதிக நன்மைசெய்வதால் அவர்கள் அவைகளைச் சற்று அதிகஞ் சாப்பிடவேண்டும்.

சுண்ணாம்பு, இரும்பு, சோடியம், பொட்டாசியம் முதலிய க்ஷாரங்க பதார்த்தஞ் சேர்ந்த போஜனம், (Mineral food) ஆகிய மூன்றாம் வகுப்புப் போஜனம் நமது எலும்பை வளர்த்து, இரத்தத்தைச் சுத்திகரிக்கிறபடியால், மற்ற வகுப்புப் போஜனங்களைப்போலவே நமது சரீர சுகத்துக்கும் பலத்துக்கும் அவசியமானது. ஜலம், பலவகைக் காய்கறி, கீரைகள், பலவகைப் பழங்கள், உப்பு முதலியவை இவ்வகுப்புப் போஜனபதார்த்தங்கள். நாம் குடிக்கும் ஜலத்தில் கலந்திருக்கும் இரும்பு நமது இரத்தத்தைச் சுத்திகரிக்கிறது. நாம் சாப்பிடும் உப்பிலிருக்கும் சோடியம் சரீரசுகத்துக்கு அவசியம். வயிற்றில் கிருமிகள் ஜநிப்பதற்கு உப்பைக் குறைவாய்ச் சாப்பிடுவது ஒரு காரணமென்று சொல்லுகிறார்கள். எல்லாப் புது மரக்கறி பதார்த்தங்களிலும் பழங்களிலும் சுண்ணாம்பும் பொட்டாசியமும் உண்டு. நாம் சாப்பிடும் போஜனத்தில் போதுமான சுண்ணாம்பு இல்லாவிட்டால் நமது எலும்புகள் மெதுவடைந்து வளைந்துபோகும். குழந்தைகளுடைய எலும்புகள் வளையக்கூடியவைகளாயிருப்பதற்கு அவர்களுடைய போஜனத்தில் சுண்ணாம்பு இல்லாதிருப்பதே காரணம். புது மரக்கறி போஜனத்திலுள்ள பொட்டாசியமானது நமது இரத்தத்தைச் சுகமான ஸ்திதியில் வைக்கிறது. மரக்கறி போஜனம் சாப்பிடாமையினால் நமது இரத்தங்கெட்டு, ஸ்கர்வி (Scurvy) என்று சொல்லப்படும் தோலைப்பற்றிய வியாதி யுண்டாகிறது.

நாம் சாப்பிடும் போஜனம் ஜீரணமாகி இரத்தமாக மாறினால் மாத்திரம் நமது சரீரத்தை வளர்த்து நமக்குப் பலத்தைத் தரும். ஆதலால் நாம் பழம் முதலிய இலேசாய் ஜீரணமாகும் பதார்த்தங்களைச் சமையாமலும், ஜீரணமாவதற்குக் கடினமான பதார்த்தங்களாகிய தானியம், இறைச்சி, காய்கறி முதலியவைகளைச் சமைத்துஞ் சாப்பிடுகிறோம். சமைக்கும் விதத்திலேயே சில பதார்த்தங்கள் ஜீரணமாவதற்குக் கஷ்டமாகிவிடும்; வேறு சில சத்து இழந்துபோகும். மேலும் போஜனம் நாவுக்கு இதமானதாயுஞ் சமைக்கப்படவேண்டும். ஆகையால் மாதர், போஜனத்தை அடுப்பில் வைத்து இறக்குதல்தான் சமைத்தலென்று எண்ணாமல், இலேசாய் ஜீரணமாகத்தக்கதாகவும், சரீரத்தை வளர்ப்பதற்கேற்றதாகவும், நாவிற்கு ருசியைத் தரத்தக்க

தாகவும் சமைப்பதே சமையலின் இலக்ஷணமென்றறிந்து தக்கபடி சமைக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

காலைபோஜனம் கட்டிப்பதார்த்தமும் நீரும் கலந்த போஜனமாயிருப்பது உத்தமம். மத்தியானம் கனத்தபோஜனம் சாப்பிடுவதற்கு ஏற்றநேரம். இரவில் சாப்பிடும் போஜனம் இலேசாய் ஜீரணமாகத் தக்கதாயிருக்கவேண்டும்; மேலும் இரவில் சற்று குறைவாய்ச் சாப்பிடவேண்டும். ஒரு ஆள் சாப்பிடவேண்டிய போஜனத்தின் அளவு காலத்துக்கும், செய்யும் வேலைக்கும், வயதுக்கும், நிலைமைக்கும் தக்கதாய் வேறுபடும். கோடைகாலத்தில் சாப்பிடுவதிலும் மாரிகாலத்தில் அதிகஞ் சாப்பிடவேண்டும். வேலைசெய்கிறவர்கள் வேலையற்றிருக்கிறவர்களிலும் அதிகம் சாப்பிடுவார்கள். பிள்ளைகள் வர வர அதிகஞ் சாப்பிட்டு நடுப்பிராயமானபின் வரவரக் குறைத்துச் சாப்பிடுவார்கள். போதுமான வஸ்திரந் தரியாதவர்களும் வீடின்றி வெளியில் அலைகிறவர்களும் மற்றவர்களைப்பார்க்கிலும் அதிகஞ் சாப்பிடுவார்கள். இவைகளுக்குக் காரணம் சொல்லுங்கள் பார்ப்போம்.

## சாதனை விதிகள்

1. இலேசாய் ஜீரணமாகத்தக்கதும், சரீரத்தை வளர்க்கத்தக்கதும், சரியாய்ச் சமைக்கப்பட்டதுமான போஜனத்தைச் சாப்பிடுங்கள், பிறருக்கும் பரிமாறுங்கள். ஜீரணமாகும் போஜனமே தேகத்தை வளர்க்கும்.

2. போஜன பதார்த்தங்களையும் சிற்றுண்டிகளையும் எப்போதும் மூடிவையுங்கள். ஈக்கள் அவைகள்மேல் உட்கார்ந்தால் அவைகள் கொண்டுவரும் விஷவித்துக்கள் வியாதிகளைப் பிறப்பிக்கும்.

3. குறித்த நேரங்களில் சாப்பிடவேண்டும்; போஜனங்களுக்கிடையில் சாப்பிடலாது. பெரிய ஆள் தினம் மூன்று முறையும், பிள்ளைகள் நான்கு முறையுஞ் சாப்பிடலாம். பலகாரம், பழம் முதலியவைகளைப் போஜனம் சாப்பிட்டவுடன் சாப்பிடலாம்.

4. போதுமான அளவு சாப்பிடவேண்டும். மட்டுக்குக் குறைத்துச் சாப்பிடுவதிலும் மட்டுக்குமிஞ்சச் சாப்பிடுவதினால் அதிகக் கெடுதி நேரிடும்.

5. உங்கள் பற்களை நன்றாய் உபயோகியுங்கள். போஜனத்தைப் பற்களால் நன்றாய் அரைத்து, உமிழ்நீரால் கரைத்துச் சாப்பிடவேண்டும். ஆத்திரத்தோடு விழுங்கினால் அஜீரணமுண்டாகும்.

6. சாப்பிடுகிறதற்கு முன்னும், சாப்பிட்டதற்குப் பின்னும் சற்று நேரம் வேலையொழித்திருங்கள், மற்றப்படி அஜீரணத்திற்கிடமுண்டாகும்.



7. சாப்பிடுகையில் கவலையொழித்துச் சந்தோஷமாயிருங்கள். சாப்பிட்டுக்கொண்டிருக்கையில், மனதுக்கு வேலைகொடுப்பதால் ஜீரணத்துக்கு வேண்டிய உமிழ்நீர் நன்றாய்ச் சுரக்காது.

Y. G. Bonnell, P.B.

## A CURE FOR QUARRELSOMENESS

## கோபத்தையடக்கும் மருந்து

ஒரு சௌந்தரியமான பெண் தன் கணவன் எப்போதும் தன்னை அடித்துக் கோபமாய்ப் பேசுகிறானென்று தன் தகப்பனிடம் போய் சொன்னாள். அப்போது அவளுடைய தகப்பன் ஒரு சிறு புட்டியில் கொஞ்சம் மருந்து ஊற்றிக்கொடுத்து, ‘அம்மா! உன் புருஷன் கோபமாயிருக்கும்போது நீ இம்மருந்தை உன் வாயில் கொஞ்சம் ஊற்றிக்கொண்டு சிரி’ என்று சொன்னான். அப்படியே அவள் செய்ததால் அவளுடைய புருஷன் அவளைக் கோபியாமலிருந்தான். சில நாட்களுக்குள் புட்டியிலிருந்த மருந்து ஆய்விட்டது. அவள் தன் தகப்பனிடம் மறுபடியும் மருந்து கேட்டாள். அப்பொழுது அவளுடைய தகப்பன் சிரித்து, ‘அம்மா! அம்மருந்து தண்ணீர்தான். அது உன் வாயிலிருந்தால் உன் புருஷன் கோபப்பட்டுத் திட்டும்போது நீ திரும்ப அவனைத் தூஷிக்கவாவது திட்டவாவது முடியாது. அப்படியே நீ அவன் கோபிக்கும்போது பேசாமலிருந்தால் நல்லது’ என்று புத்திசொன்னான். அப்படி அவன் சொல்லிக்கொண்டிருக்கும்போதே அவள் கர்வப்பட்டு தன் புருஷனைத் தூஷித்து அவனுக்குக் கோபமூட்டினாள். உடனே அவள் தகப்பன் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவந்து அவளுடைய வாயில் ஊற்றிவிட்டான். அவளுக்குப் பேசமுடியாததால் தன் புருஷனைத் திட்டுவதை நிறுத்திவிட்டு சிரித்தாள். அதைப் புருஷன் கண்டு சந்தோஷித்து அவளை நேசித்தான். அன்பான பார்வையும் பேச்சுகளும் துன்மார்க்கமான புருஷனுக்குத் தகுந்த மருந்தாக இருக்கும்.

நீதி. 15 : 1.—‘மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்.’

## RIDDLES

## விடுகதைகள்

1. பெண் பிறப்பது மிறப்பது மொரு
பெருங் கணக்கல்ல இந் நாட்டிலே—வேதந்
தன்னி லொருத்தி ஆயுசுந் தணிக்கையும்
இன்னுந் தெளிவோடு பேசுவ தெவளோ ?

2. அழகான கிழவி யொருத்தி, யவள் சொத்துப்
பழகாத வோரழகிக் காச்சு—பார்! இழவு!!
களவாக அண்ணனாரிட மிவர் கற்ற
உளவான வோர்சிறு மந்திர மென்ன ?

3. அண்ணனே! கணவனென் றுள்ளதை யார்பிடஞ்சொன்னாள் ?
அக்குரு வதுவையர் கன் றிட்ட பேரென்ன ?
* கிண்ணெனக் கெக்கலித்த போதையன் கேட்டுப்
பெண்முகம் விளியாது பெருமைசெய்த வயணம் என்ன ?

U. A.

ஜுன் மாதத்தில் கொடுத்த விடுகதைகளுக்கு விடைகள்

1. படகு. 2. மத்தளம்.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1917-ஆு ஆகஸ்டு மீ

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பு. | லூக். | 2. 36—52 | 11 | ச. | லூக். | 6. 17—34 | 21 | செ. | லூக். | 9. 12—22 |
| 2 | வி. | ,, | 3. 1—14 | 12 | ஞா. | ,, | 6. 35—39 | 22 | பு. | ,, | 9. 23—36 |
| 3 | வெ. | ,, | 3. 15—28 | 13 | தி. | ,, | 7. 1—17 | 23 | வி. | ,, | 9. 37—50 |
| 4 | ச. | ,, | 4. 1—15 | 14 | செ. | ,, | 7. 18—35 | 24 | வெ. | ,, | 9. 51—62 |
| 5 | ஞா. | ,, | 4. 16—32 | 15 | பு. | ,, | 7. 36—50 | 25 | ச. | ,, | 10. 1—16 |
| 6 | தி. | ,, | 4. 33—44 | 16 | வி. | ,, | 8. 1—15 | 26 | ஞா. | ,, | 10. 17—28 |
| 7 | செ. | ,, | 5. 1—16 | 17 | வெ. | ,, | 8. 16—25 | 27 | தி. | ,, | 10. 29—42 |
| 8 | பு. | ,, | 5. 17—26 | 18 | ச. | ,, | 8. 26—39 | 28 | செ. | ,, | 11. 1—13 |
| 9 | வி. | ,, | 5. 27—39 | 19 | ஞா. | ,, | 8. 40—56 | 29 | பு. | ,, | 11. 14—28 |
| 10 | வெ. | ,, | 6. 1—16 | 20 | தி. | ,, | 9. 1—11 | 30 | வி. | ,, | 11. 29—44 |
| | | | | | | | | 31 | வெ. | ,, | 11. 45—54 |

### செப்டெம்பர் மீ

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ச. | லூக். | 12. 1—15 | 3 | தி. | லூக். | 12. 40—59 | 5 | பு. | லூக். | 13. 18—35 |
| 2 | ஞா. | ,, | 12. 16—34 | 4 | செ. | ,, | 13. 1—17 | 6 | வி. | ,, | 14. 1—14 |

* மெதுவான மணியோசைபோல அதிகமாய் வெளியே கேளாத தன் னடக்கமான சுகைப்பு.

C. L. S. PRESS, MADRAS—1917

# மாதர் போதினி

No. 237 செப்டெம்பர் 1917 No. 9

REGISTRAR OF BOOKS
6 SEP 1917
MADRAS

## HOW TO THINK OF GOD

*(An Address given to Hindu Women)*

**By the Rev. F. Kingsbury, B.A.**

## கடவுளைப்பற்றிய எண்ணம்

எப்படிப் பட்டவன் இறைவனென் றெண்ணினை,
அப்படி யன்றோஉன் வணக்கமும் இருக்கும் ?

1. தமிழ்நாட்டிலே மதுரை ஜில்லாவிலே கள்ளர் என்ற ஒரு ஜாதியார் உண்டு. அவர்களிற் பெரும்பான்மையோர் ஜாதியில் மாத்திரமல்ல, தொழிலிலும் கள்ளரே. இரவிலும் பகலிலும், வீட்டிலும் வெளியிலும், அசரம் சரம் ஆகிய எல்லாப் பொருளையும் திருடுவதும் கொள்ளையிடுவதுமே அவர்களுக்குத் தொழில். இவர்களிடத்துள்ள அச்சத்தினாலே கிராமங்களிலுள்ள ஜனங்கள் இவர்களின் தலைவனோடு ஓர் உடன்படிக்கை செய்துகொள்வார்கள். அதாவது, அவனைத் தங்கள் 'காவற்காரன்' ஆக ஏற்படுத்திக்கொள்ளுவார்கள். ஒவ்வொரு குடும்பமும் இவனுக்கு மாதந்தோறும் 'காவற்பணம்' தங்கள் தங்கள் சக்திக்கேற்றபடி கொடுத்துவருவார்கள். காவற்காரன் கிராமத்தாருடைய சொத்துக்கள் களவுபோகாதபடி காத்து வருவான். உள்ளபடி சொன்னால், அவன் காவல் காப்பவன் அல்லவே யல்ல. அவனாவது அவன் தலைமைக்குக் கீழ்ப்பட்ட வேறு கள்ளராவது களவுசெய்து ஜனங்களை வருத்தாதிருக்கும்படி ஜனங்கள் பயத்தினாலே கொடுக்கும் தீக்கோடையே இந்தக் காவற்பணம். இத்தீக்கோடை கொடாதவர் யாரோ, அவர்கள் பொருளை அபகரிப்பார்கள் இந்தக் கொடிய கள்ளர்கள்.

மதுரை ஜில்லாவில் உள்ள ஜனங்கள் கள்ளரைக்குறித்து எப்படி எண்ணுகிறார்களோ அப்படியே நமது தமிழ்நாட்டிலுள்ள ஜனங்களிற் பல்லாயிரவர் கடவுளைக்குறித்து எண்ணி, அவ்வெண்ணத்துக்

கேற்றபடியே கடவுளை (அல்லது தெய்வங்களை) வணங்கி வருகிறார்கள். கடவுள் கெட்டவரென்றும், தம்மை வணங்கித் தமக்குப் பூசைகள், பலிகள், திருவிழாக்கள் நடத்தாதவர்களை எப்படியாவது கஷ்டப்படுத்துவார் என்றும், அந்கஷ்டங்களுக்குத் தப்பவேண்டுமானால், அவருக்குப் பூசைகளும் பலிகளும் திருவிழாக்களும் தப்பாமல் நடத்தவேண்டும் என்றும், மறந்துவிட்டால், அவரது கோபாக்கினைக்குத் தப்பமுடியாதென்றும் பயந்து, பயத்தினிமித்தம் அவரைப் பூஜித்து வருகிறார்கள் அனேக ஆயிரவர்.

தன் புருஷன் வேலையிலிருந்து வருமுன்னே வீடுவாசல் பெருக்கி, தண்ணீர் தெளித்துக், கோலம் போட்டு அவனுக்குக் காப்பியும் சிற்றுண்டியும் வைத்திராவிட்டால் கைக்கொம்பினாலே முதுகிலே கொழுக்கட்டைபோல் வீக்கம் காணும்படி அடிப்பான் பாதகன் என்று பயந்து வேலைசெய்யும் ஏழை மனைவிபோலன்றோ நம்மில் அனேகர் ஆனார்கள்.

2. தமிழ்நாட்டிலே பல இடங்களிலே வருஷப்பிறப்புக் காலத்திலே அனேகர் தங்கள் மேலதிகாரிகளைக் கண்டுகொள்ளும்படி போவார்கள். பூமாலைகள், கிச்சிலிப்பழங்கள், கற்கண்டு முதலியன தாம்பாளத்திலே வைத்துக்கொண்டுபோய்த் தங்கள் அதிகாரிகளைத் தரிசனம் செய்து வருவார்கள். என் இப்படிச் செய்கிறார்கள்? தங்கள் மேலதிகாரிகள் மேலுள்ள அன்பினாலோ? அல்லவே யல்ல. மேலதிகாரிகளது தயவு கிடைத்தால் உத்தியோகம் உயரும், சம்பளம் அதிகரிக்கும் என்ற ஆலோசனையினாலேயே. இப்படி வருஷந்தோறும் கண்டுகொள்வதும் அன்றி, சமயங்கிடைக்கும்போதெல்லாம் சுவர்ணபுஷ்பங்களாலும் பலர் தங்கள் அதிகாரிகளுக்கு அருச்சனைசெய்வதும் உண்டு. நமது தேசத்திலே உத்தியோகத்துறைகளிலே நாள்தோறும் பரிதானம் (= லஞ்சம்) கொடுப்போரும் வாங்குவோரும் எத்தனைபேர் என்று சொல்வது! இவ்வாறு லஞ்சம் கொடாவிட்டால் யாதொரு நன்மையும் மேலதிகாரிகளிற் சிலர் செய்யார். இக்கீழ்மக்களைப் போன்றவர் கடவுளும் என்று எண்ணிவருகிறவர் தொகை எவ்வளவு! கடவுளுக்குப் பூசைகள், பலிகள், திருவிழாக்கள் செய்தால் அவர் அருள் கிடைக்கும், இல்லாவிட்டால் கிடையாது என்று எண்ணிப் பூசை செய்வார் பலர்.

தன் கணவனுக்கு அறுசுவையுண்டி செய்து ஊட்டியும், வேறு வகைகளில் அவனை மகிழ்வித்தும் வந்தால், தனக்கு அழகிய ஆபரணங்களும் உயர்ந்த ஆடைகளும் வாங்கித் தருவான் என்று எண்ணி வேலைசெய்யும் அன்பில்லாப் பெண்போலானார், கடவுள் பூசைசெய்யும் பலர்.



3. கடவுள் நமது தந்தை, நாம் அவரது பிள்ளைகள். இப்படிச் சொல்வது உபமான அலங்காரம் அல்ல. கடவுள் நம் தந்தைபோல்பவர் அல்ல; அவரே நமது தந்தை. உலகத்திலுள்ள நமது தந்தையர்களில் நல்லவர்கள் இத்தந்தையைப் போன்றவர்கள். கடவுளின் வடிவு அருள்வடிவு. நம்மை நேசிப்பதே அவர் இயல்பு. நமது நாட்டில் சிலர் கடவுளுக்குப் பெயர் ‘சிவன்’ என்றார்கள். வேறு சிலர் கடவுள் பெயர் ‘விஷ்ணு’ என்றார்கள். யூதர் கடவுள் பெயர் ‘யெகோவா’ என்றார்கள்.

இயேசு குருநாதரோ தாம் போதித்த காலத்தில் கடவுள் பெயர் ‘தந்தை’ என்று போதித்தார்.

கடவுள் நம்மை நேசிக்கிறார். நாம் அவரை நினைத்தாலும் நினையாவிட்டாலும் அவர் நம்மை நேசிக்கிறார். நாம் அவரைக் கேட்டாலும் கேளாவிட்டாலும் அவர் நமக்குப் பல நன்மைகள் செய்துவருகிறார். நாம் அவரை வணங்காவிடின் அவர் கோபத்தினால் நம்மை அழியார். நாம் அவரை வணங்குவதினாலே அவர் தயவைச் சம்பாதிக்க முடியாது. ஆயினும் அவர் நமது தந்தையென்றும் நாம் அவர் பிள்ளைகள் என்றும் உணர்ந்துகொண்டால், நாம் நமது தந்தையை வணங்காமலிருப்பது எப்படி?

‘மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.’

# A CONVERSATION

## ஒரு சம்பாஷணை

சிவஜராம். (விஷ்ணுஜராத்தைப் பார்த்து) நாம் இப்படி வீணாய்த் திரிவதில் என்ன லாபம்?

விஷ்ணுஜராம். இல்லை, இல்லை, நான் யாரைப் பிடிக்கலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறேன். அதற்குள் நீயும் சொன்னாய்.

சிவ. இந்த லோகத்தில் அநேக ஏழைகளிருக்கிறார்கள். அவர்களைப் பிடிப்போமா? பிடித்தால் நலமாயிருக்குமே.

விஷ். ஏழை ஜனங்கள் ஆரோக்கியமுள்ளவர்கள். அவர்களைப் பிடிக்க வழியில்லை. மகாராஜரைத்தான் பிடிக்கவேண்டும்.

சிவ. ஏழை ஜனங்கள் எப்படி ஆரோக்கியமுள்ளவர்கள்

ஆவார்கள்? அவர்கள் அழுக்கு வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு கூழோ, கஞ்சியோ குடிக்கிறவர்கள்.

விஷ். மேலுக்கு அழுக்கு வஸ்திரங்களோடிருந்தாலும், தேகத்தில் ஆரோக்கியமுடையவர்களாயிருப்பார்கள். அதெப்படியெனில், அவர்கள் எப்போதும் கஷ்டப்பட்டு வேலைசெய்கிறவர்கள். ஆகையால்தான் அவர்கள் என்னத்தைச் சாப்பிட்டாலும் எரிந்துவிடும்; வியாதியிருந்தாலும் சட்டைசெய்யாமல் வேலைசெய்வார்கள்.

சிவ. சரிதான். மகாராஜர் சுத்தமான உடுப்புகள் தரித்து ருசியும் சுத்தமுள்ளதுமான போஜனம் சாப்பிடுகிறவர்கள். அவர்களை எப்படி நாம் பிடிக்கமுடியும்?

விஷ். மகாராஜர் தரிக்கும் துணிகள் சுத்தமானதே ஒழிய அவர்கள் ஆகாரத்தில் உடம்புக்குச் சுகமே இல்லை. ஆகையால்தான் அவர்களைச் சுலபமாய்ப் பிடிக்கலாமென்று சொல்லுகிறேன்.

சிவ. அவைகள் எவை? எனக்குக் கொஞ்சம் தெரிவியும்.

விஷ். மகாராஜர் ஏரிக்குப் போகமாட்டார்கள். தண்ணீர் வேலைக்காரரைக்கொண்டு எடுத்துக்கொள்ளுகிறார்கள். அவர்கள் தூரமாய்ப்போய் ஆற்றுத் தண்ணீரைக் கொண்டுவராமல் அருகிலுள்ள குளங்களிலிருந்து தண்ணீர் எடுத்துக்கொண்டு வருவார்கள். அதை அவர்கள் குடிக்கிறார்கள். அப்போது நாம் அவர்களில் பிரவேசிக்கலாம்.

சிவ. ஐயோ பாவம்! அவர்களுக்கு வேண்டிய தண்ணீரை ஆறுகளில் எடுக்கமுடியாமற்போனாலும், குடிக்கிறதற்காவது கொஞ்சம் தண்ணீரை ஆற்றிலிருந்து கொண்டுவந்தால் நலமாயிருக்கும்.

விஷ். ஒருநாள் ஒரு மகாராஜர் வீட்டில் வேலைக்காரி சமையல் செய்துகொண்டிருக்கும்போது, அடுப்பண்டை கொஞ்சம் நெய் தவறி சிந்திவிட்டது. இதை எஜமாட்டியிடம் சொன்னால் கோபிப்பாள் என்று பயந்து, அந்த நெய்யையே கிண்ணியில் எடுத்து வைத்து சாப்பாட்டுக்குக் கொடுத்தாள். எஜமாட்டி சாப்பிடும்போது 'ஏன் நெய் கறுப்பாயிருக்கிறது?' என்று வேலைக்காரியைக் கேட்டாள். அதற்கு அவள் 'கோதாவரி கலந்தது' என்று சொன்னாள். எஜமாட்டி அவள் சொன்னது இன்னதென்று அறிந்துகொள்ளாமல், கொஞ்சம் சாப்பிட்டு சாதம் மெதுவாயிராததால் வேண்டாமென்று வைத்துவிட்டாள். அந்த சமயத்தில் நான் அவளில் பிரவேசித்தேன்.

சிவ. ஐயோ! நெய்கூட வேலைக்காரி பங்கிடவேண்டுமோ? மகா ஆச்சரியமாயிருக்கிறது. நமக்குத்தான் யாருமில்லை



விஷ். ஒருநாள் ஒரு பூனை எலியைக் கௌவிக்கொண்டு போகும் போது, அது தவறிக் குழம்பில் விழுந்துவிட்டது. வேலைக்காரி அதைப் பார்த்து, தான் அதை எஜமாட்டியிடம் சொன்னால், குழம்பு எங்கே என்றும், ஏன் மூடிவைக்கவில்லையென்றும், அவள் கோபிப்பாள் என்று கண்டு, தான் அந்த எலியை அதிலிருந்து எடுத்தெறிந்துவிட்டு அதின் இரத்தத்தை எடுக்கமுடியாததால் அதைக் குழம்பிலேயே கலக்கிவிட்டாள். சாப்பாட்டைப் பங்கிட்டபோது, எஜமாட்டி வேலைக் காரியைப் பார்த்து, 'குழம்பு ஏன் சிவப்பாயிருக்கிறது?' என்று கேட் டாள். அதற்கு அவள், 'சிவப்பு மிளகாய் போடுகிறதினால் குழம்பும் சிவப்பாயிருக்கிறது' என்று பதில் சொன்னாள். அவள் அதை சாப்பிட் டதுமுதல் வாந்தி தொடங்கினது. இதுதான் சமயம் என்று நான் அவ ளுக்குள் பிரவேசித்து கொஞ்சக்காலம் நல்ல சுகமாய் வாழ்ந்தேன்.

சிவ. பெரிய, பெரிய வீட்டுக்காரரைப் பிடித்தால் அவ்வளவு சுகமா?

விஷ். அதற்குச் சந்தேகமென்ன? மனுஷரை மாத்திரமல்ல, அவர்களுடைய மிருகங்களைப் பிடித்தாலும் அதிலும் சுகமுண்டு. அதெப்படியெனில்: ஒரு பெரிய வீட்டுக்காரியிடம் ஒரு பசுமாடு இருந் தது. அதற்குத் தொட்டியில் தண்ணீர் குறைவாயிருக்கிறதென்று எஜமாட்டி வேலைக்காரியைக் கோபித்தாள். அதற்கு அந்த வேலைக் காரி அந்தத் தொட்டித் தண்ணீரில் கொஞ்சம் சாணத்தைக் கலந்து விட்டாள். அதனால் அப்பசு அந்தத் தண்ணீரைக் குடிக்கவில்லை. அது அப்படி தண்ணீரைக் குடியாததினாலே அசைப்போடும் பை தொங் கினதென்று தேவதைக்கு வேண்டிக்கொண்டிருக்கையில் நான் பிர வேசித்து கொஞ்சக்காலம் சுகமாயிருந்தேன். இத்தனை என்னத்திற்கு? பெரியவீட்டுக்காரர் சாப்பிட்டபின் ஒரே இடத்தில் உட்கார்ந்து கொள்ளுவார்கள். அதினால் அவர்களுக்குச் சாப்பாடுகூட சரியாய் ஜீரணிக்கிறதில்லை. இப்படியாக அநேக வழிகளுண்டு.

சிவ. எழுந்திரு, போகலாம். நீ ஒரு தனவான் வீட்டுக்குப் போ. நான் ஒரு ஏழை வீட்டுக்குப் போகிறேன். யாரால் சுகமோ பிற்பாடு பேசிக்கொள்ளலாம்.

விஷ். சரி, நல்லது, வா போகலாம்.

சிவ. என்ன! அவ்வளவு காலையில்போய் இத்தனை நேரங் கழித்து வந்தாயே! பலித்த காரியமா?

விஷ். ஆம், நல்ல சுகமாயிருக்கிறது! நேரங்கழித்து வருவேன்! நீ வந்து எவ்வளவு நேரமானது? யாரைப் பிடித்தாய்? உனக்கு எப்படி இருந்தது?

சிவ. நான் ஒரு ஏழை ஸ்திரீயைப் பிடித்தேன். உடனே அவளுக்கு அதிக ஜுரம் வந்தது. அப்போது அவள் 'இனி நான் படுத்துக்கொண்டால் அதிகமாகும். பிள்ளைகளுக்கும் புருஷனுக்கும் சாப்பாடு யார் செய்வார்கள்?' என்று சொல்லி, மெதுவாய் எழுந்து இடுப்பைக் கட்டிக்கொண்டு, குடத்தை எடுத்துத் தண்ணீர் கொண்டுவர ஏரிக்குப் போனாள். இவளைப் பிடித்த சுகம் போதுமென்று அவளை விட்டுவிட்டு இவ்விடம் வந்தேன். உன்னைக் காணேம். ஆகையால் நான் சற்றுநேரம் உனக்காகக் காத்திருந்தேன். உன்னுடைய சங்கதியைச் சற்று சொல்லும்.

விஷ. நான் ஒரு தனவான் வீட்டு ஸ்திரீயைப் பிடித்தேன். அவள் தனக்குத் தலை வலிக்கிறதென்று சொன்னதும், உடனே எல்லா வேலைக்காரிகளும் ஓடிவந்து, சிலர் தலைக்குத் தைலம்பூசுகிறவர்களும், சிலர் விசுறுகிறவர்களும், சிலர் காலைப்பிடிக்கிறவர்களும், இன்னும் சிலர் மந்திரிக்கிறவர்களுமாயிருந்தார்கள். இதைவிட சுகம் இனி உண்டா? அதினால்தான் எனக்கு நோமாகிவிட்டது.

சிவ. அதற்காகத்தான் சாதாரணமாய் மகாராஜருக்கு வியாதி அதிகமாய் வருகிறதுபோல் இருக்கிறது!

சிவ. ஏழைக்கு என்ன? பாக்கியவான்களுக்கு என்ன? சொந்தமாய் வேலைசெய்துகொள்ளமுடியாமல் மேல்பார்வையிட்டுக்கொண்டிருக்கிறவர்களுக்கு அவ்வளவு வியாதி இராது.

## TYPES OF INDIAN WOMANHOOD

## இந்திய மாதர் லக்ஷணம்

### The Poet Devotee. கவிபக்தர்—3.

இந்துமார்க்கத்துக்குச் சரித்திர விஷயங்களில் கருத்தில்லை, மேலும் ஜீவாத்துமா கடைசியில் பரமாத்துமாவோடு லயமாகின்றதென்று போதிப்பதனால் தனிஆட்கள் அதற்கு அனாவசியம். ஆகவே இந்தியாவின் பூர்வோத்திர சம்பவங்களைச் சரித்திரபாகமாகத் திரட்டிச் சேர்ப்பதும் பழைய காலங்களில் அரிய பெரிய காரியங்களைச் சாதித்துப்போன பிரசித்திபெற்ற ஸ்திரீபுருஷர்களைப்பற்றி திட்டவட்டமான அறிவோடு எழுதுவதும் அரும்பிரயாசையே. மேற்கூறிய விஷயம், நாம் இப்போது எழுத வெத்தனித்திருக்கும் ராஜபுத்திர வம்சத்தாசியாகிய மீராபாய் என்கிற வீரியின் ஜீவிய விருத்தாந்தத்தில் நன்குவிளங்கும். இவளது கதைவரலாறு பெரும்பாலும்





ஒன்றுக்கொன்று நேர்விரோதமாயிருக்கும். கர்ணபாரம்பரியத்திலிருந்தே திரட்டப்பட்டுள்ளது. இன்னும் நமது நாட்டில் கட்டுக்கதையும் சரித்திரமும் இணைபிரியாமல் பின்னப்பட்டிருப்பதனால், ஓர் கதையில் உள்ளது இதென்றும், அல்லது அதென்றும் பிரிப்பது அசாத்தியம். பின்வரும் மீராபாயின் வரலாற்றுக்கு ஜோசப்பின் ரேன்சம் என்ற மாது எழுதியுள்ள 'காதலையும் சௌந்தரியத்தையும் பற்றின இந்திய கதைகள்' என்கிற புத்தகமே பிரதான ஆதாரம்.

மீராபாய் 1517-ம் வருஷம் மார்வார் அரசர்களில் ஒருவனாகிய ரத்தான்சிங் என்பவனுக்குப் பிறந்தவள். சிறுபிராயம்முதற்கொண்டே இவளிடத்தில் ஈசுவரபக்தி பற்றியெரிந்தது. கிருஷ்ணனை ஈசுவரனாக எண்ணி, வழிப்பட்டு மெய்யன்போடு பாக்களால் துத்தியஞ்செய்வாள்.

மணம்புரியக் காலம் வந்தபோது உள்ளத்தில் கிருஷ்ணனுக்கே அடிமைப்பட்டிருந்த குமா போஜராஜ் என்பவனுக்கு மனையாளானாள். அவ்விளவரசன் போர்த்தொழிலில் பிரக்கியாதி பெற்றிருந்ததுமன்றி கவி செய்வதிலும் திறமையுள்ளவனாய் இருந்தமையால் ஒருவர் செய்யும் பாக்களை ஒருவர் பாடுவதில் இன்புற்றிருந்தனர். என்றாலும் அவனது பாடல்கள் இப்பிரபஞ்சத்தின் பிரஸ்தாபங்களைப் பற்றினதாயிருக்க, இவளோ மானிடருக்கு ஈசுவரனிடத்திலிருந்து பிரவாகிக்கும் அன்பைப்பற்றியே பாடுவாள். போஜராஜனுக்கு மனையா

ளானபோதும், மீராபாய் கிருஷ்ணனிடத்தில் பக்திமாறாமலிருக்கப் பிரதிக்ஞை செய்துகொண்டாள். காலம் செல்லச்செல்ல சமஸ்தானத்தின் சுகபோகங்களின்பேரில் அவளுக்கிருந்த நாட்டம் நீங்கினது. சிந்தையெல்லாம் பரத்தைநாட ஆடை ஆபரணங்கள் அவளுக்கென்னத்துக்கு? தினமும் துறவறத்தின்மேல் அவளுக்கு வாஞ்சைகொண்டு பட்டமகிஷிக்குரிய விஷயங்களை நீத்ததைக்கண்டு அவள் கணவன் சலிப்புற்றான்.

கிருஷ்ணபகவானிடத்தில் அவளுக்கிருந்த பக்தி, மற்றவர்களுக்கும் அன்பின் விசேஷத்தைக் கூறச்செய்தது. ஆகையால் தெய்வ ஆலயங்களுக்கு அடிக்கடி போகவும், அங்கு கூடிய ஸ்திரீ புருஷராகிய ஜனத்திரளுக்குமுன்பாகத் தன் பாடல்களைப் பாடவும் ஆரம்பித்தாள். ஜனங்கள் நீங்கா கவனத்தோடு அவளது பாடல்களுக்குச் செவிகொடுத்தனர். ஒரு தருணத்தில் மெய்மறந்து திருவிழாக்கொண்டாட கூடியிருந்த ஜனக்கூட்டத்திற்குமுன் நடனஞ்செய்ய ஆரம்பித்தாள். இதை முன்னிட்டு, அவளது நாயகன் மாளிகையின் அந்தரங்கமான ஓர் அறையில் அவளை அடைத்து வைத்தான். என்றாலும் வறுமையும் காவலும் அவளுடைய பக்திவெறியை மாற்றவில்லை. காவற்கிடங்கில் தனித்திருந்த காலத்தில் இடையுறா அன்போடு கிருஷ்ணவணக்கஞ் செய்துவந்தாள்.

இத்தியாதி கிருத்தியங்களைப் பொறாத அவள் புருஷன் அவளைக் கொல்லச்செய்த பிரயத்தனங்கள் பயன்படாமற்போனதாகப் பாரம்பரைகள் கூறுகின்றன. கடைசியில் தற்கொலை புரிந்துகொள்ள அவளுக்கு ஆலோசனை சொன்னான். கணவன் சொற்படி நதியில் விழுந்து உயிரை மாய்த்துக்கொள்ளக் கருதி, அரண்மனை நீங்கி கிருஷ்ணனை மனதில் தியானஞ்செய்து ஆற்றில் குதித்தாள். அப்போது ஒரு ஒளி அவளைச் சூழ்ந்துகொண்டது. பிரகாசமுள்ள ஒருவர், அவள் பக்கமாய்க் குனிந்து, 'உன் கணவனின் ஆஞ்ஞைக்குக் கீழ்ப்படிந்ததனால் நீ உலகத்துக்கு மரித்தாயிற்று. இனி மானிடருடைய இருதயங்களாகிய ஒரு இராஜ்ஜியம் உனக்கு முன்னிருக்கிறது. அன்பின் விசேஷத்தை எங்கும்போய் மனுஷருக்குக் கூறி சகலரையும் கமலபாதத்தண்டை இழுத்துக்கொள்' என்றார். அவள் மூர்ச்சைதெளிந்து விழித்தெழுந்தபோது தான் ஆற்றங்கரையின் மேல் படுத்திருக்கக் கண்டாள். பொழுதுவிடிந்ததும் பாடிக்கொண்டே நாட்டிற்குள் சென்றாள்.

பிறகு கிருஷ்ணன் ஜனன க்ஷேத்திரமாகிய பிருந்தாவனத்துக்கு வழிகேட்டுக்கொண்டு போகும்போதே வழியிலிருந்த இடையர்களுக்கு உபதேசம் செய்யத்தொடங்கினாள். அப்போது மண்ணாசை,



பெண்ணாசை, பொன்னாசையாகிய இவைகளைத் துறப்பதே உய்வதற்கு வழியென்று, போதித்துவந்த ரூப்காவின் என்கிற சந்நியாசியும் அவளிடத்தில் காணப்பட்ட அடக்கம், பொறை, பக்தி இவைகளைக் கண்டு கொண்டாட, அவ்விருவருக்கும் நீடித்த சிநேகம் உண்டாயிற்று.

இவள் பாடும்போதெல்லாம் ஜனங்கள் திரண்டுவந்து அவள் வாயிலிருந்து வரும் அமிர்த வார்த்தைகளைக் கேட்டு அகமகிழ்ந்து போவார்கள். அனுதினமும் வளர்ந்தோங்கி வருகிற பெயர் பிரஸ்தாபத்தைக் கண்ட அவளது கணவன் முதலில் எரிச்சலடைந்தபோதிலும், கடைசியில் அவள் ஊக்கத்தையும் மெய்பக்தியையும் உணர்ந்து, மாறுவேடம் பூண்டு அவளிடம் போய்ப் பிச்சைகேட்டான். அவள் 'சகலத்தையும் துறந்த என்னிடத்தில் என்ன உண்டு?' என, அவன் தன் வேஷத்தைக் களைந்து, 'நான் உன்னிடத்தில் கேட்கவந்த பிச்சை மன்னிப்பே' என, அவளும் அப்படியே அருளிச்செய்தாள்.

பக்திமார்க்கத்தைச் சேர்ந்த மீராபாய் போலவே, ஐரோப்பிய தெரிசாவும் இளமை முதற்கொண்டு அதிக பக்திவினயம் காட்டியிருக்கிறாள். அவளுடைய பரந்த அனுதாபங்களும் எடுத்த காரியத்தைச் சாதிக்கும் குணமும் அவளை அரியமடத்தில் ஜீவிக்கும்படியாகச் செய்தன.

பின்வருமாறு தன்னைப்பற்றி எழுதுகிறாள்: 'கடவுளுடைய தொண்டர்கள் இரத்தச்சாக்ஷியாய் மரிப்பதை நான் கண்டபோது அவர்கள் கடவுளுடைய சுகபோகத்தைச் சொற்பகிரயத்துக்குக் கொண்டார்கள் என்று காணப்பட்டது. அவர்களைப்போலவே நானும் பிராணத்தியாகம் செய்ய ஆசித்தேன். அவரிடத்தில் எனக்கிருந்த அன்பினால் அப்படிச்செய்ய விருப்பங்கொள்ளாமல் மூக்ஷ உலகத்தில் சேகரிக்கப்பட்டிருக்கிற பேரின்பத்தைத் துரிதமாய் அனுபவிக்கவே அப்படி வாஞ்சித்தேன். இக்கோரிக்கையோடு நானும் என் தமையனும் கொடிய மகமதியராகிய மூர்ஜாதியார் வசிக்கும் வடஆப்பிரிக்காவுக்குச் சென்று, கடவுளுடைய அன்பைக் கூறி, கடைசியில் அக்கொடியவர் கையினால் மாளச்சம்மதித்தோம். கர்த்தாவும் அவ்விளம்பிராயத்தில் மனவுறுதியையும் தைரியத்தையும் எங்களுக்கு அருளியிருந்தார். ஆனால் எங்கள் பெற்றோரே பெருந்தடையாகக் காணப்பட்டார்கள்.'

மெய்பக்தியில் இலக்காகிய கடவுளை அன்பினால் அடைவதற்கு இவ்விருவரும் பிரயத்தனம் செய்திருக்கிறார்கள். என்றாலும் இவர்கள் வணக்கத்தின் பொருளாகிய கடவுளின் தன்மையில் மிகுந்த வித்தியாசமுண்டு. மார்க்கத்தில் காணப்படுகிற கிருஷ்ணனுடைய வா

லாறு சரித்திரமல்ல. மனுஷனுடைய மார்க்க அவசியங்களைச் சிருஷ்டித்த ஒரு புருஷன். கிருஷ்ணனைப்பற்றி புராணங்களில் வருகிறதும் பெரும்பாலும் ஜனங்கள் நம்புகிறதுமான கதைகள் கடவுளுடைய தன்மைக்கு அடாதவைகள். இதோடு உழைக்கவும் பாடுபடவும் வந்த மனுஷகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவை ஒத்துப்பாருங்கள். அவரிடத்தில் காணப்பட்ட தூய்மையும், பரோபகார சிந்தையும், இதரருக்காகத் தம்மைத்தாமே தத்தம் செய்கிற குணமும் அவரை வழிப்படுகிறவரிடத்தும் அமையும். மீராபாய் அன்பின் சொரூபியாகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கேட்டிருப்பாளேயானால், அவளுக்கிருந்த தேவதாபக்தி சம்பூரணப்பட்டிருக்கும்.

## EDITOR'S NOTES

## பத்திராதிபர் நானாவிதக் குறிப்புகள்

Liberia's break with Germany. மேற்கு ஆப்பிரிக்காவில் லைபீரியா என்னும் நாடு இராஜாங்க விஷயமாகவும் வியாபார சம்பந்தமாகவும் ஜெர்மானியருக்கு இருந்த கடைசி ஸ்தலம். அத்தேயத்தில் நடந்த வியாபாரத்தின் முக்கால்பாகம் ஜெர்மனியைச் சேர்ந்தது. எண்ணெய் முதலான விலையுள்ள ஏற்றுமதிகள் எல்லாம் யுத்தத்திற்கு முன்னே நேரே ஜெர்மனிக்கு அனுப்பப்பட்டன. ஆனால் இப்போதோ அந்நாட்டில் காணப்படும் ஜெர்மானியரையெல்லாம் அவர்கள் சுயதேசம் அனுப்பிவிடவும் வர்த்தகங்களை மூடிவிடவும் லைபீரியா துரைத்தனத்தார் கட்டளைப் பிறப்பித்திருக்கிறார்கள்.

Siam and the War. சையாம் நாட்டார் ஜெர்மானியரோடிருந்த இராஜாங்க சம்பந்தத்தை உடைத்துப்போட்டதுமல்லாமல், அவர்கள் நாட்டில் வசித்திருந்த ஜெர்மானியர்கள் எல்லாரையும் சிறையாக்கி அநேக கப்பல்களையும் அதனுள்ளிருந்த சரக்குகளையும் கைப்பற்றிக்கொண்டார்கள்.

Air Raid on London. ஜுலை மாதம் துவக்கத்தில் சத்துருக்களுடைய இருபத்துமூன்று ஆகாயவிமானங்கள் லண்டன்மா நகரத்தையும் அதைச் சூழ்ந்திருக்கிற ஊர்களையும் தாக்கி, சட்டிப்பீரங்கிகளைச் சரமாரியாய்ப் பொழிந்தன. இதற்குமுன் இத்தனை விமானங்கள் ஏககாலத்தில் படையெடுத்து வந்ததில்லை. ஆகாயம் தெளிவாயிருந்ததினால் வெகு உயரத்திலிருந்த சத்துருக்களுடைய விமானங்கள் பிரமாண்டமான கறும்பறவைகளைப்போல் தோன்றின. வெளியே வரக்கூடாதென்று எச்சரிக்கப்பட்டிருந்தும் இக்கலக்கமான காக்ஷி



யைக் காண ஸ்திரீகளும் புருஷர்களும் கும்பல் கும்பலாகக் கூடினார்கள். இந்த ஆகாயயுத்தம் பன்னிரண்டு நிமிஷம் நடந்தபோதிலும் 43 பேர் மரணமடைந்தார்கள்; 197 பேர் காயமடைந்தார்கள். சத்துருக்கள் பின்வாங்கிப் போகும்போது ஆங்கிலேய காவல் விமானங்கள் அவைகளைத் தாக்கி, பதினொரு விமானங்களை அழித்து நாசஞ்செய்தன.

Germany Peace Move. ஜெர்மானிய பிரதான மந்திரி, ஜெயித்த தேயங்களைக் கட்டிக்கொள்ளாமலும் அடைந்த நஷ்டத்திற்கு ஈடு வாங்காமலும் சமாதான உடன்படிக்கை செய்வதற்குச் சம்மதம் கொடாததினால், ஜனங்களுக்குள் ஒரு குழப்பம் உண்டாயிருக்கிறது. ஒரு பாகத்தார் ஜெர்மனி தன்னைக் காத்துக்கொள்வதற்கென்று சண்டை செய்கிறதென்றும் சமாதான ஏற்பாடுகளை நிதானிக்கச் சித்தமாயிருக்கிறதென்றும், உள்நாட்டில் சீர்த்திருத்தங்களையும், மஹாஜனசபை அரசாட்சியையும், ஆசிக்கிறதாகவும் இதர நாடுகளுக்கு அறிவிக்கத் துரைத்தனத்தாரை நெருக்குகிறார்கள். இக்குழப்பங்களின் நிமித்தம், இதுவரையில் பிரதம மந்திரியாயிருந்த உவான் பெத்மென் ஹால்வெக் ராஜிநாமா கொடுத்திருக்கிறார்.

Internal troubles in Russia. ருஷியாவின் உள்நாட்டில் அதிக குழப்பம் உண்டாயிருப்பதாகத் துக்கத்துடன் அறிகிறோம். ஜுலை மாத மத்தியில் தற்கால துரைத்தனத்துக்கு விரோதமாய்ப் பெருங்கலகம் உண்டாகி தலைநகரியாகிய பீட்ரோகிரேடில் போர்ச்சேவகருக்குள் சண்டை நேரிட்டது. குண்டு மருந்துகளுக்குக் காபந்தாயிருந்த ஒரு இராணுவத்தை உடைத்ததிலிருந்து இந்தக் குழப்பமுண்டானதாம். எப்போது உள்நாட்டில் கலகமிருக்கிறதோ அப்போது யுத்தமுனையிலிருக்கிற சைனியங்களுக்குள் அபஜெயம் தலைக்காட்ட ஆரம்பிக்கிறது. யுத்தம் திருப்திகரமாய் நடையேறுவதற்கு ருஷியாவில் சமாதானமான அரசாட்சி அவசியம். தற்சமயம் மந்திராலோசனைச் சபையார் துரைத்தனத்தின் மையத்தைப் பீட்ரோகிரேடிலிருந்து உவார்சா நகரத்துக்கு மாற்ற யோசனையாய் இருப்பதாகத் தெரியவருகிறது.

The Secretary of State for India. இதுவரையில் இந்தியா துரைத்தனத்தின் காரியதரிசியாயிருந்த ஸ்ரீ ஆஸ்ற்றன் சேம்பர்லன் ராஜிநாமா கொடுக்க, அவருக்குப் பதிலாக ஸ்ரீ மான்டாகு என்பவர் நியமகம் பெற்றார். இவர் கொஞ்சகாலத்துக்கு முன்னே உபகாரியதரிசியாய் வேலைபார்த்தவர். இந்நாட்டின் காரியாதிகளை நன்கு அறிந்தவர்; ஆகவே நமது நாட்டாருக்குப் பெரிய சகாயராய் இருப்பார் என்பதற்கு ஐயமில்லை.

The British Royal family. நமது சக்கிரவர்த்தியின் இராஜ குடும்பத்துக்கு 'உவின்ஸர் வம்சம்' என்கிற மகத்தான பட்டப்பெயர் வழங்கும். இதுவரையில் இராஜகுடும்பத்தில் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டுவந்த ஜெர்மானிய பட்டப்பெயர்களெல்லாம் நிராகரிக்கப்பட்டன.

## CHILDREN'S PAGE

## பாலர் பக்கம்

எனதருமையான சிறுவர்களே, சிறுமிகளே!

உங்களை மாதந்தோறும் மாதர் போதினியின் மூலமாய் சந்திக்கவும் சந்தோஷிப்பிக்கவும் சன்மார்க்க சரிதைகளைப் புகட்டவும் சமயம் கிடைத்ததே எனக்கொரு பெருஞ் சலாக்கியமாகும். நீங்களும் அதிக அவாவுடன் படித்து, அதின்படி நடப்பீர்களென்று நிச்சயித்து எனது முதல் சரிதையை எழுதுகிறேன்.



### கதை

மதுரம் பொருந்திய மதுரைஜில்லாவில் ஷண்முகநதி யாற்றங் கரையில் ஜனகபுரி யென்றொரு சிறு அழகிய கிராமம் உண்டு. நான்கு ரஸ்தாக்களும் சந்திக்கிற விடத்தில் இவ்வூர் அமைந்திருந்த



மையால், பிரயாணிகள் உண்டு களைப்பாறுகிறதற்காக அங்கு சற்றுத் தாமதிப்பதுண்டு. அக்கிராமத்தில் அநேகர் படித்தவர்களாயும் உத்தியோகத்தில் அமர்ந்தவர்களாயு மிருந்தார்கள். ஆனால் கமலாயி என்ற ஒரு ஏழைப்பெண்ணும் இருந்தாள். அவளுடைய பெற்றோர் பணக்காருமல்ல, படித்தவர்களுமல்ல. அன்றாடகம் கூலிவேலை செய்து தான் சாப்பிடுவார்கள். இந்தப்பெண், மற்றப்பிள்ளைகள் எல்லாரும் பள்ளிக்கூடத்திற்குப் போகும்போதெல்லாம், தானும் அப்படியிருந்தாலாகாதா என்று மனதிற்குள்ளேயே நினைத்து விசனப்படுவாள். ஒருநாள் அவளுடைய பெற்றோர் அயல்கிராமத்திற்கு ஒரு ஜோலியாய்ப் போனார்கள். போகும்போது கமலத்தைக் கூப்பிட்டு, 'நாங்கள் திரும்பும்வரை எந்த இடத்திற்கும் போகவேண்டாம். வீட்டிலேயேயிருந்து சாமான்களைப் பாதுகாக்கவேண்டும்' என்று திட்டமாய்ச் சொல்லிப்போனார்கள். இந்தப் பெண் கீழ்ப்படிதலுடனே பெற்றோருத்தரவின்படி வீட்டிலேயே இருந்தாள். அன்றையத்தினம் அங்கிருந்த பள்ளிக்கூடத்தைப் பார்க்கும்படி ஒரு வெள்ளைக்கார பாதிரியார் வந்திருந்தார். பள்ளிக்கூடத்தைப் பரீட்சித்துப் பிள்ளைகளுக்கு வெகுமதியும் சிற்றுண்டிகளும் கொடுத்தார். இதுவிஷயத்தைக் கேட்ட கமலம் அந்தத் துரையைப் பார்க்க ஆசைப்பட்டாள். ஆனாலும் பெற்றோர் கட்டளைப்படி போகக்கூடவில்லை.

அந்தக் கிராமம் அழகாயிருந்ததைக் கண்ட துரை, வீடுகளைப் பார்க்கும்படி புறப்பட்டார். தெருக்கள்தோறும் நடந்து செல்லுகையில் ஒரு வீட்டின் நடையருகில் ஆவலோடு கூர்ந்து தன்னைப் பார்த்துக்கொண்டு நின்ற ஒரு அழகிய சிறுமியைக் கண்டார். அவள்தான், கமலம். உடனே அவர் அவள்பக்கம் சென்று அவளைத் தொட்டு அவள் பெற்றோரைப்பற்றி விசாரித்து, 'நீ படிக்க இஷ்டந்தானா?' என்று கேட்டார். அவள் அதிக சந்தோஷத்துடன், 'ஆம், ஐயா' என்று சொல்லும்போதே, அயலூர் சென்ற பெற்றோரும் திரும்பிவந்தனர். அவர்களிடத்தில் பிள்ளையின் ஆசையைக்காட்டி தன்னுடன் படிக்க அனுப்பும்படி கேட்டனர். அவர்களும் சம்மதிக்கவே, அப்பிள்ளையைத் தன்னுடன் வண்டியிலேற்றித் தமது இருப்பிடம் கொண்டுபோய் அங்குள்ள அன்னதானப் பாடசாலையிற் சேர்த்தார். கமலம் வருஷந்தோறும் சித்திபெற்று உயர்தர வகுப்புகளை முடித்து சிறந்த கிறிஸ்தவ ஜீவியம் செய்து அதே பாடசாலைக்கு உபாத்தினியாய் வந்தனள். அவளுடைய பெற்றோர் கிறிஸ்தவர்களானதன்றி அவளுடைய பந்துக்கள், சகோதரர், சகோதரிகளும் உயர்ந்த நிலைமைக்கு வந்தனர்.

அருமைப் பிள்ளைகளே, கீழ்ப்படிதலின் பெருமதியைப் பார்த்தீர்களா? தகப்பன், தாய் சொல்லைத் தட்டவே வேண்டாம். அப்போது கமலத்தைப்போல் நீங்களும் உயர்த்தப்படுவீர்கள்.

[அடுத்த சஞ்சிகைமுதல் பாடலும் சேர்த்துப் பிரசுரிக்கப்படும்.]



## TWO MISERS

## இரண்டு உலோபிகள்

பூர்வீக காலத்தில், இஸ்பாகன் என்னுமிடத்தில் இப்ராயீம் என்னும் நாமமுள்ள தனவந்தனான உலோபி ஒருவனிருந்தான். இஸ்பாகன் ஊரிலுள்ள தெருக்களைத் தங்கம் பூசக்கூடிய அத்தனை ஐசுவரியவானாயிருந்தானாம் அவ்விப்ராயீம். இவனைப்பற்றி எங்கும் பிரஸ்தாபமாகவே, பாக்தாத்நகரிலுள்ள இஸ்மாயில் ஸெயிட் என்னும்



மற்றொரு உலோபியின் செவியிலும் அது எட்டிற்று. இஸ்மாயில், தான் எளிமையானமையால் இப்ராயீமைப்போல் தனவந்தனாக விரும்பி, இப்ராயீமிடம் சென்று, ஐசுவரியவானாகும் வழியைக் கற்றுக்கொள்ள எண்ணி, இஸ்பாகனை அடைந்தான்.

தான் தேடியடைந்த ஞானவானின் வீடும் சிறியதாயிருந்தது. இப்ராயீம் தன்னை நாடினோனை அன்பாயழைக்க, இஸ்மாயில், தான் பாக்தாத்தினின்று அவர் பாதபடியிலுட்கார்ந்து ஞானம் கற்றுக்கொள்ள வந்ததாகச் சொன்னான். இப்ராயீம், தான் அன்று போஜனத்திற்குவேண்டிய ரொட்டி, வெண்ணெய், பால் முதலிய வாங்கப்போகிறதாகவும், வழியில் ஞானம் கற்பிப்பதாகவும் சொல்லி, இஸ்மாயிலைக் கூட்டிச் சென்றனன்.

இருவரும் ரொட்டிக்கடையண்டை வந்தனர். ‘உன் ரொட்டி எப்பேர்ப்பட்டது?’ என்று இப்ராயீம் வினாவ, ரொட்டிக்காரன், ‘வெண்ணெயைப்போல் மெதுவானது’ என்றான். இப்ராயீம், ‘வெண்ணெய் ரொட்டியைவிட மேலானதாயிருக்கிறதே’ என்று சொல்லிக்கொண்டே, வெண்ணெய் விற்குமிடம்போய், ‘இது நல்ல வெண்ணெயா?’ என்று கேட்க, ‘எண்ணெயைப்போற் சுத்தமானது. இதுபோல் உமக்கு எங்கும் கிடைக்காது. வெகு நேர்த்தியானது’ என்றான் அவ்வெண்ணெய் விற்பவன். ‘உன் வெண்ணெய் நன்றாயிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. எனினும், எண்ணெய் அதைவிட மேலானதுபோல் தோன்றுகிறதே’ என்று மிகவும் சாதுரியமாய் இப்ராயீம் மொழிந்து, எண்ணெய் வாங்கிக்கொள்வதே உசிதம்’ என்று இஸ்மாயிலிடம் சொல்லிக்கொண்டே, இருவருமாக ஓர் எண்ணெய் வியாபாரியை யடைந்தனர். ‘எண்ணெய் நல்லதா?’ என்று இப்ராயீம் கேட்க, ‘எண்ணெய் ஊற்றிலுள்ள ஜலத்தைப்போல் தெளிவாயிருக்கும்’ என்று வியாபாரி கூற, இப்ராயீம், ‘பிறகு நாம் வெகுதூரம் போகவேண்டியதில்லையே. நீர், எண்ணெயைப் போலிருக்குமென்று கேட்டாயே. என்னிடம் ஏராளமான நீரிருக்கிறது. கடவுள் துதிக்கப்படுவாராக. உனக்கு வேண்டியதையெல்லாம் கற்பித்துவிட்டேன். ஏதேனும் வாங்குகையில் என்னைப்போல் வாங்கினால், மேன்மேலும் ஐசுவரியவானாவாய்’ என்று இஸ்மாயிலுக்குச் சொல்லவே, இஸ்மாயில், ‘தகப்பனே, உமது ஞானம் இவ்வளவு இருக்குமென்று நான் சிறிதும் எண்ணவில்லையே! நான் உமக்கு எப்படி நன்றிசெலுத்துவேன்! கடவுள் உமக்குச் சமாதானம், எண்ணெய், ரொட்டி, வெண்ணெய் அருளுவாராக!’ என்று ஆசீர்வதித்துத் தன் வீடு சென்றனன்.

## RIDDLES

## விடுகதைகள்

1. மனுஷர் என்னை ஜெனிப்பித்து தண்ணீரிலிட்டு அக்கினியில் போடுகிறார்கள். நான் பூமியின்மேல் வசித்து துணியில்லாத ஒரு குடையின் கீழ் குடியிருக்கிறேன். அங்கிருந்து நான் அசைகிறதில்லை. என்னை எரிக்கிறார்கள், நான் கட்டையல்ல. என்னை அளக்கிறார்கள், நான் தானியமல்ல. என் பெயரின் ஈறு கல். நான் யார்?

2. ஓ மங்கையரே! நான் நாடுநாடாய்ச் சுற்றி தண்ணீர் கொண்டு வருகிறேன். கடற்கரை மணலத்தனையான ஜீவகோடிகளுக்கெல்லாம் நான் ஆரோக்கியம் வீசுகிறேன். மேற்கு சீமை ராஜாக்கள் என்னை அடக்கி வாகனமாக்கிக் கொள்ளுகிறார்கள். நான் செய்கிற நன்மையை நினைத்து மனமொத்து வாழ்த்துகிறார்கள். ஆனாலும் என்னை எங்கும் பார்க்கமுடியாது. நானே உங்களைச் சூழ்ந்து கொண்டிருக்கிறேன். என்னை மறந்தால் எல்லாம் நாசம்.

3. எழிலை விருக்ஷம். ஒருவரும் ஏறவும் இறங்கவும் முடியாது.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1917-௵ செப்டெம்பர் ௴

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ச. | லூக். 12 | 1—15 | 11 | செ. | லூக். 15. | 11—32 | 21 | வெ | லூக். 19. | 11—27 |
| 2 | ஞா. | „ 12 | 16—34 | 12 | பு | „ 16. | 1—13 | 22 | ச. | „ 19. | 28—38 |
| 3 | தி. | „ 12. | 35—48 | 13 | வி. | „ 16. | 19—31 | 23 | ஞா | „ 19. | 39—48 |
| 4 | செ. | „ 12. | 49—59 | 14 | வெ. | „ 17. | 1—10 | 24 | தி | „ 20. | 1—18 |
| 5 | பு. | „ 13. | 1—17 | 15 | ச. | „ 17 | 11—25 | 25 | செ | „ 20. | 19—36 |
| 6 | வி. | „ 13. | 18—35 | 16 | ஞா | „ 17. | 20—37 | 26 | பு. | „ 20. | 37—47 |
| 7 | வெ. | „ 14 | 1—14 | 17 | தி | „ 18. | 1—17 | 27 | வி | „ 21. | 1—13 |
| 8 | ச. | „ 14. | 15—24 | 18 | செ. | „ 18. | 18—30 | 28 | வெ | „ 21. | 14—24 |
| 9 | ஞா. | „ 14. | 25—35 | 19 | பு. | „ 18. | 31—43 | 29 | ச. | „ 21. | 25—38 |
| 10 | தி. | „ 15. | 1—10 | 20 | வி. | „ 19. | 1—10 | 30 | ஞா | „ 22. | 1—13 |

### அக்டோபர் ௴

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தி. | லூக். 22. | 14—23 | 3 | பு. | லூக். 22. | 39—53 | 5 | வெ. | லூக். 23. | 1—12 |
| 2 | செ. | „ 22 | 24—38 | 4 | வி. | „ 22 | 54—71 | 6 | ச. | „ 23. | 13—26 |

C. L. S. PRESS, MADRAS—1917

9 - OCT 1917


# மாதர் போதினி

No. 238 அக்டோபர் 1917 No. 10


## EDITOR'S NOTES

## பத்திராதிபர் நானாவிதக் குறிப்புகள்

The Great Allied Offensive. தற்காலம் ஆங்கிலேயாதியோர் எடுத்திருக்கிற படையெழுச்சியின் யுத்தமுனை பிளாண்டர்ஸ் மாகாணத்திலிருந்து ஆதிரியா கடல் வரையில் பரவியிருக்கிறது. பிரான்சியர் வெர்டேன் பட்டணத்துக் கருகாமையிலும், இத்தாலியர் இஜான்சோநதி தீரத்திலும் விமரிசையாய்ப் போர் புரிந்துவருகிறார்கள். பிரான்சியர் மியூஸ் நதிக்கரையின் இருபக்கங்களிலுமிருந்த பந்தோபஸ்தான பதினொரு மைல் நீளமும் மூன்று மைல் அகலமுமான இடங்களைக் கைவசப்படுத்தினதோடு சத்துருக்களில் 4,000 பேரைச் சிறையாகவும் பிடித்திருக்கிறார்கள்.

Italy's Campaign. இஜான்சோ நதிதீரமுதல் ஆதிரியாக்கடல் வரையில் இத்தாலியர் பெரும்போர் தொடங்கியிருக்கிறார்கள். மேற்கூறிய நதியைக் கடந்து சத்துருக்களைப் பல இடங்களில் தோற்கடித்திருக்கிறார்கள். சத்துருக்களோடு கலந்து சண்டைசெய்யும்போது இவர்களது இருநூற்றெட்டு ஆகாயவிமானங்கள் சத்துருக்களின் பாளையங்கள்மேல் சட்டிப்பீரங்கிகளை எறிந்தன. காலாட்படைகளும் பீரங்கிப் படைகளும் மும்முரமாய்ச் சண்டைசெய்துகொண்டிருக்கின்றன. சத்துருக்கள் பெரும் நஷ்டமடைந்ததாகத் தோன்றுகிறது. பீரங்கிகளையும், சூத்திரப் பீரங்கிகளையும், இதர பொருட்களையுங் கொள்ளையாடினதுந் தவிர 7,600 பேரைச் சிறையாகவும் பிடித்திருக்கிறார்கள். திரியஸ்டு நகரத்தைப் பிடிக்கவேண்டுமென்பது இத்தாலியருடைய நோக்கமெனத் தோன்றுகிறது. என்றாலும் இத்தாலியர் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றுமுன்னே சில பிரமாண்ட

யான இடங்களைக் கைப்பற்றவேண்டியிருக்கிறது. விசேஷமாக பலமாய்க் காபந்துசெய்யப்பட்டிருக்கிற ஹெர்மடா என்கிற மலை இவர்களுக்கும் அப்பட்டணத்துக்கும் இடையிலிருக்கிறது. இத்தாலியர் விமரிசையாய் யுத்தம் நடத்துவது அநேக விஷயங்களில் ஆங்கிலேயராதியோருக்கு அனுகூலமானது. ஒன்று ருஷிய, ருமேனிய போர் முகத்திலுள்ள சத்துருக்களின் சைனியங்களைக் குறைவுபடச்செய்யும். இத்தாலிய சைனியங்களை நடத்துகிற கேடோர்னா தளகர்த்தன் பிரிட்டிஷ் பீரங்கி முறைகளைக் கையாடி வருகிறார். இதுவரையில் சிறையாகப் பிடிபட்டவர்களின் தொகை 13,311. சென்ற மாதத்தில் ஒரே ஒரு தினத்தில் 16,000 சேவகரையும் 250 உத்தியோகஸ்தரையுஞ் சிறைப்படுத்தியிருக்கிறார்கள். இத்தாலியர் அடைந்துவருகிற வெற்றியைப்பற்றி தினமுந் தந்திசமாச்சாரம் நமக்கு வந்து எட்டிக்கொண்டேயிருக்கிறது.

French Blow. வெர்டேன் நகரத்தைச்சுற்றி பிரான்சியர் கொடும் போர் புரிந்துவருகிறார்கள். சத்துருக்கள் பெலமான சைனியங்களோடும் 2,000 பீரங்கிகளோடும் பிரான்சியரை எதிர்த்துத் தாக்கியதோடு, பல தினங்களாக விஷவாயுவை உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். பிரான்சிய போர்வீரர் விஷவாயுவுக்குக் காபந்தான அணிகலங்களோடு வீராவேசங்கொண்டு போர்செய்து இரண்டு குன்றுகளில் 2,380 பேரையும், வெர்டேனண்டையில் 7,640 சேவகரையும், 24 பீரங்கிகளையும், 200 ருத்திரப்பீரங்கிகளையும் பிடித்திருக்கிறார்கள்.

Salonika on fire. சலோனிக்க நகரம் பெருந்தீபிடித்து அதிக நஷ்டமடைந்திருக்கிறதாக அறிகிறோம். அப்பட்டணத்தில் மூன்றில் இரண்டு பாகம் அக்கினிக்கு இரையாகி 10,000 ஜனங்கள் வீடுவாசலின்றி அலைகிறார்கள். உயிர்நஷ்டம் எவ்வளவென்று தெரியவில்லை. நமது மன்னாது கூட்டாளிகளின் சைனியங்கள் பற்றின தீயை அணைப்பதற்குப் பகீரதப் பிரயத்தனஞ் செய்திருக்கிறார்கள். பிரித்தானியர் மாத்திரம் 30,000 ஜனங்களைப் பராமரித்து வருகிறார்கள். பட்டணம் நெருப்புப்பற்றி யெரியும்போது சத்துருக்களின் ஆகாய விமானங்கள், 'எரிகிற நெருப்புக்கு எண்ணெய் வார்த்தாற்போல,' சட்டிப்பீரங்கிகளை எறிந்தார்கள்.

Pope's Peace Appeal. ரோமாபுரி அர்ச்சியசிஷ்ட பாப்புவானவர் யுத்தத்தில் சம்பந்தப்பட்டிருக்கிற ராஜ்ஜியங்களைச் சமாதானம் பண்ணிவைக்க பல தேயங்களுக்கும் பத்திரிகைகள் அனுப்பிவைத்திருக்கிறார். அப்பிரசுரங்களில் கண்டிருக்கும் நிபந்தனைகள் ஜெர்மானியர் முதலாயினோருக்கு அனுகூலமாயிருப்பதாகத் தோன்று



கின்றமையால் யுத்தத்தில் கலந்திருக்கிற பலதேச சமாச்சாரபத்திரிகைகளும் அச்சமாதான உடன்படிக்கைக்கு செவிகொடுக்கிறதாகக் காணோம். ஜெர்மானிய பிரதமமந்திரி அதைத் தன் தேசத்து மகா ஜனசபைக்குமுன் கொண்டுபோவதாக அறிவித்திருக்கிறார்.

## MAKING THE MOST OF LIFE

## நமது ஜீவியத்தின் உத்தம பிரயோஜனம்

நாம் நமது ஜீவியத்தை எப்படி உத்தமமாய்ப் பிரயோஜனப் படுத்தக்கூடும்?

நமது கர்த்தருடைய போதனையின்படி நாம் நமது ஜீவியத்தை இழந்துவிடுவதால், அதை உத்தமமாய்ப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளலாம். அவர் என்ன சொல்லுகிறார் என்றால், நாம் நமது ஜீவியத்தை அவருக்காக விடுவதினால் அதை இரட்சித்துக்கொள்ளலாம். நம்முடைய ஜீவியத்தின் இழிவான பாகமானது மேன்மையான பாகத்திலே மிதிக்கப்படவேண்டும். மேலும் அது சாகத்தக்கதாய் மிதிக்கப்படவேண்டும்.

பரிமளத்தயிலமானது வழிந்தோடி வீட்டை வாசனையால் நிரப்பும்படியாக வெள்ளைக் கற்பாணி உடையவேண்டும்.

இரசம் குடிக்கவேண்டுமானால், திராட்சப்பழங்களை நசுக்கத்தான் வேண்டும்.

கோதுமையானது பசியைத் தீர்க்கிற ஆகாரம் ஆகுமுன், அதை நன்றாய் இடிக்கத்தான் வேண்டும்.

ஜீவியத்திலும் அப்படித்தானே; துன்பப்படாத, கஸ்திப்படாத, உபத்திரவமற்ற மனுஷர் உலகத்தில் அதிகப் பிரயோசனப்படமாட்டார்கள். மெய்யான ஜீவியம் நிச்சயமாய் போராட்டத்தின்மேல் போராட்டம் பண்ணிக்கொண்டு இருக்கும். அதில் நன்மையானது தீமையை வெல்லும், ஆவியானது மாம்சத்தை வெல்லும். நாம் நமக்கென்று ஜீவியம்பண்ணுவதை விட்டுவிடுமட்டும் மெய்யான கிறிஸ்தவ ஜீவியத்தைத் துவக்கவில்லை என்று அறியவேண்டும். நாம் இந்தப் பாடத்தைப் படித்துக்கொள்ளுமட்டும் பிறருக்கு மெய்யான பிரயோசனமும் உதவியும் செய்யமுடியாது. ஒருவன் அல்லது ஒருத்தி தனக்காகப் பிழைத்தும், பிறருக்காகவும் அநேக நன்மையான காரியங்களைச் செய்யலாம். ஆனால் ஒருவருடைய ஜீவியமானது சுயவெறுப்பின் பிரமாணத்தை இருதயத்தின் சட்டமாக்கிக்கொள்ளுமட்டும், அது

தேவனுடைய நோக்கத்தின்படி உலகத்துக்குப் பெரிய ஆசீர்வாதமாய் இருக்கமுடியாது.

திருஷ்டாந்தமாக, (1) காட்டிலே ஒரு பெரிய பலாமரம் நிற்கிறது என்று வைத்துக்கொள்ளுவோம். அது பார்வைக்கு மிகவும் அலங்காரமாயிருக்கிறது. அது நல்ல நிழல் கொடுக்கிறது. அதன் கொம்புகளின் கீழ் பிள்ளைகள் விளையாடுகிறார்கள். அதன் கொம்புகளின்மேல் இருந்துகொண்டு குருவிகள் பாடுகின்றன. ஒருநாள் மரம் வெட்டுகிறவன் கோடரி கொண்டுவந்து அந்தமரத்தை வெட்டுகிறான். அந்த வெட்டுகளினால் மரம் தடதடத்தாடுகிறது. ‘நான் அழிந்துபோகிறேனே!’ என்று கூக்குரலிடுகிறது. அந்தப் பெரிய மரம் கீழே விழும்போது அப்படித்தான் தோன்றுகிறது. ஆனால் அந்த மரத்தின் சரித்திரத்தைப் பார்ப்போம். அதைப் பலகைகளாக அறுத்து நேர்த்தியான வீடுகள் கட்டுகிறார்கள். தேவ ஆராதனையில் பாட்டுப்பாட உபயோகமாகும் பெரிய கின்னரப்பெட்டியும் அவைகளால்தான் செய்கிறார்கள். அது தன் ஜீவனை இழந்துபோனதால் அது தன்னை இரட்சித்துக்கொண்டது. அந்த மரமானது இப்படி அதிக நல்ல மெய்யான பிரயோஜனமுள்ளதாகும்படி செத்துப்போனதே காண்கிறோம்.

(2) பொதுவாக களிமண்ணானது சும்மா ஓரிடத்தில் கிடக்கிறபோது மனுஷருக்குப் பிரயோஜனமற்றது. ஆனால் அதைத் தோண்டி எடுத்து, அடித்து, மிதித்து, தீயெரிகிற சூளையில் வைத்துச் சுட்டபின், அழகான பீங்கான்களும், கோப்பைகளும், சட்டிகளும் ஆகி, மனுஷருக்கு அதிகப் பிரயோசனம் உள்ளதாகிறது.

(3) அநேக வருஷக்காலமாய், உயர்ந்து நிற்கிற ஒரு பெரிய பாறையைக் கவனிப்போம்; அது அப்படியே ஒரு பிரயோஜனமும் இல்லாமல் சும்மா நிற்கிறது. ஆனால் அதைத் துண்டு துண்டாய் உடைத்து உளிகளால் வெட்டிச் சீவி, ஒரு புதிய ஆலயத்தைக் கட்டுவோம்; அதில் அநேக ஜனங்கள் கூடிவந்து சுவிசேஷம் பிரசங்கிக்க கேட்கிறார்கள். இப்படியாக முந்திப் பிரயோஜனமற்ற பாறை, பிறகு அதிக உபயோகமுள்ளதாகிறது.

மனுஷ ஜீவியத்திலும் இருக்கிற பிரமாணத்துக்கு இவைகள் சிறு திருஷ்டாந்தங்களாய் இருக்கின்றன. பிரயோஜனமாயிருக்கவும், மெய்யான ஆசீர்வாதமாயிருக்கவும், நாம் சாகத்தக்கதாய் வேதனைப்படத்தான் வேண்டும். ‘கோதுமை மணியானது பலன் கொடுக்கும்படியாக தரையில் விழுந்து சாகவேண்டும்’ என்று நம்முடைய கர்த்தர் சொன்னபோது, இந்தச் சத்தியத்தை அந்தச் சிறு உவமையிலே அடக்கினார். கிறிஸ்துவின் சொந்த சிலுவையே இதின் முக்கிய



மான திருஷ்டாந்தமாயிருக்கிறது. அவர் தம்முடைய அருமையான ஜீவியத்தைப் போக்கடித்தார் என்று அவருடைய சிநேகிதர் நினைத்தார்கள். ஆனால் இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது, அவருடைய ஜீவன் அப்படியே பிரயோசனமற்றுப்போனதா? ஆ! இல்லவே இல்லை! அது உலகத்துக்கு ஜீவனையும் சந்தோஷத்தையும் கொண்டுவந்தது.

இயேசு கிறிஸ்துவின் சீஷராகிய நாம், நம்மைத்தானே பலிகொடுக்க மனப்பூர்வமாயிருக்கவேண்டும். நாம் நம்முடைய சொந்த வழிகளையும், இலகுவான ஜீவியத்தையும், சொகுசாய் இருப்பதையும், ஒருவேளை நமது சொந்த ஜீவனையும், அவருக்காக விட்டுவிடவேண்டும். அப்படி நம்முடைய ஜீவனைவிட்டு, அதை இரட்சித்துக்கொள்ளவேண்டிய சமயம் வரலாம். தேவனை மகிமைப்படுத்தவும், மனுஷருக்கு நன்மைசெய்யவும், அன்பின் அக்கினியால் கொளுத்தப்படும்படி, நம்மைத்தானே பலிபீடத்தின்மேல் வைக்கவேண்டும். நாம் நமக்கானவைகளையும் பார்த்துக்கொண்டு இருந்தாலும், நம்முடைய வேலை ஒருவாறு சரியென்று காணலாம். ஆனால் நாம் நம்மைத்தானே பலிசெலுத்தி, பிரதிஷ்டையின் பீடத்தில் தகனிக்கும்போதுதான், நமது வேலை உத்தமமானதாகி, நம்முடைய இராஜாவுக்கு ஏற்ற பலியாயிருக்கும்.

அப்படி நம்மைத்தானே பலியிடுகிறபோது, நமக்கு நஷ்டமுண்டாகும் என்று பயப்படவேண்டாம். தேவன் தமக்காகச் செய்யப்படும் ஒவ்வொரு அன்பின் செய்கையையும், சுயவெறுப்பையும் ஒருக்காலும் மறக்கவேமாட்டார். மனுஷ நாவானது நம்முடைய புகழ்ச்சியை உயர்த்திப் பேசாதபடி அந்தரங்க ஸ்தலங்களில் நாம் வேலை செய்தாலும், ஒரு ஞாபகபுஸ்தகத்திலே அவர் அதை எழுதிவைத்திருக்கிறார். ஐசுவரியமும் மகிமையுமான பிரதிபலன் ஒருநாள் அவர் கொடுப்பார். தேவனுடைய புகழ்ச்சி மனுஷருடையதைப் பார்க்கிலும் அதிமேன்மையானதல்லவா?

மரியாள் பரிமளத்தயிலப் பரணியை உடைத்துக் கர்த்தரின்மேல் ஊற்றினதுபோல், நாமும் அன்பின் ஊழியத்தினால் பொங்கி வழியக்கூடாதா? அப்படியானால் உலகத்தில் நிலையான ஆசீர்வாதம் பெற்று என்றென்றைக்கும் கர்த்தரால் நினைவுகூரப்படுவோம்.

இதுதான் நமது ஜீவியத்தின் உத்தம பிரயோசனம். உங்களில் ஒவ்வொருவரும் இன்றுமுதல் கர்த்தருடைய உதவியால், இந்த ஜீவியத்தைத் துவக்கமாட்டீர்களா?



## TYPES OF INDIAN WOMANHOOD

## இந்திய மாதர் லக்ஷணம்

### யுத்தவீரி—I.

அந்தப்புரத்திலுள்ள அமைதிக்கும் போர்க்களத்திலுள்ள கோஷ்டத்துக்கும் எவ்வளவோ வித்தியாசமுண்டு. அப்படி இருந்தும் ஜோன் ஆவ் ஆர்க்கை (Joan of Arc) போன்ற அநேக ஸ்திரீகள் இந்தியாவிலிருந்து எழும்பி இருக்கிறார்கள். பல ஜாதிகளிலிருந்தும், பல குலங்களிலிருந்தும், வடதிசையிலிருந்தும், தென்திசையிலிருந்தும், இந்து அந்தப்புரங்களிலிருந்தும், மகம்மதிய கோஷாவிலிருந்தும் அநேக பெண்கள் தேசாபிமானத்தின் பொருட்டும் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றும் பொருட்டும் வழக்கத்தின் கட்டுகளை அறுத்தொழிக்க வீராவேசத்துடன் உழைத்துவருகிறார்கள்.

ராஜபுத்திர சூரியாகிய தாராபாய் (Tara Bai) இளம்பிராயம் முதற்கொண்டு வீரத்தன்மை மிஞ்சினவளாய் இருந்தாள். தந்தை இடத்திலிருந்த பக்திவினயத்தினால் இழந்துபோன பிரார்ச்சிதத்தை மீட்டுக்கொள்ள புருஷருக்குள்ள சுவாதீனத்தையும் மனோபலத்தையும் நாடினாள். அதே எண்ணங்கொண்டு பிங்தோடா என்கிற

5 - OCT 1917



இடத்தை மறுபடியும் பிடிக்கிறவனை தான் மணம்புரிந்துகொள்வதாக விரதம் பூண்டதுடன், தன் தகப்பனோடும் கணவனோடும் குதிரை ஏறிச் சண்டைசெய்யப் போராயுதப்பயிற்சியும் அடைந்தாள். மரணப்படுக்கையிலிருந்த தன் தகப்பன் மனதைத் திருப்திசெய்ய வேராயாத்பீகம் அந்தப்புரத்தைவிட்டு ஆலோசனைச் சங்கத்துக்கும் கடைசியாக போர்ச்சேவகருக்குச் சமானமாக நின்று தன் சேவகரைப் போருக்கு நடத்தவும் தலைப்பட்டாள்.

சாந்துபீபி என்கிற வேறொரு மகமதிய அரசி தன் பட்டணம் ஆக்பரின் கைவசப்படக்கூடாதென்கிற நிர்ணயமுள்ளவளாயிருந்து கடைசியில் தன் போர்ச்சேவகரின் சதிக்கு இரையானபோதிலும், அவனுடைய குமாரனாகிய முராதுக்கு விரோதமாய் ஆமத்நகரியை ஜெயத்தோடு காபந்துசெய்தாள்.

ஆண்மாரிகளின் காலம் இன்னும் முற்றிலும் ஒழிந்துபோகவில்லை. ஜான்சியின் இராணியின் செய்கைகள் இன்னும் உயிரோடு இருக்கிறவர்களின் ஞாபகத்திலிருந்து எடுபடவில்லை. அடிக்கடி சரித்திரங்களில் கண்டிருக்கிறபடி அவள் குரூரமான கலகக்காரியல்ல என்பதற்கு மகா இந்திய கலகத்து சரித்திரத்தில் அநேக அத்தாக்ஷிகளுண்டு.

இராணி இலக்ஷிமி பாய் பாஜிராவ் பீஷ்வாவின் கீழிருந்த மோரோபாண்ட் என்கிற ஒருவனுடைய புத்திரி. ஸ்தலயாத்திரையாய்ப் போயிருந்த காலத்தில் பிறந்தவள். புண்ணிய க்ஷேத்திரத்தில் பிறந்தது அவளுக்கு நல்ல சகுணமானது. சாதகம் எழுதின சோதிடன் அவள் ஒருகாலத்தில் ராணியாகி வீரச்செயல்களைச் செய்வாள் என்று சொன்னான்.

மனுபாய் என்கிற செல்வப் பெயரையுடைய இவள் இரண்டு மூன்று பிராயமுடையவளாயிருந்தபோதே தாயார் மரித்துப்போனாள். அவளுக்கு விளையாட்டுத் தோழர் விசேஷமாக ஆண்பிள்ளைகள். சிறுபிராயத்திலே காற்றாடிவிடுவதும் மேளம் அடிப்பதும் ராணிவேஷம் போடுவதும் இவளுக்கு மெத்தப் பிரியம். பீஷ்வாவின் தத்துபுத்திரனாகிய நானாசாயிபோடு கல்விபயின்று அவனைப்போலவே போலிசண்டையிலும் குதிரையேற்றத்திலும் யானை ஏற்றத்திலும் பழகினாள்.

மோரோபாண்ட் தன் சிறிய மகளுக்கு ஏற்ற கணவனைத் தேடிக்கொண்டிருக்கையில் ஜான்சியிலிருந்து ஒரு ஜோசியன் பாஜிராவைப் பார்க்கவந்தான். அவனுக்கு மோரோபாண்ட் ஜாதகக்குறிப்பைக் காண்பிக்க, அவன் அச்சிறுமி தவறாமல் ஒரு இராணியாவாள் என்றும், தாரம் இழந்துபோயிருந்த ஜான்சி அரசனாகிய கங்காதரராவிடம்

பெண்ணைப்பற்றி பேசவும் ஆலோசனை சொன்னான். அப்படியே அவன் போய் பேச 1842-ம் ௵ ஜான்சியில் மனுபாயிக்கும் கங்காதரராவுக்கும் மணம் முடிந்தது. அது முதற்கொண்டு அவளுக்கு லக்ஷ்மிபாய் என்கிற பெயர் வழங்கிவந்தது.

இவர்களுக்கு கலியாணமாகி ஒன்பது வருஷத்திற்குப் பின் ஒரு ஆண்பிள்ளை பிறந்து இறந்துபோக அதினால் உண்டான துயரத்தைச் சகிக்கமுடியாமல் கங்காதரராவ் வியாதிபடத் தொடங்கி தனக்குப் பின் ஆள ஆனந்தராவ் என்கிற பிள்ளையாண்டானைத் தான் சுவிகார புத்திரனாக அங்கீகாரம் செய்யவேண்டுமென்று பிரிட்டிஷ் துரைத்தனத்தாரை வேண்டிக்கொண்டு, தன் வேண்டுகோள் நிறைவேறுமென்ற நம்பிக்கையோடு மரித்துப்போனான். என்றாலும், டெல்ஹௌசி பிரபு ஜான்சி மாகாணத்தை பிரிட்டிஷ் ராஜாங்கத்தோடு சேர்த்துக்கொள்வது சகலருடைய நன்மைக்கும் ஏதுவாயிருக்குமென்று எண்ணி ஆனந்தராவை சுவிகார புத்திரனாக அங்கீகாரம் செய்யவில்லை. இராணி எப்போதும் தன் நாடு பிரிட்டிஷ் ராஜாங்கத்தாருக்கு உண்மையாய் இருக்கிறதென்றும் இதர நாடுகளுக்குச் செய்திருக்கிறதுபோலவே தன் கணவன் வேண்டுகோளுக்கிசைந்த ஆனந்தராவை சிம்மாசனத்துக் குரியவனாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும் மனு செய்துகொண்டும் டெல்ஹௌசி பிரபு ஒத்துக்கொள்ளவில்லை. பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் தன் நாயகனின் கோரிக்கைக்கு இணங்காதது பெரிய அநியாயமென்று அவள் எண்ணினதினால் இந்திய கலகம் உண்டான காலத்தில் அதை மறக்க இயலாதவளாய் இருந்தாள். ஜான்சி நாட்டிற்குத் தலைமையாய் நியமிக்கப்பட்ட ஆங்கிலேய உத்தியோகஸ்தரும் அந்நாட்டில் கலகத்திற்குக் காரணங்களிருந்ததாக சமுசயிக்கவே இல்லை. 1857-ம் ௵ ஜூன் மாதம் துவக்கத்தில் கலகக்குறிகள் காணப்பட்டன. அங்கிருந்த ஐரோப்பியர் கோட்டைக்குள் அடைக்கலம் புகுந்து தங்களைக் காபந்து செய்துகொண்டிருக்கும் சமயத்தில், அவர்கள் நிராயுதபாணிகளாய்த் தங்களை ஒப்புக்கொடுக்கும் பட்சத்தில் அவர்கள் உயிர்களைக் காப்பதாக கலகக்காரர் சொன்னதின்பேரில் இவர்கள் வாக்கில் நம்பிக்கை வைத்து தங்களை இவர்கள் கைகளில் ஒப்புவித்தார்கள். கலகக்காரர் உடனே அவர்களைப் பிடித்துக் கொன்றார்கள். தனக்கு நடந்த அநியாயங்களை மனதில் வைத்தே கலகக்காரருடைய அக்கிரமங்களுக்கு உடைந்தையாய் இருந்ததாகச் சரித்திரக்காரர் சொல்லுவது சகஜம். வேறே சரித்திர அத்தாட்சிகளை ஆராய்ந்து பார்க்குங்கால் காரியங்கள் வித்தியாசமாகத் தோன்றுகின்றன. கோர்டன் என்கிற இராணுவத் தலைவன் சகாயந்தேடினபோது தன்னால் இயன்ற சகாயத்தை அவள்



செய்ததாகவும் இரண்டுநாள்வரையில் ஐரோப்பிய ஸ்திரீகளையும் பிள்ளைகளையும் தன் அரண்மனையில் வைத்திருந்து, பிறகு தான் அவர்கள் க்ஷேமத்தின்பொருட்டே கோட்டைக்கு அனுப்பி இரகசியமாய் அவர்களைப் போஷித்து தன்னால் இயன்ற உதவியெல்லாம் புரிந்தவர் தான் என்று அறியலாம். ஐரோப்பியரைச் சங்காரம் செய்தபிறகு கலகக்காரர் தங்கள் இராணுவங்களுக்கு வேண்டியவரை சகாயம் கேட்க, இவள் தான் கொடாதபட்சத்தில் தன் அரண்மனை நிர்மூலமாகுமென்று பயந்து அவர்கள் கேட்ட திரவியத்தைக் கொடுத்தாள். அதற்குமேல் கலகக்காரர் அவளை ஜான்சிக்கு அரசியாக நியமனஞ்செய்தார்கள். இராணியான பிறகும் அநேக ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களுக்கு நிருபங்கள் எழுதி, மோசத்திலிருந்து அவர்களைக் காப்பாற்றினதுமன்றி ஜான்சி நாட்டை பிரிட்டிஷ்காரருக்காகவே காபந்துசெய்து வருவதாக அறிவித்திருக்கிறாள். கலகக்காரர் நாட்டைவிட்டு நீங்கினபோது அவள் அதிக யுக்தியாய் அரசாட்சி செய்ததாகத் தோன்றுகிறது. அவளது நடை, உடை, பாவனை ஜனங்களுக்கு மெத்த பிரீதியாய் இருந்தது. சில வேளைகளில் அவள் ஆண்பிள்ளைகளைப்போல் உடுத்தினாள். மதாச்சாரங்களை அதிக கவனமாய் அனுசரித்து தானதர்மங்களை நியமத்தின்படி நிறைவேற்றிவந்தாள். அவள் குலதேவதையாகிய லக்ஷிமா ஆலயத்தரிசனத்திற்குப் போகும் வழியில் ஒருநாள் வஸ்திரமில்லாமலிருந்த சில வறியோரைக் கண்டு நான்கு நாட்களுக்குள் தன் பிரஜைகளில் வஸ்திரமில்லாதவர்களுக்கெல்லாம் வஸ்திரம் தைத்துக் கொடுக்க தன் நகரத்திலிருந்த தையற்காரர்க்கெல்லாம் ஆஞ்ஞாபித்தாள். நியாயவிசாரணையில் தனக்கிருந்த சமர்த்தைப் பல வழக்குகளில் காண்பித்திருக்கிறாள்.

மத்திய இந்தியாவில் பிரிட்டிஷ் ராணுவங்களை நடத்தி கலகத்தை அமர்த்த ஸர் யூவ் ரோஸ் தளகர்த்தனானபோதுதான் இவளது யுத்த வீரியம் விளங்கினது. தான் பிரிட்டிஷ் ராஜ்ஜியத்திற்கு உண்மையுள்ளவளாய் இருக்கிறதாக அவர்களுக்கு அறிவிக்க அவள் எடுத்துக்கொண்ட பிரயத்தனமெல்லாம் அவளுடைய உத்தியோகஸ்தரின் சதியினால் வியர்த்தமாயிற்று. ஸர் யூவ் ரோஸ் ஜான்சிநகரை முற்றுகை போட்டார். காபந்து விஷயங்களையும் பீரங்கிகள் நிறுத்த வேண்டிய இடங்களையும் ராணுவங்களையும் தானே மேல்பார்த்து அதிக வீரியமாய்க் கோட்டையைக் காத்தாள். தன் கோட்டை நிற்காதென்று கண்டபோது சில பரிவாரங்களோடு அற்புதமாய்த் தப்பி கல்பிக்கு ஓடினாள். கல்பியில் நடந்த சண்டையில் மனந்தளர்ந்துபோயிருந்த பீஷ்வாவையும் அவன் உடன் உத்தியோகஸ்தரையும் உற்சாகப்படுத்தி அதிசயிக்கத்தக்க விதமாய் ஆங்கிலேய பட்டினங்களைத்

தாக்கினாள். அவள் ஜீவிய ஓட்டம் கோவாலியர் சண்டையில் முடிந்தது. அவளுடைய துண்டுதலினால்தான் கலகக்காரர் கோவாலியரை முற்றுகை போட்டார்கள். இந்தக் கடைசி யுத்தகளத்தில் அரிய வீரச்செயல்களெல்லாம் செய்தாள். அடிக்கடி முறிந்தோடுகிற சேனைகளையெல்லாம் ஒன்றாய்ச்சேர்ந்து யுத்தத்திற்கு நடத்தினாள். கடைசியில் அவளுடைய படை பின்வாங்க நேரிட்டபோது அவளும் புறங்காட்டி ஓடத் தலைப்பட்டாள். ஒருகால் கால்வாயை அவள் குதிரை தாண்டிக்குதிக்காததினால் தப்பிப்போக முடியவில்லை. அவள் விலாவில் ஒரு துப்பாக்கிக்குண்டு ஊடுருவிச்சென்றது. அவள் இன்னார் என்று அறியாத ஆங்கிலேய குதிரைவீரன் அவளைத் தலையின்மேல் வெட்டினான். அப்படி இருந்தும் தன் புரவியைவிட்டு இறங்காமல் போய்க்கொண்டிருந்து கடைசியில் விழுந்திறந்தாள். 1858-ம் வருஷம் ஜுன்மாசம் 18-ந் தேதி அவள் தேகத்தை இந்து விதிப்படி மயானத்தில் சுட்டெரித்தார்கள். ஸர் யூவ் ரோஸ**ும் அவளுடைய வீரத்தைப்பற்றி வியந்து பேசியிருக்கிறான்.

## THE CHILDREN'S STORY

## கதை

திரிசிபுரத்தருகில் செண்பகாவதி யென்ற ஓர் அழகிய சிறுபட்டணம் உண்டு. காசினி புகழும் காவேரியாறுனது கரைபுரண்டோடுகின்றதினால் கழனிகள் பசேரெனக் கண்களுக்கு ரமணீயமாய் விளங்கும். வானை யளாவிநிற்கும் கனிவிருட்சங்களடங்கிய சோலைகளின் சிறப்பும் அங்குள்ள மலர்களிலிருந்துவரும் வாசனையும் மிகுந்த சந்தோஷத்தை யுண்டுபண்ணும். பட்டணத்தருகில் சிறு சிறு குன்றுகள் உண்டு. காலையிலும் மாலையிலும் அவற்றின் காட்சி ஆனந்தத்தை விளைக்கும். மேகக்கூட்டங்களின் தோற்றமும் பனிவீட்சியின் அழகும் வெகு நன்றாயிருக்கும். இந்த நகரில் அநேக மெத்தை வீடுகளும், சிறந்த கட்டடங்களும், சிங்கார நந்தவனங்களும் உண்டு.

இவ்வழகிய நகரில் தனபாலன் என்ற வொரு ரத்னவியாபாரியிருந்தார். அவருக்கு இரண்டு குழந்தைகள் இருந்தனர். அவர்கள் பெயர் பத்மநாபன், காந்திமதி என்பதாம். பத்மநாபன் உயர்தர வகுப்பில் பட்டணத்தில் வாசித்துவந்தான்; காந்தியோ சிறுமியான படியினால் தன தூரிலேயே பாடசாலைக்குப் போய்வந்தாள். அண்ணன் விடுமுறைநாள் எப்பொழுது வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள். அண்ணன் அவளையும் இன்னும் பல சிறுவர்





சிறுமிகளையும் சாயங்காலவேளையில் பக்கத்துக் குன்றின் பக்கம்
அழைத்துக்கொண்டுபோய், அழகிய நீலவர்ண ஆகாயத்தையும் அரு
கிலுள்ள பசுமையான வயல்களையும் அவைகள் ஊடே ஓடுகின்ற
நீரருவிகளையும் காட்டிப் போதிப்பான். இப்படி அண்ணன் போதிப்
பதில் அதிக ஆசைகொண்ட காந்தியும் அனுதினமும் தான் கண்ட
வைகளை ஒரு சிறு நோட்டுப்புத்தகத்தில் குறித்துவைப்பாள். அண்
ணன் சொல்லும்போதே புதிதானவும், தனக்குத் தெரியாதனவுமான
கேள்விகளையும் கேட்பாள். ஓர் தினம் ஆற்றின் உற்பத்தியைப்பற்
றிப் பத்மநாபன் சொல்வானாயினான்: மழை பெய்தவுடனே தண்
ணீர் கீழே வீழ்ந்து ஓடையாகப் பெருகி மைதானத்திலோடிக் கழனி
களுக்கு நீர்ப்பாய்ச்சி சமுத்திரத்திலே வீழ்கின்றது என்பதைப் பிரத்
தியட்சமாகக்காட்டிச் சொல்லிக்கொடுத்தான். பிள்ளைகள் அதிகப்
பிரியப்பட்டனர். ஆனால் காந்தியோ வீட்டுக்கு வந்தவுடன், ஆறு
உற்பத்தியாகி சமுத்திரசங்கமாகின்றதுபோல ஒரு படம் அழகாய்
வரைந்து தன் தந்தையிடம் கொடுத்தாள். தன் பிள்ளையை மெச்சிய
பிதா தமயனோடு மகளையும் பட்டினத்துக்கு அனுப்பினான். அவள்
கல்லூரியிற் கற்றுத்தேறி இயற்கைசாஸ்திர உபாத்தினியாகி அதிக
நன்மை செய்துவந்தாள். பத்மநாபன் இவர்களைப் போதிக்கும்
போதே கடவுள்தான் இயற்கை உண்டாக்கினார் என்று பக்தியோடு
போதிப்பான். அவர்களும் தெய்வ பக்தியுடன் படித்தனர்.

எனது பிரியமான பிள்ளைகளே, இயற்கையின் அழகைப் பார்த்து நாம் நம்மைத் திருத்திக்கொள்வோமாக. கடவுள்தான் இவற்றைச் சிருஷ்டித்து நமக்கு அழகை உண்டுபண்ணினுரென்பதை மறவாது அவருக்குப் பயந்து நடப்போமாக.

'கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்.'

பாடல்

இராகம். 'தஸ்குமாரேதரகுவாரு கேரலபுரே' என்ற இந்துஸ்தான் மெட்டு.

ஆகா இதென்னழகு—ஆச்சரியமே.

1. வாகான நீலவர்ணம் வாய்ந்த தாகாயத்திற்கு
வயல்களின் பசுமைநிறம் வர்ணிக்க வொண்ணுதே—ஆகா

2. ஊடேஓடும் நதியும் ஒழுங்கான கனிமரமும்
பாடும் பறவைகளும் பாங்கான சோலைகளும்— ஆகா

3. கன்னியின் கூந்தல்போலக் காணுதே மேகங்களும்
அன்னவளின் முகம்போல் ஆற்றிலுண்டு தாமரைகள்—ஆகா

4. கடவுளின் வல்லமையைக் கழறக்கூடாது நம்மால்
திடமனதுட னவரைத் தினந்தினந் துதித்திடுவோம்—ஆகா

S. Gurupatham

## A WORD TO WOMEN

## மாதர்க்கோர் வார்த்தை

சுகாதாரத்துக்குச் சுத்தமே சிரேஷ்டம். அசுத்தம் வியாதிக்குத் தாய் என்பது மெய்யே. தலையில் பேனும், கையில் சிரங்கும், வஸ்திரத்தில் சேலைப்பேனும், வீட்டுச் சுவரில் மூட்டுப்பூச்சியும், வீட்டுத் தளத்தில் தெள்ளுப்பூச்சியும் இருப்பதற்கு அசுத்தமே காரணம். ஆதலால் மாதர் பேன், சிரங்கு, சேலைப்பேன், மூட்டுப்பூச்சி, தெள்ளுப்பூச்சி முதலியவற்றை அருவருத்து, அவைகளின் பேர் முதலாய்ச் சபைகளில் உச்சரிக்கப்படுதல் தங்களுக்கே அவமானமென்றெண்ணி நடந்துகொள்ளவேண்டும்.

சுகத்தைப் பேணுவதற்குச் சரீரசுத்த விஷயமாய் மாதர் கையாடவேண்டிய சாதனை விதிகள் எவையென முதலாவது எடுத்துரைப்போம்.



1. தினந்தோறுஞ் சுத்தஜலத்தில் ஸ்நானஞ்செய்து சரீரத்தைச் சுத்தமாய் வைத்திருக்கவேண்டும். மற்றப்படி அழுக்கினுல் தோலிலுள்ள துவாரங்கள் அடைபட்டுப்போக கழிவுபதார்த்தங்களும் நஞ்சும் வேர்வைமூலம் வெளிப்படாமல் சரீரசுகங் கெடும்; எண்ணெய் நெய்க்கோளங்கள் மூலமாய்க் கசிந்து வாராதாகையால் சரீரத்துக்கு மேனியுண்டாகாது. மேலும் வேர்வைநாற்றம் நமக்கும் பிறருக்கும் அரோசிகரத்தை யுண்டாக்கும்.

2. ஸ்நானஞ் செய்தவுடன் சுத்த வஸ்திரத்தால் தேகத்தைத் துடைத்து, ஈரத்தைப்போக்கி, மற்றொரு சுத்தவஸ்திரத்தால் தேகத்தைத் தேய்த்து அனல் பிறக்கச் செய்யவேண்டும். அழுக்கு வஸ்திரத்தால் துடைத்தால் அழுக்கு தேகத்தில் ஒட்டிக்கொள்ளும். அனல் குன்றிப்போனுல் வியாதிக்கிடமாகும். வாரந்தோறும் எண்ணெய் ஸ்நானஞ்செய்வது நமது காங்கையான தேசத்தில் சுகத்துக்காதாரம்.

3. காலைதோறும் மெல்லிய கரிப்பொடியினுல் பற்களை நன்றாய்த் தேய்த்து உள்ளும் புறம்பும் விளக்கவேண்டும். சாப்பிட்ட பின் ஒவ்வொரு தடவையும் ஜலத்தால் சுத்தஞ்செய்து கொப்பளிக்கவேண்டும். செங்கற்பொடி, சாம்பல் முதலியவைகள் கொண்டு விளக்கினுல் பற்களின் மேலிருக்கும் வெண்மை நீங்கிப்போவதால் அவைகள் கெட்டுப்போகும். பிறர் பார்க்க பல் விளக்கலாகாது. பற்காவி முதலியவைகளால் பற்களில் சாயம் ஏற்றுவது நாகரீகக் குறைவைக் காட்டும்.

4. காலைதோறும் முகக்கண்ணுடி பார்த்து, சிக்குச்சீப்பு பேன் சீப்பால் தலை வாரவேண்டும். பிறர் பார்க்கத்தக்கதாய் தலை வாருவதும் வெளியே உட்கார்ந்துகொண்டு பேன் பார்ப்பதும் அவலக்ஷணம்.

5. நகங்கள் சுத்தமாயிருக்கின்றனவா வென்று தினந்தோறுங் கவனித்து, வேளாவேளைகளில் அவைகளைக் கத்தியினுல் சரியளவாய் வெட்டவேண்டும். கை கால்களிலுள்ள நகங்களை வளரவிட்டு, அவைகளில் அழுக்கடையச் செய்வது அவலக்ஷணம். நகங்களைப் பற்களால் கடித்து அவைகளின் அழகைக் கெடுப்பதும் நல்லதல்ல.

6. கடை முதலிய இடங்களுக்குப் போயிருந்து வீட்டுக்குத் திரும்பும்போது கைகால் முகங்களைக் கழுவவேண்டும். பலவகைத் தூசியும், நமது சரீரத்திலிருந்து வெளிப்படும் வேர்வையும், எண்ணெயும் படுவதினுல் நமது வஸ்திரங்களும், தலையணை உறைகளும், படுக்கையின்மேல் விரித்திருக்குந் துப்பட்டிகளும் அழுக்காகின்றன. அசுத்தவஸ்திரங்கள் நமது சரீரத்தை அழுக்கடையச் செய்வதன்றி

பக்கத்திலிருக்கும் ஆகாயத்தையுங் கெடுத்துவிடுகின்றன. ஆதலால் வஸ்திரங்களை அடிக்கடி மாற்றி சுத்தவஸ்திரந் தரித்துக்கொள்ளவேண்டும். அழுக்குத் தாங்குமென்று சொல்லி, சிவப்பு, கறுப்பு முதலிய சாயத்துணிகளைப் பல நாட்களாக உடுத்துவது சுகத்துக்குக் கெடுதி. அழுக்கைத் தாங்குவதற்கு உபாயந்தேடாமல் அழுக்கை நீக்கப் பார்க்கவேண்டும். சுத்தமான வெளி உடுப்பினால் அழுக்கான உள்ளுடுப்பை மறைக்கலாகாது. சுத்தமுள்ளவர்களாய்க் காணப்படுவதல்ல, சுத்தமுள்ளவர்களாய் இருப்பதுதான் சுகாதாரம். ஆதலால் உடம்பைத் தொட்டுக்கொண்டிருக்கும் உள் உடுப்பு வெள்ளை நிறமாயிருக்குமானால் அழுக்கை உடனே கண்டு வேறு சுத்தவஸ்திரந் தரித்துக்கொள்ளலாம். ஒவ்வொரு குடும்பத்துக்கும் வண்ணானிருப்பானாயினும் பிள்ளைகளிருக்குங் குடும்பத்திலே அடிக்கடி சில துணிகளைச் சுத்தஞ்செய்யவேண்டியதாயிருக்குமாகையால் மாதர் வஸ்திரம் வெளுக்கவுங் கற்றிருக்கவேண்டும். வஸ்திரசுத்தஞ் செய்வதில் கவனிக்கவேண்டிய விஷயங்களை நமது 'குடும்ப நிர்வாக சாஸ்திரம்' என்னும் புஸ்தகத்தில் காணலாம்.

நமது வீடு உள்ளும் புறமும் மகா சுத்தமாய் இருக்கவேண்டியது அத்தியந்த அவசியமாதலால் வீட்டுச் சுத்தவிஷயமாய்ச் சில சாதனை விதிகள் சொல்வோம்.

1. தினந்தோறுங் காலையில் எழுந்திருந்தவுடன் வீட்டின் தரையையும், வெளி முற்றங்களையும் நன்றாய்ப் பெருக்கவேண்டும்.

2. அதிக அழுக்கடையும் அறைகளையும், வெளி முற்றங்களையும் சாயந்தரத்திலும் பெருக்கவேண்டும்.

3. பெருக்கிய குப்பைகளைக் குப்பை கொட்டுமிடத்தில் கொட்டவேண்டும். அவைகளை உடனே அள்ளாதிருப்பதும், சாக்கடையில், அல்லது பிறர் வீட்டுக்கெதிரில் கொட்டுவதுந் தப்பு.

4. காலையில் பெருக்கியவுடன் துவாலையால் கதவுகளையும், ஜன்னல்களையும், பெட்டி நாற்காலி மேஜைகளையும், மற்றத் தட்டு முட்டுச் சாமான்களையுந் துடைத்து, தூசியை வெளியே கொண்டு போய், காற்றடிக்குந் திசைபார்த்து உதறவேண்டும். துவாலையால் அடித்துச் சுத்தஞ் செய்யலாகாது.

5. வாரத்துக் கொருமுறை வீட்டுச்சுவர்களிலும், கூரையிலுமுள்ள சிலந்திப்பூச்சி வலைகளையும், தூசியையும் ஒட்டறைக்கொம்பினால் நீக்கி, தரையை ஜலத்தால் கழுவவேண்டும், அல்லது புதிய மாட்டுச்சாணியால் மெழுகவேண்டும். பழையசாணியை உபயோகிக்கலாகாது.



6. காகிதம் முதலிய கழிவு பதார்த்தங்களைக் கண்டவிடமெல்லாம் எறிந்துவிடாமல், கழிவு பதார்த்தங்கள் போடுங் கூடையில் போடவேண்டும். கண்டவிடமெல்லாந் துப்புவதும், வீட்டிலும் வீட்டுக் கருகிலும் வாழைப்பழத்துத் தோல் முதலியவைகளைப் போடுவதுஞ் சுகத்துக்குக் கெடுதி.

7. குறைந்தது வருஷத்துக் கொருமுறை வீடு பழுதுபார்க்கப்பட்டு, சுவர்களெல்லாம் வெள்ளையடிக்கப்படவேண்டும்.

8. ஜலதாரைக்குள் ஜலந் தவிர குப்பை கூழங்கள் செல்லாதபடி பார்த்து, தினந்தோறும் ஜலம் விட்டு நன்றாய்க் கழுவவேண்டும். ஜலதாரைக்குள் சாம்பல் முதலியவை செல்லாவண்ணம் உட்பக்கத்தில் ஒரு தடுப்பும், எலி உட்பிரவேசியா வண்ணம் வெளியே வேறொரு தடுப்பும் இருக்கவேண்டும்.

9. கக்கூசு துர்நாற்றம் உண்டாகாதபடி தினம் இருமுறை நன்றாய்க் கழுவப்படவேண்டும்.

அசுத்தமே சரீர வியாதிக்கு ஒருவாறு காரணமென்றும், வியாதிக்குத் தப்ப நமது வீடும், வஸ்திரமும், சரீரமுஞ் சுத்தமாயிருக்கவேண்டுமென்றும் சொன்னோம். நமது ஆத்துமாவைப் பீடிக்கும் வியாதி பாவம்; பாவ வியாதிக்குத் தப்ப நமது செய்கையும், பேச்சும், நினைவும் பரிசுத்தமாயிருக்கவேண்டும். வீட்டைப் பார்த்தால் வஸ்திரத்தைப் பார்க்கவேண்டியதில்லை, வஸ்திரத்தைப் பார்த்தால் ஆளைப் பார்க்கவேண்டியதில்லை, ஆளைப் பார்த்தால் அகத்தைப் பார்க்கவேண்டியதில்லை என்னும் வழக்கச்சொல் சுத்தத்திற்கும் பரிசுத்தத்திற்குமுள்ள சம்பந்தத்தை ஒருவாறு காட்டுகிறது. சுத்தம் சுகத்துக்கு ஆதாரம் என்பதை உணர்த்தும் பாட்டை இதன் கீழ் காண்க.

## CLEANLINESS CONDUCIVE TO HEALTH

### சுத்தம் சுகத்துக்கு ஆதாரம்

[திரிசுரதாளம்.
இராகம்: மலையாமி.]

பல்லவி

சுத்தம் சுகத்துக்காதாரம்;—பரி
சுத்தம் பரத்துக்கேற்றது.

### சாணங்கள்

1. சுத்த ஆகாயத்தைச் சுவாசித்து ஜீவிப்போர்க்கு
சுத்த ரத்தங் கதித்தோடுமாம் ;—மெய்யாய்
சித்தஞ் சுத்தமாகுமானால் தேவனை நீ தரிசிப்பாய்
நித்தஞ் சுகித்திருப்பாய்.— சுத்.

2. சுத்த ஜலம் பருகி, சுத்த போஜனம் புசித்தால்
பத்திரமாய் வாழ்ந்திருக்கலாம் ;—பரி
சுத்தமான சம்பாஷணை செய்து சுகித்திருந்தால்
முத்திமார்க்கஞ் சேரலாம்.— சுத்.

3. சரீரம், வஸ்திரம், வீடு சுசியாய் வைத்திருந்தால்
சரீர சுகமிருக்குமாம் ;—பரி
சுத்த செய்கை யிருந்தால் ஆத்மசுகந் தெரியும் ;
பத்திக்கடுத்தது சுத்தம்.— சுத்.

Y. G. Bonnell, P. B.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1917-ஆ அக்டோபர் மீ

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தி | லூக். | 22. | 14—23 | 11 | வி | லூக். | 24. | 25—35 | 21 | ஞா | 1 சாமு. | 5. | 1— 8 |
| 2 | செ. | ,, | 22. | 24—38 | 12 | வெ. | ,, | 24 | 36—53 | 22 | தி. | ,, | 6. | 1—16 |
| 3 | பு. | ,, | 22. | 39—53 | 13 | ச. | 1 சாமு. | 1. | 1—18 | 23 | செ. | ,, | 7. | 1—17 |
| 4 | வி. | ,, | 22 | 54—71 | 14 | ஞா. | ,, | 1. | 19—28 | 24 | பு. | ,, | 8. | 1— 9 |
| 5 | வெ. | ,, | 23. | 1—12 | 15 | தி. | ,, | 2. | 1—11 | 25 | வி. | ,, | 8. | 10—22 |
| 6 | ச. | ,, | 23. | 13—26 | 16 | செ. | ,, | 2. | 12—20 | 26 | வெ | ,, | 9. | 1—14 |
| 7 | ஞா. | ,, | 23 | 27—43 | 17 | பு | ,, | 2. | 26—36 | 27 | ச. | ,, | 9. | 15—27 |
| 8 | தி. | ,, | 23. | 44—56 | 18 | வி. | ,, | 3. | 1—10 | 28 | ஞா. | ,, | 10 | 1—13 |
| 9 | செ. | ,, | 24. | 1—12 | 19 | வெ. | ,, | 3. | 11—21 | 29 | தி | ,, | 10. | 14—27 |
| 10 | பு. | ,, | 24. | 13—24 | 20 | ச. | ,, | 4. | 1—18 | 30 | செ. | ,, | 11. | 1—15 |
| | | | | | | | | | | 31 | பு | ,, | 12. | 1—12 |

### நவம்பர் மீ

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வி. | 1 சாமு. | 12. | 13—25 | 3 | ச. | 1 சாமு. | 14. | 1—16 | 5 | தி. | 1 சாமு. | 14. | 36—46 |
| 2 | வெ. | ,, | 13. | 1—14 | 4 | ஞா. | ,, | 14. | 19—35 | 6 | செ. | ,, | 15. | 1—11 |

C. L. S. PRESS, MADRAS—1917

# மாதர் போதினி

No. 239 நவம்பர் 1917 No. 11

7 NOV 1917 MADRAS

## EDITOR'S NOTES

## பத்திராதிபர் நாஞவிதக் குறிப்புகள்

British Success in Flanders. பிரிட்டிஷ் சைனியங்கள் பிளா
ண்டர்ஸ் மாகாணத்தில் விசேஷித்த ஜயம் அடைந்திருக்கின்றன.
மெனின்ரோடில் நடந்த சண்டை தற்காலம் நடக்கும் போரில் மிக
வும் கடினமான சண்டையாம். ஜெர்மானியர் மேற்கு யுத்தமுகத்தி
லிருந்து பல படைகளைக் கொண்டுவந்து பிரிட்டிஷ் சைனியங்களை
எதிர்க்க முயன்றும் வியர்த்தமாயிற்று. ஆங்கிலேயர் பிடித்துக்
கொண்ட இடங்களை மறுபடியும் கைப்பற்ற சத்துருக்கள் எடுத்துக்
கொண்ட பிரயத்தனம் எல்லாம், அவ்விடங்கள் யுத்த விஷயமாய்
எவ்வளவு விசேஷமானதெனக் காண்பிக்கும். பின்னும் யைப்
பிரஸுக்குக்கிழக்கே ஆறுமைல் விஸ்தீரணத்திற்கு ஆங்கிலேய படை
கள் சத்துருக்களை எதிர்த்து சில விசேஷ இடங்களைப் பிடித்துக்
கொண்டிருக்கிறார்கள். இந்த இடங்கள் இனிமேல் நடக்கும் யுத்தங்
களுக்கு வெகு அநுகூலமானவைகள். சமீபகாலத்தில் நமது சக்கிர
வர்த்தியின் சேனை 1614 சத்துருக்களை சிறையாகப் பிடித்திருக்கிறார்
கள். யைப்பிரஸ் தீரத்திலுள்ள மேடான இடங்கள் இவர்கள் வசம்
இருப்பதினால் சத்துருக்கள் குளிர்காலத்தில் சேறுந்தண்ணீருமான
இடங்களில் இருக்கவேண்டியதாயிருக்கும். செப்டெம்பர் மாசம் மத்தி
யில் பிடிபட்ட கைதிகளின் தொகை 3243.

French Front. வெர்டேன் யுத்தபூமிக்கு அடுத்தாற்போல் உள்ள
சில இடங்களைக் கைப்பற்ற சத்துருக்கள் பீரங்கிப்படைகளை உப
யோகித்திருக்கிறார்கள். பிரான்சியர் செய்த குண்டுப் பிரயோகம்
சத்துருக்களை அதஞ்செய்திருக்கிறது. சிறைபிடிக்கப்பட்ட போர்ச்
சேவகர், ஜெர்மானியர் பீரங்கிச்சண்டையில் கனச்சேதம் அடைந்த
தாக அறிவிக்கிறார்கள். ஆகாய விமானங்களைக்கொண்டு சத்துருக்

VOL. XXXII.

களின் பாளையங்களுக்குள் சட்டிப்பீரங்கிகளை எறிந்து பெருநஷ்டம் விளைவித்திருக்கிறார்கள். ஆகாயவிமான சண்டையில் கீர்த்திபெற்ற கைனிமீர் என்பவன் ஒண்டியாய் பல சத்துருக்களின் விமானங்களைச் சுட்டு விழுத்தினான். கடைசியில் தன்னுடைய விமானம் சேதப்பட கடலில் விழுந்தான்.

Italian Front. பெயின்சிஜா பீடபூமியிலும் இஜான்ஸோ நதி தீரத்திலும் ஆஸ்திரியர் இத்தாலியரைத் தாக்கி தோற்றுப் பின்வாங்கிப்போனார்கள். இஜான்ஸோ நதிதீரத்தில் இத்தாலியர் அடைந்த ஜெயம் இப்பெரிய போரின் ஒரு விசேஷித்த வீரச்செயலாம். இத்தாலியருக்கு உடனே பெருத்த ஜெயங்கள் கிடைக்காமற்போன போதிலும், படிப்படியாக முன்னேறிச்சென்று கடைசியில் வெற்றியடைவார்கள் என்று பத்திரிகைகள் கூறுகின்றன.

Troubles in Russia. ருஷியாவில் உள்நாட்டுக் கலகங்களும் குழப்பங்களும் இன்னும் அடங்கவில்லை. ஆங்கிலேயராதியோர் சத்துருக்களின்மேல் பூரணவெற்றி யடையாமலிருப்பதற்குக் காரணம் ருஷியாவே என்று நாம் சொல்லலாம். அவர்கள் யுத்தத்தில் செய்திருக்கவேண்டிய வேலையைச் செய்யவில்லை. அவர்கள் சேனைகளில் ஒழுங்கும் ஒற்றுமையுங் குறைந்திருக்கிறது. ரீகா, டிவின்ஸ்க் தீரங்களில் ஜெர்மானியருக்கு முன்பாகப் பின்வாங்கிப்போயிருக்கிறார்கள். ருஷியசேனைகளுக்குப் பிரதம தளகர்த்தனாயிருந்த கார்னிலாப் என்பவருக்கும் பிரதம மந்திரியாகிய கெரென்ஸ்க்கி என்பவருக்கும் மனவருத்தமும் விரோதமுமுண்டாகி, கார்னிலாப் உத்தியோகத்திலிருந்து நீக்கப்பெற்று காவலில் இருக்கிறார். இவ்விருவரும் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ளாததினாலேயே இர்தக் குழப்பமுண்டானதென்றும் கார்னிலாப் யாதொரு சதியும் நினைத்தவரல்லவென்றும் பத்திரிகைகள் கூறுகின்றன. இதற்குப் பிறகு தளகர்த்தனாய் நியமிக்கப்பட்ட அகுலக்சிப் என்பவரும் ராஜினாமா கொடுத்திருக்கிறார். இப்பொழுது ருஷியர் சர்வஜன ஆளுகை ஏற்பாடுகள் செய்ய சபை கூடியிருக்கிறார்கள். பட்டம் நீங்கின ருஷியசக்கிரவர்த்தினி மோசமான வியாதியிலிருப்பதாகத் தந்திசமாச்சாரம் எட்டியிருக்கிறது.

America and the War. அமெரிக்காவில் கூடின வியாபார சங்கத்தாரின் சபை, யுத்தத்தை முற்றமுடிய நடத்தவேணுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். ஜெர்மானியருக்கு அனுகூலமாயிருந்து பல குழப்பங்களையும் நஷ்டங்களையுஞ் செய்யவிருந்த 100 ஜெர்மானியரைத் துரைத்தனத்தார் பிடித்து காவலில் வைத்திருக்கிறார்கள். அமெரிக்கா ஐக்கியமாகாணத்தில் 16,00,000 பேர் யுத்தசந்நிதாய் இருக்கிறார்களாம்.



Mrs. Besant's Release. சுய அரசாட்சி சம்பந்தமாய் வேலை செய்து, கலகத்துக்குக் காரணமான காரியங்களை ஜனங்களுக்குள் விதைத்துவந்த மிஸிஸ் பீசன்ட் என்னும் ஐரோப்பிய ஸ்திரீயைச் சென்னை, பம்பாய், மத்தியமாகாணம் முதலிய துரைத்தனத்தார் தங்கள் மாகாணங்களிலிருந்து விலக்கிவைத்திருந்ததை நாம் அறிவோம். அப்படி அந்த அம்மாளைச் சிறையில் வைத்திருக்கக்கூடாதென்று சிலர் குழப்பஞ்செய்ய, இந்திய துரைத்தன காரியதரிசியாகிய ஸ்ரீ மான்டேக் என்பவர் அவரை விடுதலைசெய்ய இந்திய கவர்ன்மென்டாரைக் கேட்க, அவர்களும் பற்பல ராஜதானிகளுக்குச் சங்கதியனுப்பி, அந்த அம்மாளை விடுதலைசெய்திருக்கிறார்கள். கலகத்துக்குக் காரணமான விஷயங்களை உபந்நியாசஞ் செய்துவந்த ஒரு ஸ்திரீயை நிபந்தனையில்லாமல் விடுதலைசெய்தது பெரிய ஆபத்தென்று ஐரோப்பிய சங்கத்தார் அறிவித்திருக்கிறார்கள்.

## TYPES OF INDIAN WOMANHOOD

## இந்திய மாதர் லக்ஷணம்

### ராஜநீதிநிபுணி—5.

இந்திய பட்டமகிஷிகள் யுத்தவீரதீரத்திலும் தெய்வபக்தி பலத்திலும் பிரக்கியாதி பெற்றிருக்கிறார்கள். சிலருக்கு நாடாளுந்திறமை இருந்திருக்கிறது. தகப்பன் படையெடுத்துப்போக நேரிட்டபோது ராஜியாட் பீகம் அரசாட்சிசெலுத்தினாள். அவன் இறக்கும்போது மகளுக்குப் பட்டஞ்சூட்ட, அவள் கொஞ்சகாலம் நீதியோடு அரசாண்டாள். அபிசீனிய அடிமையும் அவளது துருக்கசைனியத்துக்குத் தலைவனுமாய் இருந்தவன்மேல் காதல்கொண்டதினால் அவளுடைய செல்வாக்கு நீங்கிற்று.

ஜெஹாங்கீர் சமர்த்துள்ள தன் மனைவியின் கையில் ராஜ்ஜியபாரத்தை விட்டுவிட்டுக் குடிவெறி களியாட்டில் காலக்ஷேபஞ் செய்தான். நூர்ஜிஹான் பீகம் ராஜ்யகாரியங்களை நிர்வாகிக்கும் நுண்ணறிவுள்ளவள். 'நான் உல்லாசமாயிருக்க ஒரு புட்டி ஒயினும் ஒரு துண்டு இறைச்சியும் இருந்தால் போதும்' என்று அவன் சொல்வது வழக்கமாம்.

தற்காலத்தில் போபால் பீகம் என்கிற பட்டமகிஷி இந்திய ராஜநீதிநிபுணிகளுக்குச் சிறந்த திருஷ்டாந்தம். ஆகவே சமயங் கிடைத்தபோதெல்லாம் மேற்குச்சீமை மாடவர்போலவே இந்திய



மாதரும் மனுஷசுபாவத்தை அறியும் அறிவின் திறமையையும் ராஜ்ய பரிபாலன வல்லபத்தையும் காண்பித்திருக்கிறார்கள்.

1765-ம் ௵ முதல் 1795-ம் ௵ வரையில் முப்பது வருடம் இந்தோர் நாட்டின் பரிபாலனம் அஹாலியாபாயின் கையிலிருந்தது. அவளது விருத்தாந்தம் கவனிக்கத்தக்கது. பிரஜைகள் அவளிடத்தில் அபரிமிதமான பக்திவினயமுள்ளவர்களாய் இருந்தபடியினால் அவளது பிறப்பைப்பற்றி பல கற்பிதக்கதைகள் உண்டாயிருப்பதோடு அவளை தேவதையாக வணங்கினதும் ஆச்சரியமல்ல. விவசாயத்தொழில் புரிந்துவந்த அவளது தந்தை ஆனந்தராவ்சிந்திக்கு வெகுகாலம் பிள்ளைப்பேறில்லாமல் இருந்தது. அவன் தன் பத்தினியோடு அனந்தம் கோயில் குளங்களுக்குப் போயும் பிள்ளைவரம் கிடைக்கக்காணோம். அவர்கள் ஊருக்கு வந்த சாது ஒருவன் அவர்கள் கோளாப்பூரிலிருக்கும் ஸ்ரீ ஜெகதாம்பா கோவிலுக்குப் போய் பூஜைசெய்தால் அவர்களுக்குப் பிள்ளையுண்டாகுமென்று சொன்னான். ஓராண்டு முழுவதும் நீங்காத பூஜை செய்தபிறகு, ஒரு தேவதை ஆனந்தராவுக்குத் தோன்றி அவர்கள் செய்துவந்த பூஜைக்காக மிகமகிழ்ந்து, அவனுக்கு மகளாகத் தான் பிறக்கப்போகிறதாக அறிவித்தது. அவனது மனைவியும், ஒரு தேவதை ஒரு பெண்சிசுவை மடியில்வைத்ததாகச் சொப்பனங் கண்டாள். இருவரும் மகிழ்ச்சியோடு ஊருக்குத் திரும்ப 1735-ம் ௵



அஹாலியாபாய் பிறந்தாள். ஜாதகக்குறிப்பினால் கீர்த்திக்காக அவள் பிறந்தவளென்று தோன்றிற்று. முகவழகு இல்லையாயினும் அகத்தின் அழகில் சிறந்தவள்.

கலியாண பருவம் வந்தபோது அவளது பெற்றோர், ஜாதகக்குறிப்பில் கண்டிருப்பதற்கு ஏற்ற கணவன் கிடையாததைப்பற்றி வருந்தி, விதியின்பிரகாரம் சகலமும் நடந்தேறுமென்று ஒருவாறு தங்களைத் தேற்றிக்கொண்டார்கள். தங்கள் வீட்டுக்கு எதிரிலிருந்த கோவிலுக்குத் தரிசனஞ்செய்யப் போயிருந்த ஒருநாள், அங்கே வடக்கில் யுத்தத்துக்குப் போய் வெற்றியோடு திரும்பிவந்து, தேவதைக்குப் பொருத்தனைகளைச் செலுத்திக்கொண்டிருந்த ரகுநாதராவ் பீஷ்வா, பாலாஜி பாஜிராவ், மல்லாராவ் ஹோல்கார் முதலியவர்களைக் கண்டார்கள். இவர்கள் பெண்ணின் கம்பீரமான தோற்றத்தைக் கண்டு வியந்து அவளது நாமதேயத்தை விசாரிக்க, பெண்ணின் ஆசான் அவளது அற்புத பிறப்பை விவரிக்க, மல்லாராவ் ஹோல்கார் அவளே தன் மகன் காந்திராவுக்கு ஏற்ற துணையென்று நிச்சயித்தான். இப்படி அவளது ஜாதகக்குறிப்பு நிறைவேறிற்று.

‘மாமியார் மெச்சின மருமகளில்லை’ என்கிற முதுமொழிப்படி மல்லாராவின் மனைவி அவளைக் கொடுமையாய் நடத்தினும், அஹாலியாபாயின் சாந்தம், கீழ்ப்படிதல், நேர்மை முதலிய குணங்கள் அரண்மனை எங்கும் பரிமளித்தன. மாமனாருக்கு ராஜாங்கவிஷயங்களில் அவளைப் பழக்குவதற்கு மெத்த பிரியம். யுத்தசம்பந்தமாய் வெளியிடங்களுக்குப்போக நேரிடும்போது அவளுக்குச் சில பொறுப்பான வேலைகளை நியமிப்பது வழக்கம்.

1754-ம் ௵ துன்பசாகரம் அவளை மூடிக்கொண்டது. மலைவாசிகளோடு போருக்குப்போயிருந்த அவளது கணவன் காயப்பட்டு மாண்டான். அவள் உடன்கட்டை ஏற மனதாயிருந்ததையறிந்த மாமனார் வயோதிபகாலத்தில் தனக்கு ஆறுதலாயிருக்கக்கூடிய அவள் அப்படிச் செய்யலாகாது என்று தடுத்தான். மல்லாராவ் மரிக்கும்போது அஹாலியாபாயின் மகன் பட்டத்துக்குவந்து ஒன்பதுமாதத்திற்குள் அகாலமரணமடைய ராஜ்யபாரத்தை அஹாலியாபாய் ஏற்றுக்கொண்டாள்.

சிலர் இந்த ஸ்திரீயின் துணிகரத்தைக் கண்டு பயந்தார்கள்; சிலர் தங்களிஷ்டப்படி ஆளுவதற்கு நல்ல சமயம் வாய்த்ததென்று அகமகிழ்ந்தார்கள். ஆனால் அஹாலியாபாயிக்கு இருந்த உலகாளுந்திறமையைக் கண்டு ஏமாந்துபோனார்கள். தங்கள் எண்ணஞ் சிதையப்பெற்றவருள் ஒருவன், சமஸ்தான ஆசாரியனாகிய கங்காதர் ஜாஸ்வான்ட்.

சிம்மாசனத்தை விட்டு நீங்கி கைம்பெண்ணுக்குத் தக்கவாறு தனியே துறவறம் பூண அஹாலியாபாய் இசையாததை அவன்

கண்டு, பீஷ்வாவின் சிற்றப்பனுகிய ரகுநாதராவை அரசாட்சியைக் கைப்பற்றக் கேட்டுக்கொண்டான். இவர்கள் இருவரும் இந்தோரி லிருந்த இதர கலகக்காரரோடு சேர்ந்து சதியாலோசனை செய்யத் தொடங்கினார்கள். என்றாலும் அவர்களுடைய ஆலோசனைகளெல் லாம் அஹூலியாபாயிக்கு வந்து எட்டிக்கொண்டேயிருந்தது. கடை சியில் ரகுநாதராவையும் அவனைச் சேர்ந்தவர்களையும் பிடித்து சிறையி லிட்டாள்.

அவர்கள் உண்மையாயிருக்க வாக்குக்கொடுத்ததின்பேரில் விடு தலைபெற்றார்கள்.

ஆயினும் ரகுநாதராவ் வன்மஞ்சாதிக்க எண்ணி இந்தோருக்கு விரோதமாகப் படையெடுத்துப்போக ரஜபுத்திரரோடு ஆலோசனை செய்யத் தொடங்கினான். அஹூலியாவும் சத்துருக்களை எதிர்க்க சித் தஞ்செய்துகொண்டிருந்தாள். ஸ்பானியா தேயத்தோடு போர்புரிந்த போது இங்கிலாந்தின் பட்டமகிஷியாகிய எலிசபெத்தின் வார்த் தைகள் போர்ச்சேவகரையும் கப்பற்சைனியங்களையும் எப்படி எவி எழுப்பினதோ, அவ்வாறே இவளுடைய வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகளும் அவளுடைய சைனியங்களுக்குள் வீராவேஷத்தை உண்டாக்கின. ரகுநாதராவும் ரஜபுத்திரரும் இந்தோரின்மேல் படை யெடுத்து வந்தபோது அவளது படைகளின் நிர்ணயத்தையும் தீரத் தையுங் கண்டு அவர்கள் பின்வாங்கிப்போக நேரிட்டது. அவள் ஆண்ட முப்பது வருஷத்துக்குள் பேர் பிரஸ்தாபமில்லாத இந்தோர் நாடு ஒரு சிரேஷ்ட நகரியாயிற்று. நாஜீவ இம்சையைப் பால்போ லும் பருகிவரும் தக்ஸ் என்கிற கொடிய ஜாதிக்காரரை தன் தேசத்தி லிருந்து ஒழிப்பவனுக்குத் தன் மகளை மணமுடிப்பதாகப் பறையறை வித்தாள்.

ஜாஸ்வான்ட் ராவ் அதற்கு உடன்பட்டு அப்படியே செய்து இள வரசியை மணம்புரிந்தான். தீராவழக்குகளெல்லாம் அஹூலியாபாயி னிடத்திற்குத்தான் வரும். அதிகாரிகள் குடிகளை வருத்தப்படுத்தாத படிக்கும் எங்கும் நீதிநடக்கவும் தன்னால் இயன்றதெல்லாஞ் செய்து வந்தாள். அவளிடத்தில் யோசனைகேட்க வந்தவர்களுக்கு அதிக ஞானத்தோடு ஆலோசனை கொடுப்பாள். திரண்ட திரவியமுள்ள இரண்டு கைம்பெண்கள் தங்கள் ஆஸ்தியையெல்லாம் தானதருமஞ் செய்ய அவளிடத்தில் ஒப்புவித்துவிட்டு ஸ்தலயாத்திரை செய்து தவஞ்செய்ய விரும்பினார்கள். அதற்கு அவள், தானம் கடவுளால் கொடுக்கப்படுகிற ஒரு பொறுப்பென்றும் அவர்களுடைய பாரத்தை அவ்வளவு இலேசாய் நீக்கிக்கொண்டுபோக முடியாதென்றுஞ் சொல்லி அவர்களுக்கிருந்த பெர்க்கிஷத்தைக்கொண்டு அவசியமான



இடங்களில் கிணறு, குளம் வெட்டுவிக்கவும், வீடுவாசல் இல்லாதவர் களுக்கென்று சத்திரம் கட்டுவிக்கவும், இப்படியாகத் தங்கள் செல் வத்தை இதர மனுஷரின் நன்மைக்காகச் செலவிட ஆலோசனை சொல்லிவந்தாள். தானே சாதாரண ஜீவனம்பண்ணி பொது நன் மைக்கென்று தன் பணத்தையெல்லாம் செலவிட்டாள். கடவுள் வழிபாடு, தேசம் செழித்தோங்க இன்றியமையாத அவசியம் என்று கண்டு அநேக கோயிற்குளங்களைக் கட்டுவித்தாள்; அவைகளில் மிக்கப் பேர்போனது காயாவில் விஷ்ணுபாதமென்னும் கோயில். அவள் எழுபது பிராயத்தில் தேகவியோகமானபோது பிரஜைகளுக் கெல்லாம் ஆறாத்துயரமுண்டாயிற்று.

அஹூலியாபாய் ராஜமந்திரத்தில் இங்கிலாந்துதேசத்தின் ராஜ ஸ்திரீயாகிய எலிசபெத்துக்குச் சமமானவள். பக்திவிஷயத்திலும் பொதுநல நாட்டத்திலும் ஹங்கரிநாட்டு எலிசபெத்தைப்போன்ற வள். அநேக விஷயங்களில் சியென்னு கத்ரீனம்மாளைப் போன்ற வள். அவளும் எழுத்தறியாதவளாயினும் இதரரை வசப்படுத்தவும் கருவியுங் காலமுந் தெரிந்து காரியங்களை நிர்வாகிக்குந் திறமையுள்ள வள். தன்னிடத்திலிருந்த ஒருவனை ஜெபதபங்களில் ஆயுளைக்கழிக் கவும், மற்றொருவனை ராஜாங்கவிஷயமாய் ஒரு சீமைக்கு அனுப்பி அங்கே கிறிஸ்துவின் ராஜரீகத்தை ஸ்தாபிக்கச் செய்யவும் முயன் றாள்.

ஐசுவரியமுள்ள கைம்பெண்களுக்கு அஹூலியாபாய் கொடுத்த புத்திமதிகளை மனதில் வைத்துக்கொள்வது நமக்கு நலமாயிருக்கும்.

பொருள் செல்வம் மாத்திரமல்ல, ஈசனுடைய சகல வரப்பிர சாதங்களும் பெரும் பொறுப்புகள். பொறுப்பு எங்கே யுண்டோ அங்கே அதற்கேற்ற கடமையும் உண்டு. நமக்கிருக்கும் செல்வத்தைப் பிறருடைய நன்மைக்கென்றும் உபயோகித்தல் அவசியம்.

Marguerite Butler.

## THE NEEDS OF INDIA—A LECTURE

## இந்தியா இன்னும் எவ்வெவ்விஷயங்களில் தேர்ச்சியடைய வேண்டுமென்பதைப் பற்றி உபந்நியாசம்

நாம் தற்காலத்தில் வசித்துவரும் நம்முடைய இந்தியா தேச மானது, முன்காலத்து அரசர்களின் அரசாட்சியில் இருந்த நிலை மையைப்பார்க்கிலும், தற்காலத்தில் அரசாண்டுவரும் ஆங்கிலேய

அரசர்களால் ஏற்பட்ட அநேக சீர்திருத்தங்களைப்பற்றி யோசித்துப் பார்ப்போமானால், இன்னும் அநேக விஷயங்களில் பூரணதேர்ச்சி பெறவில்லை யென்று நாம் அறியக்கூடும். அவைகளில் சிலவற்றை இதனடியில் குறிப்பிட்டு, விவரித்துப் பார்ப்போம்.

1. சோம்பல்.

நம் தேசத்திலுள்ளவர்கள், முன்காலத்திலிருந்த நிலைமையையும் தற்காலத்தின் நிலைமையையும் ஒப்பிட்டு யோசித்துப்பார்த்து, ஓ! நாம் அநேக விஷயங்களில் தேர்ச்சிபெற்று வந்திருக்கிறோம் என்று திருப்தியடைந்து, இருக்கும் காரியங்களை முன்னுக்குக் கொண்டுவரப் பிரயாசப்படாமலும், மற்ற தேசங்களைப்போல் புது புது காரியங்களைக் கண்டுபிடித்து நம் தேசத்தில் ஸ்தாபிக்காமலும் இருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்னவெனில், ஜனங்களுக்குள் சோம்பல் இருப்பதால் மனம் தளர்ந்து உற்சாகமற்றவர்களாய்க் காணப்படுகிறார்கள். இதனாலேதான் நம் தேசத்தில் விளையும் பஞ்சை சொற்பவிலைக்கு அனுப்பி, பிறகு அதிக விலை கொடுத்து வஸ்திரங்களை வாங்குகிறார்கள். அந்தப் பஞ்சைக்கொண்டு நம் தேசத்திலிருப்பவர்கள் ஏன் உருப்படிகளாகச் செய்யக்கூடாது? இதற்குக் காரணம் சோம்பல் தான். ஆகையால், நம் தேசத்திலுள்ளவர்கள் சோம்பல் என்னும் பீடையினால் பீடிக்கப்படாமல், வியாபாரம், கைத்தொழில், கல்வி முதலிய விஷயங்களில் உற்சாகமுள்ளவர்களாய்க் காணப்பட்டால் மிக நன்மையாயிருக்கும்.

2. பெண்கள் கல்வி.

இத்தேசம் செல்வம் நிறைந்த தேசமென்று நமக்குச் சரித்திரவாயிலாகத் தெரிந்திருந்தபோதிலும், பெண்கள் கல்விக்குக் குறைவான தேசமென்றே சொல்லலாம். எப்படியென்றால், ஐரோப்பா, ஆஸ்திரேலியா, ஜப்பான், இங்கிலாந்து முதலிய இடங்களிலுள்ள பெண்களின் கல்விக்கும், இத்தேசத்தின் பெண்களின் கல்விக்கும் ஒப்பிட்டு யோசித்துப் பார்ப்போமானால், எவ்வளவோ வித்தியாசம் காணப்படும். இத்தேசத்திலுள்ளவர்கள் பணத்தைச் சேர்க்க முயற்சி எடுக்கிறார்களே யொழிய, கல்விப்பொருளைச் சேர்க்க முயற்சிசெய்கிறதே இல்லை. இங்கிலீஷ் நாடுகளிலுள்ள பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு 6-வது 7-வது வயதானவுடன் கல்வி கற்க விட்டுவிடுகிறார்கள். ஆகையால் அவ்விடங்களிலுள்ள அநேக பெண்கள் ஆண்களைப்போல படித்து, பெரிய உத்தியோகங்களில் அமருகிறார்கள். இத்தேசத்திலோவென்றால், பெண்களுக்குப் படிப்பு அனாவசியம், ஆண்கள் தான் படிக்கவேண்டும் என்று சொல்லிக் கேவலப்படுத்துகிறார்கள். பெண்கள் படிப்பதால் எவ்வளவோ நற்குணங்கள் உண்டாகுமென்பதை அறியாமற்போகிறார்கள். இதினால்தான் இத்தேசத்தில் கல்வி குறைவாகக் காணப்படுகிறது. இதை நிவிர்த்திசெய்ய அநேக இடங்களில் இப்போதிருப்பதைக்காட்டிலும், அநேக தர்மப்பள்ளிக்கூடங்களைக் கட்டி, படித்தவர்கள் படியாதவர்களுக்கு முன்மாதிரியாக நடந்து, கல்வி படிப்பதால் அநேக நற்குணங்கள் காணப்படுகிறது என்று உணர்த்திக் காட்டவேண்டும். இப்படி எல்லோரும் முயற்சி எடுப்பார்களேயானால், நம் தேசத்தில் இப்போதிருப்பதைக் காட்டிலும், இன்னுமதிகமாகப் பெண்கள் கல்வி தேர்ச்சியடையுமென்பதற்கு ஐயமில்லை.



3. பாலிய விவாகம்.

இத்தேசத்தில், ஆதிகாலமுதற்கொண்டு இம்மட்டும் தொடர்ந்து கொண்டுவரும் பாலிய விவாகம் என்னும் ஒரு கெட்ட வழக்கம், குடிகொண்டிருக்கிறது. இது பரிதாபமான காரியம். எப்படியென்றால், பத்து வயதிலேயே சிலர் கலியாணம் செய்துவிடுகிறார்கள். ஆனால் இளம்வயதில்தான் கல்வியைப் படித்து அறிவை விர்த்திசெய்கிற காலம். இப்பேர்ப்பட்ட காலத்தைப் பிரயோஜனப்படுத்தாமல், அநேக தாய்மார்கள், தங்கள் சிறுவர்களைக் கலியாணம் செய்து கொடுத்துவிடுகிறார்கள். ஆகையால் இப்பேர்ப்பட்ட சிறுவர்கள், மாமிமார் சொல்லுகிறபடி செய்யக் கடமைப்பட்டிருப்பதால், தாங்கள் படித்திருந்தும் அடைந்த கல்வியைப் பிரயோஜனப்படுத்தாமல் விட்டுவிடுகிறார்கள். மேலும், மாமிமார் செய்யும் கொடுமைகளுக்கும், சிறுவயதில்தானே ஆளாகவேண்டும். இன்னும் அநேகர் இளம்வயதில்தானே கைம்பெண்ணாகிவிடுகிறார்கள். ஆகையால், இளம்வயதில் கலியாணம் செய்யக்கூடாது என்று இந்துக்களுக்குள் ஒரு சட்டம் இருக்குமேயானால், இக்கெட்டவழக்கம் நம் தேசத்தை விட்டு சீக்கிரம் எடுபட்டுப் போகும்.

4. விதவைகளின் கலியாணம்.

பாலிய விவாகம் நடப்பிப்பதால் இளம்வயதில்தானே அநேகம்
பேர் புருஷனை இழந்து விதவையாகிறார்கள். நம் தேசத்தில் விதவை
கள் ஏராளமாய்க் காணப்படுகிறார்கள். சில விதவைகள் மாமி
மார் கைகளில் சிக்குண்டு படும் கஷ்டத்தைக் கேள்விப்பட்டால்
பரிதாபமாயிருக்கிறது. மேலும் விதவையானவள் மறுபடியும் கலி
யாணம் செய்யக்கூடாதென்றும் இந்துக்களுக்குள் கட்டளை இருக்
கிறது. ஆனால் அக்கட்டளை கொஞ்சம் கொஞ்சமாக நிவிர்த்தியாக்
கப்பட்டு, விதவைகளின் கலியாணம் நடந்துவருகிறது. சென்ன

பட்டணத்தில் இதை அநேகர் அனுசரித்துவருகிறார்கள். மதுரையில் விதவைகளுக்காக ஒரு சங்கம் ஏற்பட்டு, அதை அடிக்கடி நடத்திவருகிறார்கள். சில பாகங்களில் மாத்திரம் விதவைகளைக் கலியாணம் செய்யக்கூடாது என்ற பிரஸ்தாபமாயிருக்கிறது. இவர்களும் மேற்சொன்ன ஒழுங்கின்படி நடந்துகொள்வார்களேயானால், நம் தேசத்தில் கைம்பெண்கள் குறைந்து, பல நன்மைகளை அடையலாம். விதவைகளைக் கலியாணம் செய்துகொள்ளும் ஏற்பாடு இன்னுமதிகமாக அனுசரிப்பார்களேயானால் விதவைகளின் கஷ்டம் ஒருவாறு நிவிர்த்திசெய்யப்படும்.

(இன்னும் வரும்.)



## CHILDREN'S PAGE

## பாலர் பக்கம்

சிந்துபுரி யென்ற ஊரில் ஸ்ரீரங்கன் என்னும் ஒரு செட்டியார் இருந்தார். அவர் ஓர் கடை வைத்துக்கொண்டு பலசரக்கு வியாபாரம் செய்துவந்தார். அவருக்கு ஒரே ஒரு மகனிருந்தான். அவன் பெயர் குணசுந்தரன். அவன் சிறுபிராயத்திலேயே பள்ளிக்கூடஞ் சென்று வெகு திறமையுடன் படித்துவந்தான். சிறு மைனா, கிளி முதலிய பறவைகளை வளர்ப்பது அவனுக்கு மிகவும் பிரீதி. பாடசாலை முடிந்து வீடு சேர்ந்ததும் தனது அருமைத்தோழர்களான பறவைகளுக்கு உணவளித்தபிறகே, தான் சாப்பிடச்செல்வான். அப்பறவைகள் இவன் எப்பொழுது வருவானென்று ஆவலாயிருக்



கும். வந்தவுடனே அவைகள் எல்லாம் ஆனந்தமாய்க் கீச்சலிடும். இவன் பறவைகளிடத்தில் எப்படி அன்பாயிருந்தானோ அவ்வாறே தனது பெற்றோரிடத்திலும் பள்ளித்தோழரிடத்திலும் வெகு பிரீதியாயும் அன்பாயுமிருந்தான். பள்ளிக்கூடஞ் செல்லும்போது யாராவது ஒருவன் சிறு பிராணிகளின்பேரில் கல்லை எறிந்தால், இவன் உடனே அதட்டி, அப்படிச் செய்யலாகாதென்று, அன்பாய்ச்சொல்லி பள்ளிக்கூடம் முடிந்தபின் அவனைத் தன் வீட்டுக்கு அழைத்துவந்து, சிறு பிராணிகளின் அன்பைப் பிரத்தியட்சமாய்க் காண்பிப்பான். இதைக்கண்ட தோழர்களும் ஒவ்வோர் பறவை வளர்க்கப் பிரயாசப்பட்டனர். இவ்விதமாய் அன்பே அந்தப் பள்ளிக்கூடத்தில் நிறைந்திருந்தது. ஒருநாள் குணசுந்தரனும் அவனுடைய பெற்றோரும் அயல் கிராமத்திலுள்ள ஒரு கலியாணத்திற்குப் போகவேண்டியிருந்ததால் தனது அருமைப்பறவைகளை அடுத்தவீட்டுப் பையனிடம் கொடுத்துப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்ளென்று சொல்லிவிட்டுப் போனான். அன்று இரவு அதிக மழை பெய்ததினால் வெளியே கட்டப்பட்டிருந்த பறவைக்கூடுகள் கவனிக்கப்படவில்லை. விடா மழையினால் இரண்டு பறவைகளும் தலை குறுகி மாண்டுபோயின.

இரண்டு நாட்களுக்குப் பின் குணசுந்தரம் திரும்பிவந்து வெகு ஆவலுடன் பறவைக்கூட்டண்டை சென்றான். ஐயோ பாவம்! அங்கு பறவைகள் செத்துக்கிடந்தன. கதறி அழுதான். அளவொணா விசனமடைந்தான். பறவைகள் மாண்டுபோன சங்கதியறிந்து அப்பறவைகளைப் பத்திரமாய் அடக்கம்பண்ணினான்.

குணசுந்தரத்தின் அன்பைப் பாருங்கள்! பறவைகளிடத்தில் மாத்திரமல்ல, தோழர்களிடத்திலும் பெரியவர்களிடத்திலும் ஆசிரியரிடத்திலும் அன்புள்ளவனாயிருந்தான். எல்லாரும் அவனை நேசித்தார்கள். சிறு பிள்ளைகளே! அன்பே உங்கள் ஆபரணமாகட்டும். அன்பின் மணம் உங்களிடத்தில் வீசட்டும். அது திரளான பாவங்களை மூடுமென்று வேதம் சொல்லுகிறது.

### பாடல்

ஸ்ரீராமச்சந்திரனே யென்ற மெட்டு.

1. சிந்துபுரி யென்ற ஊரில்
ஸ்ரீரங்க செட்டி யார்க்குச்
சொந்தமா யொருமகன் பிறந்தனன்.
குண சுந்தர மென்று பேர்—அவன்
தினமும் சொகுசாய் வளர்ந்தனன்.

2. பட்சி கிளி மைனாவை
பட்ச முடனே வளர்த்து
நிச்சயமாய் அன்புபூண்டு வந்தனன்.
நேசர்கள் குணமும் மாறிற்று.
பாசமோங்கிற்று பள்ளியில்.

3. ஒருநாள் கல்யாண மேக
உவந் தெடுத்துப் பறவைகளை
நயந்தொரு சகோதரன்பால் விட்டனன்.
மழை கடோரமாய்ப் பொழிந்தது.
மாண்டு பறவைகள் ஒழிந்தன.

4. சுந்தரன் திரும்பி வந்து
வெந்து மன மிகநொந்து
என் தலைவிதி யிதோவென் றேங்கினன்.
அழுது புரண்டு விழுந்தனன்.
அவனன்பை மெச்சினர் யாவரும்.

J. Samuel Gurupatham

## THE SALE OF WORK FOR SOUTH INDIAN UNITED CHURCH, SALEM

## சேலம் ஐக்கிய சபைக்குப் பொருள் சேகரம்

சேலம் ஐக்கிய சபையைச்சேர்ந்த சபையார் யாவரும் தங்கள் சபையின் செலவுக்குப் பணம் சேகரிக்கும்படியாக புதிய மாதிரி யோசனைசெய்து கடந்த வருஷம் ஜூலை மாசத்தில் இந்த யோசனையை முதலில் நிறைவேற்றத் தொடங்கினார்கள். அதுதான் ஆரம்பம். அது யாதெனில்—

சபையிலுள்ள ஒவ்வொருவரும் தங்கள் கைகளால் பொருட்களை செய்தும், செய்யக்கூடாதவர்கள் விலைக்கு வாங்கியும் அவைகளைக் கோவிலுக்கென்று விற்பனை செய்யும்படியாக ஓர் இடத்தைக்குறித்து அதில் இந்த வேலையைத் தொடங்கினார்கள். சபையார் பொருட்களை கொடுப்பதுமாத்திரமல்ல, அவர்களும் பொருட்களை வாங்கவேண்டுமென்றும் முன்னதாகக் கூறப்பட்டது. இரண்டாம் தடவையாக, நாளது வருஷம் ஆகஸ்டு மாதம் 4-ந் தேதியாகிய சனிக்கிழமை மாலை 4½ மணிக்கு சேலம் லண்டன் மிஷன் பையன்கள் உயர்தரப் பாட-



சாலை மண்டபத்தில் (High School Hall) இக்கூட்டம் கூடப்படுமென்றும், பொருட்களை வாங்க வருகிறவர்களும் பார்க்க வருகிறவர்களும் அம்மண்டபத்திற்குள்ளே நுழையுமுன் ½ அணா கொடுத்துவிட்டு உள்ளே செல்லவேண்டுமென்றும் பொருட்களை வாங்குகிறவர்கள் கடனாக வாங்காமல் ரொக்கமாகக் கொடுத்தே வாங்கவேண்டுமென்றும், பொருட்களை விற்பனைக்கு அனுப்புகிறவர்கள் அவைகளை முந்தின நாளிலே கமிற்றி மெம்பர்களுக்குப் பொருட் கிரயத்தையும் குறிப்பிட்டு அனுப்பவேண்டுமென்றும், கோவிலில் ஆராதனை தொடங்குமுன் சபையாருக்கு அறிவிக்கப்பட்டது. அவ்வாறே மேற்படி சபையாரில் அநேகர் தங்கள் கடமைகளை நிறைவேற்றப் பிரயாசப்பட்டார்கள்.

ஆகஸ்டு மாதம் 4-ந் தேதி சனிக்கிழமை மாலை 4½ மணிக்கு ஏறக்குறைய 200 பேருக்கு அதிகமான கிறிஸ்தவ ஆண்களும் பெண்களும் பிள்ளைகளும் இந்துக்களில் சிலருங்கூட மேற்படி மண்டபத்திற்குள் போகும்படியாக ½ அணா கொடுத்து உள்ளே சென்றார்கள். அஸ்தம்பட்டி பெண்பாடசாலையிலிருந்து 10 சிறு பெண்பிள்ளைகள் விளையாட்டு செய்யும்படி ஊதாவஸ்திரம் தரித்தவர்களாயும், கோட்டை பெண்பாடசாலையிலிருந்து 12 சிறுவர்கள் கும்மியடித்து விளையாட்டு செய்யும்படியாக ரோஸ்நிறமான வஸ்திரம் தரித்தவர்களாயும், மற்றவர்களைப்போல ½ அணா செலுத்தாமல் மண்டபத்திற்குள் சென்றார்கள். உள்ளே நுழைந்தவுடன், வாத்திய கோஷ்டிகளும் பாட்டுகளும் மும்முரமாய் நடந்தேறியது. அவ்வளவு ஏராளமான ஜனங்கள் கூடியிருக்கும்படி, அது சிறிய இடமாகத் தோன்றியபோதிலும், வெகு நேர்த்தியாக ஒழுங்குசெய்யப்பட்டு சிங்காரிக்கப்பட்டிருந்தது. அந்த மண்டபம் பசுமையான இலைகளாலும், பிரிட்டிஷ் கொடிகளாலும் (Flags) ஜோடிக்கப்பட்டிருந்தது. தளமேடையின் வலது இடது புறங்களில் கரும்பலகைகள் போடப்பட்டு அதின்மேல் இரண்டு நேர்த்தியான வசனங்கள் சபையின் ஒரு அங்கத்தானால் எழுதப்பட்டிருந்தது. மேற்படி மேடையின் மத்தியில் பீடாதிபதிகளாகிய கனம் ஜேம்ஸ் ரத்தினம் ஐயரும் கனம் ராபர்ட்சன் ஐயரும் பீடம் வகித்தார்கள். மண்டபத்தின் பாதி இடத்தில் ஜனங்கள் உட்காரும்படியாக ஆசனங்கள் போடப்பட்டும் மற்ற பாதியில் விற்பனைக்காக அனுப்பப்பட்ட பொருட்களில் துணிவகைகள் ஒரு மேசையின்மேலும் சிற்றுண்டிகள் மற்றொரு மேசையின்மேலும் சிறு கடைகள்போல வைக்கப்பட்டு அதை விற்பனைசெய்யும்படியாக ஒவ்வொரு அங்கத்தினனை நியமித்துவைத்திருந்தார்கள். மேற்படி இரு மேசைகளும் இருக்குமிடங்களுக்கு மத்தியிலுள்ள ஓர் மூலை இடத்தில் மீன் குளம்

(Fish pond) ஒன்று வைக்கப்பட்டிருந்தது. மண்டபத்திற்குள் போய் உட்கார்ந்தவுடன் ஒவ்வொருவருக்கும் அச்சிட்ட தாளொன்று கொடுக்கப்பட்டது. அதில் ஒரு பாட்டும், கூட்டம் நடத்தப்படவேண்டிய ஒழுங்குகளும் வரையப்பட்டிருந்தது. முதலில் எல்லோரும் எழுந்து அதில் குறிப்பிட்டபடியே 'மகத்வதேவனை மனோவாக்கு காயத்தால்' என்ற கீதம் பாடியதும், கனம் ராபர்ட்ஸன் துரைசானியம்மாள் சில வார்த்தைகள் பேசினார்கள். அதாவது: தன் சிறு குழந்தையைப் போல இந்த சபையானது மற்றவர்கள் உதவியை நாடினது. இப்போதோ தன் குழந்தை வரவர தன் காரியங்களைத் தானே பார்த்துக் கொள்வதுபோல சபையும் பிறர் உதவியின்றி தன்னை நடத்திக் கொள்ள சக்தியடைந்திருக்கிறதென்றும், இன்னும் அதிகமாகத் தேர்ச்சியடையவேண்டுமென்றும் இங்கிலீஷில் சொன்னதைப் போதகர் தமிழில் மொழிபெயர்த்தார். பிறகு எல்லோரும் ஜெபம் செய்தபின் முதலில் பிரசங்கம் செய்த அம்மாள் பொருட்களை வாங்கும்படி போனார்கள். பிறகு மற்றவர்களெல்லாரும் போய் வாங்கினார்கள். துணிக்கடையில் சிறுபிள்ளைகளுக்கு உடுப்புகளும், கைக்குட்டைகளும், மணிவேலைப்பாடுள்ள பொருட்களும், சிறு பணப்பைகளும், மேல்ஜோடுகளும் வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொருவரும் பொருட்களை எடுத்து, அதன்மேல் குறிக்கப்பட்டிருந்த விலைப்பிரகாரம் ரொக்கமாகப் பணம் கொடுத்து, தங்கள் இஷ்டமான பொருட்களை வாங்கினார்கள். பிறகு பலகாரக்கடைக்கு அநேகர் போனார்கள். அங்குள்ள சிற்றுண்டிகள் அஸ்தம்பட்டி பெண்பாடசாலை போர்டிங் பெண்களால் (Boarding Home) செய்யப்பட்டு, கோவிலுக்கென்று, சாதாரண விலையின்றி இரண்டத்தனை விலைக்கு விற்கப்பட்டது. இச்சமயத்தில் கிராமபோன் சத்தம் தொனித்தது.

இது நிற்க, முன் சொல்லப்பட்ட மீன்குளத்தைப்பற்றிய விபரம் யாதெனில், கபிலநிறமான துணியால் ஒரு திரை (Screan) போட்டு திரையின் பின்பாகத்தில் குளமிருப்பதைப்போலவும், திரைத்துணியின் முன்பாகத்தின்மேல் காகித அட்டையால் (Cardboard ) வெட்டப்பட்ட பெரிய மீன் ஒன்றும், தண்ணீரில் மீன்கள் நீந்திக்கொண்டிருப்பதைப்போலவும் வரையப்பட்ட ஒரு காகிதமும் பதிவுசெய்யப்பட்டிருந்தது. இவ்விஷயத்தில், அஸ்தம்பட்டி பெண்பாடசாலைப் பெண்பிள்ளைகள் இருவர் உதவி செய்தார்கள். ஒரு பெண் திரைக்கு முன்பாகத்தில் நின்று கையில் ஒரு நீண்ட தூண்டில் வைத்துக்கொண்டு நின்றனள். திரைக்குப் பின்னுக்கிருந்த குளத்தில் மீன்கள் இருப்பதைப்போல சில விளையாட்டுப் பொருட்களும், சில உபயோகமுள்ள பொருட்களும் வைத்து, தூண்



டில் போடப்படும்பொழுது மீன் அகப்படுவதைப்போல பொருட்களை ஒவ்வொன்றாகத் தூண்டிலில் மாட்டிவிடும்படியாக இன்னொரு பெண் நின்றனள். இது விசேஷமாக சிறுபிள்ளைகளுக்கென்று ஏற்படுத்தப்பட்டது. அரை அணா கொடுத்த ஒவ்வொரு பிள்ளையும் அவரவர் அதிர்ஷ்டவசத்தின்படியே பொருட்களையடைந்தனர். தூண்டில் வைத்திருந்த பெண் ½ அணாவை கையில் வாங்கி வைத்துக்கொண்டு, தூண்டிலை அந்தப் பிள்ளையிடம் கொடுத்தாள். காசு கொடுத்த பிள்ளை தூண்டிலை வாங்கி குளத்தில்போட்டு வெளியே எடுக்கும்பொழுது ஏதாவது ஒரு பொருள் கிடைத்தது. (உதாரணமாக, காகிதபென்சல், வளையல், மிட்டாய், சோப்பு முதலியன.) சத்தம் அதிகமாயிருந்தபடியால் இரண்டு மூன்று தடவை மணியடிக்கப்பட்டது. அமைதியானவுடன் முதலில் கூறியபடி ஊதாவஸ்திரம் தரித்த 10 சிறு பெண்பிள்ளைகள் தளமேடையில் நின்று 'Ten Little Dicky Birds' என்ற இங்கிலீஷ் கதையை அபிநயத்துடன் (Action) செய்தார்கள். அதன் பின்னர் ரோஸ்நிறவஸ்திரம் தரித்து 12 சிறுவர் ஐக்கியகொடி (Union Jack) பிடித்தவர்களாய் சைனிய முறையாய் நடந்துவந்து மண்டபத்தின் மத்தியில் கும்மியடித்தார்கள். இதுவரையிலும் பொருட்களும் விற்பனை செய்யப்பட்டு வந்தன. மண்டபத்திற்குச் சமீபத்திலுள்ள ஒரு அறையில் கனம் ராபர்ட்ஸன் ஐயாவர்களால் ஒளிவிசித்திரபடம் (Magic Lantern) காண்பிக்கப்பட்டது. அதில் கிறிஸ்தியான் என்னும் மோக்ஷபிரயாணியின் பிரயாணத்தையும் யுத்த ஆகாயக்கப்பல் முதலியவைகளையும் குறித்து படத்தில் காட்டினார். இதைப் பார்க்க விரும்பின ஒவ்வொருவரும் அரையணா கொடுத்து உள்ளே சென்றார்கள். இவ்விதமாக விற்பனை செய்யப்பட்ட பொருட்களின் கிரயமும் உள்ளே செல்லும்படியாகக் கொடுக்கப்பட்ட பிரவேசக்கட்டணமும் (Entrance fee) சேர்ந்து சேகரமான தொகை 80 ரூபாய். முந்தின வருஷத்தைவிட இவ்வருஷத்தில் அதிக உற்சாகமாய் இக்கூட்டம் நடந்தேறியது. ஏறக்குறைய 6 மணிக்கு கூட்டம் கலைந்தது. இன்னொரு விஷயம் யாதெனில், கர்த்தருக்குச் சித்தமானால், அடுத்த வருஷம் இவ்விதக் கூட்டம் வைக்கப்படும்பொழுது காப்பி பானம், தேயிலை பானம், ரொட்டி இவைகளும் விற்கப்பட்டு, பணம் சேகரிப்பதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இவ்வருஷத்தைவிட மறு வருஷத்தில் ஜனங்கள் அதிக உற்சாகமடைந்து, அவரவர் தங்கள் பங்கை நிறைவேற்றி, கடமைகளை முடிவுபெறச்செய்து, சபையின் காரியங்களை முன்னுக்குக் கொண்டுவருவார்களென நிச்சயிக்கிறோம். கர்த்தர்தாமே இக்கூட்டத்தை வர்த்திக்கச்செய்வாராக.

## RIDDLES

## விடுகதைகள்

1. இருண்ட காட்டிலிருப்பேன் தயவாகத் தேடுங்கள்.
பெரிய மழையாயிருப்பேனு ஜாடை அறியுங்கள்.
லோகத்திலேயே யிருந்து ஆகாயத்திற்குப் போக
மிக்க தர்மத்தால் அப்புறம் போவேன்.

2. லோகத்தைக் கட்டினவன் வயலில் நின்றுகொண்டு
ரக்ஷகனுமல்ல வரான் போகான்
அடிக்காமல் உடைந்து கோரிக்கையைத் தீர்க்கும்
சகல ஜனங்களுக்கும் சம்மதமாக.

### செப்டெம்பர் மாசத்தில் கொடுத்த விடுகதைகளுக்கு விடைகள்

1. செங்கல்.
2. ஆகாயம்.
3. மக்காச்சோளத் தண்டு.

---

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1917-வரு நவம்பர் மீ

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 வி. | 1 சாமு. | 12. | 13—26 | 11 ஞா. | 1 சாமு. | 17. | 1—16 | 21 பு. | 1 சாமு. | 22. | 1—18 |
| 2 வெ. | ,, | 13. | 1—14 | 12 தி. | ,, | 17. | 17—31 | 22 வி. | ,, | 23. | 1—14 |
| 3 ச. | ,, | 14. | 1—16 | 13 செ. | ,, | 17. | 32—44 | 23 வெ. | ,, | 23. | 15—29 |
| 4 ஞா. | ,, | 14 | 17—35 | 14 பு. | ,, | 17. | 45—58 | 24 ச. | ,, | 26. | 1—12 |
| 5 தி. | ,, | 14 | 36—46 | 15 வி. | ,, | 18. | 1—16 | 25 ஞா. | ,, | 26 | 13—25 |
| 6 செ. | ,, | 15. | 1—11 | 16 வெ. | ,, | 19. | 1—11 | 26 தி. | ,, | 28. | 1—14 |
| 7 பு. | ,, | 15. | 12—23 | 17 ச. | ,, | 19. | 12—24 | 27 செ. | ,, | 28. | 15—25 |
| 8 வி. | ,, | 15. | 24—35 | 18 ஞா. | ,, | 20. | 1—15 | 28 பு. | ,, | 30. | 1—15 |
| 9 வெ. | ,, | 16. | 1—13 | 19 தி. | ,, | 20. | 16—26 | 29 வி. | ,, | 30. | 16—26 |
| 10 ச. | ,, | 16. | 14—25 | 20 செ. | ,, | 20. | 27—42 | 30 வெ. | ,, | 31. | 1—13 |

### டிசெம்பர் மீ

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ச. | மல்கியா, | 1. | 1—14 | 3 தி. | மல்கியா | 3. | 11—18 | 5 பு. | யொரே. | 7. | 1—16 |
| 2 ஞா. | ,, | 3 | 1—10 | 4 செ. | ,, | 4. | 1—6 | 6 வி. | ,, | 7. | 17—24 |

C. L. S. PRESS, MADRAS—1917


# மாதர் போதினி

No. 240 டிசெம்பர் 1917 No. 12


8 DEC 1917



## CHRISTMAS SONG

## இரட்சகரின் பிறப்பு கீதம்

இராகம், பிலகரி. செம்படைத்தாளம்.

பல்லவி

நமக்கொரு பாலகனை நவமாய் உதிக்கச் செய்தார்

அனுபல்லவி

அவர்க்கே கனம் மகிமை அனவரத முண்டாக.— நமக்

VOL. XXXII.

சரணங்கள்

1. கர்த்தத்வம் அவர்தோளில் காண மகிமையான
தீர்க்கர் உரைப்படியே தேவபாலன் தோன்றினார்.— நமக்

2. கன்னி மரியாளுக்கும் கனிவான காட்சிதந்து
விண்ணவர் விட்டதூதர் விளம்பினார் வாழ்த்துதலும்.— நமக்

3. அண்ணலே உன்னிடம் அவதரிக்க அதிஷ்டம்
நன்னயமாய்க் கிடைக்க நண்புபெற்றாய் நங்கையே.— நமக்

4. கணவனை அறியேனே கன்னிகைநான் ஐயா
மணமது ஆகுமுன்னே மன்னனை பெறுவேனோ.— நமக்

5. ஆவியானவர் தாமே அண்ணல் ரூபமெடுத்து
விண்ணிலிருந்து வந்து உன்னில் உருவமாவார்.— நமக்

6. இங்கிதமாய் அவர்க்கு இயேசு என்னும் நாமம்
துங்கன் அவர்க்கு துர்துமியோ டுண்டாக.— நமக்

7. உன்னதர் புத்திரர் அவர் உயர்சிம்மாசனத்தவர்
கன்னிமரி மடியில் கனிவாய் அமைந்துள்ளானார்.— நமக்

8. அச்சணமே பரமஅமரர் அம்பரம் தோன்றி
விச்சித காட்சியோடு விளம்பினார் ஆயருக்கு.— நமக்

9. உன்னத தேவனுக்கு உண்டாக மகிமையும்
மனுஷர்மேல் பிரியமும் மண்ணில் சமாதானமும்.— நமக்

10. தாவீதின் வம்சத்தவர் தளரா ராஜ்ஜியம்செய்வார்
தலைமையாக யாக்கோபின் மகவனை மேதினியில்.— நமக்

*N.B.* ஞானகீர்த்தனையில் ‘ இந்தக் குழந்தையை நீர் ஏற்றுக்கொள்ளும் கர்த்தாவே ’ என்ற பாட்டின் ராகம் பாடலாம்.

D. M. Anantham.

## THE NEEDS OF INDIA—A LECTURE

## இந்தியா இன்னும் எவ்வெவ்விஷயங்களில் தேர்ச்சியடைய வேண்டுமென்பதைப் பற்றி உபந்நியாசம்

(தொடர்ச்சி)

5. கைத்தொழில்.

நம்முடைய தேசம் விவசாயத்தொழிலுக்கேற்றது என்ற விஷயம், நம்மெல்லாருக்கும் தெரியும். இத்தேசத்தின் தொழிலை மூன்று



பிரிவாகப் பிரிக்கலாம். அதாவது: (1) இயந்திரத்தால் செய்பவை;
(2) கையால் செய்பவை, (3) சுரங்கவேலை. மேற்சொன்ன மூன்று
தொழில்களும் தற்காலத்தில் மூன்னுக்கு வந்தபோதிலும், இன்னும்
அதிகமாகத் தேர்ச்சிபெறவேண்டும். வங்காளத்தின் சில இடங்
களில் நிலக்கரியும், சென்னை ராஜதானியின் வடபாகத்திலும் பம்பாய்
ராஜதானியின் சில இடங்களில் பஞ்சும், சேலத்தில் இரும்பும்,
மைசூர் ராஜ்யத்தில் பொன்னும் அகப்படுகின்றன. நம் தேசத்தி
லுள்ளவர்கள் மேற்சொல்லப்பட்டவைகளை அயல்தேசத்துக்கு சொற்ப
விலைக்கு அனுப்பி, பிறகு அங்கிருந்து வரும் சாமான்களை அதிக
விலை கொடுத்து வாங்குகிறார்கள். ஏன் அவர்கள் அநேக தொழிற்
சாலைகளை ஏற்படுத்தி, அவற்றை உருப்படிகளாகச் செய்யக்கூடாது?
மேற் சொல்லப்பட்டவைகளை அயல் தேசத்துக்கு அனுப்புவதால்,
கைத்தொழில் குறைய இடமுண்டாகிறது. மேலும், நம் தேசத்தார்,
பீங்கான் சாமான்கள், கண்ணாடி சாமான்கள், தந்த சாமான்கள்,
நெருப்புப் பெட்டிகள், சாயசரக்குகள், சோப்புகள் முதலியவை இவ்
விடம் கிடையாததால் அவைகளை அயல்தேசத்திலிருந்தே வரவழைக்
கிறார்கள். ஏன் நம் தேசத்திலுள்ளவர்கள் அத்தொழில்களைக் கற்றுக்
கொண்டு நம் தேசத்தில் ஸ்தாபிக்கக்கூடாது? அதற்கு வேண்டிய
பொருட்கள் நம் தேசத்தில் அகப்படாவிட்டாலும், அயல்தேசத்தி
லிருந்து வரவழைத்து, இயந்திரத்தாலும் கையாலும் செய்யப் பிரயா
சப்படவேண்டும். மேலும், இந்தியாவில் செய்யும் தொழில்களை
அறியும்படியாக சில முக்கியமான இடங்களில் கைத்தொழில் கண்
காட்சிசாலை ஏற்படுத்தி, ஜனங்களுக்குள் கைத்தொழிலைப்பற்றி ஒரு
உற்சாகமான எண்ணத்தை உண்டாக்குவார்களேயானால், கைத்
தொழில் இன்னும் அதிகமாகத் தேர்ச்சியடையும்.

6. வியாபாரம்.

முன்காலத்தில் அந்நியதேசத்தாரால் தொந்தரவு ஏற்பட்டபடி
யால் வியாபாரவிஷயத்தைப்பற்றிக் கவனிக்கவில்லை. தற்காலத்
திலோ ஜனங்கள் நன்றாய் வியாபாரம் செய்யமுடியும். வியாபாரம்
செய்ய அநேக ரஸ்தாக்களும், பாலங்களும், இருப்புப்பாதைகளுமிருக்க
வேண்டும். நம் தேசத்தில் சில இடங்களில் ரஸ்தாக்கள் செப்ப
னிடாமலும், பாதையின் இரு ஓரங்களில் நிழலைத்தரத்தக்க மரங்கள்
சரியானபடி இல்லாமலும், பிரயாணிகள் தங்குவதற்கு சத்திரங்களில்
லாமலும், தண்ணீர்வசதி இல்லாமலும் ஜனங்கள் கஷ்டமடைந்து
வருகிறார்கள். இன்னும் சில முக்கியமான இடங்களுக்கெல்லாம்
இருப்புப்பாதைகள் போட முயற்சி எடுத்தால் வியாபார விஷயம்
அனுகூலப்படும்.

மேலும் அயல்தேசத்தார் தங்கள் முதலைக் கொண்டுவந்து, வியாபாரம் செய்து, இந்தியாவின் சொத்தை ஏராளமாக அபகரித்துக் கொண்டு போகிறார்கள். ஏன் நம் தேசத்திலுள்ளவர்கள் தங்கள் முதலைக்கொண்டு சரக்குகளை வாங்கி அந்நியதேசங்களுக்கு அனுப்பக் கூடாது? இப்படிச்செய்தால் வியாபாரம் அதிகமாவதோடு லாபமும் அடைவார்களல்லவா? ஆகையால் இந்தியாவிலுள்ளவர்கள் தங்கள் பணத்தைப் புதைத்துவைக்காமலும், அநியாய வட்டிக்குக் கொடாமலும் வியாபாரத்தில் போட்டால் எவ்வளவோ ஆதாயம் அடையலாம். மேலும், நம் தேசத்தில் அகப்படாத சரக்குகளை மற்ற தேசங்களிலிருந்து வரவழைத்தும், இவ்விடம் உருப்படிகளாகச் செய்த சாமான்களை மற்ற தேசங்களுக்கு ஏற்றுமதிசெய்தும் வந்தால் ஜனங்கள் லாபமடைந்து, முன்னிலும் அதிகமாக ஊக்கமடைவார்கள்.

7. இந்துதேச கூலியாட்கள் வெளிதேசங்களுக்குப் போகுதல்.

நம் தேசத்தில் வருஷந்தோறும், அநேக ஆண்களும் பெண்களும், ஸிலோன், நெட்டால், பீனங், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்குப் போகிறார்கள். இதினால் அதிக கெடுதி உண்டாகிறது. எப்படியென்றால், அநேகர், தாய், தகப்பன், பந்துக்கள் முதலியவர்களுடைய உத்தரவில்லாமல், அநேக பொய்யான வார்த்தைகளால் வஞ்சிக்கப்பட்டு, அனுப்பப்படுகிறார்கள். இதினால் பெற்றோர்களுக்கு எவ்வளவோ விசனம் உண்டாகிறது. மேலும், மேற்சொல்லப்பட்ட இடங்களுக்குப் போகிறவர்கள், அடிமைகள்போல் நடத்தப்பட்டு அதிக வேலைசெய்து கஷ்டப்படுகிறார்கள். அவ்விடங்களில் நம் இந்து தேச கூலியாட்களால் வேலை அதிகமாகி லாபம் அதிகமடைகிறார்கள். நம் தேசத்திலோவென்றால் கூலியாட்களின் வேலை சொற்பமாகி, கைத்தொழிலும் குறைவாக ஏற்படுகிறது. ஆகையால் நம் தேசத்திலிருக்கும் கூலி ஆட்களை வெளிதேசங்களுக்கு அனுப்பக்கூடாது என்று ஒரு சட்டம் கவர்ண்மெண்டில் இருக்குமேயானால் அதிகப் பிரயோஜனம் உண்டாகும். கூலியாட்கள் அந்நியநாடுகளில் அடிமைகள் மாதிரி கஷ்டப்படுவதும் நீங்கிவிடும்.

8. லாகிரிவஸ்துக்களை உபயோகிப்பது.

இத்தேசத்தில் லாகிரிவஸ்துக்களை தனவந்தர்களும் ஏழைகளும், பேதமின்றி, அபரிமிதமாக உபயோகித்து வருகிறார்கள். எப்படியென்றால், சிலர் பீடி, சிகரெட், சுருட்டு முதலியவைகளைக் குடித்துக்கொண்டும், சிலர் கஞ்சா, அபின் முதலியவைகளைத் தின்றுகொண்டும், சிலர் கள், சாராயம் முதலியவைகளைப் பருகிக்கொண்டும் வருகிறார்கள். 'கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே' என்னும்



பழமொழி குடிகாரர்களுக்குத்தான் தகும். எப்படியென்றால், லாகிரிவஸ்துக்களால் அநேக தீங்குகள் உண்டாகுமென்பதை சிலர் அறியாதிருக்கிறார்கள்; சிலர் அத்தீங்குகளை அறிந்திருந்தும், மேலும் மேலும் பருகிக்கொண்டே வருகிறார்கள். இவர்களின் குடும்பங்களைப் பார்த்தால் எவ்வளவோ பரிதாபமாயிருக்கிறது. சிலர், தங்கள் வீடு, காணி, பூமி இவைகளெல்லாம் இழந்து, வஸ்திரமில்லாமலும், அன்னமில்லாமலும் அலைகிறதைப் பார்த்தால், எவ்வளவு பரிதபிக்கவேண்யிருக்கிறது! சிலர் மரணமும் அடைகிறார்கள். ஆகையால், நம் தேசத்தில் லாகிரிவஸ்துக்களை விற்கவொட்டாமல் தடுக்கவேண்டும். கவர்ண்மெண்டாருக்கு இதில் லாபம் உண்டாகிறதினால் விற்கவொட்டாமல் தடுக்கிறதில்லை. ஆகையால் நம் இந்தியா தேசத்திலிருக்கும் ஒவ்வொரு கிராமத்தில் வசிக்கும் அநேக பெரியோர்கள் சேர்ந்து, 'லாகிரிவஸ்துக்களால் அநேக கெடுதியுண்டு. எங்கள் கிராமங்களில் விற்கக்கூடாது' என்று கவர்ண்மெண்டிற்கு ஒரு மனு செய்து கொண்டால் நிவிர்த்தியுண்டாகும். இதைப்பற்றி இந்தியா தேசத்திலிருக்கும் ஒவ்வொருவரும் முயற்சி எடுக்கவேண்டும். மேலும் நம் தேசத்திலிருக்கும் பள்ளிக்கூடங்களில் மதுபானத்தால் உண்டாகும் கெடுதிகளைப்பற்றி உரைக்கும் நூல்களை வாங்கி வாசிக்கும்படி செய்தால், அநேக ஜனங்கள் சீர் அடைந்து, குடிவகைகளை விட்டுவிடுவார்கள். மேலும், மதுபானத்தின் கெடுதியைப்பற்றி அறிவையும் புகட்டினால் மேற்சொல்லப்பட்ட விஷயம் எடுபட்டுப்போம்.

9. டம்பமான விஷயங்களில் பணம் செலவிட்டு ஆடம்பரம் செய்தல்.

நம் தேசத்திலுள்ள அநேகர் அநாவசியமான காரியங்களில், அதாவது கலியாண விஷயங்களிலும், நகை விஷயங்களிலும், உடுப்பு விஷயங்களிலும் மட்டுக்குமிஞ்சி செலவுசெய்கிறார்கள். உதாரணமாக, நம் தேசத்தில் ஒரு பணக்காரன் வீட்டில் ஒரு கலியாணம் நடந்தால் 1,000 ரூபாய் முதல் 2,000 ரூபாய் வரையில் செலவிட்டு, டம்பமாக நடத்துகிறார்கள். பணம் இல்லாதவர்களோ கடன் வாங்கியாவது டம்பமாகக் காரியங்களை நடத்தப் பிரயாசப்படுகிறார்கள். இப்படியே சாவு நடக்கும் காலங்களில்கூட அதற்கு செய்யவேண்டிய சடங்குகளுக்காக அதிகம் செலவிடுகிறார்கள். சிலர் தங்களுக்குத் தகாததும் உபயோகப்படாததுமான சாமான்களில் தங்கள் பணத்தைச் செலவுசெய்து அவைகளை வாங்கி வீட்டில் டம்பமாக வைத்துக்கொள்ளுகிறார்கள். ஆகையால் மேற்சொல்லப்பட்ட குறைகள் நீக்கப்படுமேயானால் நம் தேசத்திற்கு செல்வம் உற்பத்தியாகி அதிக நன்மையுமுண்டாகும். டம்பமான விஷயங்களில் செலவுசெய்வதை

விட தர்மவிஷயமாய் ஜனங்களின் நன்மையின்பொருட்டு செலவிட்டால் எவ்வளவோ நன்மையுண்டாகும்.

10. கடன்படல்.

மேற்சொன்ன டம்பமான விஷயங்களில் பணத்தைச் செலவிட்டு, அநேகர் கடன்படவேண்டியவர்களாய் இருக்கிறார்கள். இத்தேசத்தில் அநியாயவட்டிக்குக் கடன்வாங்கும் ஒரு கெட்டவழக்கம் உண்டு. கடன் கொடுக்கிறவர்களும் கடன் வாங்குகிறவர்களும் இவ்விஷயத்தில் பயப்படுவதில்லை. அநியாயவட்டிக்கு வாங்குவதால், தங்கள் வீடுவாசல், காணி, சொத்து முதலியவைகளை வட்டியினால் இழக்கவேண்டியதாயிருக்கிறது. கடைசி முடிவில், வீடுவாசல், உடுப்பு, அன்னம் இல்லாமல் வீதியில் அநாதையாக அலையும் கஷ்டம் நேரிடுகிறது. இதை நிவிர்த்திசெய்ய ஜனங்கள் சிக்கனமாகப் பிழைக்க கற்றிருக்கவேண்டும். ஆகையால் இந்தியாவிலுள்ள அநேக குடும்பஸ்திரீகள், எல்லாக் காரியங்களிலும் வரவுக்குத்தக்க செலவுசெய்ய முயற்சியெடுப்பார்களேயானால், கடன்படுதல் என்னும் கெட்டவழக்கம் இத்தேசத்தைவிட்டு அகன்றுபோகும்.

11. முன்யோசனை.

நம் தேசத்திலிருப்பவர்களில் சிலர் பணக்காரராயிருப்பதற்கு முன்யோசனையும், சிலர் தரித்திரராயிருப்பதற்கு முன்யோசனையின்மையும் காரணமாகும். மற்ற தேசங்களைப்போல் முன்யோசனை இருக்குமேயானால், மேற்சொல்லப்பட்ட கடன்வாங்கும் வழக்கம் இருக்காதல்லவா? ஒவ்வொரு காரியத்திலும் நமக்கு முன்யோசனை அவசியம்வேண்டும். எப்படியென்றால், நமக்கு வருங்கால பாதுகாப்புக்கென்று ஏற்படுத்தியிருக்கும் சேவிங்ஸ் பாங்கியில், தங்களால் மீதப்படும் பொருட்களை சேர்த்துவைக்கவேண்டும். இன்னும் நம் தேசத்தில் சிலர் சேவிங்ஸ் பாங்கியில் போடாமல் நகைகளிலும் அநியாயவட்டி கொடுக்கும் விஷயங்களிலும் தங்கள் பணத்தைச் செலவிடுகிறார்கள். ஆகையால் நம் தேசத்திலிருப்பவர்கள் முன்யோசனையுள்ளவர்களாய், வருங்காலத்துக்காக பாங்கியில் கொஞ்சம் பணம்போட முயற்சியெடுக்கவேண்டும்.

12. லஞ்சம் வாங்குதல்.

நமது தேசத்தில் எக்காரியத்திலும் லஞ்சம் வாங்கும் கெட்டவழக்கம் இன்னும் வழங்கிவருகின்றது. அப்படியே போலீஸ்காரன் முதற்கொண்டு சில உத்தியோகஸ்தர்கள் வரையிலும் இவ்வழக்கமிருக்கிறது. உதாரணமாக, போலீஸ்காரருக்கு களவு, கொலை முதலிய கேசுகளைக் கண்டுபிடித்து, மேலதிகாரிக்குத் தெரியப்படுத்தவேண்டுமென்கிற ஒரு கட்டளை விதிக்கப்பட்டிருக்கிறது.



சிலர் இதைக் கவனியாமல், கொலைசெய்தவன், அல்லது திருடினவன் தன் கைக்கு அகப்படும்போது அவர்களிடத்தில் கொஞ்சம் பணத்தை வாங்கிக்கொண்டு, மேலதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தாமல் விட்டுவிடுகிறார்கள். இவ்வழக்கத்தால் குற்றவாளிகளின் மனம் துணிவுகொண்டு, அவர்கள் மேன்மேலும் அநேகவிதமான கொரோச் செய்கைகளைச் செய்கிறார்கள். பெரிய உத்தியோகஸ்தர்களிலும் சிலர் இப்படியே செய்துகொண்டுவருகிறார்கள். இப்படிச்செய்வதால் ஜனங்கள் எவ்வளவோ கஷ்டப்படுகிறார்கள். எப்படியென்றால், குற்றவாளியைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதற்குப் பதிலாக லஞ்சம் வாங்கிக்கொண்டு விட்டுவிட்டால், இதைப் பார்த்து இன்னும் மற்றவர்களும் இப்பேர்ப்பட்ட காரியங்களைச் செய்யத் துணிவதால் ஜனங்களுக்கு அதிகக் கஷ்டம் ஏற்படுமல்லவா? ஆகையால் நம் தேசத்தில் லஞ்சம் வாங்கும் வழக்கத்தை அடியோடே அகற்றப் பிரயாசப்பட்டால், சண்டை, கொலை, களவு, பொய்ச்சாட்சி சொல்லல், பிறர் சொத்தை அபகரித்தல் முதலியவைகள் குறைவுபட்டு நம்தேசம் தேர்ச்சிபெறும் என்பதற்கு ஐயமில்லை.

(இன்னும் வரும்.)



## A MISERLY FISHERMAN

## ஓர் உலோபியான செம்படவன்

பூர்வகாலத்தில் ஒரு ஊரில் சில செம்படவர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் உலோபி. ஒருநாள் அவன் தன் தூண்டிலை எடுத்துக்கொண்டு தன் மகனோடு மீன்பிடிக்க ஒரு குளத்திற்குப் போனான்.

அவ்விடஞ் சேர்ந்து தூண்டிலை தண்ணீரில் போட்டான். அந்த முள் தண்ணீரின் அடியிலிருந்த ஒரு பெரிய மரத்துண்டில் மாட்டிக் கொண்டது. அவன் தன் கயிற்றை இழுக்கமுடியாமற்போனதால், 'ஓ! ஓ! தூண்டிலில் ஒரு பெரிய மீன் அகப்பட்டுக்கொண்டது, அதினால்தான் என்னால் இழுக்கமுடியவில்லை. இதை நான் வீட்டிற்குக் கொண்டுபோனால் அயல்வீட்டார் இதைப்பார்த்து ஆசைப்படுவார்கள். ஆனால் அவர்களை நாம் விரோதஞ்செய்துகொண்டால் நாமே அம்மீன் முழுவதையும் சாப்பிடலாம்' என்று பெருமையோடு தன் மகனைப் பார்த்து, 'அப்பா! நீ வீட்டிற்குப் போய் இங்கு சம்பவித்ததை உன் தாயிடம் சொல்லி அயல்வீட்டாரோடு சண்டைபோடும்படி சொல்லு' என்றான். அந்தப் பையன் சொல்லப் போனபோது, அந்தச் செம்படவன் தன் சட்டையைக் கழற்றி கரையின்மேல் வைத்து இடுப்பிலிருந்த வேஷ்டியை நன்றாய் இழுத்துக் கட்டிக் கொண்டு அந்தப் பெரியமீனைக் கொண்டுவரத் தண்ணீருக்குள் மூழ்கினான். அப்பெரிய மீனைப் பிடிக்க வெகு அவசரமாய்த் தண்ணீருக்குள் போனபோது, அவ்விடமிருந்த ஒரு பெரிய கல் அவனுடைய கண்ணில்பட்டு கண் காயமாகிவிட்டது. அவன் அந்த நோவையும் கவனியாமல் மீனைத் தேடிப்பிடிக்க அவசரமாய் தூண்டிலண்டை செல்லவும் மீனுக்குப் பதிலாக ஒரு பெரிய மரத்துண்டு தூண்டிலில் மாட்டிக்கொண்டிருப்பதைப் பார்த்து மிகவும் துக்கித்து, திரும்பிக் கரை சேர்ந்து அங்குபார்க்கையில் தான் வைத்துப்போன தன் சட்டையையும் காணோம். அதை அவன் தண்ணீருக்குள் மூழ்கியிருந்தபோது அதை யாரோ திருடிக்கொண்டு போய்விட்டார்கள். ஐயோ பாவம்! ஏழை உலோபி தனக்கிருந்த ஒரு சட்டையையும் இழந்தவனாய் மிக விசனத்தோடு தன் வீட்டுக்குப் போனான். அவனுக்கு ஒரு கண் காயப்பட்டதால் அவன் எதையும் சரியாய்ப் பார்க்கக்கூடவில்லை. சற்று படுத்துறங்கலாமென்று அவன் வீட்டினுள்ளே போகையில் அவன் பெண்ஜாதி இவன் சொன்னபடியே அயல்வீட்டாரோடு சண்டைப்பிடித்து அவர்களைப் பலவிதமாய் தூஷிக்க ஆரம்பித்தாள். அயல்வீட்டார் அவள் தூஷணத்தைக் கேட்கச் சகியாமல் அவளைக் கோபிக்கத் தொடங்கினார்கள். கொஞ்சநேரத்திற்குள் பெரிய சண்டை உண்டாகிவிட்டது. ஊராரெல்லாம் வந்து கூடிவிட்டார்கள். அவர்களையும் அவள் திட்டினாள். அவளை மணியக்காரனிடம் கூட்டிக்கொண்டுபோக அவர்கள் அயல் வீட்டாரை ஏவிவிட்டார்கள். அப்படியே இவர்களும் அவளை மணியக்காரனிடம் கூட்டிக்கொண்டு போய் பிராதுசெய்தார்கள். அவர் அதை விசாரித்து அவள்மேல் குற்றஞ்சாட்டி அபராதம் விதித்தார்.



இப்படியாக அந்த ஏழைச் செம்படவன் தன் வீட்டுக்குப் பெரிய மீனைக் கொண்டுவந்து சாப்பிடலாம் என்று எண்ணிய எண்ணத்திற்கு மாறாக, தன் சட்டையையும் போக்கடித்து அதிக வருத்தத்தோடு வீட்டுக்கு வருகையில் அவமானத்தை யடைந்து மணியக்காரனுக்கு அபராதமும் கொடுக்க நேரிட்டது. பார்த்தீர்களா! புத்தியில்லாதவர்களுக்கு வரும் லாபத்தை! பேராசையினால் பெரு நஷ்டத்தையும் கஷ்டத்தையுங் கண்டான்.

'பேராசை தரித்திரம், தீராத உபத்திரவம்' என்பதை இதனால் கண்டறியலாம்.

*[Vivekavati.]*



## TYPES OF INDIAN WOMANHOOD

## இந்திய மாதர் லக்ஷணம்

### தற்கால கவீச்சுரி—6.

சென்ற சில மாதங்களாக நாம் எடுத்துரைத்த மாதர்களின் விருத்தாந்தத்தில் ஒரு காரியம் பொதுவாயிருக்கிறது. அதாவது இந்தியா அவர்கள் தாய்நாடு. அவர்கள் பற்பல ஜாதி, மதம், காலங்களைச்

சேர்ந்தவர்கள். தமயந்தியும் மைத்திரியையும் புராதன காலங்களி
லிருந்தவர்கள்; தாராபாயும் மீராபாயும் ரஜபுத்திர வம்சத்தைச் சேர்ந்
தவர்கள். ராஜியாட்டும் சாண்டிபீபியும் பதினேழாம் நூற்றாண்டில்
வசித்த மகமதியர். அஹாலியாபாய் பதினெட்டாம் நூற்றாண்டி
லிருந்த மூகலாய ஸ்திரீ. லக்ஷிமிபாய் பத்தொன்பதாம் நூற்றாண்டி
லிருந்த பிராமணகுலத்தாள். இவர்களுடைய விருத்தாந்தங்களோடு
சமீபகாலத்திலிருந்த ஒரு இந்திய கிறிஸ்தவ மங்கையின் வரலாற்றை
யும் சொல்லி முடிப்போம்.

சாதாரணமாய்ப் பாவலர்க்கு அயதேசத்திலேயே யன்றி அந்நிய
நாடுகளில் கீர்த்தி கிடைப்பதில்லை. அப்படியிருந்தும் சென்ற
அரைநூற்றாண்டுக்குள் இரண்டு இந்திய ஸ்திரீகள் ஆங்கில கவியில்
பிரக்கியாதி பெற்றிருக்கிறார்கள். இந்நாட்டிலும் இதரதேசங்களி
லும் சரோஜனிநாயுடு அம்மாளின் பெயர் பிரஸ்தாபமாயிருக்கிறது.
'காலபட்சி' என்னும் அவர்களது இரண்டாவது செய்யுள் நூல்
ஆழ்ந்த கருத்திலும் இசையிலுஞ் சிறந்தது. முதிர்ந்த கருத்துள்ள
பாக்கள் செய்வதற்கு முன்னமே இருபத்தோராம் வயதில் அகால
மரணமடைந்த டோரு டட் மங்கையின் பெயர் அவ்வளவு பிரஸ்தாப
மானதல்ல. டோரு டட் கீர்த்திப்பிரதாபமுள்ள குடும்பத்தைச் சேர்ந்
தவள். பாபுகோவிந்து சந்திரடட்களாகிய அவளது தகப்பனும் சிற்
றப்பனும் இருவரும் கவிகள். ராஜகாரியத்திலும் இலக்கியத்திலும்
பேர்போன ரோமேஷ் சந்திரடட் அவளின் சிற்றப்பன் புதல்வன்.
அவள் 1856-ளு மார்ச்சு மீ 4உ கல்கத்தாவில் பிறந்தவள்; பெற்
றோருக்கு அகாலமரணமடைந்த மூன்று பிள்ளைகளுள் கடைகுட்டி.
அவள் தமயன் பதினாலாம் பிராயத்தில் மரணமடைந்தான்; தமக்கை
இருபதாம் வயதில் தேகவியோகமானாள். நாகரீகமும் தெளிவுமுள்ள
வீட்டில் வளர்ந்துவந்தாள்.

'சீதா' என்கிற கவியில் தன் இளம்பிராயத்தின் வரலாறுகளை
விநோதமாய்க் கூறுகிறாள். இரண்டு சகோதரிகளும் அவர்கள் தமை
யன் ஆசானால் ஆங்கில இலக்கியத்தின்மேல் கருத்து செலுத்தத்
தொடங்கினார்கள். ஆய்ஜா இறந்துபோனபிறகு தன் குடும்பத்
தின் நம்பிக்கையாய் விடப்பட்டிருந்த அவ்விரண்டு பெண்களுக்கும்
கல்வி புகட்டுவதில் பாபுகோவிந்து தன் முழுகவனத்தையுஞ் செலுத்
தினான். டோருக்கு பதின்மூன்று பிராயமாவதற்கு முன்னமே தகப்
பன் அப்பெண்களை ஐரோப்பாவுக்குக் கூட்டிக்கொண்டுபோனார்.
அவர்கள் சில வருஷங்களாக பிரான்ஸ், இத்தாலியா, இங்கிலாந்து முத
லிய தேயங்களின் பள்ளிக்கூடங்களில் வாசித்து பிறகு கேம்பிரிட்ஜ்
ர்வகலாசாலையில் தேர்ச்சியடைய முயன்றார்கள். அவர்கள் அங்கே



இருக்கும்போது அக்காலத்திய உடுபாவனைகளை அணிந்துகொண்
டார்கள். வெளிப்படையாக அந்நியநாட்டு உடுபாவனைகளை அநு
சரித்தாலும் அவர்கள் இருதயமோ ஜனனதேசத்திலிருந்தது; டோரு
வின் எண்ணங்கள் அடிக்கடி அங்கே திரும்பினது. சிறுமியாயிருந்து
விருட்சங்களடியில் விளையாடினபோது காற்று மரங்களின்மேல்
மோதி குமுறுகிற சப்தத்தைச் சிறப்பித்துக் கூறுகிறார்கள்.

1873-ம் வருஷம் வேனிற்காலத்தில் இக்குடும்பம் திரும்ப் கல்கத்
தாவுக்குச் சமீபத்திலுள்ள தங்கள் வீட்டிற்குப் போனார்கள். டோரு
வுக்கு அவள் பிறந்து வளர்ந்த வீடு எவ்வளவு அருமையாயிருந்த
தென்று அவள் பாக்களினால் அறியலாம்.

பிரஞ்சுபாஷையில் எழுதின ஒரு கதை அவள் தேகவியோகத்
துக்குப்பின் தான் பிரசுரமானது. இப்புத்தகமும் தியோபைல் கேலிட்
டீர் செய்யுளின் மொழிபெயர்ப்பும் 'பிரான' என்கிற அவளது
கவியும் சிலமாதங்களுக்கு மாத்திரம் தங்கின தேசத்தின் இலக்கியங்
களை எவ்வளவாய் நன்குமதித்தாள் என்பதைக் காட்டும்.

'பூர்வீக இந்துஸ்தான் பாட்டுகளும் கற்பிதக் கதைகளும்' என்
னும் நூலினால் தன் தேசத்து எண்ணங்களை மேற்கு தேசத்தவர்
களுக்கு விளக்கிக் காண்பிக்கவேண்டுமென்பதே அவள் நோக்கம்.
மேற்குதேசத்து சிந்தனைகளில் அவள் மூழ்கியிருந்தபோதிலும் தன்
நாட்டாரை எண்ணிறந்த வருடம் மகிழ்வித்த கதைகளை மறந்து
போகவில்லை. அவள் உண்மையும் ஊக்கமுமுள்ள கிறிஸ்தவளா
யிருந்தும் இந்தியாவின் மதநூற்களில் குணமானவைகளை மிக்க நன்
குணர்ந்தவள். மேலும் அக்கதைகளைத் தான் நேசித்த தாயின் பாதத்
தடியில் உட்கார்ந்து கேட்டிருந்ததால் அவைகள் அவளுக்கு மிக்க
அருமையானவை.

'சிந்து' என்கிற பாடலில் உத்தமபுத்திரன் எத்தன்மையானவன்
என்பதை வருணிக்கிறாள்; அவன் மரிக்கும்போது கபோதிகளும்
வயோதிபருமான தாய் தந்தையர்மேல், அவன் சிந்தையெல்லாஞ்
செல்லுகிறது. அவளுடைய எண்ணத்தின்படி பட்டு உத்தமசீஷன்.
அவன் கீழ்வருணத்தானாயிருந்தபோதிலும் அர்ச்சுனனையும் வெல்
லத்தக்க வில்வித்தை தேர்ச்சியுடையவனாயிருந்தபோதிலும் தன் குரு
வுக்கு முற்றும் கீழ்ப்படிவதாய் வாக்குக்கொடுத்திருந்தமையால் வில்
வித்தை கற்பித்த துரோணர் கட்டளையிடும்போது தன் பெருவிரலைத்
தறித்துப்போட சம்மதிக்கிறான். இலக்குமணனை உத்தம சகோதர
னாகவும் துரோணனையும் பிரகலாதனையும் இளம்பிராய பக்தர்களாக
வும் வருணிக்கிறாள்.

டோரு தன் தாய் பாஷையில் தன் கருத்துக்களை யெல்லாம்

விவரித்து இருப்பாளானால் வெகு உசிதமாயிருக்கும். அந்நியபாஷையில் தன் மனதின் சிந்தனைகளையெல்லாம் சோபிதமாய்க் காண்பிக்க முடியாதென்று உணர்ந்ததாகத் தோன்றுகிறது. அவள் ஆயுளின் கடைசி இரண்டொரு வருடங்களில் சமஸ்கிருத இலக்கியங்களில் தன் மனதைச் செலுத்தி இந்தியாவின் பூர்வீக சரித்திரங்களை வடமொழியிலேயே செய்யுளாகச் செய்யவேண்டுமென்று இருந்தாள். மரணவாசனை வீசுங்காலத்தில் இவ்வரிய காரியத்தை எடுத்துக் கொண்டதைப் பார்க்கும்போது அவளை ஒரு வீரியென்று சொல்ல வேண்டும். எழுதுவதற்குங்கூட முடியாதபோது தான் சொல்ல அவளது தகப்பன் எழுதிக்கொண்டே போவார். இறுதிகாலம் வந்தபோது உடம்புநோவு என்னை அலறும்படிச் செய்கிறதென்று மிகப் பரிதாபத்தோடு சொல்லுவாள். கடைசியாக 1877-ஞு ஆகஸ்டு மீ 30உ அவள் ஜீவிய ஓட்டம் முடிந்தது. மூலவியாதிதான் அவள் மரணத்துக்குக் காரணமாயிருந்தது; ஒருவார்த்தையும் சொல்லமுடியாமற் போகிறவரையில் கடவுள் அவளுக்கு அளித்திருந்த வரத்தைப் பூரணமாய்க் கையாடினாள்.

இந்நாட்டு மனோபாவனையை மிஞ்சிப் பாடல்களிலும் அதின் கருத்துக்களை வெளியிட்டுவந்து டோரு டட் கிறிஸ்தவ கண்களால் இவ்வுலகத்தைப் பார்த்தாள். அவளுக்கு இவ்வுலகம் விட்டுவிட வேண்டிய ஒரு மாயையல்ல, ஆனால் அனுபவிக்கவேண்டிய ஒரு உண்மைப்பொருள். விசித்திரமான இயற்கை உலகத்தை எவ்வளவு முன்னறிவோடு வியந்துகொண்டாடினாளென்று அவள் கவிகளினால் அறியலாம். இயற்கையிலுள்ள விநோதங்களையும் விசேஷமாய் சூரியாஸ்தமன அலங்காரத்தையும் நமது நாட்டுப்பெண்கள் கவனிக்காதது போல் தோன்றுகிறது. ஆனால் டோரு டட் சூரியாஸ்தமன விநோத விந்தையைக் கண்ணாரக்கண்டு களித்து அதன் விசேஷத்தைப் பாக்களாகவும் செய்திருக்கிறாள். இந்துஜனங்களெல்லாரையும்போலவே நிலவொளியை நேசித்து பாடல்களில் வர்ணித்திருக்கிறாள்.

நாமெல்லாரும் கவிச்சுரிகளாயிருக்கமுடியாதெனினும் கடவுளின் அற்புத உலகத்தைப் பாவலர் காணும்வண்ணம் நாமும் காண்பது நம்முடைய ஜீவியத்திற்கு அலங்காரமாகும்.

மேற்கு கிழக்கு என்னப்பட்ட இரண்டு திசைகளிலுமுள்ள நாடுகளின் ஞான உணவுகளைப் பெற்றுக்கொண்டவளாகையால் ஒரு திசையின் காரியங்களை இன்னொரு திசையிலுள்ளவர்களுக்கு விளக்கிக்காட்டுவது தன் பொறுப்பு என்று உணர்ந்தாள். பிறப்பினாலும் வளர்ப்பினாலும் வித்தியாசப்பட்டிருக்கும் மனுக்குலங்களை அனுதாபப் பந்தங்களினால் கட்டி இணைப்பது ஒரு பெருந்தன்மையான ஊழியம்.



தனக்கிருந்த தேசாபிமானத்தை அந்நியதேசத்துக் காரியங்களைக் கண்டனம் செய்வதினால் காட்டாமல் தன் தேசத்து ஆசாபாசங்களைப் புறதேசத்தார் கிரகிக்கக்கூடிய ரூபமாகவும் பாதேசங்களில் தனக்கு நலமாகத் தோன்றினவைகளை நம் நாட்டாருக்கு ஏற்றமாதிரியாகவும் எடுத்துக்காட்டினாள். இப்படிப்பினை அநேகருக்கு நன்மையாயிருக்கும். இந்திய சுதேச பாஷையைக் கற்ற ஒரு ஆங்கிலேய ஸ்திரீ இந்திய வீடுகளைப் போய் சந்திக்க சமயம் கிடைத்திருப்பதனால் அதை அறியாத தன் ஜனங்களுக்குச் சொல்லி அவர்கள் அனுதாபத்தை மூட்டிவிடலாம் அப்படியே தனக்குத் தெரிந்திருக்கிற கிறிஸ்து மார்க்கச் சாராம்சங்களை அதை அறியாதவர்களுக்கு எடுத்துக் காண்பிக்கலாம். அப்படியே கல்விகற்ற இந்தியமாதரும் விசேஷமாய்க் கிறிஸ்தவர்கள் புறதேசத்தாருக்கு தங்கள் பிதிரார்ச்சித சத்தியங்களை விவரித்துக் காட்டி தங்கள் தேசாசாரங்களில் பக்தியுள்ளவர்களாய் இருந்தபோதிலும் கிறிஸ்துமார்க்கம் தங்கள் நாட்டுச் சுதந்தரமாகிய சத்தியங்களைத் துலக்கி பலனுள்ளதாக்குகிறதென்று தங்கள் ஜீவியத்தால் காண்பிக்கலாம்.

சங்கை வி. எப். ஆன்றூஸ், 'டோரு டட் தன் ஜீவியத்தினாலும் ஊழியத்தினாலும் ஆட்கொள்ளும் கிறிஸ்துவின் ஆவியினால் மேற்குங் கிழக்கும் சந்திக்கும் வழியைக் காட்டினாள்' என்று சொன்னபடி நமது ஸ்திரீகள் யாவரும் செய்வார்களாக.

## A WORD TO WOMEN

## மாதர்க்கோர் வார்த்தை

சூரியவெளிச்சம் மனுஷருக்கும், மற்ற ஜீவஜெந்துக்களுக்கும், மரஞ்செடிகளுக்கும் அத்தியந்த அவசியம். சூரிய வெளிச்சமில்லையானால் நாம் பிழைத்திருக்க முடியாது; ஜீவஜெந்துக்களும் மாண்டு போம்; மரஞ்செடிகளும் பட்டுப்போம். இருட்டில் வளருகிற செடிகள் போதுமான வெளிச்சமின்றி வெளுத்துப் பலமற்றுப்போகிறதைக் கண்டிருக்கிறோம். எப்போதும் வீட்டுக்குள்ளேயே இருக்கிறவர்களும் வெளிறி, சரீரபலமும் மனோபலமுங் குன்றி வியாதிக்குளாகிறார்கள். மலைப்பள்ளத்தாக்குகளில் வசித்துச் சூரியனை ஒரு போதுங் கண்டிராதவர்களில் அநேகர் புத்திசித்தமற்ற பேதைகளும் நோயாளிகளுமாய் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களை மலைமேல் கட்டியிருந்த ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் சூரியவெளிச்சத்தில் திரியவிட்டபோது, அவர்கள் வியாதி நீங்கி, படிப்படியாய்ச் சரீர

பலமும் மனோபலமு முடையவர்களாவார்கள். வெளிச்சம் நம்மை உற்சாகமுள்ளவர்களாயும் சந்தோஷமுள்ளவர்களாயுமாக்குகிறது. நாம் வெளிச்சத்தை நமது வீட்டுக்குள் விடாவிட்டால் டாக்டரை உள்ளே விடவேண்டியதிருக்கும். ஆனால் வெளிச்சம் நமக்குச் செய்யக்கூடியதை டாக்டர் நமக்குச் செய்யமுடியாது. ஆதலால் நமது வீட்டில் போதுமான ஜன்னல்களுங் கதவுகளும் இருப்பதோடு, வெளிச்சந் தாராளமாய்ப் பிரவேசிக்கத்தக்கதாய் அவைகள் திறக்கப்பட்டவைகளாயும் இருக்கவேண்டும். வெளிச்சம் அவசியம் என்றதால் வெயிலில் திரியவேண்டும் என்பது கருத்தல்ல. நமது நாட்டில் மத்தியான வெயில் அதிக உஷ்ணமாயிருப்பதால் அப்போது வெளிப்படலாகாது. மாதரே, மேற்சொல்லியவைகளிலிருந்து நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டிய சாதனைவிதிகளாவன :—

1. வீட்டுக்குள் சூரியவெளிச்சந் தாராளமாய் வரப்பாருங்கள்.

2. வீட்டுக்குள்ளேயே எப்போதும் இராமல் வெளியே வெளிச்சத்தில் உலாவிவாருங்கள்.

3. வெயிலில்போக நேரிட்டால் விசேஷமாய்த் தலையையும் பிடரியையும் குடை முதலியவைகளால் காத்துக்கொள்ளுங்கள்.

உபயோகிக்கப்படாத கருவிகள் துருப்பிடித்துக் கெட்டுப்போவதுபோல் நமது சரீரத்திலுள்ள அவயவங்களும் சரியாய் உபயோகிக்கப்படாதிருந்தால் சிறத்துப் பலயீனப்பட்டுச் சீர்கேடடையும். ஆகையால் அவைகளுக்கு அப்பியாசம் தேவை. சரீர அப்பியாசஞ் செய்வதால் நமது நுரையீரல்கள் நன்றாய் விரிந்து, அதிக ஆகாயத்தை உட்கொண்டு, அதிகக் கரியமலவாயுவை வெளிப்படுத்தி, இரத்தத்தைச் சுத்திகரிக்கும். அப்படியே இருதயத்தின் தொழிலும், இரத்த நாளங்களின் தொழிலும் அதிகரிக்க, இரத்தம் விரைவாய்ச்சென்று சரீரத்தை வளர்க்கும். தோலின் வேலையும் அதிகரிக்க, வேர்வை சாதாரணமாய் உண்டாவதிலும் இரண்டு மூன்று மடங்கு அதிகம் வெளிப்படுவதினால் சரீரத்துக்கு ஆரோக்கியமுண்டாகும். தசைகளும் பருத்துக் கடினமாகிப் பலமுள்ளவைகளாகும். சரீர அப்பியாசத்தினாலே தான் மூளைக்கும் போதுமான ஆகாரஞ் சென்று மனோதத்துவங்கள் பலப்படுகின்றன. தேக அப்பியாசம் பசியுண்டாகவும் அதிக போஜனம் உட்செல்லவுஞ்செய்து, சாப்பிட்ட போஜனம் ஜீரணமாவதற்கு உதவியும் செய்கிறது.

ஆதலால் தேக அப்பியாசம் சிறுபிள்ளைகளுக்கும், வாலிபருக்கும், விருத்தாப்பியருக்கும் அதிக அவசியம். சிறுபெண்கள் காலையிலுஞ்



சாயங்காலத்திலும் ஓடி, ஆடி, குதித்துத் திரியவேண்டும். கயிறு தாண்டல் (Skipping) மிக நல்ல விளையாட்டு; அது அவர்கள் சரீரத்திலுள்ள எல்லாத் தசைகளுக்கும் ஏற்ற அப்பியாசம். வாலிபப் பெண்களுக்கு அரிசிகுத்துவது, மாவிடிப்பது, மசாலை அரைப்பது, தண்ணீரெடுப்பது முதலிய வேலைகள் தேக அப்பியாசத்துக்கு ஏற்றவைகளாயினும் அவர்களுஞ் சாயந்தரநேரங்களில் சுத்த ஆகாயமுள்ள இடங்களில் உலாவிவருவதும், ஸ்திரீகளுக்குரிய பந்தாட்டம் ஆடுவதும் நல்லது. விருத்தாப்பியர் நல்ல ஆகாயமுள்ள இடத்தில் சற்று நேரம் உலாவி அல்லது வண்டியில் சவாரிசெய்து வருவார்களானால் போதுமானது. தேகாப்பியாசம் பேறுகால உபத்திரவத்தைக் குறைக்கும். மலடிகளென்னப்பட்டவர்களில் சிலர் யாத்திரை செய்வதாகிய தேகாப்பியாசத்தினால் பலமடைந்து பிள்ளைகள் பெற்றதுண்டு. தேகாப்பியாச விஷயமாய்க் கையாடவேண்டிய சாதனை விதிகளை இதன்கீழ் காண்க.

1. தினந்தோறுங் கிரமமாகத் தேகாப்பியாசஞ் செய்.

2. சுத்த ஆகாயமிருக்குமிடத்தில் தேகாப்பியாசஞ் செய்.

3. எல்லாத் தசைகளுக்கும் பிரயோஜனமான அப்பியாசஞ் செய்.

4. மட்டுக்கு மிஞ்சி அப்பியாசஞ் செய்யாதே.

5. அப்பியாசஞ்செய்து வேர்த்திருக்கையில் குளிர்காற்று தேகத்தில் பட விடாதே; குளிர்ந்த ஜலமுங் குடிக்காதே.

6. வெறும் வயிற்றோடும், வயிறு நிறையச் சாப்பிட்டிருக்கையிலுந் தேகாப்பியாசஞ் செய்யாதே.

சரீர மனோசுகங்களுக்குத் தேக அப்பியாசம் எவ்வளவு அவசியமோ அவ்வளவு இளைப்பாறுதலும் அவைகளுக்கு அவசியம். வேலை செய்துகொண்டிருக்கும்போது இடைக்கிடையே கொஞ்சநேரம் வேலையொழிந்திருப்பது சுகத்துக்கேற்றது. இடைக்கிடை இளைப்பாறுவதன்றி வாரத்திலொருநாள் சாதாரண வேலைகளைவிட்டு இளைப்பாறுவது சரீரசுகத்துக்கும் மனோசுகத்துக்கும் ஏற்றது. இளைப்பாறுத லில் மிகச் சிறந்தது நித்திரைசெய்து களைதீர்வது. ஆகையால் ஒவ்வொருவரும் போதுமான அளவு நித்திரை செய்யவேண்டும். பெரிய ஆள் ஆறு அல்லது ஏழுமணிநேரம் நித்திரைசெய்யவேண்டும். பலவீனர்கள் எட்டு அல்லது ஒன்பது மணிநேரம் நித்திரை செய்யலாம். பிள்ளைகள் அதிக நேரம் நித்திரைசெய்யவேண்டும்.

*விருத்தாப்பியர் கொஞ்சநேரந்தான் நித்திரைசெய்வார்கள். நித்திரைக்கு ஏற்ற நேரம் இராவுதான்; ஆனால் சிறுபிள்ளைகளும் நோயாளிகளும் பகலிலும் நித்திரைசெய்யலாம். நித்திரை விஷயமாய்க் கவனிக்கவேண்டிய சாதனைவிதிகளாவன:—*

1. இரவில் முந்திப்படுத்துக் காலையில் முந்தி எழுந்திரு.

2. சாப்பிட்டவுடன் படுக்கைக்குப் போகாதே; பசியோடும் போகாதே.

3. எந்தக் கைப்பக்கமாவது சாய்ந்து படு.

4. நித்திரை செய்கையில் காற்று உடம்பில்பட விடாதே.

5. கவலைகளை யொழித்து நித்திரைக்குப் போ.

Y. G. Bonnell, P. B.

## LESSONS FOR FAMILY WORSHIP

## வேத வாசிப்பு ஒழுங்கு

### 1917-ஆம் டிசெம்பர் மீ

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ச, | மல்கியா. | 1. | 1—14 | 11 | செ, | எரே. | 23, | 1—8 | 21 | வெ, | எரே | 36. | 1—10 |
| 2 | ஞா. | ,, | 3 | 1—10 | 12 | பு | ,, | 23. | 28—32 | 22 | ச. | ,, | 36 | 16—28 |
| 3 | தி. | ,, | 3 | 11—18 | 13 | வி. | ,, | 24 | 1—10 | 23 | ஞா. | ,, | 38. | 1—13 |
| 4 | செ. | ,, | 4. | 1—16 | 14 | வெ | சங். | 101. | 1—8 | 24 | தி. | ,, | 38. | 14—28 |
| 5 | பு. | எரே. | 7. | 1—16 | 15 | ச. | ,, | 102. | 1—15 | 25 | செ. | மத் | 1. | 18—25 |
| 6 | வி. | ,, | 7. | 17—28 | 16 | ஞா | ,, | 102. | 16—28 | 26 | பு. | சங். | 108. | 1—13 |
| 7 | வெ. | ,, | 10 | 1—13 | 17 | தி. | எரே. | 29. | 1—14 | 27 | வி. | ,, | 110. | 1—7 |
| 8 | ச. | ,, | 17. | 5—14 | 18 | செ. | ,, | 31. | 10—20 | 28 | வெ. | ,, | 111. | 1—10 |
| 9 | ஞா. | ,, | 17. | 19—27 | 19 | பு. | ,, | 31. | 27—34 | 29 | ச. | ,, | 112. | 1—10 |
| 10 | தி. | ,, | 18. | 1—16 | 20 | வி. | ,, | 33. | 1—16 | 30 | ஞா. | ,, | 114 | 1—8 |
| | | | | | | | | | | 31 | தி. | ,, | 115. | 1—18 |

161421

C. L. S. PRESS, MADRAS—1917